215167
to
215178

ஆசுயதர்மம்

7. 1. 1937

4

௧௨

21567

708 708

215167

1-FEB 1937 MADRAS

3

R. J. S. & Co.,
T.T. & M.A. பெருங்காயத்தையே
உபயோகியுங்கள்.

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஞு மார்கழி-மீ 24உ 1937-ஞு ஜனவரி-மீ 7உ | வா 1

ஆர்யதர்மம்.

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
[illegible] தடவை 1க்கு அணா [illegible]
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

ஸ்பெயின் கலக கோரம்.

ரோமையின் ரோலண்டின் பரிதாபம்.

ஐரோப்பாவில் பெரியவராக மதிக்கப்படும் மிஸ்டர் ரோமைன் ரோலண்ட் என்பவர் ஸ்பெயினில் நடக்கும் கலகத்தின் தன்மையைப்பற்றி மிகப் பரிதாபகரமான விவரங்களுடன் ஒரு வேண்டுகோள் செய்து கொண்டிருக்கிறார்.

மேற்றிசைநாகரிகத்திற்கே சின்னங்களாக விளங்கிவந்த அழகிய ஸ்பெயின் தலைநகரமாகிய மாட்ரிட் இப்போது பெரும்பாலும் நெருப்புக்கு இரையாகிவிட்டதென்றும், நாகரிகத்தை நிலைநிறுத்துவதாகப் பேசுகிறவர்களே அதைக் காலின்கீழ்போட்டுத்தேய்த்து வருகிறதாயும், பல்லாயிரக்கணக்கான குழந்தைகளும், ஸ்திரீகளும், கொன்று குவிக்கப்பட்டுவிட்டதாயும், அநேகம் பேர் உயிருடன் எரிக்கப்பட்டதாயும், பலபேர்கள் நொண்டி முடங்களாயும் குருடர்களாயும் போய்விட்டதாயும், ஆஸ்பத்திரியில் கிடந்த நோயாளிகள் கூட இரக்கமில்லாமல் கொல்லப்பட்டதாயும் அழகிய அழகிய அரண்மனைக் கட்டிடமெல்லாம் த்வம்ஸமாகிவிட்டதாகவும், விலைபெற்ற பொக்கிஷங்களைப்போன்ற அநேக உயர்ந்த வஸ்துக்களெல்லாம் வெடிகுண்டால் நாசக்கப்பட்டுவிட்டனவென்றும், இந்தக் கோரச்சண்டையை நிறுத்த உலகத்தார் உடனே முயற்சிக்கவேண்டுமென்றும் அதில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மத குருவிற்குச் சவுக்கடியாம்.

மாஜி அரசர் எட்வர்ட்டின் இச்சா விவாஹத்தைத் தடுத்து, அவரை பட்டத்தைவிட்டு விரட்டியடித்த பிசகு, காண்டர்புரி ஆர்ச்சு பிஷப்பு, யார்க் பிஷப்பு முதலிய மத குருக்களுடைய பிடிவாத நிர்ப்பந்தத்தாலேயே நேர்ந்ததென்றும், அத்தகைய குருக்களை [illegible] அடித்து [illegible] கூடா தென்றும் மிஸ்டர் வெல்ஸ்ன் என்ற அபேதவாதி ஆங்கிலேயர் ஒருவர் பிரஸங்கம் செய்தார்.

மத குருக்களின் செய்கைக்கு எதிராக ஒரு கக்ஷியை ஆரம்பிக்கவும் அங்கு யோஜனை நடக்கிறதாம்.

பெல்ஜியத்திலும் ஸ்திரீத்தகராறு.

பெல்ஜிய அரசரின் மனைவி சில மாதங்களுக்கு முன் ஒரு மோட்டார் விபத்தில் இறந்து போனாள். அதன் பிறகு அரசர் மறு விவாஹம் செய்துகொள்ளவில்லை, அவர் தனக்குப்பிடித்த ஒரு யுவதியை மணக்க இப்போது விரும்புகிறார். அரண்மனையைச் சேர்ந்தவர்களும், மந்திரிகளும் இந்த விவாகத்தை ஆக்ஷேபிக்கிறார்கள். நல்ல கௌரவமுள்ள வம்சத்தில் தான் விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று மந்திரிகள் விரும்புகிறார்களாம் இதன்பலனாக அரசர் பட்டத்தை விட்டு விலகித் தமது பிள்ளைக்கு முடிசூட்ட நேரலாம்.

காங்கிரஸ்காரர்களின் கலாட்டா!

சுக்கூரில் நடைபெற்ற ஹிந்து மஹாஸபைக் கூட்டத்தில் காங்கிரஸ் வாலாக்கள் பலர் நுழைந்து கலாட்டாசெய்தார்களாம். காங்கிரஸுக்கே ஓட்டுப்போடவேண்டுமென்று கூட்டமத்தியில் கூச்சல் போட்டார்கள். இதனால் சச்சரவு ஏற்பட்டது. காங்கிரஸைப் பற்றி பாய்பரமானந்தர் தூஷணையாகப் பேசியதை அவர்கள் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் மஹாஸபையின் காரியங்கள் தடைப்பட்டன.

மிதவாதிகளின் மஹாநாடு

தீர்மானங்களின் விவரம்.

லக்ஷ்மணபுரியில் ஸர். ஜீஹாங்கீரின் தலைமையில் இந்திய மிதவாதிகளின் மஹாநாடு சென்றவாரம் நடைபெற்றது. புதிய அரசியல் சட்ட [illegible] திருப்திகரமாயிருப்பினும் [illegible] அடக்குமுறைகளை கண்டிப்பதாயும், அபேதவாத முறையை ஜாடையாகக் கண்டித்து பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வழி செய்யவேண்டுமென்றும், தீண்டாமையை விலக்கவேண்டுமென்றும், திருவாங்கூர் உத்திரவை வரவேற்பதாயும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

500 மத குருக்கள் கொலை செய்யப்பட்டனர்.

ஸ்பெயின் கலகத்தில் இதுவரையில் அத்தேசத்தில் மிகப் பிரபல மேதாவிகளாயும், கல்விமான்களாயும் நீதிபதிகளாயுமிருந்து வந்த தலைவர்களில் 100 பேர்கள் அநீதியான முறையில் கொல்லப்பட்டதாயும் மத குருக்களான பிரதான பிஷப்புகள் பலர் கொல்லப்பட்டதாயும் ஸாதாரண மத பிரசாரகளில் 500 பேர்வரையில் நாசமாகிவிட்டதாயும் சொல்லப்படுகிறது.

பஞ்சமர் வேதமோதுகிறார்களாம்!

சிதம்பரத்தில் ஆர்த்திரா உத்ஸவத்தில் தாம் கண்ட காக்ஷியை ஒருவர் பத்திரிகையில் வர்ணித்து மனம்களிக்கிறார். தீண்டாதார் ஸ்நானம் செய்து நல்ல ஆடை அணிந்து விபூதி தரித்து பஜனை கோஷ்டியாக வீதி வலம் வருவது மிக அழகாயிருக்கிறதாம். இத்துடன் அவர்களில் பலர் ரிக்வேதத்தைச் சொல்லிக்கொண்டு போவதும் ஆச்சர்யமாயிருந்ததாம். அந்த நிருபர் தாம் பிராம்மணராயிருந்தும் அந்த பஞ்சமரைப்போல் வேதம் கற்காததில் வெட்க முண்டாகியதாம். பஞ்சமர்கள் ஓதியது என்னவேதமோ! இவர் எப்படியறிந்தார்?

"மூகபஞ்சசதீ"

அம்பிகையைப்பற்றிய ஸ்தோத்திரங்களைச் செய்தவர்களில் ஸ்ரீமதாசார்யாள் முதன்மையானவர்களென்று சொல்வதில் யாதொரு ஆக்ஷேபமுமிருக்காது. அவருக்கு அடுத்தபடியிலிருப்பவராக மூக கவியைச் சொல்லவேண்டும். அதாவது, மூக கவியைவிடச் சிறந்த வாக் விசேஷத்தையுடைய கவியாரென்று கேட்டால் நமது ஆசார்யாளைச் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒருவரையும் சொல்லமுடியாது.

மூகருடைய ஜீவிய சரித்ரத்தைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்வதற்கு நமக்கு ஆதாரங்கள் யாதொன்றுமில்லை. ஊமையொருவர் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷியின் ஸன்னிதியிலிருந்துகொண்டு அம்பிகையை உபாஸித்துவந்தாரென்றும் அப்போது ப்ரஸன்னமான அம்பிகையின் உச்சிஷ்டம் தெறித்து அந்த உச்சிஷ்டமே அம்ருதரூபமாக ஏற்பட்டு அவருக்கு உயர்ந்த வாக்கை உண்டாக்கவும் அவர் மஹா கவியாக ஆனாரென்றும் தற்காலம் காமகோடி பீடத்தில் விளங்கிவரும் ஸ்ரீ சங்கராசார்யாள் சொல்லியிருக்கிறார்கள். (நன்மொழிகள்—பக்கம் 103).

தவிர, காஞ்சி ஸ்ரீ காமகோடிபீடத்திய குருபரம்பரையில் (இரண்டாவது) வித்யாகனர் என்பவருக்கு அடுத்தாற்போல் வந்த (நான்காவது) சங்கரர் என்பவர்தான் மூக கவியென்பதாக ஒரு அபிப்ராயமும் உண்டு. இவர் ஆதியில் ஊமையாக இருந்ததாகவும் ஸ்ரீவித்யாகனேந்த்ர ஸரஸ்வதியவர்களுடைய அனுக்ரஹத்தினால் அவ்விதக் குறை நீங்கப்பெற்று மஹா கவியாக மாறி அவருக்கு அடுத்தாற்போல் காமகோடி பீடத்திலும் இருந்து விளங்கினரென்பதாக சொல்லப்பட்டிருக்.

பிறகு இங்க ரா த ... மூகசங்... A. D. 398ல் பீட ... கள் ராஸ ... செய்து A. D. 437ல் ஸித்தியடைந்ததாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மூகரால் இயற்றப்பட்ட ஐந்நூறு (ச்லோகங்கள்) என்பதாக இவருடைய ஸ்தோத்ரத்தை 'மூகபஞ்சசதீ' என்று ஆதிகாலம் முதல் நாளது வரையில் சொல்வது வழக்கமே தவிர இந்த ஸ்தோத்ரத்திற்கு வேறு பெயர் கிடையாது. இது நூறு, நூறு ச்லோகங்கள் கொண்டதாக ஐந்து சதகங்கள் அடங்கியது. அவற்றின் பெயர்கள் ஆர்யாசதகம், பாதாரவிந்த சதகம், மந்தஸ்மித சதகம், கடாக்ஷ சதகம், ஸ்துதி சதகம் என்பவை. முதலாவதும் கடைசியதும் ஸ்ரீ காமாக்ஷியைப் பொதுவாக ஸ்தோத்ரம் செய்கையில், பாக்கி மூன்றும் முறையே ஸ்ரீ காமாக்ஷியினுடைய பாதாரவிந்தத்தையும், புன் சிரிப்பையும், கடாக்ஷத்தையும் வர்ணிக்கின்றன. ச்லோகங்களின் வ்ருத்தமும் ஒவ்வொரு சதகத்திற்கும் வெவ்வேறாக அமைந்திருக்கின்றன.

மூக கவியினுடைய வாக்கின் மாதுர்யமானது ச்லோகங்களின் மூலத்தை வாசித்து அறிகின்றவர்களுக்குத்தான் தெரியவரும். பதங்களெல்லாம் ஜிலுஜிலென்றும் மிகவும் லலிதமாயும் காதுக்கு இனிமையாயும் அமைந்திருப்பதுடன் அர்த்த பாவமானது பக்தியைப் பெருகச்செய்து அம்பிகையின் மனதிலுள்ள கருணைக்கடலை கொந்தளிக்கும்படியாகச்செய்யக்கூடியவிதமாயிருக்கிறது. ஒவ்வொருச்லோகத்திலும் ஸ்ரீகாமாக்ஷி, காமகோடிபீடம், ஏகாம்ரநாதர், காஞ்சீ, கம்பாநதீ இம்மாதிரியான காஞ்சிபுரத்தைப்பற்றிய அம்சங்கள் ஒன்றுவது சொல்லப்பட்டிருப்பது இந்த ஸ்தோத்ரத்தின் அழகுகளில் ஒன்றாகும்.

இந்த ஸ்தோத்ரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஸ்ரீ காமாக்ஷிதேவியானவள் ஸ்ரீ லலிதாம்பிகையே.

பச்சாத் சதுர்புஜா ஜாதா ஸா பரா த்ரிபுராருணா
பாசாங்குசேக்ஷு-கோதண்ட பஞ்சபாண
லஸத்கரா |
லலிதா ஸைவ காமாக்ஷீ காஞ்ச்யாம் வ்யாதி
ருபாகதா ||

பக்தர்களுடைய காமங்களையெல்லாம் தன் த்ருஷ்டி பட்ட மாத்திரத்திலேயே பூர்த்தி செய்விப்பதால் லலிதாம்பிகைக்கு காமாக்ஷீ என்ற பெயர் ஏற்பட்டது.

யத் யத் வாஞ்சந்தி தத்ரஸ்த்தா: மனஸைவ
மஹாஜனா: |
ஸர்வக்ஞா ஸாக்ஷிபாதேன தத்தத் காமான்
அபூரயத் ||
தத் த்ருஷ்ட்வா சரிதம் தேவ்யா: ப்ரம்ஹா
லோகபிதாமஹ: |
காமாக்ஷீதி ததாபிக்யாம் ததௌ காமேச்வ
ரீதி ச ||'
(லலிதோபாக்யானம்)

காஞ்சீ க்ஷேத்ரத்தின் மஹிமையானது வர்ணனையிலடங்காதது.

'நேத்ரத்வயம் மஹேசஸ்ய காசீ காஞ்சீ
புரீத்வயம் |'

ப்ரளய காலத்திலும் அழிவில்லாதது. ஸ்ரீசக்ராகாரமாக அமைக்கப்பெற்றது. ஸ்ரீகாமாக்ஷியானவள் அங்கு காமகோடி பீடத்தில் வீற்றிருந்து பக்தானுக்ரஹம் செய்துகொண்டிருக்கிறாள். அம்பிகையின் பதியான காமேச்வரானவர் அங்கு ஏகாம்ரநாதர் என்ற பெயருடன் விளங்கிக்கொண்டிருக்கிறார். ஈச்வரனுடைய பெயரில் குறிக்கப்பட்ட ஏகாம்ரமானது (ஒற்றை மாமரமானது) இன்னமிருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆம்ரத்தின் ஸ்வரூபமானது

'சிவபீஜ ஸமுத்பூதம் வேதசாகாபிருஜ்வலம் |
ம்ருகண்டுதனயாதாரம் ரஸாலம் தம்
நமாம்யஹம் ||'

என்றபடி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்பா நால்நூற்பதும் க்ரஹிப்பதும் ... படியோ பூமியிலிருந்து மரம் செடி ... தருவ ... உண்டாகிமடிவது எப்படியோ' ஆக்னேய ப... ரப்ரும் ... மத்திலிருந்து ... ஸ்ரீ வரதராஜ ... கின்றன அமைக்கப்பெற்றிருக்கின்றன.

'ஆத் ஸ்ரீமந்த்ரஸ்யாஸ்ய வாயுபாகே
மஹேசிது: |
விஸ்த்ருதம் புவனச்ரேஷ்டம் கல்பிதம்
பரமேஷ்டினா |
ஸ்ரீக்ருஹஸ்யாக்னிபாகே து விசித்ரம்
விஷ்ணுமந்திரம் ||'

பரப்ரம்ஹஸ்வரூபிணியான மஹா காமேச்வரியானவள் ஸ்ரீகாமாக்ஷியாகவும், (ஸ்ரீஏகாம்ரநாதரென்ற) ஸ்ரீ மஹாகாமேசஸ்வரூபிணியாகவும், (ஸ்ரீ வரதராஜரென்ற) ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயுமிருப்பதுடன் ஸ்ரீ காமகோடியில் ஸ்ரீகாமராஜபீடத்தில் பிலாகாசரூபிணியாய் விளங்கிக்கொண்டிருக்கிறாள்.

இந்த மஹாபிலமானது நாதபிந்து யுக்தமான பரமாகாச ஸ்வரூபமென்றும், ப்ரம்ஹ சரீரமென்றும், ஜகத்காமகலாகாரமென்றும் பலவிதமான பெயர்களால் குறிக்கப்படும். அம்பாள் பிலாகாசஸ்வரூபிணியாயிருக்கையில் லோககண்டகனான பந்தகாஸுரன் என்பவனை ஸம்ஹரிப்பதற்காக கன்யகாரூபமாய் வெளியில் வந்ததும், அவனுடைய ஸம்ஹாரமான பிறகு அம்பிகையின் கட்டளையால் அந்த மஹாபிலத்தின் த்வாரத்தின் பேரில் காயத்ரீ ஸ்வரூபமான மண்டபமானது தேவதைகளால் கட்டப்பட்டு பிலத்திற்கு மறைவிடமாயிருப்பதும் மற்ற விஷயங்களும் 'ஸ்ரீ காமாக்ஷிவிலாஸ'த்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

'காயத்ரீ மண்டபாதாரம் நாபிஸ்தானம்
புவ: பரம் |
புருஷார்த்தப்ரதம் சம்போ: பிலப்ராந்தம்
நமாம்யஹம் ||'

இந்த பிலத்தில் ஆகாசரூபிணியாயிருந்த அம்பாளுடைய உக்ரஸ்வரூபத்தை சமனம் செய்வதற்காக ஸ்ரீமதாசார்யாளால் ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டாபனம் செய்யப்பட்டு அம்பாள் அவ்விடத்தில் ஆகர்ஷணம் செய்யப்பட்டு அங்கு ஸான்னித்யத்தோடிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் கைலாஸத்தில் அம்பிகையானவள் லீலையாகத் தன் பதியின் நேத்திரங்களைத் தன் கைகளால் மறைக்கவும் அந்த ஒருக்ஷணத்தில் லோகங்களிலெல்லாம் அந்தகாரமேற்பட்டு தத்தளித்துக்கொண்டிருப்பதைப்பார்த்த பரமசிவன் அம்பிகையை சபிக்கவும் அதற்கு விமோசனமாக காஞ்சீபுரியில் தன்னைக்குறித்து தவம்செய்து மீண்டும் தன்னை அடையுமாறு சொல்லப்பட்ட தேவியானவள் அவ்விதம் காஞ்சிக்கு வந்து கடினமான நியமத்தோடு ஆம்ர மாத்தினடியில் மணலைக்கொண்டு லிங்கமூர்த்தியைக் கல்பித்து கடுந்தவமியற்றுகையில், அம்பிகையின் ப்ரேமாதிசயத்தின் அளவைக்கண்டானந்திக்க எண்ணங்கொண்ட பரமேச்வரன் கங்கையை அழைத்து ப்ரவாஹரூபமாய் அம்பிகையின் தவத்திற்கு இடையூறு செய்யும்படிச் சொல்லவும், அப்படியே கங்கையானவள் பயங்கரமான ப்ரவாஹமாய்வந்து அம்பிகை தவம்செய்யுமிடத்தை நெருங்கவும் அம்பாள் லிங்கரூபமாயிருக்கும் தன்பதிக்கு ஆபத்து நேரிடுமோவென்று பயந்து கலங்கி வேறொன்றும் செய்வதற்குத்தோன்றாமல் தன் கைவளைகள் பதியவும் இருஸ்தனங்கள் குழையவும் தன்பதியைக் கட்டி ஆலிங்கனம் செய்தவுடன் அதினால் பரமானந்தமடைந்த பரமேச்வரன் ...ன்னமாகி ப்ரவாஹத்தைத் தடுத்து அம்பிகையின் அபீஷ்டத்தைக் கொடுத்ததாகவும் சொல்லப்படும்[இந்த நதியினால் அம்பிகைக்கு கம்பம் (நடுக்கம்) உண்டான காரணத்தைக்கொண்டு அதற்கு ...பா என்று பெயர் ஏற்பட்டது.]

இங்குள்ள பரமசிவனுடைய லிங்கமூர்த்தியானது அம்பாளால் ஆலிங்கனம் செய்யப் ...

... யோகி உத்தமபச் ... விவேகிகளி ... யாளங்களே ... பித்தீர் ... சொல்முடைய ... 'உமாலிங்கன ... ராந்த குசகங்கள் ... னுலும் ... து உம
லிங்கம் ஏகாம்ரநாதஸ்ய ஸைகதம் ஸுந்தரம்
ம...யஸ்

இவ்விதமான லீலைகள் நடந்த புண்ய க்ஷேத்ரமாகிய காஞ்சியில், பக்தகோடிகளுக்கு ஸமஸ்தமான காமங்களையும் கொடுக்கும் கருணாரூபிணியான ஜகன்மாதாவானவள் ஸ்ரீ காமாக்ஷீ என்ற அஸாதாரணமான நாமத்துடன் பக்தானுக்ரஹார்த்தமாக விளங்கிக்கொண்டிருக்கிறாள். அப்பேர்ப்பட்ட பரதேவதையின் க்ருபையை அடைவதற்கு மூக கவியால் அருளிச்செய்யப்பட்ட இந்த 'பஞ்சசதீ' என்ற ஸ்தோத்ரமானது முக்யமான ஸாதனமாகும். வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் அம்பிகையினிடம் பக்தியையும் பெருகச் செய்யும் இந்த திவ்யமான ஸ்தோத்ரத்தை யாவரும் எளிதில் அறியும் விதமாக தமிழில் மொழிபெயர்த்து இனி வெளியிடப்படும். வாசகர்களனைவரும் இதை வாசித்து மூககவியினுடைய பேருபகாரத்தினால் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தரியாகிய ஸ்ரீ காமாக்ஷியின் ஸ்வரூபஞானமடைந்து அவளுடைய க்ருபைக்குப் பாத்ரர்களாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இக்ஷு கோதண்ட புஷ்பேஷு பாசாங்குச
லஸத்கராம் |
உத்யத்ஸூர்ய நிபாம் வந்தே மஹாத்ரிபுர
ஸுந்தரீம் ||
விச்வகாரண நேத்ராட்யாம் மஹாத்ரிபுர
ஸுந்தரீம் |
பந்தகாஸுர ஸம்ஹர்த்ரீம் காமாக்ஷீம்
தாமஹம் பஜே ||
ஸ்வர்ணாங்கீம் ரத்னபூஷாட்யாம் சுகஹஸ்தாம்
சுசிஸ்மிதாம் |
காஞ்சீ நிவாஸினீம் வந்தே காமாக்ஷீம்
காமிதார்த்ததாம் ||

G. V. G.

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

(31—12—36 தொடர்ச்சி)

மேலே சொல்லிய மார்கங்களிலிருந்து (உபாஸனைக் குறைவினால்) ப்ரஷ்டர்களாயிருப்பவர்கள் மிகவும் கொடியதான ஆபத்திற்குப்படுகிறவர்களாயிருக்கும்போது

'அத ய ஏதௌ பந்தானௌ ந விதுஸ்தே கீடா: பதங்கா: யதிதம் தந்தசூகம்' என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி அவர்களுடையஅவ்விதமான ஆபத்தை, அனாயாஸமாகச் செய்யக்கூடிய தன்னுடைய நாமஸ்மரணம் முதலியதான ஸாதனங்கள் மூலமாகவே அம்பாள் பரமதயவுடன் தடுத்துவிடுகிறாளென்பதாக அடுத்த நாமத்தில் சொல்லப்படுகிறது.

ஸர்வாபத்விநிவாரிணீ 913

ஸகலவிதமான ஆபத்துக்களையும் விசேஷமாக நிவாரணம் செய்பவள்.

1. அம்பிகையே சரணமென்பதாக நினைத்திருப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்களெல்லோரையும் அவள் காப்பாற்றுகிறாளென்றும் பாக்கி குணங்களில்லாவிட்டாலும் அம்பாளுடைய நாமங்களை மட்டுமாவது ஸ்மரித்துக்கொண்டு அனன்யசித்தத்துடன் உபாஸிப்பவர்கள் மலைபோன்ற ஆபத்துக்களுக்குட்பட்டிருந்தாலும் அவர்களையும் அம்பாள் காப்பாற்றுகிறார்களென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'யே து ஸங்கான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் கதா: |
உபாஸதே ஸதா பக்த்யா யோகமைச்வரம் ஆச்ரிதா: ||
ஸர்வபூத தயாவந்த: சாந்தா தாந்தா விமத்ஸரா: |
அமானினோ புத்திமந்த: தாபஸா: ஸம்யதவ்ரதா: ||
மச்சித்தா மத்கதப்ராணா: மஜ்ஞானகதனே ரதா: |
ஸந்யாஸினோ க்ருஹஸ்த்தாச்ச வனஸ்த்தா ப்ரம்ஹசாரிண: ||
யே சோக்தைர் லக்ஷணைர் ஹீனா அபி மன்நாமஜாபகா: |
தேஷாம் நித்யாபியுக்தானாம் ஆபதாம் பர்வதானபி |
நாசயா...தாரம் ஞானதீபேன நசிராதிஹ ||'
(கூர்மபுராணம்)

ஹரிவம்சத்தில் அம்பாளைக் குறித்து விஷ்ணு சொல்லுகையில் மனுஷ்யர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப்பற்றி

'ந்ருணாம் பந்தம் வதம் கோரம் புத்ரநாசம் தனக்ஷயம் |'

என்பது முதலாகச் சொல்லிவிட்டு அவற்றையெல்லாம் அம்பாள் நிவாரணம் செய்வதாக

'ஆபத்ஸு நிகிலாஸு த்வம் ரக்ஷஸ்யேவ ந ஸம்சய: |'

என்பதாகச் சொல்லப்பட்டது. வராஹ புராணத்திலும் ப்ரம்ஹாதிகளால் தேவியைக் குறித்துச் செய்யப்பட்ட ஸ்தோத்திரத்தின் கடைசியில்

'சரணம் த்வாம் ப்ரபத்யந்தே யே தேவி பரமேச்வரி |
ந தேஷாம் ஆபத: காச்சித் ஜாயந்தே க்வாபி ஸங்கட: ||'

என்று சொல்லப்பட்டது. ஆகவே, ஆபத்துக்காலத்தில் செய்ய வேண்டியது அம்பாளுடைய சரண த்யானமொன்றே யென்றும் அந்த ஸமரணையானது ப்ரம்ஹாதிகளையும் கிங்கரர்களாகச் செய்துவிடுகிறதென்றும் சொல்லப்பட்டது.

'ஆபதி கிம் கரணீயம் ஸ்மரணீயம் சரணயுகளம் அம்பாயா: |
தத் ஸ்மரணம் கிம் குருதே ப்ரம்ஹாதீனபி கிங்கரீ குருதே ||'

ஸ்வஸ்த்தா 914

சாஞ்சல்யமே இல்லாதவள்.

1. அதாவது, துக்கத்தினால் ஏற்படும் சாஞ்சல்யம் யாதொன்றும் அம்பாளுக்குக் கிடையாதாகையால் இந்த நாமமேற்பட்டது.

2. அல்லது, தன்னிடமே நிலையுள்ளவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

'ஸ பகவ: கஸ்மின் ப்ரதிஷ்டித இதி, ஸ்வே மஹிம்னீதி
ஹோவாச |' (ச்ருதி)

3. ஸ்வ: என்றபதம் ஸ்வர்க்கத்தைக்குறிக்கும். அதற்கு அத்யக்ஷையாக (ஈச்வரியாக) இருப்பவள் ஸ்வஸ்த்தா.

4. ஸு—சோபனமான, அஸ்தா—ஸ்திதியில்லாமலிருப்பது, அதாவது கதி. ஆகவே, சோபனமான கதியைக் கொடுப்பவள் ஸ்வஸ்த்தா.

ஸ்வபாவமதுரா 915

இயற்கையாகவே யாவராலும் விரும்பப்படுகிறவள்.

1. அதாவது, உபாதிகளின் சேர்க்கை யாதொன்றுமில்லாதிருக்கும்போதே ஸகலமானவர்களுடைய விருப்பத்திற்கும் இடமாயிருப்பவள் என்று தாத்பர்யம். மதுரமென்ற பதத்திற்கு

'மதுரம் ரஸவத் ஸ்வாது ப்ரியேஷு மதுரோபின்யவத் |
மதுரா சதபுஷ்பாயாம் மதூலீ நகரீபிதோ: ||'

என்ற விச்வகோசவசனத்தின் ரஸத்தோடிருப்பது, இனிப்பு, ப்ரியத்திற்கு ஸ்தானமாயிருப்பது முதலான அர்த்தங்களுண்டு.

2. அல்லது, ஸ்வ—தன்னுடையதான, பாவ—அவஸ்தானம் (இருப்பிடம்) மதுரா—மதுரா நகரமாக உடையவள் ஸ்வபாவ மதுரா என்றும் சொல்லலாம். மீனாக்ஷிதேவீ விளங்கிக்கொண்டிருப்பதும், ஹாலாஸ்ய க்ஷேத்ரமென்று பெயருடையதுமான (தக்ஷிண) மதுரா என்ற இடத்தில் நிவாஸமாயிருப்பவள், அல்லது அந்த க்ஷேத்ர ரூபமாயிருப்பவள் என்று தாத்பர்யம்.

3. ஸ்வ—தன்னுடைய, பா—ப்ரதிமையில், அவமா—முதன்மையானவர்களுடைய, துரா—பாரத்தைத் தாங்குகிறவள் ஸ்வபாவ மதுரா என்றும் சொல்லலாம். அதாவது, ஆத்மஞானத்தில் உத்தமர்களாயிருப்பவர்களுடைய பொருப்பெல்லாம் அம்பாள் ஏற்றுக் கொள்வதாக தாத்பர்யம். எப்படி (துர:) நுகத்தடியானது வண்டியின் ஸர்வோத்தமமான அங்கமாக இருந்துகொண்டு அதின் ஸகல பாரத்தையும் தாங்கி நிற்கிறதோ அம்மாதிரி ஆத்மஞானிகளின் பாரங்களையெல்லாம் நிர்வாஹம் செய்கிறாள் என்று சொல்லப்பட்டது. [அவம என்ற பதமானது நிக்ருஷ்டமென்ற அர்த்தத்தோடு கூடியதுமட்டுமல்ல, ப்ரதமமென்ற அர்த்தமும் அதற்கு உண்டு என்பதாக பாஷ்யத்தில் ச்ருதிவாக்யங்களிலிருந்து காட்டப்பட்டிருக்கிறது.]

4. ஸ்வ பாம்—ஆத்மஞானத்தை, யே வமந்தி—யார் உண்டுபண்ணுகிறார்களோ (கிடைக்கச் செய்கிறார்களோ). அவர்களுக்குள் துர:—உத்தமமானவள் ஸ்வபா வம துரா என்றும் சொல்லலாம்.

5. ஸு—சோபனமான, அபாவா:—ஸ்வ்பாவா: ராகம், த்வேஷம், வைஷம்யம், நைர்க்ருண்யம் முதலியவைகளை பாவங்களென்று சொல்லப்படுவதால் அவைகளுக்கு எதிராக (சோபனமாய்) இருப்பவைகளுக்கு அபாவங்களென்று பெயர். அவைகளையே இங்கு ஸ்வபாவங்களென்று சொல்லப்பட்டது. அவற்றால் மதுரமாயிருப்பவள் ஸ்வபாவ மதுரா. [அபாவங்களை சோபனங்களென்று சொல்லப்படுவதால், மேலே சொல்லிய பாவங்கள் அசோபனங்களென்று ஏற்படுகிறது.]

6. ஸ்வ—தன்னைச்சேர்ந்தவர்களிடத்தில் (தன் பக்தர்களிடத்தில்) பாவ—அவஸ்த்தானமாயிருப்பதால், மதுரா—மதுரமானவள் ஸ்வபாவ மதுரா என்றும் சொல்லலாம்.

7. ஸ்வ—தன் பக்தர்களுடைய, பாவ—பக்தியினால், மது—உத்தமமான பலத்தை, கொடுப்பவள் ஸ்வ பாவ மதுரா. ['சான் வை மது விந்ததி' என்றச்ருதிவாக்யத்தில் வரும் மது என்ற பதத்திற்கு இம்மாதிரி அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.]

8. மேலே சொல்லப்பட்டவை மாதிரி, பாவமென்ற பதத்திற்கு இருக்கும் அபிப்ராயம், அவகாசம் முதலான வேறு அர்த்தங்களையும் ஒட்டி இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

தீரா 916

பண்டிதையாயிருப்பவள்.

1. அல்லது, தைர்யத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

2. அல்லது, (அத்வைத) புத்தியைக் கொடுப்பதினால் தீரா என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். ஈச்வனுடைய அனுக்ரஹத்தினால் தான் அத்வைத புத்தியானது ஏற்படுமென்பதாக அவதூதகீதையில்

'ஈச்வரானுக்ரஹாதேவ பும்ஸாம் அத்வைதவாஸனா |'

என்று சொல்லப்பட்டது.

3. அல்லது, புத்தியைக் கொடுப்பவளான இரா என்ற பெயருடைய தசமீ திதியோடு கூடியவள் தீரா என்றும் சொல்லலாம்.

தீரஸமர்ச்சிதா 917

பண்டிதர்களால் நன்றாக அர்ச்சிக்கப்பட்டவள்.

1. தீரர்கள் ப்ரம்ஹத்தை உபாஸிப்பதைப்பற்றி 'தம் தீராஸ: கவய உன்னயந்தி' என்பதாக ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. 'பாதய் வா பாதாளே ஸ்தாபய வா நிகிலலோக
ஸாம்ராஜ்யே |
மாதஸ் தவ பதயுகளம் நாஹம் முஞ்சாமி நைவ முஞ்சாமி ||'

என்று கல்யாணசரணர் தன்னைப்பற்றிச் சொன்னதுமாதிரி, உபாஸக ச்ரேஷ்டர்கள் தங்களுக்கு எது நேரிட்டாலும் அதைப் பாராட்டாமல் அம்பாளுடைய சரணயுகளத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுவார்களாகையால் அவர்களை தீரர்களென்று சொல்லப்பட்டது.

3. அல்லது, தீ—ஞானத்தோடு அபின்னமான, ரஸம்—ஆனந்தத்தையுத்தேசித்து, அர்ச்சிதா—உபாஸிக்கப்படுகிறவள் தீரஸமர்ச்சிதா என்றும் சொல்லலாம்.

சைதன்யார்க்ய ஸமாராத்யா 918

சித்ரூபமான அர்க்யத்தால் நன்றாய் ஆராதிக்கப்படத்தக்கவள்.

1. சைதன்யமென்பது சித்ரூபம். ஆத்ம சைதன்யமென்றால் ஆத்மாவின் சித்ரூபம், சித்ரூபமான ஆத்மா. அதையே ஆத்மா என்பதாக 'ஆத்மசைதன்யமாத்மா' என்பதான சிவ ஸூத்ரத்தில் சொல்லப்பட்டது. அர்க்யம் என்பது பூஜைக்கு யோக்யமான ஜலம் முதலியவை. நிராதாரமென்று சொல்லப்படும் பூஜையானது சித் (ஞானத்)துடன் அபேத பாவனாரூபமாயிருப்பது என்று சொல்லப்படும். இதையேதான் 'ஞானமர்க்யம்' என்று பாவனோப நிஷத்தில் சொல்லப்பட்டது.

கண்ணோட்டம்.

(ராஜீய வாதி)

தஞ்சை திருச்சி பிரதிநிதி ஸ்தானம்!

டாக்டர் ராஜன் ராஜிநாமாச் செய்த ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் கே. ஸந்தானம் போட்டியில்லாமல் ஜயித்துவிட்டார். அவரைத் தவிர வேறு யாரும் அபேக்ஷகராக முன்வரவில்லை இதற்குக் காரணமென்னவோ! ஏற்கனவே இந்தியா சட்டஸபை எலெக்ஷன் அனுபவத்தைக் கொண்டும், ஸமீபத்தில் நடந்த தஞ்சை ஜில்லா போர்டுத் தேர்தல் அனுபவத்தைக் கொண்டும் காங்கிரஸுக்குப் போட்டியாக ஒருவரும் நிற்கத் துணியாதது காரணமா? காங்கிரஸ் வாலாக்கள் இப்படித்தான் நினைத்துப் பெருமைப் படுவார்களென்பதை நாம் அறியாமலில்லை. ஆனாலும் இதற்கு வேறு பல காரணங்களும் உள. இது ஒரு உபதேர்தலே. இரண்டு வர்ஷத்திற்கு மேல் காலம் ஆகிவிட்டது. இப்போது மெய்பாக வருகிறவர் கொஞ்சநாளைக்குத்தான் இந்த ஸ்தானத்தில் விளங்கமுடியும். புதிய அரசியல் மூலம் ஏற்படவேண்டிய ஸமஷ்டியை நமது வைஸ்ராய் வெகு சீக்கிரத்தில் அமைக்கப்படுகிறார். அவருக்குத் தூக்கமில்லை. ஸமஷ்டியை நம் தலையில் கட்டியபிறகுதான் அவர் தூங்குவார் போலும், இந்த ஸவல்பகால அவகாசத்திற்கு இந்த "இந்திரபட்ட"த்தை யார் விரும்புவார்? மேலும் பணப்பஞ்சமோ சொல்லமுடியாதது 10, 15 ஆயிரம் செலவு செய்யத் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் தைர்யமுள்ளவர் இருக்கவில்லை. ஆகையால் ஸ்ரீமான் ஸந்தானம் ஸுலபமாக வெற்றியடைந்தார். காங்கிரஸ்காரர் மார்தட்டவும் இதில் இடமுண்டுதான்.

அபேதவாதிக்கு ஆதரவு?

ஆனால் ஏற்கனவேயிருந்த ராஜன் தீவ்ர சீர்திருத்த வாதியாகமட்டும் விளங்கினர். ஸ்ரீமான் ஸந்தானமோ ராஜனையும் ஜயித்த பிரபல அபேதவாதி. இவருக்கு மதம், ஆசாரம், ஸம்பிரதாயம், சாஸ்திரம் இவையெல்லாம் வேப்பங்காய். இவைகளை உதறித்தள்ளி இவர் வெகு நாளாகிவிட்டது. அவைகளை ஒரு பொருட்டாகவே நினைப்பதுகூட பாபச்செயலென்பது இவர் கருத்து. இது எப்படித் தொலைந்தாலும் பொருளாதாரவழியில் பார்த்தாலும், மிராசுதார்கள் மிகுந்துள்ள இந்த ஜில்லாக்களுக்கு இவர் பிரதிநிதியாக வரும்படி விடப்பட்டது வியக்கத்தக்கதே. நேருவைவிட இவர் பிரபல அபேதவாதி. மிராசுதார் முறை, ஜமீன்தார் முறை, பணக்காரர் இவைகளைக்கண்டால் இவருக்கு விஷம். இவைகளை ஒழித்துத் தீரவேண்டுமென்பவர் இனும் மசோதாவை ஆதரித்தவர். குடந்தை தாலூக்கா கூட்டத்தில் இவர் பேசியதை கவனிக்கவும். இத்தகையவரைப் போட்டியில்லாமல் உள்ளேவிட்ட ராஜீயக் கக்ஷிகளுடையவும் மிராசுதார்களுடையவும் கோழைத்தனத்தை என்னென்று சொல்லுவது? இவருடைய அபேதவாதக்கொள்கையை வெளியிட்டு இவரை ஏன் எதிர்க்கக்கூடாது? பொதுக்கூட்டத்தில் பிரசாரம் செய்வதில் காங்கிரஸுக்கு மட்டுமே சக்தியா? பாத்யமா? மற்றவர்களுக்கும் மற்றக் கக்ஷிகளுக்கும் பௌருஷமில்லையா? அபேதவாதத்தைக்கூடக் கண்டிக்க தைர்யமில்லையா? அபேதவாதியை நம்மவர்கள் வாய்பொத்தி அங்கீகரித்தது மிராசுதார்களின் பாக்யமோ? துர்ப்பாக்யமோ? தலைவலி போய் திருகுவலி வந்ததே.

காந்தியின் பெருமைக்கு ஆக்ஷேபம்.

காந்திஜிக்கும், திருவாங்கூர்சட்டஸபை உபத்தலைவரானவேலுப்பிள்ளையென்பவருக்கும்தகராறுஏற்பட்டுவிட்டது. திருவாங்கூர்ஆலயப்பிரவேச நன்மை யாருடைய முயற்சியால் ஏற்பட்டதென்பதே தகராறு விஷயம். ஸ்ரீமான் வேலுப்பிள்ளை வெளியிட்டுள்ள ஒரு அபிப்ராயத்தில், இந்த ஆலயப்பிரவேச விளம்பரமானது ஹரிஜன ஸேவாஸங்கத்தின் முயற்சியாலோ, காந்திஜியின் செல்வாக்கினாலோ ஏற்பட்டதென்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். திருவாங்கூர் ஸேவாஸங்கமானது, ஸி. ரா. ஆசாரியார், பிர்லா, தாக்கர் முதலியவர்களைக் கொண்டுவந்து தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டதேயன்றி அந்த ஸங்கத்தால் இந்த நன்மை ஏற்படவில்லையென்றும், காந்தியின் ஸொந்த ஊராகிய ஆமதாபாத்திலேயே ஆலயப்பிரவேச விஷயமாக அவருடைய செல்வாக்கு செலவாணியாகவில்லையென்றும், வேலுப்பிள்ளை சுட்டிக்காட்டினர்.

இதற்குக் காந்தி பதில் எழுத முன் வந்திருக்கிறார். ஆனால் அவர் தணிந்த ரீதியிலேயே பதில் கொடுக்கிறார். தமது ஸிருஷ்டியாகிய ஹரிஜன ஸேவாஸங்கத்தின் முயற்சியாலேயே இது ஏற்பட்டதென்பதை வற்புறுத்த பிரியமில்லாமல் ஏதேதோ சுற்றிப் பேசுகிறார். ஆமதாபாத்தில்கூட ஆலயப்ரவேசம் செய்து வைக்க முடியாத தமது துர்பல நிலைமையை அப்படியே ஒத்துக்கொள்ளுகிறார். தாம் தற்போது வஸித்துவரும் ஷீகான் கிராமத்திலுள்ள கோவிலில்கூட தமது செல்வாக்கு பலிதமடையவில்லையென்றும் சொல்லுகிறார். ஆனாலும் காந்திஜி ஹரிஜன ஸேவாஸங்கத்தைக் காட்டிக்கொடுக்க விரும்பவில்லை. திருவாங்கூரில் இந்த ஸங்கத்தைத்தவிர வேறு எதுவும் இவ்விஷயத்தில் பாடுபட்டதாகத் தெரியவில்லை யென்கிறார். தமது [illegible] வெற்றிமூலம் தாம் வெற்றியடைந்ததாகக் காட்டிக்கொள்ள காந்திஜி விரும்புவதை, வேலுப்பிள்ளை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். நம்மைப்பற்றியவரையில் காந்திஜிக்கே இந்த வெற்றிப்பெருமை ஏற்குமென நினைப்போம். ஏன்? காந்தி ஜயித்ததற்கு ஏதாவது ஒரு உதாஹரணமாவது வேண்டுமல்லவா?

ஸினிமாக் கலையா.

இந்தியாவில் அநேகக் கலைகள் உண்டு. ஆயினும் பிறதேசத்திலிருந்து பிச்சைவாங்கியவைகள் இப்போது அதிகரிக்கின்றன. நாடகக் கலையென்பது மிக உன்னதமான கலையாகும். அதைஉருப்படாமல் அழிக்கத்தோன்றியுள்ள ஸினிமாக்காக்ஷியும் இப்போது ஒரு கலையாகப் பெயர் வகிக்க ஆரம்பித்துவிட்டது.

சென்னையில் ஸினிமா மஹாநாடுகள். ஒன்றில் ஸ்ரீமதி ராமாவ் பேசினாள். மற்றொன்றில் பம்பாயைச்சேர்ந்த ஸ்ரீமான் தேசாய் என்பவர். இவர்சினிமாவைப்பற்றி உபயோககாமான பல விஷயங்களைப் பிரஸ்தாபித்திருக்கிறார். நாடகக்கலை நிபுணரான ஸ்ரீ பி. ஸம்பந்த முதலியார், நாடகங்களைவிட ஸினிமாவே சிறந்ததெனச் சாதிக்க முன்வந்தார். இந்தக் கூட்டங்களில்கூட தேசீய மணம் வீசியது ஸந்தோஷிக்கத் தக்கது. ஆபாஸமான படங்களைக் காட்டக்கூடாதென்றும் அந்நியதேசங்களில் இந்திய நாகரிகத்தைச் சிறுமைப்படுத்தும் நோக்கத்துடன் தயாரிக்கப்படும் படங்களைத் தடைசெய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஸினிமா நடிப்பால் பல்லாயிரக்கணக்கானவர்கள் பிழைத்து வருவதாகப் பேசப்பட்டது. ஸினிமா விளம்பரத்தால் பிழைத்துவரும் பத்திரிகைகளின் கணக்கையும் குறிப்பிட மறந்தது ஏனோ?

வேதாந்தியாகிவிட்டார்.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் ராஜீயத்திலிருந்து விலகியது ஒரு விதத்தில் நல்லதாகவே நினைக்கத்தக்கதாயிருக்கிறது. அவர் தற்போது ஹிந்துமத தத்வங்களை ஆராய்ச்சி செய்ய அவகாசம் பெற்றிருக்கிறார். வேதங்களையும், உபநிஷத்துக்களையும் பரிசீலித்தது அநேகக் கட்டுரைகளை அவர் அநேக பத்திரிகைகளில் வெளியிட்டு வருகிறார். ராஜீயத்திலேயே மூழ்கிக் கிடந்தவரையில் அவருக்கு மததத்வங்களின் மஹிமையை அறிய அவகாசமில்லாததுடன் அலக்ஷ்யபுத்தியும் அதிகமாயிருந்தது. இப்போது அவர் ஒரு வேதாந்திபோல் ஆகியவிட்டபடியால் மத ஸம்பந்தமான ஸபைகளிலிருந்து அவருக்கு அதிக அழைப்புக்கிடைக்கிறது. ஆயினும் தானாகப் பார்த்த மத தத்வம் எவ்வளவு பயன் தரும்? பெரியோரிடம் விதிப்படி கிரஹித்தாலன்றோ அது ருஜுவாயிருக்கும்.

சென்னையில் கீதாதினம். அதில் ஸர். அல்லாடி அய்யர்அக்கிராஸனர். ஸி. ரா. ஆசாரியர் உபந்யாஸகர், இருவரும் ஹிந்துமத உணர்ச்சியுள்ளவர்கள்போல் பேசினாலும் கீதையின் கருத்துக்கு அது வெளிப்பட்டதாகவே இருந்தது. ஹிந்து சாஸ்திரங்கள் காலத்திற்கு ஏற்றபடி மாறுதல் அடையக்கூடியவைகளாதலால், அவை ஒரு நாளும் ஜீவனற்றுப்போகாவென்று ஸ்ரீமான் ஆசாரியார் பேசினார். இந்தப் பரிவை இவரிடமிருந்து ஹிந்து சாஸ்திரங்களோ தார்மிகர்களோ எதிர்பார்த்து நிற்கவில்லை. கீதையில் யாகங்களெனப் படுகிறவைகளுக்கு, "அபேக்ஷையை த்யாகம்செய்தல்" என்ற அர்த்தமே தோன்றுகிறதாம். [illegible] யாகங்களென்பவைகளுக்கு வேறு பொருள் கீதையில் கூறப்படவில்லையா! ஸன்யாஸமென்றால் ஸமஹா நடவடிக்கையிலிருந்து விலகுதல் என்ற அர்த்தமாம். [illegible] இவர் தம்மையும் ஒரு "ஸன்யாஸி"யாக நினைத்துப் பெருமைப்படலாம்போலும். ஸர் அல்லாடி அய்யரும் கீதையின் தாத்பர்யங்களைப்பற்றி கூறிய அபிப்ராயங்கள் ஏற்கத்தக்கவையல்ல. தற்காலத்தில் நம் மனதில் ஊசலாடிக் கொண்டிருக்கும் நவீன நாகரிகமாயா உலகின் போக்குகளை நமது சாஸ்திரங்களில் திணித்து அர்த்தம் கூறுவது அஸந்தப்பமாகவே முடிகிறது.

கடைசியாக ஸ்ரீமான் ஆசாரியர் நமது வேதங்களை தற்காலம் பள்ளிகளில் கட்டாயப் பாடமாகச் செய்யவேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார். ஸ்ரீமான் ஆசாரியர் நேருஜியைப்போலில்லாமல் நமது வேதங்களிலும் உபநிஷத்திலும் பிரீதிவைத்து மதாஹஸ்யங்களை ஆராயப் புறப்பட்டவரையில் சிலருக்கு ஸந்தோஷமே. ஆனால் அது காலக்கிரமத்தில் சீர்திருந்தி விடுமென்று எதிர்பார்ப்போம்.

சேலத்தின் நற்புத்தி!

முனிஸிபாலிடிபோன்ற ஸ்தாபனங்கள் அந்தந்த விடங்களிலுள்ள தேவைகளை மட்டும் கவனிக்க ஏற்பட்டன. அவைகளின் வேலை வரையறுக்கப்பட்டிருக்கிறது. நகரங்களின் ஸுகாதாரம் முதலிய வேலைகளைக் கவனிக்கவே அவைஏற்பட்டவை, ஆனால் தற்போது அந்த வியவஸ்தை அழிந்துவிட்டது. நகர வேலையில் ஸம்பந்தப்படாத வெளி விஷயங்களைப்பற்றி அவை பேசக் கிளம்பிவிட்டன. இதனால் நகர ஸபைகளில் கக்ஷி பிரதிகக்ஷியேற்பட்டு பொதுஜன ஸௌகர்யம் கெடவே வழியேற்படுகிறது. தங்கள் கக்ஷியாருக்குஉபசாரப்பத்திரம்படிப்பதும், தலைவர்களின் படத்தை மாட்டுவதும், இவைபோன்ற அநாவசியவேலைகளும், இவைகளையே முக்யமாகக் கருதிக்

(இதன் தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

Sri Ramananda Saraswati Swamigal.

We report with great regret the news of the passing away of Sri Ramananda Saraswati Swamigal on the night of Friday the 25th instant at Kollimalai where he was staying for the last seven months. In his Purvasrama he was well known as Mr. G. Ramachandra Aiyar one of the prominent leaders of the Tinnevelly Bar.

Born in 1867, he had his educational career at the Tinnevelly Hindu College, the Kumbakonam Government College and the Madras Christian College. After undergoing the course in the Law College, he set up practice in 1896 at Kulitalai, Trichy District and in 1901 removed to Tinnevelly. He was in active practice till about 1920. He was always of an extraordinarily pious and liberal nature and had the rare privilege of being guided by His Holiness the late Acharya of Sringeri who prevented him more than once from taking up Sanyasa hastily. In 1921 he left for Sringeri and after a stay of nearly a year there at the feet of His Holiness the present Acharya, he had his long-yearned-for wish of becoming a Sanyasi and had his initiation from Sri Kamalananda Narasimha Bharati the head of the Nilmavina Mutt, who was then at Sringeri. In 1923 he came away to Nerur, the place sacred to Sri Sadasivendra Saraswati, and he [illegible] to lead a life of great discipline and hardship clothed only in a Koupeena. He gradually dropped speaking also and after a few years touring throughout the villages on either bank of the Akhanda Kaveri he stayed away at Devarmalai for some years. When his Asrama Guru attained Siddhi in 1928 at Mahadanapuram, he was deputed by His Holiness of Sringeri to initiate his successor. After about four years, he felt attracted by the Samadhi of his Guru and stayed there for more than two years. Impelled again by a desire for absolute solitude, he left the place and finally went away to Kollimalai where he passed away.

He was well known for his religious activities throughout the Tamil Districts and the last public function in which he took part was the Varnasrama Dharma Conference at Tanjore over which he presided in 1921. His writings in English have been published by the Madras Law Journal Press under the name of the 'Hindu Ideal', those in Tamil as "Dharmavimarsanam" and those in Sanskrit as 'Muktimarganuchintanam".

He has left behind him his wife, four sons (the eldest of whom is Mr. R. Krishnaswami Aiyar, M. A, B. L. Advocate, Tinnevelly), three daughters and a large number of relations and friends throughout the Presidency.

வாரக்குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா.

காரியத்தில் காட்டுக! காந்திஜி ஆயிரம் ரூபாயில் காங்கிரஸை நடத்தவேண்டுமென்கிறார். கங்காதர தேஷ்பாண்டே காங்கிரஸ் ராஜ்யம் மதத்தில் தலையிடாதென்கிறார். இவ்விரண்டுமனுஷ்டிக்கப்படின் தேசத்திற்குப் பலவகையிலும் நன்மையாகும்.

குருபதேசப்படி நடப்பரா? ரோமபுரியிலுள்ள போப் ஆண்டவர் எனும் மதகுரு தன் சீடர்களை மதத்தை கவனித்து அவ்வழியில் இறங்கும்படியும் உபதேசிக்கிறார். அதன்படி நடந்தால் தங்களுக்கும் ஏனைய உலகிற்கும் நன்மை உண்டாகும்.

ஏமார்ந்தோம்!! ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸபை நடந்தது. முக்யமாக ஆலய விஷயத்தில் அக்கரைகொண்டு ஏதேனும் நல்ல தீர்மானங்களைச் செய்யுமென எதிர்பார்த்தோம். அது விபரீதமாக பிராமண பாடசாலைகளில் அல்லாதாரை சேர்த்துக்கொள்ளும்படி அரசாங்கத்தை வேண்டிக்கொள்வதாக தீர்மானித்தது. இதுவும் காலத்தின் கோலமே போலும்!

நல்லதிற்கில்லை! நாளுக்குநாள் பாபமதிகரித்துவருவதால் நாட்டிற்குண்டாகப்போகும் தீங்குகளைக்காட்ட பல அபசகுனங்கள் தோன்றுகின்றன. இவ்வாண்டு மோக்ஷைகாதசியன்று ஸ்ரீரங்க ஆலய புஷ்கரிணியில் இரு ஸ்திரிகள் இறந்து ஏகாதசி உத்ஸவம் தாமதித்ததும் கூட்டத்தை நாடி கலெக்டர் மூலதர்சனமில்லாதபடி செய்ததும் பக்தர் மனதைப் புண்படுத்தியது.

லக்ஷதீபமில்லை! ஏன்? ஸ்ரீராமேச்வர ஆலயத்தில் சென்ற கார்த்திகை மாதம் லக்ஷ தீபமேற்றுவதை நிறுத்திவிட்டனர். இதற்காக வேண்டிய மூலதனம் வைத்திருந்தும் இது உயர்ந்த தர்மமென புராணமெல்லாம் கூறியும் ஏனிந்த உத்தம பணியை நிறுத்தினரோ? பக்தர் கிளர்ச்சி பலத்தால் வழிபிறக்கும் போலும்!

இன்னும் இடமுண்டு!! பிப்ரவரியில் புதிய தேர்தல் நடக்கப்போகிறது. அதற்கு நிற்க ஒரு ஸநாதனியேனும் முன் வரவில்லை. காங்கிரஸ் மூலமாக உள்ளே புகுந்து அதர்ம சட்டங்களை எதிர்த்திருக்கலாம். இன்னும் அவகாசமிருக்கிறது. ஆற்றல்பெற்ற பல தலைவர்களில்லாமலில்லை. ஊக்கமும் ஒற்றுமையுமிருந்தால் வேலை செய்ய பலர் இலவசமாக முன்வருவர்! எவரேனும் நிற்பரா?

சிறிது விட்டுகொடுக்கவேண்டும்! எவரும் எந்தவிஷயத்திலும் லகுபிருக்களை சிறிது பிறருக்காக தளர்த்தினால் இருவருக்கும் பயனுண்டாகும். ஸ்ரீ சங்கர மடத்தில் நடந்த பிராமண ஸபை தலைவர் சட்டப்படி திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தைப்பற்றிபேசாதே என்றார். மாம்பலம் ஸபையில் சட்டத்தைக் காட்டி மற்றொருவர் எப்படி இச்சபை கூட்டலாமென கேட்க சட்டத்தின் கடுமையை நினைத்து சிறிது இறங்கும்படி நேர்ந்தது. சட்டமெனும் பந்தத்தைக் காட்டி எவரும் தர்ம விரோதம் செய்யலாமா.

வருகிறது! வருகிறது!! ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அபிப்பிராயம் தெளிவாக வெளிவராததால் அவஸரப்பட்ட பலர் பலவகையாக பேச, சிறிது பொறுக்கும்படி வேண்டினோம். நாம் கூறியவண்ணம் அதர்மத்தை எடுத்துக்காட்டி தர்மத்தைக் கைப்பற்றும்படி ஸ்ரீயவாள் அனுப்பிய ஸ்ரீமுகம் வருகிறது! ஆகலின் ஆலயப்ரவேசத்தில் தீவ்ர தர்மப்ரசாரம் செய்யவேண்டும்.

தட்டிக்கொடுத்தல் வேண்டும்! பொது தர்மத்திற்குழைப்பவர் அரிது. குற்றமற்றவர் இறைவன் ஒருவனே. தர்மதொண்டர் செய்யும் தவறை மற்றதார்மிகர் ஸாஸமான வழியில் எடுத்துக்காட்டித் தவறைத்திருத்தல் வச்யம். உத்வேககாமான சொற்களால் தர்மஸேவகர்களைத் தாக்குவதால் அவர் பூர்ண பலத்தை இழப்போம். பாபத்திற்காளாவோம். "அதேனும் தேனுமிநிப்ருயாத்" கறவாத பசுவையும் கறக்கும் பசு என்றே கூறென்றார் கௌதமர்.

திருவிடமருதூர்.

ஸாமவேத பாராயணம்.

சோளமண்டலத்தில் காவேரியின் தெக்ஷிண தீரத்தில் விளங்கிவரும் முக்திக்ஷேத்திரமாகிய மத்யார்ஜுனமென்னும் மஹாக்ஷேத்திரத்தில் பக்தானுக்கிரஹத்தின் பொருட்டு கைலாசத்தினின்றும் ஆவிர்பவித்த மஹாதேவர் ஜோதிர்மய மஹாலிங்கமென்று லிங்கரூபமாக விளங்கிவருகிறார்.

பிரதி வருஷத்திலும் தை-மாதத்தில் மஹாலிங்கமூர்த்திக்கு நடந்துவரும் பிரும்மோத்ஸவத்தில் எங்கள் பரம்பரையில் சுமார் நூறு வருஷகாலமாய் விடாமல் நடத்திவரும் ஸாமவேதபாராயண பிராமணபோஜன தர்மத்தை ஸ்ரீகாஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியஸ்வாமிகள் அவர்கள் அனுக்கிரஹத்தை முன்னிட்டு ஆஸ்திக பிராமணர்கள் ஒத்தாசையைக்கொண்டு பகவத்ஸன்னிதியில் நடத்திவருகிறோம். இப்படிக்கு தாது-ஹு தை-மீ 4உயில் ஆரம்பிக்கப்படும் ஷடிமகோத்ஸவத்திற்கு ஆஸ்திக பிராமணோத்தமர்கள் எல்லோரும் வந்து பகவத்தெரிசனத்தை முன்னிட்டு எங்கள் ஸாமவேத பாராயணத்தையும் சிரவணம் செய்து கிருதார்த்தர்களாகி மேல்மேலும் ஸாமவேத பாராயணத்தை அபிவிருத்தி செய்ய பிராமணோத்தமர்களைப் பிரார்த்திக்கிறோம்.

வேதமூர்த்தி, ராமஸ்வாமி சிரௌதிகள், சுப்பிரமணிய சிரௌதிகள், ராமச்சந்திர சிரௌதிகள். கோனேரிராஜபுரம்.

நாராயணஸ்வாமி சிரௌதிகள், திப்பராஜபுரம்.

திருச்சிராப்பள்ளி

ஸாமவேதபாராயணம்.

ரயில்வே எலெக்டிரிக் சீப் இன்ஸ்பெக்டர் மகா ா-ா-ஸ்ரீ வைத்யநாதய்யர் அவர்களின் பிரார்தனைக் கிணங்கி திருச்சி கீழ ஆண்டார் வீதியில் ஷடியார் கிருஹத்தில் 30-12-36 முதல்பிரதிதினம் பிராதக்காலத்தில் நியமத்துடன் லோக க்ஷேமார்தமாக திருவையார் பிரும்மஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள் அத்தாழநல்லூர் ராமஸ்வாமி சாஸ்திரிகள் கோமல் நீலகண்ட சாஸ்திரிகள் வறகனேரி தொரஸ்வாமி சிரவுதிகள் மகாதானபுரம் நாகநாதன் சாஸ்திரியள் கொக்கரசம்பேட்டை ஜகதீச சாஸ்திரிகள் சேர்ந்து ஸுஸ்வரத்துடன் லக்ஷணத்திற்கு ஒத்த ப்ராசீன ஸாமகானத்தைச்சிரத்தையுடன் நடத்திக்கொண்டு வருவதைக் கேட்க பரமானந்தமடைகிறோம். ஸ்ரீ ஸாமகானப் பிரியரான ஸ்ரீமாத்ரு பூதேச்வரர் இந்த பாராயணத்தை அவிச்சின்னமாய் நடந்து வரும்படி அனுக்கிரஹிக்கவேண்டுகிறோம்.

மேலக்காவேரி கே. ஆர் வி சாஸ்திரி.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

தாது-ஹு மார்கழி-மீ 24உ

பிராம்மண ஸமூஹத்தின் நிலைமையும் கடமையும்.

பாரததேசத்தில் வெகு காலமாக ஸகல விதத்திலும் சிறப்புற்று, எல்லா ஜாதியினராலும் கொண்டாடப்பட்டு, மஹா மஹிமையுடன் விளங்கிவந்த பிராம்மண ஸமூஹத்தின் தற்கால நிலைமை யென்ன? அதற்குப் பரிஹாரமென்ன? இத்யாதி விஷயங்களைப்பற்றி அந்த ஸமூஹம் இன்றுவரையில் கவலையுடன் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஏனைய ஜாதியினர் யாவரும் தங்கள் தங்கள் ஜாதியே உயர்ந்ததென்று சொல்லிக்கொண்டு தன்னைப் புகழ்ந்துகொள்வதும், தனது ஸமூஹ—ராஜீய நிலைமைகளை உயர்த்திக்கொள்ளப் பாடுபடுவதும் இக்காலத்தில் வெகு ஸாதாரணமாயிருக்கையில், பிராம்மண ஸமூஹம்மட்டும் தனது நிலைமையைப்பற்றிச் சிறிதுகூடச் சிந்திக்காமலிருப்பதைவிட வேறு என்ன ஆச்சர்யமிருக்கக்கூடும்? மேலும் சில காலமாக இது, தானகவே கீழ்ப்பட்ட நிலைமைக்குப் போய்க்கொண்டிருப்பதுடன் பிறரால் வேண்டுமென்றே மத—ஸமூஹ ராஜீய வழிகளில் தாழ்த்தப்பட்டு வருகையில்கூட இந்த ஸமூஹம் உணர்ச்சிபெற்றுத் தனது நிலைமையை யோஜிக்க வில்லையென்றால் இதைவிட வேறு வருந்தத்தக்கது யாதுமில்லை பிராம்மணர்கள் தங்களுடைய உயர்வையும், தங்களால் ஸமூஹத்திற்கு ஏற்படும் நன்மைகளையும் விவரித்துக்கூறக் கூசப்படுவதன் காரணம் தெரியவில்லை. வெகுகாலமாகவே இந்த ஸமூஹம் மேற்கண்டவழியில் முன்னேற்றமடைவதை மறந்தும், ஸமூஹ ஒற்றுமை, பரஸ்பர ஒற்றுமைகளில் கவலை செலுத்தாமலும், காலம் கடத்திவந்துவிட்ட பிழையை மறைப்பதில் பயனில்லை.

இந்த நிலைமையில் எங்காவது, யாரோ சிலராவது இந்த ஸமூஹத்தின் எதிர்கால நிலைமையைப்பற்றி யோஜிக்க முற்பட்டிருப்பதாகத் தெரிந்தால் அதை நாம் மிகுந்த ஸந்தோஷத்துடன் வரவேற்கவேண்டியது கடமையாகும். பிராம்மண ஸமூஹத்தின் அபிவிருத்தியை ஆதரிப்பதைக்கொண்டு மற்ற ஸமூஹத்தின் அந்தஸ்தையும், பாத்யங்களையும் அவமதிப்பதாகவோ, புறக்கணிப்பதாகவோ ஆகாது. தற்போது தேசத்தில் கணக்கற்ற ஜாதி ஸபைகள் தோன்றி தங்கள் ஸமூஹ முன்னேற்றத்தைக் கவனிக்க முற்பட்டிருக்கையில் பிராம்மணர்களும் அப்படிச் செய்வதில் தப்பு எண்ணத்திற்கு இடமென்ன? சிதறிக்கிடக்கும் பிராம்மண ஸமூஹம் ஒன்றுபட்டு ஐமத்யத்துடன் ஈளங்கினால் அதனால் மற்ற ஸமூஹத்தின் ஒற்றுமையும், தேச கார்யமும் செழித்து தேசத்தில் சாந்தமான நிலைமை உண்டாகவே உபகாரமாயிருக்கும்.

இச்சமயத்தில் சென்னையிலுள்ள பிராம்மணர்கள் இந்த ஸமூஹத்தின் யோக க்ஷேமத்தில் கவலைசெலுத்த முற்பட்டிருப்பது ஸந்தோஷிக்கத்தக்கது. பிராம்மண ஸமூஹத்தின் உயர்ந்த நோக்கங்களும், சிறந்த எண்ணங்களும், விரிந்த ஸமூஹ ஊழியக்கொள்கைகளும் இக்காலத்தில் வேண்டுமென்றே இழிவுபடுத்தப்படுகையில், அதைத் தடுத்து அந்த ஸமூஹத்தின் உண்மை நிலைமையை வெளிப்படுத்துவது மிக்க அவஸரமான கார்யமென்பதில் ஸந்தேஹமில்லை. ஸ்ரீமான்களான என். ஸுப்ரமண்ய அய்யர், கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் போன்ற தலைவர்கள். லௌகிகத்தில் பெரிய அந்தஸ்து வகித்து, உலக நிலைமையையும் நன்கு அறிந்தபெரியோர்களாகையால், அவர்கள் பிராம்மண ஸமூஹத்தின் க்ஷேமத்தில் கவலையெடுத்துக்கொண்டிருப்பது அச்சமூஹத்தின் அதிர்ஷ்டமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. அவர்களுடைய பிரஸங்கங்களை ஊன்றி கவனித்தால், அவர்கள் அல்ப பிரயோஜனங்களைமட்டும் கருதாமல் உலக க்ஷேமத்திற்காகவே பிராம்மண ஸமூஹம் முன்னேறவேண்டுமென்கிற சிறந்த நோக்கம் கொண்டிருப்பது விளங்கும். அவர்களும் அங்கு பேசிய மற்றகனவான்களும் முக்யமாக வற்புறுத்திய விஷயமென்ன? அது ஒற்றுமை என்ற முக்ய விஷயமே. இந்த ஒற்றுமையின்மையால்தான் இந்த ஸமூஹம் கீழ்நோக்கிச்செல்ல நேர்ந்ததென்பது மறுக்கமுடியாத உண்மையல்லவா? ஒற்றுமையிருந்தால் ஒருஸமூஹம் ஸாதித்துக்கொள்ள முடியாத விஷயமொன்று மில்லை யெனலாம். சென்னைத் தலைவர்களின் உபதேசத்தையும், ஊக்கத்தையும் மற்றவர்களும் கவனித்து, இதுவரையில் காட்டிவந்த அச்ரத்தையையும், அலக்ஷ்யத்தையும் உதறித்தள்ளி அந்த ஸமூஹத்திற்குள் ஒற்றுமையை உண்டாக்கி அதன் மூலம் அந்த ஸமூஹத்திற்கும் தேசத்திற்கும், தர்மத்திற்கும், சிறந்த கைங்கர்யம் செய்ய முன்வர வேண்டுமென்பது நமது பிரார்த்தனையாகும்.

குறிப்புகள்.

22வது வருஷ ஆரம்பம்.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 22வது ஆண்டு இன்று ஆரம்பமாவதை ஸந்தோஷத்துடன் குறிப்பிடுகிறோம். இப்பத்திரிகையின் சிறிய கைங்கர்யத்தைப்பற்றியும். இதன் அபிவிருத்தியைப்பற்றியும் அநேக நண்பர்கள் ஆங்காங்கு பிரசாரம் செய்வதுடன் நமக்கும் எழுதிவருவது ஸந்தோஷிக்கக் கூடியதே ஆயினும் இப்பத்திரிகைக்கு தார்மிக ஜனங்களுடைய பூர்ண ஆதரவு கிடைக்கவேண்டியது அவச்யமாயிருப்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். ஏற்கனவே அபிமானிகளாயிருந்தவர்கள் தங்களுடைய அபிமானத்தை எப்போதும் நீடித்துச்செய்து உபகரிப்பதுடன் இன்னும் அநேக அபிமானிகளைச் சேர்க்கவும் முயற்சி எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

பத்திரிகை நிர்வாஹிகள் இந்தசிறியஉபகாரத்தையாவது தார்மிகர்களிடமிருந்து எதிர்பார்ப்பது வீணாகக் கூடாதென்பது நமது பிரார்த்தனை.

கிறிஸ்தவர்களிலும் தீண்டாமை.

கும்பகோணத்தில் கதோலிக் கிறிஸ்தவர்களுக்குள் நடந்துவரும் பெரிய சச்சரவைப் பலரும் கவனித்திருக்கலாம். ஜாதி ஹிந்துக்களாயிருந்து கிறிஸ்தவரானவர்கள், தீண்டாத ஜாதிக் கிறிஸ்வர்களுடன் சேர்ந்து ஒரு இடத்தில் நிற்க ஆக்ஷேபிக்கிறார்கள். கிறிஸ்தவ மதம் புகுந்தபின்னும் தீண்டாதார் தீண்டாதாராகவே வைக்கப்பட்டிருக்கிறார்களென்பது வெகு காலமாகத் தெரிந்தவிஷயம். கிறிஸ்தவப்பாதிரிகள் ஜாதிபேதம் பாராட்டுவதில்லையென்று பசப்பிப் பேசினாலும் தீண்டாதாருக்கு அவர்கள் ஓரிடத்திலாவது ஸம அந்தஸ்து கொடுக்கவில்லை. கும்பகோணத்தில் இந்த கிளர்ச்சி வெகுவாக முற்றிவிட்டது. சாமியார் கையிலுள்ள மோதிரத்தை தீண்டாதார் முத்தமிட நெருங்கும்போது அந்த சாமியார் அவர்களிடம் வெறுப்புக்காட்டுவதாகப் புகார் சொல்லப்படுகிறது. தீண்டாதார், தங்களை ஸம அந்தஸ்துடன் நடத்தாவிடில் ஹிந்துமதத்திற்கு திரும்பிவிடுவதாயும் முற்போக்கு வாய்ந்த ஆரிய ஸமாஜம் முதலியவைகளில் சேர்ந்துவிடுவதாயும் யோஜனை செய்வதாகத் தெரிகிறது.

ஜாதிபேதமும் ஜாதித்வேஷமும் பிராம்மணர்களாலேயே வளர்ந்துவருவதாகச் சொல்லித்திரிந்துவரும் சிலருடைய கண்களை இந்த ஸம்பவமும் திறந்துவிடுமென்று நாம் நினைக்கிறோம். ஜாதிபேதத்தை அழித்து ஸம அந்தஸ்துக் கொடுப்பதாகவே பாதிரிகள் வாக்குறுதி கொடுத்துத் தீண்டாதாரை கிறிஸ்தவத்தில் சேர்க்கிறார்கள். தீண்டாதாரும் இதை நம்பியே அங்கு போகிறார்கள். பிராம்மணதர்ம வாஸனையே இல்லாத இவர்கள் ஏன் ஜாதிபேதம் பாராட்டுகிறார்கள்? தீண்டாதாருடன் நெருங்கி உட்காரமறுக்கிறவர்கள் யாவரும் பிராமணரல்லாத ஜாதிக் கிறிஸ்தவர்களே. இதைக் கண்டிப்பாக ஆதரித்துத் தீண்டாத ஜாதிக் கிறிஸ்தவர்களை விலக்கிவைத்திருப்பவர்களும் மதகுருக்களான பாதிரிகளே! இவர்கள் பிராம்மணர்களைவிடக் கடுமையாக இப்படி ஜாதிபேதம் பாராட்டுவது உலகத்தாரின் கண்களில் படவில்லையா?

சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

திருவாங்கூர் உத்திரவுக்கு ஆக்ஷேபம்.

சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் வருஷாந்திரப் பொதுக்கூட்டம் திருவல்லிக்கேணி ஸ்ரீவானமாமலை மடத்தில் 3உ. யன்று ஸ்ரீமான் ராவ்ஸாஹிப் பி. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பலர் வந்திருந்தனர். திருப்புகழ்மணி அட்வகேட் ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணஸாமி அய்யர் நேரில் வர முடியாததற்கு வருந்தியும் ஸபை நன்கு நடைபெறவேண்டுமென்று கோரியும் ஒரு செய்தி அனுப்பியிருந்தார்.

அக்கிராஸனர் முன்னுரைக்குப் பிறகு ஸ்ரீமான் அட்வகேட் ஸி. நரஸிம்மாச்சாரியார் அவர்கள் திருவாங்கூர் ஆலய பிரவேச உத்திரவைக் கண்டித்து ஓர் தீர்மானத்தைப் பிரேரித்தார். ஸ்ரீமான்களான ஆரணி ஸுப்ப ராவ், என். ஸ்ரீநிவாஸாசாரியர், பண்டித யதுநாதாசாரியர், அஷ்டகோத்திரம் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர் தீர்மானத்தை ஆதரித்தும் பேசினார்கள். ஜனவரி மாதத்தில் மற்றொரு கூட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

வைதிக தர்ம ஸங்கம்.

மன்னார்குடியில் ஸம்மேளனம்.

18- சுக்ரவாரம் (1—1—37)-

இந்த ஸங்கத்தின் ஸம்மேளனம் மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூலில் நன்கு நடந்தேறியது. வெளியூர், உள்ளூர்களிலிருந்து அநேக பண்டிதர்களும் பெரிய மனிதர்களும் நிரம்ப வந்திருந்தனர். தஞ்சாவூர் ஸ்வாமிகளும் எழுந்தருளியிருந்தார்கள். ஆரம்பத்தில் ப்ரும்மஸ்ரீ அநந்தாச்சார் ஸ்வாமி அவர்கள் (சோங்குளம்) "வேதமஹிமை" என்ற விஷயமாய் விஸ்தாரமாகவும், கம்பீரமாகவும், பலமுகமாகவும் விவரித்து உரைத்தார்.

ப்ரும்மஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சார் ஸ்வாமி அவர்கள் வேதத்தின் தர்மங்களை ப்ரசாரம் செய்யவேண்டிய முக்யத்தைப்பற்றிப் பேசுகையில், மேல்நாட்டுப் புத்திமான்களும் மிகப்ரயாஸையுடன் நம்வேதங்களை சோதித்து தத்வங்களை ஆராய்ந்து உலகத்துக்கு வேதத்தின் பெருமையை ப்ரகாசப்படுத்துகையில், வேதத்தையே ஆஸ்தியாக உடைய பாதகண்டத்துப் பிராம்மணர்கள் உறங்குவதும் உதாஸீநமாய் இருப்பதுவும் வேதத்ரோஹிகள் என்றும் தர்மத்ரோஹிகள் என்றும் நம்மை ரூபிக்கவில்லையா என்றும், அதி சீக்ரமாக எல்லோரும் வேதமாகிற கருப்பஞ்சோலையில் புகுந்து ரஸபானம் பண்ண வேண்டும் என்றும், கனகாம்பீர்யமாகவும் ...ற்புறுத்தி ஓங்கி, உரைத்தார். நாற்றுக்கு ...ல் கூடியிருந்த ஸபையார்களனைவரும் தட்ட... வலதுபா...ப்பட்டவர்கள்போல் கூட்டங்கூட்... ...பன்யாஸகரைப் புகழ்ந்ததோடு, ... பெறவேண்டும், தூங்கக்கூடாது ...வேகத்துடன் ஸம்பாவிக்கக் ... அனுபவித்தார்கள். ...கர்பம் தரித்தாள். 100 மன்வந்தரத்துக்குப் பிறகு கோடி ஸூர்யப்ரகாசமாய் ஒரு அண்டம் பிறந்தது. ராஸக்ரீடாகாலத்தில் ராதையின் தேஹத்திலிருந்து வேர்வை உண்டாகி மஹார்ணவஸமுத்ரமாக ஆகிவிட்டது. பிறந்த அண்டத்தைப் பார்த்தும் ஸந்தோஷமில்லாமல் வெறுத்து அந்த மஹார்ணவ ஸமுத்திரத்தில் எறிந்துவிட்டாள். உத்தரக்ஷணத்தில் ராதையின் இடது பாகத்திலிருந்து லக்ஷ்மீ ஆவிர்பவித்தாள். க்ருஷ்ணனுடைய வலதுபாகத்திலிருந்து ஸ்ரீமன்நாராயணன் ஆவிர்பவித்தார். இவ்விருவரையும் தம்பதிகளாக நியமித்து வைகுண்டலோகத்தை ஸ்ருஷ்டித்து அதில் வஸிக்கும்படி செய்தார். இவர்கள் வைகுண்டம் சென்றதும் லக்ஷ்மீநாராயணனுடைய ரோமகூபங்களிலிருந்தும் கோடிக்கணக்கான விஷ்ணுபார்ஷதர்கள் ஸ்த்ரீபுமான்களாக ஆவிர்பவித்தார்கள். இதற்குள் கிருஷ்ண பரமாத்மாவினுடைய வலது பாகத்தில் நின்றும் 10 கைகளும் 5முகங்களுடன் பரமசிவன் ஆவிர்பவித்தார். உத்தரக்ஷணத்தில் அந்த மூலப்ரக்ருதியிலிருந்து லேசாம்சத்தால் 1000 கைகளுடன் துர்காதேவி ஆவிர்பவித்தாள். இந்த இருவர்களையும் தம்பதிகளாகநியமித்து ருத்ரலோகம் கல்பித்து அதில் இவர்களை வாஸம் பண்ணும்படி செய்தவுடன் இந்த தம்பதிகளின் ரோமகூபங்களிலிருந்து ஸ்த்ரீ புருஷர்களாக கோடிக்கான ப்ரமதகணங்கள் ஆவிர்பவித்தார்கள். இதற்குள் கிருஷ்ண பரமாத்மாவினுடைய நாபிகமலத்தில் 4முகத்துடன் ப்ரும்மதேவர் ஸாவித்ரீதேவியுடன் ஆவிர்பவித்தார். இவரை ஸத்யலோகம் கல்பித்து அதில் வஸிக்கும்படி செய்யவே, கிருஷ்ணபரமாத்மாவுடைய ரோமகூபங்களிலிருந்து அனந்த கோடி கோபதேவர்களும், ராதையினுடைய ...ன பலகுறைவுகளை சொல்லி நிறைவு செய்துகொள்ளவேண்டிய மார்க்கங்களையும் விபரமாகவும் எல்லோர் மனதிலும் பச்சைமரத்தாணி போல் பதியும்படியாகவும் தெளிவாக எடுத்து உரைத்தார்கள்.

19 - ஸ்திரவாஸரம் (2-1-37)

ப்ரம்மஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமாநுஜதாத்தாச்சார் ஸ்வாமி அவர்கள் 'வைதிக மதமும் நவீன பாவமும்' என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு தற்காலம் ப்ராம்மணர்கள் வேதாந்தத்தையே முக்யமாகக் கொண்டாடுகிறார்கள். வேத ஆதியை மறந்துவிட்டார்கள். வேதத்தை ஆர்ய ஸமாஜத்தார் கொள்ளை கொள்ள விட்டுவிட்டார்கள். ஆர்யஸமாஜத்தாரும்,இதர ஸமாஜத்தார்களும் Social reformers) ஸமூஹ சீரைத் திருத்துவோர்களும் வேதத்தைக் கண்டபடியெல்லாம் அர்த்தம் செய்து உலகத்தில் பொய்ப்ரசாரம் செய்வதை நாம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம் வேதத்தின் விஷயத்தில் பாடுபட்டு அர்த்தம் வெளிப்படுத்திய மஹான் வித்யாரண்ய ஸ்வாமிகளின் ஞாபகத்தை விட்டுவிட்டோம். வேதத்தின் வாஸ்தவப்பொருளை ப்ரகாசப்படுத்தாமல் வேதமாதாவை பிறர் அவமானப்படுத்துவதை வெட்கமில்லாமல் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாத்ருத்ரோஹமல்லவா? இவ்வாறு ஸப்யர்கள் அழும்படியாகவும் உணரும்படியாகவும் உபன்யஸித்தார்கள்.

ப்ரும்மஸ்ரீ T. L. ஸுப்பய்யர் அவர்கள் 'ஸ்ம்ருதிஸாரம்' என்ற விஷயமாக மனுஸ்ம்ருதியிலிருந்து பல ச்லோகங்களை மத்தியில் சொல்லி விவரித்துக்கொண்டே ஆசாரத்துடனேயே ஆயுள், தனம், ஸுகம், பெருமை முதலான ஸகல ஸௌக்கியங்களும் க்ஷேமங்களும் உண்டாகும்போது தர்மம். ஆசாரங்களாகிற ஔஷதங்களை விட்டுவிட்டு, க்ஷேம குளிகைகள் எங்கே கிடைக்கும் என்று ஏமா...

...க்ஷ... இருக்கிறான். ...ர அப்படி அக்ஷரப்... உண்... யான சக்தி எழுதியபடி உலகம் ... உலகமே

இவ்விதம் கோலோகத்தில் கிருஷ்ணபரமாத்மா நித்யோத்ஸவ நித்யஸ்ரீ நித்யபோக நித்யமங்களங்களை அனுபவித்து வருங்காலத்தில் ஒரு ஸமயத்தில் விரஜை என்ற கோபஸ்த்ரீயோடு கிருஷ்ணபரமாத்மா ராஸமண்டலத்தில் ரமித்துக்கொண்டிருப்பதை ஸகிஜனங்கள் மூலமாய் தெரிந்துகொண்டு நேரில் பார்ப்பதற்காக மஹாகோபத்துடன் ஸமீபத்தில் ராதை வருவதை தெரிந்துகொண்டு பகவான் அந்தர்த்தானமாய் மறைந்தார். விரஜாதேவி நடுநடுங்கிப் பயந்து ஜலமாக ஸ்ரவித்து நதிரூபிணியாக ப்ரவஹித்தாள். ராதாதேவி வந்துபார்த்து இருவரையும் காணாமையால் கோபகோலாஹலத்துடன் திரும்பி தன் ஆலயம் சென்றாள். ராதை சென்றதும் பகவான் அந்த நதிக்கரையில் உட்கார்ந்துகொண்டு விரஜையை குறித்து புலம்பி ஸமாதானம் சொல்லி முந்தின ரூபத்துடன் தெர்சனம் கொடுக்கும்படி விரும்பினார், விரஜை திவ்ய யோகினியாகையால் பூர்வரூபத்துடன்நதியில் நின்றும் பகவத்ஸமீபம் வந்ததும் மறுபடியும் க்ரீடித்து லவண இக்ஷு முதலான 7ஸமுத்ரங்களுக்கும் அதிஷ்டான தேவதைகளை ஜநிப்பித்தார். பிறகு பகவான் தன்னுடைய ஆலயத்தில் ஸுதாமாமுதலான முக்ய பக்தர்களுடன் ... பகவானை சிக்ஷிக்க வேண்டுமென்று அதிகோபத்துடன் ராதாதேவி பகவானுடைய ஸமீபம் வந்தவுடன் பகவான் எதிர்கொண்டு சென்று ...க்கு கொடுத்தாதத்திலிருந்து இறக்கி கைபிடித்து ப்ரியகாமான உபசார வார்த்தைகளால் தன்னுடைய ஆவலான காதலைக் காட்டி பேசுவதைக் கேட்டு புன்சிரிப்பை வெளியில் காட்டிஷ்டி' என்ற விஷயத்தைப்பற்றி பல சமாசாரங்கள் குறிப்பிட்டார்.

ப்ரும்மஸ்ரீ அக்னிஹோத்ரம் தாததேசிகாச்சாரியார் ஸ்வாமி அவர்கள் 'ஸ்வதர்மம்' என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு தர்மங்களின் தத்வங்களைப்பற்றி விவரித்து அவரவர் அநுஷ்டிக்கவேண்டியதுகளை செவ்வையாய் கவனித்துச் செய்யவேண்டுமென்றும் விஸ்தாரமாகவும் ரஸமாகவும் உபன்யஸித்தார்கள்.

ப்ரும்மஸ்ரீ சாஸ்த்ர ரத்னாகரம் விச்வநாத சாஸ்திரி அவர்கள்(திருவையார்) 'கீதாஸாரம்' என்ற விஷயத்தை விஸ்தாரமாகவும் பொதுவாகவும், பிறருக்கு நன்றாய் புரியும்படியாகவும், கண்ணனின் உள்கருத்தை ப்ரகாசித்துக்காண்பித்தார்கள். சில அபூர்வமான விஷயங்களையும் தாத்பர்யங்களையும் ம்ருதுவாகவும் மனதில் படியும்படியாகவும் உரைத்தார்கள்.

பிரும்மஸ்ரீ வேம்புசாஸ்த்ரிகள் அவர்களால் எல்லா உபன்யாஸகர்க்கும் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களுக்கும் வந்தனோபசாரமும் நமஸ்காரமும் செய்யப்பட்டு ஸபை கலைந்தது. ப்ராம்மண ஸமாஜத்தோர் த்ருப்தியுடன் ஸந்தோஷித்தார்கள்.

21 - ஸோமவாஸரம் (4-1-37)

ஸங்கத்தின 'அப்தபூர்த்தி' ஹோமம் வேத பாராயணத்துடன் நிறைவேறியது, வா... தேவஹோமம் செய்யப்பட்டது. பகவத் அநுக்ரஹம் பெற்று எல்லாம் இனிது முடிந்தது.

ஸாரம் ரங்காச்சார்யன்.

ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள்.

பூர்வாச்ரமத்தில், ஜீ ராமசந்திர அய்யர் என்று எங்கள் பிதாவா... ...மத் பரம... இன்னும் உம...

ஸ்வபாவங்களை ...த்தினைகாலம் சொகளும் இங்கிகாலம் போராது, அறியவும் முடியாதியர்களுக்குக்கே நிர்ணயப்படாது. இனி இங்கிருசைகளையும் உமக்கு க்ஷேமம் கிடையாது நீர் அவர்கள், இப்த்ரீ ஜாரசோரலம்படன் ஆகையால் இவ்விஷயங் கோலோகத்தை விட்டு எங்கேயாவது போகலாம் என்று திக்காமாய் பேசியதைப் பொருக்காதவனாய் ஸமீபத்திலிருந்த பகவானுக்கு ஸகாவாயும் முக்ய பக்தனுயுமிருக்கிற ஸுதாமா என்ற கோபன் ராதையைப் பார்த்து கோபத்துடன் பேசுகிறான்.

(தொடரும்)

சென்னை.

ஓர் நற்செய்தி:— ஸெண்ட்ரல் ஹிந்து கமிட்டி தலைவர் கனம் கொச்சி ராஜாவை ஏகாந்தமாக பேட்டிக்கண்டு அந்த்யஜர் ஆலயப்ரவேச விஷயமாக மஹாராஜாவின் தர்ம அபிப்ராயத்தை அறிந்துவந்தார். ஆதலால் திருவாங்கூரைப்போல் தனது பிறந்த தினத்தில் பஞ்சமரும் ஆலயத்தே நுழையலாமென்று கூறுவரோ என்ற வதந்திக்கு இடமில்லாமல் போயிற்று. தார்மிக கொச்சி மன்னனையும் அதை அறிந்து கூறிய ஹி. ஸெ. கமிட்டி தலைவரையும் போற்றுவோம்.

ஸ்ரீ கருடபுராணம்:—ஸ்ரீ ராமசந்த்ரஹரிஹரியின் ஸோதாரும் குருபக்தருமான ஸ்ரீ ஆஞ்சநேயர் ... தன் மனைவி சென்றவாரம் வைகுண்டம் சென்றதால் ... வீட்டில் ஸ்ரீ கருடபுராணம் நடக்கிறது.

பல மத உபன்யாஸங்கள்:— திருவை. பிரும்மஸ்ரீ லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகளவர்கள் பல அரிய மத உபன்யாஸம் செய்துவருகிறார்.

ஆர்யதர்மம் புத்தாண்டு

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

விசேஷப்பெருமைவாய்ந்த திருக்குடந்தை திருப்பதியினின்று கடந்த மூவேழாண்டுகளாக சநாதன தருமப்பிரசாரத்தையே சிரோபூஷணமாக நடத்திவரும் ஆர்யதர்மம் என்ற சிறந்த வாரப்பத்திரிகையை அறியாதார் ஒன்றும் அறியாதாரே. அஃது சுரகுருவின் திநமான வியாழ வாரந்தோறும் பிரசுரமாகி உலகில் உலவிவருகின்றது. இப் பத்திரிகையின் அருமைப் பெருமைகள் எம் போலியர் தக்கவாறு புகழ முடியாதவை. குணங் கடந்து நிற்பதை அளவுக்குட்படுத்தி ஏற்றற்பாலதோ? ஆயினும் அதின் சில விசேஷாம்சங்களைச் சிறிது புகல்வது மிகையாகாது. பத்திராசிரியரின் குறிப்புகள் எங்ஙான்றும் ஒருபடித்தாய், அறநெறிவழாது, பக்ஷபாதமற்று உள்ளதை உள்ளவாறு காட்டும் பான்மையதாய், விளங்குகின்றமை ஆழ்ந்து நோக்குவாருக்கு நன்கு புலப்படும். பிரம்மஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்களால் தட்டின்றி வரையப்பட்டுவரும் ‘வாரக்குறிப்புகள்’ மிகப் பொருத்தமாயும், கும்பகாணனையும் தோற்கும்படி செய்யக்கூடிய ஸநாதனிகளின் பெருந்துயிலைத் தட்டி எழுப்பும் ஆற்றலுள்ளவையாயும், மாற்றலரும் மனமார்ந்து ஒப்பும்படிக்கான நேர்மையுடையனவாயும், அரிய சமாசாரங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காண்பிக்கக்கூடியவையாயும் மிளிர்கின்றன. ‘வெளியூர்ச்செய்திகள்’ ஒழுங்காகக் கோர்வையாக அமைந்து பிரகாசிக்கின்றன. ‘ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்’ பாஷ்யத்துடன் விரிவாகத் தொடர்ந்து பத்திரிகையை அலங்கரிக்கின்றது. ‘ஸநாதனமானவதர்மம்’ மிக சாத்விகமாக வரையப்பட ... நீ

புகழ்ந்து(காட்டை ந... ஐயங்கார்.)

நிலைமை

...தும் இ...த்யயம் என்பது கள் முதலான லாகிரி வஸ்துக்களை அளவுக்குமீறி உபயோகிக்கவு... ...ாகும் வெறி.

உன் மாதம் என்பது பைத்தியம். இந்த உன்மாதத்தில் பூதோன்மாதம் என்பது ஓர் பிரிவு. அதாவது பேய்பிடித்து புத்தியைக் கெடுத்து துன்பப்படுத்துவது.

அபஸ்மாரம் என்பது வலிப்பு, இது 18 வகை என்றும் 6வகை என்றும் 4வகை என்றும் வைத்யசாஸ்திரங்கள் மந்திரசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

புதன் வீட்டிலிருக்கும் குருவை சூரியன் பார்க்க கள்வெறியுண்டாகும். உன்மாதமும் உண்டாகும். புதன் வீட்டிலுள்ள குருவால் சூரியன் பார்க்கப்பட்டாலும் உண்டாகும். சூரிய பிரீதி செய்ய, குரு பிரீதி செய்ய. கடகாம்சத்திலுள்ள சுக்கிரனாலும் உண்டாகும். சுக்கிரபிரீதி செய்ய.

மேஷம் விருஷபம் கடகம் நீங்கலாக மற்ற இராசிகளில் க்ஷீணசந்திரன் நிற்க உண்டாகலாம். சந்திர பிரீதி செய்ய.

லக்னத்திற்காவது சந்திரனுக்காவது 8வது வீட்டில் சூரியன் செவ்வாய் சனி இருந்தாலும் அஷ்டமாதிபதிக்கி இவர்கள் சம்பந்தமுண்டானாலும், அபஸ்மாரம், உன்மாதம், பூதோன்மாதம் ஏற்படும். ஸ்திரீகளுக்கு அஷ்டமாதிபதியுடன் பாபர் சேர்ந்தால் பிசாசு உபத்திரவம் ஏற்படும். ராகு கேது சம்பந்தமுண்டானாலும் பேய் பிசாசு உபத்திரவமுண்டாகிறது. அந்தந்த கிரகங்களுக்கும் ப்ரீதி செய்து பின்பு சாந்தி செய்யவும்.

இப்பத்திரிகையின் புத்தாண்டு 1937-ம் வருடம் ஜனவரி மாதம் 7உ ஆரம்பம். இத்தினம் இதன் இருபத்திரண்டாமாண்டுப் பிரவேச நாளாகும். அகத்திய பாஷையான தமிழ்ப்பாஷையில் கேவலம் சநாதன தர்மத்தை மாத்திரம் அழகுபடப் பாராட்டிச்சீராட்டுகின்ற இப்பத்திரிகை மூவேழாண்டுகளாகச் நன்கு ஜீவித்திருந்து வருவதை நோக்க எம் பெருமான் திருவருளை செவ்வனே பெற்றதாகும் இது என்பது எளிதில் எவரும் அறியலாம். புத்தாண்டு மஹோற்சவத்தை அக மகிழ்ச்சியால் அநுபவிக்கிறோம். அது என்றும் இன்றெனெ இருக்குமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இச்சந்தர்ப்பத்துக் கநுகுணமாக சில யோசனைகள் கூறுவாம். அவற்றை சம்பந்தப்பட்டவர் அங்கீகரித்து அவற்றின்படி நிறைவேற்ற முன் வருவார்களென பூர்ணமாக நம்புகிறோம். இப் பத்திரிகையின் பக்க எண்ணிக்கையை முதல் ஸஞ்சிகை தொடக்கமாகத் துயர்ந்த நம்பர் கொடுத்தல் நலம். புத்தாண்டு முதல் ஸஞ்சிகையுடன் பழைய வருடப் புத்தக விஷயங்களடங்கிய அட்டவணை பக்கங்கள் குறிப்புடன் வெளியிட்டால் சௌகரியமாக இருக்கும். தற்போது இப்பத்திரிகை 12 பக்கங்களுடன் தான் வருகிறது. புத்தாண்டில் 16 பக்கங்களாக ஆக்கி நடத்தினால் என்றும் பதினாறாக விளங்கிவாழ ஏதுவாகும் என்று எமது அபிப்ராயம். இது ஏற்கனவே சில வாண்டுகள் எட்டு பக்கங்களில் வந்ததன்படி நடத்தல் எளிதாக இருக்கலாம். இதர சௌகரியங்களையும் நன்கு ஆலோசித்தே இம்மாறுதல் செய்தல்வேண்டும். நம் ஆர்யதர்மத்தின் ‘வருட அநுபந்தம்’ ஒன்று வெளியிடல் மிகவும் ஆவசியகமே. எதற்கும் பொருளின்றி முடியாதென்பது துண்மை, தனவந்தர்கள் சற்று கடைக்கணித்திரம், எள ...

...யெனத்து பிரீதியாக:—து... தலைவர்களின் உப... ...சனை, அபிஷேகம், ஹரிவ... ற்றவர்களும் பாவம், 3வது அத்தியாயத்தில் ... ஆர்யாஸ்தவ பாராயணம், உளுந்து தானம்.

கேது பிரீதியாக:—கணபதி ஹநுமாருக்கு அர்ச்சனை, அபிஷேகம் கொள்ளுதானம்.

நவக்கிரஹங்களுக்கு சொல்லப்பட்ட வேத ரிக்குகளால் மூலம். ஜபம், ஹோமம் செய்வது பிராம்மணர்களுக்கும்,

முன்னெழுதப்பட்டிருக்கிற சுலோகரூபமான மந்திரங்கள், ஜபம், ஹோமம் செய்வது மற்றவர்களுக்கும் சிரேஷ்டமானது.

தத்தாத்ரேய ஜயந்தி.

சேந்த மங்களத்துக்கு ½மைலுக்கு அடுத்த தென்புறம் தெத்தகிரிமலையில் ஸ்ரீமத் சுயம்பிரகாச பிரும்மேந்திர அவதூத சுவாமிகள் சுமார் 20 வருஷகாலமாய் ஷை கிரியில் ஆச்ரமம் கட்டிக்கொண்டு சேந்தமங்கலம் மிட்டாதார்கள் ஸ்ரீமான் ஜட்ஜு சுந்திரம் செட்டியார் அவர்கள் வகையறுக்கள் ஆதரவில் நிஷ்டையில் இருந்துகொண்டு அந்த கிரியின் உச்சியில் அழகான தத்தாத்ரேய ஆலயம் நிர்மாணம் செய்து அதில் ஷை பௌர்ணமி தினம்லக்ஷார்ச்சனையும்பிராம்மணஸந்தர்பணையும் விசேஷமாக நடைபெற்றது. இதை தரிசிக்கவும் சுவாமிகளின் ஆசீர்வாதத்தையும் ப்ரஸாதத்தையும்பெறுக்கொள்ளவும் அநேக சிஷ்யர்களும் பக்தர்களும் வந்து குமிழி இருந்தனர்கள். சில வித்வான்கள் தத்தாத்திரேயரின் பெருமையைப்பற்றியும் வேதாந்த விஷயமான உபன்னியாஸமும் செய்தார்கள்.

வரும் இப்பத்திரிகைக்கு அவர்கள் வேண்டிய ஆதரவு அளிப்பின் தருமதேவதை நன்கு நடனம் புரிவள் நம்மிடைய. இதுவிஷயமாக வேண்டிய முயற்சிகள் காலமறிந்து செய்யின் வீணாகா என்பதே எமது துணிபு.

பொதுவாக சநாதனிகள் இப்போது நன்கு தூங்குகிறார்கள் என்பதே காலப்போக்கைக் கணிசித்து வருபவர்கள் கூறும் உறுதிமொழி. ஆலஸ்யம் கேட்டை அளிக்கும். நம்மவர் ஒன்றுபட்டால்தான் வாழலாம். கலியுகத்தில் சங்கபலத்தைப்பற்றி சாஸ்திரங்கள் உத்கோஷிக்கின்றன. இந்தியாவிலேயே தமிழ் சநாதனிப்பத்திரிகை ஆர்யதர்மம் ஒன்றே என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இதனையும் நன்கு பரிபாலிக்காவிடில் நலமில்லை. வழியேபோகுக; வழியே மீளுக. ஆர்யதர்மத்தை ஆதரிப்பதே ஆன்றோர் கடன். இதன் அபிவிருத்தியைப் பல்துறைகளில் சிந்தித்துழைக்கும் சகலரும் அரோகதிடகாத்திராயிருந்து மேன்மேலும் சீரிய தொண்டியற்றுதற்கு எல்லாம்வல்ல அமலன் அருள்புரியுமாறு அவ்வாதிப்பிரான் செம்பொற்கழலடியிணைகளை மனமார வழுத்துவாம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. ஆர்யதர்மமே ஆகுலம் நீக்கும். ஆர்யதர்மமே ஆதிமார்க்கம். ஆர்யதர்மமே ஆதிப்பிரான். ஆர்யதர்மமே ஆன்றோர் அமிர்தம். ஆர்யதர்மமே ஆதரவளிக்கும் ஆர்யதர்மமே ஆபத்பாந்தவன். ஆர்யதர்மமே ஆபத்தைவிலக்கும். ஆர்யதர்மமே ஆன்ற பெருமை அடைவிக்கும். சுபம்.

உத்யோகஸ்தர்களின் சம்பளக் குறைவு ...

...ம்மண தர்ம... ...ரவின்யூ போர்டுமெம்பரின் ...வன் ஜாதி... ...கள் தக்க மரி... ...தாருடன் ...னர். புதுக்கோட்டையிலிருந்து ப...வரும் ...ராமசேஷ சாஸ்திரிகள் வழக்கம்போல் ...ளே...வுக்கு வந்திருந்தார். தர்ம கைங்கர்யத்தில் எப்போதும் ஈடுபடும் திம்மாச்சிபுரம் ரெகுநாத் சாஸ்திரிகளும் ஸந்தர்ப்பணைக்கு வேண்டிய சாமான்களுடனும் இரண்டு உழைப்பாளிகளுடனும் வந்திருந்து வந்த பக்தர்களுக்கு உபசரித்தார்.

கும்பகோணம்.

நமது நகர் பக்தபுரி அக்கிரஹாரம் படித்துறையிலிருக்கும் ஸ்ரீ ராமமடத்தில் வெகுகாலமாக தினந்தோறும் சாயந்திரம் 6 மணியிலிருந்து ஸ்ரீமகாகணபதி புராணம், வாஞ்துரை சன்னதியிலிருக்கும் பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் அவர்களால் வாசிக்கப்பட்டு வருகிறது. ஆஸ்திகர் அனைவரும் ஷை புராணத்தை வந்து சிரவணம் செய்து ஸ்ரீ மகாகணபதி பிரஸாதத்தையும் அனுக்கிரஹத்தையும் அடையும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. அநேக புராணங்கள் வெகுகாலமாக ஷை பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ணதீக்ஷிதர் அவர்களால் அவ்விடத்தில் வாசிக்கப்பட்டு வந்திருக்கிறது.

கே. எஸ். வெங்கிடாமய்யர்
வக்கீல்.

மாம்பலம்.

சென்னைக்கடுத்த தியாகராய நகரென்று பெயர்பூண்ட புதுமாம்பலம் மஹாலக்ஷ்மித் தெரு 1நீ. வீட்டில் இம்மார்கழிமீ 5உ சனிக்கிழமை ஆரம்பித்து 12உ சனிக்கிழமை வரையில் தினம் இரவில் பஜனையும் 13உ ஞாயிற்றுக்கிழமை பகலில் ஸ்ரீராதாகல்யாண மகோத்ஸவமும் 14உ ஆஞ்சநேய உத்ஸவமும் 15உ விடையாற்றியும் வெகு விமரிசையுடன் நடைபெற்றன.

ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam. Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

பிராம்மணர்களின் பொதுக்கூட்டம்.

மாம்பலத்தில் நடந்த விபரம்.

3-1-37உ ஞாயிற்றுக்கிழமை மாலை4மணிக்கு மாம்பலம் ஊஸ்மான் ரோட்டிலுள்ள குவாபரேடிவ் சொஸைடி ஹாலில் சென்னையிலுள்ள பிராம்மணர்களின் கூட்டம் ஒன்று பெரிதாக நடந்தது. சுமார் 300 பேர்கள் வரை ஸ்திரீகளும் புருஷர்களும் கூடியிருந்தனர். திருவாங்கூர் மாஜி திவான் பேஷ்கார் ஸ்ரீமான் N. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் மாஜி ஜட்ஜி அவர்கள் தற்கால ராஜீய நிலைமையையும் பிராம்மணர்களின் ஸ்திதியும், என்ற விஷயமாய் ஓர் அரிய பிரசங்கம் செய்தார். பிரம்மஸ்ரீ ஸோமதேவசர்மாவின் பிரார்த்தனையுடன் மீட்டிங்கு ஆரம்பமாயிற்று. தலைவர் முன்னுரையில் “பிராம்மணர்கள் பொது ஜன சமுதாயத்தில் ஓர் அங்கமாவர். பொதுஜன க்ஷேமத்திற்கு பிராம்மணர்கள் தங்கள் தர்மங்களை தவறாமல் நிலைநாட்டவேண்டும். பிராம்மணனால் தான் உண்மையான சேவை உலகிற்கு செய்யப்படவேண்டும். பிராம்மணர்களுக்குள் இப்பொழுது க்ஷீணதிசை ஏற்பட்டால் தங்களுடைய முயற்சியாலேயே அவர்கள் ஸ்திதியை சரிசெய்து கொள்ளலாம். ஜன சமூகம் என்பது விராட் புருஷஸ்வரூபமாகும். எல்லா ஜனங்களுக்கும் சமரஸமான ...நிதியில் பிராம்மணர் அநுகூல புத்தியுடன் ...ங்கள் தர்மங்களை கைவிடாமல் பிரசாரம் ...து பிராம்மண சபைகள் ஆங்காங்கு ...ஏற்படவேண்டு”மென்றார்.

...திவான்பகதூர் ராமஸ்வாமி சாஸ்திரிகள் நீண்ட ... “பிராம்மண...

...ஏவனே தனது பெருமையை தனது முயற்சியினால் ஸ்தாபிக்கவேண்டும். லோகக்ஷேமத்திற்கே மனிதன் பாடுபடவேண்டும். அஹிம்ஸையே உயர்ந்த தர்மமாக கருதவேண்டும். அதில் பக்தி, மைத்ரிகருதண என்ற அம்சங்கள் கலந்துள. பிரதி ஸங்கத்திலும் உயர்ந்த தலைவர்கள் தேவை. அடிக்கடியும் தென்படுகின்றனர். முக்கியமாக அஸூயை கோபம் போலொத்த குணங்கள் ஒழியவேண்டும். நமக்கு பக்தி, முக்தி இரண்டுதான் நோக்கம். ஆதிகாலத்தில் பிராம்மணர்கள் த்யானபரர்களாயிருந்தனர். இப்பொழுது ஜனநெருக்கத்தால் இதர விருத்திகளை கைக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர். ஆயினும் நமது தர்மங்கள் ஆசாரங்கள் இவைகளை கைவிடாமல் தேச க்ஷேமம் அன்யோன்ய ஐக்யமத்யம் இவற்றை விருத்தி செய்ய வேண்டும். தற்போதைய ராஜகீய விஷயத்தில் நாம் கவனிக்கவேண்டியது பல. ஜனங்களின் அறியாமையையும் மிருகப் பிராயமான நிலைமையையும் நாம் அகற்றவேண்டும். பிரதி கிராமத்திலும் ஏழைகளின் கதியைப்பற்றி நாம் பரிசீலனை செய்து நமது தர்மங்களை நன்கு போதித்து அவர்களின் கைத்தொழில்களை விருத்திசெய்து அவர்கள் நாடுவிட்டு ஓடாதபடி செய்யவேண்டும். ராஜீய காரியங்கள் ஜனங்களின் ஸம்ஸ்காரங்கள் ஆத்ம குணங்கள் இவற்றிற்கு விரோதமின்றி நடைபெறும்படி நாம் முயற்சி செய்யவேண்டும். காங்கிரஸ் பொது நன்மைக்குப் பாடுபடுகிறதெனினும் தர்ம விரோதமான செயல்களைச் செய்து சமூஹ ஸ்வரூபத்தைக் கெடுக்காதபடி முயற்சி செய்யவேண்டும். நிர்பந்தமான ஆசார விருத்தமான சட்டங்கள் கூடாது. இதை உத்தேசித்து ஓர் சங்கம் நன்கு நடைபெறவேண்டும். தலைவர் ஏற்படுத்தியுள்ள ஐக்கிய இந்திய சங்கத்தின் நோக்கங்களெல்லாம் தர்மரக்ஷணத்தைச் செய்யக்கூடியதாகும். இந்த மார்க்க சிரேஷ்டத்தில் இங்கு கூடி நாம் பிராம்மண சபையை விருத்தி செய்யும் முயற்சி மங்களகாமாய் முடியுமென்று நம்புவதாக கூறினார்.

பிறகு தண்டலம் ராமஸ்வாமி அய்யர்.

பிராம்மண சபையை விருத்தி செய்தால் எல்லாஜாதியாருக்கும் க்ஷேமமுண்டாகும். ஆசார விருத்தமான சட்டங்களை எதிர்க்கவே நமது தர்மங்களை ஸ்தாபித்து தைரியத்துடன் காங்கிரஸ்போலொத்த ஸ்தாபனங்களுக்கு போதித்து சரியான பிரசாரம் நடத்தவேண்டும். ஸாம உபாயத்தைக் கைக்கொண்டு நாம் சொல்லியும் அவ்வித ஸ்தாபனங்கள் சரிவர நடத்திக்கொள்ளாவிடில் எலக்ஷன்கள் போலொத்த காலங்களில் நாம் ‘பேத’ உபாயத்தைக் கைக்கொண்டு நமது சொந்த பிரதிநிதிகளை நிறுத்தி ராஜீயவிஷயங்களில் பொது ஜனங்களுக்கு நன்மைபுரிய முயலவேண்டும். எல்லாவற்றிற்கும் பிரசாரம் அவசியம். பிராம்மண சபைகள் எங்கும் ஏற்படவேண்டும் என்று வற்புறுத்தினார். ஸ்ரீமான் K. பாலசுப்பிரமணிய அய்யர் B. A. B. L. பிறகு பேசுகையில் நமது குழந்தைகளுக்கு சம்ஸ்கிருத அப்யாஸமும் நமது தர்மங்களில் சரியான போதனைகளும் செய்விக்கவேண்டும். ‘ஸ்வரூபநாசம் ஏற்படாவண்ணம் நாம் பிரயத்தனம் செய்யவேண்டு’மென்றார். பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள் பிறகு பிராம்மணர்கள் தர்மமார்க்கத்தை விட்டுவிடக்கூடாது, எல்லோரும் தருமத்திற்கு பொருட்செலவு செய்ய முன்வரவேண்டும், தபஸிலும் மந்த்ரஸித்தியிலும் எல்லோருக்கும் ஊக்கம் வேண்டுமென்றார். பிறகு பாகவதர் ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் “நமக்கு எவ்வளவு கஷ்டமேற்பட்டாலும் தர்மரக்ஷணமே முக்கியமாகும். பிராம்மணன் உத்தியோகக் கவலையின்றி தர்மரக்ஷணம் செய்துவந்தால் அவ்வினை மற்ற வகுப்பினர் கர்ப்பாயுவர்... ...ம்மணன் முகம் கறுத்து சக்தியிழந்தவனாக இருக்கிறான். அப்படிக்கிராமல் உண்மையான சக்தி பிராம்மணனிடமிருந்து அவன் உலகக்ஷேமத்திற்கே பாடுபடுவதற்கு பிராம்மணசபைகள் ஆங்காங்கு ஏற்படவேண்டும். மாம்பலத்தில்கூட முந்தியே ஓர் பிராம்மண சபை இருப்பதை நாம் விருத்திசெய்யவேண்டு மென்றார்.

கடைசியாக தலைவர் தனது முடிவுரையில் பிராம்மணன் சமுதாயத்தின் சிரஸ்போலொத்தவன் சகல அங்கங்களும் சரியாயிருந்தால்தான் முகத்தில் தேஜஸ் இருக்கும். முகம் வாடிவிட்டால் இதர அங்கங்கள் கெடுதலடைந்தனவென்று அர்த்தம். ஆதலால்தான் ஐக்ய இந்திய சங்கத்தின் முக்கியநோக்கம் உலகக்ஷேமமாகும். அதற்கு முந்தியாக நமது தர்மங்களில் ஸ்திரமான புத்தி ஏற்படவேண்டும். தனது அனுபவத்தில் வைத்தியசாஸ்திரம் சரீர சாஸ்திரப்படியே ஆராய்ச்சிசெய்து பிராம்மணதர்மங்கள் மிகவும் சிரேஷ்டமானவை என்பதே தான் கண்டறிந்ததாகக்கூறி பிராம்மண ஸபை சென்னையில் பல காலங்களில் ஸ்தாபிக்கப்பட்டு ஜனசமூஹம் விசேஷ ஒற்றுமையுடன் விளங்க ஏற்பாடுசெய்ய மேற்கொண்டு பல மீட்டிங்குகள் நடைபெறுமென்று கூறினார்.

கடைசியாக,கூட்டம் கூட்டுவித்த ஸ்ரீமான் P. S. வைத்தியநாதஸ்வாமி அய்யர் B A L T. எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறினார். உண்மையான பிராம்மணன் ‘ஸ்வதேசோ புவனத்ரயம்’ என்ற மனோபாவத்துடனிருப்பவன், ஸங்கத்தில் தன் உண்மையான சக்தி இருக்கிறது. சென்றவாரம் ஜார்ஜ் டௌனில் கூடிய கூட்டத்தில் ஓர் பிரசாரகமிட்டி ஏற்படுத்தப்பட்டதுபோல் பலபாகங்களிலும் பிரசாரக கமிட்டிகள் ஏற்படவேண்டும். பிரதி பிராம்மணசபையில் மெம்பராக வேண்டும். அவ்விதம் செய்யாமலிருந்தால் விசேஷ பலம் பிராம்மணசமூஹத்திற்கு ஏற்படுவதுடன் பிராம்மண தர்மங்களை நன்கு ஸ்தாபித்து காங்கிரஸ் போலத்த ஸ்தாபனங்களுக்கு விசேஷ உதவி புரிவதுடன் அவசியமான திருத்தமும் செய்யக்கூடும் என்று அழுத்தமாய்ச் சொன்னார். மேற்கொண்டு பிராம்மண ஸபையை பலப்படுத்தி பிரசாரத்திட்டம்செய்ய தனி மீட்டிங்கு நடைபெறும்.

P. S. வைத்தியநாதஸ்வாமி.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

க்ஷி தோரணையில் வேலை செய்வதுமே முனிஸிபாலிடிகளில் தற்போது காணப்படும் காக்ஷியாகும்.

இதுபோல் ஆலயப்ரவேசம் முதலிய விவாதாஸ்பதமான சீர்திருத்த விஷயங்களைப்பற்றி முனிஸிபாலிடிகள் எதெற்காக விவாதிக்க வேணும்? இந்த நியாயம்தெரியாமல் திருவாங்கூர் ஆலயப்ரவேசத்தைப்பற்றி அநேக முனிஸிபாலிடிகள் வாழ்த்துத் தீர்மானங்கள் செய்கின்றன. இவைகளுக்கு இதைப்பற்றிப் பேச என்ன அர்ஹதை? யார் அதிகாரம்கொடுத்தனர்? கண்மூடித்தனமாக ஒரு முனிஸிபாலிடி செய்ததையே மற்றொன்றும் செய்வதும், கிளிப்பிள்ளைபோல் ஒன்று சொன்னதையே மற்றொன்று ஒப்புவிப்பதும் வெகு விநோதமாயிருக்கிறது. இவைகளுக்குப் பகுத்தறிவு வருமோ? சேலம் முனிஸிபாலிடி புத்திசாலித்தனமாக நடந்துகொண்டது. எம். ஸி. ராஜாவின் தீண்டாதார் அசௌகர்ய நிவித்தி மசோதாவை ஆதரிக்க மறுத்து அது முனிஸிபாலிடிக்கு ஸம்பந்தமில்லாத விஷயமென்று சொல்லிவிட்டது. பெரும்பாலோரானகௌன்ஸிலர் இதை ஆதரித்தனர். இந்த விஷயமான வாதப்பிரதிவாதங்களில், ஸம்பந்தப்பட்டவர் அநேகமாக பிராமணரல்லாதாரே. ராஜா மசோதாவை ஆதரிக்க மறுத்தவர்களும் பெரும்பாலும் பிராமணரல்லாதார்களே யாவர். இந்த நியாயத்தைத மற்ற முனிஸிபாலிடிகளும் கடைபிடித்து நற்புத்தியடையுமா?

ஸர் ஸாப்ருவின் மயக்கமா?

பஞ்சாப் ஸர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் ஸர்டேஜ்பஹதூர் ஸாப்ரூ மாணவர்களுக்குச் செய்த பிரஸங்கத்தால் அவர்கள் மனதில் குழப்பமே ஏற்படக்கூடும். மேல்நாட்டின் படிப்பால்தான் இந்தியர்கள் ...மாக விஷயங்களை அறியவும் ... நடக்கவும் ஆரம்பித்தார்களாம். இது பெரிய உபகாரமாம். ஆங்கில சாஸ்திரங்களும் இங்கிலாந்து தேச சரித்திரமும் இந்தியர்களுக்கு புதிய உணர்ச்சிகளையும், புதிய ஆசைகளையும் உண்டாக்கினவாம். நம் முன்னோர்கள், இப்போதுள்ளவர்களைப்போல் அதிகமாக விஷயங்களை அறிந்தவர்களல்லவாம். இவ்வாறெல்லாம் ஸர்ஸாப்ரு பேசுவது இந்தியனெவனுக்கும் வெறுப்பைக் கொடுக்காமலிருக்காது. இந்திய நாகரிகம் இந்தியக்கலை, பொருளாதாரம் முதலிய யாவும் வீணாகி இந்தியர்கள் அடிமை புத்தியடைந்து தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டதற்குக் காரணம் ஆங்கிலப்படிப்பே என்று பல மேதாவிகள் சொல்லவில்லையா? கல்கத்தா யூனிவர்ஸிடிக் கமிஷன் ரிப்போர்ட்டில் ஸர்ஜான், உட்ராப் இந்த விஷயத்தை வற்புறுத்தியிருக்கிறார். இதுஸர்ஸாப்ருவுக்குத்தெரியாதா? ஆங்கிலப்படிப்பால் இந்தியர்கள் விதேசிய மயமாகி இந்திய நாகரிகமே அழிந்து விட்டதென்று அவர் சொல்லியிருக்கிறாரே? புத்துணர்ச்சியும், புதிய சுய மரியாதைகளும் ஆங்கிலப்படிப்பால் உண்டாயிருப்பதாக ஸர் ஸாப்ரு சாதிக்கிறார். ஆனால் நமது உணர்ச்சியும், சுயமரியாதையும் அந்தப் படிப்பால் அழிந்ததாக நம்பும் தேசாபிமானிகளும் இருக்கிறார்கள். ஸர் ஸாப்ருவுக்கு ஆங்கிலத்தில் இவ்வளவு மயக்கம் ஏற்படக் காரணமென்னவோ?

ஸ்ரீ ஜயதேவர் சரித்ரம்.

S. ராமச்சந்திர ஹரி:

(24 12 36 தொடர்ச்சி)

அரசன் ஜயதேவரைத் தன்னரண்மனையில் வைத்துப் பூஜித்துக்கொண்டுவந்தான். சில நாட்களில் ஜபதேவரது காயங்களெல்லாம் ஆறியது. பிறகு ஜயதேவர் மூலமாய் பத்மாவதியம்மாளின் இருப்பை அறிந்து அரசன் பத்மாவதியையும் தன் பட்டணத்திற்கு வருவித்து இருவரையும் தெய்வமாய்க்கருதி அவர்களை ஸேவித்துவந்தான். ஒரு நாளேனும் அரசன் பத்மாவதி ஜயதேவர்களைத் தர்சிக்காமல் ஆகாரம் உட்கொள்வதில்லை. ஜயதேவரது அநுக்ரஹத்தால் அரசன் பகவானிடமும் பக்தர்களிடமும் மிகுந்த பக்தியுள்ளவனுனன். ஹரியைப் பூஜிப்பதிலும் ஹரிபக்தனைப் பூஜிப்பது எத்தனையோ மடங்கு மேலானது என்று பகவானே சொல்லியிருப்பதால் அரசன் பாகவதவேஷதாரிகளானுலும அவர்களையும் ஜயதேவரது ஆக்ஞையால் விசேஷமாய்ப் பூஜித்தும் ஸம்மானித்தும் வந்தான்.

இவ்விதம் இவ்வரசன் ஆண்டவனடியார்களை யாதரித்து வருவதை முன் ஜயதேவரது அங்கங்களைத் துண்டித்த அயோக்கியர்கள் கேட்டுத் தாங்களும் அவ்வரசனிடம்சென்று வெகுமதி பெறலாமென்று நினைத்து ஸாதுவேஷந்தரித்து அங்கு வந்தனர். ஜயதேவர் இவர்களைக் கண்டதும் தன் உயிரைக் காப்பாற்றிய ப்ராணதாதாக்களிவர்கள் என்று பரம பக்தியுடன் பத்மாவதியை அழைத்து அர்க்கிய பாத்யாதிகளால் அவர்களைப் பூஜித்தார். பிறகு அவர்களுக்கு அறுசுவையுண்டியளித்துபசரித்து அரசனை அவ்விடம் வரவழைத்தார். ... காட்டி இவர்கள் பரமபாகவதோத்தமர்களென்றும் தனக்கு முன்னுல் பரம உபகாரம் செய்தவர்களென்றும் தெரிவித்து இதுவரை இங்குவந்தவர்களைக் காட்டிலும் இவர்கள் சாஸ்திரத்தின் கரைகண்டவர்களாயும் மஹான்களாயுமிருப்பதால் இவர்களை குருஸமமாய்ப் பாவித்து இவர்களுக்கு விசேஷ வெகுமானம் செய்யும்படியும் இவர்களே வெகுமானத்திற்குப்பாத்திரர்களென்றும் சிபார்சு செய்தார்.

அரசன் ஜயதேவரது ஆக்ஞைப்ரகாரம் அவர்களுக்கு அநேகவிதமான ரத்னங்கள் ஆடையாபரணங்களை பரமபக்தியுடனளித்துபசரிக்கான். அவர்கள் அவைகளைப்பெற்றுக்கொண்டு தங்கள் ஊருக்குச் செல்ல உத்தேசித்தனர். அப்பொழுது ஜயதேவர் அரசனை நோக்கி இவர்கள் விசேஷ வெகுமதியுடன் செல்வதாலும் இவர்கள் போகும் வழியானது காடாயிருப்பதால் அங்கு திருடர் உபத்திரவம் நேரலாமாகையாலும் இவர்கள் ஊர்போய்ச் சேருகிறவரையில் இவர்களுக்குத்துணையாகச் சிலரை அனுப்பும்படியாகவும் சொன்னுர். அரசன் அப்படியே ஐந்து சிப்பாய்களை அவர்களுடன் அனுப்பினன். எல்லோரும் செல்லுங்கால் ஒரு பெரிய மாநிழலில் களைப்பாறுவதற்காகச் சற்றுத்தங்கினுர்கள். அப்போது அரசனது சேவகர்கள் சாதுவேஷந்தரித்த துஷ்டர்களை நோக்கி 'ஐயா! எங்களரசனது குருவுக்கும் தங்களுக்கும் என்ன சம்பந்தம்? தயவுசெய்து தெரிவிக்கும்படி வேண்டுகின்ருேம். ஏனெனில் இதுவரையில் எங்களரசனிடம் ஜயதேவர், தங்களைக் கொண்டாடியதுபோல் யாரையும் கொண்டாடியதில்லை' என்றனர். இதைக்கேட்டதும் அந்த துஷ்டர்கள் 'நாங்கள் கர்னுடதேசத்தில் பிக்ஷைவாங்கி ஜீவனம் செய்துவந்தோம். இவரும் எங்களைப்போலவே அங்கு வசித்துவருங்கால் ஒருநாள் இவர் ஒரு வீட்டில் எதையோ திருடி பிடிக்கப்பட்டு அந்த தேசத்தரசனிடம் ஒப்புவிக்கப்பட்டார். அப்போது அவ்வரசன் இவரைப்பார்த்து 'இவர் பிராம்மணனல்ல. இவரை நம் நாட்டினின்றும் வெளியேற்றி உயிரை வாங்கிவிடுங்கள்' என்று கொலையாளிகளிடம் ஒப்புவித்தான். அப்போது இவர் கொலையாளிகளைப்பார்த்து தான் விசேஷமான பொருள்கொடுப்பதாயும் தன்னைக்கொல்லாமல் விட்டுவிடும்படியாகவும் பிரார்த்தித்தார். அச்சமயம் நாங்களும் அவர்களைப்பார்த்து இவரைக் கொல்லவேண்டாம் தேசத்தைவிட்டு வெளியேற்றிவிட்டு இவரைக்கொன்றதற்கடையாளமாக இரண்டு விரல்களைத்துண்டித்துக்கொண்டுபோய் அரசனுக்குக்காட்டிவிடுங்கள்' என்ருேம். அதைக் கேட்டுக் கொலையாளிகள் இவரைக் கைகால்களை வெட்டிப்போட்டுவிட்டு போய்விட்டார்கள். இவர் உயிரை இழக்காமலிருப்பது எங்களால் தான் என்று தெரியுமாகையால் இப்போது அதற்குப் பிரதியுபகாரமாய் உங்களரசனிடம் எங்களைப்பற்றி விசேஷமாய்க் கொண்டாடி வெகுமானம் செய்யும்படி செய்தார்' என்றனர். இவர்கள் இவ்விதம் சொல்லி வாய் மூடுமுன் ஆகாயத்தில் ஓர் பேரிடி இடித்து அது அத்துஷ்டர்கள் தலையில் விழுந்தது.

அரசனது வேலையாட்கள் இவ்விதம் அவர்கள்மீது இடிவிழுந்ததும் சற்றுநேரம் பிரமித்து நின்றுவிட்டார்கள். பிறகு மூர்ச்சை தெளிந்து அத்திருடர்களுக்குக் கொடுத்த திரவியக் குவியலுடன் அரண்மனைக்குத் திரும்பி வந்து அரசன் ஜயதேவரிடம் சென்றிருப்பதாய்த் தெரிந்துகொண்டு தாங்கள் கொண்டுவந்திருக்கும் பொருள்களுடன் ஜயதேவரிருப்பிடம் சென்று அங்கு அரசனைக் கண்டு மிகவும் வணக்கத்துடன் "அரசே! தங்களுத்திரவுப்படி நாங்கள் அந்த சாதுக்களுடன் செல்லுங்கால் காட்டில் அவர்கள்மீது இடிவிழுந்து அவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்களுக்குக் கொடுத்திருந்த ஆடையாபரணங்களுடன் நாங்கள் திரும்பிவந்தோம்" என்றனர். அரசன் இதைக்கேட்டவுடன இதன் காரணமென்னவென்று வினவினுன். அப்போது அவர்கள் நடந்த விஷயங்களை ஆதியோடந்தமாய்த் தெரிவித்தார்கள். இவ்விதம் அவர்களுடைய வார்த்தையை ஜயதேவர் கேட்டதும் 'ஹா! ஹா!'வென்று பெருமூச்சுவிட்டு, அவர்களால் வெட்டப்பட்ட கைகால்களால் பூமியை அடித்துக்கொண்டு அவர்களுடைய விதியை நினைத்துக் கதறினுர். அந்த நிமிஷமே அவரது கை கால்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே முன்போல் வளர்ந்துவிட்டன.

ஜயதேவர் அவர்கள் தனக்குச் செய்த தீங்கைக் கொஞ்சமேனும் மனதில் வைக்காமல் அவர்களுக்கு நேர்ந்த ஆபத்துக்காகத் தான் கதறினுர். ஆண்டவனடியார்களது குணமிதுவே. இதைக்கண்டு பகவான் புருஷோத்தமன் மிகவும் ஸந்தோஷித்தார், ஆகையால் ஜயதேவருக்கு அங்கங்கள் முன்போல் உண்டாயின. அரசன் இவ்வாச்சரியத்தைக் கண்டு ஜயதேவரைப்பணிந்து தயவுசெய்து இதன் காரணத்தைத் தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

ஜயதேவர் அரசன் வேண்டியபடி முன் நடந்த விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாய்த்தெரிவித்தார். அரசன் அதைக்கேட்டு மிகவும் ஆனந்தித்து "ஸ்வாமின், இவ்வுலகத்தில் சத்துருவையும் மித்திரனையும் ஸமமாய்ப்பார்ப்பவர் தங்களைத் தவிர வேறு யாரையும் நான் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. நான் பரம நீசனுனுலும் தங்கள் சேர்க்கையால் மிகவும் தன்யனுனேன்." என்று ஜயதேவரை மிகவும் கொண்டாடித் தன் இல்லம் சென்று தன் மனைவி மக்கள் மந்திரிகளுக்கு இவ்வாச்சரியத்தைத் தெரிவித்தான்.

சில நாட்களில் ஜயதேவர் கிழத்தனமடைந்தார். எவ்வளவு அசக்தமிருப்பினும் ஒரு நாளேனும் தன் நித்யகர்மாவை விட்டவரல்ல. ஒவ்வொருநாளும் கங்காஸ்நானம் செய்வதென்பது அவரது ஸங்கல்பம். இப்படி இருக்குங்கால் ஒருநாள் அவர் தனது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கங்காஸ்நானத்திற்குச் செல்லுங்கால் மூப்பினுல் மிகவும் சிரமத்துடன் கங்கை சென்று ஸ்நானம் செய்து திரும்பும்போது வழியில் மயக்கத்தால் விழுந்து மூர்ச்சை யடைந்துவிட்டார். அப்போது வழிப்போக்கர்கள் அவரைக் களைப்பாற்றிக்கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் கங்கையாடிவரும் அரசன் அவரைக்கண்டு தன் பல்லக்கில் அவரை ஏற்றிக்கொண்டு அவர் வீட்டில் விட்டுத் தான் மிகவும் வணக்கமாய் "ஸ்வாமின்! தங்கள் சரீரம் முதுமையால் மெலிந்துவிட்டது. ஆகையால் இனி தாங்கள் எனது பல்லக்கில் ஆரோஹணித்து கங்கை சென்றுவர வேண்டுகின்றேன்" என்ருன். ஜயதேவர் தான் பாதசாரியாய்ச் சென்றே கங்காஸ்நானம் செய்வது தன் நியமமென்றும் அதை எவ்விதமும் மாற்ற முடியாதென்றும் சொல்லிவிட்டார்.

அன்றிரவே இராஜமான்யரான புரோஹிதர் இன்னம் மஹான்களான பிராம்மண ச்ரேஷ்டர்கள், முதலியவர்களும் ஜயதேவர் ஸ்வப்னத்தில் ஓராச்சரியத்தைக் கண்டனர். ... ஸுக்லாம்பரதரையும் மகரவாஹனையும் பதமஹஸ்தையும் ... மான ஓர் பெண் இவர்களது ஸ்வப்னத்தில் தோன்றிப் பின் வருமாறுரைத்துச்சென்ருள். "நான் பாகீரதீதேவி. நாளைக்காலை முதல் எப்போதும் ஜயதேவரது கிணற்றில்வசிக்கப்போகிறேன். இதற்கடையாளம், என்னேடு இந்தத் தாமரைப்பூவானது அந்தக் கிணற்று ஜலத்தில் தோன்றும். எல்லோரும் பார்க்கலாம். இந்த ஜயதேவர் எனக்கு அத்யந்தம் பிரியமான பக்தர். இவர் இதில் ஸ்நானம் செய்வதால் இவருக்கு வ்ரதபங்கமில்லை. நீங்கள் எல்லோரும் இதை அவருக்குச் சொல்லுங்கள். என் வார்த்தை ஸத்யம். வேருேர் அடையாளமும் சொல்லுகின்றேன் கேளுங்கள். குஷ்டரோகியான ஒருவன் ஜயதேவருடன் ஏழு தினங்கள் இதில் ஸ்நானம் செய்தால் அவனது ரோகம் நீங்கி திவ்ய சரீரமடைகின்ருன்."

இவ்விதம் தாங்கள் கண்ட ஸ்வப்னத்தை மறுநாட்காலையில் 'எல்லோரும் விழித்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் கலந்து பேசிக்கொண்டு அரசன், மந்திரிகள், கிராமவிருத்தர்கள் எல்லோரும் கூடி ஜயதேவரது இல்லம் சென்று அவரை நமஸ்கரித்து நிற்க நடந்த விஷயங்களை அரசன் ஜயதேவரிடம் விஸ்தாரமாய் விண்ணப்பித்தான்.

(தொடரும்)

குழந்தை

, குடல் ஈரல் கட்டிகளுக்கு

ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள

மதுரை வைத்ய நிபுணர் T.R.ஆராவமுதய்யங்காரின்

மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.

ஒரு மாதம் மருந்து விலை ரூ: 4—8—0 வி, பி. வேறு.

டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,

20, வடக்கு வெளிவீதி, மதுரை.

பௌராணிக ராதாகல்யாணம்.

[திப்பராஜபுரம் மந்த்ரமூர்த்தி ப்ரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள்]

பரப்ரும்மத்தினிடத்தில் ப்ரளயகாலத்தில் அத்யந்த அபேதமாய் ஐக்யமாயிருந்த மாயையானது மறுபடியும் ஸ்ருஷ்டிபரிபாக காலத்தில் பரமாத்மாவுக்கு ஸ்ருஷ்டிக்க இச்சை வந்ததும் வெளிவருகிறது. இந்த ஜடமாயுள்ள முக்குண ஸாம்யரூபமாயையில் ப்ரவேசித்த பரமாத்மசைதன்யத்திற்கு மூலப்ராக்ருதி என்று பெயர். இந்த மூலப்ராக்ருதியை சாஸ்திரங்களில் த்ருபுரஸுந்தரி என்றும் லலிதா, காமாக்ஷி, மீனுக்ஷி, உமை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மூலப்ராக்ருதியுடைய பரிணுமந்தான் அனந்தகோடி ஜகத்தாக விளங்குகிறது. கௌரீ லக்ஷ்மீ ஸரஸ்வதீ இம்மூன்று மூர்த்திகளும் மூலப்ரக்ருதியின் லேசலேசாம்சமூர்த்திகளாய் ஒவ்வொரு அண்டங்களிலும் தமோகுண ஸத்வகுண ரஜோகுணங்களை சரீரமாககொண்டு ஸரஸ்வதீ முதலாக ஸ்ருஷ்டிபாலந ஸம்ஹார சக்திகளாக விளங்குகிருர்கள். அனந்தகோடி அண்டங்களுக்கும் மேலாக விளங்கும் கோலோகத்தில் மூலப்ரக்ருதி என்றும் உமாதேவி என்றும் லலிதாதேவி என்றும் பரிணமித்த சித்சக்தியானவள் ஜகத்ஸ்ருஷ்டி காலத்தில் வ்யக்தமான ஸ்தூலரூபத்தை எடுப்பதற்காக கோபாலஸுந்தர்யவதாரமென்று சொல்லப்பட்ட அர்த்தனரீச்வர ரூபத்தை லேசாம்சத்தால் எடுத்துக்கொண்டு ... க்ஷணத்தில் இடதுபாகத்தால் தனித்த ஸ்திரீரூபத்தையும் வலதுபாகத்தால் தனித்த புருஷரூபத்தையும் ... க்ருஷ்ணபரமாத்மாவாயும் ராதையா... ட்டாள். ... கொண்டார்கள்.

ப்ரும்மஸ்ரீ T. L. ஸுப்பையர் அவர்கள் ஸ்வபாவமாக உள்ளே ஊறிக்கொண்டிருக்கும் வேக ஆவேசத்துடன், சப்தத்துக்கு சக்தி இருக்கிறது என்றும் சப்தசக்தியால் ஆக்கலாம், அழிக்கலாம் என்றும் வேதம் மந்த்ரம் இவைகளின் சப்தசக்தியால் வ்யாதிகள் நீங்குகின்றன. ஸௌக்யம் உண்டாகின்றன என்றும் எல்லோரும் வேதமந்த்ரங்களை அப்யஸிக்க வேண்டும் என்றும் உபன்யஸித்தார்கள்.

ப்ரும்மஸ்ரீ (போலகம்) ஸுந்தர சாஸ்திரிகள் அவர்கள் 'ஸ்த்ரீதர்மம்' என்ற விஷயமாக வஸிஷ்டஸ்ம்ருதி முதலான க்ரந்தங்களின் ஆதாரங்களைக் குறிப்பிட்டு பலமுகமாக உபன்யாஸம் செய்தார்கள்.

ப்ரும்மஸ்ரீ ஸுந்தரசாஸ்திரிகள் (போலகம்) அவர்கள் 'உபநிஷத்ஸாரம்' என்ற விஷயத்தைப்பற்றி உபன்யஸிக்கையில் உபநிஷத் என்ற பதத்தைப் பிரித்து அர்த்தம் குறிப்பிட்டு பின் உபநிஷத் பாகங்கள் பலவற்றை ஸாரமாக பிறர்மனதில் பதியும்படி நிதானமாகவும் ம்ருதுவாகவும் சொன்னுர்கள்.

ப்ரும்மஸ்ரீ சாஸ்த்ர ரத்னகரம் விச்வனுத சாஸ்த்ரி அவர்கள் வைதிக வ்ருத்தியில் உள்ளவர்களாலும், லௌகிகர்களாலும் ஸமூகத்திற்கு செய்யவேண்டிய கடமை' என்னும் விஷயமாய்ப் பேசினுர்கள். வைதிக லௌகிகர்களுக்கிடையில் முந்தியவரிடத்தில் வைராக்யமும், யோக்யதையையும, பிந்தியவரிடத்தில் த்யாகமும் ச்ரத்தையும் இருக்கவேண்டும். வைதிகர்களிடத்தில் தப்புக்கள் நேர்ந்தால் அவர்களை ஒதுக்காமல் திருத்திச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

ஒற்றுமையிலேயே புத்தியை நாட்டவேண்டும். ச்ரத்தையுடன் கர்மாக்களைப் பண்ணிவைக்கவேண்டும். இவ்விதம் ரஹஸ்யமா ரோமகூபங்களிலிருந்து அனந்தகோடி கோபிகைகளும் ஆவிர்பவித்தார்கள். இவ்விதம் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸர்வலோக தேவதைகளெல்லாம் நித்யோத்ஸவ நித்யஸ்ரீ நித்யபோக நித்யமங்களங்களை அனுபவித்து வருகிருர்கள். இவ்விதம் வெகுகாலம் அனுபவித்து வருகையில் ஒரு மஹார்ண ஸமுத்திரத்தில் எறிந்திருந்த ராதைக்குப்பிறந்த அண்டமானது உடைந்தது. அதின் உள்ளில் கோடிஸூர்யப்ரகாசத்துடன் 3வயது வடிவத்துடன் ஆலிலை போன்ற ஒரு அண்டத்தின் கீழ் பாகத்தின் ஓட்டில் ஒரு குழந்தை விளங்கி தாயின் ஸ்தன்யபானமில்லாததாலும் அ என்ற அக்ஷரத்தால் குழந்தையின் ரோமகூபங்களிலிருந்து உண்டாகப்போகிற அண்டகோடிகளின் ப்ராணிகளுடைய சோகமோஹங்கள் ஸூக்ஷ்மாம்சமாகயிருக்கிறபடியாலும் க்ஷணம் அழுது உலாவிபார்க்கும்தருணத்தில் குழந்தையின் ரோமகூபங்களிலிருந்து அனந்தகோடி அண்டங்கள் ஆவிர்பவித்தன. உடனே கிருஷ்ணபரமாத்மா குழந்தைக்கு தெர்சனங்கொடுத்து என்னுடைய மஹத்வ வ்யாபகத்வாதி மஹிமைகளில் 16ல் ஒருபங்கு உன்னிடத்தில் உண்டாயிருக்கிற அண்டங்களுக்குள் ஆவிர்பவிக்கப்போகிற அனந்தகோடி ப்ரும்ம விஷ்ணு ருத்ராளிடத்தில் லேசலேசாம்சமாக விளங்கட்டும் என்று அனுக்ரஹித்து முன் தன்சரீரத்திலுண்டான ப்ரும்ம விஷ்ணு ருத்ராளைப்பார்த்து குழந்தையான மஹாவிராட் புருஷனுடைய தேஹத்தில் ஆவிர்பவித்திருக்கிற அண்டங்களுக்குள் உண்டாகிற அனந்தகோடி ப்ரும்ம விஷ்ணு ருத்ராளுக்கு ஸமஷ்டிகாரணமூர்த்திகளாக நீங்களிலிருந்து ஸ்ருஷ்டி பாலன ஸம்ஹாராதி கார்யங்களை அனுக்ரஹிப்பீர்களாக என்று ஆக்ஞாபித்தார். இவ்விதம் முண்டகோபநிஷத்தில் சொல்லியபடி. சிலந்திப் பூச்சியானது ... பலவித விஷயங்களை ருபித்து மனோவேகம் உண்டாகும்படி உரைத்தார்கள்.

ப்ரும்மஸ்ரீ S. ஸ்வாமினுதசாஸ்திரி அவர்கள் (கும்பகோணம்) ரிடைர்ட் இஞ்ஜினீர் 'ஸங்கத்தின் ப்ரசாரத்தின் அவச்யமும் வழிகளும்' என்பதைப்பற்றி விஸ்தாரமாகவும் வேகமாகவும் பலவழிகளைக் குறிப்பிட்டு பேசினுர்கள், மத்தியில் தர்மங்களை ப்ரசுரம் செய்யவே ஏற்பட்ட 'ஆர்யதர்மம்' பத்திரிகையை தமிழர்கள் அனைவரும் முக்யமாய் ப்ராம்மணர்கள் வரவழைத்துப் படிக்கவேண்டும் என்று வற்புறுத்தினுர்கள்.

20 - பானுவாஸரம் (3–1–37)

மன்னுர்குடி வைதிக ப்ராம்மண ஸமாஜம். ஒடிஸமாஜத்தார்கள் கூடினுர்கள். அவர்கள் வேதகோஷத்துடன் உபன்யாஸகர்கள் மூவர்க்கும் ரோஜாஹாரம் போட்டு வரவேற்று உபன்யஸிக்கச் செய்தார்கள்.

ப்ரும்மஸ்ரீ அக்னிஹோத்ரம தாதேசிக தாத்தாச்சார்யார் ஸ்வாமி அவர்கள் "வைதிக முக்ய மந்த்ரங்களின் அர்த்தங்கள்" என்ற விஷயத்தை உபன்யஸிக்கையில் வேதமந்த்ரங்களில் பல்வும் ஆபஸ்தம்ப ஸூத்ரங்களின் பல பாகங்களும் எடுத்துக்கொண்டு அவைகளின் அர்த்தத்தையும கருத்தையும் ப்ரத்யக்ஷப்படுத்தி நவீன முறையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற தத்வங்கள் அனைத்தும் மந்த்ரார்த்தங்களில் த்வனிக்கிற ப்ரகாரத்தையும், உலக நடையையே வேதமந்த்ரங்கள் விசேஷித்துக் காண்பிக்கின்றன என்றும் நெற்றிப்பொட்டு ப்ரியமில்லாத கணவனை பத்னியிடத்தில் ப்ரீதி வைக்கும்படி மாற்றுகிறது போல் பிறர்களை ஆகர்ஷிக்கவும், வசீகரிக்கவும் பல மந்த்ரங்களும் ஆசாரங்களும் வேதங்களில் வெளியாகின்றன என்றும் குறிப்பிட்டார்கள்.

ப்ரும்மஸ்ரீ முத்துசாஸ்திரி அவர்கள் (திருவெண்காடு பாடசாலை அத்யாபகர்) 'ஜகத்ஸ்ரு... டாமல் பகவான் அருகில் உட்காரயிழுத்தாலும் கையை உதரி வேறு ஆஸனத்தில் உட்கார்ந்து பகவானை திக்கரித்துப்பேச ஆரம்பித்தாள்.

ஓ! ப்ராணேச! நான் தங்களை என்னுடைய பாதி சரீரமாக நினைத்து ஸர்வகாலமும் இன்பம் அனுபவிக்க நினைத்திருக்கும் போது என்னை அவமதித்து அலக்ஷியம் செய்து இந்தலோகத்தில் துர்மார்கத்தொழில் செய்துகொண்டு இருக்கவேண்டாம். ப்ரியமுள்ளவர்களை இழுத்துக்கொண்டு எங்கேயாவது செல்லலாம். இவ்விதம் பலதடவைப் பார்த்து ஸகிஜனங்களுடைய ஸமாதானத்தாலும் ஸ்த்ரீ ஜாதியாகையால் ஸ்னேஹம்பாராட்டி ஸஹித்துவந்தேன். முன்னெருஸமயம்சம்பகவனத்தில் சோபை என்ற கோபியோடு ஏகாந்தமாயிருப்பதை தெரிந்துகொண்டு நேரில் பார்த்து சிக்ஷிப்பதற்காக நான் வருவதை நீர் தெரிந்துகொண்டு அந்தர்தானமாய் மறைந்தவுடன் சோபையானவள் என்னிடம் பயந்து தேஹத்தைவிட்டு உயிர் துறந்தாள். நீர் ப்ரியத்தால் அவளுடைய ஸ்ரூபத்தை உத்தமஸ்த்ரீ முகத்திலும் ரத்னங்களிலும் வஸ்த்ராபரணங்களிலும் ச்ருங்கார வனவாபிகளிலும் சோபை விளங்கட்டுமென்று ஸ்தாபித்தீர். இன்னெரு ஸமயத்தில் ப்ருந்தாவனத்தில் ப்ரபா என்ற கோபியும் சோபையைப்போலானதும் ப்ரபையை ஸூர்யசந்த்ர நக்ஷத்ர ப்ரும்ம விஷ்ணுவாதி ஸர்வதேவதைகளிடத்திலும் ஸ்தாபித்தீர். மற்ருெரு ஸமயத்தில் புன்னுகவநத்தில் க்ஷமை என்ற கோபியும் ப்ரபா, சோபைகளைப்போலானதும் க்ஷமையை பூமிதேவியிடத்திலும்தபஸ்வீ தார்மிகர்களிடத்திலும் உம்மிடத்திலும் ஸ்தாபித்துக்கொண்டீர். பிறகொரு ஸமயத்தில் பாதரிவநத்தில் நவரத்ன பெங்களாவில் சாந்தி என்ற கோபி... ஹமஸ பரிவ்ராஜக ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதீ யதீந்த்ராள்" நாளது மார்கழி-மீ 11உ வெள்ளிக்கிழமை கொல்லிமலையில் ஸ்ரீ தர்மகோசேசுவர ஸ்வாமி ஸன்னதியில் விதேஹகைவல்யம் அடைந்தார்கள். அதற்கு ஸமீபத்திலிருக்கிற விச்வாம்பாள் ஸமுத்திரம் கிராமத்தில் பஞ்சநதீ தீரத்தில் ஸமாதிசெய்யப்பட்டிருக்கிறது 22உ செவ்வாய்க்கிழமை (5—1—37)ல் மஹா பூஜையும் மேல் விசேஷங்களும் திருநெல்வேலியில் நடத்த உத்தேசித்திருக்கிறது.

R.கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

இந்தியா சட்டஸபை.

காங்கிரஸ் மெம்பர்கள் வரமாட்டார்களா?

இம்மாதக் கடைசியில் நடக்கப்போகும் இந்தியா சட்டஸபைக் கூட்டத்திற்குக் காங்கிரஸ் மெம்பர்கள் போவதா, வேண்டாமா என்ற விஷயம் ஆலோசனையில் இருக்கிறதாம். மாகாணச் சட்டஸபை எலெக்ஷனை முன்னிட்டு ஆங்காங்கு தலைவர்கள் சென்று பிரசாரம் நடத்தவேண்டியிருப்பதே இதற்குக் காரணமாம். கவர்ன்மெண்டார் காங்கிரஸ்மெம்பர்களின் விருப்பப்படி சட்டஸபைக்கூட்டத்தின் காலத்தில் மாறுதல் செய்ய மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. இது மறை முகமாக காங்கிரஸ் எலெக்ஷன் பிரசாரத்திற்கு எதிராகச் செய்யப்படும் கார்யமென்று காங்கிரஸ் தலைவர்கள் நினைக்கிருர்களாம்.

ஸ்ரீ ஜகத்குரு

விஜயயாத்திரை முகாம்.

Tuni

அநாவசியமாகஏன் - -

- அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்.

குறைந்த சிலவு! கும்பகோணம் விரைவில் குணம்!

டாக்டர், P. ராமானுஜம் அவர்களின்

"கட்டிபஸ்பம்" ஒன்றே குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளை மிக்க விரைவில் குணப்படுத்துவதில் நிகரற்றது

என்பதற்கு அநேக நற்சாக்ஷிகள் கிடைத்துள்ளன.

ஒரு மாதத்திய மருந்தின் விலை ரூ. 4 தான்] [வி. பி. சார்ஜுகள் வேறு

சித்தர் பார்மஸி. பாணாதுறை, கும்பகோணம்.

கர்மவிபாக சாந்தி.

பாநாத்யயம் உன்மாதம்

... ராமாநுஜதாததாசாரியார்ஸ்வாமிகளால் வெகு நுட்பமாகவும் ஸ்பஷ்டமாகவும், ஆக்ஷேபஸமாதாந ரூபமாயும், அதிமேதைத் தன்மையை விளக்கும் "ஆர்யகள் இந்தியாவில் குடியேறினவர்களல்ல" "வடத்ருவம் ஆர்யர்களின் பூர்வஸ்தானமா!" "ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயமும் போல்ஷ விஸமும்" "பொருளாதார திட்டங்கள் இருக்குமிடம்" "Vedic Basis of Hindu Law" முதலிய அழகிய அர்த்த புஷ்டியுள்ள கட்டுரைகள் 'ஆர்யதர்மத்திலன்றி வேறு எப்பத்திரிகையில் காணமுடியும்? பிரும்மஸ்ரீ என் சாம்பசிவ அய்யரவர்கள் "நவநாகரீகமும் ஸமூக அமைப்பும்" எவர் மனதைத்தான் கொள்ளை கொள்ளாது? ஸ்ரீமான் எழுரூர் நாராயணஸாமிஐய்யரவர்கள் இதரபத்திரிகைகளில் வரும் ஆர்யதர்ம தூஷணைகளைப் பொறுக்கி எடுத்து அவற்றின் பரிகாரங்களை 'ஆர்யதர்மத்தில் வெளியிடும் ஆற்றல் போற்றற்குரியதே. திவான்பஹதூர் கே. எஸ் ராமஸ்வாமி சாஸ்திரியள் எழுதிய "சாண்டில்ய பக்தி ஸூத்திரங்கள்" (தமிழ் உரை) மிகவும் அருமையானது என்று பகரவும் வேண்டுமோ? தவிர ஆங்கிலத்தில் அநுபந்த ரூபமாக அநேக ரூபமாக பிரதி வாரம் தக்கோர்களால் எழுதப்பட்டுவரும் கட்டுரைகளின் பெருமையும், ஆவசியகமும், இன்றியமையாத்தன்மையும் வரையறுத்துக் கூற முடியுமா? இவற்றை அநுபவிப்பவரே பேசற்குரியர். இப்பத்திரிகையிலும் இவைபோன்ற பிறவும் அநேக புத்திமான்களால் விஷயதானங்கள் வழங்கப்படுவது மிகவும் கொண்டாடத் தகுந்ததே. பத்திரிகைகளைப் பத்திரமாய்ச் சேர்த்துவைத்து ஆறுமாதத்திற்கொருமுறை புத்தக ரூபமாக பைண்டுசெய்து யாம் போற்றிவருகிறோம். உண்மையில் இஃது ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை என்பதில் தட்டில்லை. மிகவும் பொருத்தமானதே.

சூரியபிரீதியாக:—ஸ்ரீராமனுக்கு அபிஷேகம் அர்ச்சனை, சூரியநமஸ்காரம், ஆதித்ய ஹிருதயபாராயணம், சிவனுக்கு அபிஷேகார்ச்சனை, கோதுமை தானம்.

சனிப்பிரீதியாக:—ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ...

குருவாரம் தவறாது வாசகர்கட்கு இப்போது கிடைத்துவரும் இப்பத்திரிகையை அக்கிழமையிலேயே எப்போதும் கைக்கெட்டுமாறுசெய்துவருவதில் அநேக நன்மைகள் உண்டு. சென்றவருடச் சந்தாதார்களினும் அபரிமிதமாகக் கடந்த வாண்டின் இறுதியில் சேர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. சென்னை போன்ற மாகாணத் தலைநகரில் நியூஸ், சேல்ஸ் ஏஜண்டுகள் இல்லாதிருக்கும் குறையை உடனே நிவர்த்திக்கவேண்டும். பெரும்பாலும் பத்திரிகைகள் நெடுங்காலம் தட்டின்றி வாழ்வதற்கு அடிப்படை அட்வர்டைசுமெண்டுகளே, இவற்றில் சாஸ்திர சம்மதமானவற்றைப் போட ஏற்பாடுசெய்தால் கொஞ்சம் சௌகர்யம்.

1936-ம் வருடத்தில் நடந்த சம்பவங்களில் மிகச் சீர்கேடானது திருவிதாங்கூர் மஹாராஜா விளம்பரம், ஸாதுக்களெல்லாம் மனச்சாந்தி இழக்குமாறு செய்துவிட்டது. லௌகிக பட்டதாரிகளைப்பற்றித்தான் எங்கும் உதாஸீநயமான பொருப்பற்ற பழி. தருமபீடாதிபதிகளால் வழங்கப்பட்ட பட்டங்களேற்றவரிற் பெரும்பாலோரும் இது விஷயத்தில் வெருமனே இருப்பதின் மர்மம் அறியக் கூடவில்லை. கலி அவர்களையும் கொள்ளை கொண்டுவிட்டான் போலும்! இச்சமயத்தில் நம்மவர் வாளாயிருப்பதைப்பற்றி ஒன்றும் சொல்லாமலிருக்கவும் மனம் இசையவில்லை. வருவது தானேவரும் என்று சோம்பித்திரிவது சாதுக்கள் மார்க்கமல்ல- இது விஷயத்திலேயே பூரண சிரத்தையில்லாதபோது 1937-ம் வருடம் ஏப்ரல் மாதம் முதற் தேதி அமுலுக்கு வரப்போகும் இந்திய கவர்ன்மெண்டு புதிய ஆக்ட் வந்தபின்னர் என் செய்ய உத்தேசமோ? ஊக்கமது கைவிடேல். விடா முயற்சியே வீடளிக்கும்.

மடாதிபதிகள் நம்மாகாணத்திலேயே மலிந்துள்ளனர். 'சநாதனதர்மப்ரசாரம் செய்து

அநேக வைதீகர்கள் வேதகானத்திலும் மகன்னியாஸ ஜபத்திலும் லக்ஷார்ச்சனையில் கலந்துகொண்டு அதை விமர்சைப்படுத்தினார்கள். அநேக பக்தர்கள் சந்தர்ப்பணைக்கு அரிசி முதலிய ஸாமான்களும் கொண்டுவந்ததுடன்கூட இருந்து கைங்கரியமும் செய்தார்கள். அநேகர் இந்த விழாவுக்கு திரவிய ஸகாயம் செய்தார்கள். இரண்டுநாள் ஸ்ரீமத் சுயம்பிரகாச பிரும்மேந்திர அவதூத சுவாமிகளின் ஆசிரமத்தில் பக்தி பாவசமாக ஜலமில்லா கஷ்டத்தை பொறுத்துக்கொண்டும் இதர கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டும் ஏராளமான ஜனங்கள் ஷஷ்டி ஜயந்தியிலும் பஜனையிலும் கலந்துகொண்டார்கள். ஸ்ரீ நெரூர் ஸதாசிவ பிருமேந்திராளின் சரித்திரத்தைப் பற்றி குருமணி சேதுராமசாஸ்திரிகள் உபன்னியாஸம் செய்தார். வந்த ... களுக்கும் வைதீகர்களுக்கும் ...

சென்னையிலுள்ள உயர்தர உத்தியோகஸ்தர்களுடைய ஸங்கம் எப்போதும்போல் இவ்வருஷத்திலும் கவர்னருக்கு ஒரு விருந்து நடத்தியது. ஸங்கத்தின் தலைவரும், ரவின்யூ போர்டு மெம்பருமான திவான்பஹதூர் என். கோபாலஸ்வாமி அய்யங்கார், கவர்னரை உபசரித்துப் பேசுகையில் உத்யோகஸ்தர்களுடைய நிலைமையைப்பற்றிப் பேசினார். உத்யோகங்களில் அர்ஹதை மூலம் நியமனம் ஏற்படுவதே விரும்பத் தக்கதென்றும், கேவலம் சலுகையால் மாத்திரம் நியமனம் கூடாதென்றும், ஐ. ஸி. எஸ். உத்யோகத்திற்கு கூட சலுகை நியமனம் நடக்கப்போகிறதாக பிரஸ்தாபித்திருப்பது ஆக்ஷேபகரமென்றும் அப்படிச் செய்தால் நிர்வாஹத்தில் திறமைக் குறைவு ஏற்படுமென்றும் உயர்தர உத்யோகத்திலுள்ளவர்கள் நியாயமான முறையில் தங்களது சம்பளத்தில் குறைவு ஏற்படுவதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாயும், சம்பளகுறைவு உடனே தாமஸிக்காமல் செய்யத்தக்கதென்றும் சொன்னார்.

Our Legal Reprints.

1. C. P. C. Order 21. Recent amendments. 1 anna
2. Madras Debtor's Protection Act. 1 anna
3. Imprisonment of Civil Debtors Act. 9 pies
4. do (Tamil) 6 ,,
5. Madras Debt Conciliation Act. 1 anna
6. do (Tamil) 1 anna

For copies, apply to
The Sri Janardana Printing Works, Ltd.,
Town High School Road, Kumbakonam.

ஆரியதர்மம்

14-1-1937

4 ஸ

22 2

1937

3/3/05

215160

709
25168

Registered No. M. 29

19

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्यायेन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஞு தை-மீ 1உ 1937-ஞு ஜனவரி-மீ 14உ | வ 2

ஆர்யதர்மம்.

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

பர்மாவில் வைஸ்ராய்.

லார்டுவின் லித்கோ தம்து பரிவாரங்களுடன் 8உ யன்று பர்மா போய்சேர்ந்தார். ஆடம்பரமான வரவேற்பு நடந்தது, ரங்கூன் கார்ப்பரேஷனின் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டு, பர்மாவின் ராஜீய சீர்திருத்தத்தையும், இந்தியாவிலிருந்து பர்மாவைப் பிரித்தற்கான நியாயங்களைப்பற்றியும் விரிவாகப் பேசினர்.

ரங்கூன் முனிஸிபாலிடியார் வைஸ்ராய் உபசாரச் செலவிற்காக 10 ஆயிரம் ரூபாய் அநுமதி கொடுத்திருந்தார்கள். பொது ஜனங்கள் இதை பலமாக ஆக்ஷேபித்தும் வந்தார்கள்.

எலெக்ஷன் அபாயம்.

ஒரு ஸ்திரீயின் கொலை.

கோரக்பூரில் மஹாராஜ் கஞ்சு என்ற விடத்தில் காங்கிரஸ் சார்பாகச் சட்டஸபைக்கு அபேக்ஷகராக நிற்கிற பூர்ணமாஸி சாமா என்ற தீண்டாத ஜாதியினுடைய மனைவியை யாரோ சிலர் த்வேஷத்தால் தூக்கிக்கொண்டு போய் கொலைசெய்து விட்டதாக தெரிகிறது ஜனநாயக எலெக்ஷன் அபாஸங்களில் எவ்வளவோ அடிதடிகளும், அயோக்யத்தனமும் காணப்படுகிறது. கொலை, களவு போன்ற அபாயங்களும் அதில் தோன்றியிருப்பது விந்தையல்லவே. மேற்திசைகளில், ஜனநாயகத்தில் இது ஸஹஜமாயிருக்கிறது. இந்தியாவுக்கு வந்துவிட்டது.

வங்காளத்தில் வகுப்பு தீர்ப்பு ராஜி.

ஜனுப்கஸ்னவி, முதலிய மஹம்மதியத் தலைவர்களும், பாத்வான் ராஜாவின் தலைமையிலுள்ள ஹிந்துக்களும், வகுப்பு தீர்ப்பு விஷயமாக ராஜிசெய்துகொள்ள முற்பட்டிருக்கின்றனர். ராஜிக்கான திட்டங்களும் [illegible] பட்டிருக்கின்றன. பொதுவாக ராஜி ஏற்படுவதை இரு வகுப்பார்களும் அங்கீகரிப்பதாகத் தெரிகிறது. இரு ஸமூஹத்தினருக்கும் மந்திரி பதவி முதலிய எல்லா உத்யோகங்களிலும், ஸரிஸமமான பங்கு ஏற்படும்படி இந்த ராஜி செய்கிறது

தஞ்சை ஜில்லாவில் பண்டவிற்பனைச் சங்கம்.

தஞ்சை ஜில்லாவில், நெல்லு முதலிய பண்டங்களுக்கு நல்ல விலையும் கிராக்கியும் கிடைக்கும்படி செய்யும் நோக்கத்துடன் விற்பனை சங்கமொன்று அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஜில்லாவிலும் வெளி ஜில்லாக்களிலும் அவ்வப்போது விற்கும் விலைவாசிகளின் நிலவரத்தை அறிந்துகொண்டு அதை இச்சங்கம் தங்கள் மெம்பர்களுக்கு அறிவிப்பதுடன், பண உதவிசெய்தல், கடன் கொடுத்தல் முதலிய உதவிகளையும் வியாபாரிகளுக்குச் செய்துகொடுக்க உத்தேசமாம். இதன் பயனாக வியவஸாய தான்யங்களுக்கு நல்ல விலை கிடைக்கும்படி செய்யப்படுமாம். இதன் முதல் கூட்டம் தஞ்சையில் 10உ நடந்தது. ஸர்க்கார் வியவஸாய உத்யோகஸ்தர்களும் இதில் கலந்துகொண்டு யோஜனை சொன்னார்கள்.

இந்தியா சட்டஸபைக் கூட்டம்

காங்கிரஸ்காரர் போகமாட்டார்கள்.

காங்கிரஸ் எலெக்ஷன் பிரசாரத்தை முன்னிட்டு இந்தியா சட்டஸபைக் காங்கிரஸ் கக்ஷியாரும், தேசியக் காங்கிரஸ் கக்ஷியாரும் வருகிற இந்தியா சட்டஸபைக் கூட்டத்திற்குப் போகவில்லையென்று முடிவாகத் தீர்மானித்து விட்டார்கள். பிப்ரவரி-மீ 20உ யன்று தான் காங்கிரஸ்காரர்கள் அந்தக் கூட்டத்திற்குப் போவார்கள். சென்னை மாகாணப் பிரதிநிதிகள் மட்டும் 23உ போய் சேருவார்களாம்.

பம்பாய் மாணவர்களுள் சண்டை!

பம்பாய் மாகாண மாணவர்களின் மஹாநாடு அங்கு 2 தினங்களாக நடைபெற்றது. ராஜ சக்கிரவர்த்தியின் பட்டாபிஷேகவைபவத்தை பஹிஷ்கரிப்பது போன்ற உக்ரமான தீர்மானங்கள் அந்தக்கூட்டத்தில்செய்யப்பட்டன.

சட்டஸபை எலெக்ஷன்விஷயமாக ஒருதீர்மானம் வந்தபோது மாணவர்களுள் மிகுந்த வாக்குவாதமும் சச்சரவும் வசவும் ஏற்பட்டதாம். இதன் பயனாக அநேகமாணவர்கள் வெளியேறி தனிக் கூட்டம் நடத்தினார்கள். ஏகாதிபத்யக் கொள்கையை உண்மையாக எதிர்க்கும் மனோபாவமுள்ள தீவ்ரவாதிகளையே சட்டஸபைக்கு அனுப்ப வேண்டுமென்றும், வெறும் காங்கிரஸ்வாதிகளை மட்டும் அனுப்பக் கூடாதென்றும் பெரும்பாலோர் அபிப்பிராயப் பட்டனராம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம் ஷேட் சன்ஸ் & Co.,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

13

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

...க பஞ்சசதீ

...ரசித்ரூபா
...புரஸீம்னி காமபீடகதா |
...விஹரதி கருணா
...ர ஸ்தபக கோமளாங்கலதா ||

...பரசித்ரூபா— காரணபரசித் ரூபிணியும், காஞ்சீபுர ...ஞ்சீபுரத்தின் எல்லைக்குள் (காஞ்சீபுரத்தில் இருக்கும்), ...ா—காமகோடி பீடத்திலிருப்பவளும், காச்மீரஸ்தபக ...கலதா—குங்குமப்பூவின் கொத்துப்போல் ம்ருதுவான ...யுடையவளுமான, காசன—ஏதோ ஒரு (வர்ணனையிலடங் ...ருணா—கருணா ரூபிணியானவள், விஹரதி—விளையாடிக்கொ ...கிருள்.

1. சித் என்ருல் ஞானம், உணர்ச்சி என்றர்த்தம்.

2. நிஷ்களமும் நிருபாதிகமுமான பரப்ரம்ஹமானது பரா ...த்ரூபமானது. இதையேதான் பர சித்ரூபமென்று சொல்லப்படும். இப்படியிருக்கும்போது அது யாதொருவிதமான உணர்ச்சியாவது நினைவாவது இல்லாத நிலையோடிருக்கும். அதற்கு அஹம் (நான்) என்ருவது, இதம் (இது, அதாவது தன்னைத் தவிர்த்ததான, ஒன்று) என்ருவது பாவங்கள் தனியாக அப்போது கிடையாது. அதாவது, அவ்விரண்டு பாவங்களும் இரண்டறக் கலந்து அவற்றின் பாகுபாடில்லாமல் இருப்பது (நிர்குண) பரப்ரம்ஹத்தின் ஸ்வரூபம்.

3. இதையேதான் சிவசக்தி ஸாமரஸ்யமான ரூபமென்று சொல்லப்படும். இவையிரண்டில் சிவனென்பது பரப்ரம்ஹத்தின் ப்ரகாசாம்சமென்றும் சக்தியென்பது விமர்சாம்சமென்றும் சொல்லப்படும். இவற்றில் சித் என்பதே சிவனென்றும் ப்ரகாசாம்சமென்றும் சொல்லப்படும். விமர்சாம்சமான சக்தியானது இருவகைப்பட்டது. பரப்ரம்ஹத்தில் சிவனோடு ஆமர்சமாக (இறண்டறக்)க்கலந்திருக்கும்போது அது ஸூக்ஷ்மமான ரூபத்தோடிருக்கிறது. அப்போது அதை சித்ரூபிணீ, சைதன்யரூபா என்று சொல்லப்படும். [ரூபமென்ற பதத்தின் விசேஷ மென்னவென்ருல் சித்தாக இருந்த போதிலும் (பிறகு ஜகத்தாகப் பரிணமிப்பதால்) அதினின்றும் வேறுபட்டது போன்றது என்பது தாத்பர்யம்.] ஆகவே சிவனை சித் என்றும் சக்தியை சித்ரூபிணியென்றும் சொல்லப்படும். இவ்விரண்டும் பரப்ரம்ஹத்தில் தனித்தனியாக இராமல் சேர்ந்திருப்பதால் பரப்ரம்ஹத்தை ப்ரகாசவிமர்ச ஸாமரஸ்ய ரூபமென்று சொல்லப்படும்.

4. ப்ரளயகாலத்தில் ஸகல ஜகத்தும் நசித்துப்போய் ப்ரம்ஹம் மட்டும் எஞ்சியிருக்கும்போது அதற்கு வேறு வஸ்துக்கள் தேவையில்லாமல் தன்னை மறந்து ஸ்வாத்மாராமமாய் நிருபாதிக ஸம்வித் ரூபமாயிருக்கிறது. பிறகு ப்ராணிகளுடைய பூர்வ கர்மாக்களின் விசேஷத்தினுல் ஸ்ருஷ்டி ஏற்படவேண்டிய ஸமயம் வரும்போது ப்ரம்ஹத்திற்கு ஒருவிதமான ஸ்ருஷ்ட்யோன்முகமான உணர்ச்சி உண்டாகி (முந்தி இரண்டறக்கலந்திருந்த) அதினுடைய ப்ரகாச, விமர்சாம்சங்கள் எழுச்சியடைகின்றன. அப்போது ப்ரகாசாம்சமானது அனன்யோன்முகமான 'அஹம் என்ற பாவத்தோடிருக்கையில் விமர்சாம்சமான சக்தியானது இதம் என்று சொல்லப்படுவதான ஜகத்திற்குக் காரணமாயிருந்து அவ்வித ஜகத்தாகவும் பரிணமிக்கிறது. அதாவது, சக்தியானவள் ஸூக்ஷ்ம ரூபத்தில் விச்வோத்தீர்ணையாக (ஜகத்தைக் கடந்தவளாக) பரப்ரம்ஹத்தில் சித்ரூபிணியாயிருந்தவள், ஸ்ருஷ்டிகாலத்தில் ஸ்தூல ரூபத்தில் விச்வாத்மிகையாக (ஜகத்தாக) தோன்றுகிருள். இப்படி, ப்ரம்ஹமானது ஸ்ருஷ்ட்யோன்முகமாகி ப்ரவ்ருத்திப்பதும், அஹம், இதம் என்ற பாவங்கள் தனிப்பட்டு அதினுல் இதம் என்று குறிப்பிடப்படும் ஜகத்தானது உண்டாவதும், பரப்ரம்ஹத்தின் விமர்சாம்சத்தின் செயல்கள்.

5. இவ்விதம் ஜகத்திற்குக் காரணமும், பராஸம்வித் (பரசித்) ஸ்வரூபமான பரப்ரம்ஹத்தின் விமர்சாம்முமான சக்தியாக அம்பிகையிருப்பதை இங்கு காரண பரசித் ரூபா என்று சொல்லப்பட்டது. [இவ்வித விமர்சாம்சமானது ப்ரகாசாம்சமான பரமசிவனுடன் ஸாமரஸ்ய மடைவதின்பேரில் ஜகத்தானது உண்டாகிறதே தவிர கேவலம் சிவனுலாவது சக்தியினுலாவது ஜகத்ஸ்ருஷ்டி ஏற்படுவதில்லை என்பது ஸித்தாந்தம்.]

6. அம்பிகையின் பீடங்கள் ஐம்பத்தியொன்று என்று சொல்லப்படுகையில் அவற்றில் முக்கியமானவை ஒட்யாண, ஜாலந்தர, பூர்ணகிரி, காமராஜ பீடங்களென்றும், அவற்றிலும் காமராஜபீடமென்பது தான் முக்யமானதென்றும் சொல்லப்படும். அந்த பீடமானது காஞ்சியிலிருப்பதாகவும் அதின் மத்தியில் அம்பிகை இருப்பதாகவும் இங்கு சொல்லப்பட்டது. இதையே காமபீடமென்றும் காமகோடி பீடமென்றும் சொல்லப்படும்.

7. அம்பிகையானவள் தன் குழந்தைகளான நம்மிடம் பரம கருணையோடிருப்பது இந்த ஸ்தோத்ரத்திலும் இதர ஸ்தோத்ரங்களிலும் விசேஷமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

2 கஞ்சன காஞ்சீ நிலயம்
கரத்ருத கோதண்ட பாண ஸ்ருணி பாசம் |
கடினஸ்தனபர நம்ரம்
கைவல்யானந்த கந்தம் அவலம்பே ||

காஞ்சீ நிலயம்—காஞ்சியை வாஸஸ்தானமாயுடையதும், கரத்ருத கோதண்ட பாண ஸ்ருணிபாசம்—கைகளில் தரித்த (இக்ஷு) கோதண்ட, (புஷ்ப)பாண, அங்குச, பாசங்களோடு கூடியதும், கடினஸ்தனபர நம்ரம்—உறுதியான ஸ்தனபாரத்தினுல் வளைந்திருப்பதும், கைவல்யானந்தகந்தம்—கைவல்யமென்ற மோக்ஷத்தின் ஆனந்தத்திற்கு வித்தாகியிருப்பதுமான, கஞ்சன—ஓரானெரு பரம் பொருளை, அவலம்பே—சரணமடைகிறேன்.

1. ஸ்ரீ லலிதாம்பிகையே ஸ்ரீ காமாக்ஷியாகையால் அதே ஆயுதங்களைக் கைகளில் வைத்திருப்பதாகச் சொல்லப்பட்டது.

3. 'காஞ்சீ திலகம்' என்ற பாடாந்தரத்தில் காஞ்சீபுரிக்குத் திலகம்போல் விளங்குகிறவள் என்றர்த்தம்.

3 சிந்தித பல பரிபோஷண
சிந்தாமணிரேவ காஞ்சிநிலயா மே |
சிரதரஸூசரித ஸுலபா
சித்தம் சிசிரயது சித் ஸுதாதாரா ||

காஞ்சிநிலயா—காஞ்சியிலிருப்பவளும், சிரதர ஸூசரித ஸுலபா—வெகு நீண்டகாலமாகச் செய்யப்பட்ட ஸத்கார்யங்களால் எளிதில் அடையக்கூடியவளும், சிந்தித பல பரிபோஷண—நினைத்த பலன்களைக் கிடைக்கச்செய்வதில், சிந்தாமணிரேவ—சிந்தாமணியைப்போலவே இருப்பவளுமான, சித்ஸுதாதாரா—சித்ரூபமான அம்ருத தாரையான (ஸ்ரீ காமாக்ஷியான)வள், மே—என்னுடைய, சித்தம்—மனதை, சிசிரயது—குளிரச்செய்யட்டும்.

4 குடிலகசம் கடினகுசம்
குந்தஸ்மிதகாந்தி குங்குமச்சாயம் |
குருதே விஹ்ருதிம் காஞ்ச்யாம்
குலபர்வத ஸார்வபௌம ஸர்வஸ்வம் ||

குடிலகசம்—வளைந்த கூந்தல்களையுடையதும், கடினகுசம்—கெட்டியான ஸ்தனங்களையுடையதும், குந்த ஸ்மித காந்தி—குந்த புஷ்பம்போன்ற காந்தியுடைய புன்சிரிப்பையுடையதும், குங்குமச் சாயம்—குங்குமம் போன்ற நிறத்தையுடையதும், குலபர்வத ஸார்வபௌம—குலபர்வதங்களின் சக்ரவர்த்தியான ஹிமவானுடைய, ஸர்வஸ்வம்—ஸமஸ்த ஸௌபாக்ய ரூபமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியானது, காஞ்ச்யாம்—காஞ்சீபுரியில், விஹ்ருதிம் குருதே—விளையாடிக்கொண்டிருக்கிறது.

1. பூமியிலிருக்கும் பர்வதங்களில் முக்யமான ஏழு பர்வதங்களை குல பர்வதங்களென்று சொல்லப்படும்.
அவற்றின் பெயர்கள்—

'மஹேந்த்ரோ மலய: ஸஹ்ய: சுக்திமான் ருக்ஷபர்வத: |
விந்த்யச்ச பாரியாத்ரச்ச ஸப்தைதே குலபர்வதா: ||'

அவற்றிற்கெல்லாம் சக்ரவர்த்தியாக ஹிமவானைச் சொல்லப்படும்.

'சைலானும் ஹிமவந்தம் ச நதீனும் சைவ ஸாகரம் |
கந்தர்வாணும் அதிபதிம் சக்ரே சித்ரரதம் விதி: ||'

(ப்ரம்ஹாண்ட புராணம்)

5 பஞ்சசர சாஸ்த்ர போதன
பரமாசார்யேண த்ருஷ்டிபாதேன |
காஞ்சீ ஸீம்னி குமாரீ
காசன மோஹயதி காமஜேதாரம் ||

காஞ்சீ ஸீம்னி—காஞ்சீபுரியில், காசன குமாரீ—ஓரானெரு குமாரியானவள், பஞ்சசர சாஸ்த்ர—காம சாஸ்த்ரத்தை, போதன—போதிப்பதில், பரமாசார்யேண—ச்ரேஷ்டமான குருவாயிருக்கும், த்ருஷ்டிபாதேன—(தன்னுடைய) பார்வையினுல், காமஜேதாரம்—பரமேச்வரனை, மோஹயதி—மோஹமடையச் செய்கிருள்.

1. 'அரவிந்தம் அசோகஞ்ச சூதம் ச நவமல்லிகா |
நீலோத்பலம் ச பஞ்சைதே பஞ்சபாணஸ்ய ஸாயகா: ||'

என்று சொல்லப்பட்ட ஐந்து (புஷ்ப)பாணங்களையுடையவனுக இருப்பதால் மன்மதனுக்கு பஞ்சசரனென்று பெயர்.

2. லலிதாம்பிகையானவள் ச்ருங்காரப்ரதானையாதலால் அவளுடைய பார்வையானது காம சாஸ்த்ரத்தை போதிப்பதில் பரமாசார்ய ரூபமாயிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது. அதற்கு அத்தாக்ஷியாக அந்தப்பார்வையானது மன்மதனை ஜயித்தவரான பரமேச்வரனைக்கூடமோஹமடையும்படிசெய்வதைச்சொல்லப்பட்டது.

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

(7—1—37 தொடர்ச்சி,

தந்த்ர ராஜத்திலும்

'ஞாதா ஸ்வாத்மா பவேத் ஞானம் அர்க்யம் ஜ்ஞேயம் ஹவி: ஸ்த்திதம் |
ஸ்ரீ சக்ர பூஜனம் தேஷாம் ஏகீகரண மீரிதம் ||'

என்று சொல்லப்பட்டது. ஸ்வாத்ம சைதன்யத்திலிருந்தும் வேறாகத்தோன்றும் ஞாத்ரு, ஞான, ஜ்ஞேயங்களின் ப்ருதக் ரூபத்தை அனுஸந்தானம் செய்யாமல், சின்மாத்ர ரூபமாக எல்லாவற்றையும் ஏகீகரணம் செய்து பாவனைசெய்வதை சைதன்யார்க்யம் என்று சொல்லப்பட்டது. அவ்விதமான உபாஸனையினுல் நன்ருய் ஆராதிக்கப்படத் தகுந்தவளென்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. இவ்விதமான உபாஸனையைப்பற்றி 'ஸோஹம் பாவேன பாவயேத்' என்றும் 'ஸாஹம் பாவேன பாவயேத்' என்றும் சொல்லப்பட்டது.

2. அல்லது, சைதன்ய-ஸ்வாத்மாவினுடைய (தன்னுடைய), அர்க்ய—ஞானத்தினுல் (ஸ்வானுபூதியினுல்), நன்கு ஆராதிக்கப்படத் தக்கவள் என்றும் சொல்லலாம். இவ்விதம் ஸ்வானுபூதியினுல் ஆராதிப்பதைப்பற்றி

'ஸ்வானுபூத்யா ஸ்வயம் ஸாக்ஷாத் ஸ்வாத்மபூதாம் மஹேச்வரீம் |
பூஜயேத் ஆதரேணைவ பூஜா ஸா புருஷார்த்ததா ||'

என்பதாக ஸ்காந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. அர்க்ய மென்ற பதத்திற்கு

'அர்க்ய: பூஜாவிதௌ மூல்யேऽப்யர்க்யோ வித்யா த்ருமூலயோ: |'

என்ற விச்வகோசவசனத்தின்படி வித்யை என்றும் அர்த்தமுண்டு. [(பொதுவாக) மந்த்ரங்களென்று சொல்லப்படுவதில் ஸ்த்ரீ தேவதையைப் பற்றியவைகளுக்கு வித்யை என்றும் புருஷ தேவதையைப் பற்றியவைகளுக்கு மந்த்ரங்களென்றும் இரண்டு பேதங்களுண்டு.] ஆகவே, சைதன்யமென்ற பெயருடைய வித்யையினுல் ஸமாராத்யா என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம். இது புவனேச்வரீ மந்த்ரத்தைக் குறிக்கிறதென்பதாக

'... மஹாபாதக ஸங்கைச்ச முச்யதே பாதகாந்தரை: ||'

என்ற ஸூதஸம்ஹிதா ச்லோகத்தில் வரும் சைதன்யமென்ற பதத்திற்கு வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. அதினுல் சைதன்யார்க்யமென்ற பதமானது புவனேச்வரீ மந்த்ரத்தைக் குறிப்பதாக ஏற்படுகிறது.

4. அல்லது, சைதன்யம் என்பது ஸம்வித்ரூபமான ரஸம் என்று அர்த்தம்.

'சேதனு ஸம்விதி ப்ரோக்தா வாச்யவத் ப்ராணினி ஸ்ம்ருதி'
(விச்வகோசம்)

அதுவே அர்க்யம்—பூஜாத்ரவ்யம். தேவீ பூஜையில் சொல்லப்பட்ட ஸாமான்யார்க்ய பாத்ரம், விசேஷார்க்யபாத்ரம் இவையிரண்டில் விசேஷார்க்ய பாத்ரத்தில் அமுத க்ரியா ஸம்ஸ்காரங்களால் பூஜார்ஹமாகச் செய்து அதினுல் செய்யப்படும் தர்ப்பணம் முதலானவைகளால் ஆராதிக்கப்படுகிறவள் சைதன்யார்க்ய ஸமாராத்யா.

'ஸம்விதாஸவயோர் மத்யே ஸம்விதேவ கரீயஸீ |'
(ருத்ரயாமளம்)

இதின் விபரங்களைப்பற்றி பரசுராம கல்ப ஸூத்ரம் முதலியவற்றில் பார்க்கவும்.

5. தாந்த்ரிகர்களால் குண்டகோளோத்பவமென்று சொல்லப்படும் பஞ்சமத்தின் ரஸத்திற்கு சைதன்யமென்று பெயர். (மேலே சொல்லப்பட்ட விச்வகோசவசனத்தின்படி) ப்ராணிகளிடமிருந்து அது ஏற்படுவதால் சைதன்யமென்று பெயர் ஏற்பட்டது. அதினுல் ஸமாராத்யா என்றும் சொல்லலாம்.

சைதன்ய குஸுமப்ரியா 919

(சித்) சைதன்யமாகிற புஷ்பத்தில் ப்ரியமுள்ளவள்.

1. 'ஜடானும் சைதன்ய ஸ்தபக மகரந்த ஸ்ருதி ஜரீ' என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரீ'யில் ப்ரயோகித்ததுபோல் சைதன்யத்தை புஷ்பமாகச் சொல்வது கவிகளின் ஸம்ப்ரதாயம். மஹத்தான பலத்தைக் கொடுப்பதால் உபமானம் பொருத்தமாக இருக்கிறது.

2. சைதன்ய குஸுமமென்று இங்கு சொல்லப்பட்டது அதையுள்பட (புஷ்பாஷ்டகமென்று சொல்லப்படும்) எட்டுவித புஷ்பங்களைக் குறிக்கும்.

'அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் இந்த்ரியாணும் ச நிக்ரஹ: |
க்ஷாந்தி: புஷ்பம் தயா புஷ்பம் ஞான புஷ்பம் பரம் மதம் |
தப: புஷ்பம் ஸத்ய புஷ்பம் பாவபுஷ்ப மதாஷ்டமம் ||'

இவற்றில் ஞான புஷ்பத்தை (சைதன்யகுஸுமத்தை) பரமென்பதாகச் சொல்லப்பட்டது.

ஸதோதிதா 920

ஸதா உதயமாயிருப்பவள்.

1. அதாவது, அம்பாள் ஸ்வப்ரகாசத்தோடிருப்பதால் நித்யமும் உதயமாகி விளங்கிக்கொண்டிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

அல்லது, ஸஜ்ஜனங்களின் மனதில் பூர்ணமாய் விளங்கிக் கொண்டிருப்பவளென்றும் சொல்லலாம்.

ஸதா துஷ்டா 921

எப்பொழுதும் ஸந்தோஷத்தோடு கூடியிருப்பவள்.

1. அல்லது, முந்திய நாமத்திற்குச் சொல்லப்பட்டபடி, ஸஜ்ஜனங்களிடத்தில் பூர்ணமான ஸந்தோஷத்தோடிருப்பவளென்றும் சொல்லலாம்.

தருணுதித்ய பாடலா 922

ஆத்யான்ஹ காலத்திய ஸூர்யனைப்போல் பாடலவர்ணமாயிருப்பவள்.

1. பாடலமென்ருல் வெளுப்பும் சிகப்பும் கலந்த நிறம்.

2. இப்படிச் சொல்லுவதினுல் கௌரீ, ச்யாமா என்று அம்பாளைச் சொல்வதற்கு விரோதம் யாதொன்றுமில்லையென்பது கவனிக்கவேண்டிய விஷயம். அம்பாளுடைய ரூபத்தின் நிறமானது மூர்த்திபேதங்களை யொட்டியும் த்யான பேதங்களை யொட்டியும் வெவ்வேறு விதமாயிருப்பதாகச் சொல்லப்படும்.

'சாந்தா தவளவர்ணுபா மோக்ஷதா ப்ரகல்பனே |
ஸ்த்ரீவச்யே ராஜவச்யே ச ஜனவச்யே ச பாடலா ||
பீதா தனஸ்ய ஸம்பத்தௌ க்ருஷ்ணு மாரணகர்மணி |
பப்ருர் வித்வேஷணே ப்ரோக்தா ச்ருங்காரே பாடலாக்ருதி: |
ஸர்வவர்ணு ஸர்வலாபே த்யேயா ஜ்யோதிர்மயீ பரா ||'

இப்படிப் பல வர்ணமாயிருப்பதைப்பற்றி ச்ருதியிலும்

'தத் யதா மஹாராஜனம் வாஸோ யதா பண்ட்வாவிகம் யதேந்த்ர கோபம் |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. தருணுதித்யனென்பதற்கு மாத்யான்ஹிக காலத்து ஸூர்யனென்று பாஸ்கரராயர் அர்த்தம் சொல்லியிருந்தாலும் அந்த பதமானது இளஞ்ஸூர்யனை (பாலார்கனை) குறிக்கும்.

தக்ஷிணுதக்ஷிணுராத்யா 923

தக்ஷிண மார்க்கத்தினுலும் வாம மார்கத்தினுலும் ஆராதிக்கத் தக்கவள்.

1. அல்லது, தக்ஷிணையினுல் (பூஜோபஹாரங்களால்) தக்ஷிணர்களால் (பண்டிதர்களால்) ஆராத்யா என்றும் சொல்லலாம்.

2. தக்ஷிணர்களென்ருல் பண்டிதர்கள், ஸாமர்த்யசாலிகள். அதக்ஷிணர்களென்ருல் மூர்க்கர்கள். இவ்விருவகை யாராலும், அதாவது பண்டிதர்களாலும் பாமரர்களாலும், ஆராதிக்கப்பட்டவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, கேவலம் கர்மாவை (கர்ம மார்கத்தை) மட்டும் அறிய விரும்புகிறவர்கள் (கைப்பிடிப்பவர்கள்) தக்ஷிணர்களென்றும் (அதினுல்) அதக்ஷிணர்களென்பவர்கள் ப்ரம்ஹ ஞானிகளென்றும் சொல்லலாம்.

இவ்விதமாக, ப்ரம்ஹ ஞானமில்லாதவர்களை தக்ஷிணர்களென்று

'வித்யயா ததாரோஹந்தி யத்ர காமா: பராகதா: |
ந தத்ர தக்ஷிணு யந்தி நாவித்வாம்ஸஸ் தபஸ்வின: ||

என்ற ச்ருதிவாக்யத்தின் வ்யாக்யானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விருவிதமான உபாஸகர்களாலும் அம்பாள் ஆராதிக்கப்படுவதை இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

'சதுர்விதா பஜந்தே மாம் ஜனு: ஸுக்ருதினேऽர்ஜுன |
ஆர்த்தோ ஜிக்ஞாஸு: அர்த்தார்த்தீ ஞானீ ச பரதர்ஷப ||'
(கீதை)

தரஸ்மேரமுகாம்புஜா 924

புன்சிரிப்போடு கூடிய முகாரவிந்தத்தையுடையவள்.

1. முகம், கரம், பாதம் இவற்றை தாமரஸ புஷ்பத்திற்கு ஒப்பிடுவது கவிகளின் ஸம்ப்ரதாயம்.

'கராரவிந்தேன பதாரவிந்தம் முகாரவிந்தே வினிவேசயந்தம் |
வடஸ்ய பத்ரஸ்ய புடே சயானம் பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ||'

2 முகக்கமலமே (தாமரஸ) புஷ்பமாக உடையது—அதாவது, முகமாகிற தாமரஸபுஷ்பத்திற்கு அடிக்காம்புபோலிருப்பது கழுத்து. அது தர—சங்கம்போல், ஸ்மேரமாக—சோபிக்கிறதாக உடையவள் தரஸ்மேர முகாம்புஜா என்றும் சொல்லலாம். கழுத்தை இம்மாதிரி சங்கத்திற்கு ஸமமாக 'கம்புகண்டீ' முதலான பதங்களில் சொல்வது கவிகளின் வழக்கம்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

The Travancore Proclamation.

The following statement has been issued by the Hindu Central Committee at a meeting held on 4-12-1936 at No. 27, Ekambara Agraharam :—

The Proclamation of H. H. the Maharajah of Travancore allowing the Avarnas and Depressed Classes to enter into the State-managed Hindu Temples, is a revolutionary step. It is claimed by the Social Reformers that the Proclamation has put an end to a great social injustice and the cause of the true Hinduism has been thereby strengthened. Election pledges that any State interference in religious matters would be resisted, have for the moment, been forgotten in some cases and congratulations have been offered to the Maharajah on the wisdom of the step. The Orthodox Hindus have expressed their strong disapproval of the step taken by the Maharajah. It ought not to be taken for granted that the opinion of the country is in favour of the step taken by the Maharajah. During the last campaign of Temple Entry, it was declared that the large majority opinion of all India was in favour of Temple Entry. But the actual opinions received disclosed that the claim was not correct.

To examine the question, it should be noted at the outset, that the advocates for Temple Entry proceed on the assumption that the temples are on the same footing as certain charitable endowments which, in the very nature of things, are intended for the entire body of the public; any one member being entitled to draw the benefit just in the same way as any other can or may. That may be true of some charitable institutions—the hospitals or the ordinary schools; but it is well-settled that temples and charities of a similar kind are intended for the exclusive benefit of some communities only, though they are public in character. The beneficiaries are only those communities for whom the endowment was intended. With reference to such institutions it will be a breach of trust for the trustees to extend the benefit of the charities to communities not designated by the original founders as the beneficiaries. The temples in South India were endowed in days when, according to the accepted notions, only certain communities could enter into the temples. What is more, the Agamas on the basis of which temples were built, define the rights of the various communities in the matter of temple worship. When the settlor founds a temple and endows property therefor, in accordance with the Agamas and the accepted notions, he intends necessarily that all Hindus will participate in the benefit and that to the extent and in the manner prescribed in the Agamas. The immemorial usages relating to these institutions are the repositories of the original intention of the founders and the beneficiaries intended to be profited by them and the manner in which the beneficiaries are relatively entitled to profit thereby. It will be an alteration of the original intention to permit Avarnas into such institutions especially when the class of beneficiaries believe that the temple would be polluted by such a step. To put the matter concretely, the question is, did the King of Kerala who endowed the temples, intend that Avarnas should have entry into the temples. There can be only one answer, that he did not intend; and the proclamation of H. H. the present Maharajah of Travancore must to that extent be deemed to be in direct contravention of the intentions of the founders. It should be borne in mind that some of these are temples in which not only the Maharajah and his subjects but the caste Hindus all over India are entitled to worship.

Fnrther this step does not tend to strengthen Hinduism either. If the Maharajah had issued a proclamation providing for the construction by the State of new temples for Avarnas or Avarnas and Savarnas it may have been acclaimed as a welcome step. The sacrifice behind such a proclamation would have shown the melting heart for Avarnas. The present proclamation amounts to an appropriation of the trust for objects not intended by the original founders.

It is also difficult to justify the measure as dictated by a sense of social justice. A tender conscience should set about giving the Avarnas as many temples as [illegible] not to deprive the Savarnas of the temples they are accustomed to worship in. The Avarnas require economic upliftment. The means to live a clean and full life, the relief from hunger and starvation, good education and a sanitary life-these are their pressing requirements. If these are doubtless being supplied this proclamation was a needless encroachment on the sanctity of the existing temples.

There is also another matter to be considered in this connection. The social reformers and politicians whether habitual worshippers in the temples or not, ought to realise that the persons who habitually visit the temples are the persons who are the most affected. It is their feelings that ought to have been consulted. An attitude of ignoring these considerations is hardly consistent with a sense of social justice. The Savarnas or at least a good portion of them will be obliged to abandon the temples. On the other hand it is equally well known that the Avarnas for whose benefit the proclamation is intended are not as a class anxious to go into the temples and the religious-minded among them are unwilling to act contrary to the established religious notions in the matter. Excepting perhaps for a few politically minded Avarnas who like political Savarnas, are not troubled very much about religion, there is really no genuine demand on the part of the Avarnas for temple-entry. This measure is bound to cause intense irritation and dis-satisfaction among a large section of the Hindu community, and it is apprehended that it will be a source of considerable future trouble. How this proclamation has been received by the neighbouring State of Cochin is not without significance in this matter.

Demand for Election Pledges.

(by Dewan Bahadur K. S. Ramaswamy Sastrigal.)

During the coming month, India would be full of election battle cries and endeavours to capture the seats of political power. At this juncture, it is necessary that every person who has the interests of his country at heart should have a clear vision of the way and the goal and of the imperative needs of the individual and the national well-being. It is only then that he will be able to influence the course of events and do his very best to get ready the means by which he can realise his vision of national strength and national righteousness. It is easy to see that, in the wisdom of Providence, India's feet have been set on the road of Unity and Democracy. Neither of these vital elements for national well-being, is an importation from abroad. Both were already inherent in the throbbing life of the people, but have now become dynamic and irresistible. The present election is unique in that the nation feels as a whole that it must achieve unity and democracy in as large a measure as possible. But we have to take care that in our natural desire to achieve the maximum of unity and democracy there is no danger of India's losing her essential "Swabhava".

The followers of SANATHANA DHARMA may well be called Dharmic Nationalists or Conservative Progressivists, because they desire very keenly that, while unity and democracy are being achieved, there should be no obscuration or dilution of the individual, social and religious ideals which have been the beacon light of India all along. It is merely abusiveness or blindness to call them "Reactionaries" or "Obscurantists." They are very keen that there should be no possibility of compulsory social legislation or confiscatory economic legislation. The right to prevent these abuses must not be regarded in the light of "safeguards" but should rather be regarded as fundamental rights. None of the political parties which are now engaged in the thick of the struggle for the capture of political power has bestowed a thought upon these fundamental rights. During the recent Congress at Faizpur one of the speakers, Mr. Gangadara Rao Deshpandhe, said that the Congress did not propose to do anything which would be subversive of religion, but this general

(contd. on page 9.)

ஸநாதனதர்மத்தை விருத்தி அடையச்செய்யும் வழி.

நமது மதமானது ஆதியும் அந்தமும் இல்லாதது. மற்ற இதர மதங்களெல்லாம் ஒருவர் பெயரால் ஏற்பட்டது. உதாஹரணமாக முகமதியமதம் முகமதால் ஏற்படுத்தப்பட்டது. கிருஸ்துவமதம் கிருஸ்துவால் ஏற்படுத்தப்பட்டது. புத்தரால் ஏற்படுத்தப்பட்டது பௌத்தமதம். மனுஷ்யர்களால் ஏற்படுத்தப்பட்ட மதங்கள், எப்படி மனுஷ்யர்களுக்கு ஆயுள்முடியுமோ அவ்விதமே ஷை மதங்களும் முடிவடையும். அப்படி இருந்தும் நமது ஸநாதனமதமானது இன்று க்ஷீணதசை அடைந்துவருகிறது. பிராமணத்வேஷம் வரவர விருத்தியாகிவருகிறது. இதற்குக் காரணம் என்ன?

இதற்கு ஒரே ஒரு காரணம்தான். மதக்கல்வியில்லாததே அக்காரணம். சிறுவயது முதல் சிறுவர்களுக்கு மதக்கல்வி அளிக்கப்படவில்லை. கல்வி ஆரம்பத்திலிருந்தே சிறுவர்களை இங்கிலீஷ் படிப்பதற்கு அனுப்புவதும் அதுவும் கிருஸ்துவமதத்தைப் பரப்புவதே முக்கிய லக்ஷியமாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள கலாசாலைகளுக்கனுப்புவதும் களங்கமற்ற நமது யுவர்களுடைய புத்தியானது கலக்கமுற்று மதப்பற்றுதலற்று நாஸ்தீகத்திலும் இதர மதங்களிலும் பிரவர்த்தித்து வருவது பிரத்யக்ஷம்.

ஆகையால் ஷை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாது மதபோதனையைப் பிரதானமாகக் கொண்டுள்ள கலாசாலைகளுக்கு நமது சிறுவர்களை அனுப்பவேண்டும். கிராமங்கள் தோறும் இத்தகைய கல்விச்சாலைகள் நிருவப்படல் வேண்டும். ஆஸ்தீகச் சிந்தனையுள்ள கனதனவான்கள் இதுவிஷயத்தில் கவனம் செலுத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். பரமாசாரியர்கள் தமது பக்தகோடி சிஷ்யர்களுக்கு கட்டளையிடுவதுடன் நாட்டில் மதப்பிரசாரம் தீவிரமாகச் செய்யும்படி தக்க பண்டிதர்களை அனுப்பவேண்டியதவசியமென்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

L. T. ரகுநாதய்யர்]
ஆத்தங்குடி.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச முயற்சி.

காசியில் கண்டனக்கூட்டம்.

பனாரீஸ் டவுன்ஹாலில் டிஸம்பர் 30௳ சாயங்காலம் பிரும்மாண்டமான பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. காசிவிஸ்வநாத்கோவில் மஹந்து தலைமை வகித்தார். திருவாங்கூர் மகாராஜா சமீபத்தில் வெளியிட்ட கோயில் ப்ரவேச அறிக்கையைக் கண்டித்து பல பிரமுகர்களும் பண்டிதர்களும் சொற்பொழிவாற்றினார்கள். இந்த உத்தரவை மாற்றும்படிக்கும் மேலும் இம்மாதிரியான விஷமச்செயல்கள் நடைபெறுமலிருக்கவும் சனாதன ப்ரமுகர்கள் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டி பலவித தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கண்டன கூட்ட நடவடிக்கைகள் திருவாங்கூர ராஜாவுக்கும் அனுப்பப்படுமெனத் தெரிகிறது. ந. வி. நி.

மன்னார்குடி.

பிராமண ஸமாஜம் ஏற்கனவே இந்நகரில் வைதிக பிராமண ஸமாஜம் என்று ஏற்படுத்தி சில வருஷமாய் நன்கு நடந்துவந்தது. ஷை ஸமாஜம், தற்சமயம் வைதிகர்களின் அச்ரத்தையாலும், ஒற்றுமைக்குறைவாலும் வைதிகர்களுக்கு அதிக நிர்பந்தங்களிருந்ததாலும் இடையூறுகள் ஏற்படுகிறது குறைவு போல் காணப்பட்டது. ஆதலால் 1-1-37 முதல் ஷை ஸமாஜத்தை பிராமணஸமாஜம் என்று பெயரை மாற்றி அதில் இந்நகரிலுள்ள எல்லா பிராமணர்களையும் மெம்பர்களாகச் சேர்த்திருக்கிறது. அதில் வைஷ்ணவர்களும் ஸ்மார்த்தர்களும் மற்றும் எல்லா பிருமணர்களும் மெம்பர்களாகச்சேர ஏற்பாடு செய்திருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேஷ உபன்யாஸங்கள் நடக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் அடிக்கடி அயலூர்களிலிருந்து பிரபல வித்வான்களையும் வரவழைத்து உபன்யஸிக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

ஆதலால் இந்நகரிலுள்ள பெரியோர்கள் ஆஸ்திகர்கள் எல்லோரையும் மெம்பர்களாக சேர வேண்டிக்கொள்கிறேன்.

N. விச்வநாத சாஸ்திரி.
கனபாடி நரஸிம்மாசாரியர், கார்யதர்சிகள்.

ஜனப்பிரதிநிதிஸபை கூட்டத் தீர்மானம்.

இந்தியா சட்டஸபையின் அடுத்த கூட்டத்தில் ஸ்ரீமான் மங்களசிங் என்பவர் ஒரு தீர்மானம் கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார். புதிய அரசியல் சட்டமானது இந்தியர்களுடன் கலக்காமலும், அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாகவும் பிரிடிஷாரால் தயாரிக்கப்பட்டதாகையால் அதை ஏற்க முடியாதென்றும் ஆகையால் இந்தியா சட்டஸபை, மாகாண சட்டஸபை ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய ஒரு ஸபையைகூட்டி அதன் மூலம் இந்திய அரசியல் திட்டத்தைப் புது மாதிரியில் நிர்ணயிக்கவேண்டுமென்றும் அந்த தீர்மானம் சொல்லுகிறது.

இவ்வருஷக் காங்கிரஸில் இத்தகைய தீர்மானமொன்று செய்யப்பட்டிருப்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். புதிய எலெக்ஷனுக்குப்பிறகு இம்மாதிரி முயற்சிசெய்யப்படவேண்டுமென்பது காங்கிரஸ் தீர்மானம். ஆனால் அதை இப்போதே செய்துவிடவேண்டுமென்று மேற்படித் தீர்மானம் கேட்கிறது.

மன்னார்குடி.

பிராமணஸமாஜம்.

ஷை ஸமாஜத்தினரால் கீழ 2ம்தெரு விஷநிவர்த்தி விக்னேச்வரர் ஆலயத்தில் 6-1-37௳ புதன்கிழமை முதல் 9நாளைக்கு தஞ்சை வைதிக தர்மஸங்கத்திலுள்ள வித்வான்களால் மாலை 4½-மணி முதல் 5½-மணி வரையில் ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள சில முக்கிய சரித்திரங்கள் நடத்தப்படும். 2 அத்துடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெருகவாழ்ந்தான் பிர்ம்மஸ்ரீ ராமபத்திராசாரிய ஸ்வாமிகள் அவர்களால் மாலை 4 மணி முதல் 5-மணி வரையில் அடியில் குறிப்பிட்ட விஷயங்கள் சரித்திரமூலமாய் முறையே உபந்யாசிக்கப்படும். ஆஸ்திகர்களின் வரவை வேண்டப்படுகிறது.

ஸத்ஸங்கம். ச்யவனோபாக்யானம். கிராதார்ஜுனீயம். யக்ஞஸம்ரக்ஷணம். பீஷ்ம பிர்மசர்யநியமம். யயாதிசரிதம். காலவசரிதம். துருவசரிதம் மற்றும் சில உபந்யாசங்களும் நடைபெறும்.

ஒரு நிரூபர்.

(3-ம் காலம் தொடர்ச்சி)

அங்கங்கே சபைகூடுங்கள்: தீர்மானங்களை கவர்னருக்கும், வைஸ்ராயுக்கும் தெரிவிங்கள் விரோதிகட்கு ஓட்டுக்கொடாதீர்கள்.

சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கக் கூட்டம்.

தலைவரின் பிரஸங்கம்.

சென்றவாரம் திருவல்லிக்கேணி ஸ்ரீவா... மாமலைமடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்த ராவ்ஸாஹிப் ஸ்ரீமான் பி. வி. ரங்கஸாமி அய்யங்கார் பேசியதாவது:—

வைதிகர்களே! "திக்கற்றவர்க்கு தெய்வமே துணை" என்பதுதான் தமிழ்நாட்டின் ஏழை மக்களின் கொள்கை. இதை நாம் புதிதாக கண்டுபிடிக்கவில்லை. ஸ்ரீராமாயணத்தில் மஹரிஷிகளும் ஸ்ரீமகாபாரதத்தில் பாண்டவர்களும் இதே ஔஷதத்தை கையாண்டார்கள். அதனால் அவர்கள் சிகிச்சை அடைந்தார்கள் என்பது நாம் அறிந்த விஷயமே.

ஆனால் 'தெய்வபலம் என்பதையே நமது விரோதிகள் ஒத்துக்கொள்ளவில்லை: அகில தேசியக் கூட்டத்தலைவர் சொல்லுகிறார்:— 'துன்பமே துணையாக முன்னேறுவோம். நாம் மனுஷ்ய பலத்தையே நம்புகிறோம். ஆகையால் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்தால் கரையேறலாம்" என்கிறார். தெய்வத்துணையை அவர் கோரவில்லை. இந்த அவஸ்தை நமக்கு ஏற்பட்டிருப்பது புதிதல்ல. துரியோதனன் மனுஷ்யபலத்தை நம்பினான். பாண்டவனை அர்ச்சுனன் தெய்வபலத்தை நாடினான். அர்ச்சுனன் ஜெயமடைந்தது உலகப்பிரசித்தம். தர்மமார்க்கத்தில் ஐவருக்கு கையாளாக இருந்து நூற்றுவரை தோற்கடித்து தர்ம ஸம்ஸ்தாபனம் செய்தவர் இன்று அபலர்களைக் கைவிடமாட்டார். இதை நாம் உறுதியாக நம்பலாம். நாஸ்திகவாதம் வெகு மும்முரமாய் நடக்கிறதை நாம் பார்க்கிறோம். வர்ணாஸ்ரம தர்மம் கைநழுவுகிறதை கேட்கிறோம். 'நீங்கள் இத்தனை காலமாய் ஸந்த்யாவந்தனம் செய்தீர்களே — உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது சொல்லுங்கள்?' என்கிறான் இருபதுவயதான இளைஞன். நாங்கள் செய்ததின் பலனாக இதுவரையில் நாட்டில் க்ஷேம லாபத்துக்கு லோபமில்லாமலிருந்தது. நாஸ்திகர்களான நீங்கள் தலைதூக்கும்போதே 'பீஹாரில் பூகம்பம், அலகாபாத்தில் பெருவெள்ளம்: குண்டூரில் புயல்காற்று' என்பவை வரிசையாக ஜனநாசம் உண்டாக்கிவருகின்றன. அதுவும் தவிர அரைவயிற்றுக்குக் குறையாமல் சாப்பிட்டிருந்தோம். இப்பொழுதோ ஆனர்ஸ் பரீக்ஷை கொடுத்தும் அரைவயிற்றுக் கஞ்சியும் இல்லாமல் அவதிப்படும்படி நேரிட்டிருக்கிறது. தர்ம நஷ்டத்திற்கு இதைவிட அத்தாட்சி வேணுமா?

'குலத்துக்கு கோடாரிக் காம்பே' என்று ஒரு மரம் சொல்லிற்று: மரம் சொல்லுமோ! என்னலாம். தர்ம ஸமூகத்திலிருந்து நழுவின சுதேசியர்கள் இப்பொழுது கோடாரியின் காம்பாக இருக்கிறார்கள். தயையும் தாக்ஷிண்யமும் காண்பித்து வந்ததால்தான் உயிருக்கே ஆபத்து வந்திருக்கிறது. வைத்தியர் 'காலில் ரணம் பற்றினால் கால் உடலைச் சேர்ந்திருந்தாலும் அதை வெட்டினால்தான் உயர் தப்ப வழி ஏற்படும்' என்று சொல்லவில்லையா? அப்படி செய்யாமல் தயை காண்பித்தால் உயிர் தங்குமோ? ஆகையால், அன்பர்களே! பகவான் கீதையில் நம் பிரதிநிதியான அர்ச்சுனனுக்குச் சொன்னதை கேளுங்கள்: 'பந்து மித்திரர்கள் விரோதி கக்ஷியில் இருப்பதாக பாசம் வைக்காதீர்கள். நமக்கு தர்மமே பந்து. தர்மமே துணை. தர்மமே உயிர்நிலை, தர்மயுத்தத்தை ஆரம்பிக்கவேண்டியதுதான். அதனால்வரும் பயன் நம் விரோதிகளும் வாழ வேண்டுமென்பதே. பிரயத்தனம் செய்யுங்கள்: முடிவு என் கையிலிருக்கிறது.' என்று சொன்னவர் இன்றும் எதிரிலிருந்து சொல்லுகிறார்.

(தொடர்ச்சி 2-ம் காலம் பார்க்க)

...ணாய साधूनां विनाशाय च दुष्कृतां
...संस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-௵ தை-௴ 1௳

காங்கிரஸ் தலைவரின் விநோதமான பதில்.

ஸநாதனிகளின் சிறந்த தலைவராக விளங்கிவரும் ராவ்ஸாஹிப், ஸ்ரீமான் என். நடேச அய்யாவர்கள், பெய்ஸ்பூரில் காங்கிரஸ் நடந்துகொண்டிருக்கும் ஸமயம் அதன் தலைவரான ஸ்ரீமான் ஜவஹர்லால் நேருவுக்கு ஓர் தந்தி அனுப்பியிருந்தார். அதில் காங்கிரஸானது மதவிஷயத்தில் பிரவேசித்து பலாத்காரமுறையில் சட்டமியற்றுவதை ஆக்ஷேபம் செய்திருந்தார். இதற்குப்பதிலாக 3௳ யன்று அலஹாபாத் அகிலஇந்தியக் காங்கிரஸ் காரியாலயத்திலிருந்து நேருஜி எழுதியுள்ளபதிலை அடுத்த பத்தியில் பிரசுரித்துள்ளோம். அதை நமது வாசகர்கள் ஊன்றிப் படித்தால், மதவிஷயத்தில் தற்கால காங்கிரஸின் மனப்போக்கு எத்தகையதென்பதை விசதமாக அறிந்துகொள்ளமுடியும். நேருஜி தமது பதிலில், காங்கிரஸானது பிறருடைய மனஸ்ஸாக்ஷியிலும், மதஸம்பந்தமான தொழுகையிலும் பிரவேசிக்காமல் நடுநிலைமைவகிக்கும் கொள்கையைக்கொண்டிருப்பதாயும், ஆனால் எது மதவிஷயம், எது ஸமூஹ விஷயமென்பதை நிர்ணயிப்பதில் சிரமமுண்டாகலாமென்றும், பெரும்பாலோர் சமூஹச் சீர்திருத்தம் வேண்டுமென்பதை தற்காலம் விரும்புவதாயும், அவர்களுடைய இஷ்டத்தை அநுசரித்து மெஜாரிடி ஜனங்கள் ஆதரித்தால் ஸமூஹத்திருத்தங்களைச் சட்டமூலமாக ஏற்படுத்துவது நியாயமே, என்றும் சொல்லியிருக்கிறார்.

மனஸ்ஸாக்ஷிவிஷயத்திலும், மதஸம்பந்தமானதொழுகையிலும் காங்கிரஸ் நடுநிலைமை வகிக்குமென்று இவர் சொல்லுவதின் கருத்து விளங்கவில்லை. ஒருவனுடைய, அல்லது ஒரு ஸமூஹத்தினுடைய மனஸ்ஸாக்ஷியை காங்கிரஸ் மதித்து நடப்பது உண்மையாயிருந்தால், நேருஜியின் கடிதத்தில் உள்ள கடைசிபாகத்திற்கு அவகாசமேயில்லை. பெரும்பாலோர் அபிப்பிராயப்பட்டால்கூட ஒரு சிலருடைய மனஸ்ஸாக்ஷியை அவமதித்து அது ஸமூஹச்சட்டங்களை இயற்ற உடந்தையாயிருக்கக்கூடாதல்லவா? மதஸம்பந்தமான தொழுகை என்றால் என்ன அர்த்தமோ? "மதாசாரம்" என்ற பதத்தை அவர் உபயோகிக்கக் கூச்சப்படுவதாகவே வெளியாகிறது. ஸமயத்திற்கேற்றவியாக்யானத்தைச் செய்துகொள்ளவே "தொழுகை" என்ற பதத்தை அவர் உபயோகித்திருக்கிறார் போலும்?

மேலும், அவருடைய பதிலில், ஹிந்து, மஹம்மதியாதி பேதமில்லாமல் எல்லா மதத்திற்கும் பொருந்தும்படியே வாசகத்தை அமைத்திருக்கிறார். மெஜாரிடியாரின் அபிப்பிராயத்திற்கு மைனாரிடியார்உட்படிந்து நடக்கவேண்டுமென்ற ஜனநாயக தத்வத்தை அநுஸரித்து ஹிந்துஸமூஹத்திலுள்ள பெரும்பாலோரான சீர்திருத்த வாதிகளின் அபிப்பிராயமே பெரிதென்றும், அதன்படியே கார்யமும் நடைபெறவேண்டுமென்றும் இவர் நெறிக்கிறார். அப்படியானால், இந்தியாவில் பெரும்பாலோரானவர் ஹிந்துக்களே. சட்டசபையிலும் அநேகமாகாணங்களில் இவர்களே அதிகபிரதிநிதித்வம் பெற்றிருப்பார்கள். இந்தப் பெரும்பான்மை பலத்தைகொண்டு கிறிஸ்தவமதத்தையோ, மஹம்மதியமதத்தையோ காங்கிரஸ் சீர்திருத்த முயற்சிக்க முடியுமா? நேருஜியோ, மற்ற காங்கிரஸ்வாதிகளோ அந்தமாதிரி செய்யத்துணிவார்களா? மெஜாரிடி பலத்தைக்கொண்டு அந்நியமதத்தைத் திருத்த முயல்வது அநீதியானால், அஸாத்யமானால், அதே நியாயத்தைக் கொண்டு ஹிந்துக்களிலேயே பல பிரிவுள்ள மதஸ்தர்களை மட்டும் நிர்ப்பந்திக்க என்ன நியாயமிருக்கிறது? ஹிந்து ஸமூஹம் ஒன்றாயினும் தேசாசாரத்தினாலும் ஜாதிகுல தர்மங்களாலும் அதில் பலவகைப்பட்ட பிரிவுகளும் மனப்போக்குகளும் இருக்கிறதை ஒருவரும் மறுக்கமுடியாது. சீர்திருத்தக்காரர்கள் தாங்களே பெரும்பாலோரென்று சொல்லிக்கொண்டு தங்களிஷ்டப்படி ஸாதுக்களான தார்மிகர்களை துன்பப்படுத்தி தங்கள் மனம்போனபடியெல்லாம் அதர்மச்சட்டங்களை இயற்ற பின்தங்கமாட்டார்களென்றும் நேருஜி வெளியிட்டிருக்கிறார். ஆகையால் பெரும்பாலோர் அபிப்பிராயம் என்ற வியாஜங்கொண்டு காங்கிரஸானது மதத்தை தாக்கப் பின்வாங்காதென்பது ஊர்ஜிதமாகிறது. மதவிஷயமா, ஸமூஹ விஷயமா என்று ஒன்றை நிர்ணயிப்பதில் சிரமமிருப்பதாக இவர் வாதிப்பதும் தங்கள் சௌகர்யப்படி எதையும் ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தாலேயே என்போம்.

நேருஜி இவ்வளவு வியக்தமாகச் சொல்லியபின் காங்கிரஸின் போக்கு எத்தகையதென்பதில் ஒருவருக்கும் ஸந்தேகமிருக்க நியாயமில்லை. மதஸ்வாதந்திரியமும் மனிதனின் பிறப்புரிமையில் சேர்ந்ததென்றும், அதற்கு எவ்விதத்திலும் பாதகமிழைக்கக்கூடாதென்றும் தனிப்பட்டவரோ, மெஜாரிட்டியாரோ மாற்ற முடியாத முக்கியமான மூலாதார கொள்கையைக் காங்கிரஸ் கடைப்பிடிக்காதவரையில், தார்மிகர்கள் அதனிடம் நம்பிக்கைவைக்க முடியாதென்பதையே நாம் உணரும்படி நேருஜியின் பதில் போதிக்கிறது.

"ஜவஹர்லால் நேருவின் கடிதம்"

Allahabad, January 3, 1937.

G5/67

Shri Natesar,
President. Varnashram Swarajya Sangh, Madura,

Dear Sir,

Your telegram was received by me in Faizpur. The general Congress policy is that there should be full liberty in matters of conscience and religious worship. As for any legislation, this must inevitably depend on the people themselves or, rather, the majority of them. It is difficult to draw hard and fast line between social matters and those which have some religious sanction behind them. In many social matters it is the opinion of many persons that reforms are necessary. Whether such reforms or changes are introduced or not is a matter for the majority of the people themselves to decide. It seems to me improper to put a ban on any such social changes.

Yours faithfully,
(Sd.) J. NEHRU.

குறிப்புகள்.

காங்கிரஸும் மதரக்ஷணமும்.

இவ்வருஷக் காங்கிரஸில் ஒரு சிறிய விசேஷம் நிகழ்ந்தது. மஹாராஷ்டிரத் தலைவரான ஸ்ரீமான் கங்காதர ராவ் தேஷ்பாண்டே என்பவர் பஹிரங்கக் காங்கிரஸில் மதவிஷயத்தைப் பற்றிச் சிறிது பேசினார். காங்கிரஸ் மஹாஸபை மதவிரோதியானதென்று சிலர் நினைப்பதாயும், அவ்வாறு நினைப்பது தவறு என்றும், காங்கிரஸ், மதத்திற்கு ரக்ஷகனே யென்றும், காந்திஜி, காங்கிரஸில் மதவிஷயத்தையும் சேர்த்திருப்பதாயும், காராச்சித்தீர்மானம் மத நடுநிலைமையை வற்புறுத்துவதாயும் மாளவியாஜி போன்ற மதாபிமானிகள் காங்கிரஸில் இருப்பதாயும், ஆதலால் மதத்திற்குக் காங்கிரஸால் ஆபத்து வருமென்று யாரும் அச்சப்படவேண்டியதில்லையென்றும் அவர் கூறினார். பிறகு ஜால்கானில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்திலும் ஸ்ரீமான் தேஷ் பாண்டே அதேமாதிரி தைர்ய மொழியை மஹாராஷ்டிரர்களுக்குக் கூறினார். ஸ்ரீமான் தேஷ்பாண்டேயின் மனப்போக்கு சிலாகிக்கத்தக்கதாயினும், அவர்குறிப்பிட்ட காரணங்கள் விபரீதமானவைகளே. காந்திஜி காங்கிரஸில்மத விஷயத்தைப்புகுத்தியிருப்பதை இவர் பெருமையாகப் பேசியது பொருத்தமானதா? ராஜ்யஸ்தாபனமாகிய காங்கிரஸ்ஸில் மதவிஷயத்தைப் புகவிட்டு உபத்திரவம் விளைவித்தவர் காந்திஜீயே. இப்படியிருக்க அவரையே இவர் பிரமாணமாகக் காட்டுவது பொருத்தமற்றது.

காராச்சித் தீர்மானமும் காற்றில் பறக்கிறது. அதை லக்ஷ்யம் செய்வாரில்லை. அந்த தீர்மானத்திற்கு பிறகு எவ்வளவோ விபரீதம் காங்கிரஸால் விளைந்திருக்கிறது. திருவாங்கூர் விளம்பரத்தையும், எம். ஸி. ராஜா மசோதாவையும் எல்லா காங்கிரஸ் கமிட்டிகளும் காங்கிரஸ் கூட்டங்களும் ஆதரித்ததெப்படி? இது மத நடுநிலைமையா? அல்லது மதரக்ஷணமா?

ஸ்ரீமான் காந்தி ஸமீபத்தில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் காங்கிரஸ்ஸானது தீண்டாமையை விலக்கிக் கொடுக்கக்கட்டுப்பட்டிருப்பதாக உறுதியுடன் கூறியிருக்கிறாரே? அதென்ன? மதரக்ஷணமா?

அபேதவாதியான நேருஜியின் தலைமையிலும் அதன்மூலம் காங்கிரஸிடத்திலும் மஹாராஷ்டிர மதாபிமானிகளுக்கு மிகுந்த அவநம்பிக்கை தோன்றியுள்ளது. இக்காரணம் பற்றி அங்கு காங்கிரஸுக்கு ஆதாவு குறைந்திருப்பது ஏற்கனவே பத்திரிகைகள் மூலம் வெளிப்பட்டது. ஆனால் ஸ்ரீமான் பாண்டே கூறும் ஸமாதானம் இதை சரிப்படுத்துவதாயில்லை.

இப்போது நடக்கும் எலெக்ஷனிலாவது மதநடுநிலைமைக்கு உறுதிமொழியளித்துக் காங்கிரஸ் வாதிகள் ஒழுங்காக நடக்கும்படி இவர் ஆலோசனை கூறுவாரா?

தர்மபுரி ஜில்லா போர்டு தலைவர்.

காங்கிரஸுக்கு அபஜயம்.

இரண்டாகப் பிரிக்கப்பட்ட சேலம் ஜில்லா போர்டின் கிளையாகிய தர்மபுரி ஜில்லா போர்டுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் அபேக்ஷகர் தோல்வியடைந்தார். ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்தவர் ஜயித்தார். ஒரு ஓட்டு வித்யாஸத்தினாலேயே இந்த தோல்வி ஏற்பட்டது. அதுவும் காங்கிரஸ்வாதியாயிருந்து மெம்பராகவந்த ஒருவர் காங்கிரஸுக்கு விரோதமாக வாக்குக் கொடுத்ததாலேயே ஏற்பட்டதாம். காங்கிரஸ் வேஷம்போட்டு ஏமாற்றியவரைப்பற்றி பலமாகக் கண்டனங்கள் நடக்கின்றன.

தலைவர் எலெக்ஷனுக்கு முதல்நாள் தான் ஸர்க்கார் அந்த போர்டுக்குச் சிலரை மெம்பராக நியமனம் செய்தார்கள். உபத் தலைவர் தேர்தலில் இரண்டு கக்ஷியாருக்கும் விவாதம் ஏற்பட்டு ஜஸ்டிஸ் கக்ஷியார் கூட்டத்தைக் கலைத்துவிட்டுப் போய்விட்டார்கள். காங்கிரஸ் கக்ஷியார் 15 பேர் தனியாகக்கூடி ஸ்ரீமான் நஞ்சுண்டசெட்டியாரென்பவரை உபத்தலைவராக தெரிந்தெடுத்தார்கள். இந்த எலெக்ஷனை ஸர்க்கார் அங்கீகரிப்பார்களா வென்பது தெரியவேணும்.

மைஸூரில் கிரிஸ்தவ மஹம்மதியச் சண்டை

மாதாகோவில் த்வம்ஸம் செய்யப்பட்டது. மூன்றுபேர் மரணம்.

மைஸூரில் ஸெயிண்ட் பிலோமானஸ் சர்ச்சைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள், மதமாற்ற உத்தேசத்துடன் முஹம்மதியச் சிறுவர்களை தூக்கிக்கொண்டுபோவதாக வதந்தி கிளம்பியதன்மேல் அங்குள்ள மஹம்மதியர் மேற்படி மாதாகோவிலைத் தாக்கி நாசம் செய்தனர். கோவிலுக்குள் இருந்த விக்ரஹங்களும் உடைக்கப்பட்டன. போலீசார் வந்து கலஹத்தை அடக்கமுயன்றும் பயன்படாததால் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் 3 பேர் கொல்லப்பட்டனர். மாஜிஸ்ட்ரேட் உள்பட போலீஸாரில் 12 பேர்களுக்கு பலத்தகாயமும் ஏற்பட்டிருக்கிறது. பங்களூரிலிருந்து ரிஸர்வ் போலீஸ் படையும் வந்து ஸ்தலத்தைக் காவல் புரிந்து வருகிறது. அதிகமான விவரம் எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜாங்கஸபை மெம்பர்மீது ராஜத்வேஷக்குற்றம்.

ஸ்ரீமான் வியானி கைதி.

பேரார் மாகாணத்திலிருந்து ராஜாங்க ஸபைக்கு, ஸமீபத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் பிரிஜ்லால் வியானி என்பவர் நேற்று முன்தினம் 124 வது பிரிவுப்படி கைது செய்யப்பட்டார். ஜாமீனில் வெளிவந்து எதிர்கக்ஷியாடும்படி ஸ்ரீமான் படேல் இவருக்கு யோஜனை சொல்லியுள்ளார். இவர் பேரார் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராவர்.

மாணக்கர்களுக்கு மதபோதனை

டவுன் ஹைஸ்கூல் கமிட்டியின் அச்ரத்தை.

பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு மதபோதனை அத்யவச்யமென்று இக்காலத்தில் தேசக்ஷேமம் விரும்புவோர் வற்புறுத்திவருவது பலரும் அறிந்தவிஷயமே. கிறிஸ்தவ,முஹம்மதிய மதத்தினர் இவ்விஷயத்தில் மிகுந்த சிரத்தைகாட்டி வருகிறார்கள். அவர்களுடைய பள்ளிக்கூடங்களில் மதபோதனை யானது கட்டாயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டாரும் அவர்களுடைய உணர்ச்சியை மதித்தே கல்வியிலாகாவில் சட்டதிட்டங்களை நிர்ணயித்துள்ளார். இவ்விஷயத்தில் ஹிந்து ஸமூஹம்தான் ஸரியான சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. ஆயினும் ஸமீப காலமாக வெகு இடங்களில் மதப்படிப்பின் அவச்யமானது பலமாக உணரப்பட்டு வருகிறது., இந்த நிலைமையில் ஸர்க்காரின் நேரான மேற்பார்வைக்குட்படாமல் நம்மவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் மாணக்கர்களுக்கு மதப்படிப்புச் சொல்லிவைக்கப் பல வழிகளிலும் நியாயமும் ஸௌகர்யமும் இருந்து வருகையில்கூட அவைகள் இதைக்கவனிக்காமல் அலக்ஷ்யம் செய்வது பாராட்டத்தக்கதல்ல.

'கும்பகோணத்தில் பிரபலமாக விளங்கிவரும் டவுன் ஹைஸ்கூலில் இந்த விஷயத்தைப் பற்றி அதன் கமிட்டி மெம்பர்கள் செய்த தீர்மானம் மதாபிமானிகளான ஆஸ்திக ஹிந்துக்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கக்கூடியது. மாஜி இஞ்சினீயரும் ஸநாதன பிரசாரகருமான ஸ்ரீமான் எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரியார் டவுன் ஹைஸ்கூல் கமிட்டியாருக்கு ஒரு வேண்டுகோள் செய்துகொண்டார். மாணவர்களுக்கு மதபோதனை செய்யவேண்டியது அவச்யமென்றும், தாமும் வேறு சிலரும் குறிப்பிட்ட ஸமயத்தில் இக்கார்யத்தைப் பூர்த்திசெய்துவைக்கத் தயாராயிருப்பதாயும், கமிட்டியார் இதற்கு அனுமதியளிக்கவேண்டுமென்றும் வேண்டியிருந்தார்.

நேற்று திங்களன்று நடந்த கமிட்டிக்கூட்டத்தில் இவ்விஷயம் ஆலோசனைக்கு வந்தது. மதவிஷயம் போதிக்கப்படவேண்டுமென்ற முக்ய விஷயத்தை விட்டுவிட்டு, "நன்னடத்தை"யை மாணவர்க்கு உபதேசித்தால் போதுமென்று கமிட்டி தீர்மானித்துவிட்டது. மதபோதனைக்கு ஏற்பாடு செய்வதில் கிறிஸ்தவ, மஹம்மதியாதி மாணவர்களுமிருப்பதால் எல்லோருக்கும் பொதுவான மதப்படிப்பு ஏற்படுத்துவது ஸாத்யமில்லையென்று அபிப்பிராயப்பட்டார்களாம். இதில் கமிட்டி மெம்பர்கள், தங்களது மதாபிமானத்தையும், கடமையையும், காட்டிக்கொண்டதாகாது. அந்நிய மதஸ்தர்களான சில மாணவர்களிருப்பதற்காகப் பெரும்பான்மையோரான ஹிந்துமாணவர்களுடைய ஹிதத்தைக் கைவிடுவது விவேகமுடைமை?

முக்யமாக இந்த ஸ்கூலின் அமைப்பை கவனிக்கவேண்டாமா? இது ஆஸ்திகர்கள் மிகுந்துள்ள ஹிந்துக்கள் நிரம்பிய குடந்தையில் இருந்துவருகிறது. இதன் நிர்வாஹமும் ஆஸ்திக ஹிந்துக்கள் வசமே இருக்கிறது. இதில் வாசிக்கும்மாணவர்களோ மிகப்பெரும்பான்மையோர் ஹிந்துமாணக்கர்களேயாவர். உபாத்தியாயர்களும் ஹிந்துக்களே. கிறிஸ்தவ மஹம்மதியப் பள்ளிக்கூடங்களில் நடப்பதென்ன? ஹிந்துக்கள் அங்கு ஏராளமாகப் படித்தால்கூட பள்ளிக்கூட நியமத்தை அநுஸரித்து அவர்கள், கிறிஸ்தவ, மஹம்மதிய மதப் படிப்பைக்கூட கற்கிறார்களல்லவா?

மேலும் இந்தப் பள்ளிக்கூடத்தில் கிறிஸ்தவர், மஹம்மதியர் இருந்தால் தனியாக அவர்களுக்கும் அவர்களுடைய மதபோதனையை செய்ய ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது?

எதற்கும் மனமிருந்தால் கார்யம் கைகூடிவிடும். இனி, நல்ல நடத்தை என்பது மத அஸ்திவாரமில்லாமல் எப்படி நிலைத்திருக்கும்? மதத்தில் ஸம்பந்தப்படுத்தி அதை போதிக்க முடியுமே யல்லது தனியாக போதிப்பது உபயோகப்படுமா? நன்னடைத்தை யென்பது ஊன்றி கவனித்தால் மதத்தில் ஸம்பந்தப்பட்டதாகவே இருப்பது விளங்கும்.

தற்காலம் எங்கும் மாணவர்களிடம் அடங்காமை விருத்தியாகிவருவதைப் பார்க்கிறோம். குடும்பம், பெற்றோர், பெரியோர், தெய்வம், ஜாதி, குலதர்மம், இவைகளை அவர்கள் அதிகம் வெறுக்க முற்பட்டிருக்கின்றனர். முக்யமாகப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களை அவர்கள் லக்ஷ்யம் செய்வதில்லை. இதனால் உபாத்தியாயர்களே பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இதற்குப் பரிஹாரமென்ன? மாணவர்களுக்கு மதக்கல்வி புகட்டினால் அதனால் அவர்கள் நல்லவழியில் நடந்துகொள்ளப் பழக்கமடைவார்கள். மனித ஸமூஹத்தை வியவஸ்தையுடன்,கட்டுப்பாட்டிற்குட்படுத்தி நன்னடத்தையுள்ளதாகச் செய்வதில் மதமொன்றுதான் ஸரியான ஸாதனமென்பதை மேற்றிசை மேதாவிகள் கூடப் பலர் இக்காலத்தில் பஹிரங்கமாகப் பேச முற்பட்டுவிட்டார்கள். ஐரோப்பாவில் தற்காலம் நடந்துவரும் பற்பல கொலைகளுக்கும், ஸ்வயநலப்பேய்க்கும்,அநியாயமான, மண், பொன் துராசைக்கும், துரோகத்திற்கும் ஸரியான மத சிரத்தை இல்லாததே காரணமென்றும் கூடியசீக்கிரம் அங்கு மத சிரத்தையை உண்டு பண்ணினால், மேற்கண்ட அதிக்ரமங்கள் நீங்குமென்றும் அத்தேசப்பிரதிநிதிகளும், மேதாவிகளும் பலர் அபிப்பிராயம் வெளியிட்டதை ப் பத்திரிகைகளில் படிக்காதாரில்லை.

இப்படி, குடும்பத்திற்கும், தேசத்திற்கும், ஸமூஹத்திற்கும் நன்மைவிளைவிக்கக்கூடிய மதக்கல்வியை ...க்ஷேத்ரமாகிய குடந்தையில் ...ஸிப்பவர்கள் கூட அலக்ஷ்யம் செய்ததை என்னென்று சொல்லுவோம்? ஹிந்து ஸமூஹத் தலைவர்களின் ஸ்வாபிமானமற்ற மனப்போக்கைப் பார்த்து இதர ஸமூஹம் நகைக்காதா? ...ம்மைச் சுற்றியுள்ளவர்களின் செய்கையைப் பார்த்தாவது நம்மவர்களுக்கு உணர்ச்சி உண்டாகவேண்டாமா? பொதுஜன பிரதிநிதிகளாக அக்கமிட்டியை அலங்கரித்து வருவோரின் இச்செய்கையை பற்றி மதப்பற்றுள்ள ஹிந்துஸமூஹம் துக்கிக்கிறதென்பதிற் சந்தேகமில்லை.

ஓர் மதாபிமானி.

எலெக்ஷன் அபாயம். மற்றொருகொலை.

வங்காளத்தில் டாக்காஜில்லாவைச் சேர்ந்த ராய்பூராவாஸியான மௌல்வி அப்தாப் உதீன் என்ற கௌரவமுள்ள ... ஒருவர் வங்காள ஜனப்ரதிநிதி ஸபைக்கு ஒரு அபேக்ஷகராக நின்றார். இவர் விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

பஞ்சாபில் ஒரு தீண்டாத ஜாதி அபேக்ஷகரின் மனைவி கொலைசெய்யப்பட்ட விவரமும் ஏற்கனவே தெரிந்ததே.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Tuni

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

3. அல்லது, தரே—பயகாலத்திலும், ஸ்மேரமான முகாம்புஜத்தையுடையவளென்றும் சொல்லலாம். அதாவது, கல்பாந்தம் (ப்ரளயம்) முதலான பயங்கரமானகாலங்களில் பிறருடைய முகங்களில் பயத்தினல் வைவர்ண்யம் ஏற்படுகையில், அம்பாள் அப்போதும் புன்சிரிப்புடன் விளங்கிக்கொண்டிருக்கிருளென்பது தாத்பர்யம்.

4. தரே—(பக்தர்களை) ஆதரிக்கும் விஷயத்தில், ஸ்மேர—ப்ரஸன்னமான, முகாம்புஜத்தையுடையவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

இதற்கடுத்தாற்போல் வரும் பாதிச்லோகமாகிய

'கௌலினீ, கேவலா, ऽனர்க்ய, க்கைவல்ய பததாயினீ |'

என்பதில் நாலு நாமங்கள் வருகின்றன. அவற்றில் மூன்று ஏற்கனவே வந்தவை.

'குலாங்கனு குலாந்தஸ்த்தா கௌலினீ குலயோகினீ |'

'க்லீம்காரீ கேவலா குஹ்யா கைவல்ய பததாயினீ |'

ஆகவே, புனருக்தி என்ற தோஷத்தைப் போக்குவதற்காக இவற்றை சரியாகப்பிரிக்கவேண்டிய அவச்யம் ஏற்படுகிறது. அதற்காக சலாக்ஷா ஸூத்ரகாரர் இந்தப் பாதிச்லோகத்தை 'கௌலினீ', 'கேவலாऽனர்க்ய கைவல்ய பததாயினீ' என்பதாக இரண்டு நாமங்களாகப் பிரித்திருக்கிறார். ஏற்கனவே 'கௌலினீ' என்று வந்தவிடத்தில் அவர் அதை 'கௌலினீகுலயோகினீ' என்று சேர்த்திருப்பதால் அவர் மதத்தின்படி பௌனருக்த்யம் ஏற்படவில்லை. பரிபாஷாச்லோககாரான ஸ்ரீ ந்ருஸிம்ஹானந்த நாதர் இந்த சலாக்ஷாஸூத்ர விபாகத்தை அனுஸரிக்காமல், 'கௌலினீ கேவலா' என்றும் 'அனர்க்ய கைவல்ய பததாயினீ' என்றுமாகப் பிரித்திருக்கிறார். ஏற்கனவே 'கௌலினீ' என்பது வந்த இடத்தில் அதைத் தனி நாமமாகவும் 'குலயோகினீ' என்பதைத் தனி நாமமாகவும் அவர் பிரித்திருப்பதினல் நாமங்களின் கணக்கு ஒன்றுகூட இருக்குமே என்று தோன்றலாம். ஆயினும்

'ப்ரஸவித்ரீ ப்ரசண்டாக்ஞா ப்ரதிஷ்டா ப்ரகடாக்ருதி: |'

என்பதில் வரும் 'ப்ரகடாக்ருதி:' என்பதை சலாக்ஷா ஸூத்ரகாரர் 'ப்ரகடா', 'ஆக்ருதி:' என்று இரண்டாகப் பிரித்திருக்கையில் ஸ்ரீந்ருஸிம்ஹானந்தநாதர் அதை ஒரே நாமமாகச் சொல்லுவதால் கணக்கு சரியாகத்தானிருக்கிறது. பாஸ்கரராயர் தன் பாஷ்யத்தில் இந்த இரண்டு விபாகங்களுக்கும் காரணத்தைச் சொல்லிவிட்டு தன் குருசாளுடைய மதப்படி நாமங்களைப்பிரித்து அர்த்தம் சொல்லியிருக்கிறார். அவ்வித நாம விபாகத்தின் காரணத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் பாஷ்யத்தின் மூலத்தைப் பார்த்துக்கொள்ளக் கோரப்படுகிறது.

கௌலினீ கேவலா 925

கௌல தர்மத்தையும் கேவலமென்ற ஞானத்தையுமுடையவள்.

1. ஈச்வர ஞானத்தை கேவலம் என்று சொல்லப்படும். அவ்விதமான ப்ரயோகங்கள் அனேகம் ஜைன தந்த்ரங்களில் காணப்படுகின்றன.

2. அல்லது, ஸகல தர்மங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டவள் (அதாவது, தர்மங்கள் யாதொன்று மில்லாதவள்) கேவலா என்றும் சொல்லலாம்.

3. அல்லது, ஸுக, துக்கங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவள் கேவலா என்றும் சொல்லலாம். அவ்விதமான அர்த்தமானது 'தத்விமுக்திஸ்து கேவலீ' என்ற சிவஸூத்ரத்தில் கேவல பதத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிறது. [இங்கு வரும் தத் என்ற பதமானது இதற்கு முந்திய ஸூத்ரமான 'ஸுகாஸுகயோர் பஹிர் மனனம்' என்பதில் சொல்லப்பட்ட ஸுக, துக்கங்களை குறிக்கும்.

4. கேவலமென்ற பதத்திற்கு

'கேவலம் ஞானபேதே ஸ்யாத் கேவலச் சைக க்ருத்ஸ்னயோ: |
நிர்ணீதே கேவலம் சோக்தம் கேவல: குஹனே க்வசித் ||'

என்ற விச்வகோச வசனத்தின்படி ஏக (ஒன்றுன), க்ருத்ஸ்ன (முற்றிலுமான), நிர்ணயிக்கப்பட்ட என்ற அர்த்தங்களுண்டு. இவற்றை யொட்டியும் இங்கு அந்தப் பதத்திற்கு அர்த்தங்கள் சொல்லலாம். ஆயினும் இவற்றினல் ஏற்படுவது என்னவென்றுல் அம்பாள் கேவலம் கௌலதர்மத்தையே உடையவள் என்ற அர்த்தம் தான்.

5. அல்லது, கௌலினிகள் (கௌலமதத்தை அனுஷ்டிக்கும் ஸ்த்ரீகள்) யாரால் ஞானவதிகளாக ஆகிருர்களோ, அவள் கௌலினீ கேவலா என்றும், கௌலினிகளால் நிர்ணயிக்கப்பட்டவள் கௌலினீ கேவலா என்றும் சொல்லலாம்.

[6. இந்த நாமத்திற்கு 'காலினீ கேவலா' என்ற பாடாந்தரமிருப்பதாக சிலர் சொல்லுவார்கள். (பாஸ்கர ராயர் இதைத் சொல்லவில்லை.) அப்போது, காலதர்மஸ்வரூபிணியாயும் ஒருவித தர்மமுமில்லாதவளாயுமிருப்பவள் என்று அர்த்தம் ஏற்படும். அல்லது கால நிர்ணய தேவதைகள் யாரால் கேவலைகளாய் (ஸாரமில்லாதவர்களாய்) இருக்கிருர்களோ அவள் காலினீ கேவலா என்றும் சொல்லலாம். அதாவது, கால நிர்ணயத்திற்கு அதீதமாயிருப்பவள் என்று தாத்பர்யம்.]

அனர்க்ய கைவல்ய பத தாயினீ 926

விலையற்றதான கைவல்ய பதத்தைக் கொடுப்பவள்.

1. அதாவது, அமூல்யமான—விலை மதிக்க முடியாத (அபரிச்சின்னமான), க்கைவல்யமென்ற ஐந்தாவது முக்தியைக் கொடுப்பவள் என்று தாத்பர்யம்.

2. 'அனர்க்யா கைவல்ய பத தாயினீ' என்ற பாடாந்தரத்தில் ஆ (எங்கும் நிறைந்திருக்கும்) கைவல்ய பதமென்றும், அகைவல்ய (கைவல்யம் என்பது வேறு என்று இல்லாததான) பதமென்றும் அர்த்தம் சொல்லலாம்.

(3-ம் காலம் தொடர்ச்சி)

விபரீதப்போக்கு! சைவ வைஷ்ணவஸபை என்ற பெயரால் இவர் தங்கள் நாஸ்திகத்தன்மை சொறிந்து கொள்கின்றனர். காஞ்சியில் நடந்த சைவஸபை சண்டாளர் ஆலயப்ரவேசத்தை ஆமோதித்ததெனில் வேதாகம விருத்தமாகப் பேசுவது சைவமாமோ? சாஸ்த்ரீய சைவவைணவமெங்கே!

ரஹஸ்யமென்ன? சிலர் கூறுவதுபோல் திருவாங்கூர் கிருஸ்தவரிடம்பயந்துஸ்ரீபத்மநாபன் அர்ச்சையை மூர்த்திகரம் போகும்படி செய்தார். மைசூர் ராஜா கிருஸ்தவ வாலிபரை வருந்தி அழைக்கிருர். இதற்கு ஏதேனும் கூடமான ஹேது இருத்தல்வேண்டும். அஃதென்ன? நாம் பாதிரிக்கு இடமளித்ததே!!

பிரார்த்தனை. மிக அரிய விஷயங்கள் நமது ஆரியதர்மத்தில் ஆங்கிலத்தில் வருகின்றன. அதைத் தமிழில் சுருக்கமாகவாவது பிரசுரிக்கும்படி தர்மாபிமானிகள் வேண்டுகின்றனர்.

வாரக்குறிப்புகள்.

வெ. ஸோ. சர்மா.

மஹாராஷ்ட்ரம் வாழி! பல்லாயிரம் பேர் கூடிய தேசிய ஸபையில் ஸ்ரீமான் கங்காதர தேஷ்பாண்டே ஒருவர்தான் மதத்தில் தலையிடுவதில்லை என அபயமளித்தார். இதற்கு காரணம் மஹாராஷ்ட்ர ஸநாதநிகள் பிரதிநிதியை சட்டசபைக்கு நிறுத்தக்கருதியதேயாம் இங்ஙனம் மற்றமாகாணமும் முன்வந்தால் தேசியஸபை தர்மஸபையாம். சென்னை வெள்ளம் சென்றபின் அணைகோலுகிறது.

ஸம்ஸார வைராக்யம்! பெல்ஜிய மன்னன் மனைவி இறந்த துக்கத்தால் மறுமணம் புரிந்து கொள்ளாததால் ராஜ்யத்தை இழப்பரோ என பத்ரிகைகள் அஞ்சுகின்றன, அநக்நிகனுக பத்நி இல்லாமல் க்ருஹஸ்தாச்ரமி ஓர் க்ஷணங்கூட இருக்கக்கூடாதென நமக்கு விதி. மனதில் புதிதாக உண்டான ஷடி வைராக்யத்தால் மன்னர் பாவம் சிறிது தவிக்கலாம். விவாஹமில்லாது சிறிது காலமிருந்தால்தானென்ன அவர்களுக்கு? அதனுல் நாம் கற்கபாடமுண்டு.

நல்லகாலம் பிறக்கிறது!? வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம், பிராமணஸபை, ஹிந்து மஹாஸபை முதலியன சிறிது கண்விழித்து சென்னையில் சில தர்மபிரசாரம் செய்ய முன்வந்துள. அதே ஸமயத்தில் ஸ்ரீ லலிதாம்பிகையின் சோதனையால் மகா-ள-ள-ஸ்ரீ தண்டலம் ராமஸ்வாமி அய்யாவர்களும் ஓர் ஸநாதன தர்மஸபை கூட்ட தீவ்ர முயற்சி செய்கிருர்கள், இம்மாதம் 23, 24-உ சென்னைக்கு நல்லகாலம் பிறக்கும்.

இரு புதிய கர்ணர்கள்!! கல்கத்தாவில் ஓர் கொடையாளி 50ஆயிரம் ரூபா விலையுள்ள புத்தகங்களை ஓர் வாசகசாலைக்களித்தார். லாஹூரில் ஒருவர் ஆயுர்வேத வைத்யசாலையிலுள்ள நோயாளிகளுக்குத் தன் நோய்வலி தெரியாவண்ணம் ஆங்காங்கு நடக்கும் பாட்டுக்கச்சேரிகள் காதில் விழும்படி 'ரேடியோ' தானம் செய்தார். தமிழ் நாடு எதில் சிறந்து விளங்கப்போகிறது?

5 லக்ஷம் பெண்களா? ருஷ்யாவில் அவ்வளவு பெண்கள் யுத்தத்திற்கு தயாராக இருக்கிருர்களாம்! நவநாகரிகத்தின் முடிவை என்னென்று கூறுவது? அச்சம் அடக்கம் நாணம் குடும்பம் கற்பு முதலியவைகளை அடியோடு மறந்து ஆவேசங்கொண்டு சண்டைக்கும் வரும் இவர்கள் பெண்களா?

அவச்யந்தான். ஆனல்? மதுரை ஸ்ரீ மீனக்ஷிசுந்தரேச்வர தேவாலய ஆதரவில் ஓர் புத்தகசாலை துவக்கப்பட்டது. இதில் ஆகம வேதசாஸ்திரங்கள் இதர ஸமய நூல்கள் வைக்கப்பட்டு பலவைதிக உபன்யாஸங்கள் தர்மப்ரசாரம் நடப்பதானல் அது உத்தமமே. ஆனல் கோவில் பணத்தால் அநாவச்யமான புத்தகங்களை வாங்கி எல்லோருக்கும் நுழைய இடமாக்காமலிருக்கவேண்டும்.

இறக்க அவகாசமில்லை! என்று பண்டித மதன்மோஹன மாளவ்யா தனது 75 வது பிறந்த நாளில் கூறினர். அவர் செய்த ஹிந்துஸர்வ கலாசாலை தர்மத்தை நேரில் பார்த்தவர் அவரது தர்மத் தவறுதல்களைப் பொருட்படுத்தார். அவரவ்வளவு மதாபிமானங்கூட இல்லாத காலத்தே அவரது நீண்ட ஆயுளைக்கோறுதலவச்யமே.

(தொடர்ச்சி 2-ம் காலம் பார்க்க)

The Madras Varnashrama Swarajya Sanga.

Public Meeting in Park Town.

A public meeting was held under the auspices of the Madras Varnashrama Swarajya Sangha, Madras under the presidentship of Mr. Purushottamdas, Gokuldas on 8—1—37 when the following resolutions were passed:—

1 That this meeting places on record its grateful appreciation of the hospitality shown to His Holiness Sri (1008) Sri Sankaracharyaji of Goverdhan Mutt of Puri by His Highness the Maharajah of Bikaner and of his interest and solicitude for the maintenance of Hindu Orthodoxy.

2. (a) That this meeting places on record its humble heart-felt appreciation of the gracious assurances of His Highness the Maharajah of Cochin as an Orthodox Hindu Sovereign, given to a deputation of the Guzarathi Community that waited upon him at Madras.

(b) That this meeting respectfully offers its hearty congratulations to His Highness the Maharajah of Cochin and conveys to him its gratitude for his firm stand in the protection of ancient Sanatana Dharma especially in the matter of preserving the sanctity of the Hindu Temples in his State and the int... the Orthodox Hindu P...

(c) That th... tenders ... High... congratulations to ...ness the Maharajah of C... the occasion of ... Birth... prays for his ... life.

That this meeting ... endo... e sentiments expre... in the Guzarathi weekly ... of Bombay January 1937/by ... Sri (1008) ...kulanathaji Mal...raj of the ...a Mutt of Bom...ay on the ...ore Temple Entry Procla-

...ll be published in our next

...his meeting records its ...rotest against the principle underlying the recent action of the Travancore State in contravention of Shastraic injunctions and established traditions and making Hindu Temples of common worship for all people who may come with the Hindu label.

5 That to prevent similar acts in British India, a regular propaganda campaign be organised for broadcasting the distinguishing features of Hinduism and Sanatana Dharma and the places of temples, Hindu institutions, rituals etc, in Hindu Religion.

6. That in the opinion of this meeting it is this Sanatana Dharma that has saved India through all these centuries and that it is the want of it that accounts for the present world-conflagration threatening to destroy Western Civilisation altogether.

7. That Sanatanist India gives up its apologetic attitude, but pursues a policy of aggressive Dharmism and captures all the national organizations of India, and that for that purpose every Sanatanist should join the Congress at once, go into every election meeting and so work upon the Parliamentary Board and upon the Electorate as to make their influence felt in the selection of candidates and in their conduct after election.

8. That the immediate programme of the propaganda be to see that every voter feels it his or her duty to tell the candidate point-blank, by whatever party he may be nominated ...ress, Justice, People's or any ... that the candidate cannot ex... support unless he or she gives ...tten pledge to resist every in...-Conce with age-long social and ...ious customs and usages on ... has depended the survival of the Nation even in its present state.

Pledges like the one given by Mr. S. Satya... in 1934 to the President, Hindu Central Committee and which were faithfully acted upon by him then, were for obvious reasons of late violated by him, as is evident from his recent attitude, should not be relied upon. The pledges which would be irrevocable under any circumstances in any manner should be secured.

9. That this meeting exhorts the Sanatanists all over India not to visit any Travancore Temples until the Travancore Maharajah's proclamation is withdrawn and purification ceremony performed as prescribed in the Agamas pertaining to those temples.

(...ued from page 4.)

...y be interpreted in ...d will not amount to ...s there is a clear ...thods and ideas and ...es are given to the ...r preserving the ...a and with the ... the arrival of ...ry of Goverm... ...rture of the ... that the ... to insist ... of definite ...ompulsory ...fiscatory ...impossi-... major ...ver of ...onder ...such ...ing

மஹாராஷ்ட்ர வர்ணாச்ரமிகள். சட்டஸபைக்கு நிற்பார்கள்.

மஹாராஷ்டிரத்தி... காண்டேஜ் ஜில்லாவிலி... ருந்து பம்பாய் சட்டசபைக்கு வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தார் ஸ்ரீமான் எஸ். எஸ். சௌத... என்பவரை அபேக்ஷகராக நிறுத்தியிருக்கிருர்கள். பல பிரபலஸ்தர்கள் அவரை ஆதரிக்கின்றனர். ராஜாங்க ஸபைக்கும் ஸ்ரீமான் ரூ சந்து ... என்பவர் ஸநாதநிகளின் சார்பாக நிறுத்தப்பட்டிருக்கிருர்.

கும்பகோணம்.

வைதிக தர்ம ஸங்கம் சோளதேசம்.

மேற்படி ஸங்கத்தைஸ்தாபித்து 4 தர்ம பாடசாலைகளை ஏற்படுத்தி தர்மபிரசாரம் ஆங்காங்கு நடத்திவைத்திக்கொண்டு வரும் தஞ்சாவூர் ஸ்ரீ ஸ்வாமிகள் தர்ம ப்ரசாரங்களையும் வைதிகதர்ம அனுஷ்டானத்தையும் அபிவிருத்தி செய்வதற்காகவே தற்காலம் கும்பகோணம்வந்து பக்தபுரி அக்ராகாரம் படித்துறையில் தங்கிவருகிருர். தர்ம அபிமானமுள்ளவர்களெவரும் அவரை தரிசனம் செய்து தங்களுக்குள் தர்ம விஷயமான சம்சயங்களையும் தீர்த்துக்கொண்டு தார்மிகர்களால் வாழ் நாளை கழிக்கலாம், தார்மிக வேலைகளிலும் ஈடுபட்டு நல்வழி பெறலாம்.

தர்மாபிமானி.

வேண்டுகோள்.

கும்பகோணத்தில் சபைகூடிய சமீபத்தில் ஒரு தர்ம ஸம்மேளனம் கூட்டிவைத்து தற்கால சங்கடங்களைப்பற்றியும் இனிமேல் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றியும் தீர்மானித்து மேல் நடவடிக்கைகளை செய்வதாக சிலர் பிரயத்தினம் செய்தகொண்டிருக்கிரேம். சென்ற 4 வருஷங்களாக ஆரிய தர்ம பிரசாரத்தின் பலனுக அங்கங்கு அநேக பலபெயர்களுடன் அநேக ஸநாதன தர்ம ஸபைகள் ஏற்பட்டிருக்கின்றனர். அவைகளின் பெயரையும், விலாஸத்தையும், முக்கிய அத்தியக்ஷர்களின் பெயர்களையும் அங்கத்தினர் எண்ணிக்கையையும் குறித்து ஆர்ய தர்மம் பேபரிலாவது தனிக்கடிதத்திலாவது ... எழுதித் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

S. சுவாமிநாத சாஸ்திரி.
மாஜிஇஞ்சினீயர், கடலங்குடித்தெரு,

சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம.

புது நிர்வாஹிகள் தேர்தல்.

திருவல்லிக்கேணி ஸ்ரீவானமாமலை மடத்தில் கூடிய மேற்படி ஸங்கத்தின் வருஷாந்திரக்கூட்டத்தில் புதியவர்ஷத்திற்குக் கீழ்க்கண்டபடி நிர்வாஹிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் அட்வேகேட், (மாஜிதேவஸ்தான போர்டு கமிஷனர்) உபதலைவர்கள் ஸ்ரீமான்கள் ராவ்ஸாஹிப் பி. வி. ரங்கஸாமி அய்யங்கார் அவர்கள் மாஜி எக்ஸைஸ் கமிஷனர் ஸ்ரீமான் அட்வோகேட் வி. நரஸிம்மாசாரியார். கார்யதர்சிகள் ஸ்ரீமான்கள் லக்ஷ்மிநரஸிம்மாசாரியார், ப. ரே. திருமலை அய்யங்கார்.

இந்தியா சட்டஸபையிலிருந்து ஸத்யமூர்த்தி விலகினர்.

இந்திய சட்டஸபையில் சென்னை நகர பிரதிநிதியாக இருந்துவரும் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி சென்னை அஸெம்பளியில் ஸர்வகலாசாலைத் தொகுதியில் அபேக்ஷகராகநிற்க காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார் உத்திரவு கொடுத்து விட்டார்கள். ஆதலால் அவர் தமது இந்தியாசட்டஸபை மெம்பர் பதவியை ராஜிநாமா செய்துவிடுவார்.

திருவிரிஞ்சிபுர மஹிமை.

(முன் தொடர்ச்சி)

தைமாதத்தில் பூர்ணமியில் புனர்வஸுவில் பிரதக்ஷணஞ் செய்பவர்கள் அசுவமேதயாகம் செய்த பயனையடைவார்கள்.

இவ்விதம் ஸுகண்டம் என்ற கணபன் தனக்கு நேர்ந்த காரஸுர ஜன்மாவை, சிவப்பிரதிஷ்டை பிரதக்ஷணம் இவைகளின் மகிமையால் நீக்கிக்கொண்டு மறுபடியும் கைலாஸத்தில் கணத்தலைவனாய், பகவத்பக்தி நிரதனாய் விளங்கினன்.

10 தேஜோலிங்கத்தைப்பற்றி கேட்டது. ரிஷிகள் கேட்கின்றனர்.

சிவபெருமானுக்கு மிக்க அபிமானபாத்திரரும் சிருஷ்டிகர்த்தாவுமான சதுர்முகன் மானிடனாகப் பிறக்கும்படி ஏற்பட்ட காரணம் என்ன? என்று வசிஷ்டர் சொல்லுகிறார்.

முன்னொருகாலத்தில் ஸத்யலோகத்திலுள்ள கமலாஸனன் பிரமனை ஸனகர் வணக்கத்துடன் இவ்வாறு கேட்கிறார். வேதவேத்தியனான பகவானே? உமது அனுக்கிரகத்தால் உனக்கு ஸகலமான அறிவும் உண்டாயிற்று. ஆயினும் இன்னும் சிலவற்றைக் கேட்கிறேன் அநுக்கிரகிக்கவேண்டும்; உலகில் மனுஷ்யாளாலும் சித்தராலும், தேவதைகளாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட அநேக சிவக்ஷேத்திரங்களிருக்கின்றன. அவைகளில் எந்த லிங்கத்தின் மகிமை வர்ணிக்க இயலாததோ ஸ்வயம்பூவானதோ தேஜோமயமோ. அவ்விதமான ஜம்பூபலத்திலுள்ள மகாலிங்கத்தை சொல்லவேண்டும் என்று—இவ்வாறு கேட்டதும் பிரமன் களிகூர்ந்து கூறத்தொடங்கினர்.

11 தனக்கும் விஷ்ணுவிக்கும் ஏற்பட்ட

சுருதிகளில் 'விச்வாதிகோ ருத்ரோ மஹரிஷி:' என்று சொல்லியபடி விச்வாதிகனும் கருணை நிறைந்தவனும், அருணாசலேசன் என்ற பெயர்வாய்ந்தவனுமான பரமேச்வர பரமேச்வரனிடமிருந்து நானும் விஷ்ணுவும் உண்டானோம். ஒரு சமயத்தில் அஹங்காரங்கொண்ட நானும் நாராயணனும், அருவை மேலிட்டு ஒருவருக்கொருவர் சண்டை செய்தோம்.

வெகுகாலம் சண்டையிட்டும் நாங்கள் ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. ஒருவருக்கொருவர் உத்ஸாஹத்துடன் அதிபயங்கரமாக சண்டையிடுவதைக்கண்டு, கருணாமூர்த்தியான பரமேச்வரன், தன்னாலேயே சிருஷ்டிக்கப்பட்ட அஹங்காரத்தையடைந்து, உலகத்தையேயழிக்கும் யுகத்தை இவர்கள் செய்கிறார்கள். இவர்களைத் தடுக்காமற்போனால் உலகத்திற்கே பெரிய தீங்கு ஏற்படும் என்று யோசித்து ஒரே அக்கினிஸ்தம்பமாய் ஆத்யந்தமில்லாமல் முன்பு தோன்றினர். பிரளய காலாக்கினிபோல் எல்லா உலகங்களையும் எரிக்கின்றதும், திசைகோடிகளிலும் வியாபித்ததுமான அந்த ஜ்யோதிஸ்ஸைக்கண்டதும், எங்களுக்குடைய எண்ணம் தளர்ந்தது. அப்போது ஆகாயவாணி ஒன்று கேட்டது; ஓ சிறுவர்களே! எதற்காக வீணாக்ச் சண்டையிடுகிறீர்கள்? உங்களுடைய பலதாரதம்மியத்தை சிவபெருமானுடையது. உங்களுக்குள், தலையையோ பாதத்தையோ, எவர் காண்கிறாரோ; அவரே உங்களுக்குள் பலாதிகர் ஆவீர் என்று,

அந்த ஆகாயவாணியைக் கேட்டதும், விஷ்ணு வராஹவேஷமெடுத்துக்கொண்டு அதன் மூலபாகத்தைக்கண்டுபிடிக்க பூமிபாகத்தைத்தோண்டினர். நானும் ஹம்ஸவேஷம் எடுத்துக்கொண்டு வேகமாய், மேல்பாகத்தைக் காண்பதற்கு ஆகாயத்தில் பறந்தேன். பூமியைத் தோண்டிச் செல்கின்ற விஷ்ணு, மூலபாகத்தைக்காணாமல் பற்களுடைந்து, தளர்ந்து, கஷ்டப்பட்டு, தாகமடைந்து உயரக்கிளம்பசக்தியற்றவரானர். நானும் வெகுவர்ஷங்கள் ஆகாயத்தில் பறந்துகொண்டு, கண்கலங்கி, இரக்கைகள் தளர்ந்து, மேலேமேலே தேஜோமண்டலத்தை ஒரேவிதமாகவே கண்டேனேயொழிய தலைப்பாகத்தைக் காணவேயில்லை. அப்போது அங்கேயுள்ள தேஜோரூபிகளான சித்தர்கள் என்னைப்பார்த்து, இந்த அன்பைகூறி மூடத்தன்மையுள்ளது முடியாத காரியத்தில் யத்தனிக்கிறது. சரீரத்திற்குத் தளர்ச்சி ஏற்பட்டபோதிலும் இதற்கு அஹங்காரம் தொலையவில்லை; என்று சொல்லிற்று.

அப்போது ஹம்ஸமானது, பகவானை ஸ்தோத்திரம் பண்ணத்தொடங்கிற்று. பகவானே? தாங்கள் ஜ்யோதிஸ் ஸ்வரூபமாயுள்ளவர். ஸ்வப்பிரகாசர் ஸகலத்திற்கும் அதிஷ்டானமாயுள்ளவர். வேதாந்தத்தாலேயே அறியக்கூடியவர். மற்றப்பிரமாணங்கள் உம்மைத்தெரிவிக்க சக்தியற்றவை. அளவுகடந்த மேன்மையையுடைய தங்களை அறிவில்லாத்தன்மையால் காணமுயன்றேன். கருணைக்கடலே? சரணாவிந்தங்களில் விழுகிறேன். க்ஞானசந்திரகலையை தரித்த் தங்களது சிரஸ்ஸைக் காண்பிக்கவேண்டும் என்று. அப்போது பகவான் உமாஸஹாயன் ப்ரஸன்னனாய்ச் சொன்னதாவது.

(தொடரும்)

ஹிந்து மஹா[ஸ]ஸபைக் கூட்டம்.

ஸிந்துவில் பரமா[ன]ந்தர் பிரஸங்கம்.

காங்கிரஸ் மீது புகார்.

ஸிந்து மாகா[ண] ஹிந்துஸபைக்கூட்டம் [...]கூரில் ஸ்ரீமான் பாய் பரமானந்தரின் த[லைமை]யில் 31உயன்று நடைபெற்றது. பரமா[னந்தர்] தமது பிரஸங்கத்தில் ஹிந்து ஸபை[...]தான் ஹிந்து ஸமூஹத்தின் உண்மை[...] க்ஷேமத்திற்குப் பாடுபட்டு வருவதாயும், காங்கிரஸானது அப்படியில்லையென்றும் தற்காலத் தலைவரான ஸ்ரீமான் [...] இந்தியாவின் தற்காலத் தேவைக்கு அவசியமான, அநுபவஸாத்யமான, அரசியல் [...]ட்டமொன்றையும் சொல்லாமல் வீண் மனக்கோட்டை கட்டிக்கொண்டு ஆகாயத்திலேயே ஸஞ்சரித்துவருகிறாரென்றும் இதனல் ஹிந்து ஸமூஹத்திற்கு எவ்வித நன்மையும் விளையாதென்றும் குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டிற்குக் காங்கிரஸ் தலைவர்கள் வருகை.

தமிழ்நாட்டின் எலெக்ஷன் பிரச[...]ராககாரணமாக ஸ்ரீமான்கள் புலாபாய் தேசாய் [...] பாபு ராஜேந்திரபிரஸாத், ஸ்ரீமதி ஸரோஜனி [...]ரி முதலியவர்கள் அடுத்தவாரமுதல் சுற்றுப்பிரயாணம் செய்ய வருவார்களென்று தெரிகிறது. தேதி விவரம் பிறகு வெளிவருமாம்.

குறைந்த சிலவு!

டாக்டர், P. ராமாநுஜம் [...]

"கட்டிபவ்[...]பம்" ஒன்றே குழந்தைக[...]

கட்டிகளை [...] மிக்க விரைவில் குணப்ப[...]

என்பதற்கு அநேக நற்சாக்ஷிகள் [...]

ஒரு மாதத்திய மருந்தின் விலை ரூ 4 தான்]

கும்பகோணம் சித்தர் பார்மஸி. பா[...]

காந்திஜியின் திருவாங்கூர்யாத்திரை,

திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தை பஹுமானிப்பதற்காக ஸ்ரீமான் காந்தியை அவிடம் வரும்படி அழைத்திருந்ததும், அவர் அவிடம் புறப்படத் தயாராக இருந்ததும் யாவரும் அறிந்தது. ஆனல் திடீரென்று அவருடைய யாத்திரை ரத்து செய்யப்பட்டதாகத் தெரிந்தது. பிறகு அதுமாறி அவர் திருவாங்கூருக்குப் போய்விட்டார். பிரயாணத்தை அவர் முதலில் நிறுத்திய காரணம் யாதாயிருக்கலாம்? காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்றிருந்த தமிழ் நாட்டு பிரதிநிதிகளுடன் ஸ்ரீமான் காந்தி தமது திருவாங்கூர் யாத்திரையைப்பற்றிப் பேசியதாகவும் அதன் பலனாகவே இந்த யாத்திரை முதலில் ரத்துசெய்யப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. உண்மையான காரணம் சீக்கிரத்தில் வெளியாகலாம். காந்ஜியின் இந்த யாத்திரையால் தென்னிந்தியாவில் புதிய கிளர்ச்சியுண்டாகி வரப்போகும் எலெக்ஷனில் காங்கிரஸுக்கு ஏதாவது சிரமம்நேரலாமென்று சிலர் அபிப்பிராயப்பட்டதாயும் தெரிகிறது.

மேலும் திருவாங்கூரின் ஸ்திதியும் காந்திஜிக்குத் திருப்தியளிக்கக் கூடிய நிலைமையில் இல்லையென்று தெரிகிறது. அநேக பிராம்மணர்களும், நாயர்களும் மற்றவர்களும் அங்கு ஆலயங்களுக்குப் போவதை நிறுத்தியிருக்கிறார்களாம். கோவில் சிப்பந்திகளான பிராம்மணர்களும், ஸர்க்கார் உத்திரவுக்குக் கீழ் படிந்து தினமும் கோவிலுக்குப்போய் தீரவேண்டுமென்று உத்திரவு போடப்பட்டிருக்கிறதாம். ஸமீபத்தில் சுசீந்திரம் என்ற பெரி[...]யில் நடந்த உத்ஸவத்திற்கு [...]மாகப் போகவில்லை [...]சம் அன்ன [...] நின்று [...]ய க்ஷேத்திர [...] ஸேவை [...] ஜாதி ஒத்திற்கும் வெகுபேர் வாரா[...]யாம் [...]தால் அதுதாழ்ந்த ஜாதி[...]முககப்பட்டதாம். கொச்[...] [...]வார் [...]தப்பட்டவாயில் [...] லெளங்க [...] [...]விட்டன. [...] அவ்விடம் சென்[...] த்திவிட்டால் என்[...] சமும் இருக்கலாம்.

தவிரவும் அங்[...] முயற்சியால் இங்[...] ஒப்புக்கொள்ள [...] ஜிக்கு தம்முடை[...] லாமல் போய்[...] ட்டிப் பத்திரி[...] இந்த நிலைமையில். விரும்பாததில் ஆ[...]

ஆயினும் பிரயாண[...] மூலம் அங்குள்ள ஜன[...] பட்டுவிடுமென்ற பய[...] காந்திஜியை அவ்விடம் [...] டதுபோலும்?

[...]on [...] and [...] long [...] 3. [...]ses th[...] Hindu [...] of 3rd [...] Sri Go[...] Vallabh[...] Travanc[...] mation. [This w[...] issue.] 4. That [...] considered [...] (Contin[...] [...]ement ma[...] ways an[...] unles[...]

ஸ்ரீ ஜயதேவர் சரித்ரம்.

S. ராம்ச்சந்திர ஹரி:

(24 12 36 தொடர்ச்சி)

ஜயதேவர் அரசன் சொல்லியவைகளைக் கேட்டும் தனக்கேற்பட்ட ஸ்வப்னத்தைச் சிந்தித்தும் அரசன் முதலியவர்களைப் பார்த்து "நீங்களெல்லோரும் மிகவும் தன்யர்கள். ஏனெனில் நீங்கள் ஸ்வப்னத்தில் பாகீரதியை தரிசித்தீர்களன்றோ; யாவருக்கும் மிகவும் துர்லபமான பாகீரதீ தர்சனம் உங்களுக்குக் கிடைத்தது மிகவும் ஆச்சரியமே. ஆகையால் நீங்கள் பாக்யவான்களென்பதில் ஸந்தேகமேயில்லை. உலகத்தில் யாவராலும் பூஜிக்கத்தக்கவளும் ஜகன் மாதாவும் ஜகதுத்தாரகாரணியுமான பாகீரதி கிணற்றில் வரப்போவது நிச்சயமே" என்றார்.

இவ்வாறு ஜயதேவர் சொன்னதை அரசன் கேட்டு தன் மந்திரி புரோஹிதர்களுடனும் ஸ்நானத்துக்குவேண்டிய திரவியங்களுடனும் ஸபத்னீகனாய் காலையில் அங்கு வந்துசேர்ந்தனர். ஜயதேவரும் பத்மாவதியுடன் கங்கையைப் பூஜிப்பதற்காக வேண்டிய பூஜாத்ரவ்யங்களுடன் கிணற்றடியில் வந்து சேர்ந்தார். அப்போது ஜயதேவர் ஸ்நான காலத்தில் சொல்லத்தக்க வேத மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டு ஸ்நானத்திற்கு ஆரம்பிக்குங்கால் கங்கையானவள் அந்த ஜலத்தில் ஆவிர்ப்பவித்தாள். அதற்கடையாளமாகப் பால்போன்ற நுரையுடன் ஜலமானது அலைமோதிப் பொங்கிற்று. கங்கை முன் சொல்லியதுபோல ஜலத்தில் தாமரையும் தோன்றிற்று. அங்கு சுற்றியிருந்த மணல்கூட கங்கைக்கரையிலுள்ள மணல்போலவே ஆய்விட்டது. அரசன், ஜயதேவர் மற்றுமுள்ள ஜனங்கள் யாவரும் கங்கா தேவியை ஸ்தோத்ரம் செய்தார்கள். ஜயதேவர் தன் நேத்ரங்களில் ஆனந்த பாஷ்பம் பெருக கங்கையில் ஸ்நானம் செய்து தாமரை முதலிய மலர்களால் கங்கையைப் பூஜித்தார்.

இவ்விதமே ஏழுநாட்கள் ஸ்நான பூஜாதிகளைச்செய்து ஜயதேவர் திவ்ய தேஹத்தையடைந்து உலகத்தில் பகவத் பக்தியை நிலைநிறுத்தி பகவச்சரணத்தையடைந்தார். மற்றவர்களும் அக் கங்கையில் நீராடி அவர்கள் இஷ்ட சித்திகளையடைந்தனர். இஜ் ஜயதேவரது சரித்ரத்தை படிப்பவர் கேட்பவர் யாவருக்கும் பகவச் சரணாவிந்தத்தில் த்ருடமான பக்தியை யளித்து பகவான் அவர்களை அநுக்ரஹிப்பாராக.

ஜயதேவரை வேதவ்யாஸாவதாரமென்றும், சுகாது அவதாரமென்றும் பலவிதம் சொல்வதுண்டு. ப்ருந்தாவனேச்வரியான ஸ்ரீ ராதையினுடைய எட்டு ஸகிகளில் ஒருவளான சம்பகலதை என்பவளே பத்மாவதியாக வந்து ஜயதேவருக்கு நாயகியாகி அவர் கண்ணனது இராஸ லீலையை கீதகோவிந்த ரூபமாய் வர்ணிக்கக் காரண பூதையாயிருந்தாள் என்றும் சில மஹான்களின் கருத்து. எப்படியாயினும் அடியார் மஹிமை அளவிடற்பாலது.

சென்னை.

ஸநாதந ஆர்யதர்ம வைதிக பிராம்மண ஸமாஜம்.

ஸநாதன ஆர்யதர்ம வைதிக ப்ராம்மண ஸமாஜத்தின் நோக்கம் என்னவென்றால் இந்த ஸமாஜத்தை சென்னை ராஜதானிக்காக சென்னை ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தில் 5–11–36ல் ஷை தேவஸ்தானம் தர்மகர்த்தா ஆதரவில் மதுரூஸ் ஸ்ரீமான் வி. விச்வநாதசாஸ்திரியள் (வக்கீல்) அக்கிராஸனத்தின் கீழாக அனேகம் கனபாடிகளும் அனேகம் உபாத்தியாயர்களும் வைதிகவிருத்தியையுடைய வித்வான்களும், புரோகிதர்களும், நான்கு வர்ணாச்ரமத்தாரும் ஒப்புக்கொள்ளப்பட்டு ஷை தேவாலயம் தர்மத்தோடு தர்மமாக இந்த ஸமாஜத்தையும் பரிபாலிப்பதாக ஸ்ரீமான் தர்மகர்த்தா அவர்கள் ஆதரவில் மாயவரம் கல்லூரி எஸ். கிருஷ்ணசாஸ்திரியள் இந்த ஸமாஜத்தை ஸ்தாபித்து இருக்கிறார்.

நைஸாம் ராஜதானிக்காக ஸகிந்திராபாத்து ஸ்ரீகன்னிகாபரமேச்வரிதேவாலயத்தில் ஸ்தாபிக்க பிரசாரம் செய்துகொண்டு ஷை ஸமாஜ ஸ்தாபகர் ஸகிந்திராபாத்துக்கு வந்து இருக்கிறார்.

இந்த ஸமாஜத்தின் நோக்கத்தை அனுஸரிப்பதே தேசக்ஷேமம். இந்த ஸமாஜத்தின் நோக்கத்தை யனுஷ்டிப்பதால்தான் ஸநாதன தர்மம் விருத்தியடைந்து அதர்மம் நசிக்கும். இந்த ஸமாஜ ஸம்பத்தமாய் நாளது மார்க்கசிர அமாவாஸை ஸகிந்திராபாத்தில் உபன்யாஸம் நடைபெற்று ஸமாஜம் ஸ்தாபனமாகும்.

உபன்யாஸம் நடைபெற்றதும் ஸ்தாபன விஷயமும் எல்லோரும் நடந்துகொள்ளவேண்டியதும் பிறகு பேபருக்கு வரும்.

ஸநாதன ஆர்யதர்ம வைதிகப்ராம்ஹண, ஸமாஜ ஸ்தாபகர்.

எஸ். கிருஷ்ணசாஸ்திரியள்

மாயவரம்.

திருச்சி.

ஸ்ரீமத் பாகவதப்ரவசன ஸமாபனம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அனுக்ரஹத்தை முன்னிட்டு திருச்சி மலைக்கோட்டை வடக்குவீதி 56-ம் நம்பர் வீட்டில் நாளது தாது-ஹூ மார்கழி-மீ 1உ முதல் பிரதினமும் இரவு 8மணி முதல் 9½மணி வரையில் திருச்சி நாஷனல் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிட் அத்தாழநல்லூர் பிர்ம்மஸ்ரீ வேதமூர்த்தி ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸகலச்ரேய: பிரதமான ஸ்ரீமத் பாகவதம் முதல்ஸ்கந்தம் முதல் ஸங்கரஹித்து உபன்யஸிக்கப்பட்டு வருவதில் நாளது தாது-ஹூ தை-மீ 4உ (17—1—37) ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணிக்கு ஸ்ரீமத் பாகவத உபன்யாஸ ஸமாபன மகோத்ஸவத்தை நடத்துவதாக பக்தர்களால் நிச்சயித்திருப்பதால் பக்தர்களனைவரும் வந்து ச்ரவணாநந்தமடைந்து ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் அனுக்ரஹத்தால் ஸகலச்ரேயஸ்ஸையும் அடைய வேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஒரு நிருபர்.

நாகூர்.

ஸ்ரீ ராதாகல்யாணம்.

இப்பாதகண்டத்திற்கு திலகம்போல் விளங்கிவருகிற நாகப்பட்டிணத்திற்கு சமீபத்திலுள்ள புந்நாகவனம் என்னும் திவ்விய க்ஷேத்திரமாகிய நாகூரில் பெருமாள்கோவில் மேலவீதி மேல அக்கிரகாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஸாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா ராதாகல்யாண மகோத்ஸவத்தை பகவத் கிருபையை முன்னிட்டு தாது நாமஸம்வத்ஸரம் தனுர்-மீ 29உ முதல் மகரமீ 6உ வரையில் நடத்துவதாய் நிச்சயித்திருக்கின்றது.

வீராசாமி அய்யன்.

வேதாந்த தீபிகையில் வேதவிசாரம்.

ஒரு ஸந்தேஹம்.

சென்ற கார்த்திகை-மீ வெளியான வேதாந்ததீபிகை ஸஞ்சிகையில் 'வேதவைபவ விமர்சமும் ப்ரஹ்மவிசாராதிகார நிர்ணயமும்' என்ற வ்யாஸம் வெளிவந்திருக்கிறது. அதில்

ब्राह्मणेन निष्कारणेनषडंगोवेदो ध्येयो ज्ञेयश्च

என்ற விதிப்படி அர்த்தக்ஞானம் நித்யமென்றும், அதில்லாமல் கர்மாவை அநுஷ்டிப்பதால் பலஸித்தி இல்லை என்றும், வேதபாஷ்யகாரரான ஸாயணரின் அபிப்ராயம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸாயணர் அநுஷ்டானகாலத்திலும், அதற்கு வெளிப்பட்ட காலத்திலும் அர்த்தக் ஞானம் நித்யமென்று அபிப்ராயப்படுகிறாரா? அல்லது அநுஷ்டானத்திற்கு வெளிப்பட்ட காலத்தில்தான் அது நித்யமென்று அபிப்ராயப்படுகிறாரா? எல்லாகாலத்திலும் அர்த்தக்ஞாநம் நித்யம் என்பதே ஸாயணரின் அபிப்ராயமானல் அர்த்தக்ஞானமில்லாமல் செய்யப்படும் கர்மாக்கள் வ்யார்த்தம் என்று ஏற்படுமே? ஸ்ரீ சங்கராசாரியாள்.

तन्निर्धारणानियमाधिकरण த்திலும்

तेनोभौ कुरुतो यश्चैतदेवंवेद यश्चनवेद

என்பது முதலிய வாக்யங்களின் வ்யாக்யானத்திலும், அர்த்தக்ஞாநமிருந்தால் பலாதிசயமுண்டென்றும் த்ரவ்யம் முதலியவற்றின் க்ஞானமிருந்தும் அர்த்தக்ஞானமில்லாவிடில் விதியில் சொல்லப்பட்ட பலமுண்டு என்று ஸித்தாந்தம் செய்திருக்க, ஸாயணரின் அபிப்ராயம் அதற்கு விருத்தமாக இருக்குமா? அநுஷ்டான காலத்தில் அர்த்தக்ஞானம் அநித்யமென்றால், ரிஷி, சந்தஸ், தேவதை முதலியவற்றின் க்ஞானம் அவச்யமா, இல்லையா?

அநுஷ்டான காலத்திற்கு வெளிப்பட்ட காலத்தில் அர்த்தக்ஞானம் நித்யமானல்

जपादिना स्वरूपेणापि तत्सा धनत्वाच्च

என்று "அர்த்தக்ஞாநமில்லாமல் அத்யயநம் செய்யப்பட்ட வேதமும் நான்குவித புருஷார்த்தங்களுக்கும் ஸாதநம் என்ற ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸித்தாந்தம் விரோதிக்கும்.

यंयंक्रतुमधीते तेन तेनास्येष्टंभवति

என்ற விடத்தில் அங்கங்களுடன் கூடிய யாகத்தைத் தெரிவிக்கும் வேத பாகத்தை அத்யயநம் செய்பவனுக்கு, யாகாநுஷ்டானத்தால் வரும் பலன் உண்டு என்று வ்யாக்யாநம் செய்யும் ஸாயணருடைய அபிப்ராயமும் அர்த்தக்ஞானம் இல்லாமல் செய்யப்படும் வேதாத்யயநம் வீண்தானே?

स्वध्यायोध्येतव्य:

என்ற விடத்தில் ஸ்வாத்யாய சப்தத்திற்கும் அத்யயந சப்தத்திற்கும் அர்த்தம் என்ன? கீழ் வெளியிடப்பட்ட ஸம்சயங்களுக்கு ஸாயணருடையவும் மற்ற சாஸ்திர காரர்களுடையவும் ஸித்தாந்தங்களைத் தழுவி விசதமாய் "ஆர்யதர்மம்" பத்ரிகை மூலம் ஸமாதானம் தெரிவிக்கும்படி வித்வான்களை பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ ராஜகோபால தாத தாஸ:

ஜெயில் சென்றவர் தடை நீக்கம்.

இரண்டு வருஷங்களுக்குமேல் சிறை தண்டனை விதிக்கப் பட்டவர்கள் சட்ட ஸபைக்கு நிற்கக் கூடாதென்ற தடையை மதுரை ஸ்ரீமான் சுப்புராமன், மட்டப்பாரை வெங்கிடராமய்யர் முதலிய சிலருடைய விஷயத்தில் ஸர்கார் நீக்கிவிட்டார்கள். ஸ்ரீமான் மட்டப்பாரைவெங்கிடராமய்யர் கனம், பி.டி. ராஜனுக்குப் போட்டியாக நிறுத்தப்பட்டிருக்கிறார்.

215768

31

மாரசலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

மாணிக்கவாசகர் தினக் கொண்டாட்டம்.

கும்பகோணம்.

ஏற்கனவே நம் பத்ரிகையில் வெளியிட்டப்படி கும்பகோணம் கோபால்ராவ் லைபரெரி ஹாலில் மாணிக்கவாசகர் தினம் மிகவிமரிசையாய் நடந்தது. தமிழ் பண்டிதர் முத்துசாமி அய்யரும் இன்னும் தமிழ் வித்வான்கள் மாணிக்கவாசகர் சரித்திரத்தைப்பற்றியும் மஹிமையைப்பற்றியும் விரிவாய் பிரசங்கித்தினர். கடலங்குடித்தெரு ரிடையர்டு இஞ்ஜினீர் ஸ்வாமிநாதசாஸ்திரிகள் குமாரத்தி K.S. மங்களம், வக்கீல் கண்ணனய்யங்கார் வீட்டு சிறு குழந்தை, திருவாசகம் பத்யங்கள் இனிமையாய் பாடினுர்கள். ரிடையர்டு ஹெட்மாஸ்டர் R. சுவாமிநாதய்யர் அவர்கள் தலைமை வகித்தார். ஸ்வாமிநாதசாஸ்திரிகள் முடிவுரையும் வந்தனோபசாரமும் கூறி ஸபை இரவு 8-மணிக்கு கலைந்தது. எல்லோரும் இப்பேர்ப்பட்ட திவ்யமான அடிக்கடி நடந்தால் ஹிந்[illegible]ளில் ஸஹோதர சிநேகமும் தெய்வபக்தியும் வெகுசீக்கிரம் மேன்மேல் ஓங்கி வளரும் என்று புகழ்ந்துகொண்டு சென்றனர். இப்படி அநேக தினக்கொண்டாட்டங்கள் வெகு சிறந்த பக்தியுடன் இவ்வூரில் நடத்திவரும் கடலங்குடித்தெரு ஸ்வாமிநாதசாஸ்திரிகளுக்கு நம்மூரார் எல்லாரும் நம்முடைய பாராட்டை அன்புடன் அளிக்கிறோம்.

ஒரு நிருபர்.

வெளியூர்ச் செய்திகள்.

கல்கத்தா.

கல்கத்தா தென் இந்தியா ஸங்கமஹா மண்டபத்தில் 3–1–37ல் ஸநாதனஸத்தர்ம வேதாந்த உபந்யாஸம் நடைபெற்றபொழுது காரியதர்சியின் கோரிக்கைப்படி ஸ்ரீவாத்ஸ்யநாச்சியார்கோயில் லக்ஷ்மீமந்திரம் ஸ்ரீ உபயவேதாந்தாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி அபிநவஸரஸ்வதீ வாங்முக ரத்னகோச: குருவர்ய: வித்வத்சிரோமணி நடாதூர் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அவர்கள் அக்கிராஸநாதிபத்யம் வஹித்து அனைவருமானந்திக்குமாறு வேதாந்தவிஷயவாக்கியார்த்தங்களையும் பகவத் கீதா தாத்பர்யங்களையும் விளக்கி உபந்யஸித்தது ம் ஸத்ஸம்பிரதாயம் தழைத்தோங்கி விளங்கும்படி செய்யும் முயற்சியும் திருப்தியை விளைவிக்கிறது.

ஒரு நிருபர்

காசி.

பனாரிஸ் உபசாரவிருந்து.

காசி ஜாய்ண்டு மாஜிஸ்ட்ரேட்டாயிருந்துவரும் ஸ்ரீமான் ராமபத்ரசாரியாரின் பிதாவான ஸர் டி. விஜயராகவாச்சாரியர் சமீபத்தில் இவ்விடம் வந்திருக்கையில் காசியுனிவர்ஸிடியில் ஸ்ரீமான் ஆச்சாரியாருக்கு பண்டித மாளவியா குமாரர் ஸ்ரீமான் ராமகாந்த மாளவியாவால் உபசாரங்கள் செய்யப்பட்டன. அன்று ஸர் டி. வி. யால் ஓர் சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது.

சங்கீதகச்சேரி.

திருவிடைமருதூர் மாஸ்டர் மஹாலிங்கம் என்ற 10வயதுள்ள பையனால் காசி யுனிவர்ஸிடியிலும் மற்றும் பல முக்யவிடங்களிலும் வீணைக்கச்சேரி நடத்தப்பட்டன. தென்னிந்திய சங்கீதத்தின் அருமையையும் பையனின் சாமர்த்தியத்தையும் யாவரும் மிகவும் பாராட்டியதுடன் சில முக்யஸ்தர்களால் வீணாவித்வான் மஹாலிங்கத்துக்கு மெடல்களும் கொடுக்கப்பட்டன.

காசிமாநகர் நிலை.

காசிக்கு பிரதிதினமும் யாத்ரீகர்கள் வந்து கொண்டேயிருக்கிறார்கள். பக்தர்கள் காலை கங்கையில் நீராடி விஸ்வநாதருக்கு தாங்களே அபிஷேகம் செய்து மாலை சமர்ப்பித்து கற்பூரஹாரத்தி காட்டி நைவேத்தியம் செய்து வரும் மாதிரி இங்கு ஓர் விசேஷமாகும். டிசம்பரிலிருந்து மார்ச்சு வரை பலமான குளிராகும். கங்கையில் அக்கரையிலுள்ள ராம்நகர் என்ற விடத்தில் காசிமகாராஜா அரண்மனையிருந்து வருகிறது.

ந. வி. நி,

மேல்மங்கலம்.

வைதிக உபன்யாசங்கள்.

கிராமப் பொதுஜனங்களின் ஆதரவில் மார்கழிமீ 17வ முதல் 21வ வரை (டிசம்பர் 31வ முதல் ஜனவரி 4வ வரை) பிரதிதினம் மாலை $3\frac{1}{2}$மணி முதல் $5\frac{1}{2}$மணிவரை தர்மப்ரசாரகரான மதுரை பிர்ம்மஸ்ரீ எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் முறையே ஆசாரம், தர்மம், ஸந்தியோபாஸனம், சிவானந்தலஹரி, அஷ்டமிப்ரதக்ஷிணமஹிமை முதலிய அரிய விஷயங்களை சொற்பொழிவாற்றினார்கள். இவ்வைந்து தினங்களிலும் ஜனங்கள் ஏராளமாக விஜயஞ் செய்திருந்தனர். புராணமூலமாகவும் கேட்போருள்ளம் கரையும் வண்ணம் இனியதொனியில் உபன்யாசாமுதவெள்ளத்தை ஐந்துதினங்களிலும் அள்ளித்தெளித்தார்கள். அன்று பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளுக்கு வேதாசீர்வாத தாம்பூலம் வழங்கப்பட்டது. கிராமஜனங்கள் மார்கழிமீ 22வ அஷ்டமிதினம் பிருஹன்நாயகி சமேத ஸ்ரீமாயாபாண்டீஸ்வரருக்கு மஹான்யாச புரஸ்ஸரமாக அபிஷேக அலங்கார தீபாராதனாதி வைபவங்களும், செய்துபிறகுஸ்வாமியைஎழுந்தருள் செய்தார்கள். கிராமஜனங்கள் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் தர்சனம் செய்தார்கள். ஸ்வாமியுடன் வேதப்ராம்மணர்கள் வேதகோஷத்துடன் கிராமத்தைச்சுற்றி கோவிலுக்குள்வந்து ப்ரசாத வினியோகத்துடன் மஹோத்ஸவம் பூர்த்தி அடைந்தது. கிராம ஜனங்கள் மேன்மேலும் சத்கார்யங்களில் ஈடுபட ஈஸ்வரன் அருள்புரிவாராக.

சிவரும கெணபதிகெனபாடிகள்.

சென்னை.

3–1–37 மாலை மேலைமாம்பலம் மகா-ா-ஸ்ரீ ஸ்ரீ வைத்யநாதய்யர் அவர்கள் வீட்டில் ஸ்ரீ கீதகோவிந்த பஜனை நடந்தேறியது. பிரம்மஸ்ரீ ஹரிஹரியும் சோமதேவசர்மா அவர்களும் தருவை பிர்ம்மஸ்ரீ லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகளவர்களும் ப்ரஸன்னமாகி அநுக்ரஹித்தனர்.

10—1—37 மாம்பலம் ஸ்ரீமான் சுந்தரய்யரவர்கள் கிருஹத்தில் ஸ்ரீ மாம்பலம் பஜனை கோஷ்டி அஷ்டபதி பஜனை திவ்யநாம ஸங்கீர்த்தநத்துடன் நடைபெற்றது. தநுர்மாஸத்தில் கிரிப்ரதக்ஷிணம் செய்த பஜனை கோஷ்டி அபிநவசுக பிரும்மஸ்ரீ லக்ஷ்மிநாராயண சாஸ்திரிகள் தலைமையில் ராதா கல்யாணம் நடைபெற்றது.

நமது நிருபர்.

வைதிக தர்ம சங்கம் தஞ்சாவூர்.

ஸமீபத்தில் மன்னார்குடியில் நடந்த வைதிக சங்க சம்மேளனத்தில் சங்க அங்கத்தினர் மந்தாரலோசனை சபை கூடி தர்ம பிரசாரஞ் செய்ய கமிட்டி நியமனம் செய்திருப்பதாயும் அதற்கு (1) திருகருகாவூர் T. L. சுப்பையர் (2) கும்பகோணம் ரிடையர்டு இஞ்ஜினீர் S. சுவாமிநாத சாஸ்திரிகள் (3) அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்ய ஸ்வாமிகள் (4) ஜகதீச்வர சாஸ்திரிகள், (5) T. H. S. உபாத்தியாயர் N. ராமருவ் ஆகிற ஐந்து பேர்களும் அங்கத்தினராக ஏற்படுத்தி வைதிக தர்ம பிரசாரம் காரியங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய ஸகல கார்யங்களையும் நடப்பிக்கும்படிக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது என்று அறிகிறோம்.

ஒரு நிருபர்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam. Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

33

[illegible]

21.1.1937

4 ஸ
22 3

215169

215169

35

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஹு தை-மீ 7உ 1937-ஹு ஜனவரி-மீ 21உ | வா 3

ஆர்யதர்மம்.

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானே ஜருக்கு [illegible]

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டருக்கு தண்டனை.

பெண்ணை மானபங்கப்படுத்த முயன்றதாக

திருநெல்வேலி பாளையங்கோட்டையில் ஸப்இன்ஸ்பெக்டாயிருந்த மகமது சுலைமான் என்றவர் ஒரு விச்வகர்ம வகுப்புப்பெண்ணை மானபங்கம் செய்ய முயற்சித்ததாக அவர் மீது நடத்தப்பட்ட வழக்கில் மாஜிஸ்ட்ரேட் அவருக்கு ரூ. 75 அபராதம் விதித்திருந்தார். இக்கேஸ் திருநெல்வேலி ஜில்லாகோர்ட்டாரா லும் விசாரிக்கப்பட்டு தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்த பெரியகுற்றத்திற்கு 75 ரூ. அபராதம் மட்டும் போதாது என்று ஜில்லாஜட்ஜ் அபிப்பிராயம் தெரிவித்தார்.

ஸ்திரீகளுக்கு வீட்டுவேலையே அவச்யம்.

ஸர். சிவஸ்வாமி அய்யரின் அபிப்பிராயம்.

சென்னை மைலாப்பூர் நாஷனல்பெண்பாட சாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தில் ஸ்ரீமான் ஸர். சிவஸ்வாமி அய்யர் தலைமை வகித்து தற்காலம் இந்திய ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றிப்பேசினார். நமது தேசத்தில் ஸ்திரீகள் தற்காலம் குடும்பத்தை எப்படி ஒழுங்காக நடத்தலாமென்பதையே முக்யமாக அறிந்துகொள்ளவேண்டியவர்களென்றும் குடும்பத்தை ஸரியாக நடத்தவேண்டியதைவிட ஸ்திரீகளுக்குச்சிறந்த வேறு தொழில் ஒன்றும் கிடையாதென்பதே தமது அபிப்ராயமென்றும் பெரும்பான்மையான பெற்றோர்களின் அபிப்பிராயமும் இதுதான் என்பதைத் தாம் நன்கு தெரிந்துகொண்டிருப்பதாயும் ஸர். அய்யர் அபிப்பிராயம் வெளியிட்டார்.

ஆஸ்திரியாவில் பொதுவுடமை.

ஸர்க்காரின் கடுமையான நடவடிக்கை.

[illegible] கக்ஷியை ஏற்படுத்த முயற்சி நடந்துவருகையில் அங்கு பொதுவுடமை வாதிகள் ரஹஸ்யமாக இவ்வியக்கத்தை வலுப்படுத்த முயற்சி செய்து வருகிறார்கள். இதை கவர்ன்மெண்டார் கண்டுபிடித்து பொதுவுடமையைத் தடுக்க பலமான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். அக்கக்ஷியைச்சேர்ந்த பிரபலஸ்தர்களில் 26பேர் வரையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பெய்ஸ்பூர் காங்கிரஸ்.

தபால் இலாகாவின் வருமானம்.

பெய்ஸ்பூரில் நடைபெற்ற காங்கிரஸுக்காக 1லக்ஷத்து 30ஆயிரம் ரூபாய் வஸூல் செய்யப்பட்டது. இதில் செலவுபோக 30 ஆயிரம் உபசாரணைக்கமிட்டியாருக்கு லாபம் கிடைத்ததாம். காங்கிரஸ் வாரத்தில் அங்கு வேலை செய்த தந்தி இலாகாவுக்கு 2ஆயிரமும் தபால் இலாகாவுக்கு 800 ரூபாயும் செலவுபோக மிச்சப்பட்டதாம். காங்கிரஸ் காலத்தில் 50லக்ஷம் வார்த்தைகள் தந்தியில் அடிக்கப்பட்டனவாம்.

சென்னை புதிய அஸெம்பிளி கூடும் தேதி.

பிப்பிரவரியில் எலெக்ஷன் முடிந்த பின் சென்னை புதிய அஸெம்பளியும் ராஜாங்க ஸபையும் ஏப்ரல்மீ 2உயன்று முதல்முதலாகக்கூடுமென்றும் அன்று மெம்பர்கள் ராஜ விச்வாஸ பிரமாணம் செய்தபின் தலைவர் தேர்தல் நடக்குமென்று தெரிகிறது.

இந்தியா சட்டஸபைத் தலைவர்

ஸ்ரீஸத்யமூர்த்தி ஆக்ட்செய்வார்.

ஸமீபக்கூட்டத்தில் இந்தியா சட்டஸபைத்தலைவரும், உபத்தலைவரும் இல்லாத ஸமயத்தில் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி சட்டஸபைத்தலைவர்பதவியை வகிக்க முடியுமாவென்று சட்டஸபைக்கார்யதர்சி கேட்டதற்கு ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி தலைவராக இருக்க ஸம்மதித்திருக்கிறாராம்.

பிரிடிஷ்கொடியை வணங்க மறுப்பு.

வங்காள மாணவர்களின் பிடிவாதம்.

கல்கத்தா ஸர்வகலாசாலை ஸ்தாபன தினமானது 30உயன்று நடக்கையில், கலாசாலை மாணவர்கள் பிரிடிஷ் கொடிக்கு வணக்கம் செய்து மரியாதை காட்டவேண்டுமென்று ஸர்வகலாசாலை அதிகாரிகள் உத்திரவிட்டனர். இதை எதிர்த்த 2மாணவர்களை கலாசாலை அதிகாரிகள் தண்டித்தனர். இதனால் கோபம் அடைந்த பெரும்பாலோரான மாணவர்கள் பெருங்கூட்டம் போட்டுக்கொண்டு மேற்படி தினத்தை பஹிஷ்கரிக்குமாறு ஒவ்வொரு காலேஜுகளிலும் புகுந்து கோஷம் செய்து வருகிறார்கள்.

மாணவர்கள் கட்டுப்பாடாக மேற்படி தினத்தை பஹிஷ்கரிப்பார்களென்று தெரிகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம் ஷேட் சன்ஸ் & Co.,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூக பஞ்சசதீ’

6. பரதந்த்ரா வயமனயா
பங்கஜ ஸப்ரம்ஹசாரிலோசனயா |
பரயா காஞ்சீபுரயா
பர்வதபர்யாய பீனகுசபரயா ||

காஞ்சீபுரயா — காஞ்சீபுரியிலிருப்பவளும், பர்வதபர்யாய பீன குசபரயா — பர்வதங்களின் உருவம்போல் பருத்ததான குசபாரங்களையுடையவளும், பங்கஜ ஸப்ரம்ஹசாரிலோசனயா — தாமரை புஷ்பங்களுக்கு ஸமமான கண்களையுடையவளுமான, அனயா பரயா இந்த பரதேவதையினால், வயம் — நாம், பரதந்த்ரா: — பரவசமாகி விட்டோம்.

7. ஐச்வர்யம் இந்துமௌளேர்
ஐகாத்ம்ய ப்ரக்ருதி காஞ்சிமத்யகதம் |
ஐந்தவ கிசோர சேகரம்
ஐதம்பர்யம் சகாஸ்தி நிகமானாம் ||

ஐகாத்ம்ய ப்ரக்ருதி - பரப்ரம்ஹத்தோடு அபேதமாயிருக்கும் ப்ரக்ருதி ரூபமானதும், காஞ்சிமத்யகதம் - காஞ்சீபுரியின் மத்தியிலிருப்பதும், ஐந்தவகிசோரசேகரம் - பாலசந்திரனை சிரோ பூஷணமாக உடையதுமான, இந்துமௌளே: ஐசுவர்யம் - சந்த்ரமௌளீச்வருடைய ஐச்வர்யமானது, நிகமானாம் ஐதம்பர்யம் - வேதங்களுக்கெல்லாம் பரம தாத்பர்யமாக, சகாஸ்தி - விளங்குகிறது.

1. ஸகல ப்ரபஞ்சமும் உண்டாவதற்குக் காரணமாயிருக்கும் வஸ்துவுக்கு ப்ரக்ருதி என்று பெயர். இதையே மூலப்ரக்ருதி என்றும் சொல்லப்படும். இதுவேதான் அம்பிகையின் ஸ்வரூபம். இது புருஷனெனப்படும் பரமசிவனுடன் அபேதமாயிருக்கிறதென்பது சாக்தர்களுடைய ஸித்தாந்தம். (ப்ரக்ருதியானது ஜடவஸ்து என்றும் புருஷனின்று வேறு பட்டதென்றும் ஸாங்க்யர்கள் சொல்வதை சாக்தர்கள் ஒப்புக்கொள்வதில்லை.)

2. பரமசிவனுக்கு இருப்பதுபோல் அம்பிகைக்கும் சிரஸில் சந்த்ரகலை உண்டு.

3. [illegible] ப்ரதிபாதிக்கப்படுவது

“ச்ருதிஸீமந்தஸிந்தூரீக்ருத பாதாப்ஜ தூளிகா |
ஸகலாகம ஸந்தோஹ சுக்தி ஸம்புட மௌக்திகா ||

என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்திலும்,

‘ச்ருதீனாம் மூர்த்தானோ தததி தவ யௌ சேகரதயா
மமாப்யேதௌ மாத: சிரஸி தயயா தேஹி சரணௌ |

என்று ‘ஸௌந்தர்யலஹரியிலும்’ வர்ணிக்கப்பட்டிருக்கிறது

4. அம்பிகையினால்தான் பரமசிவனுக்கு ஸகல ஐச்வர்யமும் ஏற்பட்டிருக்கிறது என்பது ‘சிவ: சக்த்யா யுக்தோ’ என்ற ஸௌந்தர்யலஹரி ச்லோகத்தில் சொல்லப்பட்டிருப்பதுடன்

‘அக்ஞாதஸம்பவம் அனுகலிதான்வவாயம்
பிக்ஷும் கபாலினம் அவாஸஸம் அத்விதீயம் |
பூர்வம் கரக்ரஹண மங்களதோ பவத்யா:
சம்பும் க ஏவ புபுதே கிரிராஜகன்யே ||’

என்பதாக ‘அம்பாஸ்துதி’யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது

8. ச்ரிதகம்பா ஸீமானம்
சிதிலித பரமசிவ தைர்ய மஹிமானம் |
கலயே பாடலிமானம்
கஞ்சன கஞ்சுகித புவன பூமானம் ||

ச்ரிதகம்பாஸீமானம் - கம்பாநதியின் கரையிலிருப்பதும், பரமசிவ தைர்ய - பரமசிவனுடைய தைர்யத்தை (மன உறுதியை), சிதிலித - நழுவச் செய்ததான (கைவிடும்படிச் செய்ததான) மஹிமானம் - மஹிமையோடுகூடியதும், கஞ்சுகிதபுவனபூமானம்-ஸகல புவனங்களையும் கஞ்சுகம்போல் தரித்திருப்பதும், பாடலிமானம் - வெண்சிவப்பு நிறத்தோடு கூடியதுமான, கஞ்சன - ஒரு வஸ்துவை (மூர்த்தியை) கலயே - த்யானிக்கிறேன்.

1. முன்பு மன்மதன் தன் மீது புஷ்பபாணத்தை ப்ரயோகம் செய்ய எத்தனித்தபோது அதற்கு இடங்கொடாமல் தன் நேத்திராக்னியினால் அவனை எரித்த பரமசிவனானவர் அம்பிகையின்ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு மனத்தளர்ச்சியடைந்து மோஹமடைந்ததை ‘சிதிலித பரமசிவ தைர்ய மஹிமானம்’ என்று இங்கு சொல்லப்பட்டது.

9, ஆத்ருத காஞ்சீ நிலயாம்
ஆத்யாம் ஆரூட யௌவனாடோபாம் |
ஆகமவதம்ஸ கலிகாம்
ஆனந்தாத்வைதகந்தலீம் வந்தே ||

ஆத்ருத காஞ்சீ நிலயாம் - காஞ்சீபுரியை வாஸஸ்தானமாக்க் கொண்டிருப்பவளும், ஆத்யாம் - ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ஆதியாய் இருப்பவளும், ஆரூட யௌவனாடோபாம்-யௌவனத்தின் ஆடம்பரத்தோடு நிறைந்தவளும், ஆகமவதம்ஸகலிகாம் - வேதங்களின் சிரோபாகத்திற்கு பூஷணமான மொக்குப்போலிருப்பவளும், ஆனந்தாத்வைதகந்தலீம் - ஆனந்தத்திற்கு ஒரே துளிர்போலிருப்பவளுமான (ஸ்ரீ காமாக்ஷியை) வந்தே - நமஸ்கரிக்கிறேன்.

1. அவதம்ஸமென்றால் சிரோபூஷணமென்று அர்த்தம். கலிகா என்றால் மொக்கு (மொட்டு) என்று அர்த்தம். கிரீடத்தில் மொக்கை அலங்காரமாக தரிப்பது வழக்கம். உதாஹரணமாக ‘முகுளித கரோத்தம்ஸ் மகுடா:’ என்றும் ‘கோத்ராதரபதி குலோத்தம்ஸகலிகே’ என்றும் ‘ஸௌந்தர்யலஹரி’ யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இங்கு அம்பிகையை ‘ஆகமவதம்ஸகலிகா’ என்பதினால் வேதங்களின் சிரோபாகமான உபநிஷத்துக்களுக்கு முடிவான தாத்பர்யமாக இருப்பது சொல்லப்பட்டது.

2. ‘அத்வைதானந்தகலீம்’ என்றும் சொல்லலாம். அத்வைதானந்தம் என்றால் ஜகத்தும் ப்ரம்ஹமும் ஒன்று என்பதான அறிவு ஏற்படும்போது உண்டாகும் ஆனந்தம் என்று அர்த்தம்.

10. துங்காபிராம குசபர
ச்ருங்காரிதம் ஆச்ரயாமி காஞ்சிகதம் |
கங்காதர பரதந்த்ரம்
ச்ருங்காராத்வைத தந்த்ர ஸித்தாந்தம் ||

துங்காபிராமகுசபர ச்ருங்காரிதம் - உன்னதமும் அழகுள்ளதுமான குசபாரத்தால் அலங்கரிக்கப்பட்டதும், காஞ்சிகதம்-காஞ்சீபுரியிலிருப்பதும், ச்ருங்காராத்வைத தந்த்ர ஸித்தாந்தம் - ச்ருங்காரமாகிற அத்வைத தந்த்ரத்தின் முடிவாயுமிருக்கும், கங்காதர பரதந்த்ரம் - சிவனுடைய பத்னியை, ஆச்ரயாமி — சரணமடைகிறேன்.

1. பாதந்த்ரமென்றால் பிறருக்கு வசப்பட்டிருப்பது என்று அர்த்தமாகையால் இங்கு (புருஷனுக்கு வசப்பட்டிரும்பதால்) பதிவ்ரதையைக் குறிக்கும். அம்பிகையினுடைய பாதிவ்ரத்யத்தைப் பற்றி மிகவும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

‘களத்ரம் வைதாத்ரம் கதி கதி பஜந்தே ந கவய:
ச்ரியோ தேவ்யா: கோ வா ந பவதி பதி: கைரபி தனை: |
[illegible]
குசாப்யாம் ஆஸங்க: குரவகதரோரப்யஸுலப: ||
(ஸௌந்தர்யலஹரி)

2. இந்த ஸ்தோத்ரத்திய எல்லா சதகங்களிலும் ச்ருங்கார சாஸ்த்ரத்தின் ஸித்தாந்தமாக அம்பிகை இருப்பதாக இங்கும் பிறஇடங்களிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ச்ருங்கார சாஸ்த்திரத்திற்கும் அம்பிகையின் உபாஸனைக்கும் என்ன ஸம்பந்தம் இருக்கிறதென்பதாக ஸந்தேஹம் தோன்றக்கூடும். ச்ருங்கார ரஸமென்பது ஸ்த்ரீ புமான்களுக்குள் பரஸ்பரமிருக்கும் ஆசைக்கும் செய்கைகளுக்கும் காரணமானது. அதையே ரஸங்களுக்குள் முதன்மையானது (ஆதிரஸம்) என்று சொல்லப்படும். இதைப்பற்றி வெட்கப்படவேண்டியாவது வெறுக்க வேண்டியாவது யாதொரு அம்சமும் ஸரியாக யோசிப்பவர்கள் மனதில் தோன்றுவதற்கு ந்யாயமில்லை. இது ஸ்த்வ குணத்திலிருந்து ஏற்படுகிறதென்றும், அகண்டமும் ஸ்வப்ரகாசருமான ஆனந்தரூபமென்றும் சின்மயமானதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ரஸத்திலிருந்து ஏற்படும் ஆனந்தத்தினால் மற்றவஸ்துக்களெல்லாம் மறக்கப்பட்டு அனன்யமான தீவ்ர மனோபாவமானது ஏற்படுவதால், அவ்வித ஆனந்தத்தை ப்ரம்ஹானந்தத்திற்கு உடன் பிறந்ததாக (ப்ரம்ஹாஸ்வாதஸஹோதரமென்று) சொல்லப்பட்டிருக்கிறது, இதற்குமேலாக ஸ்தூல சரீரத்திற்கு ஏற்படக்கூடிய ஆனந்தம் வேறு யாதொன்றும் கிடையாதாகையால் சிவசக்திகளுடைய ஸாமரஸ்ய ரூபமான ப்ரம்ஹானந்தத்தை இதற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

‘ஸ்வஸம்வேத்யம் இதம் ப்ரம்ஹ குமாரீ ஸ்த்ரீஸுகம் யதா ||’
(தக்ஷ தர்மசாஸ்த்ரம்)

ஸாமரஸ்யமென்பதே

‘ஸ்த்ரீபும்யோகே து யத் ஸௌக்யம் ஸாமரஸ்யம் ப்ரகீர்த்திதம் |’

என்றபடி ஸ்த்ரீபுமான்களுடைய சேர்க்கையிலேற்படும் ஸுகத்தைக்குறிக்கும். லயஸித்தியோகத்தை அப்யஸிக்கும் ஸாதகனும் தன்னை சக்தியாக பாவித்து பரமாத்மாவான புருஷனுடன் ஸங்கமமடைவதாகவும் அவ்வித ஸங்கமத்தால் ஏற்படும் ஆனந்தத்தில் தன்னையும் ஜகத்தையும் மறந்துவிடுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஷட்சக்ரபேதனம் செய்து குண்டலினியை ஸஹஸ்ராரத்திற்குக் கொண்டுபோவதின் உத்தேசம் அவ்விடமிருக்கும் பரமசிவனுடன் குண்டலினீ சக்திக்கு ஸாமரஸ்யமேற்படுதத்துவது என்பதுதான்.

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்.

(14—1—37 தொடர்ச்சி)

ஸ்தோத்ர ப்ரியா 927

ஸ்தோத்ரங்களில் ப்ரியமுள்ளவள்.

1. ஸ்தோத்திரமென்பது இருவகைப்படும். லௌகிகமான ஸ்தோத்ரமானது குணங்களைப்பற்றிச் சொல்வது. அது நமஸ்காரம், ஆசீர்வாதம், ஸித்தாந்தத்தைச் சொல்லுவது, பராக்ரமத்தை சொல்லுவது, விபூதியைப்பற்றிச் சொல்லுவது, ப்ரார்த்தனைசெய்வது என்பதாக ஆறுவகைப்படும்.

‘நமஸ்காரஸ் ததாசீச்ச ஸித்தாந்தோக்தி: பராக்ரம: |
விபூதி: ப்ரார்த்தனா சேதி ஷட்விதம் ஸ்தோத்ரலக்ஷணம் ||

இவ்வகைகளை முறையே த்ரிஜகத்வந்த்யா (627) ஸ்வஸ்திமதீ (448) மித்யாஜகததிஷ்டானா (735)பண்டாஸுரேந்த்ர நிர்முக்த சஸ்த்ர ப்ரத்யஸ்த்ர வர்ஷிணீ (79) இச்சாசக்தி ஞானசக்தி க்ரியாசக்தி ஸ்வரூபிணீ (658) ஸாம்ராஜ்யதாயினீ (692) முதலியவைகளில் பார்க்கலாம். சொல்லப்படும் மந்த்ரத்தினால் வசப்படுத்தக்கூடிய தெய்வத்தினிடத்திலிருக்கும் குணத்தைச்சொல்லுவது வைதிகமான ஸ்தோத்திரம். இவ்விருவகையான ஸ்தோத்ரங்களும் அம்பாளுக்குப் பிரியமென்பதாக (அதாவது அவற்றால் அம்பாளுக்கு ப்ரியம் ஏற்படும் என்பதாக) இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. அப் என்ற பதமானது தேவர்கள், மனுஷ்யர்கள், பித்ருக்கள், அஸுரர்கள் என்ற நாலுவகையானவர்களையும் குறிக்கும். இதற்குப் பல ஆதாரங்கள் ச்ருதியில் கிடைக்கப்பெறுகின்றன.

‘தானி வா ஏதானி சத்வார்யம்பாம்ஸி |
‘பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி | ’
‘ஆபோ வா இதம் ஸர்வம் | ’

இந்த அர்த்தத்தில், ஸ்தோத்ரம்செய்யும் தேவ, மனுஷ்ய, பிதா, அஸுரர்களிடத்தில் ப்ரியமுள்ளவள் என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம்சொல்லலாம்.

ஸ்துதிமதீ 928

ஸ்துதியை உடைத்தாயிருப்பவள்.

1. அல்லது, யாருடைய ஸ்துதியினால் மதி—ஞானமும், ஈ—ஐச்வர்யமும் கிடைக்கப்பெறுமோ அவள் ஸ்துதீமதீயென்றும் சொல்லலாம். [illegible] ஞானம், ஐச்வர்யம் இரண்டும் கிடைக்குமோ அவள் என்று அர்த்தம்.

ச்ருதிஸம்ஸ்துத வைபவா 929

ச்ருதிகளால் நன்றாகப் புகழப்பட்ட வைபவத்தையுடையவள்.

1. அல்லது ‘ஸம்ஸ்துத: ஸ்யாத் பரிசய:’ என்ற கோசவசனத்தின்படி ஸம்ஸ்துதியென்றால் பரிசயம், அனுபவம் என்றும் அர்த்தம். அப்போது, ச்ருதிகளால் நன்றாய் அனுபவிக்கப்பட்ட, அதாவது, நன்றாய் அறியப்பட்ட, வைபவத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

2. ‘யுகாப்தயோऽர்தா: ச்ருதியச்சதஸ்ர:’ என்று சந்த: ஸுதாகாரத்தில் சொல்லப்பட்டபடி ச்ருதியென்ற பதமானது நாலு என்ற எண்ணிக்கையைக்குறிக்கும். அதாவது, நான்குவிதமாக அனுபவிக்கப்பட்ட வைபவத்தையுடையவளென்று சொல்லலாம். அதாவது,

‘சரீரபுருஷ: சந்த:புருஷோ வேதபுருஷோ மஹாபுருஷ: | ’

என்று பஹ்வ்ருசோபநிஷத்தில் சொல்லப்பட்ட நாலு வ்யூஹ ஸ்வரூபமாயிருப்பவள் என்பதாக தாத்பர்யம்.

3. அம்பிகையானவள் சாந்தி, வித்யா, ப்ரதிஷ்டா, நிவ்ருத்தி யென்ற நாலு வ்யூஹஸ்வரூபமாயிருப்பதாகவும் இவ்விதமான வ்யூஹங்களால் சூழப்பட்ட நான்கு மூர்த்திகளாய் பரமசிவன் ஸ்வாத்மானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதாகவும் கூர்மபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

‘சதஸ்ர: சக்த்யோ தேவ்யா: ஸ்வரூபத்வே வ்யவஸ்த்திதா: |
அதிஷ்டான வசாத் தஸ்யா: ச்ருணுத்வம் முனிபுங்கவா: ||
சாந்திர் வித்யா ப்ரதிஷ்டா ச நிவ்ருத்திச்சேதி தா: ஸ்ம்ருதா: |
சதுர்வ்யூஹஸ் ததா தேவ: ப்ரோச்யதே பரமேச்வர: ||
அனயா பரமோ தேவ: ஸ்வாத்மானந்தம் ஸமச்னுதே |
சதுர்ஷ்வபி ச தேவேஷு சதுர்மூர்த்திர் மஹேச்வர: ||’

மனஸ்வினீ 930

மனதின் ஸ்வாதந்திர்யத்தோடு இருப்பவள்.

1. அம்பிகையின் மனதானது பிறருக்கு ஆதீனமானதல்லவென்றும் அம்பிகை ஸ்வாதந்த்ர்யமான மனதோடு கூடியவளென்றும் சாக்தர்களுடைய ஸித்தாந்தம்.

மானவதீ 931

பெருந்தன்மையோடுகூடிய மனதையுடையவள்.

1. மானமென்றால் மனதினுடைய பெருந்தன்மை, ஆதரவு பக்தர்களுடைய அபராதங்களை மன்னிப்பது, ப்ரமாணம், முதலிய அர்த்தங்களுண்டு. அவையெல்லாம் அம்பாளிடமிருப்பதால் மானவதீ என்ற பெயர் ஏற்பட்டது.

மஹேசீ 932

மஹேச்வருடைய பத்னீ.

1. அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டதற்கு காரணங்கள்

‘மஹாதேவாத் ஸமுத்பன்னா மஹத்பிர் யத ஆத்ருதா |
மஹேசஸ்ய வதூர் யஸ்மாத் மஹேசீ தேன ஸா ஸ்ம்ருதா ||’

என்பதாக தேவீபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மங்களாக்ருதி: 933

மங்களரூபமான ஆக்ருதியோடு கூடியவள்.

விச்வமாதா 934

லோகங்களுக்கெல்லாம் ஜனனீயாயிருப்பவள்

1. அல்லது, விச்வ: என்று விஷ்ணுவுக்குப்பெயராகையால் அவருடைய மாதா என்றும் சொல்லலாம். இதேமாதிரி ச்ருதியில் ‘ஸோம: பவத:’ என்று ஆரம்பித்து ‘ஜனிதோத விஷ்ணோ:’ என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஜகத்தாத்ரீ 935

ஜகத்தை தாங்குகிறவள்.

1 அதாவது, ஸகல ஜகத்திற்கும் ஆதாரமாயிருப்பவளென்று தாத்பர்யம்

2. அல்லது, பூமிரூபமாக இருந்துகொண்டு ஜகத்தை தாங்குகிறவள் என்றும் சொல்லலாம்.

3. தாத்ரீ என்றால் உபமாதா, செவிலித்தாய் என்றும் அர்த்தமுண்டு. செவிலித்தாய்போல் ஜகத்தை பரிபாலித்துப் போஷித்துவருவதால் ஜகத்தாத்ரீ என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

‘ஏஷ பூதபல ஏஷ ஸேதுர் விதரண ஏஷாம் லோகானாம்
அஸம்பேதாய | ’ (காண்வச்ருதி)

4. அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டதற்குக் காரணம்

‘யஸ்மாத் தாரயதே லோகான் வ்ருத்திமேஷாம் ததாதிச |
டுதாஞ் தாரணே தாதுர் ஜகத்தாத்ரீ மதா புதை: ||’

என்று தேவீபுராணத்தில் சொல்லப்பட்டது

விசாலாக்ஷீ 936

விசாலமான நேத்திரங்களையுடையவள்.

1. ‘வாராணஸ்யாம் விசாலாக்ஷீ’ என்ற பத்மபுராணவசனப்படி வாராணஸியிலிருக்கும் அம்பிகைக்கு விசாலாக்ஷீ என்று பெயராகையால் அந்தரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

2. [illegible] என்ற பதமானது [illegible] குறிக்கும். ஆயினும் அது ஹிமாசலத்திருப்பதால் அங்கிருக்கும் நேபாள பீடத்தையும் குறிக்கும். அம்பிகையை பீடரூபிணியாக ந்யாஸம் செய்வதில் நேபாளபீடத்தை நேத்ரஸ்த்தானத்தில் ந்யாஸம்செய்வதென்பதாக ப்ரம்ஹாண்டபுராணம் முதலியவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை அனுஸரித்து, விசால பீடத்தை அக்ஷிஸ்தானமாக உடையவளென்று இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

விராகிணீ 937

வைராக்யத்தோடு கூடியவள்.

1. வைராக்யமென்றால் ராகம் (பற்றுதல்) இல்லாதிருப்பது.

ப்ரகல்பா 938

துணிவோடிருப்பவள்..

1. தைர்யம், பலம் இவற்றோடிருக்கும் ஸ்திரீக்கு ப்ரகல்பா என்று பெயர். அம்பிகையானவள் ஸ்ருஷ்டி முதலான கர்மாக்கள் செய்வதில் ப்ரௌடையாயிருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டது.

பரமோதாரா 939

உத்க்ருஷ்டமான ஔதார்யத்தையுடையவள்.

1. உதாரமென்பது ‘உதாரோ தாத்ரு மஹதோ:’ என்ற அமரகோச வசனத்தின்படி கொடுப்பதில் தாராளமாயிருப்பதைத் தவிர, மஹத்தானதென்பதையும் குறிக்கும். அம்பிகையானவள் தேசம், காலம் இவற்றைக்குறித்து மஹதீயாயிருப்பதால் பரமோதாரா என்று பெயர் ஏற்பட்டது. இதை ‘ஆகாசவத் ஸர்வகதச்ச நித்ய:’ என்று ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, (பர) மேலானதான (மோத) ஆனந்தத்தை (ஆரா) பூர்ணமாய் (ஸர்வவ்யாபகமாய்) கொடுக்கிறாள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, பர—மிகவும் அதிகமான, உத—ஜலத்தோடிருப்பது பரமோதம்—ஸமுத்ரம். அது இங்கு ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தைக் குறிக்கும். அதை நாசம் செய்யும் அரா—ஆயுதவிசேஷம் போன்றவள் பரமோதாரா என்றும் சொல்லலாம்.

4. இதை முந்திய நாமத்திலிருந்து அபரமோதாரா என்று பிரித்தும் சொல்லலாம். அப்போது, அப—போக்கடிக்கப்பட்ட (இல்லாத), ரமா—ஸந்தோஷத்தையுடையவர்கள், அதாவது தரித்ரர்கள் அபரமா:, அவர்களிடத்தில் உதாரமாயிருப்பவள்—ஐச்வர்யத்தைக் கொடுப்பவள் அபரமோதாரா என்று சொல்லலாம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆ ர் ய த ர் ம ம்.

தா து-ஹூ தை-மீ 8வ

உறுதிமொழி பெறவேண்டும்.

சென்னை மாகாணச் சட்டஸபைக்கு அபேக்ஷகர் நியமனச்சீட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. பெரும்பாலான விடங்களில் காங்கிரஸுக்கும் ஜஸ்டிஸுக்குமே போட்டியிருப்பதாகத் தெரிகிறது. பிப்ரவரிமீ 18வ யன்று எலக்ஷன் ஆரம்பமாகும். கக்ஷி அபேக்ஷகர்கள் ஓட்டர்களை நெருங்கி ஓட்கேட்கவேண்டிய ஸந்தர்ப்பம் இனிமேல்தான் ஏற்படும். இச்சமயத்தில் ஸனாதன தர்மாபிமானிகளாகிய ஓட்டர்கள் தங்கள் [illegible] டியது அவச்யம். சென்னை, குடந்தை போன்ற விடங்களிலுள்ள தார்மிகத் தலைவர்களும் ஓட்டர்களுக்குத் தகுந்த ஆலோசனை கூற முன்வந்திருப்பது தைர்யமளிக்கிறது. ஸனாதன தர்மிகளின் கான்பான்ஸ்களும் முக்யமான விடங்களில் கூடியசீக்கிரத்தில் கூடி மாகாணமுழுவதுமுள்ள ஓட்டர்களுக்கு ஸரியான வழிகாட்டுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

இச்சமயத்தில் ஸனாதன தர்மிகள் செய்யக்கூடிய விஷயம் தெளிவாக இருக்கிறது. சட்டஸபை ஸ்தானங்களுக்கு இவர்கள் அபேக்ஷகர்களாகநிற்கக்கூடிய ஸௌகர்யம் பலவழிகளிலும் தற்போது அமையவில்லை. இவர்கள் தங்கள் ஓட்டுக்களை ஸரியானவழியில் உபயோகிப்பதன்மூலம் நன்மைபெறுவதே தத்கால ஸாத்யமான உபாயமாயுள்ளது. ஓட்டர்களில் பெரும்பாலோர் ஸனாதந தர்மாபிமானிகளென்பதில் ஸந்தேகமில்லை. சீர்திருத்தங்களை விரும்புகிறவர்கள் மிகச்சிலரேயிருக்கக்கூடும். ராஜீயக்கக்ஷிகள், ராஜீயத்திட்டத்தில் எந்தவழியை அநுஸரித்தபோதிலும், மதாசார ஸம்பந்தமான கார்யங்களில் சட்டமூலமான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தக் கூடாதென்று ஓட்டர்கள் கட்டளையிட்டால் அபேக்ஷகர்கள் அதை அலக்ஷியம்செய்ய முடியாது. சென்ற இந்தியாசட்டஸபை எலெக்ஷன் காலத்தில் நடந்ததை இச்சமயம் நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது நல்லது. ஸனாதனிகள் பலத்த பிரசாரம் செய்த காரணமாக காங்கிரஸ்தலைவர்களும், ஜஸ்டிஸ்கக்ஷியாரும் நமக்கு வாக்குறுதிகொடுக்க முன்வரவில்லையா? காங்கிரஸ் அபிமானமுள்ள ஓட்டர்கள் கூட மதாசாரவிஷயங்களில் நடுநிலைமைவகிப்பதாக உறுதிமொழி கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதன்பயனாக ஸர்தார் படேல், ஸி. ரா. ஆசாரியார், ஸத்யமூர்த்தி, டாக்டர் ராஜன் முதலிய காங்கிரஸ்காரர்களும், திவான்பஹதூர் ராமசாமி முதலியார் போன்ற ஜஸ்டிஸ் பிரமுகர்களும், சட்டஸபைகளில் மதாசாரவிரோதமான மசோதாவைக் கொண்டுவரவோ ஆதரிக்கவோ செய்வதில்லையென்று உறுதிமொழி எழுதிக்கொடுத்தார்கள். சாரதாச்சட்டத்தை ஸனாதனிகளின் விருப்பப்படி திருத்தவேண்டியது அவச்யமென்றுகூட திவான்பஹதூர் ராமசாமி முதலியார் அப்போது பஹிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

காங்கிரஸ் காரர்களும் அப்போது எங்கும் மதாசாரச் சட்ட விஷயமாக ஓட்டர்களுக்குத் தங்களிடம் பூர்ண அவநம்பிக்கை இருப்பதை அறிந்து அவர்களை திருப்திசெய்ய முன்வந்தார்கள். புதிய சீர்திருத்தத்தை நிராகரிக்கவும், ஜனப்பிரதிநிதி ஸபையை கூட்டுவிக்கவும், அடக்குமுறைக்கு ஆதரவில்லையென்பதை வெளிப்படுத்தவுமே தாங்கள் இந்தியா சட்டஸபைக்குப் போவதாயும், ஆலயப்ரவேச மசோதா முதலியவை கொண்டுவரப்படமாட்டாவென்றும் ஓட்டர்களுக்கு உறுதியளித்தார்கள். தற்போதும் காங்கிரஸ்காரர்களும் ஓட்டர்களும் முன்னிருந்த நிலைமையிலேயே இருக்கிறார்கள். காங்கிரஸ் மஹாஸபையானது சட்டஸபைகளைக் கைப்பற்ற முன்வந்திருப்பதின் காரணம் தெளிவாக யாவரும் அறிந்ததே. புதிய சீர்திருத்தம் உபயோகமற்றதென்பதை நிரூபிக்கவும், இந்திய ஜனப்ரதிநிதிகளடங்கிய ஸபைமூலம் வேறு மாதிரி ராஜீயதிட்டத்தை அமைக்கவுமே காங்கிரஸ் சட்டஸபைகளைக் கைப்பற்றத் தீர்மானித்திருக்கிறது. காங்கிரஸ் எலெக்ஷன் போர்டார் தயாரித்துள்ள தேர்தல் அறிக்கையிலும் இந்த விஷயமே முக்யமாக பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தை முன்னிட்டுமட்டும் ஓட்டர்களை அவர்கள் ஓட்கேட்கலாமேயன்றி [illegible]. மத ஸமூஹ சீர்திருத்தம் அவர்களுடைய சட்டஸபை வேலைத்திட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

ஆயினும் திருவாங்கூர் ஆலயப்ரவேச விஷயமாக தேசத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையைக்கண்டு சிலர் விஷமம் செய்ய முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தார்மிகர்களின் எதிர்ப்பு குறைந்திருப்பதாக பிரமித்தும், புதிய சட்டஸபையில் கிடைக்கக்கூடிய ஸௌகர்ய ஸந்தர்ப்பத்தைக்கொண்டும் ஆலயப்பிரவேச மசோதாவைக் கொண்டுவரத் தூண்டுதல் ஏற்பட்டிருக்கிறது. அகில இந்திய ஹரிஜன ஸேவாஸங்கத்தின் தீர்மானத்தாலும், சென்னையில் ஸர். அல்லாடி கிருஷ்ணஸாமி அய்யர் போன்றவர்களுடைய பேச்சாலும் புதிய சட்டஸபையில் ஆலயப்பிரவேச மசோதா கொண்டுவரப்படுவது நிச்சயமென்றே தெரிகிறது.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் கூட சட்டஸபைக்குப்போக நிச்சயித்திருப்பதிலிருந்து இந்த பீதி தார்மிகர்களுள் அதிகரிக்க நியாயமில்லாமல் போகவில்லை. ஆதலால் ஓட்டர்கள் வெகு உறுதியாயும் கட்டுப்பாடாகவுமிருந்து அபேக்ஷகர்களிடமிருந்து உறுதிமொழி பெறவேண்டும். புதிய அரசியலை உடைக்க உத்தேசிக்கும் காங்கிரஸ்காரர்கள் மதாசாரத்திருத்த வேலைக்கு மட்டும் அந்த அரசியலை உபயோகித்துக்கொண்டால் அதைவிடதுரோஹம் வேறு உண்டா? இதை ஓட்டர்கள் அவர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும்.

இச்சமயத்தில் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி வெளியிட்டுள்ள அபிப்ராயமும் கவனிக்கத்தக்கது. இந்தியா சட்டஸபை எலெக்ஷன் காலத்தில் அவர்கொடுத்த வாக்குறுதியை சென்னை ஹிந்து ஸெண்ட்ரல் கமிட்டியார் வெளியிட்டு ஞாபகப்படுத்தியதற்கு ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி பதில் அளிக்கையில் திருவாங்கூர் விளம்பரத்தைத் தாம் ஆதரிப்பதன் காரணத்தை விளக்கியிருக்கிறார். ஆலயப்பிரவேசத்தை தாம் ஆதரித்தபோதிலும் சட்டமூலம் நிர்ப்பந்தமாக அது ஏற்படுத்துவதைத் தாம் எப்போதும் பலமாக ஆக்ஷேபிப்பதாயும், திருவாங்கூர் விளம்பரம் சட்டமல்லவென்றும் அது அரசருடைய உத்திரவுதானென்றும், அந்த உத்திரவுக்கும், பிரிடிஷ் இந்திய நிலைமைக்கும் மிகுந்த வித்யாஸமிருப்பதாயும் சுதேச அரசர்களுக்கு மதத்தலைவர்களின் ஆலோசனை மீது இத்தகைய மாறுதல் உண்டுபண்ண அதிகாரமிருப்பதாயும் வாதித்திருக்கிறார். இவருடைய வாதத்தில் மறுக்கவேண்டிய அம்சங்கள் பலஇருந்தபோதிலும், சட்டநிர்ப்பந்த மூலம் ஆலயப்ரவேசம் ஏற்படுத்துவதை இவர் ஆதரிக்கவில்லையென்ற விஷயம் முக்யமானது. இது இவருடைய ஸொந்த அபிப்ராயமாயிருந்தபோதிலும் சட்டஸபையில் காங்கிரஸ்வாதிகள் இந்தக்கொள்கையைப் பின் பற்றும்படி இவர் செய்வாரா? எதெற்கும் ஓட்டர்கள் முன் ஜாக்கிரதையாகவும் உறுதியாகவுமிருந்தால் கார்யஸித்தியுண்டென்பதில் ஐயமில்லை. அங்காங்கு கிராம நகரங்களிலுள்ள தார்மிகள் உடனே தக்க முயற்சி செய்வார்களென்று நம்புகிறோம்.

குறிப்புகள்.

அக்கிரமம் முற்றுகிறது!

திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரத்தையொட்டி அங்கு தீவ்ரமாக அக்ரமம் முற்றி வருவதைக் காண்கிறோம். டாக்டர் கஸின்ஸ் என்ற வெள்ளைக்காரரை ஒரு நொடியில் சுத்தி செய்து ஹிந்துவாக்கி உடனே அவரை ஸ்ரீ பத்மநாபர் கோவிலுக்குள்ளும் பிரவேசிக்[illegible] தெரிகிறது. மிகுந்த புரட்சிகரமான இந்த அக்ரமமானது தீண்டாமை விலக்கில் முனைந்துள்ள சில சீர்திருத்தக்காரர்களைக் கூட திடுக்கிடச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தீண்டாமை விலக்கு என்பது ஹிந்துக்களுள் ஏற்றத் தாழ்வுகளை நிவர்த்தி செய்யவும், தாழ்ந்த ஜாதியாரை முன்னேறச்செய்யவும், அதன்மூலம ஹிந்து ஸமூஹத்தை பலப்படுத்தவுமே ஏற்பட்டது என்று சீர்திருத்தவாதிகள் இன்றுவரையில் பறைசாற்றி வருகின்றனர். திருவாங்கூர் அரசர் விளம்பத்திற்கும் இந்த நோக்கமே முக்கியமென்று வாதிக்கப்பட்டது. அங்கு தாழ்ந்த வகுப்பினர் பிறமதங்களில் ஏராளமாக பிரவேசித்து விட்டதன்மூலம் ஹிந்துக்களின் ஜன ஸங்கியை குறைந்து, ராஜ்யமே துர்பலமடையும் நிலைமைக்கு வந்துவிட்டதாயும் ஆகவே ஹிந்து ஸமூஹ புனருத்தாரண வேலைக்கு இந்த ஆலயப் பிரவேசம் அவச்யமென்றும் நினைக்கப்பட்டது. இதை ஆதரிக்க முற்பட்டவர்களும் இந்தக் காரணத்தையே முக்கியமாகக்காட்டினர்.

அப்படியிருக்க இப்போது ஹிந்து ஜாதியிலேயே சேராத ஒருவரைக் கோவிலுள் புகவிட்டது எதில் சேர்ந்தது? இது தாழ்ந்த வகுப்பினர் முன்னேற்றத்தில் சேர்ந்ததா? அல்லது ஹிந்து ஸமூஹத்தின் உத்தாரணத்தில் சேர்ந்ததா? டாக்டர் கஸின்ஸையோ அவரைப்போன்ற இதர ஜாதியினரையோ ஹிந்துவாக்கி ஹிந்து ஸமூஹ உத்தாரணம் செய்யவேண்டிய ஆபத்தென்ன? கிறிஸ்தவர்களும் மஹம்மதியர்களும் மதம் மாறியாவது ஹிந்துக் கோவிலில் புகாததால் என்ன ஸங்கடம் இப்போது இருக்கிறது? ஒருவிதத்திலும் ஸமாதானம் சொல்லக்கூடாத இந்த காரியம் வெறும் விஷம வேலை என்றே தெளிவாகிறது. பிறப்பினால் ஜாதிபேதமென்ற முக்யக்கொள்கையை அழிக்கவே திருவாங்கூர் முற்பட்டு

The Travancore Proclamation

A Protest Meeting.

A public meeting was held on 17—1—37 at the 'Ramamandiram'—the Patasala conducted by Mr A Subramania Aiyar, under the presidency of Mahamahopadhyaya R V. Krishnamachariar Swami, to protest against the proclamation of the Maharaja of Travancore regarding Temple Entry. There was a large attendance at the meeting and the following Resolutions were unanimously passed.

[A detailed account, in Tamil, of this meeting is published elsewhere in this issue.]

1. This meeting of the Sanatanists of Kumbakonam condemns the Travancore Temple Entry Proclamation, which is a violation of the Sastras, Agamas and traditions governing temple worship.

2. This meeting deeply grieves that His Highness the Maharaja of Travancore should have imposed his will against the spirit and long established observance of Shastras on his subjects and declares that the King or any secular authority has only the duty to enforce the observance of Dharma but is not in any way competent to alter the Rules or prohibitions pertaining to Dharma which are based on the Sastras and which can be interpreted only by those well-versed and having faith in the Sastras.

3. This meeting being of opinion that the Travancore Proclamation is an act of force imposed by a Ruler in defiance of the religion and the immemorial tradition of his people under the pressure of reformers is of opinion that the said proclamation does in no way affect the right of the Sanatanists to press for religious non-interference by the Government and the Political Parties in British India.

4. This meeting strongly condemns the orgainsed one-sided propaganda which certain news papers are doing, spreading exaggerated or tendentious news so as to mislead the public and further the purpose of a small minority determined on effecting a religious and social revolution in Hindu Society.

5. This meeting declares that no legislation or political propaganda or organised force or revolutionary *coup* will ever shake the Sanatanists from their stand for the Sanatana Dharma which rests upon the eternal Vedas and Sastras.

6. This meeting strongly exhorts the Sanatanists everywhere to publicly express their views on this matter, refusing to be silenced by the apparent strength or organisation of their opponents and further to discuss with and extract pledges from candidates for the Legislatures who may solicit their votes.

விட்டதாகத் தெரிகிறது. அது ஆர்யஸமாஜ அநார்யக் கொள்கைக்குத்தன்னை பலியிட்டுக் கொண்டு விட்டது பரிதபிக்கத் தக்கதே. டாக்டர் கஸின்ஸைப் போல் மஹம்மதியர்களில் சிலரும் நாளைக்கு ஹிந்து வேஷம்பூண்டு கோவிலில் புகலாம். கோவிலைப் பரிசுத்தமாக்கிவிட்டு அவர்கள் மீண்டும் தங்கள் மதத்திற்குத் திரும்பிவிடலாம். அத்தகைய பெரும் அக்கிரமத்தை திருவாங்கூர் ஆதரிப்பது பலமாகக் கண்டிக்கத்தக்கது.

நந்தனையும், ஆழ்வாரையும் திருஷ்டாந்தம் காட்டி ஆலயப்ரவேசத்தை ஆதரித்தவர்கள் இந்தஅநீதியையும் ஒப்புக்கொள்ளுகிறார்களா? இல்லையேல் அவர்கள் இதைக்கண்டித்து பிரசாரம் செய்வதே ஆண்மையாகும்.

ஸ்ரீ பத்மநாபர் முதலிய திருவாங்கூர்தெய்வங்களின் ஸான்னித்யம் மறைந்துவிட்டது என்பதில் வைதிகமத நம்பிக்கை உள்ளவர்களுக்கு ஸந்தேஹமே இல்லை. அக்கோவில்கள் வெறும் காச்சந்திகள்போலாகிவிட்டன. மஹாராஜாவின் விளம்பரத்தின், நோக்கம் தப்புவழியில் அர்த்தம் செய்யப்பட்டு மிகுந்த அநர்த்தத்திற்கு இடமாகிவிட்டதை அந்த அரசரும் மந்திரிகளும் கவனிப்பார்களா?

Mr. Satyamurthi's Statement.

"I am in favour of the Temple Entry Proclamation of Travancore because I consider that it is right and proper that Hindu temples should be thrown open to all conforming Hindus under prescribed conditions. But I do not like legislation on this matter. Temple Entry Proclamation is not legislation as is understood in British India. His Highness the Maharaja of Travancore is a conforming Hindu and Hindu Sastras have always recognised the right of Hindu Kings to authoritatively interpret the Sastras with the help of priests and religious heads His Highness has done so.

(M. M. 14-1-37)

உருவப்படத் திறப்பு.

குடந்தை கோபாலராவ் புஸ்தகசாலை ஹாலில் ஏற்கனவே பல கனவான்களுடைய உருவப்படங்களை வைக்க உதவி செய்த ஸ்ரீமான் விச்வேச்வ சாஸ்திரியாருடைய முயற்சியால் மேற்படி ஹாலில் மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. ஸாமிநாதய்யர் அவர்களுடைய உருவப்படம் 13வயன்று மஹாமஹோபாத்யாய, பாஷா பாரத துரந்தர ஸ்ரீ உ. வே. ம. வீ. ராமாநுஜாச்சாரியர்அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. மாஜி ஹெட்மாஸ்டரும், புஸ்தகசாலை கார்யதர்சியுமான ஸ்ரீமான் ஆர். ஸாமிநாதய்யர் அவர்கள் இந்த வைபவத்தில் தலைமை வகித்தார். பலகனவான்கள் வந்திருந்தனர். சென்னை பிரபல அட்வேகேட் ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராமசாஸ்திரியார், திவான் பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார், முத்துஸாமி அய்யர், ஊ. சா. வெங்கடராமய்யர், ஸ்ரீநிவாஸய்யர் முதலியவர்கள் ஸ்ரீமான் உ. வே. ஸாமிநாதய்யரைப் புகழ்ந்து பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 8½மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது.

ஒரு நிருபர்.

ஸநாதனதர்ம மகாசபை ஆத்தங்குடி.

தாதுஹூ தைமீ 1வ வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு திரு. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் கடவுள் வாழ்த்துப்பாட ப்ரும்மஸ்ரீ ஜெகதீசய்யர் அவர்கள் தலைமை தாங்க ஸ்ரீமான் சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள், கல்யாணசுந்தர கனபாடிகள், L.T. ரகுநாதய்யர் முறையே "இரண்யனும் பிரகலாதனும்" "சட்டசபைத் தேர்தலும் ஸநாதனிகளின் மனோபாவமும் "பிராமணர்களின் கடமை" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர். தலைவர்களின் நீண்ட முடிவுரைக்குப் பின் தலைவர்களால் அடியில் கண்ட தீர்மானங்கள் பிரேரேபணை செய்யப்பட்டு சபையாரால் ஏகமனதாக ஷை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வந்தனோபசாரத்துடன்சபை9½மணிக்கு இனிதுநிறைவேறியது.

வேண்டுகோள்.

1. "தண்டலம் மகா-ா-ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர்அவர்களும்கும்பகோணம் மாஜிஇஞ்ஜினியர் மகா-ா-ஸ்ரீ S. ஸ்வாமிநாதசாஸ்திரிகள் அவர்களும் முறையே சென்னையிலும் கும்பகோணத்திலும் ஆவலுடன் வெகு நாளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஸநாதன தர்ம மஹாநாட்டை கூடிய சீக்கிரம் கூட்டி வைப்பதற்கு பிரயத்தினம் செய்துகொண்டு வருவதை சென்ற வார ஆர்யதர்ம பத்திரிகைமூலம் அறிய மகிழ்ச்சியடைகிறோம். பல ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் வருவதற்கு ஸௌகர்யமாக மய்யமான திருச்சி ஸ்தலத்தில் சிறந்த முறையில் பெரிய மஹாநாட்டைஷை இருவர்களும் மற்றும் பல ஸ்தானத் தலைவர்களும் நடத்துவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம்."

அனுதாபம்.

2. சைவ சமயப்பற்றுதல் மிக்காரும் பல அரிய சைவ நூல்களை இயற்றினவரும் தேவகோட்டை சிவாகமச் சங்கத்தலைவருமான ஆத்தங்குடி திருவாளர் பொ. முத்தயபிள்ளை அவர்கள் மரணமடைந்ததற்கு இச்சபை வருந்துவடன் அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றது.

சு. வெங்கட்டராம கனபாடிகள்
உதவிகாரியதரிசி.

ஸ்ரீஜ்யோதிர்மய மஹாலிங்கஸ்வாமி நியமாத்யயன பாடசாலை. திருவிடைமருதூர்.

மூன்றுவது வருஷ பூர்த்தி.

ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் அவர்களின் அனுக்ரஹத்தின் பேரில் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவரும் மேற்படி பாடசாலையின் 3-வதுவருஷபூர்த்தியை நிகழும் தாத்ரு ஹூ தைமீ 11வ (24-1-37) ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுவதாகத் தீர்மானித்திருக்கிறது.

அன்று காலை ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமிக்கு அபிஷேக பஞ்சமுகார்ச்சனைகளும் ஸ்ரீ அம்பாளுக்கு சந்தனக்காப்பு அலங்காராதிகளும் நடைபெறும். பகல் 2-மணி முதல் பிரபல ஸனாதனத் தலைவர்களும் பண்டித ப்ரமுகர்களும் முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பிரவசனம் செய்வார்கள்.

ஆஸ்திகர்கள் அனைவரும் விஜயம் செய்யுமாறு வேண்டப்படுகிறார்கள்.

B. மஹாலிங்கம்.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Tuni

திருவாங்கூர் ஆலயப் பிரவேசம்

கும்பகோணத்தில் கண்டனம்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

(நமது நிருபர்.)

திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தையும் அதை யொட்டி ஏற்பட்டுள்ள நிலைமையையும், பற்றி யோஜித்துத் தீர்மானிப்பதற்காக டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் எம். ராம ராவ் முதலியவர்களுடைய முயற்சியால் 17உ ஞாயிற்றுக்கிழமை மாலை 6½மணிக்கு ரெட்டிராயர்குளம் கீழ்கரையிலுள்ள ஸ்ரீ ராமமந்திரம், கட்டிடத்தில் குடந்தை ஸனாதநிகளின் கூட்டமொன்று நடைபெற்றது.

மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ ஸ்ரீ உ. வே. ஆர். வி. கிருஷ்ணமாசாரியஸ்வாமிகள் மேற்படிக் கூட்டத்தில் அக்கிராஸனம் வஹித்தார்கள். தஞ்சாவூர் ஸ்ரீ ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்ததுடன் ஸ்ரீமான்களான ஏ. ஸுப்பிரமண்ய அய்யர், திருக்கருகாவூர் டி. எல். ஸுப்பய்யர், ஜி. வி. வெங்கட்ராமய்யர், அட்வோகேட். எஸ். மஹாலிங்கய்யர், பி.ஏ.,பி.எல்., எஸ். ஸ்வாமிநாதசாஸ்திரி மாஜி இஞ்சினீர், முத்துஸாமி அய்யர், அக்நிஹோத்ரம் தாதாசாரியஸ்வாமி, வித்வான் ஸி. ர. ஸ்ரீநிவாஸபாட்டாசாரியஸ்வாமி, மாத்வமித்ரன் ஆசிரியர், பாகவத, ரங்கநாதாசாரியர், கா.பே.ஹயக்ரீவாசாரியர்,கோபாலாசாரியர், அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர் அத்வைத பாடசாலை உபாத்தியாயர் ஆங்கரை, பிரம்மஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகள், ராமானுஜ தாதாசாரியர் முதலியவர்களும், ஏராளமான பொதுஜனங்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமான் ராமராவ் ஆரம்பத்தில் பேசுகையில், திருவாங்கூர் விளம்பரத்தைக் கண்டிப்பதற்காக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாயும், மாத்வ ஸமூஹத்தினருக்கு ஸ்ரீ பத்மநாப ஸ்வாமியிடம் அதிகம் பக்தியுண்டென்றும் அனந்த விரதமென்று அந்த ஸமூஹம் அநுஷ்டித்து வருவது ஸ்ரீ பத்மநாப ஸ்வாமியை உத்தேசித்ததென்றும் ஆதலால் அந்த ஸமூஹத்தார் இதில் அதிகக் கவலை அடைவதாயும், இந்த அநீதி நிவிர்த்தியாக வழிதேடவேண்டுமென்றும், இதுவிஷயமாக பிரசாரம் செய்யவே முதல் முதலாக இக்கூட்டம் கூட்டப்பட்டதென்றும் சொல்லி மஹாமஹோபாத்ய கிருஷ்ணமாசாரியாரைத் தலைமை வகிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

பிறகு ஸ்ரீ கிருஷ்ணமாசாரியஸ்வாமிகள் தலைமை வகித்துப் பேசுகையில், திருவாங்கூர் அதிக்ரமத்தைக் கண்டித்துவிட்டு, கும்பகோணத்தில் இத்தகைய கூட்டம் முன்பே நடைபெற்றிருக்கவேண்டுமென்றும், இவ்வூரிலுள்ள பிராம்மண ஸபையே இதுவரையில் இம்மாதிரியான கார்யங்களில் முன்னணியில் நின்று வழிகாட்டி வந்திருப்பதாயும்,பல அஸௌகர்யங்களால் இதுவரையில் இவ்விஷயத்தில் கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டதென்றும் ஆலயப்பிரவேச விஷயமாக நமது ஆக்ஷேபங்கள் ஏற்கனவே பல தடவைகளில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருப்பதால் இன்று தீர்மானங்களை பிரேரிக்கும்படி சொல்லி முடித்தார்.

பிரம்மஸ்ரீ எஸ். மஹாலிங்கய்யர் பி. ஏ. பி. எல். அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களை முன்பாக பிரேரேபித்தார்.

1. திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரமானது சாஸ்திர ஆகம ஆசாரங்களுக்கு அடியோடு விருத்தமாயிருப்பதால் அதைபலமாகக் கண்டிப்பதாயும்,

2. அரசர்களுக்கு தர்மங்களை ரக்ஷிக்கும் அதிகாரமுண்டேயல்லது புதியதாக ஒன்றை உண்டுபண்ண அதிகாரம் கிடையாதென்றும், சாஸ்திர நம்பிக்கையுள்ள ஒருவகுப்பாருக்கே அந்த பாத்யமுள்ளதென்றும்,

3. திருவாங்கூர் விளம்பரமானது, இதர இடங்களிலுள்ள ஸனாதநிகள் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பதற்கு எவ்விதத்திலும் தடையாயிராதென்றும், திருவாங்கூர் உதாஹரணம் ஏற்காதென்றும்,

4- இந்தியாவிலுள்ள பத்திரிகைகள் ஆலயப்பிரவேச விஷயத்தில் ஒருதலைப்பக்ஷமான பிரசாரம் செய்துவருவதைக் கண்டிப்பதாயும்

5. ஸனாதநிகள் இதிலிருந்து ஏக்கம் அடையாமல் தங்கள் கடமைகளை தீரமாகச்செய்து கொண்டிருக்க வேண்டுமென்றும்,

6. எல்லா ஊர்களிலுமுள்ள ஸநாதனிகள் ஆலயப்பிரவேசத்தை பலமாகக் கண்டித்துத் தீர்மானிப்பதுடன் வரப்போகிற சட்டஸபை அபேக்ஷகர்களிடமிருந்து ஆலயப்பிரவேச விஷயமாக வாதாடி எதிர்ப்பதாக உறுதிமொழி வாங்கவேண்டுமென்றும்.

கருத்துக்களடங்கிய ஆறு தீர்மானங்களைப் பிரேரேபித்தார்.

தீர்மானங்களைப் பிரேரேபித்து ஸ்ரீமான் மஹாலிங்கய்யர் பேசுகையில் திருவாங்கூர் விளம்பரத்தின் தன்மையை விளக்கிவிட்டு, பத்திரிகைகளின் ஒரு தலைப்பக்ஷமான பிரசாரத்தை பலமாகக் கண்டித்தார். தற்கால நாகரிக உலகில் ஜனங்களின் ஸாதக பாதக விஷயங்கள் யாவும் பத்திரிகைச் சொந்தக்காரர்கள் வசமிருப்பதாயும் ஒவ்வொரு தினமும் எழுதும் தலையங்கங்களால் தங்களிஷ்டப்படி ஜனங்களை ஆட்டிவைப்பதாயும், ஸமாஸாரங்களை பிரசுரிப்பதில் தங்கள் அபிப்பிராயங்களும் பிரதிபலிக்கும்படி செய்வது இக்காலப் பத்திரிகைகளில் ஸஹஜமாயிருப்பதாயும் இங்கிலாந்தில் 4,5 பேர்கள் எல்லாப் பத்திரிகைகளையும் தங்கள் கையில் வைத்துக்கொண்டு அத்தேசத்தை தங்கள் இஷ்டப்படி ராஜீய ஸமூஹ விஷயத்தில் இழுத்துக்கொண்டு போவதாயும் இது மிகுந்த அநியாயமென்றும், திருவாங்கூர் விளம்பர விஷயத்திலும் இந்தியப் பத்திரிகைகள் மேற்கண்ட விதத்தில் ஒருதலைப் பக்ஷமான ஸமாசாரங்களையேபிரசுரித்து ஜனங்களிடையில் மனக்குழப்பத்தை ஏற்படுத்தி துஷ்பிரசாரம் செய்வதாயும் குறிப்பிட்டார். சட்டஸபைமெம்பர்கள் நமக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமல் நடுநிலைமை வகித்தாலே நமக்கு பாக்யமானென்றும் அபேக்ஷகர்களிடம் அத்தகைய உறுதிமொழி பெறவேண்டியது அவச்யமென்றும் சொன்னார்.

பிரம்மஸ்ரீ டி. எல். சுப்பைய்யர் பி. ஏ. பி.எல். அவர்கள் மேற்கண்ட தீர்மானங்களை ஆமோதித்துப்பேசுகையில் காந்திஜி நடத்திய ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி காலத்தில் நமது ஆக்ஷேபங்களை ஏராளமாக வெளியிட்டிருக்கிறோமென்றும் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் கெட்ட நோக்கத்துடனேயே செய்யப்படுவதாயும், ஆலயம், தெய்வம், தெய்வத்தின் சக்தி ஆகிய யாவற்றும் ஆகம சாஸ்திரப்படியே ஸித்திக்கக்கூடியவைகளாயிருக்க, அவைகளை நம்புகிறவர்கள், தீண்டாதார் பிரவேசவிஷயமாகமட்டும் ஆகமவிதிகளைப் புறக்கணிப்பது விசித்ரமாயிருப்பதாயும் ஸநாதநிகள் விடாமுயற்சியுடன் நின்று போராடி இத்தகைய அநீதிகளை அழிக்கவேண்டுமென்றும் சொன்னார்.

தமிழ்பண்டிதர் ஸ்ரீமான் முத்துஸாமி அய்யர் தமிழ் புஸ்தகங்களில் எங்கும் ஆலயப்பிரவேசம் ஆதரிக்கப் படவில்லையென்பதை விளக்கிக்காட்டி ஆதரித்துப்பேசியபின், பிரம்மஸ்ரீ ரங்கஸாமி சாஸ்திரிகள் பேசுகையில் சைவ ஆகமங்களில் ஐந்துவித சைவர்களின் பிரிவு கூறப்பட்டிருப்பதாயும், பூஜகர், ஸேவார்த்திகளான பிராம்மண, பிராம்மணால்லாதார், பஞ்சமர் முதலிய சைவர்களுக்கு ஸ்வாமிதர்சனம் செய்யுமிடம் வகுக்கப்பட்டிருப்பதாயும், கோபுர, விமானதி தர்சனங்களாலேயே பஞ்சமர் உஜ்ஜீவிக்க முடியுமென்றும், நந்தனார் முதலிய பக்தர்களுடைய முறையை எடுத்து விளக்கித் திருவாங்கூர் உத்திரவைக் கண்டித்துக் கூறினார்.

பிறகு அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியர் பேசுகையில், தீர்மானங்களில் கண்ட ஒவ்வொரு விஷயமும் வெகு முக்யமென்றும் ஸனாதநமதாபிமானிகள் ஸாதாரண ஜனங்களுடன் நெருங்கிய பழக்கம் வைத்துக்கொண்டு அவர்களுக்கு மதசிரத்தையை உண்டுபண்ணாததே இத்தகைய கஷ்டங்களுக்குக் காரணமென்றும், பொதுஜனங்களிடையில் சென்று தீவ்ரமாக பிரசாரம் நடத்தவேண்டுமென்றும் கூறினார்.

அதன்பின் அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர் தீர்மானங்களை ஆதரித்துப்பேசினார், ஆலயப்பிரவேச விஷயமாக தேசத்தில் மிகுந்த ஆக்ஷேபம் இருப்பது மறுக்கமுடியாததென்றும், ரங்கய்யர் மசோதா விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் சேகரித்துள்ள அபிப்பிராயங்களைக் கொண்டே இது நன்கு வெளிப்பட்டிருப்பதாயும், அநேக ஜட்ஜிகள், கலெக்டர் முதலிய உத்யோகஸ்தர்கள், பிரபல வக்கீல்கள், கணக்கற்ற பொது ஜனங்கள், மடாதிபதிகள் யாவரும் இதை வெகு பலமாக ஆக்ஷேபித்திருப்பது திருவாங்கூர் மஹாராஜாவுக்கும் தெரிந்திருக்க வேண்டுமென்றும், அப்படியிருந்தும் சட்டஸபையில் ஜனப்பிரதிநிதிகளுடைய அபிப்பிராயத்தைக் கூடக் கேட்காமல் கேவலம் யதேச்சாதிகார பலத்தினால் இதை அவர் செய்திருப்பது கண்டிக்கத்தக்கதென்றும், காந்திஜி அங்கு பேசியிருப்பதிலிருந்து வெகுகாலமாகவே இந்தச் சூழ்ச்சி நடந்திருப்பதாகத் தெரிகிறதென்றும் சில வருஷங்களுக்கு முன்பாகவே காந்திஜி இந்தக்கார்யத்தைச் செய்யும்படி ராணியைத் தூண்டி, அவளும் அதை ஏற்றிருப்பதாகத் தெரிகிறதென்றும், அன்னிய மதஸ்தரான திவான் ஸர் ஹபிபுல்லாகாலத்தில்கூடச் செய்யத் துணிவுகொள்ளப்படாத இக்கார்யம் இப்போது ஸந்தர்ப்பம் பார்த்துச் செய்யப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதென்றும், குருவாயூர் கிளர்ச்சியின் போதும், வைக்கம் விஷமத்தின் போதும் வெகு தீவ்ரமாக எதிர்த்த மலையாள வாஸிகள் இப்போது மௌனமாக இதை அங்கீகரித்து விட்டதாக நினைப்பது பிசகென்றும், ராஜ ஆக்ஞைக்குப் பயந்தே அங்குள்ளவர்கள் மௌனமாயிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறதென்றும், ஹிந்துப் பத்திரிகையில் வெளியான கடிதங்களிலிருந்து இது ஊஹிக்கத்தக்கதென்றும், ஸர்க்கார் உத்யோகஸ்தர்களான பிராம்மணர்கள் தினந்தோறும் கோவில்களுக்குப் போய்வரவேண்டுமென்று உத்திரவு பிறந்திருப்பதாகத் தெரிவதாயும் இதிலிருந்து அங்குள்ள நிலைமை தெளிவாகிறதென்றும், தாழ்ந்த ஜாதியார் கிறிஸ்தவமதத்தில் ஏராளமாகச் சேர்ந்துவிடுவதைத் தடுத்து அந்த ராஜ்யத்தைக் கைப்பாற்றவே இந்த உத்திரவு செய்யப்பட்டதாக முதலில் கூறப்பட்டதென்றும், ஆனால் காந்திஜி முதலியவர்களுடைய பேச்சிலிருந்து அது உண்மையல்லவென்றும், தீண்டாமை விலக்கு, ஜாதிபேத ஒழிப்பு மூலம் மதச்சீர்திருத்த வேலையை நிறைவேற்றவே இந்த விளம்பரம் ஏற்பட்டதாக வெளியாகிறதென்றும், தீண்டாதார் நன்மைக்காக ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று சொல்லிவந்தது போக இப்போது டாக்டர் கஸின்ஸ் போன்ற அந்நிய ஜாதி மதஸ்தர்களைக்கூட ஆலயத்தில் விட ஸம்மதித்து விட்டதிலிருந்து ஜாதி நாசவேலையே முக்ய நோக்கமென்று தெரிவதாயும், இவைகளையெல்லாம் ஸனாதனிகள் கவனித்து தீவ்ரமாகக் கண்டனம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

மேலும், ஸனாதநிகள் இந்த உத்திரவினால் ஏக்கம் பிடித்து உத்ஸாஹக்குறைவு அடையக்கூடாதென்றும், கலாபகாலத்தில் கோவில்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களைவிட இது பெரிதல்லவென்றும், தீவ்ர முயற்சிசெய்தால் இதைத் திருத்தமுடியுமென்றும், திருவாங்கூர் உதாஹரணத்தைக்கொண்டு இந்தியாவில் மற்றவிடங்களிலும் ஆலயப்பிரவேசத்தை ஸாதிக்கச் சிலர் யத்னப்படுவதாயும், அதை நாம் தடுக்கவேண்டுமென்றும், புதிய மாகாண ஸ்வய ஆக்ஷியில் மதத்திற்குப் பாதுகாப்பு இல்லையென்றும், வருகிற எலெக்ஷனில் அபேக்ஷகர்களிடம் கண்டிப்பாக உறுதிமொழி பெறவேண்டுமென்றும், புதிய அரசியலை உடைக்கப்போவதாகச் சிலர் பேசிவந்தபோதிலும், ஆலயப்பிரவேசாதி அதர்மங்களுக்கு அந்த அரசியல் சட்டத்தை அவர்கள் உபயோகித்துக்கொள்ளப் பின்வாங்கமாட்டார்களென்றும், ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஏற்கனவே கொடுத்த உறுதிமொழியை அநுஸரித்து நடப்பதாகக் கூறி அபிப்பிராயம் மெயில் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறாரென்றும், அதை ஸநாதநிகள் கவனிக்கவேண்டுமென்றும், எங்கும் பலமான பிரசாரம் நடத்தி சட்டஸபை அபேக்ஷகர்களிடம் உறுதிமொழி பெறவேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

பிறகு தலைவர் தீர்மானங்களை ஓட்டுக்கு விடுமுன் தீர்மானங்களின் கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாயும் விளக்கி ஸபையோரின் அபிப்பிராயத்தைக்கேட்டார். ஸபையோர் ஏகமனதாகத் தீர்மானங்களை நிறைவேற்றி வைத்தார்கள்.

ஸ்ரீமான் எஸ். ஸ்வாமிநாதசாஸ்திரியார் கொச்சி மஹாராஜாவைப் பாராட்டி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அது ஸ்ரீமான் வி. ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

தீர்மானங்கள் ஸம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்ட பிறகு இந்த ஸபையைக் கூட்டிவைப்பதில் மிகுந்த ஊக்கமும் சிரமமும் எடுத்துக்கொண்டு உழைத்த ஸ்ரீமான் எம். ராமராவ் அவர்களால் தலைவருக்கும் மற்றவர்களுக்கும், இடம் கொடுத்து உதவிய ஸ்ரீமான் ஏ. ஸுப்பிரமண்ய அய்யர் அவர்களுக்கும் வந்தனோபசார வார்த்தைகள் சொல்லப்பட்டபின் ஸபை இரவு 9மணிக்கு இனிது கலைந்தது.

வாரக்குறிப்புகள்

வெ. ஸோ. சர்மா.

தேர்தல் பாண்டியாய் விடுமோ? தாது ஈசுவர ஆண்டு பொல்லாதென்பர். பற்பல வகையான துன்பங்களுக்கிடையே புதிய சட்டஸபை தேர்தலும் இவ்வாண்டே வந்துளது. வட நாட்டிலே ஓர் அபேக்ஷகர் மனைவி கொல்லப்பட்டாள். ஓர் அபேக்ஷகரே கொல்லப்பட்டதாக ஓர் செய்தி வெளியாயிருக்கிறது. பல ஸபைகளில் கல்லெறி! தூஷணை! கலஹம்! சண்டை விபரீதங்கள் நினைவுக்கு வருகிறது. நல்லபடி செல்லுமா இவ்வாண்டு!

யாருக்கு வெற்றிலைமாலை!! மஹாத்மா பத்மநாபஸ்வாமி ஆலயத்தைப் பாழ்படுத்திய பாக்யம் தனக்கில்லையே என கரைகிறார். அவ்வூர் பஞ்சமர் சங்கம் வெற்றி நமதென்கிறது. இல்லை இல்லை. அரசனைச் சார்ந்ததென்கிறாங்கு ஒருவர். அதில்லை இளைய ராணிக்கே உரியதென்பார் சிலர். அஃதெல்லாமில்லை! யார் அரசருக்கு அரசுரிமை அளித்தாரோ அவ்வரிய பெரியாருக்கே அதென்பர் பலர். ஆனால் காமனை முன்னிட்ட கலிக்கே வெற்றி.

விநோதக் கூட்டம். சென்னையில் திருவாங்கூர் மன்னருக்கு ஓர் சிலைவைக்க ஓர் சபை கூடிற்று. பிராமணர் பரலோகத்திற்காக செய்யும் உத்திரகிரியையில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறிய ஓர் சட்டப்புலவர் கர்ஜித்தார். மேயர் திவானுக்கே சிலை என்றார். ஓர் பண்டிதர் (காஞ்சீ ஸ்ரீ தாதாசார்ய வம்சத்திய ஸ்வயமாசார்ய புருஷர்) ஆஹா! இதுதான் தர்மம் என்று கண்ணை மறந்து பேசினார். இக்கூட்டத்திற்கு ஸூத்ரதாரியாயிருந்தது யார்? பெரியவிடத்து பணமோ? என சிலர் கூறுகிறார்கள். பணம் பல செய்யும்!!

முதல் தர்ம வெற்றி!! நாகபுரியில் V. V. கெல்கார் எனும் ஸநாதநி பழுத்த காங்க்ரஸ் அபேக்ஷகரைத் தோற்கடித்து சட்டஸபைக்கு மிக அதிக வாக்குகளால் வெற்றிபெற்றார். ஐக்ய மாகாணத்திலும் அயோத்தியிலும் ஸநாதநிகள் நிற்கின்றனர். இவர்கள் ஜயிப்பதும் திண்ணம்! ஏன்? தர்மத்தைக் காப்பது அவன் கடமையன்றோ? சென்னை என்ன செய்யப் போகிறது?

விழி! எழு!! எழு!!! திருவாங்கூர் அநீதியைக் கண்டித்து ராஜகோட்டை, காசி பாம்பே, முத்யால்பேட், மைலை, புரசை முதலிய பல விடங்களில் ஸநாதநிகள் அரசனை பிராயச்சித்தம் செய்துக்கொள்ளும்படி அவ்வாசனுக்கு அறிவித்திருக்கின்றனர். சென்னையில் வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தின் பெயரால் சில சேதனர்கள் கிளர்ச்சிசெய்கின்றனர். இதைக்கேட்ட ஆஸ்திகர் மனம் குளிரும். இச்சபைகளைப்போற்றி வேண்டுவாம்!

நாம் செய்தால் மூடநம்பிக்கையா? சென்னையில் ஓர் புதிய ஆகாய விமானம் கவர்னர் மனைவியால் தன் பெயரிடப்பட்டு பறக்க விடப்பட்டது. அச்சமயம் அதன் நுனியில் ஓர் சாராயப்புட்டி கட்டப்பட்டிருந்தது. அதை உடைத்து அதற்கு அபிஷேகம் செய்யப்பட்டது. இது எந்த பலத்தை உத்தேசித்துச் செய்யப்பட்டது? எங்கு இதற்கு விதி உளது? எனில் ஸம்ப்ரதாயமென்கிறார்கள். பல அரிய தத்வம் நிறைந்த நமது சிஷ்டாசாரத்தை மூடநம்பிக்கை என தூற்றும் பற்பல மேதாவிகளுமங்கிதை ஆமோதித்தனர்.

ஸதீமுன்னே சட்டமா? ஆக்ராவில் கலாவதி எனும் பிராமணஸ்திரீ பதியுடன் உடன் கட்டை ஏறினள். நமது மேதாவிகள் செய்த சட்டம் அவளெதிரே நிற்காது. அவர் பந்துக்களை கைதிசெய்துளது! இதில் நாம் சொல்வதற்கென்ன இருக்கிறது? கற்பரசியை போற்றுவாம்.

கஸின்ஸ் ராமதாஸானார்? காணுத கேளாத காக்ஷியைக் கலியிலே காணலாம். நேற்றுவரை வெள்ளையாகப் பிறந்து வளர்ந்து கிறிஸ்தவராயிருந்த மதநபள்ளி காலேஜ் பிரின்ஸிபால் திருவாங்கூரில் வந்து ஹிந்துவாகிவிட்டார். ராமதாஸ் என பெயர்பெற்றார். பத்மநாபஸ்வாமி கோவிலுக்கும் சென்றார். ஆனால் இச்சமயம் அச்வத்தாமா தன் தந்தைதலையை த்ருஷ்டத்யும்நன் அவமதித்தபோது "த்ரோணர்உயிரைவிட்டபின் அவர்தலையை காக்கையோ த்ருபதபுத்ரனோ தொட்டாலென்ன" என்று கூறியதை ஆஸ்திகர் மறவார்.

காங்கிரஸ்பயமுறுத்தலைத்தடுக்கவழி.

மந்திரிகளே இல்லாமல் நிர்வாஹம்.

ஸர்க்கார் யோஜனையா?

காங்கிரஸ் காரர்கள் மெஜாரிடியாக சட்டஸபையில் புகுந்துவிட்டால் புதிய அரசியலை உடைக்கும் நோக்கத்துடன் அவர்கள் மந்திரி முதலிய நிர்வாஹ பதவிகளை ஏற்று அரசியலை நடத்திவைக்க மறுத்தால் என்னசெய்வதென்பதைப் பற்றி ஸர்க்காரும் இப்போதே ஆலோசித்து வருகிறார்களாம். பம்பாய் பத்திரிகையொன்றின் ராஜீய நிருபர் தெரிவித்துள்ளபடி, மந்திரிகளே இல்லாமல் கவர்னரின் உத்திரவுப்படி அந்தந்த இலாகாத் தலைவர்களே நிர்வாஹத்தை நடத்தி வருவார்களென்றும், உதவி கவர்னர்களை நியமித்து அவர்களுக்கு மந்திரிகளுடைய அந்தஸ்தும், அதிகாரமும் கொடுக்கப்படலாமென்றும் அந்த நிருபர் சொல்லியிருக்கிறார்.

போலீஸாருக்கு அபயம்.

சென்னை ஸர்க்கார் உறுதிமொழி.

தற்போது நடந்துவரும் எலெக்ஷன் பிரசாரத்தில் ராஜீய வாதிகள் சிலர் தங்களது பிரஸங்கங்களில், தாங்கள் உத்யோக அதிகாரத்திற்கு வந்தால் போலீஸாரை விலக்கவும், குறைக்கவும் ஏற்பாடு செய்யப்போவதாகக் கூறி வருவதைக்கேட்டு அநேக போலீஸ் உத்யோகஸ்தர்கள் அதைர்யப்படுவதாகத் தெரிகிறது. இதையறிந்த சென்னை ஸர்க்கார் போலீஸாருக்கு உறுதிமொழியளித்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். எந்தக் கக்ஷியார் அதிகாரம் வகித்தபோதிலும் சட்டப்படி போலீஸாரை விலக்கவோ, குறைக்கமுடியாதென்றும் அவர்கள் இந்த பயமுறுத்தலைக் கண்டு அஞ்சவேண்டியதில்லையென்றும் கூறியிருக்கிறார்கள்.

நாட்டியப் பயிற்சிப் பள்ளிக்கூடம்?

அடையார் அருண்டேன் தர்மபத்நியான ஸ்ரீமதி ருக்மணிதேவி நாட்டியக் கலையைத் தாம் அப்யஸித்து அதனை அபிவிருத்தி செய்யப் பாடுபட்டுவருகிறார். பல பொதுஸ்தலங்களில் இவர் நாட்டியமாடி இந்திய நாட்டியக்கலையின் மேன்மையை விளக்கிப் பலருக்கும் ஆனந்த மூட்டி வருகிறாரல்லவா? இம்மாது அடையாற்றில் ஓர் நாட்டியப் பள்ளிக்கூடத்தை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறாளாம்! ஒவ்வொருவரும் தங்கள் குமாரர்களையும் குமாரிகளையும் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி நாட்டியம் அப்யஸிக்கச் செய்யும்படி அவள் ஒருவேண்டுகோள் செய்திருக்கிறாள்! நமது குடும்பங்களில் இது ஒன்றுதான் பாக்கியிருந்ததுபோலும்!

கும்பகோணத்தில் வைதிகதர்ம ஸங்க தர்மப்பிரசாரம்.

டபீர் படித்துறையில் கூட்டம்.

13-1-37 ல் வைதிகதர்ம சங்கத்தினுல் சமீபத்தில் மன்னார்குடி ஸமமேளனத்தில் ஏற்படுத்தப்பட்ட தர்மப்பிரசார கமிட்டியின் பிரசாரவேலை கும்பகோணம் டபீர் கீழ்படித் துறையில் ஆரம்பிக்கப்பட்டது. தஞ்சாவூர் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் மாலை 4-30 மணிக்கு கும்பகோணம் ஜனவாசிகள் வெகு பெரிய கூட்டமாய் கூடினர்கள். பிரசாரக் கமிட்டி கமிட்டியின்மெம்பரான ரிடையர்ட் இஞ்ஜினீர் S. சுவாமிநாதசாஸ்திரிகள் தஞ்சை வைதிக தர்மசங்கம் சென்ற 6-வருஷங்களாக ஏற்பட்டு தர்மவேத சாஸ்திர, தேவார பாடசாலைகளை நடத்துவதும் தவிர ஸ்ரீ ஸ்வாமிகள் தஞ்சை ஆச்ரமத்தில் வித்யார்த்திகளாய்த் தேறின 10-சிஷ்யர்களுள் கிராமம் கிராமமாய் சென்று தர்ம உத்தாரணம் செய்து வருவதாயும் அந்த வேலையை இது முதற் கொண்டு அதிக ஊக்கத்துடன் இடைவிடாமல் செய்துவருவதற்காக சமீபத்தில் ஆர்ய தர்மத்தில் வெளியிட்டிருக்கிறபடி ஒரு தர்ம பிரசாரக் கமிட்டியை நியமித்திருப்பதாயும் அந்தக் கமிட்டி இன்றைய தினம் பிரசாரவேலையை ஆரம்பிப்பதாகவும் அதற்காக தர்ம சங்கத்தின் அங்கத்தினராகிய ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் K. S. ராமஸ்வாமிசாஸ்திரிகளை தர்மப்ரசார வேலையை கமிட்டியார் சார்பாக துவக்கி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அவ்வேண்டுகோளின்படி ப்ரம்மஸ்ரீ K. S. ராமஸ்வாமிசாஸ்திரிகள் தர்மசங்கத்தினமைப்பைப் பற்றியும் அதன்நோக்கங்களையும் சமீப வேலைகளைப்பற்றியும் ... புகழ்ந்துபேசி இப்பேர்பட்ட பிரசாரங்கள் தற்காலத்தில் ரொம்ப அவசியம் என்றும் எல்லா வர்ணத்தார்களும் ஆச்ரமிகளும் தங்களுடைய சாமர்த்தியங்களை காட்டி ஒரு விஷயத்தில் ஒருவருக்கொருவர் பக்கபலமாய் இருந்து தரும காரியங்களை ப்ரசாரம் செய்து, இடையூறுகளை நீக்கி செய்கைகளை தலைக்கட்டி வைப்பது சிறந்த மார்க்கம் என்று கூறி தன்னுடைய பூர்ண ஆதரவும், அநுமோதனமுமிருப்பதாக உரைத்து முடித்தனர்.

பிறகு அக்னிஹோத்ரம் தாததேசிகாசார்யர் ஸ்வாமிகள் வேதமஹிமையைப் பற்றி விஸ்தாரமாய் பல மந்திரங்களையும், அர்த்தங்களையும் எடுத்துச்சொல்லி விளக்கி தர்மத்தின் நிலைமையை நன்கு பிரகாசிப்பித்தனர்.

பிறகு ஸந்த்யாவந்தனத்துக்கு 5-45க்கு சபை கலைந்து மறுபடி 6-45க்கு ஆரம்பிக்கப் பட்டது.

திரும்பி சபைஆரம்பித்தவுடன் மறுபடியும் S. சுவாமிநாத சாஸ்திரிகள் வைதிக தர்மசங்கத்தின் அமைப்பு நோக்கம், உள்பிரிவு கமிட்டிகள் தர்மப்ரசாரதினம் உத்தாரணப் பொருளாராய்ச்சி, தபோவன வித்யாபிவிருத்தி முதலிய பற்பல துறைகளில் நடத்தப்பட்டுவரும் வேலைகளைப் பற்றியும் சுருக்கமாக புதிதாய் வந்திருப்போருக்கு எடுத்துச்சொல்லி எல்லாரையும் இந்த சங்கத்துக்கு மெம்பராகச் சேரும்படிக்கும் பிரசாரவேலைக்கும் ஹிந்து சமூக தமிழ் நாட்டு ஒற்றுமை வேலைக்கும் அவசியமான ஆர்யதர்ம பத்திரிகைக்கு எல்லாரும் சந்தாதாரர்களாக ஆகவேண்டும். பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதியும் நம் தர்மத்தை நிலை நிறுத்தி சமூகத்தை உயரச் செய்து அப்போதைக்கப்போது சம்பவிக்கும் தற்கால இடையூறுகளையும் பரிஹரித்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பிறகு திருக்கருக்காவூர் டி. எல். சுப்பய்யர் அவர்கள் பிராமணர்களின் தற்கால கடமையைப்பற்றியும்ஆசாரம் தர்மம் ஒன்றும் படிக்காதவரும் அனுஷ்டிக்காதவரும் கீதார்த்தம் ஹிந்து தர்மம் முதலிதவைகளில் வீண் ஆலோசனைகள் சொல்லுவது அதிகப்ரசங்கம் என்றும் நிஷ்ப்ரயோஜனமென்றும் அவைகள் பத்திரிகைகளில் வருவதினுல் தார்மிகள் மனங்கலங்கக் கூடாதென்றும், பணக்காரர்களும் பெரிய உத்யோகஸ்தர்களும் சொல்வதெல்லாமும் செய்வதெல்லாமும் தர்மத்திற்கு பிரமாணமாகாதென்றும் தற்கால பணக்காரர்கள் அவர்கள் சொல்வதை முன் ஜன்மத்தில் செய்த தர்மத்தின் பலனுய் அனுபவிக்கிறார்களென்றும் இப்போது அவர்கள் கூற்றும் செயலும் அதர்மங்களுக்கு பலன், அடுத்த ஜன்மம் நிச்சயம் அடைவார்களென்று நன்றாய், எடுத்துக் காட்டினர். மேலும் சப்தத்தின் அபார மஹிமையைப் பற்றியும் ஜனங்களை ஆக்கவும் அழிக்கவும் குளத்தின் மீன்களைக் கொல்லவும் வியாதிஸ்தர்களை சொஸ்தம் செய்யவும் மூர்ச்சை செய்யவும் பல காரியங்களுக்கு உபயோகப்படுவதாய் மேல்நாட்டார் கண்டுபிடித்து Hundual ஒரு விலாசத்தின் விரிவாய் வந்திருப்பதாகவும் இந்த தத்துவத்தை ஹிந்துமதம் அநாதிகாலமாய் அறிந்து சப்தப் பிராமாணம் வேதமஹிமை என்று கூறிவருவதாயும் இன்னும் பல அரிய விஷயங்களையும் ஊக்கத்துடன் நன்கு நீண்ட உபன்யாசம் செய்தனர்.

கடைசியில் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசார்யார் (கமிட்டி மெம்பர்) பிரசார வேலையின் அவசியத்தைப்பற்றி இந்த பிரசாரம் செய்வதுடன் நாம் ராஜீய விஷயத்தில் கலந்துகொண்டு உழைக்க வேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிடில் ஏப்ரல் முதல் தேதியில் வருகிற புது அரசாசாக்ஷிப்படி நம்முடைய மதம், தர்மம், குடித்தனம், இல்லறம், வ்ருத்தி முதலிய சகலமும் பரிகாரமில்லாத அபாயங்களுக்குள்பட்டு ஹிந்து மதமென்பதே இருந்தவிடம் தெரியாமல் அழிந்துபோவது திண்ணமென்றும் வற்புறுத்திக் கூறி பிறகு இந்த ப்ரசாரவேலையை ஆரம்பித்து வைத்த ஜட்ஜ் ராமசுவாமி சஸ்திரிகளுக்கு எல்லார் சார்பாக வந்தனத்தை அளித்து இந்த ப்ரசாரவேலைக்கு தற்காலம் கும்பகோணத்தில் ஜீவநாடியாய் இருந்து இந்த வேலையை சரீரச்ரமத்தையும் திரவியச் செலவையும் பாராமல் ஆரம்பித்து தலைக்கட்டி சபை கூட்டி பிரசாரவேலைகளை பல இடங்களில் அநேக முறைகளில், இடைவிடாதுசென்று இரண்டு மாதங்களாய் செய்துவரும் கடலங்குடித் தெரு சுவாமிநாதசாஸ்திரிகளுக்கு இந்நகரத்தார் மிக்க நன்றி பாராட்டுகிறார் என்றும் இன்னும் இப்படி அநேக வருஷங்கள் இவ்வித வேலை ஷை சாஸ்திரியாரை செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறோமென்று சொல்லி தஞ்சை ஸ்ரீசுவாமிகளுக்கும், சபையோருக்கும் நன்றிதெரிவித்து முடிவுரைக் கூறினர்.

இரவு 8-மணிக்கு சபை நன்று மங்களத்துடன்கலைந்தது. ஒரு நிருபர்.

சென்னை ஸனாதநிகளின் கூட்டம்.

சென்னையில் பலபாகங்களிலுள்ள ஆஸ்திகர்களும் சனாதனிகளுமடங்கிய ஓர் பெரிய பொதுக்கூட்டம் 14-1-37 வியாழக்கிழமை மாலை $5\frac{1}{2}$ மணிக்கு திருவல்லிக்கேணி பெரிய தெரு 82 நெ. திருவல்லிக்கேணி கிளப் என்ற பொதுக்கட்டடத்தில் நடைபெற்றது. பலஸ்திரீகளும் விஜயம் செய்தனர். ஆரம்பத்தில் பிரம்மஸ்ரீ மரூர் கணேசாஸ்திரிகள் தெய்வப்ரார்த்தனைசெய்து ஸ்ரீமான் தண்டலப்ராமஸ்வாமியர் அவர்களை தலைமை வஹிக்க பிரேரிப்பித்தார். அத்தபிரேரணையை ஆமோதித்து ஸ்ரீமான் P. S. வைத்தினுதஸ்வாமி அய்யர் பேசுகையில் கூறியதாவது:— இன்று பொங்கல் பண்டிகை ஓர் உத்தமமான சுபதினம். பெரும்பாகம் விவசாயிளடங்கிய நமது தேசத்தில் இப்பண்டிகைபொது ஜனங்களுடைய அன்பு ஐசுவரியம் ஆனந்தம் இம்மூன்றையும் நன்கு விளக்குவதாகும். இன்று தான் பகவானுடைய பூர்ணகடாக்ஷம் ஸர்வ ஜனங்களுக்கும் ஏற்படக்கூடிய உதயகாலம் எனப்படும். இந்திராதிதேவதைகளும் கோபாலன் முதலிய தெய்வங்களும் அருள்புரிந்து ஜனங்களுக்கு தனதான்ய பசுக்களின் சமிருத்தியை அளிக்கும் பொருட்டு அவர்களுடைய ஆராதனைகளை ஜனங்கள் செய்யும் இந்தபண்டிகைதினத்தில் நாம் ஓர் சிறந்த முயற்சியைகைக் கைக்கொள்ளக் கூடியிருக்கிறோம். இது பரிபூர்த்தியடைந்து நமது தேசத்தில் ஸர்வஜனங்களுக்கும் தர்மவழியில் ஸ்திரமான கட்டுப்பாடும் ஒற்றுமையும் ஏற்படுவதற்கு இம்மாதிரி கூட்டங்கள் நன்கு நடைபெறவேண்டும். இதை நன்கு நடத்திவைக்க ஸ்ரீவான் ராமஸ்வாமிய்யர் போலொத்த தைரியம், சிரத்தை, ஐசுவரியம், வாய்ந்தவர்கள் தான்தேவை என்று கூறிய பிறகு ஸ்ரீமான் ராமஸ்வாமிய்யர் அவர்கள் அக்ராசனம் வகித்து முன்னுரையில் கூறியதாவது:— நாம் இன்று இங்கு இந்தஸ்திரீபுருஷர்களடங்கிய கூட்டத்தினிடையே கூடியிருப்பது எனக்கு மிகவும் சந்தோஷமுண்டாக்குகிறது. நமக்கு இப்பொழுது தர்மவிரோதமான ஆபத்துகள் வந்திருக்கின்றன. ஆலயப்பிரவேசம் எனப்படும் கிளர்ச்சி ஒருபக்கம் மதவிரோதமான சட்டங்கள் ஒருபக்கம், நம்மை மிகவும் கஷ்டத்திற்குள்ளாக்கிவிட்டன காங்கிரஸ்போலொத்த ஸ்தாபனம் விசேஷ நன்மை புரிந்தாலும் தர்மவிரோதமான காரியங்களில் தலையிடுவதை நாம் கண்டிக்கவேண்டும். நமக்குள் கட்டுப்பாடுவேண்டும். ஆங்காங்கு சனாதனிகளின் சபைகள் ஏற்பட்டு நமது அபிப்ராயங்களை தைரியமாய் வெளியிடவேண்டும். சட்டசபைகளுக்கு அபேக்ஷகர்களாக நிற்பவர்களிடமிருந்து மதம், ஆசாரம் இவைகளுக்கு விரோதமாய் தாங்கள் போகமாட்டோர் களென்று உறுதிமொழிவாங்க வேண்டும். அவ்வித உறுதிமொழிகளை அவர்கள் காப்பாற்ணுவிடில் சனாதன தர்மிகளையே பொறுக்கியெடுத்து நாம் அனுப்பவேண்டும்.

(இதன் தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க.)

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி, பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

கூடியசீக்கிரம் கூட்டப்படும் சனாதனிகளின் மகாநாட்டை எல்லோரும் பயனளிக்கக் கூடியதாகச் செய்யவேண்டும்.

பிறகு பிரம்மஸ்ரீ மருவூர் கணேச சாஸ்திரிகள் தர்ம விரோதமான பிரசாரத்தை அழுத்தமாய் கண்டித்துப்பேசினர்:—உலகம் சிருஷ்டியானதும் விராட்புருஷன் உலகத்திற்கு தர்மத்தை அஸ்திவாரமாக்கி அதைக்காக்க ஓர் தேவதையையும் ஏற்படுத்தினன். பழைய காலத்தில் ராவணுதிகளின் அட்டுழியமேற்பட்டும் மகரிஷிகளின் தபஸினுல் தர்மம் நிலை நின்றது. இப்பொழுது அவ்விதராக்ஷஸபாதையிராவிடினும் ஜனங்களிடம் தபஸிராததால் தர்மம் தத்தளிக்கிறது. நாம் என்ன கஷ்டமடைந்தாலும் சூக்ஷ்மமான தர்மத்தை கைவிடக் கூடாது. கலியில் சங்கத்தில் விசேஷசக்திஉண்டு. அவ்விதசங்கங்கள் எங்கும் பரவவேண்டும். இன்று நமது குலஸ்திரீகள் பலர் இங்கு விஜயம் செய்திருப்பது இந்தமுயற்சிக்கு விசேஷநற்குறியாகும். ஏதேனும் காரணம் கூறிக்கொண்டு அதர்மபிரசாரம் செய்பவர்கள் நிச்சயமாய் கஷ்டமடைவார்கள். ஆரம்பத்தில் காங்கிரஸ் இயக்கம் பலப்பட்டது, திலகர்போலொத்த தியாகிகளின் முயற்சியால் தான். அம்மாதிரியே தர்மத்தைதழைத்தோங்கும்படி செய்யதியாகபுத்தியுள்ள பிரசாரகர்கள் வேண்டும். இம்மாதிரி கூட்டங்கள் எல்லாவிடங்களிலும் ஏராளமான ஜனசமுஹங்களுக்கிடையே நடைபெறவேண்டும்.

பிறகு ஸ்ரீமான் N. ஸ்ரீனிவாசாச்சாரியார் B. A. B. L. பேசுகையில் கூறியதாவது:— இப்பொழுது நாம் மூன்று காரியங்களைக்கவனிக்கவேண்டும். முதலாவதாக புதியசட்டத்தில் மதசம்பந்தமான காரியங்களில் சர்க்கார் தலையிடுவதில்லையென்ற உறுதிமொழி கிடையாது. ஜனப்பிரதிநிதகள் இஷ்டம்போல் செய்யலாமென்று காணப்படுகிறது. ஆதலால் நாம் ஜாக்கிரதையுடன் சட்டசபை அபேக்ஷகர்களிடம் மதவிரோதமாக அவர்கள் எக்காரியமும் செய்வதில்லையென்று உறுதிமொழிகொடுத்தால் தான் அவர்களுக்கு நமது வோட்டைக் கொடுக்கவேண்டும். இரண்டாவதாக திருவாங்கூர் ஆலயப்பிரவேசக்கிளர்ச்சி போலொத்த விபரீதமுயற்சிகள் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வாராவண்ணம் ஆங்காங்கு ஏற்படுத்திபிரசாரம் நடத்தவேண்டும். 3-வதாக வரப்போகும் சனாதனதர்ம மகாநாட்டை நன்கு நடத்திவைத்து அதன் மூலம் நாம் சரியானவேலை திட்டம் போட்டுக்கொண்டு தர்மங்களுக்கு ஏற்படும் இடையூறுகளைபோக்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

1. திருவாங்கூர் மகா ராஜாவின் ஆலயப்பிரவேசவிளம்பரம் ஆலயம் செல்லும் பொது ஜனங்களின் மதஉணர்ச்சிக்கும் ஹிந்து சாஸ்திரங்களுக்கும் முற்றிலும் விரோதமானதென்றும் இக்கூட்டம் அழுத்தமாய் கூறுகிறது. (ஸ்ரீமான் T. P. ராமஸ்வாமிய்யர் பிரேரித்து L. நடராஜய்யர் ஆமோதித்தது).

2. அம்மாதிரி கிளர்ச்சி வேறிடங்களில் பரவாவண்ணம் தடுக்க பொதுஜனங்கள் கூட்டம் கூடியும் ஆங்காங்கு சனாதன தர்மசபைகள் ஏற்படுத்தியும் முயற்சி செய்யவேண்டும். (ஸ்ரீமான் என். சினிவாஸாசாரியார் பி. ஏ. பி. எல்., பிரேரித்து கிருஷ்ணதாஸ் ஆமோதித்தது).

3. எல்லா சனாதனசபைகளும் உடனே சட்டசபைகளுக்கு அபேக்ஷகர்களாயுள்ளவர்களை மதவிரோதமாக எக்காரியமும் செய்வதில்லையென்று வாக்குறுதி செய்யும்படி வற்புறுத்தவேண்டும். அப்படி அபேக்ஷகர்கள் உறுதி கூறாவிடில் சனாதநதர்மிகளாயுள்ளவர்களையே அபேக்ஷகர்களாக ஏற்படுத்தவேண்டும். (ஸ்ரீமான் ஆர். சுப்பிரமணியப்யர் பிரேரித்து ஜி. கிருஷ்ணய்யர் ஆமோதித்தது).

4. வரப்போகும் சனாதனதர்ம மகாநாடு நடப்பதைப்பற்றி இக்கூட்டம் சந்தோஷிப்பதுடன் அவ்வித மகாநாடு நன்கு நடைபெற எல்லா ஆஸ்திகர்களும் சனாதனிகளும் பூர்ணமாய் ஒத்துழைக்கவேண்டுமாய் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. (ஸ்ரீமான் பி. எஸ். வைத்தினுதஸ்வாமி அய்யர் பிரேரேரித்து ஆர், நடேசய்யர் ஆமோதித்தது).

கடைசியாக அக்கிராசனர் சில வார்த்தைகள் கூறியதும் ஸ்ரீமான் பி. எஸ். வைத்தினுதஸ்வாமிய்யர் வந்தனேபசாரம் கூறி கூட்டம் கலைந்தது.

ஒருநிருபர்

வெளியூர்ச் செய்திகள்.

செங்கற்பட்டு.

ஸத்காலக்ஷேபங்கள்.

செங்கற்பட்டு ஜில்லா ஹிந்துமத்யக் கமிட்டியின் ஆதரவின்கீழ் சென்ற 9வ (தாதுளு மார்கழிமீ 26வ) சனிக்கிழமை இரவு 8மணிக்கு பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதரவர்களால் இவ்வூர் ஸ்ரீ ஏகாம்பரநாதர் (ஈஸ்வரன்) கோயில் கல்யாண மண்டபத்தில் குசேலோபாக்யானமும், அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணிக்கு வாமணவதாரமும், உபன்யஸிக்கப்பட்டது.

மறுதினம் திங்கட்கிழமை (11—1—37) இரவு 8-30மணிக்கு ஷை பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரால், செங்கற்பட்டு ஜில்லா ஹிந்துமத்யக் கமிட்டியின் பிரஸிடெண்டும், ரிடையர்ட் போஸ்ட்மாஸ்டருமான மகா-ள-ஸ்ரீ விஸ்வநாத ஐயர் அவர்கள் கிரஹத்தில் ஸ்ரீமத் பாகவத ஸாரம் என்னும் காலக்ஷேபம் செய்யப்பட்டது.

மேற்குறித்த 3தினங்களிலும் ஏராளமான ஆஸ்திகர்கள் விஜயம் செய்து சிரவணுனந்தமடைந்தார்கள். இம்மாதிரியே ஷையார் அநேக ஸத்காலக்ஷேபங்கள் செய்யவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிப் பிரார்த்திக்கிறேன்.

பகவான் அவருக்கு நீண்ட ஆயுளையும், ஸகலஸம்பத்தையும் கொடுப்பாராக.

தனுர்மாஸபூர்த்தி வைபவம்.

இந்நகரில் சென்ற ஒருமாஸகாலமாய் பிரதிதினமும் விடியற்காலையில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் (ஈஸ்வரன்) கோயில் கல்யாண மண்டபத்தில் நடந்துவந்த தனுர்மாஸ பஜனையின் பூர்த்திவிழா சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்தது. அவ்வமயம் ஸ்ரீகண்ணபிரான் படத்திற்கு விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட்டு, இந்நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாய்க் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் இவ்வூர் வேதபாடசாலை உபாத்தியாயர் என். வி. கருஷ்ணமூர்த்தி தீக்ஷிதர் முதலியவர்களால் வேதபாராயணமும், பிரம்மஸ்ரீ என். வி. சர்மா அவர்களாலும் மற்றும் பல பக்தர்களாலும் பிரபல பஜனையும், மேளக்கச்சேரியும் நடைபெற்றது. பல ஆஸ்திகர்கள் வந்து பிரம்மானந்தமடைந்தார்கள். இவ்விஷயத்தில் மகா-ள-ஸ்ரீ வி. அகோரமய்யர், சந்தான குருக்கள் இவர்களுடைய ஊக்கம் பாராட்டத் தக்கது.

(ந வி. நிருபர்)

மருதாநல்லூர் ராதாகல்யாண உத்ஸவம்.

இந்த மாதம் 24வ(7-1-37,ராதாகல்யாண உத்ஸவம் வெகு விஸ்தாரமாய் நடந்தது. சுற்றுக் கிராமங்களிலிருந்து சுமார் 1000 ஜனங்கள் வந்து ச்ரத்தையுடன் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்கள். அஷ்டபதி கீர்த்தனைகள் பாடியபின் பிரும்மஸ்ரீ T. L. சுப்பய்யர் கலியுக தர்மத்தைப் பற்றியும் தற்காலம் பிராமணன் நடந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப் பற்றியும் விரிவாய் ஒரு உபந்யாஸம் செய்தார். பிறகு பிரும்மஸ்ரீ சிவராமகிருஷ்ணசாஸ்திரிகள் பிரஸங்கித்தார். திப்பராஜபுரம் நாராயணசாமி ச்ரௌதிகள் சாமவேத மஹிமையை விளக்கிக் காட்டினர். பிறகு கும்பகோணம் கடலங்குடித் தெரு ரிடையர்டு இஞ்சினீர் S. ஸ்வாமிநாத சாஸ்திரிகள் தற்காலம் வைதிகர்களும் லௌகிகர்களும் கவனிக்கவேண்டிய விஷயங்களை பற்றி விவரித்தும் ஊக்கத்துடன் கூறி ஸமூக ஸேவையும் தர்மப் பிரசாரமும் மிக்க அவச்யமென்றும் அதற்காக ஆர்யதர்மம் வாரப்பத்திரிகையை ஒவ்வொரு பிராமண கிராமம் அல்லது அக்ரஹாரத்திலும் ஒரு பேபராவது வரவழைத்து வாசிக்கவேண்டும் என்றும், அப்பத்திரிகையில் அங்கு அங்கு நடக்கும் தர்ம ஸம்பவங்களைப்பற்றி நடப்பதற்கும் முன்னும் நடந்த பின்னும் எழுதி விளம்பரம் செய்ய வேண்டுமென்றும், ஒவ்வொருஊரிலும் நியத காலங்களிலும் மாதத்திற்கு ஒரு முறையாவது பிராமணர்கள் எல்லோரும் ஒருங்கு கூடி தர்மபிரசர்ரம், சமூஹகாரியங்கள் முதலியவைகளை நடத்தி சமூகத்தை பலப்படுத்தி ஒரு மிக்கச் செய்யவேண்டுமென்றும் இன்னும் பலவிஷயங்களையும் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி வற்புறுத்தி ஒரு பிரஸங்கம் செய்தனர். கல்யாண உத்ஸவம் பஜனைகள் பின்பு நடந்து இரவு உத்ஸவம் வெகு விமரிசையாய் ஜனங்களுக்கு தெய்வபக்தியை பெருக்கிவைத்து முடிந்தது.

நமது நிருபர்.

ஸ்ரீவாஞ்சியம்.

ஸ்ரீ கிருஷ்ணவிநோத ஸபா.

ஸ்ரீவாஞ்சியம் என்கிற பாடல்பெற்ற புண்யக்ஷேத்திரத்தில் கிருஷ்ணவிநோதசபா ஒன்று ஏற்படுத்தப்பட்டு சுமார் 6-மாதகாலமாய் நடந்துவருகிறது. ஷை ஸபாவின் ஆதரவில் நாளது தாதுளு மார்கழிமீ 24வ முதல் ராதாகல்யாண உத்ஸவம் ஆரம்பித்து வெகு விமரிசையாய் 26உயன்று காலையில் ஸ்ரீராதாகல்யாணமும் பிறகு சங்கீதக்கச்சேரிகளும், இரவு 9-மணிக்கு முத்துவிமானத்தில் குறிப்பிடப்பட்ட மேளவாத்யங்களுடன் ஸ்ரீ கிருஷ்ணபகவான் உருவப்படம் வீதிவலமும் சிறப்பாய் நடந்தது. ஷை ஸபாவின் மெம்பர்களும் இதர பக்தர்களும் பிராமணர் பிராமணரல்லாதார் என்ற வேற்றுமையன்றியில் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்து நடத்தியது பாராட்டத் தக்கது.

R. வெங்கட்டராமன்.

உடன்கட்டை ஏறினுள்.

ஆக்ராநகரத்திற்கு 15மைல் தூரத்திலுள்ள கப்பூர் என்ற கிராமத்தில் கலாவதிதேவி என்ற பிராம்மணஸ்திரீ தனது பர்த்தாவுடன் தானுகவே மிகுந்த மகிழ்ச்சியுடன் உடன்கட்டை ஏறி உயிரைவிட்டாள். அநேக ஜனங்கள் இதைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இதில் ஸம்பந்தப்பட்டதாகச் சிலரைப் போலீஸார் கைது செய்திருக்கிறார்களாம்.

[illegible]

28. 1. 1937

4 ல

22 4

215170.

49

Registered No. M. 2913

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—
T. B. சீதாராம், டென்டிஸ்ட்
பெரியதெரு, கும்பகோணம்.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

215170

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஸு தை-மீ 15உ 1937-ஸு ஜனவரி-மீ 28உ | ஸ 4

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணும், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால், விலை சரஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோ ரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R. Ramaswami Iyengar, Proprietor

மாளவியாஜியின் தேர்தல் பிரசாரம்.

லாகூரில் கலஹம்-

ஸ்ரீமான் பண்டிதமாளவ்யா பஞ்சாபில் எலெக்ஷன் பிரசாரம் செய்வதற்காக விமானத்தில் வந்தார். அநேகக் கூட்டங்களில் தேசியக் காங்கிரஸ்கக்ஷி அபேக்ஷகர்களையும் சில விடங்களில் காங்கிரஸ் அபேக்ஷகர்களையும் ஆதரித்துப் பேசினார். காங்கிரஸ்வாதிகளே சிலவிடங்களில் கலஹம் செய்தனர். சில [illegible]. லக்ஷ்மணபுரியில் அவர் காங்கிரஸ் அபேக்ஷகரை ஆதரித்துப்பேசினார். எதிர்க்கக்ஷியார் மாளவியாஜியைப் பேசவொட்டாமல் தடுத்தனர். கூட்டத்தில் அடிதடி நடந்தது. கற்களும் ஜோடுகளும் வீசியறியப்பட்டன. 12-பேர்கள்வரையில் பலத்தகாயம் அடைந்தனர்.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம் ஸு ஸ்தாபிக்கப்பட்டது.)

கிளை ஆபீஸ்கள்:—மன்னார்குடி & நாகபட்டணம்.
ஸப் ஆபீஸ்கள்:—நன்னிலம் & அய்யம்பேட்டை.
22—1—1937 எடுக்கப்பட்ட கோஷ்பாரா.

மூலதனம், செல்வுகள்.	ரூ.	அ.	பை.	சொத்துகள், இருப்புகள்.	ரூ.	அ.	பை
1. மூலதனம் (வாவுவந்த பங்குத்தொகைகள்)	2,82,575	0	0	1. வரவேண்டிய கடன்கள், வசூலிக்க வேண்டிய உண்டியல்கள், அதிக பத்துகள் உள்பட	13,62,223	2	7
2. க்ஷேமநிதிகள், காப்புநிதிகள்	1,88,410	7	3	2. இன்வெஸ்ட்டுமென்டுகள்:- சர்க்கார், ஸ்டேட் கடன் பத்திரங்கள்	1,55,008	8	4
				இதர இனங்கள்	2,51,663	0	0
3. தவணை, நடப்பு, சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள்	16,78,926	8	3	3. ஆபீஸ் சாமான்கள், கட்டிடங்கள், ஸ்தாவரங்கள்	63,391	10	1
4. சில்லரை இனங்கள்	13,541	7	3	4. சில்லரை இனங்கள்	20,837	14	6
5. வருமானம்	23,686	2	2	5. இருப்பு:— ரொக்கமும்,	1,92,494	15	7
	6,066	0	4	இதர பாங்கிகளிலும்	1.47,586	6	2
மொத்தம்	21,93,205	9	3	மொத்தம்	21,93,205	9	3

கும்பகோணம்,
25—1—'37

S. மகாலிங்கய்யர்,
மானேஜிங் டைரெக்டர்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூ க ப ஞ் ச ச தீ’

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

ஸ்ரீமதாசார்யாளும்

‘மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாசமுபரி |
மனோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||’

என்று ‘ஸௌந்தர்யலஹரி’யில் வர்ணித்திருக்கிறார்கள்.

குண்டலினியின் ஸஞ்சாரத்தைப்பற்றியே பின்வருமாறும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

‘குலாங்கனேஷாப்யத ராஜவீதீ:
ப்ரவிச்ய ஸங்கேத க்ருஹாந்தரேஷு |
விச்ரம்ய விச்ரம்ய வரேண பும்ஸா
ஸங்கம்ய ஸங்கம்ய ரஸம் ப்ரஸூதே ||’

இவ்விதமான சேர்க்கையினால் அம்ருதப்ரவாஹம் உண்டாகிறதென்றும் அதினால் தேஹத்திலுள்ள ஸகல நாடிகளும் நனைப்பெற்று முடிவாக திவ்யமான சரீரமேற்படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

‘வ்யோமனி சித்சசி மண்டல மத்யேத்வகுலேன ஸங்கம்ய |
உபயாங்க ஸங்கஜன்யம் ப்ரவாஹயந்தீ ஸுதாபூரம் ||”

(வரிவஸ்யா ரஹஸ்யம்)

‘ஸுதா தாராஸாரை: சரணயுகளாந்தர்விகளிதை: |
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ .... ||

(ஸௌந்தர்யலஹரீ)

3. பக்தியென்பதே ஈச்வானிடத்தில் பரானுராக ஸ்வரூபமென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உத்தமமான பக்தர்கள் ஈச்வானுக்கும் தங்களுக்கும் நாயக, நாயகீ பாவத்தைக் கல்பித்துக் கொண்டு அந்த மனோபாவத்துடனேயே உபாஸிப்பதை ஆதிகாலம் முதல் நாம் பார்க்கிறோம்.

4. ஆகவே, சிவசக்திகளுடைய ஸமாயோகமே யோகமென்பதாகவும் அவ்வித ஸம்யோகத்தினால் உண்டாகும் ஸுகமே பரமானந்தத்தின் லக்ஷணமென்பதாகவும் ஏற்படுகிறது. இவ்விதமான ஸம்யோகமானது ஸூக்ஷ்ம ஸாமரஸ்யமெனப்படும். ஸ்தூல ஸாமரஸ்யமானது ஸூக்ஷ்ம ஸாமரஸ்யமான சிவசக்தி ஸம்யோகத்திற்கு அநுக்ருதியாகவும் அதைப் போன்றதான ப்ரதிபிம்பமாகவுமிருக்கிறபடியால் அவ்வித ஸ்தூல ஸாமரஸ்யத்தை போதிக்கும் ச்ருங்கார சாஸத்ரமானது (ஸ்திரீபுமான்கள் இறண்டறக் கலப்பதைப்பற்றியதால்) அத்வைத தந்த்ரமென்றும் அதற்கு அதிஷ்டான தேவதையாக அம்பிகை இருக்கிறாள் என்றும் சொல்வதில் யாதொரு பிசகும் இல்லை. (ச்ருங்கார சாஸ்த்ரமானது பிறருடைய ஸ்திரீகளை அடைவதற்காக ஏற்பட்டதல்லவென்பதை ஞாபகப்படுத்திக்கொண்டால் மேலே சொல்லியதற்கு யாதொரு ஆக்ஷேபமும் தோன்றுவதற்கு இடமில்லை. இந்த விஷயத்தைப் பற்றி அறிய விரும்புவோர்கள் பாஸ்கரராயருடைய க்ரந்தங்களையும் ஆர்தர் ஏவலனுடைய புஸ்தகங்களையும் பார்க்கலாம்)

11. காஞ்சீரத்னவிபூஷாம்
காமபி கந்தர்ப்ப ஸூதிகாபாங்கீம் |
பரமாம் கலாமுபாஸே
பரசிவ வாமாங்க பீடிகாஸீனாம் ||

காஞ்சீரத்னவிபூஷாம் - காஞ்சியாகிற ரத்னத்தை அலங்காரமாயுடையவளும், கந்தர்ப்பஸூதிகாபாங்கீம்-மன்மதனுக்குப் பிறப்பிடமாக இருக்கும் கடாக்ஷத்தையுடையவளும், பரசிவ வாமாங்க பீடிகாஸீனாம் - பரமசிவனுடைய இடது துடையில் வீற்றிருப்பவளுமான, காமபி-ஓரொருந, பரமாம் கலாம்-பரம்பொருளை, உபாஸே-உபாஸிக்கிறேன்.

1. காஞ்சியென்றால் ஸ்திரீகள் இடுப்பில் தரிக்கும் மேகலை (ஒட்டியாணம்) என்று அர்த்தம். அதிலிழைக்கப்பட்ட ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டவள், ‘காஞ்சீரத்னவிபூஷா’ என்றும் சொல்லலாம்.

2. பரமசிவனுடைய நேத்ராக்னியினால் மன்மதன் எரிக்கப்பட்ட பிறகு லலிதாம்பிகையும் காமேச்வரரும் தோன்றியதைப் பற்றியும் பண்டாஸுர ஸம்ஹாரமான பிறகு தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அம்பிகையானவள் மன்மதனைக் கடைக்கண்பார்வையினால் பிழைப்பூட்டியதைப் பற்றியும், லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தன் புருஷன் இறந்ததினால் மிகவும் துக்கித்திருக்கும் ரதிதேவியை அம்பிகை பார்த்தவுடன், மன்மதன் உண்டானது பின்வருமாறு.

‘அத தத் தர்சனோத்பன்ன காருண்யா பரமேச்வரீ |
காந்தம் கடாக்ஷயாமாஸ காமேச்வரம் அனிந்திதா ||
தத: கடாக்ஷாத் உத்பன்ன: ஸ்மயமான முகாம்புஜ: |
பூர்வதேஹாதிகருசி: மன்மதோ மதமேதுர: ||

த்விபுஜ: ஸர்வபூஷாட்ய: புஷ்பேஷு: புண்ட்ரகார்முக: |
ஆனந்தயன் கடாக்ஷேண பூர்வஜன்மப்ரியாம் ரதிம் ||’

இவ்விதம் மன்மதனுடைய (மறு) பிறப்பானது அம்பிகையின் கடாக்ஷத்தினால் ஏற்பட்டதால் அந்த கடாக்ஷத்தை அவன் பிறந்த இடமாக (ஸூதிகாக்ருஹமாக) வர்ணிக்கப்பட்டது.

12. கம்பாதீர சராணும்
கருணாகோரகித த்ருஷ்டிபாதாணும் |
கேளீவனம் மனோ மே
கேஷாம்சித் பவது சித்விலாஸாணும் ||

கம்பாதீரசராணும் - கம்பா நதியின் தீரத்தில் ஸஞ்சரிப்பவைகளும், கருணாகோரகித - கருணை பூத்த, த்ருஷ்டிபாதாணும் - பார்வையோடு கூடியவைகளுமான, கேஷாம் சித்-சில, சித்விலாஸாணும்-சின்மயமான விலாஸங்களுக்கு, மே மன: - என்னுடைய மனதானது, கேளீவனம் பவது - க்ரீடைக்குரிய உத்யானவனமாக ஆகட்டும்.

1. கோரகமென்றால் மொக்கு என்று அர்த்தம். அம்பாளுடைய பார்வைகள் கருணையால் நிறைந்தவைகளென்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டிருப்பதின் தாத்பர்யம்.

13. ஆம்ரதருமூல வஸதே:
ஆதிம புருஷஸ்ய நயன பீயூஷம் |
ஆரப்த யௌவனோத்ஸவம்
ஆம்னாயரஹஸ்யம் அந்தரவலம்பே ||

ஆம்ரதருமூலவஸதே: - ஏகாம்ர மரத்தின் அடியை வாஸஸ்தானமாகவுடைய, ஆதிமபுருஷஸ்ய - (ஆதி புருஷனை) பரமசிவனுடைய, நயனபீயூஷம் - கண்களுக்கு அம்ருதமாயிருப்பதும், ஆரப்த யௌவனோத்ஸவம் - யௌவனத்தின் ஸந்தோஷத்தினுடைய ஆரம்பத்தையுடையதும், ஆம்னாயரஹஸ்யம் - வேதங்களின்ஸாரமாயிருப்பதுமான பரம்பொருளை, அந்த: அவலம்பே - என் மனதிற்குள் கடைப்பிடித்திருக்கிறேன் (த்ருடமாக த்யானித்திருக்கிறேன்.)

1. காமேச்வரரானவர் பஞ்சப்ரம்ஹமயமான மஞ்சத்தில் காமேச்வரியை (ஸ்ரீலலிதாம்பிகையை) தன் இடது துடையின் மீது வைத்துக்கொண்டு ஸதாகாலமும் அம்பிகையின் அழகில் ஈடுபட்டு ஆனந்தத்தில் மூழ்கி அம்பிகையையே பார்த்தவண்ணமாய் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இருவரும் ஒரே விதமான வயது, ஸௌந்தர்யம், ஆயுதங்கள் முதலியவைகளுடன் பொருந்தியிருப்பவர்களாகச் சொல்லப்படும். அவரும் ஸதாஷோடசவார்ஷிக:, அம்பிகையும் ஸதா ஷோடசவர்ஷீயா. (அதினால் தான் இங்கு, ஆரப்தயௌவனோத்ஸவமென்று சொல்லப்பட்டது.)

2. ஸ்த்ரீகளை வயதின் க்ரமமாக வர்ணிக்கையில் பதினாறு வயது வரையில் பாலை என்றும், அதற்குமேல் இருபது வரையில் தருணீ (யௌவனை) என்றும் அதற்குமேல் ஐம்பதுவரையில் ப்ரௌடை என்றும் அதற்குமேல் வ்ருத்தையென்றும் சொல்லப்படும்.

‘பாலா ஸ்யாத் ஷோடசாப்தா ததுபரி தருணீ
விம்சதேர் யாவதூர்த்வம்
ப்ரௌடாஸ்யாத் பஞ்ச பஞ்சா—
சதவதி பாதோ வ்ருத்ததாமேதி நாரீ |

அம்பிகை ஸதாஷோடசவர்ஷீயாகச் சொல்லப்படுவதால் இங்கு ‘ஆரப்தயௌவனோத்ஸவ’மென்றும் இதற்கு முன் வந்த 9-வது ச்லோகத்தில் ‘ஆரூடயௌவனாடோபாம்’ என்றும் சொல்லப்பட்டது.

3 ஆம்னாயமென்பது வேதங்களைக் குறிப்பதுடன் தந்த்ர சாஸ்த்ரங்களையும் குறிக்கும்.

4. காஞ்சீபுரியிலிருக்கும் பரமசிவனுடைய மூர்த்திக்கு ஏகாம்ர நாதரென்று பெயர். அவரே காமேச்வர ஸ்வரூபமென்று சொல்லப்படும். கைலாஸத்தில் ஒரு ஸமயம் பரமசிவனானவர் அந்தப்புரத்தில் பார்வதீ தேவிக்கு அர்த்தாஸனம் கொடுத்து ஆனந்தமாக இருக்கும்போது அறுபத்திநாலு கலைகளின் ரூபிணிகளும் அவருக்கு மிகவும் ப்ரியைகளாயுமுள்ள சக்திகள் சற்று அஹங்காரம் கொண்டவர்களாய் பரமசிவனை நோக்கித் தங்களுக்கும் பார்வதீதேவி மாதிரி அர்த்தாஸனம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது பரமசிவன் அவர்களை நோக்கி, கைலாஸத்திலிருக்கும் ஸகல புருஷர்களும் தன்னுடைய அம்சங்களென்றும் கைலாஸத்திய ஸ்த்ரீகளெல்லோரும் கௌரியினுடைய அம்சங்களென்றும் அப்படியிருந்தும் புருஷர்களுக்குள் தான் ச்ரேஷ்டமாயிருப்பது மாதிரி ஸ்திரீகளுக்குள் கௌரியே ச்ரேஷ்டமானவளென்றும், ஆகவே கௌரீதான் தன்னுடைய அர்த்தாஸனத்தில் வீற்றிருக்கத் தகுதியானவள் என்பதாக

‘மமாம்ச ஜாதா: கைலாஸே பும் ரூபேண ஸமன்விதா: |
ததா கௌர்யாம்ச ஸம்பூதா: மம காந்தா ஹி ஸர்வச: |
பும் ரூபாணாம்ஸ்து ஸர்வேஷாம் வரோஹம் புருஷேச்வா: |
ததா ஸ்த்ரீணாம் வரா கௌரீ மம காந்தாஸ் ஸசக்தய: ||
தஸ்மாத் யூயம் மஹாகௌர்யா: கிஞ்சின் ந்யூனதயான்விதா:
ஸர்வாஸாம் சைவ சக்தீனாம் ஏஷோத்க்ருஷ்டா ஹி பார்வதீ |
ஸமாஸனே ஸமாஸீனா வஸத்யந்த: புரே ஸதா |
ததாஸனம் ந தாதவ்யம் யுஷ்மப்யம் உமயா ஸஹ ||’

என்று பதில் சொன்னார்.

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ ல லி தா ஸ ஹ ஸ்ர நா ம ம்.

(21—1—37 தொடர்ச்சி)

பராமோதா 940

உத்க்ருஷ்டமான கீர்த்தியை யுடையவள்.

1. ஆமோதமென்பது பரிமளத்தைக் குறிக்கும். இங்கு கீர்த்தி என்று அர்த்தம்.

2. அல்லது, பர—உத்க்ருஷ்டமானதும், ஆ - எங்கும் பரவியிருப்பதுமான, மோதா—ஸந்தோஷத்தையுடையவள் என்றும் சொல்லலாம்..

மனோமயீ 941

மனதையே ரூபமாக உடையவள்.

1. சுத்த ப்ரம்ஹமானது சிதாகாச ரூபமாய் மனதிலிருப்பதாயும் அதோடு அபேதமாய் அதின் ஸ்பந்த சக்தியாக அம்பாளிருப்பதாயும் மஹாவாஸிஷ்ட ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

‘ஸ பைரவ: சிதாகாச: சிவ இத்யபிதீயதே |
அனன்யாம் தஸ்ய தாம் வித்தி ஸ்பந்தசக்திர் மனோமயீ ||

2 ‘மனஸைவானுத்ரஷ்டவ்ய:’ என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி ஆத்மஞானம் ஏற்படுவதற்கு மனதுதான் ப்ரதானமாயிருக்கிறபடியால் மன:ப்ரதானையாயிருப்பவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

வ்யோமகேசீ 942

ஆகாசத்தை கேசங்களாக உடையவள்

1. அம்பாளுடைய விராட் ஸ்வரூபத்தில் வ்யோமமானது கேசமாக இருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டது.

2. சிவனுக்கும் வ்யோமமானது கேசமாக இருப்பதால் அவருக்கு வ்யோமகேசனென்று பெயர். ஆகவே அவருடைய பத்னியாகிய அம்பாளுக்கு வ்யோமகேசீ என்று பெயர் ஏற்படுகிறது.

3. ஒரு பதத்திற்கு க என்பதைச் சேர்த்தால் குறைவானது (சிறியது) என்று அர்த்தம் ஏற்படும். ஆகவே வ்யோமகமென்றால் அல்பமான, சிறியதான ஆகாசம் என்று அர்த்தம். அதற்கும் ஈசீ என்றால் அங்கும் கூட வ்யாபித்திருப்பவளென்று அர்த்தம்.

4. வ்யோமகேசனை சிவனுக்கு திக்குகள் பத்னீ என்பதாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவ்விதமான திக் ஸ்வரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

விமாநஸ்ததா 943

விமானத்தில் வீற்றிருப்பவள்

1. விமானம் என்பது ஆகாசத்தில்போகும் வாஹனம் அதிலிருப்பவர்கள் விமானஸ்தர்கள்—தேவர்கள். அவர்களோடு அம்பாள் அபின்னமாக இருப்பதால் அதே பெயர் ஏற்பட்டது.

2. அல்லது, வி — விசேஷமாக, மான - ஆதரிப்பதில், ஸ்தா - ஸ்திதியோடு இருப்பவள் — அதாவது, பக்தர்களை ஆதரிப்பதில் விசேஷமான பற்றுதலையுடையவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, விசேஷமான மா - காந்தியோடுகூடியது விமம் அவ்விதமான அன: - சகடத்தோடுகூடியது கிரிசக்கம் முதலான ரதம். அதில் இருப்பவள் விமானஸ்தா.

4. விமான - பரிமாணமில்லாத (அபரிச்சின்னமான) ப்ரம்ஹம். அதிலிருப்பவள் விமானஸ்ததா.

5. மானஸ்த்தா என்றால் பரிமாணத்திலிருப்பவள். அதாவது பரிமாணத்தினால் அவிச்சின்னமானவள். அது இல்லாதவள் விமானஸ்ததா.

6. உண்மையான அறிவை (முடிவை) விசேஷமாய் ஏற்படுத்துவதால் வேதத்திற்கு விமானமென்று பெயர். அதிலிருப்பவள், அதாவது, அதில் ப்ரதிபாதிக்கப்படுகிறவள் விமானஸ்தா.

7. விமானங்களில்— வேதத்திற்கு விருத்தமில்லாத மானங்களில் (ப்ராமணங்களில்), தர்ம ப்ரம்ஹ ரூபமாக அம்பாளிருப்பதால் விமானஸ்ததா என்று பெயர்.

8 அல்லது, விசேஷமாக மானத்தின் (அளவைப்பற்றிய அறிவின்) ரூபமாயிருப்பதாகச் சொல்லப்படும் புராண, ந்யாய, மீமாம்ஸா முதலான பதினான்கு வித்யாஸ்தானங்களிலிருப்பவள் விமானஸ்த்தா என்றும் சொல்லலாம்

வஜ்ரிணீ 944

இந்த்ரனுடைய பத்னியான சசீ ரூபமாயிருப்பவள்

1. அல்லது, வஜ்ராயுதத்தை தரிப்பவளென்றும் சொல்லலாம்.

2. அல்லது, வஜ்ரங்கள் (வைரங்கள்) என்ற ரத்னங்களால் அலங்க்ருதமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. ‘மஹத் பயம் வஜ்ரமுத்யதம்’ என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி வஜ்ரமென்ற பதமானது ப்ரம்ஹத்தைக் குறிக்கும். அதை பரிச்சின்னமாக (அளவுக்குள்பட்டதாக) செய்வதான ஸம்பந்தத்தோடு அம்பாளிருப்பதால் ப்ரம்ஹத்தையுடையவளென்று இங்கு சொல்லப்பட்டது.

வாமகேச்வரீ 945

வாமகேச்வரமென்ற தந்த்ரத்தின் ரூபமாயிருப்பவள்

1. அல்லது, அந்த தந்த்ரத்தினால் ப்ரதிபாதிக்கப்பட்டவள் என்று சொல்லலாம்.

2. வாம மார்க்கத்தை அவலம்பித்திருப்பவர்களை வாமர்கள் என்று சொல்லப்படும். அவர்கள் பஞ்சயக்ஞங்களை அவச்யமாகக் கருதுவதில்லையாதலால் அவர்களைக்கொஞ்சம் குறைவாக வாமகர்களென்று சொல்வது வழக்கம். அவர்களுக்கு ஈச்வரீ, அதாவது அவர்களால் உபாஸிக்கப்பட்டவள் வாமகேச்வரீ.

3. ஜகத் ஸ்ருஷ்டி கர்த்தாக்களாகிய தக்ஷன் முதலிய ப்ராஜாபதிகளை வாமகர்களெனப்படும். அவர்களுக்கு ஈச்வரீ என்றும் சொல்லலாம்.

பஞ்சயக்ஞப்ரியா 946

பஞ்சயக்ஞங்களில் ப்ரியமுள்ளவள்

1. பஞ்ச (ஐந்து) யக்ஞங்கள் என்ற பதமானது இன்னின்ன யக்ஞங்களென்று குறிப்பிட்டு ஏற்பட்டிருப்பதால் அவற்றை இந்த மாதிரி பஞ்சயக்ஞங்கள் என்ற பெயரால் சொல்லப்படும். ச்ருதியில்

‘ஸ ஏஷ யக்ஞ: பஞ்சவிதோऽக்னிஹோத்ரம்
தர்சபூர்ணமாஸௌ சாதுர்மாஸ்யானி பசு: ஸோம: ||

என்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட பஞ்ச (மஹா) யக்ஞங்கள் என்பவை தேவ, ப்ரம்ஹ, பித்ரு, பூத, மனுஷ்ய யக்ஞங்கள்.

2. அல்லது, அடியில் சொல்லப்படும் பூஜா ப்ரகாரங்களை பஞ்சயக்ஞங்களென்றும் சொல்லப்படும். பாஞ்சராத்ராகமத்தில் அவை அபிகமனம், உபாதானம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகம் என்பவை. குலாகமத்தில்

‘கேவலோ யாமளோ மிச்ர: சக்ரயுக் வீரஸம்கர: |
இதி பஞ்சவிதா பூஜா .... ||

என்ற ஐந்துவிதமான பூஜைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நித்யா தந்த்ரத்தில்

‘ஹோதிபிர் மத்ய மாத்யம் ஸ்யாத் த்விதீயம் நவயோனிஷு |’

என்று ஆரம்பித்து,

‘இதி பஞ்சப்ரகாரார்ச்சா ப்ரோக்தா ஸர்வார்த்தஸித்திதா ||

என்று ஐந்து ப்ரகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ப்ருஹத் தந்த்ர கௌமுதியிலும் அதையடுத்ததான மந்த்ரமஹோததியிலும்

‘ஆதுரீ ஸௌதகீ தௌர்போதீ த்ராஸீஸாதனுபாவனீ |’

என்று ஐந்து விதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

3 இவை தவிற, அக்னிஹோத்ரத்தின்போது ஐந்துவிதமான குண்டங்களில் ஆஹுதிகள் செய்வதையும் பஞ்சயக்ஞங்களென்று சொல்லப்படும். இதைப்பற்றி சாந்தோக்ய உபநிஷத்தில்

‘அக்னிஹோத்ரே ஹூயமானா ஆக்தாகிருபா ஆப:
ஸோம, த்யு, ப்ருதிவீ, புருஷ, யோஷித் ரூப குண்டபஞ்சகே
புன: புனர் ஹூயந்தே ததா தா ஏவாப: சரீரபாவம் பஜந்தி |’

என்பது முதலான வாக்யங்களில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

4. பஞ்ச என்றால் விஸ்தாரமென்றும் அர்த்தமாகையால் பஞ்சயக்ஞமென்பது அயனம் முதலானவற்றையும் குறிக்கும்.

பஞ்சப்ரேதமஞ்சாதிசாயினீ 947

பஞ்சப்ரேதங்களாலாகிய மஞ்சத்தில் வீற்றிருப்பவள்

1. ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் இந்த ஐவரும் வாமா முதலான தங்களுடைய சக்திகளோடு இல்லாதபோது அவரவர்கள் தங்கள் தங்கள் கார்யங்களைச் செய்யமுடியாமல் இருப்பார்களாகையால் அவர்களை ப்ரேதங்களென்று சொல்லப்படும். அவர்களாலான கட்டிலின் மீது காமேச்வரரும் அவருடைய வாமாங்கத்தில் காமேச்வரியும் இருப்பதாகச் சொல்லப்படும். அந்தக் கட்டிலுக்கு ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன். ஈச்வரன், இந்நால்வரும் கால்களாயும், ஸதாசிவன் மேல் பலகையாகவும் இருப்பதால் அதற்கு பஞ்சப்ரேத மஞ்சமென்று பெயர்.

‘சிவாத்மகே மஹாமஞ்சே மஹேசானோபபர்ஹணே |
ப்ருதகாச்ச சதுஷ்பாதா: கசிபுச்ச ஸதாசிவ: |
தத்ர சேதே மஹேசானீ மஹாத்ரிபுரஸுந்தரீ ||

(பைரவயாமளம்-பஹுரூபாஷ்டக ப்ரஸ்தாரம்)

‘ஸதனஸ்யோபரி தாஸாம் ஸர்வானந்தமய நாமகே பிந்தௌ |
பஞ்சப்ரம்ஹாகாரம் மஞ்சம் ப்ரணமாமி மணிகணாகீர்ணம் ||

....

பர்யங்கஸ்ய பஜாம: பாதான் பிம்பாம்புதேந்துஹேமருச: |
அஜஹரிருத்ரேசமயான் அனலாஸுராமருதேச
கோணஸ்த்தான் ||

பலகம் ஸதாசிவமயம் ப்ரணௌமி ஸிந்தூர ரேணு கிரணம் ||’

(லலிதாஸ்தவரத்னம்)

‘கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண ஹரி ருத்ரேச்வர ப்ருத:
சிவ: ஸ்வச்சச்சாயா கடித கபட ப்ரச்சதபட: |’

(ஸௌந்தர்யலஹரீ)

இந்த மஞ்சத்தைப்பற்றி விபரமாக லலிதோபாக்யானத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

பஞ்சமீ 948

ஸதாசிவனுடைய பத்னியாக இருபவள்

1. ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் என்ற ஐவரில் முதல் மூவருக்குள் ருத்ரன் மேலானவர் என்றும், அவரை விட (மாயையோடுகூடிய சிவனை) ஈச்வரன் மேலானவனென்றும், அவரையும் விட ஸதாசிவன்மேலானவனென்றும் சொல்லப்பட்டிருப்பதால், அவர்களில் பஞ்சமரான (ஐந்தாவதான) ஸதாசிவருடைய பத்னியாகிய அம்பாளுக்கு பஞ்சமீ என்ற இந்த நாமம் ஏற்பட்டது.

'த்ரிஷு ருத்ரோ வரிஷ்ட: ஸ்யாத் தேஷு
மாயீ பர: சிவ: |
மாயாவிசிஷ்டாத் ஸர்வக்ஞாத் ஸாம்ப: ஸத்
யாதிலக்ஷண: ||
ஸதாசிவோ வரிஷ்ட: ஸ்யாத் நாத்ர கார்யா
விசாரணா ||
(ஸூதகீதை)

2. பஞ்சமீ என்று வாராஹிக்குப் பெயராகையால் அவளுடைய ரூபமாய் இருப்பவளென்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம்சொல்லலாம். வாராஹியின்பெயர்கள்பின்வருமாறு-

'பஞ்சமீ தண்டநாதா ச ஸங்கேதா ஸமயே
ச்வரீ |
ததா ஸமயஸங்கேதா வாராஹீ போத்ரிணீ
சிவா ||
வார்த்தாளீ ச மஹாஸேனாப்யாக்ஞா-
சக்ரேச்வரீ ததா |
அரிக்னீ சேதி ஸம்ப்ரோக்தம் நாம
த்வாதசகம் முனே ||'
(லலிதோபாக்யானம்)

இந்தப் பெயரானது வாராஹியானவள் ப்ராம்ஹீ முதலான மாதாக்களில் ஐந்தாவதாயும், பஞ்சரத்ன தேவதைகளுக்குள் கடைசியாகவும், பஞ்சகோச தேவதைகளில் கடைசியாகவும் இருப்பதால் கணக்கிலிருந்து ஏற்படுவதுடன், வாராஹிக்கே பஞ்சமீ என்று பெயர் இயற்கையாகவே இருப்பதாக 'பூஜயேத் பஞ்சமீஸூதம்,' 'கடம் ஸ்ப்ருஷ்ட்வா ஹ்ருதி த்யாத்வா பஞ்சமீம் பரமேச்வரீம்,' 'பஞ்சமீம் சகடம் யந்த்ரம் த்ரிஷு லோகேஷு துர்லப:' என்பது முதலாக தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதையிலும் மற்றும் பலவிதமான ப்ரயோகங்களிலிருந்தும் தெரிகிறது.

3. பஞ்ச மகாரங்களில் கடைசியானது ஆனந்த ரூபமாயிருப்பதால் அந்த ரூபமாய் இருப்பவளென்றும் சொல்லலாம்.

'ஆனந்தம் ப்ரம்ஹணோ ரூபம், தத் ச தேஹே
வ்யவஸ்திதம் |
தஸ்யாபிவ்யஞ்ஜகா: பஞ்ச மகாரா:, தைர்ச்
சனம் குப்த்யா ||'
(பரசுராமகல்பஸூத்ரம்)

தவிர, பஞ்ச - ஐந்து, மா க்களுடைய - மகாரங்களுடைய, சேர்க்கையாக ரூபமாயிருப்பவள் பஞ்சமீ என்றும் சொல்லலாம். இந்த பஞ்சமகாரங்களைப் பற்றி த்ரைபுர ஸூக்தத்தில்

'பரிஸ்ருதம் ஜுஷமாத்யம் பலம் ச
பக்தானி யோனீ: ஸுபரிஷ்க்ருதானி |
நிவேதயன் தேவதாயை மஹத்யை
ஸ்வாத்மீக்ருத்ய ஸுக்ருதீ ஸித்திமேதி ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றின் தானம், சுத்தி முதலியவைகளைப்பற்றி குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது.

4. அல்லது

'பஞ்சமாஹூதாவாப: புருஷவசஸோ
பவந்தி |'

என்று ச்ருதிப்ரஸித்தமான யக்ஞமானது அங்கு சொல்லப்பட்ட யக்ஞங்களில் ஐந்தாவதாக வருவதால் அதின் ரூபமாக இருப்பதாகவும் அர்த்தம் சொல்லலாம். [இதைப் பற்றி 946 நாமத்தின் 3-வது குறிப்பில் பார்க்கவும்.]

5. அல்லது, கைவல்யமென்று சொல்லப்படும் ஐந்தாவதான முக்தியின் ரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

பஞ்சபூதேசீ. 949

ப்ருதிவீ முதலான பஞ்சபூதங்களுக்கு ஈச்வரியாயிருப்பவள்

1. ப்ருதிவீ முதலான பஞ்சபூதங்களின் ஸத்தா ரூபமாக அம்பாளிருப்பதால் அவற்றிற்கு அதிகாரிணியாகச் சொல்லப்பட்டது. [இதைப்பற்றி ஸ்ரீவித்யாரண்யாருடைய பஞ்சதசியில் பஞ்சபூத விவேகத்தில் பார்க்கவும்]

2. விஷ்ணுவின் வைஜயந்திமாலையானது பஞ்சபூதாத்மகமாயிருப்பதாகச் சொல்லப்படுவதால் அதற்கு ஈச்வரீ அதாவது, விஷ்ணுரூபிணீ என்றும் அர்த்தம் சொல்லலாம்.

'பஞ்சரூபா து யா மாலா வைஜயந்தீ கதா
ப்ருத: |
ஸா பூதஹேதுஸங்காதா பூதமாலா பவேத்
த்விஜ ||
(விஷ்ணுபுராணம்)

மேலும் அந்த மாலையானது முத்து, மாணிக்யம், மரகதம், இந்த்ரநீலம், வஜ்ரம் (வைரம்) இவற்றின் வர்ணத்தோடிருப்பதால் அதை பஞ்சரூபா என்று மேலே சொல்லப்பட்டது. இந்த வைரங்கள் பஞ்சபூதங்களிலிருந்துண்டானதால் வைஜயந்தியானது பஞ்சாத்மகமென்று சொல்லப்படும்.

'ப்ருதிவ்யாம் நீலஸம்ஞானம் அப்ப்யோ
முக்தாபலானி ச |
தேஜஸ: கௌஸ்துபோ ஜாத: வாயோர்
வைடூர்ய ஸம்ஞகம் ||
புஷ்காராத் புஷ்பாகஸ்து வைஜயந்த்யா
ஹரேரிமே ||'
(விஷ்ணுரஹஸ்யம்)

பஞ்சஸங்க்யோபசாரிணீ 950

ஐந்து என்பதான எண்ணிக்கையோடு கூடிய உபசாரங்களை உடையவள்.

1. இவை கந்த, புஷ்ப, தூப, தீப, நைவேத்யம் என்பவை. இவற்றை பஞ்சோபசாரங்கள் என்று சொல்லப்படும்.

எலெக்ஷன் கலஹங்கள். மீண்டும் 2 கொலை?

இந்தியாவில் சட்டஸபை எலெக்ஷனை முன்னிட்டு பலமாகாணங்களிலும் பலஜில்லாக்களிலும்அடிதடிகளும் கலஹங்களும் வெகுவாக நடைபெறுகிறதாகப் பத்திரிகைகளில் வெளியாகிறது.

பம்பாயில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அடிக்கடி கலஹம் நேரிடுகிறது. பாட்னாவில் காங்கிரஸ்காரர்கள் பலமா[illegible]டிக்கப்பட்டனராம்.

லக்ஷ்மணபுரியில் புலிபட்ஜில்லா முஸபர் கிராமத்தில் காங்கிரஸை ஆதரித்த இரண்டு பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகதெரிகிறது. இது வேறு கொலையென்றும் சொல்லப்படுகிறது. தமிழ் ஜில்லாக்களிலும் பலவிடங்களில் கல்லெறியும், சோடாப்புட்டி வீச்சும் நிறம்ப நடைபெற்று வருகிறதாம்.

சென்னையில் ஸ்வேச்சைதினம் பிரதிஜ்ஞைக்குத்தடை.

ஜனவரி மாஸம் 26-உ யன்று இந்தியா தெடுக சுயேச்சைதினக் கொண்டாட்டம் நடைபெறுகையில் கூட்டத்தில் சுயேச்சைப் பிரதிஞ்ஜை எடுத்துக்கொள்ளுவதை சென்னை பம்பாய் முதலிய கவர்ன்மெண்டார்தடை செய்திருக்கின்றனர். இது இந்தியாகவர்ன்மெண்டின் யோஜனையாம். அந்த பிரதிஜ்ஞை வாசகமானது ராஜ சக்ரவர்த்தியின் கவர்ன்மெண்டுக்கு விரோதமாகவும் ராஜத்வேஷமாயுமிருப்பதே காரணம்.

இந்தியா சட்டஸபைக்கூட்டம் கக்ஷித்தலைவர்கள் ஆலோசனை.

காங்கிரஸ்கக்ஷிமெம்பர்கள் பிப்ரவரி 23உ வரையில் சட்டஸபைக் கூட்டத்திற்குச் செல்லுவதில்லை யென்று தீர்மானித்திருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றிவிவாதிக்க ஸ்ரீமான் புலாபாய் டில்லிக்குஅழைக்கப்பட்டுச்சென்றார். ஆயினும் கவன்மெண்டார் எவ்விதமாறுதலும் செய்ய உடன் படவில்லையென்றுதெரிகிறது. ரெயில்வே வரவுசெலவு திட்டவிவாதத்தை மட்டும் பிப்ரவரி 23உக்குப்பிறகு வைத்துக் கொள்ளலாமென்று சட்டஸபைத் தலைவரின் விருப்பத்தின்மேல் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

டில்லியில் நடந்தவரவுசெலவுக் கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ்கொறடாவான அஸப் அலி ஆஜராகி இதன் யோஜனையை ஒத்தி வைக்கும்படி சொன்னார். கவர்ன்மெண்ட் மெம்பர்கள் ஸம்மதிக்காததால் அவர் அக்கூட்டத்தில் ஸம்பந்தப்பட இஷ்டமில்லாமல் வெளியே வந்துவிட்டார்,

தெய்வபிரார்த்தனையின் மேன்மை. காந்திஜியின் உபதேசம்.

திருவாங்கூரிலிருந்து திரும்பிய காந்திஜி சென்னையில் கோடம்பாக்கத்தில் ஒருநாள் தங்கினர். பல பிரபலஸ்தர்கள் காந்திஜியை பேட்டிகண்டு பேசினர்.

அன்றுமாலை அங்கு தெய்வபிரார்த்தனை நடைபெற்றது. ஏராளமான கூட்டம் வந்திருந்தது. காந்திஜி பிரார்த்தனையின் மஹிமையைப் பற்றிச்சிறிது பேசினார். அவர்சொல்லியதாவது:—

"நான் பிரார்த்தனைசெய்வதை ஒருபிடிவாத வழக்கமாகவைத்துக்கொண்டிருக்கிறேன்.படுக்கைக்குப் போகுமுன் ஒவ்வொருவரும் ஏதாவது ஒருவழியில் பிரார்த்தனை நடத்தவேண்டியது அவசியம். சரீரத்திற்கு உணவு எவ்வளவு அவச்யமோ, அப்படி ஆத்மாவுக்கு பிரார்த்தனை அவசியம். ஆகாரமில்லாமலிருந்தாலும் இருக்கலாம், தெய்வப்பிரார்த்தனை இல்லாமல் இருக்கமுடியாது. பிரார்த்தனையைச் செய்து பாருங்கள். அதனால் உங்கள் தன்மையே மாறுவதை உணருவீர்கள். கீதை 2 வது அத்யாயத்திலுள்ள சில சுலோகங்களை என் பிரார்த்தனை ஸ்தோத்திரத்தில் கலந்திருக்கிறேன். அவை ஒவ்வொருஹிந்துவுக்கும் தனது நிலைமையை நினைப்பூட்டுகிறவைகளாயிருக்கின்றன.

ஸம்ஸ்கிருதம் தெரியாதவர்கள் பஜனைப்பாட்டுகளைப்பாடலாம். அதுவும் முடியாதவர்கள் ராம,கிருஷ்ண என்று நாமத்தைச்சொன்னால் கூடப்போதும்.

துளஸிராமாயணப் பாட்டுகளைப்பாடுகிறேன். அந்தராமாயணம் வடஇந்தியாவில் எல்லோருக்கும் தெரியும். இந்தராமாயணம் உயர்ந்தபொக்கிஷம். இந்த ராமாயணத்தை மனப் பூர்வமாகக் கேட்பதுமூலம் ஜனங்கள் மிகுந்த உருக்கமான உணர்ச்சி அடைவதை நான் பார்த்திருக்கிறேன்.

இனும் சட்டம். மன்னருக்கு மனு.

சென்னையில் இயற்றிவைக்கப்பட்டிருக்கும் இனும் சட்டத்தை நிராகரிக்கவேண்டுமென்று ஜார்ஜ் சக்ரவர்த்தியாருக்குச் சென்னைமாகாண இனும்தார் ஸங்கத்தார் ஒருமனுவை அனுப்ப யோஜித்திருப்பதை இந்தியா மந்திரிக்கு அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சென்னை மாகாண ஸனாதனதர்ம மஹாநாடு 1937.

பூர்வாங்க யோஜனைக் கூட்டம்.

மேற்படி மகாநாட்டை நடத்துவதற்காக 21—1—37உ மாலை 6 மணிக்கு சென்னை ராயப்பேட்டை லாய்ட் ரோட்டில் 'லலிதா சதனம்' என்ற பங்களாவில் சென்னையிலுள்ள பல பிரமுகர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஸேட் புருஷோத்தமதாஸ் கோகுல்தாஸ் அக்கிராசனம் வகித்தார். முதல் முதலாக ஸ்ரீமான் T. S. ராமஸ்வாமி அய்யர் வரப்போகும் மகாநாட்டை நடத்தவேண்டிய அவசியத்தை குறிப்பிட்டுப்பேசினர். தேசத்தில் தற்சமயம் திருவாங்கூர் அரசரின் விளம்பரத்தை அனுசரித்து சட்டசபைக்கு அபேக்ஷகர்களாய் நிற்கும் காங்கிரஸ்வாதிகள் பலர் தர்ம விரோதமான பிரசாரம் செய்துவருகின்றதை கண்டித்தார். பிறகு ஸ்ரீமான் N. ஸ்ரீனிவாஸாச்சாரியார் அட்வெகேட் அவரை ஆதரித்துப் பேசினர். ஸ்ரீமான் P. R. திருமலை ஐயங்கார் மகாநாட்டை ஆதரித்தார். பிறகு வட சென்னை நகரத் தொகுதிக்கு சட்டசபையில் சனாதன அபேக்ஷகராக நிற்கும் ஸ்ரீமான் ஸி. பத்மநாபநாயுடு, தான் ஆலயப்பிரவேச கிளர்ச்சியும் மற்றும் சட்டசபைகளில் நம்முடைய மதசம்பந்தமாகவும் சாஸ்திர சம்பந்தமாகவும் வரக்கூடிய யாதொரு மசோதாக்களையும் எதிர்ப்பதாகவும் தர்மத்திற்கும், வேலைக்காரர்களின் க்ஷேமத்திற்கும் தான் மிகுந்த பாடுபடத் தயாராயிருப்பதாகவும் கூறினர்.

பிறகு அட்வெகேட் ஸ்ரீமான் S ராஜகோபாலன் சர்வகலாசாலைத் தொகுதியில் தானும் ஸனாதன அபேக்ஷகராக சட்டசபைக்கு நிற்பதாகவும் நாட்டின் க்ஷேமத்திற்கு தான் பாடுபடுவதாகவும் ஆயினும் மத விஷயங்களில் காங்கிரஸ் முதலிய எந்த ஸ்தாபனமும் தலையிடுவதைத் தான் கண்டிப்பதாகவும் கூறினர்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் பிரஸன்ன வெங்கடேச்வர ராவ் திருவனந்தபுரத்தில் மகா புனிதமாய் விளங்கிய பத்மநாபஸ்வாமி ஆலயத்தை அசுத்தப்படுத்தியிருப்பது மிகவும் அசம்பாவிதமென்றும் வரப்போகும் மகாநாடு மகாராஜாக்கள் முதலிய எல்லோருக்கும் உண்மையைத் தெரிவிக்குமென்றும் கூறினர். பிறகு திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் இம்மாதிரி மகாசங்கங்களால் தான் தர்ம விரோதமான சட்டங்களுக்கும் இயக்கங்களுக்கும் சரியான முடிவு ஏற்படுமென்றார். ஸ்ரீமான் P. S. வைத்தினதய்யர் எல்லா சட்ட நிபுணர்களும் உண்மையில் அரசனோ, குடிகளோ, எவரும் மதவிஷயங்களில் தலையிடுவது சட்ட விரோதமென்று அறியும்படி செய்யவேண்டுமென்றார். பிறகு சிலரிடமிருந்து வந்த அபிமானக் கடிதங்கள் வாசிக்கப்பட்டன.

பிறகு ஸ்ரீமான் திருவல்லிக்கேணி லக்ஷ்மீ நரஸிம்மாசாரியார் தற்சமயம் ஓர் சனாதனதர்ம மகாநாடு அத்யாவசியமென்றும் இம்மாதிரி சனாதன தர்மசங்கம் எக்காலமும் வேலை செய்துவந்தால்தான் நாட்டிற்கும் க்ஷேமமுண்டாகுமென்றார். தவிர எல்லா மடாதிபதிகளும் இம்மாதிரி இயக்கத்திற்கு அதிகமான உதவி புரியவேண்டுமென்றார். பிறகு ஸேட் புருஷோத்தமதாஸ் கோகுல்தாஸ் தலைவராகவும் திவான் பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் உபதலைவராகவும், ஸ்ரீமான் T. S. ராமஸ்வாமி அய்யர் பொதுக்காரியதரிசியாகவும் கொண்ட ஓர் காரியக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

1. பிப்ரவரி மாதம் 6, 7 தேதிகளில் திருவல்லிக்கேணியில் சென்னை மாகாண ஸனாதன தர்மமகாநாடு நடைபெறவேண்டியது.

2. இவ்விடம் சீக்கிரம் விஜயம் செய்யப் போகும் பம்பாய் ஸ்ரீல ஸ்ரீ கோகுல்நாத் மகாராஜ் மகாநாட்டை ஆரம்பித்து அதற்கு தலைமை வகிக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. எல்லா மடாதிபதிகளிடமும் ஓர் தூது கோஷ்டி யனுப்பப்பட்டு அவர்களுடைய அனுக்ரஹமும் பண உதவியும் பெறவேண்டியது.

4. மகாநாடு சம்பந்தமான எல்லா பிரசார வேலையும் பொதுக்காரியதரிசி ஸ்ரீமான் T. S. ராமஸ்வாமியய்யரால் நடத்தப்படவேண்டியது.

5. கடைசியாக வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. P S. வைத்யநாதஸ்வாமி.

அகில இந்திய, பிராஹ்மண மஹாஸபை

வருஷக் கொண்டாட்டம்.

ஸநாதனிகளின் வீரமுழக்கம்.

ஆலயப்ரவேச விளம்பரத்துக்கு பலமான எதிர்ப்பு.

நாளது ஜனவரி மாசம் 24உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15 மணிக்கு திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெருவிலுள்ள தவன உத்ஸவ பங்களாவில் அகில இந்திய பிராஹ்மண மஹாஸபை (சென்னை) யின் வருஷக்கொண்டாட்டம் வெகு அழகாக ஆரம்பமாகியது. பல இடங்களிலிருந்து அநேகர் வந்திருந்தனர். சநாதனித் தலைவர்களும் பிரஸன்னமாகியிருந்தனர். பிரம்மஸ்ரீ திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் தலைமைவஹித்தனர்.

ஸ்ரீமான் யஸ் லக்ஷ்மி நரஸிம்மாச்சாரியாரவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடிமுடிக்க தலைவர் முன்னுரையாகச் சில விஷயங்கள் பேசினார். ஆரம்பத்தில் அன்று கூட்டம் முடியும் வரை இருப்பதற்கு தனக்கு முடியாதென்றும் அதற்காக தனக்குப்பதிலாக அட்வகேட் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் தன் ஸ்தானத்தில் இருக்கும்படிகேட்க அனைவரும் ஆமோதிக்க அன்னாரும் இசைந்தார்.

தலைவர் ஐயரவர்கள் முன்னுரையில் கூறியதாவது:— பக்தியே சநாதனதர்மத்தின் அடிப்படை. ராவணன் கொடுமையை நீக்கியது பகவத் பக்தியே. அடியார்கள் முறையிட அமலன் அவதரித்து அல்லல் அகற்றினன். ஸநாதனதர்மத்தின் பெருமை அளவிடற்கரியது. கலியுகத்தில் பிராஹ்மணனாக ஆகு என்று பெரியவாள் சாகம். இவ் யுகத்தில் கஷ்டம் ஜாஸ்தி. பிரஹ்லாதன் மார்க்கமே மார்க்கம் ஹிரண்யன் மகத்தான தப்பிதத்திற்கு சரியாக தண்டிக்கப்பட்டான். பழைய கதைகள் பொய்யல்ல. நம்முடைய சக்தியால் ஏதுவும் நடைபெறாது. அவனது சங்கல்பாநுக்ரஹம் இருக்கவேண்டும். வரவர தர்மம் குறைவு. தருமசிந்தனை குறைந்து கொண்டேவரக் காண்கிறோம். ஈசுவர நாம மஹிமையை என் சொல்லலாம். மனசைக் கட்டுப்படுத்தி பகவத்பக்தி செய்தால் கூடாததும் உளதோ? புராதன சமாசாரம் புராதன வழிகளில் நடத்தப்படுதலாற் குறைவில்லை. இதற்காக ஏமாற்றம் அடையவேண்டாம். நம் கடமையை நாம் சரிவரச் செய்ய கலம் உண்டு. திருவிதாங்கூர் ஆலயப்ரவேச இயக்கம் அசாஸ்திரீயம் தான். நாம் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளோம். பத்மநாபஸ்வாமி பக்தர்மனதிற்புகுந்து தீண்டாதாரும் தரிசிக்க வரவேண்டுமென்று ஸ்வப்னதிகள் மூலமாய்த் தெரிவித்திருந்தால் ஒருவரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள். ஆண்டவன் கட்டளையிடவேண்டிய விஷயத்தில் மஹாராஜா விடுத்த விளம்பரம் செல்லுபடியாகாது. கோயிலினும் பெருமாள் பெரியவர். உள்க்கோயிலைத் தகர்க்க எவரால் முடியும். சாந்தி, அன்பு, தயைவேண்டும், தண்டகாரண்ய வாசிகள் சரணாகதி செய்ய இராம பிரான் அபயப்ரதானம பண்ணியதும், ஜானகி கேள்வியும் அதற்கு ராகவன் கூறிய பதிலையும் நினைப்பூட்டுகிறேன். மநுஷப்ரயத்னத்தை விடாது பஜனை முதலியது விடாமற்செய்தால் எல்லாம் சித்திக்கும்.

தமது முன்னுரைக்குப் பிறகு:— இந்தியா கவர்ன்மெண்டு புது ஆக்டில் மதப் பாதுகாப்பு சம்பந்தமாக ஒருவித நிபந்தனையுமின்றிக்கே ஜனப்பிரதிநிதிகளுக்கே சுயேச்சாப்பிரவிருத்தி கொடுத்திருப்பது சோகிக்கத்தக்கதென்றும், திருவிதாங்கூர் மஹாராஜா விடுத்த ஆலயப்ரவேச ஸ்ரீமுகம் அசாஸ்திரீயமென்றும், இதுகாறும் நடைபெற்று வந்த ஆசார அநுட்டானங்களுக்கு விருத்தமானதென்றும், திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஆலயங்கள் அகில இந்திய ஜனங்களுடையதென்றும் ஏகதேசத்தில் மஹாராஜா இங்ஙனம் அனுமதிக்க அதிகாரமில்லை என்றும் அதை உடனே வாபசு வாங்கிக்கொள்வதே நலம் என்றும் அதனைக் கண்டித்தும் சநாதனிகளாக நிற்பவருக்கு முதலிலும், சமூக மத விஷயங்களில் எவ்விதத்திலும் நுழைவதில்லை என்று உறுதியான வாக்குறுதி கொடுப்பவருக்கு, அடுத்தபடியாகவும் வருகிற எலக்ஷனில் ஓட்டு கொடுக்கவேண்டுமென்றும், பல வழிகளிலும் பிராசீன முறைகளை நழுவவிடாது பிராஹ்மணர்கள் அநுஷ்டித்துவந்தால் எல்லாக் கஷ்டங்களும் நிவர்த்தியாகிவிடுமென்ற தீர்மானங்களை தலைவர் ஐயரவர்கள் பிரேரித்தார்.

பின்பு மேலேகண்ட தீர்மானங்களைப்பற்றி உ. ப. வே. வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசார்யஸ்வாமிகளும் ப்ரம்ஹஸ்ரீ கௌஸிகியது நாதாசார்யஸ்வாமிகளும் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீட ஆஸ்தான வித்வான ப்ரம்ஹஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளும் ஸ்ரீ உ. ப. வே. கிழச்சேரி பாவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமிகளும் ஸ்ரீமான் யன். ஸ்ரீநிவாசாசார்யஸ்வாமிகளும் ஸ்ரீமான் டி. பி. சிவசங்கரதவாய் அவர்களும் ஸ்ரீமான் யு. பி கிருஷ்ணமாசார்யார் அவர்களும் பேசியபிறகு தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

மஹாஸபையின் நிர்வாஹிகளாக கீழ்க்கண்டவர்கள் புது வருஷத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரம்மஸ்ரீ திருப்புகழ் மணி டி. யம். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் பிரசிடெண்டு. ராவ்சாஹிப் பி. வி ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் வைஸ் பிரசிடெண்டு. பி. ஆர். திருமலை ஐயங்காரவர்கள் காரியதரிசியும் பொக்கிஷதாரும்.

மீடிங்கு நடைபெறுகையில் தலைவர் பிரம்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டபடியால் அக்ஸ்தானத்திலமர்ந்த ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் குலசேகராழ்வார் வமிசத்தில் வந்த மஹாராஜர் விடுத்த விளம்பரம் சரியென்றும், வேதப் பிரமாணமின்றி ஆகமங்களை ஒப்புக்கொள்ளமுடியாதென்றும், ஸ்ரீ சங்கரபாஷ்யத்தில் ஆலயப்ரவேசாதிகளனுமதிக்கப் பட்டிருக்கிறதென்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-ஹு தை-மீ 15உ

கன்ஸர்வேடிவ் கக்ஷி இப்போதே ஏற்படவேண்டும்.

இந்தியாவில் ஜனநாயக ஆக்ஷியின் அவசியத்தைப்பற்றியும், எதிர்காலத்தில் இங்கு ஏற்படக்கூடிய ராஜீயக்கக்ஷிகளைப்பற்றியும் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் சரித்திர ஸங்கத்தில் சென்ற 22உ யன்று ஓர் பிரஸங்கம் செய்தார். அது ராஜீயவாதிகளாலும் மதஸமூஹ ஹிதவாதிகளாலும் சில அம்சங்களில் கவனிக்கத் தக்கதாயிருக்கிறது. இந்தியாவில் அடிகோலியிருக்கும் ஜனநாயக ஆக்ஷித்திட்டமானது பெரும்பாலும் மேற்றிசை ராஜ்யமுறைகளை அடிப்படையாகக்கொண்டதேயாகும். ஆயினும் அத்தேசங்களில் ஜனநாயக ஆக்ஷிக்கு விரிவான வியாக்யானம் செய்யப்பட்டு, ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொருமாதிரியான ஜனநாயகம் தோன்றிவந்தது. குடியரசு, பொதுவுடமைக்கொள்கைகள்கூட ஜனநாயகத்தின் உச்சஸ்தானமாகக் கருதப்பட்டு பல தேசங்கள் அந்த உச்சஸ்தானத்திற்கும் ஏறி நின்றன. ஆயினும் அதன் பிரயோஜனமின்மையும், தீங்கும் நாளடைவில் நன்கு உணரப்பட்டு, ஜர்மனி, இதாலி, கிரீஸ்போன்ற பல தேசங்கள் ஜனநாயகத்தையே விட்டுவிட்டு ஸர்வாதிகாரி ஆக்ஷியை ஆதரித்து நிற்கின்றன. ஆயினும் பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தில் நடைபெற்றுவரும் ஒரு மாதிரியான ஜனநாயக ஆக்ஷியை அடிப்படையாகக்கொண்டே இந்தியாவிலும் ஜனநாயக முறை ஏற்படுத்தப்படுவதால், அங்குள்ள நிலைமையைப் பெரும்பாலும் அநுஸரித்தே ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி பேசியிருக்கிறார். ஐரோப்பாவில் ஜனநாயக முறை மறைந்துவருகையில் இந்தியாவில் அது எப்படி நிறைவேறுமோவென்பதில் ராஜீய நிபுணர்களே பலத்த ஸந்தேஹம் அடைந்துள்ளார்கள். ஆயினும், இங்கிலாந்தில் ஜனநாயகம் கூடியவரையில் ஒழுங்காக நடைபெற்றுவருவதற்கு அங்கு அமைக்கப்பட்டுள்ள ராஜீயக்கக்ஷிகளே முக்யகாரணமாகையால், அதுபோல் இந்தியாவிலும் ஒழுங்கான ராஜீயக்கக்ஷிகள் அமையவேண்டுமென்பதை ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஒப்புக்கொள்கிறார்.

தற்போது நடக்கும் எலெக்ஷன் பிரசாரத்தில் காங்கிரஸ்வாதிகள், எவரும் ஒரேமாதிரியாகப் பேசிவரும் விஷயமொன்றைப் பலர் கவனித்திருக்கலாம். அதாவது இந்தியாவில், கவர்ன்மெண்ட், காங்கிரஸ் என்ற இரு கக்ஷிகளே இருப்பனவாகவும், ஜனங்கள் கக்ஷியென்பது காங்கிரஸ்தானென்றும், பொருட்படுத்தக்கூடிய வேறுகக்ஷி கிடையாதென்றும் பேசிவருகிறார்கள். ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி, ஜனநாயகம் ஸரியாக நடைபெற வேண்டுமானால் அதற்கு திடமான ராஜீயக் கக்ஷிகள் இந்தியாவில் அவசியம் ஏற்படவேண்டுமென்று வற்புறுத்துகிறார். இன்று அத்தகைய கக்ஷிகள் இல்லாவிடினும், காலக்கிரமத்தில், வேறுபட்ட கொள்கைகளுடன் அரசியல் கக்ஷிகள் ஏற்படுமென்றும் நம்புகிறார்.

அதில் பிரிடிஷ்பார்லிமெண்ட் முறையை அநுஸரித்து இந்தியாவிலும் கன்ஸர்வேடிவ், லிபரல், அபேதவாதம்போன்ற கக்ஷிகள் சட்டஸபைகளில் ஏற்படுமென்று சொல்லுகிறார். லிபரல் கக்ஷி, தொழில் கக்ஷிகளைப்போல் கன்ஸர்வேடிவ் கக்ஷியும் இந்தியாவில் எதிர்காலத்தில் தோன்றவேண்டுமென்றும் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி நினைக்கிறார். கன்ஸர்வேடிவ் என்பது 'வியவஸ்தாவாதிகள்' என்ற அர்த்தமுடையதாகையாலும், இங்கிலாந்தில் அந்தக்கக்ஷி அநுஸரித்துவரும் கொள்கையாலும் அத்தகையக்கக்ஷியொன்று இன்றே ஏற்படுவது விரும்பத்தக்கதேயாகும். இந்தியாவில் ஸமூகக்கட்டுப்பாடு பொருளாதார ஒழுங்குகள், இவைகளுக்கெல்லாம் மூலாதாரமான மதக்கொள்கைகள் இவைகளில் புரட்சிகரமான கொள்கைகள் வெகுவேகமாகப் பரவி வருவதைப் பார்க்கிறோம். இவைகளைத் தடுத்து நியாயமான ஜனசமூக வாழ்க்கை ஏற்படவேண்டுமானால் அதற்கு உறுதியான கன்ஸர்வேடிவ்கக்ஷி ஏற்படாமல் முடியாது. மத ஸமூஹ விஷயங்களில் கட்டுக்கடங்காத ஸ்வச்சந்தப்போக்கும் எண்ணமும் உண்டாகியிருந்தபோதிலும், அந்த நிலைமை பொருளாதார விஷயத்தில் ஏற்படும்போது, அதாவது பொதுவுடமைதத்வம் தலையெடுக்கும்போதுதான், கன்ஸர்வேடிவ் தத்வத்தின் கௌரவம் உணரப்படப்போகிறது. முதலாளித்வத்திற்கும், ஜமீன்தாரி முறைக்கும், பணக்காரர், நிலச்சுவான்தார் முறைக்கும் ஆபத்து நேரும்போதுதான் ஒவ்வொரு வகுப்பாரும் வியவஸ்வையின் அவசியத்தை உணர ஆரம்பிப்பார்கள். மதஸமூஹ விஷயத்தில் புரட்சியுண்டாக்க ருசியுள்ள ஜமீன்தாரோ, பணக்காரரோ, நிலச்சுவான்தாரோ. தங்கள் சொத்துக்களுக்கும், அந்தஸ்துக்கும் அபேதவாதத்தினால் துன்பம் ஏற்படும்போதுதான் மதஸமூஹ வியவஸ்தையில் தாங்கள் புரட்சியுண்டுபண்ணுவது பெரும் தவறு என்பதை உணர முன்வருவார்கள். பொருளாதாரப் புரட்சியில்முட்டிக்கொண்டு பயனில்லாமல் திரும்புங்காலத்தில்தான் மதஸமூஹ வியவஸ்தைக்கும் ஓர் நல்லகாலம் பிறக்கக்கூடும். அப்போதுதான் உலகில், பொருளாதாரம் தொழில் லேவாதேவி முதலிய ஸகல லௌகிக கார்யங்களுக்கும் மதமே அடிப்படையான பாதுகாப்பென்றும் மனிதன் செய்யும் சட்டத்தைவிட தெய்வநம்பிக்கையை அஸ்திவாரமாகக்கொண்ட மதச்சட்டமே, மனித ஸமூஹத்தில் அமைதியையும் சௌகரியத்தையும் நிலைநிறுத்தக்கூடியதென்ற ஸர்வோத்தமமான உண்மை வெளியாக ஸந்தர்ப்பமேற்படும். அத்தகைய சாந்த நிலைமையை உண்டாக்கக்கூடியது விவேகத்தால் உதிக்கும் கன்ஸர்வேடிவ் கொள்கையே யாகும்.

ஸ்ரீமான் ஸத்யமூர்த்திபோன்ற சில ராஜீயவாதிகள் கன்ஸர்வேடிவ் கக்ஷி இந்தியாவில் ஏற்படவேண்டுமென்பதை அங்கீகரிப்பதிலிருந்து' பொருளாதாரத்திலோ மதஸமூஹாதி விஷயங்களிலோ ஜனங்களுக்கு விருப்பமில்லாத புரட்சி எவ்வித தடையெதிர்ப்புமின்றி நிறைவேற இடங்கொடுக்கக்கூடாதென்று உணருவதாகத்தெரிகிறது. இந்தியாவில் தற்காலம் தோன்றியுள்ள சின்னங்களைக்கவனித்தால் இன்றைக்கே சட்டஸபைகளிலும், வெளியிலும் திடமான கன்ஸர்வேடிவ்கக்ஷி ஏற்படவேண்டுவது மிக்க அவசியமென்று நாம் நினைக்கின்றோம்.

குறிப்புகள்.

பத்திரிகைகளால் விளையும் தீங்கு.

சென்னையில் மிஸ்டர் மாட்டர்ஸ் என்ற ஐரோப்பியர், தற்கால ஸமாசாரப் பத்திரிகைகளின் நிலைமையைப்பற்றிச் செய்த பிரஸங்கத்தில் சில உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். இவ்விருபதாவது நூற்றாண்டில் பத்திரிகைகள் உலகத்தினரை எவ்விதம் ஆட்டிவைக்கின்றன வென்பதை அவர் தெளிவாக விளக்கியிருக்கிறார். பொதுவாக அவர் சொல்லியுள்ள பலவிஷயங்களிருக்க, பத்திரிகைகளால் பொதுஜன அபிப்பிராயங்கள் மாறும் விதத்தைப்பற்றி இவர் சொல்லியிருப்பது ரஸமாயிருக்கிறது. பொதுஜன அபிப்பிராயத்தை உண்டுபண்ணுவதிலும், அதை உருவப்படுத்துவதிலும், வழிகாட்டுவதிலும் பத்திரிகைகள் செல்வாக்குப் பெற்றிருப்பதால் அவைகள் கண்ணியமாகவும் பொறுப்பாகவும் நடந்துகொள்வதின் அவச்யத்தை இந்த உபந்நியாஸர் வற்புறுத்தியிருப்பது மிகவும் யுக்தமானதே

தற்போது மேற்கு தேசங்களில், முக்யமாக இங்கிலாந்தில், பத்திரிகைகள் பணம் ஸம்பாதிக்கும் ஓர் தொழிலாகவே நடத்தப்பட்டுவருவதாயும், பல பணக்காரர்கள் இந்த நோக்கம் கொண்டே இதர தொழில்களைப்போல் பத்திரிகைகளை நடத்திவருவதாயும், பத்திரிகைகளின் முக்யநோக்கம் இங்கிலாந்தில் மறக்கப்பட்டுவிட்டதாயும், லார்டு ராதர்மியர், லார்டு நார்த்க்ளிப், முதலான 4, 5 பேர் பணக்காரர்களுக்குள்ளேயே இங்கிலாந்துப் பத்திரிகைகள் பெரும்பாலும் இருந்துவருவதாயும் அவர்களே பொதுஜன அபிப்பிராயத்தை சிருஷ்டிப்பதாயும், தலையங்கத்தை வாசிக்கும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் உடனே அதை தங்கள் அபிப்பிராயமாகச் செய்துகொள்ளுவதும் ஸாதாரணமாயுள்ள விஷயமாம். அங்கு பத்திரிகைக்காரர்களுக்கு அஸாத்யகர்வமுண்டாம். பால்டுவின் மந்திரிஸபையில் தம் பிள்ளையையும் சேர்த்துக்கொள்ளாவிட்டால் அந்த மந்திரி ஸபையை அடியோடு கவிழ்த்துவிடுவதாக லார்டு ராதர்மீர் என்ற பத்திரிகைக்காரர் பயமுறுத்தினரென்றும், ஆகையால் சிலர் கையில் எல்லாப் பத்திரிகைகளும் சிக்கிக்கொள்ளும்படி செய்வது அபாயமென்றும் வற்புறுத்தினர்.

தற்போது இங்கிலாந்தில் ஸமாசாரங்களையும் அபிப்பிராயங்களைப்போல் பிரசுரிப்பது இங்காளில் ஸஹஜமாயிருப்பது அநீதியென்றும், இந்தியாவில் அப்படிச் செய்யக்கூடாதென்றும் அவர் சொல்லிவிட்டு இந்தியப்பத்திரிகைகளில் ஒருவருடைய ஸொந்த அபிப்பிராயத்தை மாத்திரம் பிரசாரம் செய்ய இடம் கொடுக்கக்கூடாதென்றும், அவர் பேசினார்.

இந்தியாவில் பத்திரிகைகளின் ஒருதலைப் பக்ஷமான பிரசாரத்தை இந்த உபந்யாஸகர் நன்கு அறிந்திருந்தால் அதிகம் ஆச்சர்யம் அடைவார். இந்தியாவில் பத்திரிகைத் தொழிலை ஒரு ஜீவனமாகவே நினைத்து வியாதோரணையில் சிலர் நடத்திவருகிறார்கள் மேலும், பத்திரிகைச் சொந்தக்காரர்களும், நிருபர்களும் தங்களுக்குப்பிடித்த விஷயங்களை ஆடம்பரப்படுத்தி பிரசுரிப்பதும் பிடிக்காதவைகளை அடக்கியோ, மறைத்தோ குறைத்தோ விடுவதும் ஸாதாரண விஷயமல்லவோ? பெத்தப்பெயர்பெற்ற பத்திரிகைகளே இவ்வித பக்ஷபாதத்தில் மூழ்கி கிடக்கின்றனவென்பது யாருக்குத் தெரியாது? இவ்வுபந்யாஸகரின் வேண்டுகோள் அப்பத்திரிகைகளின் செவியில் ஏறுமா? எப்படியும் பத்திரிகை உலகமானது வெறும்மாயை என்பதை இவர் வெளிப்படுத்தியது நியாயமானதே.

கலப்பு விவாகத்தடை மசோதா

தென்னுப்பிரிக்காவில் முயற்சி.

தென்னுப்பிரிக்கா சட்டசபையில் ஒரு மெம்பர் அத்தேசத்தில் கலப்புவிவாஹம் நடைபெறுவதைத் தடுப்பதற்காக ஒரு மசோதாவைக்கொண்டுவந்தார். இந்த மசோதா மீது சிறிது விவாதம் நடந்து பிறகு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

தென்னுப்பிரிக்காவிலுள்ள ஆங்கிலேயர்களுக்கும், சுதேசிகளுக்கும், ஆசியாக்காரர்களுக்கும் பரஸ்பரம் கலப்புவிவாகம் நடப்பதைத் தடுப்பதே இந்த மசோதாவின் நோக்கமாம்.

அப்பர் படத் தகராறு.

கவர்னரிடம் தூது.

சினிமாக்களில் காட்டத் தயாரிக்கப்பட்டுள்ள அப்பர் படக்காக்ஷியில் ஜைநமதத்திற்கு மிகுந்த ஆக்ஷேபமிருந்துவரும் விஷயம் தெரிந்ததே. சென்றவாரம் ஜைன பிரமுகர் பலர் கவர்னரைப் பேட்டிகண்டு மேற்படி படம் தங்கள் மதத்தினருக்கு மனவருத்தமுண்டு பண்ணக் கூடியதாயிருப்பதால் அதைத்தடை செய்ய கவர்ன்மெண்டார் முற்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டனராம்.

தீண்டாஜாதிக் கிறிஸ்தவர்கள்.

கவர்னரிடம் தூது.

தீண்டாத ஜாதியிலிருந்து கிறிஸ்தவராகப் போனவர்களின் தூது ஒன்று சென்றவாரம் சென்னை கவர்னரைக்கண்டு தங்கள் குறைகளை முறையிட்டுக் கொண்டார்கள். கிறிஸ்தவமதம்மாறியும் தங்கள் நிலைமை உயரவில்லையென்றும், ஜாதிக்கிறிஸ்தவர்கள் தங்களை ஸமமாக நடத்தவில்லையென்றும், மாதா கோவில்களிலும் தாங்கள் கீழ் நிலைமையில் வைக்கப்பட்டிருப்பதாயும், சட்டஸபையில் தீண்டாஜாதிக்கிறிஸ்தவர்களுக்குத் தக்க பிரதிநிதிஸ்தானம் தனிமையாக வேண்டுமென்றும், ஜாதிக் கிறிஸ்தவர்கள் தங்களுடைய நன்மையைக் கவனிக்கமாட்டார்களாகையால் அவர்களிடம் தங்களுக்கு நம்பிக்கையில்லையென்றும், கவர்னர் தலையிட்டுப் பாதுகாப்புச் செய்யவேண்டுமென்றும் கோரினார்கள். கவர்னர் கவனிப்பதாகச் சொன்னாராம். ஐயோ! மதம்மாறியும் விடியவில்லையே!

வரும்படியில்லாத வக்கீல்கள்.

கூட்டுமுறையில் தொழில்நடத்த யோஜனை.

திருநெல்வேலி வக்கீல் ஸங்கத்தார் சென்றவாரம் 16உயன்று ஒரு முக்ய விஷயத்தைப் பற்றி யோஜனை செய்து முடிவு பண்ணினார்கள். வருமானமில்லாத வக்கீல்களின் தொகை அதிகரித்துவருவதாலும் அவர்களுடைய நிலைமை கவலைக்கிடமாயிருப்பதாலும் அவர்களுடைய க்ஷேமத்தைக்கருதி தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று 60 வக்கீல்கள் செய்து கொண்ட வேண்டுகோளையநுஸரித்து ஸ்ரீமான் ஜகந்நாதராவ் தலைமையில் நடந்த வக்கீல் சங்கக்கூட்டத்தில் இவ்விஷயம் யோஜிக்கப்பட்டது.

வக்கீல்கள் தனித்தனியாகத் தொழில் நடத்துவதைவிட, 10 அல்லது 12 பேர்கள் சேர்ந்து கூட்டாகத் தொழில் நடத்தவேண்டுமென்றும் மொத்தவருமானத்தை முன்னேற்பாட்டின்படி ஒருவித வீதாசாரம் செய்து பிரித்துக்கொள்ளலாமென்றும் யோஜனை சொல்லப்பட்டது. இந்த யோஜனையே ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு இதை அமுலுக்குக் கொண்டுவருவதைப்பற்றி ஓர் யாதாஸ்து தயாரிக்க முடிவு செய்யப்பட்டதாம்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச நிலைமை

ஸீனியர் ராணி கோவில்களில் அனுமதியில்லை

ராஜகுடும்பத்தில் அபிப்பிராயபேதம்.

திருவாங்கூர் மஹாராஜாவுக்குச் சொந்தமான கோவில்கள் தீண்டாதாருக்குத் திறந்துவிடப்பட்டனவாயினும், ஸீனியர் ராணிக்குச் சொந்தமான பல கோவில்களில் தீண்டாதாரை அனுமதிக்க அவள் மறுத்துவிட்டாள். ஆதலால் அந்தக்கோவிலில் தீண்டாதார் பிரவேசிக்கமுடியவில்லை. அத்திங்கல் என்ற விடத்திலுள்ள ராஜகுடும்பக்கோவிலில் மகரமாஸத்தில் நடக்கும் விசேஷ உத்ஸவங்களுக்கு மஹாராஜா நேரில் சென்று ஸ்வாமிதர்சனம்செய்வது வழக்கம். அந்தக் கோவிலில் தீண்டாதார் பிரவேசிக்க அநுமதியில்லை இந்தக் காரணத்தால் மஹாராஜா இவ்வருஷம் அந்த கோவிலுக்குத் தாம் வரமுடியாதென்று சொன்னாராம். ஆனால் இதைப் பொருட்படுத்தாமல் மஹாராஜா வாராமலிருக்கையிலேயே கோவில் காரியங்கள் யாவும் வழக்கம்போல் நன்கு நடத்தி வைக்கப்பட்டுவிட்டன. மஹாராஜா வாராததைப் பற்றி ஒருவரும் வருந்தவில்லையாம்!

கொச்சியில் கோவில் பூஜை நிறுத்தப்பட்டது.

திருவாங்கூர் பூஜகர் வந்ததால் தீட்டு

இருஞாலகூடாவில் ஒரு ஸம்பவம்.

19—1—37ல் வெளியான சென்னை "ஜனநாயகம்" பத்திரிகையில் கீழ்க்கண்ட விஷயம் வெளிவந்துள்ளது:—

கொச்சி ஸமஸ்தானத்தின் எல்லையில் இருஞாலகூடா, நெடும்பள்ளி என்ற ஊரில் கோடமாணிக்கம் கோவிலில் சில தினங்களுக்குமுன் ஸாயங்கால பூஜை நடந்துகொண்டிருக்கும்போது, திருவாங்கூர் ஸம்ஸ்தான ஆலய பூஜகர்களான பரமேச்வரன், ஜாதவேதன், என்ற இருவர் அந்தக்கோவிலுக்குள் வந்தார்கள். இவர்கள் தீண்டாதார் நுழையும் கோவில்களில் பூஜைசெய்கிறவர்களாதலால் இவர்கள் கோவிலில் வந்ததும் கோவில் அசுத்தமாகிவிட்டதாகக்கருதி ஷைகோவில் பூஜகர்கள் பாதிபூஜை நடந்துகொண்டிருக்கும்போதே பூஜையை நிறுத்திவிட்டு வெளியேபோய்விட்டனர். கோவிலுக்குத் தீட்டு ஏற்பட்டுவிட்டதென்றும் பிராயச்சித்தம்செய்யாமல் மேற்கொண்டு பூஜைநடத்த முடியாதென்றும் பூஜகர்கள் சொல்லிவிட்டனர். கோவில் சிப்பந்திகள் யாவரும் பூஜகர்களை பின்பற்றி வெளியேறிவிட்டனர். ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யப்பட்டிருந்த பிரசாதங்கள்கூட அசுத்தமென்ற காரணத்தால் அதை சிப்பந்திகள் உள்பட ஒருவரும் வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டனர். அந்த பிரசாதங்களை எலம் போடவேண்டியதாயிற்று திருவாங்கூர் கோவில் பூஜகர் இம்மாதிரி இங்கு நுழைந்து அசுத்தப்படுத்தியதைப்பற்றி வைதிக நம்பூதிரிகளுள் மிகுந்த ஆத்திரம் உண்டாகியிருக்கிறது கொச்சி மஹாராஜாவுக்கும் இவ்விஷயம் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தீண்டாதார் நுழையும் கோவில்களுடன் கொச்சிராஜ்யத்திலுள்ள கோவில் பூஜகர்கள் எவ்விதத்திலும் ஸம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்று கொச்சிமஹாராஜா முன்பே உத்திரவுபோட்டிருப்பது வாசகர்களுக்குத் தெரிந்ததே.

ஸ்ரீஜ்யோதிர்மய மஹாலிங்கஸ்வாமி நியமாத்யயன பாடசாலை.

3-வது வருஷபூர்த்தி விழா.

ஜனவரி-மீ 24உ ஞாயிற்றுக்கிழமைதினம் ஷை பாடசாலையின் மூன்றுவது வருஷப்பூர்த்தி விழாக் கொண்டாட்டமானது மன்னார்குடி, சாஸ்திரரத்னகர, சாஸ்திரதிலக மஹோபதேசக, மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களின் அக்ராசனஸனத்தின்கீழ் நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமிக்கு விசேஷமான அபிஷேக, ஆராதன, பஞ்ச முகார்ச்சனை முதலியவைகள் செய்யப்பட்டு பிராம்மண சந்தர்ப்பணையும் நடைபெற்றது. பிற்பகல் 3 மணி சுமாருக்கு சாஸ்திரிகள் அக்ராஸனர் அவர்களையும் கும்பகோணம் பிரமுகர்களான R ஸ்வாமிநாதய்யர் (மாஜிஹெட்மாஸ்டர்). ஸ்வாமிநாத சாஸ்திரிகள் (ரிடயர்டு இஞ்சினீர்) பிரசங்கபானு ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் T L சுப்பய்யர் முதலியவர்களுடன் விசேஷ வாத்யகோஷத்துடன் பிரம்மஸ்ரீ விச்வேச்வர சாஸ்திரிகளவர்கள் க்ருஹத்திலிருந்து ஊர்வலமாக கோவிலுக்கு அழைத்து செல்லப்பட்டது அங்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்களால்அனுப்பப்பட்ட விபூதிப்ரசாதம் முதலியவைகள் அக்ராசனரால் ஸ்ரீ விச்வேச்வர சாஸ்திரிகளுக்கு வழங்கப்பட்டு வேத மஹிமையைப் பற்றியும் அத்யாபகர் விச்வேச்வர சாஸ்திரிகளின் பாண்டித்யத்தைப் பற்றியும் பேசிவிட்டு, ஸ்ரீ T. L. சுப்பய்யர் முதலியவர்களை பேசும்படி கேட்டுக்கொண்டதின்பேரில் ஸ்ரீமான்கள் T. L சுப்பய்யர் ஸ்ரீ ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள், பிரசங்கபானு ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் ஆனைதாண்டவபுரம் ஸ்ரீ பட்டாபிராமய்யர் மாஜி இஞ்சினீர் ஸ்வாமிநாத சாஸ்திரிகள் முதலியவர்கள் உபந்யசித்தவுடன் சபை இனிது கலைந்தது. உபந்யாச விபரமும் மற்ற விபரமும் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

ஓர் நிருபர்.

வைதிக தர்ம பிரசாரம்.

திருவிடைமருதூர்.

இவ்வூரிலும் சுற்றுவட்ட கிராமங்களிலும் வைதிகதர்ம ஸங்க பிரசாரக் கமிட்டிமெம்பரான மாஜி இஞ்சினியர் ஸ்ரீமான் எஸ். ஸ்வாமிநாதசாஸ்திரியார், சென்றவாரம் தர்ம பிரசாரம் நடத்தியும் தர்மஸங்கம் எற்படுத்தியும் பல முக்கிய கார்யங்களைச் செய்தார்கள். விவரம் பிறகு.

ஒரு நிருபர்.

கும்பகோணம்.

வைதிக தர்மஸங்க பிரசார கமிட்டியார் சார்பாக அடுத்த 23உ சனிக்கிழமை முதல் கும்பகோணம் டபீர் கீழ்ப்படித்துறையில் பகவத் கீதையைப்பற்றியும் மனுஸ்ம்ருதியைப்பற்றியும்தொடர்ந்து உபன்யாஸங்கள் பிரதினம் மாலை 5-மணிமுதல் 6-மணி வரையில் நடக்கும், ஆத்மவித்யாபூஷணம் ஜகதீச்வர சாஸ்திரிகள், அக்னிஹோத்ரம் தாததேசிகாசார்யார் ஸ்வாமிகள் M. ராம்ராவ், ராமாயண கேசரி முத்துசாமி அய்யர் முதலியவர்கள் உபந்யாசங்கள் செய்ய சம்மதித்திருக்கின்றனர். எல்லோரும் வந்து ச்ரவணம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. ஸ்வாமிநாத சாஸ்திரிகள்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Tuni

வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா)

கிளர்ச்சியின் பயன்! சென்னை பிரதிநிதி ஸபைக்கு ஸ்ரீமான் பத்மநாபநாயடு என்பவர் ஸநாதநி பிரதிநிதியாக நிற்கிறார். ஓர் அப்பிராமணர் தர்மத்தின் பெயரால் நிற்கிறார்! அவர் எண்ணம் ஏதாவதிருக்கட்டும்! ஜயாபஜயத்தையும் விட்டு கவனிப்போம்!! சிலகாலமாக சென்னையில் நடந்துவரும் வைதிக கிளர்ச்சியின் வெற்றி இது!! கட்டுப்பாடுடன் முன்னமேயே நாம் வேலை துவக்கி இருந்தால்? எவ்வளவு ஜயமுண்டாகும்!!

சிவத்விஜ மஹாஸபை!! மசென்றவாரம் சென்னை கந்தஸ்வாமி கோயில் உத்ஸவத்தில் ஷை மஹாஸபைகூடி பல அரிய உபன்யாஸங்களை நடத்தி சில காலோசிதமான தீர்மானங்களைச் செய்தது. ஆகமத்திற்கு ஜீவநாடியான இவர்களும் ஆலயங்களும் நன்கு ரக்ஷிக்கப் படவேண்டிய காலத்தில் போதிய பிரசாரத்துடன் சிறப்பாக இது நடந்திருந்தால் நன்றாயிருக்கும். செய்தவரை நன்றி!!

உள்ளதையுமிழந்தனரே!! ஆழ்ந்த புத்தியும் ஜாதி அபிமானமும் இல்லாமல் கையில் கிடைக்கும் சில காசுக்கும் மற்றதற்கும் ஏமாந்து பல பஞ்சமர் கிருஸ்தவரானர்கள்! அவர்கள் ஸ்திதி முன்னைவிட மோசமாயிற்று! பஞ்சமருக்குள்ள சிபார்சும் போயிற்று! என் செய்வர்? கவர்னரிடம் தூதுபோய் முறையிடுகின்றனர் பாவம்!! மற்றவரிதை கவனிப்பாரா?

பலஹீநத்தை கவனிப்பாரா? அரசாங்கம் தேர்தலில் தலையிட்டு தங்களுக்கு தீங்கிழைப்பதாகக் கூறும் தேசியஸபை தன்னினம் பிறர்க்கு தீங்கிழைக்காதபடி கவனிக்கவேண்டாமா? பழய தேசிய கிழவீரசிங்கத்தை பேச விடாமல் தடுத்த தேசியஸபையின் கனைகளைப் பிடிங்கெறிய தலைவர் என்ன நடவடிக்கை எடுத்தார்? இதனால் எவ்வளவு பலஹீநதை?!

பதவிக்கேற்ற பெருமை உண்டா? ராஷ்ட்ரபதி என தேசியஸபை தலைவருக்கு இவ்வாண்டு புதுபட்ட மளிக்கப்பட்டது. அப்பதவியிலுள்ளோர் சிறுபான்மையோருக்கு பூர்ண ஆதரவளித்து தழுவிக்கொண்டு போதல் வேண்டும். கார்யம் எப்படியாயினும் நல்ல பேச்சேனும் பேச இவர் அரசாங்கத்தலைவரிடம் கற்கவேண்டியதுதான். ஸநாதநிகளை கவனியாததுபோல் மஹம்மதியரை மதியாவிடில் ஜின்னாவும் ஏனையோரும் தாக்குவது ஸஹஜமன்றோ?

அசடுதட்டுகிறது! காந்திஜி எதிர்பாராதபடி அதர்ம வீரர் ஒருவர் பெரும் பெருமையடைந்தார். அர்த்தாங்கீகாரத்துடன் திருவாங்கூர் வந்து, கொச்சியில் சென்று குறையை தீர்த்துக்கொள்ள முயற்சித்தார். பலிக்கவில்லை அது! இந்த இயக்க சம்பந்தமாக அங்கு போகவில்லை. ஆனால் கொச்சிராஜாவை வேண்டிக்கொண்டேன் என்கிறார். என்னபொருளிதற்கு? மன்னரிசைந்திருந்தால்? அவ்வளவுதான் அதர்மத்திலும் அவருக்கு இனி ஐயமில்லை! ஓய்வெடுக்கட்டுமே பாவம்!!

ராஜயதந்த்ரம் சூன்யமே? இந்திய அரசாங்கம் தேர்தலுக்கு காலைக்குறிப்பிட்டு அதற்கு வேலைசெய்ய முடியாமல் சட்டஸபையில் முக்யமான வரவு செலவு விஷயத்தை நடத்துகிறது. ஓர் தொந்திரவுமில்லாமல் இச்சபை நடக்கும் பயனைவிட அங்கத்தினரிஷ்டத்தை அனுஸரித்திருந்தால் அதிக பயனைப் பெற்றிருக்கலாம்! அப்படியும் அவர் தொந்திரவிருக்கென்றால் ஸ்வேச்சாதிகாரம் எங்கே சென்றது? சாணக்யாதி நீதிகளைப் படித்தவருக்கே உத்யோகமளிக்கவேண்டும்.

யுத்த ஆரம்பமா? தேசியஸபை சுதந்திரதினத்தைக் கொண்டாடக்கூடாதென அரசாங்க உத்திரவு கிளம்புகிறது. தேர்தல் அமர்களம் ஓர்புறத்தே! மற்றோர்புறமதனால் ஏதேனும் கலவரம் கிளம்பலாம்? இவைகளை கவனியாது இவ்வுத்திரவு தோன்றினதால் சாந்திக்கு வழியில்லை

இதற்குமாத்திர முத்தரவா? தேசிய ஸபையை மதியாது இந்திய சட்டஸபை வரவுசெலவு வாதம் நடத்துகிறது. அதற்கு போகலாகாதென கூறிய தேசியஸபை சாரதா சட்டம், ஆர்யஸமாஜிவிவாஹம் முதலிய மதவிருத்தமான விஷயங்களுக்குமாத்ரம் செல்ல ஏன் உத்திரவளிக்கவேண்டுமோ தெரியவில்லை!

அனைவரும்வருக! பிப்ரவரிமீ 7,8உகளில் சென்னையில் ஓர் ஸநாதநதர்மமஹாஸபை கூடுகிறது. ஆஸ்திகாளைவருமை வந்து ஸபையை சிறப்பிக்க வேண்டுவோம்.

செங்கற்பட்டு.

கண்டனக் கூட்டம்

செங்கற்பட்டு ஜில்லா ஹிந்துமத்தியக்கமிட்டியின் ஆதரவில் 23—1—37 இரவு 8-30 மணிக்கு செங்கற்பட்டு வாஸிகளின் பொதுக் கூட்டம் ஈசுவரன்கோவில் தெருவில் நடைபெற்றது. அதற்கு பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதரவர்கள் அக்கிராசனம் வகித்து திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து சுருதி முதலிய ஆதாரங்களுடனும் உபன்யஸித்தார். பிறகு கீழ்க்கண்டதீர்மானங்கள் நிறைவேறியது.

1. "திருவாங்கூர் ராஜியத்தில் ஹிந்து ஆலயங்களில் தீண்டாதார்களை அனுமதித்து மே. த. மஹாராஜா அவர்கள் விடுத்திருக்கும் விளம்பரத்தைச் செங்கற்பட்டுவாஸிகளடங்கிய இக் கூட்டம் கண்டிப்பதுடன் ஷை விளம்பரவாபீஸ்பெற்றுக்கொள்ளுமாறு மே. த. ராஜா அவர்களையும், அவருடைய திவானையும் கேட்டுக்கொள்கிறது" 2. "மே. த. கொச்சி மஹாராஜ அவர்கள் சீர்திருத்தக்காரர்கள் பலர் கேட்டுக்கொண்டும் அவைகளையெல்லாம் மறுத்துவிட்டு தர்மத்தை அவலம்பித்து ஆலயங்களை ரக்ஷித்தற்காக மஹாராஜா அவர்களை செங்கற்பட்டுவாஸிகளடங்கிய இக்கூட்டம் பாராட்டுகிறதுடன் மேலும் தீரத்துடன் ஸநாதநதர்மத்தையே அவலம்பித்து நிற்கும்படி பிரார்த்திக்கிறது. 3. மே. த. கொச்சி மஹாராஜா அவர்களுடைய, சிலையை தக்க பொதுஸ்தலங்களில் ஸ்தாபிக்கும்படி அகில ஸநாதன தர்மாபிமானிகளும் சிரத்தையெடுத்துக்கொண்டு முயற்சிக்குமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது 4. வரப்போகும் மாகாணச்சட்டஸபைத் தேர்தல்களில் ஸநாதன தர்மாபிமானிகள் மதத்திற்கு விரோதமான சட்டங்களை ஆதரிப்பதோ கொண்டு வருவதோ இல்லையென்று உறுதிமொழியளிப்பவர்களுக்கே ஸநாதனிகள் ஓட்டுகொடுக்க வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. 5. சென்னையில் பிரம்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யரவர்கள் மகா-ா-ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸாச்சாரியார் இவர்களின் முயற்சியால் ஸமீபத்தில் கூட்டப்போகும் மாகாண ஸநாதனதர்ம மஹாநாட்டை நடத்துவதற்கு இக்கூட்டம் பூரண ஆதரவளிக்கிறது. இத்தீர்மானங்கள், அக்ராசனராலும், P. N. நாராயண சாஸ்திரியாலும் பிரேரேபிக்கப்பட்டு, மகா-ா-ஸ்ரீ N. ராமனுதய்யர், V. விசுவனுத அய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு V. அனந்தராமய்யர், V, T. ஸ்ரீநிவாஸாசாரியாராலும் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது.

22—1—37 வெள்ளிக்கிழமை இரவு8மணிக்கு பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் வக்கீல் M. V. வரதாச்சாரியார் அவர்கள் கிருஹத்தில் "ஸ்ரீமத் ராமாயண ஸாரம்" என்னும் விஷயம் உபன்யஸிக்கப்பட்டது,

செங்கற்பட்டு தை கிருத்திகை உற்சவம்.

தாது-ஹூ தை-மீ 8உ (21—1—37) வியாழக்கிழமை காலை தைக்கிருத்திகையை முன்னிட்டு ஸ்ரீ ஏகாம்பரநாதர் (ஈஸ்வரன்) கோயிலில் ஸ்ரீ ஸ்கந்தனுக்கு அபிஷேகம், தீபாராதனை முதலியனவைகள் வெகு விமரிசையாய் நடந்தன இரவு 7-30மணிக்கு ஸுப்ரமண்ய ஸ்வாமிக்கு விசேஷ அலங்காரங்கள் செய்து நகரின் பிரபல வீதிகளின்வழியாக வேதபாராயணத்துடன், ஊர்வலம் கொண்டு வரப்பட்டது. பிறகு கோயிலில் தீபாராதனைக்குபின்பு பிரஸாதங்கள் வழங்கியபின் உற்சவம் முடிந்தது.

நமது நிருபர்.

ஓகை குடவாசல்.

ஸநாதநதர்ம ஸபை

தை-மீ 1உ (14-1-37) மாலை 3 மணிக்கு இவ்வூர் அக்கிரஹாரத்து மகாஜனங்களின் பொதுக்கூட்டம் ஒன்று ராமர் கோவிலில் நடந்தது. மகா-ா-ா-ஸ்ரீ சங்கா அய்யர் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஆஸ்திக மகாஜனங்களுள் மதசம்பந்தமான அறிவை விருத்திசெய்யவும், மதத்துக்கும் சிஷ்டாசாரத்துக்கும், விரோதமான சட்டதிட்டங்களை அவ்வப்போது கண்டிக்கவும் சனாதன தர்மசபை ஒன்று ஏற்படுத்துவது 2. வேதசாஸ்திர ஆகமங்களில் நம்பிக்கை உள்ள எல்லா ஹிந்துக்களும் அங்கத்தினராகலாம். சக்தி உள்ளவர்கள் மீ 1-க்கு ½ அ. சந்தா செலுத்துவது. 3 ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கூட்டம்கூடி மதவிஷயமான உபன்யாஸங்கள் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். 4. மகா-ா-ஸ்ரீ சங்கர அய்யர் அவர்கள் தலைவராகவும், G. வெங்கட்டராமய்யர் அவர்கள் காரியதரிசியாகவும் டிரஷரராகவும் ஒரு மனதாய் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். 5. பரம்பரையாய் தர்மத்தை காத்துவந்த திருவாங்கூர் ராஜவம்சத்திலுதித்த தற்கால மகாராஜா தேசமுழுதுமுள்ள ஆஸ்திகர்களின் மனதைப் புண்படுத்தி ஆகம பிரதிஷ்டையுள்ள ஆலயங்களில் தீண்டாதாரை பிரவேசிக்க அனுமதித்து மூர்த்தியான ஸாந்நியத்தை பாழ்படுத்துவதை இந்தக் கூட்டம் பலமாய்க் கண்டிக்கிறது.

ஒரு நிருபர்.

இன்புளுயன்ஸா மரணம் ஒருவாரத்தில் 1317.

பிரிட்டனில் இன்புளுயன்ஸா என்ற விஷஜுரம்பரவி இருக்கிறதாம். இதனால் சென்ற ஒருவாரத்தில் மட்டும் 1317 பேர் இறந்துவிட்டனர். அதற்குமுன் வாரத்தில் 836 பேர் இறந்தனராம்.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

றும் சிலர்கூறுவது சுத்தப்பிசட்டு என்றும் அப்படிக்கல்ல என்று பெருமாள் திருமொழி, ராமாயணம், பாகவதம், விஷ்ணுபுராணம் காளிதாசன், முராரி, வரகவி முதலியோர் கிரந்தங்களினின்று வேண்டிய பிரமாணங்கள் விஸ்தாரமாக எடுத்துக்காட்டி பிறர் கூறும் ஏமாற்ற மொழிகளைக் கேட்டு மனக்தடுமாற வேண்டாமென்றும் ஸ்பஷ்டமாகக்கூறி சாஸ்திரமுறையே நமக்கு உபாதேயம் என்றும் விளக்கினர்.

காரியதரிசி கூறிய வந்தனோபசாரத்துடன் கொண்டாட்டம் இரவு 8 மணிக்கு இனிது முடிவடைந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

57

Sri Ramananda Saraswathi.

Sir,

Please permit me to express through your columns my grateful thanks to one and all of the large number of friends and relations who have sent me messages of sympathy at the demise of my revered father Mr. Rama chandra Aiyar, latterly known as Sri Ramananda Sarasvati. He was more than a father to me as he was also my spiritual Guru and Guide. It is no small consolation to me that I have the sympathy and the blessings of all those who have known or even heard of him in his Purvasrama or in the latter stages of his life. It is my earnest hope that he will continue to guide me aright in the future also, however unworthy I may be of his sacred blessings.

As there seem to be various rumours current about his last days, I think it necessary to state that he left Mahadanapuram by the end of February last and after a stay of about two months at Mayanoor and Ayaloor, reached the Kollimalai hills by the end of May. He was staying in a small room within the Arapuleswar Temple there and was content to have his Bhiksha out of the scanty food offered to the Deity. About a month afterwards, two ladies from Lalgudi went there with the intention of staying there and arranging for Bhiksha but most of the time Sri Swamigal was having malarial fever and could take nothing more than gruel. The ladies themselves caught the fever and one of them came down the hills in September and the other also did so in the first week of December Even when they were there, he did not like the idea of taking Bhiksha continuously at their hands and so was content with a handful of Aval (Prithuka) and a mouthful of water daily. The fever completely left him in about August but again lasted for a few days in November. He seems to have felt very weak on the morning of the 25th and unable to sit or stand and to have had a broad motion. He lost immediately the power of speech though he retained consciousness to the end. The Temple Archakas (a boy and an elderly gentleman) and the Temple servants were alone at that time to attend on him. They at once sent word to the nearest village of Visvambalsamudram (12 miles off) to send me a telegram. The nearest telegraph office was at Turaiyur (10 miles further off). I got the telegram at Tinnevelly late in the evening and started from here at about midnight by special motor car and reached the village via Trichy and Turaiyur at about two next afternoon and the temple at about midnight on Saturday the 26th. We learnt on the way from Mr. Ramaswami Aiyar of Visvambalsamudram who had gone up the hills long before us that Sri Swamigal attained Siddhi on Friday night itself at about 9 and that the people there would not hand over the body to him for the performance of the further rites. As soon as we reached the temple and they learnt my relationship to Sri Swamigal, they did not raise any further objection but immediately arranged for transporting the body down the hills. We began to descend at about 5 in the early morning and reached the village at about 1-30 in the afternoon The further ceremonies were all duly performed there. Immediately the next morning, I sent for Sri Jnanananda Sarasvati Swamigal (a Sishya of Sri Swamigal) who was then at Mahadanapuram and he came to the village on the evening of the 28th. After performing puja on the 29th, I entrusted the further puja to him and came away here for the later puja-cermonies which have all been duly performed, thanks to his blessings.

It has been an oft-expressed wish of his that no permanent structure needing daily puja ought to be erected over his mortal remains and I have therefore requested the villagers to mark the spot simply by planting a Bilva tree there.

Please let me also publicly acknowledge my great indebtedness for valuable help rendered to me by Mr. V. P. Ramaswami Aiyar of Visvambalsamudram and Mr. V.S. Venkatarama Aiyar, Advocate, Tanjore, during these trying days.

R. Krishnaswami Aiyar.
Tinnevelly.

Congress Leaders and Election Pledges.

Mr. Satyamurthi.

(The following are extracts from letters to the President Hindu Central Committee, Madras by Mr. Satyamurthi prior to his election to the Legislative Assembly)

16—9—1934

My views on the temple entry bill are well known. I wrote and told the Government of Madras several months ago that I was against the Temple Entry Bill. My views remain the same. As for the Sarda Act. I feel that to-day it is a dead letter. It ought to be amended either making the minimum age 12 or giving exemption to conscientious objectors belonging to communities who have followed hereditarily or as a religious custom pre-puberty marriage subject to the minimum of 12 years.

19—10—1934

As a Congress man I am bound by the resolution of the Congress on Fundamental rights which *inter alia* states.

1. Every citizen of India shall enjoy freedom and right to freely profess and practise his religion subject to public order and morality:

2. No disability shall attach to any citizen by reason of his or her religion, caste, creed or sex regarding public employment, office or power or honours and in the exercise of any trade or calling.

* * * *

3. The State shall observe religious neutrality regarding all religions.

* * * *

My own personal view has been and is against the Temple Entry Bill.

As for the Sarda Act, my personal view is:— The minimum age of marriage should be reduced to 12 years in the case of girls, or the orthodox community who traditionally follow the custom of pre-puberty marriage should be enabled to claim exemptions from the operations of the act, on satisfying the prescribed authorities for the purpose.

21—10—1934

I am against legislative interference of a coercive nature, in religious and socio-religious matters; and my past public life must be a guarantee to yourself and your friends, that I do not surrender my convictions and I do not hesitate to express them. In view of the Congress resolution at Karachi, I do not expect the Congress to give any contrary mandate.

* * * *

I am wholeheartedly in favour of the Congress observing strict religious neutrality.

25—10—1934

If any bill be brought before the Assembly which I consider like the Temple Entry Bill to be a legislative measure of a coercive nature, interfering with our religion, I will not resign my seat in the Assembly; but I will claim and exercise my right to speak and vote against it, as it would be a matter of conscience with me.

Mr. Seth Govindoss

(From the Hindu dated 23—10—1934)

At an election meeting held last night, Seth Govindoss, the Congress candidate to the Assembly, replying to local Sanatanist leaders declared that he was against legislative interference by the State in religious matters like Temple Entry, etc., and assured those present that if the Congress at any stage made this a party question, he would resign his seat in the Assembly.

THE EDITOR,
"Arya Dharmam"

Sir,

I was amused to read the statement made by Mr. S. Satyamurti published in the Madras Mail of the 14th instant with the extracts of correspondence that passed between Dewan Bahadur Govindoss Chathoorbhoojadoss, President of the Hindu Central Committee, and Mr. Satyamurti during September and October 1934.

On reading the pledges so readily and heartily given then by Mr. Satyamurti and his own commentary on the fundamental rights defined by the resolution of the Indian National Congress, any one would surely feel that Mr. Satyamurti is as

(Contd on next page)

ardent a sanatanist and as staunch a supporter of Hindu Orthodoxy as anybody else could claim to be. He had then written giving assurances in unequivocal terms to the President of the Hindu Central Committee that he was a firm Sanatanist and against the Temple Entry Bill and the Sarda Act and "That he would speak and vote against any legislative measure of a coercive nature interfering with our Religion as it would be a matter of conscience with him."

Now the speeches made by Mr. Satyamurti welcoming the Temple Entry Proclamation of Travancore make one feel aghast at the change of front now made by him. One is at a loss to understand as to what has happened to the Hindu Orthodox Community during these two years that Mr Satyamurti should so easily and readily change his views of Hindu Religion and Hindu Shastras as to make him give such a statement as he has done in his interview to the Madras Mail on 13—1—1937. Especially in the last two sentences of his present statement he says "His Highness the Maharajah of Travancore is a conforming Hindu and Hindu Shastras have always recognised the right of Hindu Kings to authoritatively interpret the Shastras with the help of priests and religious heads. His Highness has done so.' The public has not been enlightened by His Highness's Government or his Dewan as to the steps that they took to consult the important religious heads in South India and we must presume that they have not done so.

Never in the history of our country the kings have been given any power to legislate or issue proclamations interfering with our Dharma as laid down by our Shastras.

During the last election to the Indian Legislative Assembly both Mr. Satyamurti and his rival candidate Diwan Bahadur A. Ramaswami Mudaliar gave pledges to the Hindu Central Committee to oppose any legislative measures that might be brought in to support the Temple Entry Movement. But the pledges given by Mr. Satyamurti appeared to be more impressive and the Hindu Central Committee believed in the sincerity of the pledges that seemed to be so heartily given by him and supported his candidature at the Election. And now Mr. Satyamurti has laid bare before the public his real, personal view on this question however much he might try to clothe it with legal quibblings and hair splitting distinctions.

Pledges, though given at the time of elections, are as solemn and binding on the giver as those given at other times and other places. Perhaps Mr. Satyamurti thinks that he can easily break his pledges given to the Hindu Central Committee in September and October 1934 because they were only election pledges and not meant to be kept up and his purpose was served by his having hoodwinked the Sanatanist Hindus at that time. He evidently thinks that he need not now care for the opinion of the Sanatanist Hindus because they do not count much in his opinion and that he can defy them with impunity. Though we Sanatanists, as a body, were never enamoured of Mr. Satyamurti's views of Hindu Religion and his adherences thereto at any time, we ought as a body to strongly protest against the turn-coat behaviour and betrayal of trust so glaringly displayed by Mr Satyamurti, especially as he now commands a high position in the Indian National Congress, which is now playing a great part in the coming Elections.

Kissendoss Girdhardoss.

சென்னை வர்ணாச்ரமஸ்வ ராஜ்ய ஸங்கம்.

பலஇடங்களில் பெருங்கூட்டங்கள்.

ஆலயப் பிரவேச கண்டனம்.

எலக்ஷன் பிரசாரம்.

சென்னை வர்ணாச்ரமசுயராஜ்ய சங்கத்தின் ஆதரவில் 16-1-37உ சனிக்கிழமை இரவு 8-45 மணிக்கு மயிலாப்பூர்கிழக்கு மாடவீதிவன்னியர்மண்டபத்தில் ஒருபொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் சங்கரமுதலியார் அவர்கள் தலைமை வஹித்தார்.

தலைவர் முன்னுரையில் தருமத்துக்கு ஆபத்துவந்திருப்பதாயும், ஸநாதனிகள் ஏகமனதாய் அரும்பாடுபட வேண்டுமென்றும் வருகிற எலக்ஷனில் மிகஜாக்ரதையாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

சமீபத்தில் திருவிதாங்கூர் மஹாராஜா விடுத்த ஆலயப் பிரவேசவிளம்பரம் ஆகமாதி சாஸ்திரங்களுக்கு முற்றிலும் விரோதமென்றும், ஜாதி ஹிந்துக்களுக்கே இதுவரையிலிருந்து வந்துள்ள உரிமையைப் பறிக்கிறதென்றும் இங்ஙனம் அநுமதிக்க மஹாராஜாவுக்கே அதிகாரமில்லை. என்றும், சகல நியாய முறைகளால் அந்த ஸ்ரீமுகம் வாபீசு வாங்கும்படி செய்வதே தார்மிகர்களின் கடமை என்றும் அப்படி ஒரு முடிவு ஏற்படும் வரையிலும் திருவிதாங்கூர் ஆலயங்களுக்கு ஜாதி ஹிந்துக்கள் போகக் கூடாதென்றும் பின்னர் தகுந்த சம்ப்ரோக்ஷணையான பிறகே செல்லலாமென்றும், வருகிற எலக்ஷனில் மத உரிமையைப்பாது காப்பதாக உறுதிமொழி வாங்கிக்கொண்டே அபேக்ஷகர்களுக்கு ஓட்டுக்கொடுக்க வேண்டுமென்றும், சமீபத்தில் நடக்க இருக்கும் மாஹாநாட்டை வரவேற்பதாகவும் அதற்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்யவேண்டும் என்ற தீர்மானங்களை ஸ்ரீமான் ஜி சென்னகேசவய்யர் பிரேரபிக்க ஸ்ரீமான் கிருஷ்ணராவ் ஆமோதிக்க பிரம்மஸ்ரீ பண்டிதஸோமதேவ சர்மாவும், ஸ்ரீமான் யன், ஸ்ரீநிவாஸசாரியாரவர்களும் விஸ்தாரமாக விரித்துரைக்க ஏகமனதாய் தீர்மானங்கள் நிறைவேறின.

தலைவர் முடிவுரையில் ஆலயப்பிரவேச அமளிமிகக்கொடிய தென்றும், நமது பழைய ஆசார அநுஷ்டானங்களே நலமளிக்கு மென்றும் கூறினர்.

சங்ககாரியதரிசி திருமலை ஐயங்கார் வழங்கியவந்தனோபசாரத்துடன் கூட்டம் 9-45 மணிக்கு முடிவடைந்தது.

ஞாயிற்றுக்கிழமை

17-1-37உ காலை 8-30 மணிக்கு ஜார்ஜ டவுன்தம்பு செட்டிதெருவிலுள்ள ஸ்ரீநடராஜாஹிந்து பெண்பாடசாலையில் ஒரு மாபெருங்கூட்டம் நடைபெற்றது ஸ்ரீமான் யம் வெங்கடராமையா நாயுடு காரு அக்ராஸனம் வஹித்தனர். அநேகர் வந்திருந்தனர். தார்மிக ஸ்திரீகள் பலர் வந்திருந்தனர்.

தலைவர் முன்னுரையில் மிக கம்பீரமான குரலுடன் ஆலயப்பிரவேச இயக்கத்தினரனைவரும் சீர்திருத்தக்காரர்களென்றும், அவர்களுக்கு கோயில்களில் நம்பிக்கையே இல்லை என்றும், கோவில்களுக்கு அவர்கள் செல்வதும் இல்லை என்றும், கட்டாயத்தின் பேரில் சென்றாலும் வேடிக்கையாகப் போவார்கள் என்றும், இவ்வியக்கத்தை பஞ்சமர்கள் (அவர்ணர்கள்) கோரவில்லை என்றும், சவர்ணர்களிற் சிலர் எண்ணிக்கை குறையுமென்று தப்பபிப்ராயம் கொள்வதாயும் நமக்கு மதவிஷயத்தில் எல்லாக்கக்ஷியுமே விரோதிகள் என்றும் ஜாதி ஹிந்துக்களே எண்ணிக்கையில் மிகுந்தவர்கள் என்றும், ஆலயப்பிரவேசத்தை தான் முழுமையும் கண்டிப்பதாகவும் நாம் தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

தீர்மானங்களை ஸ்ரீமான்கள் டி. கே. ஜகந்நாதாசாரியார் பிரேரணை செய்ய ஸ்ரீமான் இ. சுப்ரமணிய ஐயர் ஆமோதித்தார்.

ஸ்ரீராமாநுஜவைஜயந்தி பத்திராதிபர் ஸ்ரீமான் வடகரை ராமாநுஜாச்சாரியார் தீர்மானங்களை ஆதரித்துப்பேத்கையில் உபநிஷத் இதிஹாஸம் ஆகமம், புராணங்கள், குறள், ஆழ்வார்ப்ரபந்தங்கள் இவற்றில் வேண்டிய ஆதாரங்கள் காட்டி விரிவாகவிளக்கி ஆலயப்ரவேச ஸ்ரீமுகத்தைப் பலமாகக்கண்டித்து எலெக்ஷன் காலத்தில் சர்வஜாக்ரதையாக இருக்கவேண்டுமென்று கூறினர்.

பண்டித ஸோமதேவசர்மா தீர்மானங்களை ஆதரித்து திருவாங்கூர் மஹாராஜாவும் திவானும் ராஜமந்திரிதர்மங்களை அநுஷ்டிக்கவில்லை என்றும், ஸாதுக்கள் மனம் தத்தளிப்பதாகவும் விளம்பரத்துக்குக் கூறும் லௌகீகக்காரணங்கள் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை என்று பலவிதமாய்நிரூபித்தும் பேசினர்கள்.

திருமலை ஐயங்கார் பேசுகையில் செங்கோன்மை கொடுங்கோன்மை, மந்திரி லக்ஷணம் இவற்றைக்குறித்து கம்பர், வள்ளுவர் முதலியவர்கூறு வதையும் பிரகிருதவிஷயம் அவற்றிற்கு முற்றிலும் விரோதமென்றும் ஏழைகள் அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீரன்றே செல்வத்தைத்தேய்க்கும் படை என்றும் கூறினர்.

ஏகமனதாய் தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் முடிவுரையில் மதவிஷயத்தில் நுழைவதில்லை என்று சத்தியமான பொறுப்புள்ள வாக்குறுதி கிடைத்தாலன்றிதாலும் தன்னைச்சார்ந்த அநேக வோட்டர்களும் ஏற்கனவே முடிவான தீர்மானத்துக்கு வந்திருப்பதாயும், இனிமேலும் உறங்காது தீவிர பிரசாரம் செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினர்.

காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் கூட்டம் 11-15 மணிக்கு முடிவடைந்தது.

17-1-37உ

ஞாயிற்றுக்கிழமைமாலை 4-45 மணிக்கு புரசைப்பாக்கம் வெள்ளாளர் வீதியிலுள்ள ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவில் கல்யாண மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. அட்வகேட் ஸ்ரீமான் யஸ். நடராஜய்யர் (பி. ஏ. யம் யல்) தலைமை வஹித்தார்.

திருவெண்காடு திருஞான சம்பந்த தேசிகர் தேவாரம், திருவாய் மொழிப்பாக்கள் இனிய குரலில் தாளவரிசையுடன் பாடினர்.

59

வெளியூர்ச் செய்திகள்.

ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ சங்கர குருகுலம்.

இவ்விடத்தில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாள் ஸந்நிதியில் சென்ற சனிக்கிழமை ஸாயங்காலமும் ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலமும் மைசூர் மஹாராஜா யோகசாலாத்யக்ஷராகிய பிர்ம்மஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரின் சிஷ்யரான பிரம்மஸ்ரீ டோலாஸனப்யாஸ சதா ரெங்கநாத தேசிகாச்சார்ஸ்வாமியால் யோகாப்யாஸத்தின் அவசியத்தைப்பற்றியும் ஸகலரும் ஸுலபமாக அதை அப்யஸிக்கும் வழிகளையும் ப்ராணாயாமத்தின் முறைகளைப் பற்றியும் எளிய தமிழ்நடையில் மிகவும் நன்றாக உபந்யஸிக்கப் பட்டதுமன்றி அநேகவிதமான யோகாஸநங்கள் ப்ராணாயாம பூர்வகமாக அநுஷ்டித்துக்காட்டப்பட்டன. ஒவ்வொரு ஆஸனங்களுடைய அநுஷ்டானத்தால் இன்னின்ன வியாதிகள் வாராமல் தடுக்கப்படுமென்பதையும் அவ்வப்போது நன்கு விளக்கிக் காட்டினார்கள். பிரதி ஒரு ஆஸநத்தையும் ரேசக பூரக கும்பக விதிகளுடன் யோக சாஸ்திர விதி தவறாமல் அவர்கள் அநுஷ்டித்துக் காட்டியது அங்கு கூடியிருந்த ஏராளமான ஜனங்கள் எல்லோருக்கும் மிகவும் வியப்பை உண்டாக்கி நமது ப்ராசீன சாஸ்திரத்தின் மஹிமையையும் நன்றாக வெளிப்படுத்திற்று. கூடியிருந்த ஜனங்களில் பெரும்பாலோர் ப்ரார்த்தனைக்கிணங்கி ஷடி ஸ்வாமிகளைக்கொண்டு ஸ்ரீ சங்கர குருகுலத்திலேயே நமது சாஸ்திரீய யோகாப்யாஸத்திற்காக ஒரு பாடசாலை ஏற்படுத்தி அதினால் ப்ராணாயாமமும் யோகாஸநங்களும் விதிப்படி செய்வதற்கு பழக்கி கொடுப்பதற்காக ஏற்பாடு செய்து அந்த பாடசாலை நாளை ஞாயிற்றுக்கிழமை (24—1—37) மத்தியானம் 1 மணிக்குமேல் 3 மணிக்குள்ளாக விருஷப லக்னத்தில் ஆரம்பிப்பதாக ஸ்ரீ மதாசார்யாளின் ப்ரேரணையின் பேரில் ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறது. பிரதிதினமும் 1 மணி அவகாசம் யோகாப்யாஸம் பழக்கி வைக்கப்படும் இதுவரையில் சுமார் 20பேர்கள் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

ஒரு நிருபர்

(10ம் பக்கத்தொடர்ச்சி)

தலைவர் முன்னுரையில் கூட்டத்தின் நோக்கத்தையும் திருவிதாங்கூர் விளம்பர அநிதியையும் ஸநாதனிகள் அடிக்கடி கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டார்.

ஸ்ரீஉபவே கீழச்சேரி பாவஸ்து ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி ஸவிஸ்தாரமாக வர்ணதர்மம். தொழில்களின் நிலைமை, பஞ்சமஜாதி தத்வம், ஷட்குலியன் விருத்தாந்தம், கிராமாந்தரங்களில் சகலருடைய அந்நியோந்யியத்துவம். ஆலயப் பிரதிஷ்டை, சாஸ்திரங்களின் பாரதநோக்கம், பெரியோர்களின் அநுஷ்டானம், முதலிய வற்றைப் பற்றிப்பேசு ஆலயப் பிரவேச இயக்கம் அசாஸ்திரியம் தேச அமைதியைமிகுதியும் குறைத்து விடும் என்றும் கூறினர்.

கண்டனத் தீர்மானங்களை அட்வகேட் பி. கே. ஜானகிராமய்யர் பிரேரணை செய்தார். அதை ஆமோதித்த பி. எஸ். வைத்யனாதய்யர் வீரகர் ஜனையுடம் வெகு அழகாய் பேசினர். தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

தலைவர் முடிவுரையில் விசேஷவிழிப்புடனிருக்குமாறு கூறினர்.

காரியதரிசி வந்தனோபசாரம் வழங்கக்கூட்டம் முடிவடைந்தது. வந்திருந்தவர்னைவர்க்கும் ஸந்நிதியில் தீர்த்தம், சடாரி, திருத்துழாய் வழங்கப் பெற்றன. ஆனந்தத்துடன் அவரவர் இல்லம் ஏகினர்.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

சென்னை.

ஆதிசைவ அந்தணர்மஹாநாடு:-இப்பெயருடன் பிரும்மஸ்ரீ அமிருத சிவாச்சார்யர் தலைமையில் மூன்றுநாள் ஸபைநடந்தது. பல ஸத்கதைகளும் உபன்யாஸங்களும் நடந்தன. பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ சர்மா அங்கு தோன்றி திருவாங்கூர் ஆலயப்ரவேசத்தைக் கண்டித்துத் தீர்மானம் செய்யும்படி வேண்டினர். அங்ஙனமே நடந்தது.

ஸ்த்ரீ ஸாஹஸம்! உயர்குலத்தில் உயர்வம்சத்தில் பிறந்த ஓர் பெண் தன் கணவனிடம் இரண்டு குழந்தைகளைப்பெற்றவள், தாழ்ந்தஜாதி புருஷனை மறுபடி மணந்து சிலகுழந்தைகளைப் பெற்று இரண்டாவது கணவனிறக்க அவனுக்கு உயர்ஜாதியில் முதலில் பிறந்த குமாரனைக்கொண்டு உயர்ந்த ஜாதியார் அபரக்ரியை செய்யுமிடத்தே உத்தரகர்மா செய்ய ஆரம்பித்தாள். இதை அறிந்து ஆக்ஷேபிக்கவே ஓடிவிட்டார்கள். அவ்விடத்திற்கு சுத்தி செய்யப்பட்டது. அவளையும் அதற்கு உடந்தையாக பணஆசையால் கர்மாவை நடத்தவந்தவரையும் யார் எப்படி சிக்ஷிப்பது? அந்தோ! கலி!!

ஓர் ஸப்தாஹம்! தருவை பிரும்மஸ்ரீ அபிநவ சுகாசார்ய சாஸ்திரிகளவர்கள் கோபாலபுரத்தில் மற்றோர் ஸப்தாஹம் நடத்துகிறார்கள். ஸ்ரீராமசந்திரஹரிஹி, ஸ்ரீவத்ஸ சர்மா முதலிய பலரும் சென்று அபாவயதில் சிறிதும் தேஹச்ரமத்தைப் பாராமல் இரவும் பகலும் ஓயாமல் தர்மப்ரசாரம்செய்யும் ஸப்தாஹ பெரியவாளை தர்சித்துப் போற்றிவருகின்றனர்.

பிரதிநிதி பிரயாணம்: சென்னையில் கூடும் ஸநாதநதர்ம மஹாநாடு, ஸ்ரீகாமகோடிபீடாதிபதி ஸ்ரீஸ்வாமிகளைத் தர்சித்து ஸ்ரீமுகம்பெற்றுவர ஸ்ரீவத்ஸ் ஸோமதேவ சர்மாவைத் தன் பிரதிநிதியாக தேர்ந்தனுப்பிற்று. ஆதலின் விரைவில் அவர் ஸ்ரீபகவத்பாதாளை தர்சித்து வருவார்.

ஸி. ராஜகோபாலாசாரிக்கு எதிராக S. ராஜகோபாலாச்சாரியும் கிருஷ்ணா ரெட்டியை எதிர்த்து நிலசுவான்தார் ஸ்தானத்திற்கு ராமசந்த்ரராவும் ஸநாதநிகளாக சட்டசபைக்கு நிற்கின்றனர்.

திருவல்லிக்கேணி

விசேஷ உபன்னியாஸங்கள்.

ஸ்ரீ வேத வேதாந்தவர்த்தினீ சபையின் ஆதரவில் அடியிற்கண்டவிபரப்படி ஸ்ரீஉப-வே ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியார் ஸ்வாமிகள் மிக அரிய உபன்யாஸங்கள் செய்தார். இடை இடையே ஸநாதன தர்மப்பெருமை, ஆலயங்களின் தத்துவம், அடியார்கள் மஹிமை ஆகமங்களின் சீர்மை, வர்ணாச்ரமத்தின் மேன்மை இவற்றைப்பற்றிப் பேசியதுடன் திருவிதாங்கூர் ஆலயப்பிரவேச இயக்கத்தை அறவே கண்டித்துப்பேசினர். ஆஸ்திகர் பலர் கேட்டு மகிழ்ந்தனர். புத்துணர்ச்சியுண்டாகி இருக்கிறது

11—1—37உ திங்கள் தொண்டரடிப் பொடியாழ்வார் வைபவம், திருமாலை சங்கதி

12—1—37 செவ்வாய், 13—1—37 புதன்

14—1—37 வியாழன் திருப்பாவை

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

ஜாதிநாசத்தை உண்டாக்க வேண்டுமென்பது காந்திஜீயின் நீண்டகாலமாயுள்ள தீர்க்க ஆலோசனை கலந்த அந்தரங்க நோக்கமாகும்

ஆதலால் காந்திஜீயின் ஆதரவு பெற்றதன் மூலம் திருவாங்கூர் விளம்பரம் வேறுவித விஷம்ஸ்வரூபம் அடைந்துவிட்டதை ஸநாதனிகளென்று சொல்லிக்கொள்ளும்சீர்திருத்தக்காரர்களே நன்கு சிந்திக்கக் கடவர்.

ஒரு நிருபர்.

மதச்சீர்திருத்தமே நோக்கமாம்!

ஸ்ரீமான் காந்தி திருவாங்கூர் விளம்பரத்தை அநுக்ரஹம் செய்து உத்ஸாகப்படுத்துவதற்காக அவிடம் சென்று திரும்பிப் போய்விட்டார். அங்கு அவர் இதுவரையில் தமது ஆயுள்காலத்தில் கண்ணால் கண்டிராத தேவாலயங்களையும், தெய்வ பிம்பங்களையும் தர்சித்துவிட்டார். தாம் ஒரு யாத்ரிகனாகவே அவிடம் வந்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு பாமரர்களுக்கு உத்ஸாஹமூட்டிப் பேசினர். அவருடைய பேச்சில் முக்யமாகச் சில அம்சங்கள் கவனிக்கத் தக்கன. தீண்டாமை விலக்கில் காந்திஜீயின் போக்கானது பலரும் நன்கு அறிந்த விஷயம். வைதிக மதத்தின் ஜீவநாடியான பிரமாணத்தை நாசம் செய்வதென்பதே அவருடைய தீவ்ரஸங்கல்பம் என்பதைப் பல தடவைகளில் நாம் நிரூபணம் செய்துள்ளோம். திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரம் அந்த ஸம்ஸ்தானத்தின் நிலைமையை உத்தேசித்துசெய்யப்பட்ட ஒரு அவஸர விஷயமென்பதையே காந்திஜி ஒப்புக்கொள்வதாகத் தெரியவில்லை. இது ஒருபெரிய மதச்சீர்திருத்தம் என்றும், இதை இந்தியா முழுவதும் பின்பற்றி ஹிந்து மதத்தைப் பரிசுத்தமாக்கவேண்டுமென்றும், அவர் வழக்கப்படி பேசியிருக்கிறார். திவானுமங்கு பேசுகையில் மனிதர்அனைவரும் ஒன்றுதான் என்று உபநிஷத்துக்கள் போதிக்கும் உண்மையை மஹாராஜா அறிந்துகொண்டு விட்டதாயும், இந்த விளம்பரம் ஓர் விடுதலைப் பத்திரம் என்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே மதச்சீர்திருத்தமென்ற கெட்ட நோக்கத்துடனேயே இந்த சூழ்ச்சி செய்யப்பட்டிருப்பது தெளிவாகிறது. ஆலயப்ரவேச விளம்பரம் பிறந்தகாலத்தில் அனேக மேதாவிகள் கூட வெகு அவஸரமாக இதை ஆதரிக்க முற்படுகையில் அந்த தேச ஸங்கட நிலைமைக்கு பரிந்துபேச நேரிட்டது. ஆனால் காந்திஜீயின் பிரவேசத்தினாலும், பொது ஜனங்களுடைய மௌனவ்ரதத்தாலும், இதற்கு விசேஷ எதிர்ப்புக் காணப்படாததாலும், இதை இந்தியா முழுவதற்கும் பரப்பிவிடவும், இதன் மூலம் தீவ்ரமான மதஸமூஹச் சீர்திருத்தம் செய்துவிடவுமே இந்த சந்தர்ப்பத்தை உபயோகிக்க முற்பட்டுவிட்டார்கள். காந்திஜி தமது விருப்பப்படி திருவாங்கூரில் சாஸ்திர பிரமாண நாசமும் ஸமூஹ அவ்யவஸ்தையும் ஏற்பட்டுவிட்டதைக் கண்டு அடங்கா மகிழ்ச்சியடைவது ஆச்சர்யமல்ல. சென்னையில் கூடிய உருவச்சின்னக் கூட்டத்திலும், திருவாங்கூர் உதாஹரணத்தைக்கொண்டு பிரிட்டிஷ் பிரதேசத்திலும் அத்தகைய மதஸமூஹச் சீர்திருத்தம் சட்டமூலமாக ஏற்படவேண்டும். என்று பலர் பேசியிருக்கின்றனர். ஆகையால் திருவாங்கூரை வியாஜமாகக்கொண்டு இந்தியா முழுவதிலும் பிரமாண நாசமும், வியவஸ்தா நாசமும் உண்டுபண்ண காந்திஜி தூண்டிவிடுவதிலிருந்து அவருடைய கெட்ட நோக்கம் தெளிவாகிறது. அந்த ஸம்ஸ்தான அஸாதாரண நிலைமைக்காக ஆலயப்ரவேசம் ஏற்பட்டதென்ற வாதம் காந்திஜீயின் பேச்சால் அடிபட்டுப் போகிறதை விவேகிகள் கவனித்தல் நலம்.

ஆலப்ரவேசத்தை பண்டித மாளவியாஜீயும் ஆதரிக்கிறார். காந்திஜீயும் ஆதரிக்கிறார். ஆயினும் இரண்டிற்கும் அடிப்படையில் மிகுந்த வித்யாஸமிருக்கிறது. மாளவியாஜீ வைதிக சாஸ்திர மர்யாதைகளை கௌரவிப்பவர். ஆபத்கால தர்மமாக ஆலப்ரவேசத்தை அநுமதிக்க வேண்டுமென்பது அவரது கொள்கை. உண்மையாகவே ஹிந்து ஸமூஹ முன்னேற்றத்தை விரும்புகிறவர். காந்திஜீயோ அப்படியல்ல. ஹிந்து ஸமூஹ முன்னேற்றம் இவருக்கு இரண்டாம் பக்ஷமே. சாஸ்திர பிரமாண வியவஸ்தைகளை உடைத்தெறிந்து

(2வது பக்தி பார்க்க)

215170

மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

குறைந்த சிலவு! கும்பகோணம் விரைவில் குணம்!

டாக்டர், P. ராமானுஜம் அவர்களின்

“கட்டிபஸ்பம்” ஒன்றே குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளை மிக்க விரைவில் குணப்படுத்துவதில் நிகரற்றது

என்பதற்கு அநேக நற்சாக்ஷிகள் கிடைத்துள்ளன.

ஒரு மாதத்திய மருந்தின் விலை ரூ 4 தான்] [வி. பி. சார்ஜுகள் வேறு

சித்தர் பார்மஸி. பாணதுறை, கும்பகோணம்.

வெளியூர்ச் செய்திகள்.

மன்னார்குடியில் ஆலயப்பிரவேச கண்டனம்.

நாளது 1937 ஜனவரி-மீ 9, 10 தேதிகளில் மன்னார்குடி அஹோபில மடத்தில் ரிடையர்டு ஸப்ஜட்ஜ் மகா-ா-ஸ்ரீ டி. ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்களின் அக்கிராஸனத் தின்கீழ் வர்ணாச்ரம சுயராஜ்ய கிளை ஸங்கத்தின் ஆதரவிலும் மன்னார்குடி சனாதனதர்ம ஸபையின் ஆதரவிலும் திருவாங்கூர் ஆலயப் பிரவேச விளம்பரத்தைக் கண்டிக்கும் பொருட்டு மீட்டிங்குகள் நடத்தப்பட்டன. அது சமயம் சென்னை வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தாரால் திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தைப்பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அங்கீகரிப்பதாகவும், தங்கள் பலமான கண்டனத்தை அறிவிப்பதாகவும் ஷை விளம்பரத்தை வானமாமலை மடத்தின் ஸ்ரீ ஸ்வாமிகள் பலமாக கண்டித்திருப்பதை குறித்து சந்தோஷப்படுவதாகவும், அதேமாதிரி இதர மடத்தார்களும் ஆக்ஷேபிக்கும்படி கேட்டுக்கொண்டும் இச் சபையின் காரியதர்சியாகயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் கே. டி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்களை இழந்துவிட்டதைக்குறித்து துக்கம்தெரிவிப்பதுடன் அன்னவர்செய்த அரிய சேவையை ரிகார்ட் டு செய்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

ஒரு நிருபர்.

கல்கத்தா

ராதாகல்யாண வைபவம்.

ஹௌரா ராமகிருஷ்ண ஊர் தென்னிந்திய ஸபாகட்டிடத்தில் 17—1—37 ஞாயிறன்று ராதாகல்யாண வைபவமும் பிராமண சமாராதனையும் விமர்சையாய் நடைபெற்றது. வருகிற ஞாயிறன்று கல்கத்தா டவுன் பவ பஜாரிலும், பவானிபூரிலும் ராதாகல்யாண வைபவம் விமர்சையாய் நடைபெறும்.

கங்காசாகர சங்கமம்.

தைமாத பிறப்பு சங்காந்தியன்று கங்கா சாகர சங்கமத்தில் ஸ்நாநம் செய்யவேண்டி மாகாணமெங்குமுள்ள ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்திருந்தார்கள். இந்நகரிலிருந்து சங்கம ஸ்நானத்துக்குச்செல்லும் பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கு சில பிரமுகர்களால் டிக்கட்டு வாங்கிக் கொடுத்தனுப்பப்பட்டது. சங்காந்தியன்றும் முதல்நாள் மறுநாள் ஆகிய மூன்று தினமே அலைகள் கிடையாதென்றும் மற்ற எக்காலத்திலும் எவராலும் செல்ல முடியாத நிலையில் கங்கா சமுத்திர அலைகள் சங்கம ஸ்தானமேதெரியாதபடிபிரும்மாண்டமாயிருக்குமெனவும் சொல்லப்படுகிறது.

உபந்யாசகர்க்கு ஆதரவு.

இரண்டொரு மாதகாலமாக தென் இந்தியன் அஸோஸியேஷன் ஆதரவில் ஸ்ரீ ராமாயண ப்ரசங்கம் செய்துவரும் ஸ்ரீ உ வே வித்வான் நடாதூர் கிருஷ்ணமாச்சார்ய சுவாமிகளுக்கு மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் அஸோசியேஷன் செகரெட்ரி ஸ்ரீமான் ஆர். எஸ் சாரியார் சேட் மங்காஸிராம் ராம்குமார் பாங்கர் முதலியோர்களாலும் மற்றும் பல பிரமுகர்களாலும் வேண்டிய ஆதரவளிக்கப்பட்டதாய் தெரிகிறது. ஸ்ரீமான் உ வே ஆச்சாரியார் காசி அயோத்யாசென்று டில்லிக்கு விஜயமாவாரெனத் தெரிகிறது.

வேத பாடசாலை.

கும்பகோணம் ஸ்ரீ காமகோடி பீடாதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் இங்கு விஜயம் செய்திருக்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேதபாடசாலை பவானிபூரில் அதி விமர்சையாய் நடைபெற்றுவருகிறது. ஸ்ரீமான் பி. வி. சுந்தரமய்யர், போஸ்ட்மாஸ்டர் பிரும்மஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி ஐயர் முதலிய பல முக்ய ஆபீஸர்களும்கூட வித்யார்த்திகளாக சேர்ந்து ஊக்கமுடன் வேத பாராயணம் செய்துவருவது பாராட்டத்தக்கதாகும்.

மிதக்கும் பாலம்.

கல்கத்தா டவுனிலிருந்து ரயில்வேஸ்டேஷனுக்கு போகும்வழியில் ஊர் நடுவில் செல்லும் கங்கா ஜலத்தைக் கடந்து செல்லவேண்டி 2 பர்லாங்கு நீளம் தனி மரங்களே சம்பந்தமான மிதக்கும்பாலமிருப்பது குறிப்பிடத்தக்கதாம். மதராஸ் சைனா பஜாரில் செல்வதுபோல் எப்போதும் மோட்டாரும் வண்டிகளும் ஜனக் கூட்டமும் ஏராளமாய் சென்றுகொண்டிருக்கிறது. கங்காநதியில் ஸ்டீமர்கள் அங்குமிங்கும் செல்லவேண்டி தினசரி 2 மணிநேரம் பாலத்தில் நடுவில் சிலபாகம் சுழற்றி அப்புறப்படுத்தப்படுகிறது. ஜாஸ்தி ஜலம் வருங்கால் பாலம் உயர்ந்து பாலத்தின் மேல்பாதை ஏற்றமும் இறக்கமுமாயிருக்கும்.

ந. வி. நி.

மாம்பலம்

ஸ்ரீ ராமாவதார உபன்யாசம்.

உடையாளூர் பிரும்மஸ்ரீ ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் சில தினங்களுக்கு முன்பு மாம்பலத்தில் சுருக்கமாக உபன்யசிக்கப்பட்ட ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை சவிஸ்தாரமாக கேட்க ஆவல் கொண்ட ‘பழைய மாம்பல’ வாஸிகளின் விருப்பப்படி, சென்ற 17—1—37 ஞாயிற்றுக்கிழமை முதல் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு தினமும் இரவு 8 மணிமுதல் 9-30 மணிவரையில் உபன்யஸிக்கப்படுகிறது. சென்ற 25—1—37 திங்கட்கிழமை தினம் ஸ்ரீ ராமாவதார உபன்யாஸம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆஸ்திகர்களனைவரும் சிரத்தையோடு கதா சிரவணம் செய்துவருகிறார்கள்.

ஸ்ரீ ராம பக்தர்கள்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு, தினுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd. Town High School Road, Kumbakonam. Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

4-2-1937

தை 22 ஸ 5

2|5|7|.

215171
3-MAR 1937

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஹு தை-மீ 22உ 1937-ஹு பிப்ரவரி-மீ 4உ | லி 5

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0 தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

கலப்புவிவாஹ மசோதா.
விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

கவர்ன்மெண்டின் எதிர்ப்பு.

இந்தியா சட்டஸபையில் பாபு பகவான் தாஸ் என்பவரால் கொண்டுவரப்பட்டுள்ள கலப்பு விவாஹ செல்லுபடி மசோதா 28உயன்று விவாதத்திற்கு வந்தது. பகவான்தாஸ் தமது மசோதாவை ஆதரித்து, ஹிந்துக்கள் கலப்புவிவாஹம்செய்வது சாஸ்திரீயமென்று வாதித்தார். ஸ்ரீமான்கள் பாய் பரமானந்தர், பஜோரியா, லால் சந்து நாவல்ராய் முதலிய ஹிந்துக்களும், ஜனாப் யாமின்கான், கஸ்னவி உமார் அலிஷா முதலிய மஹம்மதியர்களும் எதிர்த்துப் பேசினர். இந்த மசோதாவால் ஹிந்துஸமூஹம் அழிந்துவிடுமென்று அபிப்ராயம் வெளியிட்டார்கள். உமாரலிஷா என்ற மஹம்மதியர் ஸ்ம்ருதி சுலோகங்களை காட்டி பகவான்தாஸின் மசோதா ஹிந்து சாஸ்திர விரோதமென்று நிரூபித்தார்.

கவர்ன்மெண்ட் தரப்பில் கனம் என். என் ஸர்க்கார் இந்த மசோதாவை கவர்ன்மெண்டார் எதிர்ப்பதாகவும், இது அநுமதிச்சட்டமாகமாத்திரமிராமல் நிர்பந்தச்சட்டமாயுமிருப்பதாயும், ஹிந்து ஸமூஹத்தினர் இதை ஆக்ஷேபிப்பதாயும் சொன்னார். ஓட் எடுக்கு முன் ஸபை கலைந்ததால் விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆர்யஸமாஜிகள் கலப்புவிவாஹ மசோதா.

இந்தியா சட்டஸ்பையில் கொண்டுவரப்பட்டுள்ள ஷை மசோதாவும், ஸ்ரீமான் பி. தாஸால் கொண்டுவரப்பட்டுள்ள சாரதாச்சட்டத்திருத்த மசோதாவும் 28உயன்று சட்டஸபையில் விவாதிக்க அவகாசம் இல்லாத காரணத்தால் மற்றொரு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டன.

சாரதாச்சட்டக் கொடுமை.

கிருஷ்ணா ஜில்லாவில் நடைபெற்ற விவாஹமொன்று சாரதாச்சட்டத்தை மீறியதென்று கொண்டுவரப்பட்ட கேஸில் ஜில்லாஜட்ஜ், எதிரிகள் நிரபராதி என்றுசொல்லி விடுதலை செய்திருந்தார்.

ஆயினும் இக்கேஸ் சென்னை ஹைகோர்ட்டில் அப்பீலில் விசாரிக்கப்பட்டு ஜஸ்டிஸ் பாண்டுரெங்க ராவ் அவர்களால் தீர்ப்புச் சொல்லப்பட்டது. மாப்பிள்ளைக்கு வயது 18 ஆகவில்லையென்று ருஜுவாகிவிட்டதால் ஒருவருக்கு 150 ரூபாய் அபராதமும் புரோஹிதருக்கு ரூ 75ம் அல்லது ஒரு வாரம் ஜயில்வாஸமும் தண்டனை விதிக்கப்பட்டது.

ஒரிஸாவில் காங்கிரஸ் மெஜாரிடி.

ஒரிஸா மகாணச் சட்டஸபைக்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் 38 ஸ்தானங்களை கைப்பற்றியிருக்கிறார்கள். இந்த சட்டஸபையில் மொத்தம் மெம்பர்கள் 60 பேர்கள்தான்.

மஹாராஜாவுக்கு 144.

தும்ரானில் காங்கிரஸ் அபேக்ஷகருக்கு எதிராக தும்ரான் மஹாராஜா தமது ஆள்களை ஏவித் தொந்திரவு செய்துவருவதால் அவருக்கு 144வது பிரிவுப்படி பொதுக்கார்யங்களில் கலக்கக்கூடாதென்று தடைஉத்திரவு போடப்பட்டது.

உத்யோகம் போய்விட்டது.

நேருபிரஸங்கத்தை கேட்கப்போனதின் பலன்.

ஸ்ரீமான் நேரு மோராடாபாத்தில் எலக்ஷன் பிரசாரம் செய்கையில் சில சர்க்கார் உத்யோகஸ்தர்கள் அங்கு சென்றதற்காக 13 பேர்கள் உத்யோகத்திலிருந்து ஸஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

ஒரு ஜில்லா ஜட்ஜியும் ஷை கூட்டத்திற்கு போன காரணமாக அவர்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமாம்.

எலக்ஷன் அடிதடி.

பலவிடங்களிலும் எலக்ஷன் பிரசாரத்தை முன்னிட்டு அடிதடிநடக்கிறது. நாகபுரியில் டாக்டர் முஞ்ஜே பேசிய கூட்டத்தில் பெரிய அடிதடி நடந்தது. பம்பாய் கூட்டமொன்றில் ஆபாஸ வஸ்துக்கள் வீசப்பட்டன. பாட்னாவில் சென்னாறு என்ற இடத்தில் நடந்த கலஹத்தில் 100 பேர் காயமடைந்ததாகத் தெரிகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூகபஞ்சசதீ’

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

அப்போது தாங்கள் கௌரியின் அம்சங்கள் தானென்றும் ஆகவே அவளுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும் அதினால் பரமசிவனுடன் ஸமமான ஆஸனத்திற்குத் தகுதியற்றவர்களென்றும் சொல்லப்பட்ட அந்த சக்திகள் மிகவும் கோபங்கொண்டு தாங்கள் கௌரிக்குத் தாழ்ந்தவர்களல்லவென்றும் தங்களுடைய அம்சமாகத்தான் கௌரியானவள் தோன்றினளென்றும் அதற்கு மாறாக பரமசிவன் அவளிடத்திலுள்ளபக்ஷபாதத்தினால் சொன்னாரென்றும்

‘கிம் ப்ரவீஷி மஹாதேவ பக்ஷபாதம் ஸமாச்ரித: |
கௌர்யாம்சஜாதா ந வயம் ஸாஸ்மதம்சஸமுத்பவா ||

என்று சொல்லி, கௌரியானவள் தங்களைவிட எந்த குணத்தில் உயர்ந்தவளென்று கேட்கவும் பரமசிவன் நகைத்து அவர்களுடைய கர்வத்தைப் போக்க உத்தேசித்து ஸமகாலத்தில் அவர்களெல்லாருடைய வஸ்த்ரங்களும் நழுவும்படிச் செய்தார். உடனே அவர்கள் லஜ்ஜை அடைந்து தங்கள் மர்மப்ரதேசங்களை மறைப்பதற்காக பூமியில் விழுந்துவிட்டார்கள். அப்போது அவர்களுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காக அம்பிகையானவள் அவர்கள் வஸ்த்ரங்களைத் திரும்பவும் உடுத்திக்கொள்ளும் வரையில் பரமசிவனுடைய நேத்ரங்களைத் தன் கைகளால் மறைத்தாள். அப்படி மறைத்தது முகூர்த்தகாலமாய் இருந்தபோதிலும் (தேவலோகத்திய காலமாதலால்) லோகங்களிலெல்லாம் இருள் சூழ்ந்து ஸூர்யசந்த்ரர்கள் ஒளி இழந்து படவா முகாக்னியானது அணைந்து ஸமுத்திரங்கள் கரை புறண்டன. அந்த ஸமயம்—

‘ததஸ் ஸமஸ்தலோகேஷு தேவயான முஹூர்த்த: |
ஸூர்யசந்த்ரமஸௌ நஷ்டௌ நஷ்டோக்னிர்பாடவஸ்ததா ||
ப்ரச்சன்ன நேத்ர மாஹாத்ம்யாத் சந்த்ரஸூர்யாக்ன்யதர்சனாத் |
காடாந்தகார ஸம்வீதே ஜகத்யேகார்ணவீக்ருதே |
ஸம்பூதே ப்ரளயே கோரே .... ||’

என்றபடி கோரமான ப்ரளயமேற்பட்டு விட்டது. அவ்வித ஸமயங்களிலும் அமிர்தாக வரம் பெற்றிருக்கும் மார்க்கண்டேயரானவர் ஜலத்தில் மிதந்துகொண்டு தங்குவதற்கு இடமொன்றும் தோன்றாமல் பரமசிவனை ப்ரார்த்திக்க, பரமக்ருபாநிதியாகிய பரமசிவன் காஞ்சியில் ருத்ரசாலையில் அவ்யக்தமான தேஜஸுடன் சித்ரூபியாய் சூதபீஜாக்ருதியோடு விளங்கினார். அப்போது அந்த பீஜத்திலிருந்து ஒரு மா மரமானது கிளம்பி நான்குவேதங்களாகிற நான்கு கிளைகளுடன் ப்ரளய ஜலத்திற்கு மேல்பட்டதாக வளர்ந்தது. அதைக்கண்ட மார்க்கண்டேயரானவர் அதின் கிளைகளில் ஏறிக்கொண்டார். அதற்குமேல் அவர் தைர்யமடைந்து அந்த சூத வ்ருக்ஷத்தின் மூலத்தில் ப்ரவேசிக்கவும் அங்கு தேஜோமயமான ஒரு பெரிய நகரத்தைப்பார்த்தார். அதைக்கண்டு ஆச்சர்யமடைந்து மார்க்கண்டேயர் அங்கு அந்த மரத்தின் பழங்களைத் தின்றுகொண்டிருந்த ஸுப்ரம்மண்யரைப் பார்த்து அந்த அதிசயங்களைப் பற்றி கேட்டார். அப்போது ஸுப்ரம்மண்யரானவர் அந்த நகரம் காஞ்சீ க்ஷேத்திரமென்றும், அதை அம்பிகையானவள் ப்ரளயகாலத்திலும் நாசமடையாத வண்ணம் தன்னுடைய தேஜஸ்ஸினால் காப்பாற்றி வருகிறாளென்றும், அதினாலேயே அந்த நகரத்திற்கு ப்ரளயஜித் என்று பெயரென்றும், அந்த சூதவ்ருக்ஷமானது ஸாக்ஷாத் சங்கரருடைய ஸ்வரூபமென்றும், அம்பிகையின் பதியான காமேச்வரரே அந்த வ்ருக்ஷத்தின் பீஜரூபமாயிருக்கிறாரென்றும், அதனால் தான் அவருக்கு ஏகாம்பரநாதர் என்ற பெயரும் என்றும் சொன்னார்.

‘காஞ்சீ நாமான்விதம் க்ஷேத்ரம் மஹாப்ரளயஜித்புரம் |
யதா யதா ஸமாயாந்தி ப்ரளயாச்ச முஹுர்முஹு: ||
ததா ததா மஹாதேவீதேஜஸா ரக்ஷிதா புரீ |
தஸ்மான் நாம்னா ப்ரளயஜித் காஞ்சீ க்ஷேத்ரமிதம் முனே ||
ஏதத் ரஸால வ்ருக்ஷம் ச வித்தி த்வம் சங்கராத்மகம் |
மஹாத்ரிபுரஸுந்தர்யா: நாத: காமேச்வராஹ்வய: |
ஸ்வயம் பீஜாக்ருதிர் பூத்வா சூதரூபேண சோபதே ||

5\. மா மரத்திற்கு ஆம்ரமென்றும் சூதமென்றும் ரஸாலமென்றும் பெயர்களாகையால் காஞ்சியிலிருக்கும் காமேச்வரருக்கு ஏகாம்ரநாதரென்றும் ஏகசூதபதியென்றும் ரஸாலேச்வரரென்றும் பெயர்கள் சொல்லப்படும்.

14\. அதிகாஞ்சி பரமயோகிபி-
ராதிமபரபீடஸீம்னி த்ருச்யேன |
அனுபத்தம் மம மானஸம்
அருணிம ஸர்வஸ்வ ஸம்ப்ரதாயேன ||

பரமயோகிபி: - யோகிச்ரேஷ்டர்களால், அதிகாஞ்சி - காஞ்சிபுரியில், ஆதிம பரபீடஸீம்னி - எல்லா பீடங்களுக்கும் ஆதியாயும் ச்ரேஷ்டமுமான காமகோடிபீடத்தில், த்ருச்யேன - பார்க்கப்படுவதும், அருணிம ஸர்வஸ்வ ஸம்ப்ரதாயேன - சிகப்பு என்பதையே முக்யமாக (ஸாரமாக) உடைய ஸம்ப்ரதாய ரூபமாயிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியால், மம மானஸம் - என்னுடைய மனதானது, அனுபத்தம் - சேர்க்கப்பட்டு (ஈடுபட்டு) இருக்கிறது.

1\. பஞ்சாசத் (ஐம்பது) கோடி விஸ்தீர்ணமான பூமண்டலத்தில் இருக்கும் தேவீ பீடங்களில் 64,000-பீடங்கள் முக்யமானவை என்றும், அவற்றிலும் (மாத்ருகைகளின் கணக்கையனுசரித்து) ஐம்பத்தோரு பீடங்கள் முக்யமானவை என்றும், அவற்றிற்குள் (தத்வங்களின் கணக்கை அனுஸரித்து) 36-பீடங்கள் சிறந்தவையென்றும். அவற்றிற்குள்ளும் 18-பீடங்கள் முக்யமானவை என்றும் அவற்றிலும் காமராஜ, ஜாலந்தர, ஒட்யாண பீடங்கள் என்ற மூன்றுதான் ச்ரேஷ்டமென்றும், அவைகளுக்குள்ளும் காமராஜபீடமென்பது தான் உத்தமோத்தமமானதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (தத்வங்களின் கணக்கானது 94, 36, 24 என்று பலவிதமாகச் சொல்லப்படும். மாத்ருகைகளின் கணக்கும் 50-என்றும் 51-என்றும் சொல்லப்படும்.)

‘பஞ்சாசத் கோடி விஸ்தீர்ணே வர்தந்தே ப்ருதிவீதலே |
காமகோடி மஹாபீடான் யுக்தமானி ஹி தேஷ்வபி ||
சதுஷ் ஷஷ்டி ஸஹஸ்ராணி தேஷு சாஷ்டாஷ்டகானி ஹி |
மாத்ருகா ஸங்க்யயா தேஷு தேஷு தத்வானுஸங்க்யயா ||
தேஷு சாஷ்டாதச ச்ரேஷ்டான் யேஷு பீடத்ரயம் பரம் |
தத் த்ரயே காமராஜாக்யம் ப்ரதமம் ஹி ப்ரசஸ்யதே ||

ஆகையினால் தான் அதை இங்கு ‘ஆதிம பர பீட’ மென்று சொல்லப்பட்டது.

2\. லலிதாம்பிகையானவள் அருண வர்ணமாயிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக. த்யான ச்லோகத்தில் ‘அருணாம் கருணாதரங்கிதாக்ஷீம்’ என்றும், ‘லௌஹித்யமேவ தஸ்ய ஸர்வஸ்ய விமர்ச:’ என்பதாக பாவனோபனிஷத்திலும் ‘லௌஹித்யம் தத் விமர்ச: ஸ்யாத்’ என்பதாக தந்த்ர ராஜத்திலும் வசனங்களிருக்கின்றன. அம்பிகையானவள் ப்ரகாசரூபமாயிருக்கும்போது சுக்ல வர்ணமாயிருக்கையில் இச்சாரூபிணியாயிருக்கும்போது விமர்சரூபமாய் அருண வர்ணமாயிருக்கிறாள். ஆகையால் ராக (இச்சா) ஸ்வரூபமான அம்பாளுடைய பாசத்தை சிகப்புவர்ணமாக பாவனை செய்வது வழக்கம்.

3\. ச்ருங்கார ரஸத்திற்கு இச்சை காரணமானதால் அதையும் சிகப்பு வர்ணமாக வர்ணிப்பது வழக்கம். லலிதாம்பிகையானவள் ச்ருங்கார ரஸ ப்ரதானையாகையால் அந்தக் காரணத்தைக்கொண்டும் அருணவர்ணமாயிருப்பதாகச் சொல்வதும் ந்யாயமாக இருக்கிறது.

‘கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண ஹரி ருத்ரேச்வர ப்ருத:
சிவ: ஸ்வச்சச்சாயா கடித கபடப்ரச்சதபட: |
த்வதீயானாம் பாஸாம் ப்ரதிபலன ராகாருணதயா
சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம் ||

(ஸௌந்தர்யலஹரீ)

15\. அங்கித சங்கர தேஹாம்
அங்குரிதோரோஜ கங்கணச்லேஷை: |
அதிகாஞ்சி நித்யதருணீம்
அத்ராக்ஷம் காஞ்சித் அத்புதாம் பாலாம் ||

அங்குரிதோரோஜ கங்கணச்லேஷை: — அங்குரிதமான ஸ்தனங்கள், வளையல்கள் இவைகளோடு பொருந்திய ஆலிங்கனங்களால், அங்கித சங்கரதேஹாம் - தன் பதியான பரமசிவனுடைய சரீரத்தில் அடையாளங்களோடு இருக்கச்செய்தவளும், நித்யதருணீம் - நித்யமான யௌவனத்தோடு கூடியவளுமான, காஞ்சித் அத்புதாம் பாலாம் - ஏதோ ஒரு அத்புதமான பாலையை, அதிகாஞ்சி - காஞ்சீபுரியில், அத்ராக்ஷம் - பார்த்தேன்.

1\. அம்பிகையானவள் தன் பதியைத் திரும்பவும் அடைவதற்காக காஞ்சீபுரிக்கு வந்தபோது அங்குவந்த நாரதமஹரிஷியானவர் அம்பிகைக்கு பஞ்சபாண மந்த்ரத்தை உபதேசித்து அதை ஜபித்து தபஸ் செய்யும்படி சொல்லிப்போனார்.

‘சக்ராரூடஸ்ய பார்யாத்வம் இச்சந்தீ கிரிநந்தினீ |
உபாயம் முனிசார்தூலம் அப்ருச்சத் வினயான்விதா ||
அத தத்ர முனிச்ரேஷ்ட: ஸந்துஷ்ட: கன்யகார்ச்சனை: |
சிவ ப்ராப்த்யை ஸுகோபாயம் பஞ்சபாண மனும் முனி: |
உபதிச்ய ததா கௌர்யை கதவான் தக்ஷிணாம் திசம் ||’

அதின்பேரில் ஸைகதத்தால் (மணலால்) லிங்கத்தை ஸ்தாபித்து தன் பதியைத் த்யானித்து அம்பிகையானவள் உக்ரமான தபஸ் செய்யும்போது பஞ்சபாணமந்த்ர ஜபத்தினாலுண்டான காமாக்னியினால் பிடிக்கப்பட்ட பரமசிவன் அம்பிகையின் ப்ரேமாதிசயத்தை அறியவிரும்பி, கங்கையை அழைத்து ப்ரவாஹ ரூபமாய் அம்பிகையின் பூஜைக்கு இடையூறு செய்யும்படி ஆக்ஞாபித்தார்.

அக்னி உபாஸனம்.

(N. K. வெங்கடேசம்)
(பிரொபஸர் அநந்தப்பூர் காலேஜ்)

வேதங்கள் அனந்தம் என்று சொல்லப்பட்டபோதிலும் நமக்கு விவகாரத்திலிருப்பது நான்கு வேதங்கள், அதாவது ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்பன.

ஆதிகாலத்தில் ஹிமவத்கிரி பிராந்தியத்தில் ஸப்தஸிந்து என்று விவரிக்கப்படும் பிரதேசத்திலும், கங்கா, யமுனா, ஸரஸ்வதி முதலிய ஏழு நதிகள் பிரவஹிக்கும் ஆர்யாவர்த்தம் எனப்படும் பிரதேசத்திலும் குடிகொண்டிருந்து பிறகு காலக்ரமத்தில் எல்லா தேசங்களிலும், எல்லா திக்குகளிலும் பரவி ஆரியர்கள் நான்கு வர்ண தர்மங்களுக்கு உட்பட்டு வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மாக்களை அக்நி உபாஸனை பூர்வமாகவே அனுசரித்துவந்தார்களென்று அநேக காரணங்களால் தெரிகிறது.

நமது இந்திய தேசத்திற்கு மேற்கிலுள்ள பிரதேசத்தில் சில காலமிருந்து இப்பொழுது நம் தேசத்திலேயே மேற்கிலுள்ள பம்பாய் ராஜதானியில்குடியேறியிருக்கும்பாரஸீகர்கள் த்வஷ்ட்ரா என்று சொல்லப்படும் ஜாரதுஷ்ட்ரா என்ற ஆசிரியரை வணங்கி அக்னியை உபாஸனை செய்துவருகிறார்கள். இன்றும் பல ஜாதிகளும் அக்னியை முக்ய தெய்வமாகவே கொண்டாடுகிறார்கள் என்பதற்கு அத்தாட்சிகளிருக்கின்றன.

ஸ்ரீமத்ராமாயணம் பாலகாண்டத்தில் தசரதர் அதர்வண மந்திரங்களை உபயோகித்து புத்ரகாமேஷ்டி செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. அதர்வண வேதத்திற்கு ஸூத்ரம் எழுதியுள்ள கௌசிகரும் அக்னியை ஒன்றாக வியவஹரித்திருக்கிறார். மஹாபாரதத்தில் சபா பர்வம் 13-வது ஸர்க்கத்தில் யுதிஷ்டிரர் ராஜ ராஜஸூய யாகத்தை ஆரம்பணீயம், க்ஷத்திரம், த்ருதி, யஷ்டி, த்விராத்ரம் தசபேயம் என்ற ஆறு (6) அக்னிகளோடு செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும் 35-வது ஸர்க்கத்தில் கூட 6-அக்னிகள் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வக்னிகளோடு செய்யப்பட்ட யாகம் ஸாமவேத மந்திரங்களை ஒட்டி என்று தெரிகிறது. ஆனால் யஜுர்வேத சாகையாகிய தைத்திரீய பிரமாணத்தின்படி ராஜஸூய யாகம் இப்பொழுது நாம் உபயோகிக்கும் கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி என்ற மூன்று (3) அக்னிகளைக்கொண்டே நடத்தப்படுவதாக சொல்லப்படுகிறது. தைத்திரீய ஸம்ஹிதை ஐந்தாவது காண்டம் (5) ஐந்தாவது பிரபாடகம் (5) ஒன்பதாவது (9) அநுவாகத்தில் சயன ஹோமாதிகளுக்கு உததி, துத்ர, கஹ்ய, கிம, சிலா, வன்யு என்ற ஐந்து (5) அக்னிகள் உபயோகப்படுத்துவதாக சொல்லப்பட்டிருக்கிறது. தைத்திரீய பிரமாணம் முதல்காண்டம் இரண்டாவது பிரச்னம் முதல் அநுவாகம் பஞ்சாக்னிஆதானத்தை குறித்து சொல்லுவதாக வித்யாரண்ய ஸ்வாமிகள் எழுதியிருக்கிறார். காடக பிரச்னத்திலும், அருணப்ரச்னத்திலும் பார்த்தால் சயனத்திற்கு 7-அக்னிகள் (ஏழு) இருப்பதாக தெரிகிறது. அவைகள் ஸத்ரா, ஸாவித்ரி, நசிகேதா, சாதுர்ஹோத்ரியா, வைஸ்ருஜா, உபானுவாக்யா, அருணகேதுகா என்பவை. வேதவ்யாஸ பகவான் எழுதியுள்ள வேதாந்தஸூத்திரத்திலும், சாந்தோக்ய உபநிஷத்திலும் பஞ்சாக்னி வித்தையைப் பற்றி சொல்லுகையில் அவைகள் த்யு, பர்ஜன்ய, ப்ருத்வி, புருஷரேதஸ், ஸ்திரீயோனி என்றும் அவைகளுடைய சேர்க்கையால்ஜன்ம உத்பத்தி உண்டாகிறதென்றும் தெரிகிறது. ஆனால்இப்பொழுது விவகாரத்தில் ச்ரௌதகர்மாக்களுக்கு கார்ஹபத்யம் ஆஹவனீயம் தக்ஷிணாக்னி மூன்றும்(3) ஸ்மார்த்த கர்மாக்களில் கார்ஹபத்ய ஸதிர்சமான ஒரு அக்னியும் உபயோகபடுத்துவதை காண்கிறோம். இப்படி உபாஸனைக்கு ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து,ஆறு, ஏழு, (1, 2, 3, 5, 6, 7) அக்னிகள்: அவ்வவ்விடத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றின் தத்வத்தை ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களில் தேர்ந்தவர்களான சதுர்வேத பண்டிதர்களில் யாரேனும் தெளிவாக தெரியப்படுத்தவேண்டுமென்றுபிரார்த்திக்கிறேன்

மகாநாட்டிற்கு விண்ணப்பம்.

ஸ்ரீ புரி சங்கராச்சாரியஸ்வாமிகளால் மூன்று வருஷங்களுக்கு முன் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள “தர்ம ஸேவாசங்க”த்தை அகில இந்திய ஸ்தாபனமாகச் செய்து ஷை சங்கத்தின் லக்ஷியத்தைக்கொண்டு பல பெயர்களுடன் விளங்கிவரும் சபைகள் ஷை சங்கத்துடன் இணைக்கப்பட்டு ஒரே பெயருடன் விளங்கல் வேண்டும்.

ஷை ஸங்கத்தின் நோக்கங்களைப் பத்திரிகை, பிரசங்கவாயிலாகத் தீவிரப் பிரசாரம் செய்ய வேண்டுவது அவசரமும் அவச்யமுமானபடியால் ஜில்லாதோறும் பிரசாரக் கமிட்டிகள் நிறுவுதல் வேண்டும்.

ஷை பிரசாரக் காரியங்கள் இதர வேலைகள் புரிய பெரு நிதி அவச்யமாதலால் செல்வாக்குள்ள கனதனவான்களைக்கொண்ட கமிட்டி ஒன்று ஏற்படுத்தி வசூல் செய்தல் வேண்டும்.

புதிய சட்டசபைகள் மத சமூக பாதகமான சட்டங்கள் இயற்றத்தக்க நிலையிலிருப்பதால் அதனை தடுக்கும்படி அரசாங்கத்தினிடம் பிரயத்தனம் செய்தல் வேண்டும்.

சட்டசபைகளில் அத்தகைய சட்டங்களை எதிர்ப்பதாக வாக்களிக்கும் அபேக்ஷகர்களுக்கே ஸநாதனிகள் ஆதரவுநல்கவேண்டும்.

தீண்டாதார் பொருளாதார மதமாற்ற பிரச்னைகளை நன்கு நன்கு சர்ச்சைசெய்து உருவான வழிகளைக் காட்டல்வேண்டும்.

வரதக்ஷிணை முறை அடியோடு ஒழியவும் விசேஷ காலங்களில் அபரிமிதமாகச் செலவு செய்வதைக் குறைக்கவும் பிரயத்தினம் செய்தல் வேண்டும்.

விரிக்கிற் பெருகும். மத சமூக அரசியல் விஷயங்களில் திட்டமான தீர்மானங்களை மகாநாடு செய்து ஸநாதனிகள் அதற்கேற்ற செயல்புரிய வேண்டுமென்பது அனைவருடைய கோரிக்கை என்பதில் ஐயமில்லை. பல கடவைகளில் ஷை விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் இது சமயமும் அறிவிப்பது மிகையாகாது என்றெண்ணியே இஃதுவரையலாயிற்று.

மாகாணத்தின் நாலு பக்கங்களிலுமுள்ள வேத சாஸ்திர வித்வான்கள் முதலான ஆஸ்திகச் சீலர்கள் அனைவரும் சென்னையில் பிப்ரவரி 6, 7உ களில் நடைபெறப்போகும் ஸநாதன தர்ம மாகாண மகாநாட்டிற்கு ஏராளமாக விஜயஞ்செய்து நம் முன்னிற்கும் பிரச்னைகளை நன்கு பரிசீலனைசெய்து நாட்டினருக்கு நல்வழியைக் காட்டவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

தி. ப. ஜெகதீசய்யர்.
ஆத்தங்குடி.

மிராசுதார் ஸங்கம்.

நிருவாகசபை அங்கத்தினர்களின் தீர்மானங்கள்.

சட்டஸபை அபேக்ஷகர்களிடம் உறுதிமொழி.

வரும் சென்னை சட்டசபை, அஸெம்பிளி தேர்தல்களில் அபேக்ஷகர்களுக்கு பலதொகுதிகளிலும் இருக்கும் வாக்காளர்கள் செய்துகொள்ள வேண்டிய விக்ஞாபகம்:—

அபேக்ஷகர்கள் அடியில்கண்ட காரியங்களை சாதித்து வாக்காளர்களுக்கு அவர்களுடைய கடமையைச் செய்ய இயன்ற அளவு முயற்சி செய்ய வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(1) இந்த ராஜதானியின் ரயத்துவாரி நஞ்சை, புஞ்சை, நிலங்களின் தற்காலமுள்ள மொத்த தீர்வை விகிதத்தை 100-க்கு 50-வீதம் உடனே குறைப்பது,

(2) இப்பொழுதுள்ள புஞ்சை தண்ணீர் தீர்வை நஞ்சை இரண்டாம்போக தண்ணீர் தீர்வை இவைகளின் விகிதத்தை பெரும்பான்மையும் குறைப்பது.

(3) நிலத்தீர்வை வகையறா விதிப்பைப் பற்றி ஒரு மசோதா கொண்டுவந்து அதில் நஞ்சை புஞ்சை நிலங்களின் நிகர் வரும்படியின் நான்கிலொரு பாகத்திற்குமேல் நிலவரி வகையறா இருக்கக் கூடாதென்று (1925-ம் வருஷயத்திய இந்திய வரி விசாரணைக் கமிட்டியாரின் சிபார்சுப்படி) ஒரு முக்யமான விதி செய்து அதை சட்டமாக நிறைவேற்றி வைப்பது.

(4) உயர்தர உத்தியோகஸ்தர்கள் சம்பளம், படி வகையறாவையும், மற்ற நிருவாகச் செலவையும் 1918-19 வருஷத்தில் வழங்கி வந்த விகிதத்திற்கு உடனே குறைத்து நிர்ணயித்தும் எப்படியும் கடைசியாக அவைகளை நம் தேசத்தின் நிலைமைக்கு ஒத்தபடி படிப்படியாயாகக் குறைத்தும் விடவேண்டியது; புதிதாய் நியமனமாகும் உத்யோகஸ்தர்களின் ஆரம்ப சம்பளத்தையும் உயர்வையும் நம் தேச ஜனங்களின் சராசரி வரும்படியை அனுசரித்து நிர்ணயிப்பது.

(5) ரெவினியூவை இதர வரி இனங்கள் மூலமாய் சரிகட்ட வேண்டியது

(6) சென்னை ஸ்திரீகள் நகர சங்கத்தார் சென்னை நகரசபை தேர்தல் காலத்தில் அபேக்ஷகர்களிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபடி.

(a) எவருக்கும் உத்யோகம் கொடுக்கும்படி அதிகாரிகளிடம் சிபார்சு செய்யாமலும்,

(b) உத்தியோகஸ்தர்களுடைய சம்பளம் படி முதலியவைகளை உயர்த்தும் விஷயமான எந்தப்பிரேரணையையும் சட்டசபையில்கொண்டுவாராமலிருப்பதும் தவிர அப்படிப்பட்ட பிரேரணையை ஆதரிக்காமலிருக்க வேண்டும்.

குழந்தை
‘குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி, பி வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20 வடக்கு வெளிவீதி, மதுரை

Travancore Maharajah's Statue Meeting.

1

In the report of the proceedings of the above meeting published in the "Hindu" of 10-1-37 it is found that speakers therein have made several misleading statements. Coming from persons holding high position in life they may have the effect of giving a wrong lead especially to the younger generation who have little or no knowledge of our ancient religion and culture. It is therefore necessary in public interests to correct some at least of those errors.

Sir Alladi Krishnaswami Iyer refers to Sri Sankaracharya as sanctioning the "adjustment" of religion to 'changing social conditions.' This is only Sir Alladi's *ipsi dixit*. In the numerous works of the great Acharya there are copious occasions in which he has unequivocally insisted on the strict observance of the Varnasrama Achara.

Sir Alladi is again wrong in stating that the ruler is a religious leader. The great and the unchallengeable truth of the Hindu History is that the rulers always subordinate themselves to the Dharma as laid down by the Sastras and that they never ventured to ride over it. In cases of doubt they always consulted the Guru or the Parishad. Hence they were the true protectors of the Dharma. The young Maharaja of Travancore, his Rani mother of "advanced" views and his courageous and capable Dewan may all deserve statues (as one or two speakers have stated) in the hands of the promoters of the said meeting; but they cannot be called the 'protectors of Dharma'

The most preposterous saying of Sir Alladi is that "the times require a re-statement of the *basic principles* of Hinduism with special reference to a more complex and mobile social order." We have heard of superstructures being adjusted to the foundation but not *vice versa*. *A mobile social order* is a contradiction in terms. If Sir Alladi had plainly stated that the old basic principles of the Hindu religion would not do for modern conditions we have no quarrels with him or with Dewan Bahadur V. Bahsyam Iyengar and his ilk. We only take exception to camouflage.

Lastly, Sir. Alladi says, "It is impossible to believe that the Spirit of the Shrine would disappear if greater numbers than before should offer worship there." This is a sheer perversion of truth. Sir Alladi knows that the objection is not to "greater numbers" but to a certain class. In fact if only the large numbers who ought to be regularly worshipping in the temple had been regularly doing it this proclamation might not have so easily come out.

Next comes Mr. T. R. Venkatarama Sastriar with his very curious and baseless statements. He says "it is usual to give shape to religious ideas by such proclamations" (of kings); "the proclamation did not involve any deviation from the fundamentals of Hinduism'; 'Prohibition of *Temple-worship* (evidently worship *within* the Agama-consecrated temples) for a section of Hindus (the non-castes) was contrary to Hindu Dharma."; and so on The brackets are mine. Let Mr. Sastriar quote instances of Hindu Sovereigns *shaping* Hindu religion by proclamation. Can he maintain that the Travancore proclamation has not deviated from the fundamentals of the Agamas which govern our temples? Does he mean that the Dharma of the Agamas does not prohibit entry to avarnas? If so would he kindly give his authority?

Pundit Kumarathatachariar evidently knows his job and has his own Dharma sastras under which 'Kings had the right to legislate in religious matters by such proclamations.' He feels sure that he is in safe quarters where he made this statement.

The funniest of the speakers is Dewan Bahadur T. Ragaviah Garu. He has said 'Hinduism does not recognize distinctions of caste in temple worship." Which Hinduism? Mr. Ragaviah is a good Revenue officer and administrator (never mind Pudukottah). But he has no business to dabble in Hindu religion. His own speech proves this. If there had been no caste in temple worship there would have been no need for this proclamation and a statue for its promulgator!

N. Srinivasacharya.

2

In his speech as chairman of the public meeting held in connection with the Travancore Proclamation regarding the temples in that state Sir Alladi Krishnaswami Iyer is reported to have said that Hinduism was not a 'Position' but a 'movement' and there was no such thing as uniform stationary unalterable Hinduism whether in point of belief or of practice. I should like to know whether this is the view that authoritative exponents of Hinduism, viz. religious heads, hold of Hinduism. Sir Alladi Krishnaswami Iyer may be an authority on law, but cannot be an authority on Hinduism His statements, therefore, unless proved to the hilt, are only assertions which may however mislead the outside world.

Even Dewan Bahadur Raghaviah speaks of Hinduism as not recognising distinction of castes in temple worship. May I know what is the warrant for this statement?

Again, Mr T. R. Venkatarama Sastri says that it is usual for Hindu Monarchs to give shape to religious ideas through such proclamations. Will he cite any instance from Indian History? Mr. Sastri adds that the proclamation did not involve any deviation from the fundamentals of Hinduism. May your readers know what, according to him, are the fundamentals of Hinduism?

Sir Alladi refers to 'Mobile social Order'. To the lay reader it sounds a contradiction in terms. May we know what exactly he means? He is further reported to have said that it is impossible to believe that the spirit of the shrine would disappear if greater numbers than before should worship there. Did anybody raise that objection? The objection has never been to more people worshipping but to the Shastraic rule and whose observance alone would make the temple worthy of worship being not violated.

A pandit, I see, has opined that Kings under Dharma Shastras had the right to legislate in Religious matters. Will he be pleased to give an instance and also whether the kings acted on the advice of Religious Heads or on their motion, and especially kings of the age of Travancore Ruler.

Public meetings would be held by the dozen, if organisers could be got to support acts of influential persons like Maharajahs. But the honest world knows what value to attach to them.

If women conferences now being held all over India by westernised women can be looked upon as meetings of real Indian women, of course, meetings like the one that took place at the Gokhale Hall may be taken as meetings of real Hindus.

Purushothamadoss.
Gokuldoss.

The Madras Provincial Sanatana Dharma Conference (1937)

Manifesto.

It is well-known that the vast majority of the Hindus, in spite of differences within, are orthodox not only in faith but also in their religious practices to which they are firmly attached. The recent Travancore Temple Entry Proclamation has created a great consternation in their minds all over the country lest the infection spreads out also in other places. The suddenness with which the said Proclamation was made and the support there to of the Maharaja's Government with all its resources behind it, have not merely cowed down the entire population of Travancore, but also so stunned the Orthodox Hindus of our country, that they seem to be lulled into a feeling of helplessness at the thought that the Temple Entry Question in Travancore has become a settled fact.

The situation is aggravated by the fact that the Congress members in many local Boards and Municipalities have gone out of their way and recorded resolutions welcoming the said *Revolutionary* Proclamation. Also responsible leaders of the Congress are reported to have publicly lent their support to it. These activities are opposed even to the resolutions of the Congress on the fundamental rights (at Karachi which say *inter alia* that the State shall observe religious neutrality regarding all Religions.' The Public will remember how keen the Muhammadans are in respect of the preservation of their religion, culture and rights. It is to be regretted that the attacks against Orthodox Hindu Religion and practices, in the present day, come from within the Hindu fold itself and persons, bodies and the Nationalist Press too, who have attained prominence among us for other reasons, are making use of such position, to revolutionize our social and religious practices, may be with the best of intentions but quite against the will and without the consent of the vast orthodox population.

The Government of India Act of 1935 which will come into operation from the first of April 1937 has left religious and social matters entirely in the hands of the elected councils, as a result of the demand of Self-Government and autonomy for India. Our freedom for religious and social practices and protection against any law being made in these respects over our heads were guaranteed from the time of the East India Company Act of 1710 in every Parliamentary statute relating to the Government of India and also in the famous Proclamation of Queen Victoria. Lord Reading as Viceroy declared that religious neutrality is the bed-rock upon which the Indian Constitution is founded. The Courts of law also have been throughout, giving effect to this guarantee. The new Act of 1935 has repealed the provisions for such guarantee and has put it entirely into the hands of the elected councils to deal with these matters as they would.

In the above circumstances the duty of the Orthodox Hindus becomes clear. There are movements which make earnest attempts to gather and preserve the everliving (Sanatana) elements of our Dharma still remaining with us and possible for us to practise. There have been under the auspices of the Madras Varnashrama Dharma Swarajya Sanga several meetings held both in Madras and in the moffusil vigorously protesting against the said proclamation and against the present onslaughts from within the Hindu fold itself, which beat hollow many attempts from outside.

The present is a critical time when the resources of the Orthodox Hindus should be gathered and utilized for safeguarding their position under the coming Reforms. There now comes the supreme necessity of choosing to the Councils, only such men as would give the people the guarantee of religious neutrality and protection to which the English Statutes have been adhering all along and also devising and adopting such other measures as may be found necessary to safeguard our Dharma, our religious practices and our Personal Law.

With this object in view, the leading Orthodox Gentlemen of Madras, in consulation with others in the moffusil, have decided to hold an urgent Provincial Sanatana Dharma Conference in Madras on the 6th and 7th of Feb. 1937. The Reception Committee of the Conference earnestly request the support of all orthodox Hindus in furtherance of this object. Sanatanists should gather in large numbers at the Conference and help it with men and money and thus make the movement a grand success.

N. B:- The Conference will be held at Davana Uthsava Bungalow, Triplicane, Madras.

An Appeal To the Vast body of Sanatanist Voters.

SIR,

You may kindly note from the above manifesto, that the Provincial Varnashrama Conference is to be held on the 6th and 7th of February and very many important questions have to be considered at the conference. The working Committee of the Conference is anxious that the conference should be as representative as possible and I appeal to you to become a member of the Reception Committee and render all possible help both financially and otherwise to make the conference a success.

We shall feel greatly obliged if you can induce some of your friends also enrol themselves as members of the Reception Committee. The Reception Committee fee is fixed at Rs. 2. I need not mention to you the success of our cause depends entirely upon the strength we are able to gather now. As the General Elections are fast approaching and very many important questions have to be decided, we have to make the arrangements rather hurriedly.

As the days to hold the conference have unavoidably been fixed too near the date of the General Elections, namely, the 15th February 1937, there is hardly any time after the conference to carry on propaganda in the moffusil, to broadcast the views of the conference to the vast section of the Sanatanists regarding the necessity to obtain pledges from the candidates standing for elections to the assemblies and councils. You are earnestly requested to convene protest meetings as 'Under the auspices of the Madras Provincial Sanatana Dharma Conference (1937) to be held at Madras on the 6th and 7th Feb., 1937," in which attention should be given principally to the following matters:—

1. The Travancore proclamation is opposed to the long usage and tradition of the Hindus and opposed to the Agama Sastras in accordance with which the (Orthodox) temples have been built, consecrated and carried on.

2. The proclamation is opposed to the law prevailing and settled in the land until it emanated.

3. That His Highness the Maharaja of Travancore should have, if at all, brought up this matter as a Bill in his legislative assembly and given an opportunity to the people to express their views thereon, and not promulgated it like an ordinance in time of political trouble and unrest.

4. That the temples of Travancore like that of Sri Anantapadmanabha swamy belong to Hindus all over India and the action of His Highness the Maharaja in issuing this proclamation without the consent of the Government and people of British India, is beyond his powers.

5. In the coming elections to our legislative councils, the candidates should be required to give undertakings in writing that they would safeguard the interests of Sanatana Dharma and oppose all measures of government, legislative or executive which will have the effect of interfering with our religious and social practices, customs, and personal law. Voters should give their votes only to such candidates who give such definite and unequivocal undertaking. Candidates standing definitely as Sanatanists should invariably be preferred to others by the voters.

I hope you will kindly excuse the short notice and help us to achieve our object. Your presence is very earnestly solicited.

T. S. Ramaswamy Iyer.
General Secretary, Madras Provincial Sanatana Dharma Conference.

சேங்காலிபுரம்.

ஓர் மகானின் உன்னதமான தேய்வ சக்தி:

மன்னார்குடி தாலூகா சிருகாமணி கிராமம் பிரும்மஸ்ரீ பர்ஜயங்யோபாஸி (மழை) ராமச்சந்திர சிவனை ஒரு வாரமாக இவ்வூரில் மழையின் உபத்திரவம் ஏற்படக்கூடியதை நிவர்த்தி செய்து தரும்படி மனு செய்துகொண்டார்கள். ஷை பெரியவாளும் பூஜாகாலத்தில் ஜபம் செய்தும், பகவானை த்யானித்தும் மழையின் சங்கை இல்லாமல் நிவர்த்தி செய்து கொடுத்தார். பிறகு இவ்வூர் மேலத் தெருவில் சில பாகங்களில் மகாமாரியின் உபாதியினால் சுமார் 7-பேர்களுக்கு மேல் சேதமாகி 15-பேர்களுக்கு ஜுரம் கண்டும், வசூரி கண்டும் ப்ரகோபமாக இருந்து ஷை பெரியவாளிடம் தெரிவித்துக்கொள்ள அன்று முதல் ஜுரம் கண்டவர்களுக்கும் அதிக வசூரி கண்டவர்களுக்கும் உடனே சௌக்யமாகி 3-தினத்திற்குள் பூர்ண சௌக்யம் அடைந்தார்கள். புதுக்கோட்டை டவுனில் மழையில்லாத கஷ்டத்தை நிவர்த்திசெய்து வேண்டிய அளவு மழை பெய்யும்படி அனுக்ரஹம் செய்ததாக அவ்வூர் மகாஜனங்கள் ஓர் ஞாபகார்த்தமாக சர்டிபை செய்து இருக்கிறார்கள். சிருங்ககிரி மடம் ஸ்ரீ நரசிம்மபாரதி ஸ்வாமிகளால் இவ்வித சக்தி ஏற்பட்டதாக ஷை பெரியவாள் சொல்லுகிறார். இவ்விதமே சிறுகளத்தூர் கிராமத்திலும் மழையில்லாமல் நிறுத்தியிருக்கிறார். மேலக் கருப்பூரில் விஷூசி (காலரா) உபத்திரவம் இல்லாமல் செய்து அனுக்ரஹித்தும் இருக்கிறார்கள். தவிரவும், ப்ரதிப்ரயோஜனமின்றியில் சர்வலோக க்ஷேமத்திற்காக ஒவ்வொரு கிராமங்களிலும் சில தினங்கள் தங்கி பிக்ஷாசரணம் செய்துகொண்டு வருகிறார்கள். ஷை பெரியவர் நைஷ்டிக பிரம்மசர்ய ஆச்ரமத்தில் இருந்துவருகிறார். வயது 70 இருக்கலாம். அப்படியிருந்தும் நடந்தே யாத்திரை செய்து வருகிறார். எந்த கிராமத்தில் உபாதியிருந்தபோதிலும் ஷை பெரியாரை வரவழைத்து அதிகக்ஷேமத்தை அடையலாம் என்பதை மிகவும் வணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

S. பாலகிருஷ்ணபட்டாசாரியார்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

தாது-வரு தை-மீ 22உ

மாகாண ஸநாதனதர்ம மஹாநாடு.

சென்னை வாஸிகளான சில தார்மிகர்களுடைய தீவ்ர விடாமுயற்சியால் பிப்ரவரிமாஸம் 6, 7 தேதிகளில் மாகாண ஸநாதனதர்ம மஹாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம். இந்த மஹாநாடு தற்போது நடைபெறவேண்டிய அவச்யத்தை விளக்கி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சில முக்ய அம்சங்களைக் குறிப்பிட்டிருப்பது தார்மிகர்களால் அவச்யம் கவனிக்கத்தக்கவை. பாரத பூமிக்கு ஸநாதனதர்மம் ஜீவநாடி யென்பது விவாதமற்ற விஷயம். ஏனைய நாடுகளைவிட நம் தேசத்திற்கு ஏற்பட்டுள்ள ஏற்றமிதுவே. இதனால் தான் இத்தேசம் இன்றும் சிறப்புற்று ஒப்புயர்வற்ற நிலைமையில் விளங்கி வருகிறதென்பது எதிரிகள்கூட ஒப்பிய உண்மை விஷயமாகும். ஆங்கிலேய பாஷா ஆசார வேஷாதிகளால் மோஹித்த சில சீர்திருத்தக்காரர்கள் நிற்க, கோடிக்கணக்கான ஹிந்துக்கள் இன்றைக்கும் ஸநாதந தார்மிகளாகவே இருக்கிறார்கள். நவீனர்கள் போதிக்கும் மத ஸமூஹச் சீர்திருத்தங்களை அவர்கள் அடியோடு வெறுக்கிறவர்களே. சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாக இந்தியாவில் விதவா விவாதிகளான பல சீர்திருத்தங்களைப்பற்றி பலத்த பிரசாரம் நடந்துவந்தும் இன்று அவைகளை எத்தனைபேர் ஆதரித்து ஆசரிக்கிறார்களென்பதைக் கவனிக்கவேணும். லக்ஷத்தில் ஒருவர்கூட மேற்கண்ட மதச் சீர்திருத்தங்களை ஆசரிக்க முன்வரக்காணோம். மேலும், திவ்ய க்ஷேத்ர உத்ஸவாதி யாத்திரை, கிரஹணம் முதலிய காலங்களில் புண்யதீர்த்த ஸ்நாநம் இவைகளை முன்னிட்டு பத்துலக்ஷக்கணக்கான ஜனங்கள் தீவ்ர மதநம்பிக்கையுடன் அங்காங்கு கூடிவருவதை இன்றும் காண்கிறோம். இதெல்லாம் மதசிரத்தை யில்லாமலா நடக்கிறது? ஆகையால் ஹிந்துக்களில் யாவரும் ஆசார பழக்க வழக்கங்களால் வைதிகர்களேயென்று மேற்படி மஹாநாட்டு அறிக்கையில் கூறப்பட்டிருப்பது முற்றிலும் உண்மையே. பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டி முன்பாக ஸர். பாத்ரோ ஸாக்ஷ்யம் கூறுகையில் இந்தியாவில் வைதிக மதப்பற்றுள்ளவர்கள் சிறு பான்மையோரே என்று சொல்லியதை மறுத்து ஸ்ரீமான் எம். கே. ஆசாரியரால் இவ்விஷயம் தக்க ஆதாரங்களுடன் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படி தேசத்தில் பெரும்பாலோர் மதச் சீர்திருத்தத்தை விரும்பாத தார்மிகர்களாயினும் தற்போது அவர்கள் சிறுபான்மைபோல் காணப்படுவதற்கு காரணமிருக்கிறது. சீர்திருத்தவாதிகள் அந்நியநாட்டாரிடம் கற்றுக்கொண்ட பிரசாரமாயையால் தங்களை அதிகம் விளம்பரப்படுத்திக்கொள்கிறார்கள். தார்மிகர்களுக்கு அத்தகைய, பலர், பத்திரிகை, ஆள் பலம் முதலியவைகளை சேர்க்கும் ஸாமர்த்தியம் அமையவில்லை. இதைக்கொண்டு சீர்திருத்தவாதிகள் நம்மைச்சிறுபான்மையோராகக் காட்டி ஒழிக்கப் பாடுபடுகிறார்கள். இந்த அனர்த்தத்தைத்தடுக்க நாமும் தக்கவழியில் முயற்சித்து நமதுபலத்தை ஒன்றுபடுத்தினால் சீர்திருத்த வாதிகள் நம்மிடம் விஷமம்செய்ய அஞ்சுவார்கள். சென்ற ஆலயப்ரவேசக் கிளர்ச்சிகாலத்தில் நமக்குள் ஆச்சர்யப்படத்தக்க ஒற்றுமை ஏற்பட்டதால்தான் நாம் “உலகசிரேஷ்டர்”ராக மதிக்கப்பட்டவரைக் கூட வீழ்த்தக்கூடிய சக்தியைப் பெற்றிருந்தோமென்பது அநுபவ பூர்வமான உண்மை. ஆயினும் அதன் பிறகு சில வர்ஷங்களாக நாம் அயர்ந்து விட்டதைக்கண்டு நமது எதிரிகள் மீண்டும் விஷமம்செய்ய முற்பட்டுவிட்டார்கள். இதைத் தடுக்கவேண்டியது தார்மிகர்களின் தற்போதிய அவஸரவேலையாகி விட்டது. அதிலும் திருவாங்கூர் விளம்பாத்திற்கு பிறகு நமது எதிரிகள் புத்துயிர்பெற்று நம்மை எங்கும் துன்பப்படுத்தமுயற்சிசெய்து வருகிறார்கள். திருவாங்கூர் உதாஹரணத்தை காட்டி பிரிடிஷ் பிரதேசங்களிலும் ஆலயப்பிரவேசத்தை ஸாதித்துக்கொள்ள காந்திஜீ முதலியவர்கள் வேலைசெய்வதை ஏற்கனவே நாம் பல தடவை குறிப்பிட்டிருக்கிறோம்.

தார்மிகர்களைத் தாக்கும் வேலையை காங்கிரஸ் மஹாஸபை மேற்போட்டுக்கொண்டிருப்பது நமக்குப் பெரிய அபாயமாகும். ராஜீய விஷயத்தில் நம்மவர் யாவரும் காங்கிரஸுக்கு உண்டுபண்ணிய ஒரு சக்தியை, அது நம்மீதே பிரயோகிக்கத் துணிந்துவிட்டது. மகம்மதியர்களை கட்டியணைக்கும்நோக்கத்துடன் மத நடுநிலைமைத் தீர்மானமொன்று காராச்சிகாங்கிரஸில் செய்யப்பட்டதாயினும் அது வெறும் ஏமாற்றமாகவே இருக்கிறது. திருவாங்கூர் விளம்பரத்தைக் காங்கிரஸ்வாதிகள் கூசாமல் ஆதரித்து வருகிறார்கள். போதாக் குறைக்கு காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் புக முயற்சித்து வருகிறார்கள். அவர்களை நாம் அங்கு அனுப்பிவிட்டால் உடனே ஆலயப்பிரவேசம் போன்ற சீர்திருத்தங்களைச் சட்டமூலமாகச் செய்துதீருவார்கள். சட்டஸபைகளிலோ மத விஷயத்திற்கு ஸரியான பாதுகாப்பும் கிடையாது.

மேலும் ஸ்ரீமான் நேரு ஸமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு பதிலில் பெரும்பான்மையோருடைய அபிப்ராயத்தை அநுஸரித்து காங்கிரஸ் மத சீர்திருத்தம் செய்யப் பின் வாங்காதென்று கூறியிருக்கிறார். எதிர் காலத்தில் இவ்வளவு பெரிய அபாயங்கள் இருப்பதை நாம் உணர்ந்தும், வெளியிட்டும் தக்க பரிஹாரம் தேட இத்தகைய மஹாநாடு மிக்க அவச்யமானது. இது வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்று நாம் பிரார்த்திப்பதுடன், தார்மிகர்களும், மதஸ்தாபனங்களும் இதற்குப் பல வழியிலும் நல்ல உபகாரத்தைச் செய்துதரவேண்டுமென்றும் வேண்டுகிறோம். ஏராளமாக தார்மிகள் அங்கு விஜயம்செய்து நம்முடைய ஒற்றுமையும் உணர்ச்சியும் கண்டு எதிரிகள் அஞ்சும்படியான நிலைமையை உண்டுபண்ண வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

குறிப்புகள்.

கலப்புவிவாஹ மசோதா.

ஸ்ரீமான் பகவான்தாஸின் கலப்புவிவாஹ மசோதா சென்றவாரம் இந்தியா சட்டஸபையில் விவாதத்திற்குவந்து மறுபடியும் ஒத்திவைக்கப்படவேண்டியதாயிற்று. இத்தகையமசோதா இந்தியாசட்டஸபையில் இப்போது நான்காவது தடவையாகக் கொண்டுவரப்பட்டதாகும். பாபு பூபேந்திரநாதபோஸ் வி. ஜே. படேல், டாக்டர் கவர் ஆகியவர்களால் முந்தி கொண்டுவரப்பட்டு கவர்ன்மெண்டார் அதை ஏற்க மறுத்திருக்கிறார்கள். ஆதலால்இப்போதும்இந்த மசோதாவை இந்தியா கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கமுடியாதென்று ஸ்பஷ்டமாக கனம் ந்ருபேந்திரநாதஸர்க்கார் சொல்லிவிட்டது தார்மிகர்களுக்கு விசேஷ திருப்தியைக் கொடுக்கக்கூடியது. ஸ்ரீமான் ஸர்க்கார் இந்த மசோதாவை அங்கீகரிக்க முடியாததற்குப் பலகாரணங்களைச்சொன்னார். அவைகளில் அவர்குறிப்பிட்ட முக்யவிஷயமென்னவென்றால் இந்த மசோதாவானது பகவான்தாஸ் சொல்லுவதுபோல் கேவலம் அநுமதிமாத்திரம் கொடுக்கக்கூடியபடி ஸாதுவாக இருக்கவில்லையென்றும், இது நிர்ப்பந்திக்கும் சட்டமாக்வே இருக்கிறதென்று தாம் நிச்சயமாகச் சொல்லுவதாயும், இந்தமாதிரி கலப்புவிவாஹத்தை நிர்பந்திக்கும் சட்டத்திற்கு கவர்மெண்டார் அனுமதிகொடுக்கமுடியாதென்றும், ஹிந்துஸமூஹம் இந்த மசோதாவை வேண்டவில்லையென்று தாம் அறிந்துகொண்டிருப்பதாயும் சொன்னார். பெரிய சட்டநிபுணராகிய ஸ்ரீமான் ஸர்க்கார் இவ்வாறு கூறியதிலிருந்து பகவான் மசோதாவின் விஷம் எவ்வளவு கோரமானதென்று விளங்கக்கூடியது.

நல்லவேளையாகச் சட்டஸபையில் இந்த மசோதாவுக்கு விரோத உணர்ச்சி ஏற்பட்டிருப்பது ஸந்தோஷிக்கக்கூடியது. மஹம்மதியர்கள்கூட இதை பலமாக ஆக்ஷேபிக்க முன்வந்திருப்பது இன்னொரு விசேஷமாகும். ஆயினும் அன்று இந்த மசோதா கொல்லப்பட்டிருக்கவேண்டிய. நல்ல ஸந்தர்ப்பம், பகவான்தாஸின் செய்கையால் நழுவிவிட்டது. அவர்தமது ஸகாக்கள் அங்கு இல்லாததைக் கண்டு அன்றேமுடிக்க இஷ்டமில்லாமல் பேச்சைவளர்த்தி ஓட் எடுக்க அவகாசமில்லாமல் செய்துவிட்டார். இருந்தாலும் இது இன்னொருதினத்தில் விவாதத்திக்கு வரும்போது இந்த மசோதா நிராகரிக்கப்பட்டுவிடுமென்றே நம்புகிறோம். காங்கிரஸ்காரர்களாகிய இந்தியா சட்டஸபைமெம்பர்கள் இவ்விஷயத்தில் ஒழுங்காகவே நடந்து இம்மசோதாவை நிராகரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மைஸூரில் பலிக்கவில்லை.

திருவாங்கூர் விளம்பரத்தை அநுஸரித்து மற்றவிடங்களிலும் ஆலயப்பிரவேசத்தை ஸாதித்துவிடவேண்டுமென்று காந்திஜீ உள்பட சீர்திருத்தவாதிகள் ஸமயம்பார்த்து கிளப்பிவிட்டார்கள். ஆயினும் இந்தியாவில் மிகப் பெரிய கௌரவம்வாய்ந்த ஸம்ஸ்தானமாகிய மைஸூரில் நடந்த விஷயம் சீர்திருத்தக்காரர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும். அவ்வூர் சட்டஸபையில் ஆலயப்பிரவேசத் தீர்மானமொன்று சென்றவாரம் கொண்டுவரப்பட்டு விவாதம் நடக்கையில் அந்த அரசாங்கத்தார் அதற்கு இணங்க மறுத்துவிட்டது தார்மிகஸமூஹத்திற்கு மிகுந்த ஸந்தோஷத்தை விளைவிக்கிறது. ஆலயப்பிரவேசத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவர்கள் திருவாங்கூரை உதாஹரணமாகக்காட்டக்கூடாதென்றும் அங்கு அதற்குபலமான எதிர்ப்பு இருப்பதாயும், ஸீனியர் மஹாராணியாரே அதை அங்கீகரிக்கவில்லையென்றும் மஹாராஜாவிடம் பயத்தாலும், விச்வாஸ தாக்ஷிண்யத்தாலுமே இவ்விஷயமான ஆக்ஷேபம் அங்கு பஹிரங்கமாக வெளிப்படவில்லையென்றும் எடுத்துரைத்தார்கள்.

கவர்ன்மெண்டு தரப்பில் பேசிய ஸ்ரீமான் அநந்தராமனும் நிர்வாஹஸபை மெம்பர் ஸ்ரீமான் எஸ். பி. ராஜகோபாலாசாரியாரும் மைஸூரில் ஆலயப்பிரவேசம் ஸாத்யமில்லையென்றதுடன், ஆலயப்பிரவேச விஷயமாகச் சட்டம்செய்வது நிர்ப்பந்திக்கும் தன்மைவாய்ந்ததுதானென்றும் கூறிவிட்டார்.

மைஸூரில் இந்த பிரச்சனை அடிக்கடி கிளப்பட்டுவந்தபோதிலும், மஹாராஜாவும், அவருடைய மந்திரிகளும், நிர்வாக உத்தியோகஸ்தர்களும் நியாய புத்தியுடனும் தீர்க்காலோசனையுடனும் மதவிஷயங்களில் ஜாக்கிரதைகாட்டியது மிகவும் போற்றத்தக்கதாம்.

மைஸூரில் ஆலயப் பிரவேச விவாதம்

கவர்ன்மெண்டின் எதிர்ப்பு.

தீர்மானம் வாபீஸ் வாங்கப்பட்டது.

ஜனவரிமீ 22உ கூடிய மைசூர் சட்டசபையில் ஸ்ரீமான் பி. சுப்பாமசெட்டி என்பவர் தீண்டாதார் ஆலயப்ரவேச ஸம்பந்தமாக கீழ்க் கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார்:

“மைசூர் கவர்ன்மெண்ட் முஸோரிடிபார்ட்மெண்ட் அதிகாரத்திற்குள்பட்ட கோவில்களில், ஆதிகர்நாடகர்கள், ஆதித்ராவிடர்கள் முதலிய தீண்டாத வகுப்பினர், அரசாங்கத்தாரால், கோவில்களின் பூஜை ஸம்ப்ரதாயாதிகளைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்களுக்கிணங்க, கோவில்களில் பிரவேசிக்கவும் தொழவும் அநுமதியளிக்கும்படி மகாராஜாவின் கவர்ன்மெண்டை இந்த ஸபை கேட்டுக் கொள்ளுகிறது.” இத்தீர்மானத்தை பிரேரித்துப் பேசுகைகல் ஏற்கனவே இது ஸம்மந்தமாக விவாதம் நடத்திருந்தாலும் அந்த சமயத்திற்கும் இந்த சமயத்திற்கும் இடையில் தேசத்தில் ஒரு பெரிய மாறுதல் வந்துவிட்டதென்று சொல்லி திருவிதாங்கூர் அரசரின் அறிக்கையை குறிப்பிட்டார். மிகவும் கண்டிப்பான முறையில் மதப்பழக்கங்கள் அனுஷ்டிக்கப்படும் திருவிதாங்கூரிலேயே ஷை சாஸநம் பிறந்திருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

D. H. சந்திரசேகரய்யா தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்.

D. V. குண்டப்பா என்பவர் ஆகமசாஸ்திர வித்வான்களையும் சீர்திருத்தக்காரர்களையும் கொண்டதொரு கமிட்டி நியமிக்கவேண்டும் என்றும் அவர்கள் விஷயங்களை ஆழ்ந்து கவனிக்க வேண்டுமென்றும் யாதொரு விதமான தடங்கலுமில்லாமலிருந்தால் இவ்விஷயத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றார்.

எதிர்ப்பு

ராஜாஸபாபூஷண திவான்பகதூர் K. R. ஸ்ரீநிவாஸய்யங்கார் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். அதன் சுருக்கமாவது:—மத ஸம்பந்தமாக சீர்திருத்தங்கள் வெளியிலிருந்து வருவது கூடாது, ஆலயப்ரவேசம் இந்த ஸபையால் பல தடவை விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஸாதகமாகவும் பாதகமாகவும் அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இத்தீர்மானத்தை கொண்டுவந்திருப்பவராலோ, அல்லது அதை ஆதரிப்பவராலோ ஏற்கனவே சொல்லப்பட்டவாதங்களுக்கு அதிகமாக திருவாங்கூர் அரசரின் அறிக்கைத் தவிர வேறு ஒன்றும் புதிதாகச் சொல்லப்படவில்லை. இதுதான் தேசத்தில் இடையில் ஏற்பட்ட பெரியமாறுதல் என்று சொல்லப்பட்டது ஆனால் அரசரின் சாஸநத்தில் உள்ள மாறுதல் ஜனங்களின் மனதில் ஏற்பட்ட மாறுதலை பிரதிபலிக்கிறதா இல்லையா என்று நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. இந்த அறிக்கை ஸம்மந்தமாக திருவாங்கூர் ஜனங்களின் ஒரு சாரரின் புகழ்ச்சியையோ, பலத்த அபிப்பிராயங்களையோ நாம் கேள்விப்படவில்லை என்பது நிச்சயம். அரசாங்க மநு அதிகாந்தான் காரணமாக ஜனங்களின் அபிப்பிராயம் வெளியாகாதிருக்குமானால் இது ஜனங்களுடைய ராஜ பக்தியையே சொல்லும். ப்ராசீன ஸம்பிரதாயத்தில் நம்பிக்கை உள்ளவர்களிடையில் பலத்த ஆபேக்ஷம் காணப்படுகிறது.

கொச்சி மஹாராஜாவும் திருவாங்கூர் அறிக்கையுடன் ஒத்துழைக்கவில்லை. உண்மையில் திருவாங்கூர் கோவிலைச் சேர்ந்த பூஜகர்கள் கொச்சி கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான கோவில்களில் வருவதையே தடுத்துவிட்டார், மதவிஷயத்தில் சீர்திருத்தம் பிறரால் செய்யப்படக்கூடாது என்பதே என்து ஊர்ஜிதமான அபிப்பிராயம் குண்டப்பாவின் ஆலோசனையும் கவர்ன்மெண்டாரால் ஆலோசிக்கப்படலாம் என்றும் கூறினார்.

ராவ்பகதூர் V. K. கருடாசார் தீண்டாதார் எத்துணை பேர்கள் இந்தபாத்யதையை அபேக்ஷிக்கின்றனர் என்றும் கேட்டார்.

சர்க்காரின் ஆக்ஷேபம்

முஸோரி கமிஷனர் ஸ்ரீமான் K. V. அனந்தராமன் கவர்ன்மெண்ட் சார்பாகப்பின் வருமாறு பதில் சொன்னார்.

“கடந்த 5. 6 வருஷங்களாக மைசூர் ஜனப்பிரதிநிதி ஸபையிலும் லெஜிஸ்லேடிவ் கவுன்சிலிலும் இவ்விஷயம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அநேக தடவைகளில் கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயம் விளக்கப்பட்டுவிட்டது இங்கு ஸபையில் சொல்லப்பட்ட நோக்கங்களை கவர்ன்மெண்டார் ஆதரித்தாலும், இத்தீர்மானத்தை ஏற்பது முடியாது. ஏனெனில், முஸோரியைச் சேர்ந்த ஸ்தாபனங்கள் கணக்கற்றவை- சில ஸ்தாபனங்களுக்கு ஸாதாரண முறையில் கிராண்டே கொடுக்கப்படுகிறது. இதனால் தீர்மானத்தை ஏற்பதில் சட்டபூர்வமான கஷ்டங்கள்காணப்படுகின்றன. அடுத்ததாக, மத ஆசார ஸம்பந்தமான விஷயங்களில் பொது ஜனங்களின் பூர்ண ஒத்துழைப்போடும், ஆதரவோடும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும் என்று நினைக்கிறனர்.

சென்ற தடவை இவ்விஷயம் விவாதிக்கப்படும் பொழுது ஆலயப்ரவேச பிரேரணைக்கு பலத்த எதிர்ப்பு இருந்ததைப் பார்த்தோம். 11-பேர் இப்பிரேரணையை எதிர்த்துப் பேசினர். அதில் ஒருவர் இவ்விஷயத்தைக்காட்டிலும் சீர்திருத்த வாதிகள் விவாஹ ஸர்வலசம்பந்தமாகவுள்ள வித்யாசத்தையும், தீண்டாதார்க்குள்ளேயே காணப்படும் ஜாதிவித்தியாசத்தையும் ஒழிப்பதிலும் முயற்சிப்பது வரவேற்கத்தக்கதென்றார். மற்றொருவர் சீர்திருத்தத்தை ஆதரிப்பவர்கள் உண்மையில் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடுபவர்களில்லை என்றும் சொல்லி ஆலயப்ரவேசத்தை விஷயமாகக்கொண்டு தேர்தலில் போட்டி போடவும் அறைகூவி அழைத்தார்.

இப்போழுது ஆலயப்ரவேச விஷயம் அகில இந்தியாவுக்கும் முக்கியமானது. பிரிட்டிஷ் இந்தியா ஸம்மந்தப்பட்டவரை காங்கிரஸ் மஹாசபையாலே இப்பிரச்னை மேடையேற்றப்பட்டிருக்கிறது. அதை ஒத்து நோக்கினால் மைசூர் ஸம்பந்தப்பட்டவரை ஆலயப்பிரவேச விஷயம் ஸமீபத்தில் உண்டானதே. இதையும் பிரிடிஷ் இந்தியாவில் நடைபெறும் இயக்கத்தின் ஒளியாகவே சொல்லவேண்டும். ஆலயப்ரவேசக் கிளர்ச்சி அவர்ணர்களால்நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயப்ரவேசத்தில் அவர்ணர்களுக்கு அவா இருப்பதாக இதுவரை யாரும் அறியும்படி காட்டப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு சொந்தக் கோவில்கள், பூஜை முறை முதலியவை இருக்கின்றன.

ஆலயப்ரவேச விஷயத்தில் இருவிதகோஷ்டியினர் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை மதிக்காமலே இச்சீர்திருத்தத்தைச் செய்ய எண்ணுகின்றனர் மாறுதல் வேண்டாத அபிப்பிராயமுள்ளவர்களும் இருக்கின்றனர். இவ்விஷயத்தில் ராஜீ அஸாத்யமானதென அவர்கள் நினைக்கின்றனர். முஸோரிஸ்தாபனங்கள் கவர்ன்மெண்டினாலேயே முழுவதும் உதவப்படுபவையன்று. சில ஸ்தாபனங்கள் ஸம்பந்தப்பட்ட வரை கிராண்டுகளே செய்யப்படுவதில்லை. அரசாங்கம் ஒரு டிரஸ்டிதான். அவர்கள் ஆலயம் தொழும் முறையில் மாறுதலை உண்டுபண்ணுவது தர்ம நியாயத்தை மீறுவதற்கு இடமளிக்கும்.

ஆலப்ரவேசத்தில் சிரத்தை உள்ளவர்கள் முதல்படியில் பிரசாரம் செய்யவேண்டும். முன் விவாதிக்கப்பட்டதிலிருந்து கவர்ன்மெண்டின் போக்கில் மாறுதலேற்பட ந்யாயமான அதிகமானதொன்றும் நடைபெறவில்லை. ஹொதுலிக்காரர்கள் இச்சீர்திருத்தத்திற்கு ஸாதகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது, ஆனால் ஜாதி ஹிந்துக்களுக்கும் தீண்டாதார்களுக்கும் ஏற்படக்கூடும் தீர்க்க முடியாத கணக்கற்ற சண்டைகளுக்கு ஆரம்பமாகும் என்று நான் உடனே சொல்லுவேன்.”

பிறகு கவர்ன்மெண்ட் நிர்வாஹஸபை மெம்பர் ஸ்ரீமான் எஸ். பி. ராஜகோபாலாசாரியரும் கவர்ன்மெண்ட் தரப்பில் ஆலயப்ரவேசத்தைஆக்ஷேபித்து அனேககோவில்கள், மடங்களின் நிர்வாஹத்திற்குட்பட்டிருப்பதாயும் ஆலயப்ரவேச சீர்திருத்தத்தை கவர்ன்மெண்டார் ஏற்கமுடியாதென்றும், திருவாங்கூரில் கூட, ஸீனியர் ராணி ஆலயப்ர பிரவேசத்தை ஒப்பவில்லை என்றும் ஆலயப்பிரவேசமென்பது ஜாதி ஹிந்துக்களின் உரிமையில் பிரவேசித்து அவர்களை நிர்ப்பந்தப்படுத்தும் தன்மைவாய்ந்ததென்றும் கூறினார்,

கடைசியாகத் தீர்மானம் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டது. நமது நிருபர்.

சென்னைமாகாண ஸநாதன தர்ம மஹாநாடு (1937)

ஷை மகா நாடானது 1937-வரு பிப்ரவரி மாதம் 6, 7உ(சனி ஞாயிற்றுக்கிழமைகளில்) திருவல்லிக்கேணி தவனஉத்ஸவ பங்களாவில் மதுரை அட்வகேட் ஸ்ரீமான் ராவ்ஸாகிப் N. நடேசய்யரவர்கள் தலைமையின்கீழ் நடைபெறும். திவான்பஹதூர் கோவிந்தாஸ் சதுர்புஜதாஸ் அவர்கள் வரவேற்புக் கமிட்டியின் அக்ராசனராயிருப்பார். வரவேற்புக்கமிட்டியாரால் தகுந்த தங்கும் வசதிகளும், சாப்பாடு வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு தேவையாயிருக்கும் விஷயங்களுக்கு முன்னதாகவே ஜெனரல் கார்யதரிசியான T. S. ராமஸ்வாமி அய்யர், லலிதாஸடனம், ராயப்பேட்டை, சென்னை. என்ற அட்ரஸுக்கு எழுதவும்.

குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில் டிரஸ்டி பதவி.

மேற்படிக் கோவிலில் ஸ்ரீமான் டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்கள் வஹித்துவந்த தர்மகர்த்தர் பதவியின் காலகெடு நேற்றோடு பூர்த்தியாகிவிட்டது. அந்தப் பதவிக்குப் புதிய நியமனம் செய்யவேண்டியிருப்பதால் பலர் பலவித முயற்சிசெய்வதாகத் தெரிகிறது. இதில் தேவஸ்தானக் கமிட்டியார் கவனிக்கவேண்டிய பல அம்சங்கள் இருக்கின்றன. இந்த ஸ்தானமானது ஸ்கீம் ரூல்படி ஒரு வடகலை வைஷ்ணவப் பிராம்மணருக்குக் கொடுபடவேண்டியதாகையால் மற்ற இனத்தார் இதில் போட்டிபோடுவதற்கில்லை. ஆயினும் வைஷ்ணவ பிராம்மணர்களுக்குள்ளேயே அநேகப் பிரிவுகளிருப்பதால் ஒவ்வொரு பிரிவினரும் போட்டியிடுவது ஸதாரணமானது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாத்யத்தையும் திறமையையும் மிகைப்படுத்திக் கூறுவதும் அதற்குப்பின் பலமாக மஹஜர்கள் தயாரித்து அநுப்புவதும் இயற்கையே. ஆனால் இதைமட்டும் தேவஸ்தானக் கமிட்டியார் கவனித்து முடிவு செய்துவிடக்கூடாது. இந்த நியமனத்தில் ஏதாவது ஒருவித திடமான கொள்கையைப் பின்பற்றி நடப்பதே விரும்பத்தக்கதாகும். வடகலை வைஷ்ண, பிராம்மணர் யாவருக்கும் இந்த ஸ்தானம் உரியதாகையால் இதில் ஒரு குறிப்பிட்ட ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவரென்பதற்காக எவருக்கும் சலுகைகாட்ட நியாயமில்லை. கோவில் காரியங்கள் எல்லோருக்கும் பொதுவேயன்றி அங்கு குறிப்பிட்ட ஒரு ஸம்பிரதாயுஸ்தருக்கென்று தனியாக ஒரு காரியமோ பாத்யமோ ஒன்றுமில்லை. ஆகையால் வடகலை வைஷ்ணவ பிராம்மணர்களில் குறிப்பாக ஒருவருக்கு பாத்யம் ஏற்படுத்துவது அபாயமாகும். ஸ்கீம் ரூலிலும் இதற்கு இடமில்லை. சென்ற வருஷம் நடந்த கிளர்ச்சியில் தேவஸ்தான போர்டாரும் மேற்கண்ட பேத உணர்ச்சிக்கு சட்டத்தில் இடமில்லையென்று சொல்லியிருப்பதாயும் தெரிகிறது.

மேலும் தற்போது வக்கீல் ஸமூஹத்திலிருந்து மூன்று கனவான்கள் டிரஸ்டிகளாயிருந்து வருவதால் மீண்டும் அந்த ஸமூஹத்திலிருந்து நியமனம் செய்வதைவிட மற்ற இனங்களிலிருந்து பொறுக்குவதே முற்றிலும் விரும்பத்தக்கதாம். நாம் அறிந்தவரையில் பொதுஜன அபிப்ராயம் இப்படியேதான் இருக்கிறதென்று சொல்லக்கூடும். இந்தக் கோவில் நிர்வாஹம் பலவழிகளில் சிக்கலுள்ளதாகையால் அநுபவமற்றவர்களைவிட நிர்வாஹ அநுபவமுள்ளவர்களே அவச்யம் தேவை. இந்தக் கொள்கையை அநுஸரிப்பதாயிருந்தால் ஏற்கனவே நன்கு நிர்வாஹம் நடத்தி அநுபவம் பெற்றவர்களான ஸ்ரீமான் என். எஸ். ரங்கஸாமி அய்யங்காரையோ, இப்போது விலகும் ஸ்ரீமான் டி. ஸ்ரீநிவாஸ அய்யங்காரையோ மீண்டும் நியமிப்பதால் விசேஷ நன்மையுண்டு. முக்யமாக ஸ்ரீமான் டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஆரம்பித்த சில கார்யங்கள் பூர்த்தியாகவேண்டியிருப்பதால் அவரையே மீண்டும் நியமிப்பது ஒரு விதத்தில் விரும்பத்தக்கதே.

தவிர, இக்கோவிலில் வைதிக கார்யங்களில் ஏராளமான சீர்திருத்தம் செய்யவேண்டியிருக்கிறது, இந்தக் கோவில் பூஜைக்கு ஆதாரமான ஆகம ஸம்ஹிதை என்ன வென்பதே ஒருவருக்கும் தெரியவில்லை. பூஜகர்களும் ஒவ்வொரு மாதிரியாக முரண்பட்ட வழியில் பூஜைசெய்கிறார்கள். அவர்கள் நடத்தும் பூஜை ஸரியான முறையில் இருக்கிறதாவென்று கவனிக்கப்பட வழியில்லை. ஸமீபத்தில் இக்கோவிலில் ஆகமசாஸ்திர ஸம்பந்தமாக பலத்த சர்ச்சைகள் ஏற்பட்டிருப்பதும் பிரசித்தம். ஆகையால் கோவில் ஸம்பந்தப்பட்ட வைதிக கார்யங்களை நன்கு கவனிக்கக் கூடிய வித்வான் ஒருவர் டிரஸ்டி போர்டில் ஸ்தானம் வகிக்கவேண்டியது அத்யவச்யமென்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். முற்றிலும் சாஸ்திர ஸம்பந்தம் பெற்றதும், வித்வான்களுடைய அபிப்பிராயத்தை அநுஸரித்தே நடத்தப்படவேண்டியதுமான தேவாலய நிர்வாஹம்போன்ற முக்ய கார்யத்தில்கூட வித்வான்களை இதுவரை ஸம்பந்தப்படுத்தாத தவறு சிறியதல்ல. குடந்தை கமிட்டியார் இந்த சிறந்த கொள்கையைக் கைபிடித்து வித்வான்களை நியமித்து மற்ற கமிட்டிகளுக்கும் வழிகாட்டுவார்களா? ஸ்ரீமான்களான கே. எஸ். பாட்ராசாரியர் M. A. மஹாமஹோபாத்யாய கிருஷ்ணமாசாரியர் போன்ற லௌகிக வைதிக ஞானம்பெற்ற பெரியார்கள் சிலர் இவ்வூரில் இருப்பது கமிட்டியார் அறிந்ததே.

இந்தக் கோவிலில் விசேஷ கைங்கரியம் செய்தவர்களை நியமிப்பதென்றகொள்கையை அவலம்பிப்பதாயிருந்தால் காலஞ்சென்ற விராஹக்குளம் ஸ்ரீமான் ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களின் குடும்பத்தாருடையபாத்யத்தையே நாம் முதல் முதலாகக் குறிப்பிடக்கூடும். கணக்கற்ற அருமையான கைங்கரியங்களைச் செய்துள்ள ஸ்ரீமான் ரங்கஸாமி அய்யங்கார் தன் ஆயுள் பூராவும் இக்கோவிலுக்குப் பல வழியில் அரும்பணி செய்திருக்கிறார். அவருடைய அழியாத கைங்கர்யத்தின் கடைசி சின்ன உருவமாகவே சித்திரைத்தேர் விளங்கிவருகிறது. அவருடைய குமாரர்களில் தற்போது ஸ்ரீமான் வி. ஆர். லக்ஷ்மீ வராஹ அய்யங்கார் வி. ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார் ஆகிய இரு கனவான்கள் இருக்கிறார்கள். முன்னவருக்குப் பலஜோலிகளிருக்குமாயின் ஸ்ரீமான் கிருஷ்ணஸாமி அய்யங்காரையாவது நியமிக்க வேண்டியது நியாயமாயிருக்கும் இவர் 10 வருஷகாலம் ஹானரரி மாஜிஸ்ட்ரேட்டாயிருந்து புகழ்பெற்றிருப்பதுடன் நகரப் பொதுக்கார்யங்களிலும் உத்ஸாஹத்துடன் ஸம்பந்தப்பட்டுப் பலருடைய நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார். ஸொந்தத்தில் ஒரு கோவில் நிர்வாஹத்தையும் சிறப்பாக நடத்திவருகிறார்.

எப்படியும் தேவஸ்தானக் கமிட்டியார் யாரை நியமிப்பதாய் இருந்தாலும் ஏதாவது சிறந்த கொள்கையை அடிப்படையாகக்கொண்டு இந்த நியமனத்தைச் செய்வதே விரும்பத்தக்கது. பெரிய இடத்து சிபார்சுகளும், கனிப்பட்ட தாக்ஷிண்யங்களும் அர்த்தமற்ற மஹஜர்களும் இதில் குறுக்கிடாவண்ணம் கவனித்துக்கொள்ள வேண்டியது கமிட்டியாரின் கடமை யென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஒரு ஸேவார்த்தி.

புதுக்கோட்டை.

ஸ்ரீ வைதிக வர்த்தனீ சபா.

இச்சபையின் 4-வது வருஷ பூர்த்தி மஹோத்ஸவம் 26 முதல் 27–1–37 தினங்களில் நடந்தேறியது.

ஷை தினங்கள் மாலை 6–30 மணி முதல் 8–30வரை பாஷ்ய பாவக்ஞ பிரும்மஸ்ரீ V. S. வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்களால் முறையே "பிரபஞ்ச வைசித்திரியம்" "முன்னேற்றவழி" என்ற இரண்டு விஷயங்களும் வெகுச்லாக்கியமாக உபந்யஸிக்கப்பட்டன. ஷை தினங்களில் இச் சமஸ்தானத் தியஉதவி அட்மினிஸ்டிரேட்டர் மகா-ா-ா-ஸ்ரீ ராவ் சாஹிப் R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் அக்ராஸநம் வகித்து ஷை உத்ஸவத்தை வெகுசிறப்பாக நடத்திவைத்தார்கள்.

இச்சபையின் வருஷாந்திர ரிபோர்ட்டு முதலியது கார்யதர்சியால் படிக்கப்பட்டது. சென்ற வருஷத்தில் 113 உபந்யாஸங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. பிரம்மஸ்ரீ V. S. வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்களால் ஏற்கனவே 4 மாதத்திற்கு முந்தி ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிற ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்த ப்ரவசனத்தில் பிரகிருதம் "குசேலோபாக்யானம்" நடக்கிறது. ஷை தசமம் முடிவடைய இன்னும் ஒருமாதம் பிடிக்கலாம்.

G. மலையப்ப சாஸ்திரிகள் கார்யதர்சி.

வாரக்குறிப்புகள்.

(வெ. ஸௌ. சர்மா.)

வெங்காயத்தை வெறுக்கும் சங்கம். விக்ஞாந சாஸ்திரத்திற்கும் நவநாகரிகத்திற்கும் பிறப்பிடமான அமெரிக்காவில் ஷை சங்கம் ஒன்று தோன்றிற்று. அதைப் பக்ஷிப்பவர் அதிகமானதால் இது ஓங்கவில்லை. அதைப் பக்ஷிப்பவர் வாய்நாற்றம் பொறுக்காமலே அது ஆவிர்பவித்தது. ஆனால் சாப்பிடாதவரும் சாப்பிட்டுப் பழக்கினால் இந்த கஷ்டம் இராதென தீர்மானிக்கப்பட்டதாம். நாயின் விருஷணத்திலிருந்து அநுஜனித்ததால் அதை உண்போர் புநருபநயநம் செய்துகொள்ள வேண்டுமென்கிறது பாரதம்.

திரஸ்கரிணீ சக்தி. மேனாட்டில் பல பல ஆராய்ச்சிகள் நடக்கின்றன. நமது நாட்டு நாகரிகத்தை விளக்கிக் காட்ட அது "உப பிர்ஹ்மண"மாக கடவுளால் படைக்கப்பட்டதோ என நினைக்க வேண்டியிருக்கிறது. சென்ற வாரம் ஓர் விக்ஞானி பலரை ஓரிடத்தே கூட்டி ஒருவரை ஒருவர் அறியமுடியாமல் செய்து காட்டினார். புராணங்களில் இவ்வித்யா ஸ்வரூபம் விளக்கப்பட்டுள்ளது. பல நாடகங்களில் அதன் பிரயோகம் உளது.

தர்மராஜன் வாழி. மைசூர் சட்டசபை திருவாங்கூர் அதர்மத்தைக் சட்டமாக்க முயற்சித்தது. மன்னன் தானுமதற்கு இசையாது தன்னரசாங்கத்தையும் தர்மவழியில் நடக்கும்படி செய்ததைக்கொண்டு ஆஸ்திகர் மகிழ்ந்தும் மன்னரைப் போற்றி வாழ்த்துவாராக.

சபாபதி நடேசரே? சென்னையில் 6, 7.உயில் திருவல்லிக்கேணி தவனோத்ஸவ மண்டபத்தில் நடக்கும் ஸநாதனதர்ம ஸபைக்கு ஆர்பாதி மகா-ா-ா-ஸ்ரீ நடேசய்யரவர்களே ஸபாபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். திருவாங்கூர் அந்யாயத்தை மிக்க அழுத்தமாகவும் கம்பீரமாகவும் கண்டித்த கோஷ்டியின் சிரோ ரத்னமவரே. ஸ்வாநுஷ்டானமுள்ள சிஷ்டவீரர் தலைமை பூண்டு அதர்மத்தை எதிர்க்க முன்னணியில் நிற்பது நற்காலத்தின் அறிகுறிபோலும். இதன் காரியதரிசி கூறியபடி இச்சபையின் ஜீவசக்தியை வளர்த்து தர்மக்கொடியை இறக்கவிடாமல் பாதுகாற்கவேண்டும்.

சேரவாரும் ஜகத்தீரே, ஆஸ்திகர்கள் ஒன்று சேர்ந்தால் ஒரு நாளும் அதார்மிகர் தலையெடுக்க முடியாது. சென்னை சபை அதிவிரைவில் தைவாநுக்ரஹத்தால் கூட்டப்பட்டதாதலால் பலருக்கு நேரில் கடிதம் எழுத விட்டிருக்கலாம். பண்டிதர்களும் ஆஸ்திகர்களும் தவாமல் விஜயம் செய்து ஸபையை சிறப்பாக நடத்த சேர வாருங்கள்.

மஹம்மதியர் கூட வெறுக்கிறனர். கலப்பு விவாஹத்தைப் பற்றி இந்திய சட்டசபையில் வாதம் நடந்தபோது சில மஹம்மதியர் இந்தியரின் ஜாதி தத்வம், மேன்மை முதலியவைகளை எடுத்துக்காட்டி அதைஎதிர்த்தனர். அவருக்குள்ள அபிமானங்கூட நம்மவருக்கு நம் மதத்தில் இல்லாத காரணம் யாதோ?

The Travancore Procalmation and after.

The recent proclamation of the Maharaja of Travancore allowing his avarna subjects free entry into the state-owned temples in his territory, has taken the whole of India by surprise.. To the followers of Sanatana Dharma, it has been a great blow but for the reformers also, it was a great surprise. Indeed, they could not believe their eyes when they read the papers on one fine morning, to find that the Maharaja of the most orthodox state had sent forth his fiat that the ban on the avarnas regarding temple entry should go. These feelings are only natural when we remember the position occupied by the State of Travancore and its peoples in the estimation of Hindus all over India. As the land of Anantasayana Padmanabha, as the place hallowed by the presence of Sri Janardana and Kanyakumari, as the territory reclaimed by the Great Parasurama from the sea, the Travancore State had been from time immemorial the recipient of the reverence and admiration of all Hindus The sanctity of their country was enhanced in the eyes of its inhabitants when the great Martandavarma, after his many wars consolidated his conquests and made a gift of the whole state in the name of Sri Padmanabha and constituted himself and his successors as Padmabha dasas, to reign as His Vicegerents. Other and less praise-worthy motives are attributed to this great act but it cannot be gainsaid that the spirit of piety and reverence and the sense of thankfulness for giving success to his arms should have been the principal motive, impelling him to dedicate himself and his country to his Patron Deity.

This religious atmosphere of the country had permeated fully into the daily lives of its inhabitants and no people had a greater name for personal cleanliness and the observance of pollution than the original Hindu inhabitants of that country. Just as they regarded their individual bodies as the shrines of the individual divinity within them and bestowed their full attention to keep it clean and pure, they made the temples in their land the subject of careful regulation regarding worship and attendance. Their temples, though they could not boast of massive architecture or immense size, were the most clean and the best kept and even the most orthodox Brahmin would not be permitted to go beyond a certain limit in the presence of the deity. In short, the habits and observances of the people were, as it were, the last word in the matter of religious observance and personal cleanliness, on which the theory of pollution is based.

The eyes of reformers were naturally turned to this sacred land. They found there the apotheosis of personal purity and ceremonial observance and they set out to storm such a citadel. The culmination of this movement was the campaign directed to enter the temple at Guruvayur, one of the most sacred shrines in Malabar. Sanatanists would not have forgotten the deperate attempts of hordes of reformers, encouraged by the moral and pecuniary support of their sympathisers in India and the stage-managed fasting of Kelappan. They would not have also forgotten the splendid resistance to these attacks offered by the orthodox Hindus, and by the custodians of the temple and the ignominious way in which the whole campaign ended. The services rendered in this matter by the various Matadhipathis, and by His Holiness Sri Sankaracharya of Kamakoti Peeta in particular will ever live green in the memory of all devout Hindus. Resistance was unanimous and the cause of Sanatana Dharma triumphed.

After this conspicuous defeat, there was a lull in the campaign but soon the forces of reaction began to rear their head and a sympathetic press began to give a fillip to their activities by a policy of '*Suppressio veri. suggestio falsi*' These attempts did not gain much headway, being considered as the last attempts of a dying cause. The Dewanship of Sir Mahomed Habibullah proved contrary to expectations and during his regime there was no departure from established custom, nor any weak-kneed submission to any clamorous minority set out to destroy it. It was left to the present Dewan-a Brahmin-to do what even a Mahomedan Dewan was afraid of and to demolish by royal fiat the edifice of purity built and preserved by generations of devout Hindus.

The influence of the new Dewan's glamorous personality on the present Ruler of that State began several years ago and during the regime of Sir Mahomed Habibullah, he was the Dewan *de facto*. From the time he beame Dewan *de jure* also, Travancore began to fill the news and an adulatory press began to fill its columns with the activities, small or great, of the new Dewan. The Jubilee of the Maharajah's birthday was celebrated in the most prominent manner, with fulness of pomp and pageant and before the admiring gaze of a large number of distinguished visitors The tableau was too good to be missed and the Dewan crowned himself with glory (?) by persuading his master to issue this unforgettable proclamation. The whole of India was taken by surprise when it was announced with many splashes of ink and glaring headlines, that Avarnas had been permitted to enter into the state-owned Temples in Travancore, though care was taken to state that such entry would have to be in conformity with the regulations that were to be framed therefor. [Shrewd observers would have noted how the present Dewan takes care to mention the Maharaja whenever he (the Dewan) is congratulated on this 'extremely courageous and praiseworthy' act. The very insistence on associating the Maharaja with the Proclamation makes one suspect if the Dewan is not creating a sort of estoppel against the former.]

Various are the reasons that have been given out for this revolutionary step. The Maharaja is said to have been alarmed at the depletion in the number of his Hindu subjects, especially avarnas, by the proselytising activities of other religionists and to have been convinced that this was the only way to keep them within the Hindu fold. It is also attributed to political pressure from the Central Government, but one wonders why they should have begun it in Travancore unless it were for the fact that the present Diwan is so much in the counsels at India's Capital. The Maharaja is stated to have ascertained from Parishads and Pandits that the prohibition of Temple Entry to Avarnas was not supported by the Sastras but one is at a loss to know how or when he obtained this opinion on one of the most fundamental faiths of Orthodox Hinduism.

Be the reasons what they may, the proclamation was made at the most psychological and propitious moment, when the whole state was *en fete* over the Birth Day celebration of the ruler. The press there and elsewhere was awaiting some striking pronouncement and here it was, astounding even them by its suddenness and revolutionary nature. Congratulations were reported as received from all parts of India and the exultations of reformers knew no bounds. It was considered to be a time for extreme jubilation and not for sober and dispassionate judgment.

The fiat was welcomed as a great gesture towards conciliating Avarnas and their sympathisers in and out of Travancore but, as days passed, realities had to be faced. For the Avarnas, it was a great opportunity to parade their equality but to encourage them to enter the hither-to forbidden places in the Temples, another Brahmin Mr. C Rajagopalachariar had to come to Trivandrum and after many ablutions and decorations he shepherded his Harijan sheep within the immediate presence of the Deity. Mr. Gandhi came soon after and with bitter memories of his former repulse, visited almost all the important shrines in the state and did his best to pollute them all by the entry of his followers.

Only two personages refused to be stampeded by this royal Edict: The Maharajah of Cochin, the ruler of the neighbouring state, kept his head calm and things went on as usual in the temples there. To protect the temples at the Frontier from the visits of the 'enfranchised' avarnas of Travancore and similar enthusiasts in his own state, he closed them and even cancelled an important annual function which he usually attended. Some temples in his state were served by priests who officiated in the temples in Travancore also. When these returned from doing service at the Travancore Temples, they were refused admission and it was only

(continued from 9)

after they underwent Prayaschittam that they were allowed entry into the Cochin Temples.

The other personage was the Senior Maharani of Travancore, who ruled the State so wisely and well during the minority of the present Maharajah. She has several temples under her control and she refused to lift the ban against the entry of avarnas into them. This is said to have displeased the Maharajah so much that when, recently, he went to Attingal to participate in an annual celebration at that old seat of the Rulers of the state, he declined to worship at a temple of the senior Maharani there, a visit to which formed an item in the round of worship during the celebration.

Meanwhile, things had not been going on smoothly within the State, contrary to the fond hopes of the Ruler and his Dewan. Departmental orders had to be issued ordering the officials of the Temple to continue their service on pain of severe penalties. But the public at large could not be so dragooned into compliance with the revolutionary measure. The state temples were considered by the orthodox people as polluted and attendance is reported to be thinning day by day. This was only natural, when one remembers the intense faith that they had been cherishing through ages about personal purity and avoidance of pollution. Readers here should have had ample news on this matter but for the fact that apart from the newspapers here being disinclined to report about the failure of the Proclamation, the local Press in the State had been completely muzzled and ordered to release for outside consumption only accounts of the enormous crowds thronging the temples and of the orthodox Brahmins vieing with the reformers in taking bands of Avarnas into the temple premises.

The influence of the Dewan had been felt in British India also and many Sanatanist leaders, who should have felt only indignation and a sense of outrage, were either silent or came out with surprising views. It was suddenly discovered that temples were not intended for Brahmins, as if the staying away of that community would do away with the evil effects of the proclamation on the people at large. A still more surprising statement was made recently that the Vedas alone set the permanent standards for the conduct of the Hindus and that the Agamas, by which the temples are constituted and regulated, can be modified or transgressed as circumstances required. Two points will suffice for proving this view as fallacious. As much sanctity and authority is claimed for the Agamas as for the Vedas and temples are built and governed only in conformity with the principles laid down in the Agamas. If one does not believe in the Agamas temples have no use for one. You cannot have faith in temple worship and at the same time fling the Agamas to the winds. The other and equally important point is that while the Vedas mean much to the Brahmins only, they have no such appeal to or hold on the other sections of the people, who look only to the Agamas for instruction and guidance.

But the days of disillusionment have already come. Mr. Gandhi has discovered after his state-arranged and stage-managed tour of Travancore, that Temple Entry did not mean much for his 'Harijans' and that their amelioration should be sought for in other directions. The State of Travancore, already a prey to Christian and Mahomedan proselytism, has had its temples polluted and its time-honoured name for Dharma Rajya and personal and temple purity sullied and the waves of irreligion and impiety have destroyed the pristine sacredness of its temples. That is the only result of the Proclamation. To put a finishing touch to this campaign of Temple Socialism, feelers are advanced whether Christians and Mahomedans—of course, of the right sort, with Divine hunger and purified heart and so on—cannot enter Temples as Harijans do. Mr. Gandhi has given an evasive reply to this poser but we may not be surprised if another Royal Edict permits this also and makes the defiling of temples complete.

Efforts are also made to stir up agitation for similar measures in British India and the other Native States, the 'conversion' of Travancore being held up as a shining example to follow. There is a perceptible weakening in the orthodoxy of Mysore, which has thought it fit to appoint a committee to consider the question. In British India, the Sanatanists find their cause threatened by the defections in their own ranks, owing to various influences—personal and otherwise. Their own men find out suddenly that Agamas are inferior to Vedas and as such, capable of being modified to suit present-day conditions. Permissive legislation has also been suggested, authorising trustees of individual institutions to permit, at their discretion, temple entry for Avarnas. Indications are not wanting, that after the elections, the successful candidates, whatever differences may exist among them regarding political aims and methods, will unite together in a common attempt to destroy the fabric of Hindu faith and religion. Pledges may be got from candidates that they will not be a party to measures interfering with Hindu religion but the record of political leaders is one of breaking with impunity even the pledges given to their own political party and little reliance can be placed on their words. The astounding argument is advanced that the Ruler can legislate in religious matters but it is forgotten that the Sastras do not give him such freedom and that on the contrary, his supreme duty is to protect and enforce Dharma.

In this state of bewilderment and dismay, the duty of Sanatanists is plain. They should bear in mind that their cause is not for any personal benefit but for the welfare of the whole nation. Dharma is the bedrock of India's greatness and no wordly considerations or official frownings should deter them from upholding it. The vigorous opposition and impassioned exhortations of the Guruvayur days should be revived and increased tenfold, since the enemy's ranks have been strengthened by the defection of individual Sanatanists and of such an orthodox country like Travancore.

This is not a time for inaction. The forces of irreligion and iconoclasm are abroad and socialism has been sought to be enforced, for a beginning, in a sphere where there will be no visible opposition. The next move will be to allow Harijans to officiate in temples, on the same plea of equality before God and by degrees the sanctuaries of the spirit will be reduced to the state of the cinema and the market place. It is a counsel of despair to say that Brahmins may afford to stay away from temples and worship the Highest in their homes. The Brahmin exists, not for himself alone, but for the welfare of the other communities also. He is the custodian and the guardian of Dharma and even when kings do wrong, it is the duty of the Brahmin to speak out unflinchingly and put a stop to Adharma. Examples are countless in our national history of great men who had triumphantly challenged the authority of kings when they transgressed Dharma. Is the land which produced these mighty Rishis, devoid of similar great ones now? Are there not great and good men now, who will bestir themselves in this crisis and establish the rule of Dharma?

Signs are not wanting to show that the country is awaking to a sense of the serious situation created by the Proclamation. Conferences are being held and the protest of Sanatanists voiced forth in emphatic terms. But these efforts should be made on a larger scale, to prove of any affect. There should be strenuous and country wide agitation. Provincial and All-India conferences should be held, which our matadhipathis and other religious leaders should attend. The voice of Orthodoxy should be heard condemning in the most authoritative and unequivocal terms this sinister attempt to undermine the shrines of public worship. The cause is not that of the Brahmins alone. All sections of the orthodox public are affected by this measure and it behoves them all to gather together and present a united front to the enemies of the Hindu faith.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Tuni

கல்கத்தாவில் கங்காஸாகரமேளாவும் மகரஸங்க்ரமண புண்யகாலமும்.

1936-ஞு ஸெப்டம்பர்-மீ நமது தென்னாட்டில் தஞ்சைஜில்லா நன்னிலம் தாலூகாவைச்சேர்ந்த முடிகொண்டான் கிராமத்திய மகா-ா-ாஸ்ரீ M. ராமய்யர் அவர்கள் வடதிசையில் யாத்திரைக்குக் கிளம்பி, கோதாவரி கல்கத்தா, ஸ்ரீகாசி, கயை, பிரயாகை, ஹரித்வார், ரிஷீகேசம், லக்ஷ்மண சோலா, நைமிசாரண்யம், அயோத்தி முதலான இடங்களுக்குப்போய் மறுபடியும் ஆக்ரா மார்க்கமாய் மட்ரூ, ப்ருந்தாவனம், டில்லி, ஹரித்வார், நைமிசாரண்யம், அயோத்தி, லக்னௌ முதலிய இடங்களில் யாத்திரைசெய்து ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் சிலகாலம் வஸிக்க எண்ணி வஸித்துவந்த இடையில் நாம் நவம்பர்-மீ கடைசி முதல் மேற்படியாருடன் வஸித்து அவர்களுடன் 20—12—36உ யன்று கல்கத்தா வந்து சேர்ந்தோம்.

கல்கத்தாவுக்கு மேற்கில் 36 மைல் தூரத்தில் பூர்வத்தில் காடுகளாயிருந்து அக் காடுகளில் கோக்கள் மேய்ந்துவரும்போது ஒரு கோவானது அக்காட்டில் பட்டுப்போனதாம் ஒரு கஜஉயரமுள்ளதுமான பனைமரத்தின் சிரஸில் தன்பாலை பொழிந்துகொண்டு வந்திருக்கும்நாளில் அவ்விடம் வஸித்துவந்த மகான்களின் ஒருவருக்கு ஸ்வப்னத்தில் ஷெ பனைமரம் அடியான, லிங்கஸ்வரூபமான ஸ்ரீ தாரகநாதர் தோன்றி தன்னை ஸரிவா ஆராதித்துவரும்படி சொல்லியதின்பேரில் ஷெயிடத்தில் கோவில் அமைத்து பூஜை, அபிஷேகம், அர்ச்சனாதிகள் நடந்துவருகிற ஷெ தாரகேச்வரமென்னும் க்ஷேத்திரத்துக்குப்போய் 11—1—37ல் தரிசனம் செய்துவந்தோம்.

கங்காஸாகர யாத்திரை விபரம்.

இவ்விடம் கல்கத்தாவில் தினந்தோறும் பிரசுரமாகிற அமிர்தபஸார் பத்திரிகை என்னும் இங்கிலீஷ் பத்திரிகையில் கங்காஸாகரமேலாவிற்கு ஸ்பெஷல் ஸ்டீமர் விடுவதாக அறிந்து 13உ காலை 5மணிசுமாருக்கு போய்ச்சேர்ந்தோம். காலை 6 மணி சுமாருக்கு வெளிச்சமானவுடன் அவ்விடம் காத்திருந்த போட்டுகளில் ஒரு போட்டை தனிமையில் தலைக்கு இரண்டணாவீதம் சார்சு கொடுத்து அமர்த்திக்கொண்டு சுமார் மணி 6-30க்கு கரைஓரமாய்நிறுத்த முடியாமல் ஒரு கஜ நுழமுள்ள ஜலமிருக்குமிடத்தில் இறங்க ஏற்பட்டது. கரையில் சிலயிடங்கள் சோரகவும் சில யிடங்கள் மணல்பாய்ந்துமிருந்தது. அவ்விடத்தில் ஏராளமான கூலிகளிருந்தார்கள். ஸாமான்களை எடுத்துக்கொண்டு ½ மைல் போய் மணல்பாங்குள்ள இடத்துக்கு ஜாகை வஸதிக்காக சம்பந்தட்டிகள் வாங்கி எங்களுக்கு தகுந்தபடியும் மழையில்லாததினால் அதற்குத் தகுந்தபடியும் ஜாகையை ஏற்படுத்திக்கொண்டோம். அன்று ஸாயங்காலத்துக்குள் ஏராளமான யாத்திரை ஜனங்களும், கடைக்காரர்களும் அவாவர்களுக்குத் தகுந்தபடி ஷெ சம்பந்டிகளால் வஸதிகள் ஏற்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

அன்று ஸாயங்காலம் எல்லாயிடங்களிலும் சுற்றிப்பார்த்ததில் அந்த இடமானது ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் சொல்லிய ஸ்ரீகபிலமஹரிஷி ஆச்ரமமென்றும் ஜனக மஹாராஜாவின் அசுவமேதயாக குதிரையை இந்திரன் அவ்விடத்தில் மறைத்து கட்டிவைத்த யிடமென்றும் ஸகருள் 60000 பேர்களும் குதிரையைத்தேடி அங்கு வந்து குதிரையை பார்த்ததில் ஷெ ரிஷியானவர் திருடிவிட்டதாக அவரை ஹிம்ஸிக்க எத்தனிக்கையில் ஷெ மகரிஷியின் கோபாக்னியினால் எரிக்கப்பட்டு சாம்பலாகியும் பிறகு ஸகர மஹாராஜாவின கொள்பேரனை பகீரதமஹாராஜாவின் தபஸ்மூல்யமாய் கெங்காதேவியை வரவழைத்து தன் முன்னோர்களான பாட்டனார்கள் 60,000 பேர்களின் சாம்பல் அஸ்திகளை கங்கா தீர்த்தத்தினால் நனைத்து ஸ்வர்க்கத்துக்கு கரையேற்றிய இடமென்றும் தெரிகிறது. அதற்கு அடையாளமாக கபில மஹரிஷி, வலது பக்கம், கங்கை, பகீரதரும், இடது பக்கம் ஸகரரும் உள்ள சில பிம்பங்களும் அதற்கு அந்தயிடத்தில் ஓட்டுக்கொட்டகையும் அதைச் சேர்ந்தாற்போல் சுமார் 2 கோல் தூரத்தில் இடது பக்கத்தில் இந்திரனும் கட்டப்பட்ட குதிரையும் கல் சிலையிலிருக்கிறது. அவ்விடம் ஸ்நானம் செய்த எல்லோரும் மிகவும் பக்தியுடன் அங்குவந்து தரிசனம்செய்து போகிறார்கள். ஷெ கபில மஹரிஷியின் ஸந்நிதியிலிருந்து சுமார் 2 பர்லாங் தூரத்தில் கங்கையும் ஸமுத்ரத்தில் சேருகிறது மேல்கண்ட சில பிம்பங்கள் மாதிரி படங்களும் மாத்தினால் செய்த குதிரைகளும் ஏராளமாக விற்கப்படுகிறது. அவ்விடத்தில் ஏராளமான ஜனங்கள் ஷெ விசேஷதினத்திற்கு வந்திருந்தார்கள் போலீஸார்களும் வாலண்டியர்களும், அநேக ஆபீஸர்களும், தர்ம ஆஸ்பத்திரிகளும் பொதுஜன நன்மைக்காக வந்திருந்து வேண்டிய ஸௌகரியங்களை செய்துவந்தார்கள். அவ்விடத்தில் மழையில்லை. வெய்யல் நன்றாகவேயிருந்தது. குளிர் இரவு 2 மணிக்குமேலும் காலை 8 மணிவரையும் நம் பக்கத்திலுள்ள நல்ல குளிர்போலிருந்தது. மறுநாளான 14—1—37ல் ஸங்க்ரமணதினம் எங்கள் காரியங்களை முடித்துக்கொண்டு போட்டு வைத்துக்கொண்டு சாயங்காலம் மணி 3½க்கு அதில் ஏறினோம். ஷெ ஸ்டீமரும் சுமார் 4½ மணிக்கு அவ்விடம் விட்டுக் கிளம்பி டைமண்ட் ஹார்பருக்கு மணி 10-க்கு வந்து சேர்ந்தது. இருட்டாக இருந்தபடியால் காலையில் இறக்குவதாகச் சொல்லி ஸ்டீமரை நடு கங்கையிலேயேகட்டி விட்டார்கள். சுமார் இரவு 3½ க்கு ஏதோ அன்னிய ஸ்டீமர் கங்காஸாகரம் பக்கம்போவது நாங்கள் ஏறியிருந்த பார்ச்சியை மோதி அது நாங்கள் ஏறியிருந்த பார்ச்சியை இழுத்துவந்த லாஞ்சைவிட்டு தனிமையில் விடுபட்டுக்கொண்டு சுமார் 3.4-மைல்கள் பின்னால் ஜல ஓட்டமுள்ள காண்டினால் போய்க்கொண்டிருக்கும் பொழுது அதிலுள்ள ஜனங்கள் யாவும் சத்தம்போட்டு இடங்களைவிட்டு அழாத வண்ணம் அடக்கிக்கொண்டும் இருந்ததோடு ஷெ பார்ச்சில் இருந்த லாஞ்சுவேலைக்காரர்களால் நாங்களிருந்த பார்ச்சை நங்கூரங்களால் நிலை நிறுத்தி வைக்கப்பட்டன. பிறகு காலை 6-மணி சுமாருக்கு லாஞ்சு தேடிக்கொண்டு வந்து முன்போல் பூணத்துக்கொண்டு 15உ காலை 9-மணி சுமாருக்கு டைமண்ட்ஹார்பர் வந்து இறங்கினோம். அவ்விடத்தில் ரிட்டன் டிக்கட்டு வாங்கிவந்த நாங்கள் ரயிலை எதிர்பார்த்ததில் ஒத்திக்கை இல்லாததின்பேரில் இவ்விடமிருந்த மோட்டார் பஸ்ஸில் ஏறிக்கொண்டு பகல் 12½ மணிக்கு சௌக்யமாய் 42 A ஹஸாரோடு எங்கள் ஜாகைக்கு வந்து சேர்ந்தோம். இதுகள் விபரம் நமது தென் இந்திய ஜனங்கள் தெரியவேண்டி எழுதப்பட்டது.

R. மஹாதேவய்யர்.

ப்ரம்மஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரிகள் சில தினங்கள் இங்கு தங்கியதன் பயனாய் ஆஸ்திக சிரத்தை அதிகமாயிருக்கிறது. உத்ஸவத்தின் பொருட்டும் வேத பாராயணத்திற்கும் வந்திருந்த அநேக பிராம்மணர்களுக்கிடையில் நல்ல சந்தர்ப்பத்தில் இவ்வாறு தர்ம பிரசாரம் செய்த ஸ்ரீமான் சாஸ்திரிகளை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

ஒரு நிருபர்.

ஸ்வபோதாநந்தநந் ஸ்வாமியின் 8-வது குருவாராதனை.

பூர்வாச்ரமத்தில் பாலசுப்ரமணிய அய்யரென்ற அபிதானத்துடன் சென்னை கெவர்ன்மெண்ட் டிலகிராப் ஆபீஸில் உத்யோகம் செய்த அன்னார் காலமுழுவதும் பகவத் பஜனையில் ஈடுபட்டு, ஸ்ரீ ராதா கல்யாண ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் கலியாண உற்சவங்களை வெகு விமரிசையாய் செய்ததுடன், விசேஷமான அன்னதானம் எல்லா ஜாதிகளுக்கும் அளித்து, அந்தியத்தில் ஸன்யஸ்தம்பூண்டு பிரம்மஸ்ரீ பூதாளான எமது பிதாவும் குருவுமான அப்பெரியாருக்கு 8-வது குருவாராதனை நடந்த விபரம்.

ஜனவரி 25உ திங்கட்கிழமை காலை 6மணி முதல் 8 மணிவரையில் அப்பெரியாரால் பூஜித்துதந்த ஸ்ரீ ராதாகிருஷ்ண மீனாக்ஷி சுந்தரேச படமூர்த்திகளுக்கும், அவரது திருவுருபடத்திற்கும் வெகு ரமணீயமாய் அலங்கரித்து ஷோடசோபசாரத்துடன் ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் பிறகு 10 மணிக்குமேல் 12 மணிக்குள் பிராம்ஹண ஆராதனை வைதிக விதிப்படி செய்த பிற்பாடு இஷ்டமித்ரர் பேர்ஜனமுடிந்ததும் பகல் 2½ மணிக்குமேல் 4½ மணிவரையில் வைதிக மெம்பர்களால் வேதபாராயணம் கிரமமாய் எல்லோர் மனதையும் கவரும்படியான ச்ரவணானந்தத்துடன் சொல்லப்பட்டும் அதற்குமேல் இரவு 8 மணிவரையில் விஜயம் செய்திருந்த பக்த பெரியோர்களால் நாம ஸங்கீர்த்தனத்தின் மஹிமையை சொல்லப்பட்டும் திவ்யநாம ஸங்கீர்த்தனம் ஸம்பிரதாயமாக பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து வெகு ஆனந்தமாய் நடத்தி மங்களம் பாடப்பட்டது பட்டணத்தில் எல்லா விடங்களிலுமுள்ள பாகவத கோஷ்டிகள் இதில் ஈடுபட்டார்கள். பிறகு போஜன, சந்தன, தாம்பூலம் வழங்கி அத்தின வைபவம் இனிது முடிந்தது. கும்பகோணத்திற்கு சமீபம் நாச்சியார் கோவில் மாத்தூர் கிராமத்தில் இப்பெரியார் ஸமாதிக்கும் பூஜை நிவேதன விநியோகங்களுக்கு ஏற்பாடு செய்து அன்று அவ்விடத்திலும் நடந்தது.

B. வைத்யநாதய்யர்.

வைதிக தர்மப் பிரசாரம்.

திருவிடைமருதூர்.

இவ்வூரிலும் சுற்றுவட்டக்கிராமங்களிலும் தஞ்சாவூர் வைதிக தர்ம ஸங்கத்தைப் பிராபல்யப்படுத்துவதற்கும் புஷ்போத்ஸவத்தை முன்னிட்டு தர்ம பிரசாரம் செய்யும்பொருட்டும் மேற்படி தர்ம ஸங்கத்தின் உதவி காரியதரிசியும் பிரசாரகருமாகிய கும்பகோணம் ரிடயர்ட் என்ஜினீயர் ப்ரம்மஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரிகள் சென்ற சில தினங்களாக இங்கு தங்கியிருந்தார்கள்.

இவ்வூரிலுள்ள ப்ரமுகர்கள் பலரையும் நேரே சந்தித்துப்பேசி அவாவர்களை தர்ம ஸங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேர்த்ததுடன் இவ்வூரில் இருந்துவந்த தர்ம ஸம்ரக்ஷண ஸபையையும் மேற்படி ஸங்கத்தின் கிளை ஸபையாக இணைத்துவைத்தார்.

ஊர் ஆஸ்திகர்களை உள்ளூர் பஜனை மடத்தில் கூட்டி, 23ந் தேதியிலும், 26ந் தேதியிலும், அவர்களுக்குத் தர்ம விஷயங்களைப் பற்றியும் ஆலய வழிபாடு விதிகளைப்பற்றியும் தான் ப்ரவசனம் செய்ததுடன் மற்றும் ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் போன்றவர்களைக்கொண்டும் சொல்லச்செய்தார்கள். குழையூர் ஸ்ரீமான் R. ஸூர்யநாராயணமூர்த்தி அய்யர், ஸ்ரீமான் N. ஸ்வாமிநாத நாயக், சந்திரசேகரபுரம் ரிடயர்டு டிப்டி கலெக்டர் முத்துஸ்வாமி அய்யர் முதலியவர்கள் ஸங்கத்தின் மெம்பர்களாகச் சேர்ந்ததுடன் பிராம்மணஸமூஹ முன்னேற்றத்தின் அவசியத்தைப்பற்றியும் எடுத்துக்கூறினார்கள்.

(தொடர்ச்சி 2ம் பத்தி பார்க்க.)



அநாவசியமாக ஏன் - - -

- அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது.

அமிர்தாஞ்சனம்

அத்வைத வேதாந்த ஸத்கால க்ஷேபம்.

கும்பகோணம் டபீர் கிழப்படித்துறை காவேரி மண்டபத்தில் சென்ற விஜயதசமி முதல் பிரதிதினம் இரவு 7 மணிமுதல் 9 மணி வரையில் பல பக்தர்கள் முன்னிலையில் ப்ரம்ஹ நிஷ்ட மஹா பண்டிதர் ஸாதுநிச்சலதாஸ் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய விசார ஸாகரம் என்னும் க்ரந்த காலக்ஷேபம் கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமிகோவில் ஸந்நிதி பஜனைமடம் ப்ரம்ஹஸ்ரீ பாகவதர் வாஸுதேவராவ் அவர்களால் உபந்யாஸமாகச் செய்யப்பட்டு வருகிறது.

ஸகல வேதாந்த சாஸ்திரங்களின் இரகஸ்யத்தை ஸமஸ்தமான பேர்களும் ஸுலபமாய் தெரிந்துகொள்ளும்படி ஸ்பஷ்டமாய்ச் சொல்லும் ஷை யாருடைய போதனா சக்தி மிகவும் மெச்சத்தக்கதாயும் சிரவணம் செய்யும் முமுக்ஷு ஜனங்களுக்கு மிகவும் ஆநந்தத்தையும் மேன்மேல்கேழ்ப்பதில் அபிருசியும் அத்வைதவேதாந்த சாஸ்திரத்தில் பூரணபக்தி சிரத்தையும் உண்டாகிவருகிறது. சிரவணம் பண்ணும் பக்தர் பலருடைய விருப்பத்தின் படி ஷை க்ரந்தத்தின் ஸாராம்சம், நாளது தை-மீ 21உ புதன்கிழமை முதல் ஆறு தினங்களில் ஸங்க்ரஹ நிரூபணம் செய்யப்படும். 26உ (8—2—1937) திங்கள்கிழமை இரவு 7 மணிக்குமேல் 9 மணிக்குள் ஸங்க்ரஹ நிரூபண பூர்த்திசெய்து ஷை க்ரந்தத்தை மங்களம் செய்வதால் ஆஸ்திக பக்த சிரோமணிகள் யாவரும் விஜயஞ்செய்து சிரவணம் பண்ணி க்ரந்தபூர்த்தியைச் சிறப்பாக நடத்திவைத்து பரமானந்த மடையுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ சங்கராசார்ய பக்தர்கள்

தஞ்சாவூர் ஜில்லா.

ஆரம்பகல்வியின் அபிவிருத்திக்காக லோகல்பாடிகளுக்கு செய்யப்பட்டிருக்கிற உதவி.

(ஸர்க்கார் அறிக்கை.)

எந்த இடங்களில் பொருள் உதவியில்லாமல் ஆரம்ப கல்வியை அபிவிருத்தி செய்ய முடியாதோ அந்த இடங்களில் போர்டு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி அவைகளின் மூலமாக கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று 1913-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்திய கவர்ன்மெண்டார் அவர்களின் கல்வி சம்பந்தமான நீதியில் சொல்லப்பட்டது. அந்நீதியை அனுஸரித்து பிள்ளைகளும் பெண்களும் வாசிப்பதற்காக அதிகப்படியான ஆரம்ப கல்வி பாடசாலைகள் ஏற்படுத்துவதற்கும் அதிலுள்ள உபாத்தியாயர்களை அதிகப்படுத்துவதற்கும் அவர்களுடைய சம்பளத்தை ஜாஸ்தி செய்வதற்கும் இந்த ராஜதானியிலுள்ள லோகல் பாடிகளுக்கு ஏராளமான பண உதவி செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்ப கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு மேலான சௌகரியங்களை ஏற்படுத்தும்பொருட்டு 1920-ம் வருஷத்திய மதராஸ் ஆரம்ப கல்வி சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆரம்ப கல்வியின் செலவுக்கு வேண்டிய அதிகமான தொகைகளை சேர்ப்பதற்கு கவர்ன்மெண்டார் அவர்களின் உத்தரவின்பேரில் கல்வி வரி வசூல் செய்து கொள்ளலாமென்று மேலே கண்ட சட்டத்தினால் லோகல் பாடிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜில்லாவிலுள்ள பல லோகல்பாடிகளினால் பல விதமாக அந்தவரி வசூல் செய்யப்பட்டுவந்தது. 1344-ம் பசலியில் ரூ. ஒன்றுக்கு $1\frac{1}{2}$ பைசா வீதமும், 1345-ம் பசலியில் ரூபாய் ஒன்றுக்கு 2பைசா வீதமும் ஒரே விதமாக வரி வசூல் செய்யப்படவேண்டும் என்றும் கவர்ன்மெண்டார் அவர்கள் உத்தரவு செய்தார்கள். இவ்வாறு வசூலாகும் தொகையில், கவர்ன்மெண்டார் அவர்கள் மாகாண நிதியிலிருந்து ஒரு ரூபாய்க்கு சம தொகையை லோகல்பாடிகளுக்கு கொடுத்துவருகிறார்கள். எல்லா ஜில்லா போர்டுகளும் 82 முனிஸிபாலிடிகளில், 45 முனிஸிபாலிடிகளிலும் இப்போது ஷை வரியை வசூல் செய்துவருகிறார்கள். இந்த லோகல்பாடிகளினால் அவ்வாறு வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ. 21. 89 லக்ஷம். இந்த லோகல் பாடிகளுக்கு வருஷா வருஷம் பட்டுவாடா செய்யும்பொருட்டு கவர்ன்மெண்டார் அவர்களால் 21. 89 லக்ஷம் ரூபாய்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இதைத்தவிர கவர்ன்மெண்டார் அவர்களின் உத்தரவின்பேரில் லோகல்பாடிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பள்ளிக்கூடங்களை நிர்வகித்துவரும் செலவுக்காக வருஷா வருஷம் சர்க்காரில் கொடுத்துவரும் தொகை 63.65லக்ஷம் ரூபாய் ஆகிறது. ஆகவே ஆரம்ப கல்விக்காக லோகல்பாடிகளுக்கு ஒவ்வொரு வருஷமும் கவர்ன்மெண்டார் அவர்களால் கொடுத்துவரும் தொகை 85.54 லக்ஷம் ரூபாய் ஆகிறது. இந்த தொகையானது ஆரம்ப கல்விக்காக லோகல்பாடிகளினால் செலவு செய்துவருகிற மொத்த தொகையில் 100க்கு 70வீதம் ஆகிறது.

மேலேகண்ட முதல் பாராவில் சொல்லிய ஆரம்ப கல்வி சட்டத்தில் லோகல்பாடிகளின் இலாகாவிற்குள்பட்ட குறிப்பிட்ட இடங்களில் கட்டாய ஆரம்ப கல்வி ஏற்படுத்துவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் 27 முனிசிபல் கௌன்சில்களால் அந்த சட்டத்தில் கண்ட கட்டாயப்படிப்பு சம்பந்தமான விதிகள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டார் அவர்களின் உத்திரவு பெற்று மலையாளம், வட ஆற்காடு, ராமனாதபுரம், செங்கல்பட்டு, மேல தஞ்சாவூர் இந்த ஜில்லாபோர்டுகளும் அந்தந்த ஜில்லாவின் சில பாகங்களில் கட்டாயப்படிப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களை நிர்வகித்துவருகிற செலவுக்காக கொடுத்துவருகிற தொகைகளைத் தவிர ஆரம்பகல்வி பாடசாலைகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் கவர்ன்மெண்டார் அவர்கள் தொகைகள் கொடுத்துவருகிறார்கள். இந்த தொகைகள் சாதாரணமாக கட்டிடங்களின் மொத்த செலவில் பாதியாகும்.

ஸ்ரீ ஹரிஹரபஜன ஸமாஜம்.

1936-வருஷ ஜனவரி-மீ 24உ இந்த சமாஜத்தில் ராதாகல்யாணம் நடத்தப்பட்டது. எல்லா மெம்பர்களும், மற்றுமுள்ள பக்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ப்ரதி சனிக்கிழமையிலும், ஏகாதசி தினத்திலும், சம்ப்ரதாயமாகவும், அதிவிமரிசையாகவும் வெகுகாலமாக பஜனை நடத்தப்பட்டுவருகிறது.

J. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

வங்காள எலக்ஷன்.

வங்காளத்தில் நடைபெற்ற சட்டசபை எலெக்ஷனில் காங்கிரஸ்காரர்கள் இதுவரையில் 49 ஸ்தானங்களை கைப்பற்றி யிருக்கிறார்கள். அஸ்ஸாமில் இதுவரையில் 19 ஸ்தானங்கள் காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கின்றன.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி

முடுக்குத்தெரு, கும்பகோணம்.

எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால், விலை சாஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோ ரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.

R. Ramaswami Iyengar, Proprietor

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam. Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

11-2-1937

4 [illegible]
22 6

[illegible]

215172

3-MAR 1937
MADRAS

83

Registeerd No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஞு தை-மீ 29உ 1937-ஞு பிப்ரவரி-மீ 11உ | ஸ 6

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

கலப்புவிவாஹ மசோதா நிராகரிக்கப்பட்டது.

பாபு பகவன்தாஸின் கலப்புவிவாஹ மசோதாவானது இந்தியா சட்டஸபையில் 4உயன்று மீண்டும் விவாதிக்கப்பட்டு ஸ்ரீமான் தாஸ் தம்முடைய கக்ஷியை எடுத்து கூறினர். முக்யமாக ஹிந்துக்களில் பிறப்பினால் ஜாதிபேத மில்லையென்றும். குணகர்மங்களாலேயே அது ஏற்படுமென்ற கொள்கையை ஸ்தாபிக்கவே தாம் இந்தக் கலப்பு விவாஹ மசோதாவைக் கொண்டுவந்ததாக அவர் சொன்னர்.

மசோதாவை தனிக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்று அவர் செய்த பிரேரேபணை தோற்றுப்போயிற்று. அவருக்கு ஸாதகமாக 14 வோட்டுகளும், விரோதமாக 36 வோட்டுக்களும் கிடைத்தன. மசோதா நிராகரிக்கப்பட்டது.

ஹிந்து விதவை. ஸொத்துரிமை. மசோதா.

நிறைவேறிவிட்டது.

ஸ்ரீமான் டாக்டர் தேசமுக் என்பவர் ஹிந்து ஸ்திரீகளுக்கு ஸொத்துரிமை அளிக்க வேண்டுமென்று கொண்டுவந்த மசோதாவானது மனைவி விஷயம் மாத்திரத்தில் செல்லுபடியாக இருக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டின் ஆலோசனையின்பேரில் ஏற்கனவே திருத்தப்பட்டிருந்தது யாவரும் அறிந்தது. அது தனிக்கமிட்டியில் பரிசீலனை செய்யப்பட்டபடி 4உயன்று இந்தியா சட்டஸபையில் நிறைவேறிவிட்டது. ஹிந்துக் குடும்பங்களில் மனைவியான விதந்துவுக்கு ஸொத்து பாத்ய முண்டென்பது இந்த மசோதாவினால் ஏற்படுகிறது. தாயாதிகள், அனந்தர வார்ஸுக்காரர்கள் ஆகியவர்களுடைய தொல்லையிலிருந்து விடுபெற இந்தச் சட்டம் மிக்க உபயோகமாகுமென்று ஸ்ரீமான் என். என். ஸர்க்கார் குறிப்பிட்டார்.

பஞ்சாப் எலெக்ஷன்.

காங்கிரஸுக்கு அபஜயம்.

இதுவரையில் பஞ்சாபில் வெளியாகியிருக்கிற முடிவுகளிலிருந்து அங்கு காங்கிரஸுக்கு வெற்றி கிடைக்கவில்லையென்றே தெரிகிறது. யூனியனிஸ்ட் கக்ஷியாரே பெரும்பான்மையான ஸ்தானங்களை கைப்பற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு 42 ஸ்தானம் கிடைத்திருக்கிறது. காங்கிரஸுக்கு 10 ஸ்தானங்களே கிடைத்தன.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம் ஞு ஸ்தாபிக்கப்பட்டது.)

கிளை ஆபீஸ்கள்:—மன்னார்குடி & நாகபட்டணம்.
ஸப் ஆபீஸ்கள்:—நன்னிலம் & அய்யம்பேட்டை.

31—1—37 எடுக்கப்பட்ட கோஷ்பாரா.

மூலதனம், செல்லுகள்.	ரூ.	அ.	பை.	சோத்துகள், இருப்புகள்.	ரூ.	அ.	பை.
1. மூலதனம் (வரவுவந்த பங்குத்தொகைகள்)	2,82,575	0	0	1. ஆபீஸ் சாமான்கள், கட்டிடங்கள், ஸ்தாவரங்கள்	68,582	7	9
2. க்ஷேமநிதிகள், காப்புநிதிகள்	1,97,346	4	8	2. இன்வெஸ்ட்டுமென்டுகள்:- சர்க்கார், ஸ்டேட் கடன் பத்திரங்கள், இதர இனங்கள்	4,16,671	8	4
3. தவணை, நடப்பு, சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள்	16,90,908	11	9	3. வரவேண்டிய கடன்கள், வசூலிக்கவேண்டிய உண்டியல்கள், அடிக பத்துகள் உள்பட	13,61,564	13	10
4. சில்லரை இனங்கள்.	9,195	2	2	4. சில்லரை இனங்கள்	11,412	13	4
5. வருமானம், முன் வருஷ லாபம் உள்பட	22,774	1	4	5. இருப்பு:— ரொக்கமும், இதர பாங்கிகளிலும்	3,44,567	8	8
மொத்தம்.	22,02,799	3	11	மொத்தம்	22,02,799	3	11

S. மகாலிங்கய்யர், B. A., B. L., மானேஜிங் டைரெக்டர்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம், டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

காங்கிரஸ் பிரசார விநோதம்!

சில முக்ய விஷயங்கள்.

அஹம்பாவத்திற்கு எச்சரிக்கை.

(ராஜீயவாதி எழுதுகிறார்.)

லாஹூரில் எலெக்ஷன் விஷயங்கள் அதிகம். இதில் காங்கிரஸ் பிரசாரர்களுக்கு பங்கு அதிகமிருந்தது. நவீன காங்கிரஸ் தாயென ஸ்ரீயுத மாளவியாஜியைக்கூட அவமானப் படுத்தத் துணிந்தார்கள். காங்கிரஸுக்கும் தேசத்திற்கும் அப்பெரியார் செய்துவரும் பணி கணக்கிடலங்காது. இந்தியாவின் உத்தமப்புதல்வர்களில் அவர் ஒருவர். அத்தகைய பெரியவரைக்கூட லாகூரிலும் மற்ற சிலவிடங்களிலும் காங்கிரஸ்வாதிகளே அவமானப்படுத்த முயன்றது அவர்களுடைய அளவற்ற அஹம்பாவத்தை வெளிப்படுத்துகிறது.

ஸ்ரீமதிகளான சன்னோதேவிக்கும், பார்வதிபாய்க்கும் அங்கு போட்டி. மாளவியாஜி தேசீயக்கக்ஷியின் சார்பாக சன்னோதேவியை ஆதரித்துப் பேசினார். காங்கிரஸ்காரர்களுக்கு கோபம் வந்துவிட்டது. அஹிம்ஸா தர்மம் ஆகாயம் பறந்தது. காங்கிரஸ் தலைவரான மாளவியாஜிடம் மட்டுமரியாதை காட்டவில்லை. மாளவியாஜி பேச முடியாமல் காங்கிரஸ்வாலாக்கள் கூச்சலிட்டனர். "மாளவியாஜி திரும்பிப்போ" என்றார்கள். கூட்டத்தில் செருப்புகள் பறந்தன. அவமரியாதையான வார்த்தைகளுக்கு அளவில்லை. ஹா! என்ன அநியாயம்! பார்த்தீர்களா? தேசீய ஸபைக்கு இதைவிட அபவாதம் என்னவேணும்? இந்தியனாகப்பிறந்த எவனாவது இப்படி மாளவியாஜி நடத்தப்பட்டதை ஸஹிப்பானா?

ஆயினுமென்ன? அதிகாரவர்க்க அஹம்பாவம் பிடித்த, காங்கிரஸ் வாலாக்களின் விஷமத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் கூட இன்று வரையில் கண்டிக்க முன்வரவில்லை. மாளவியாஜியிடம் மன்னிப்புக்கோரவில்லை. என்ன அஹங்காரம்? தங்களுக்கு தேசத்தில் செல்வாக்கு இருப்பதை நினைத்து மற்றவர்கள் யாவரும் தங்கள் சொல்லுக்குக் கீழ்படிந்தே கிடக்கவேண்டுமென்று காங்கிரஸ்காரர் மனோபாவமிருக்கிறது. இது பெரிய அபாயமென்றும், எதிர்காலத்தில் பெரிய ஆபத்திற்கு இடமென்றும் காங்கிரஸ்வாதிகள் எச்சரிக்கை கொள்ளவேண்டியது அவசியமாகும்.

அதிகாரச்செருக்கு.

அதிகாரச்செருக்குள்ளவன், தன்னுடைய உத்திரவுக்கு யாவரும் கீழ்படியவேண்டுமென்று நினைக்கிறான். கீழ்படியாதவர்களை கீழ்ப்படியும்படி நிர்பந்திக்கிறான். காங்கிரஸ் அதிகாரவர்க்கமும் இந்தவழியில் தான் செல்லுகிறது. தான் கிள்ளிப்போட்ட, ஒரு துரும்பாயிருந்தாலும் எல்லோரும் பேச்சு மூச்சில்லாமல் கக்ஷிபேசாமல், குணதோஷம் பாராமல் அந்த துரும்புக்கே வோட் கொடுக்கவேணுமாம். ஆக்ஷேபித்துப்பேசினால் அடிதடி! கூச்சல். ஆபாஸ வஸ்துக்களின் வீச்சு. பேச இடம் கொடாமல் கத்துவது. இம்மாதிரியான வழியிலெல்லாம் கிலேநிறுத்தி அதை எல்லோரும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டுமென்று நினைக்கிறது. ஜலியன் வாலாபாக் ஸம்பவத்தில் அதிகாரி ஒரு உத்திரவு போட்டான். அதை மீறியவர்களும் அலக்ஷ்யம் செய்தவர்களும் மார்பால் ஊர்ந்து செல்லவேண்டுமென்று கட்டளையிட்டான். எந்தவழியிலும் தன் உத்திரவின் மதிப்பைக் காக்க அவன் பிடிவாதம் காட்டினான். ஜஸ்டிஸ் கக்ஷியும் இப்படியேதான் செய்தது. தங்கள் கக்ஷிக்கு நியாயமானதெனத் தோன்றியதைச் செய்து மற்றவர்களும் அதற்குக் கட்டுப்படவேண்டுமென்று அது நினைத்ததில் தவறு என்ன?

தன் உத்திரவுகளுக்கு மதிப்பை நிலைக்க ஜஸ்டிஸ் கக்ஷி எண்ணியது தவறல்லவே? ஜனரல் டயரையும், ஜஸ்டிஸ் கக்ஷியையும், அதிகார வர்க்கத்தையும் நிந்தித்த காங்கிரஸ் நியாயவாதிகள் அதிகாரவர்க்கத்தைவிட பொதுஜனங்களை இம்மாதிரி நிர்ப்பந்தப்படுத்துவது என்ன ஒழுங்கோ! காங்கிரஸ் ஆக்ஷி ஏற்பட்டால் அதிகாரவர்க்கபுத்தி அதற்கும் அதிகமாக இருக்குமென்றே நிச்சயமாகிறது! பேச்சு ஸ்வதந்திரியத்தைப்பற்றி வாய்கிழியப் பேசுவார்கள். ஸர்க்காருடன் சண்டைசெய்வார்கள். ஆனால் காங்கிரஸுக்கு விரோதமாக பேசுகிறவர்களுக்கு இடமில்லையாம். தன் உத்திரவும், அதிகாரமுமே மேலோங்கி நிற்கவேண்டுமென்று காங்கிரஸ் அதிகாரிவர்க்கம் கர்வப்படைத்திருக்கிறது. என்ன நீதி இது? பலகஷ்டங்களுக்கிடையில் நிர்வாஹம்நடத்தும் ஸர்க்கார் அதிகாரிவர்க்கம் தங்கள் அதிகாரம் கௌரவிக்கப்பட வேண்டுமென்று நினைப்பதில் மட்டில் தப்பென்ன?

எச்சரிக்கை கொள்ள வேணும்.

காங்கிரஸ்வாதிகள் தேசத்தில் தங்களுக்கு ஏதோ சிறிது செல்வாக்கு இருப்பதைக் கொண்டு அளவு மிஞ்சி அஹங்காரம் அடைந்திருக்கிறார்கள். கௌரவமுள்ள இதாக் கக்ஷிகளையோ அபிப்ராயங்களையோ துரும்புபோல் அவமதிக்கின்றனர். எல்லையற்ற இறுமாப்பால் வெகு அலக்ஷ்யத்துடன் மற்றவர்களை நடத்துகிறார்கள். மாளவியர் போன்றவர்களிடம் இவர்கள் நடப்பதே ஸாக்ஷியமாகும்.

ஆனால் இவர்கள் இப்போதுள்ள நிலைமையிலேயே எப்போதும் இருப்பார்களென்று நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும். உலக ராஜிய சரித்திரத்தை இவர்கள் உணருவது நன்று. ஒரு காலத்தில் உலகத்தை ஆட்டிவைத்தவர்கள் பலர் இன்று அநாமதேயமாக மூலைமுடுக்கில் கிடக்கின்றனர். அந்நிய தேசங்களிலும், இந்தியாவிலும் இதற்குச் சிறந்த உதாஹரணங்கள் பல உண்டு. வல்லரசுகளை பயமுறுத்திவந்த கெய்ஸர், வான் ஹிண்டன்பர்க் முதலியவர்கள் எங்கே! ஒரு காலத்தில் பிரிடிஷ் ஸாம்ராஜ்ய நிர்வாஹ மூலமாகப் பூவுலகின் புகழ்பெற்ற மிஸ்டர் லாயிட் ஜார்ஜின் பெயர் இப்போது எங்கேயாவது கேட்கப்படுகிறதா? தொழில் கக்ஷி ஆதரவுபெற்று பிரதம மந்திரியாக விளங்கி, கக்ஷிமாறிய மெக்டானல்டுக்கு இப்போது என்ன செல்வாக்கு? இந்தியாவில் காந்திஜியின் தற்போதைய நிலைமை என்ன! இதையெல்லாம் காங்கிரஸ் வாதிகள் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும்.

காங்கிரஸை விழுங்க அபேதவாதம், பொதுவுடமை முதலிய பூதங்கள் வாய்திறந்து நிற்கின்றன. அவைகளின் களியாட்டம் வலுத்தால் காங்கிரஸ் வாதிகளின் கதியானது, இப்போது அவர்களால் அலக்ஷ்யம் செய்யப்படுகிறவர்களின் நிலைமைக்கு ஒரு நாள் வந்து சேருமென்று நிச்சயமே.

பிறரைப் பரிஹஸித்ததேன்?

காங்கிரஸ் காரர்கள் இதாக் கக்ஷியினரை எந்தெந்த கார்யங்களுக்காகப் பரிஹஸித்தனரோ, தூஷித்தனரோ அவைகளையே தாங்களும் கூச்சமின்றி செய்வது ஒரு விநோதமே. சட்டஸபைகளில் படிப்போ, ராஜீய ஞானமோ இல்லாதவர்களை மெம்பர்களாகக் கொண்டுவந்து ஆள் கூட்டம்காட்டி, கக்ஷித் தலைவர் கைதூக்கியபடியெல்லாம தலையாட்டி மெம்பர்களும் கைதூக்கி வோட்டுக்கொடுப்பதைக் காங்கிரஸ் காரர்கள் பரிஹஸித்து வருகின்றனர். இதற்காக ஜஸ்டிஸைக் கண்டித்தனர். ஆள் கூட்ட பலத்தைக்கொண்டு ஆதிக்கம் ஸ்தாபித்துக்கொள்வதாகப் புகார் கூறினர்.

ஆனால் இப்போது காங்கிரஸ்காரர் செய்வதென்ன? இந்த எலெக்ஷனில் காங்கிரஸ் அபேக்ஷகர்களில் அநேகம்பேர்கள் வெறும் பேர்வழிகளே. கக்ஷித் தலைவரிஷ்டப்படி கைதூக்கவே அவர்கள் ஆளாகச் சேர்க்கப்படுகின்றனர். ஒரு ஊமையை நிறுத்தினால் கூட காங்கிரஸ் கட்டளையென்று அதை யாவரும் சிரஸ்மேல் வஹிக்கவேண்டுமேயல்லது மறுபேச்சுக் கூடாதாம். ஆனால் இந்தமாதிரி மூடநம்பிக்கைக் கட்டுப்பாடு பிறர் செய்தால் பரிஹாஸம். காங்கிரஸ் செய்தால் உத்தமமாம்?

ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி இந்தியா சட்டஸபையில் ஸர்க்காரைத் தாக்கும்போது, நியமன மெம்பர்களையும், ஸர்க்கார் மெம்பர்களையும் வைத்துக்கொண்டு வோட்பலம் தேடுவதைவிட, ஒரு ஸர்க்கார் உத்யோக மெம்பருடைய ஒரு வோட்டுக்கு 40, 50 வோட்டுக்களின் அதிகாரம் உண்டென்று நியமனம் செய்துவிடலாமென்று பரிஹஸித்தாரே. இப்போது காங்கிரஸ் விஷயத்தில் அதை நாம் சொல்லலாமல்லவா? காங்கிரஸ்காரர்களும் அர்மாஞ்சிகளை சட்டஸபையில் கொண்டுவருவதைக்காட்டிலும் ஒரு வோட்டுக்கு அநேக வோட்டுக்களின் கௌரவமிருப்பதாகச் சட்டமியற்றும்படி சொல்லலாமே!

ஓட்டுக் கேழ்க்கும் தந்திரம்!

காங்கிரஸ் காரர்கள் ஓட்டுக்கேட்கும் முறை வெகு வேடிக்கையானது. காங்கிரஸ் வேண்டுமா, அல்லது ஸர்க்கார் அல்லது ஜஸ்டிஸ் வேண்டுமா என்று வோட்டர்களைக் கேட்கிறார்கள். இரண்டே கக்ஷிகள் தான் இருக்கிறதாம். தவிரவும் ஜயிக்கும் கக்ஷியான காங்கிரஸுக்கே வோட் போடவேணுமென்கிறார்கள் காங்கிரஸுக்கு ஜயிக்கும் கக்ஷியென்று யார் வரம்கொடுத்தனரோ தெரியவில்லை. பல தொகுதிகளில் அது தோற்கவில்லையா? காங்கிரஸ் தான் ஜயிக்குமென்று முன்னாடியே ஜோஸ்யம் தெரிந்துவிட்டதா? இம்மாதிரி ஓட்டர்களின் புத்தியைக் கலைப்பது நியாயமா? இது ஜனநாயகத்தைப் பரிஹஸிப்பதாயில்லையா? ஓட்டர்களை சிறு குழந்தைகளாக நினைத்து அவமானப்படுத்துவதா யில்லையா?

இரண்டு கக்ஷிக்கும் வோட்போடப் பிடிக்காமல் அநேக ஓட்டர்கள் இருக்கலாமல்லவா? வோட் ஸ்வதந்திரத்தை மனஸ்ஸாக்ஷியை மதித்து உபயோகிக்க இஷ்டமில்லாதவர்களை இவர்கள் என்ன செய்யமுடியும்? தீங்கு செய்யும் விஷயத்தில் காங்கிரஸும், ஜஸ்டிஸும் ஸமமென்று நினைப்பவர்கள் இருக்கமாட்டார்களா? விஷமம் செய்யும் அளவில் வித்யாஸமிருப்பினும் இவ்விரண்டு கக்ஷியும் வேண்டாமென்று நம்மைப்போல் பலர் நினைக்கலாம். ஒரு சில வோட்டர்கள் ஒதுங்கிவிடுவதால் குடி முழுகிப்போய்விடாதென்று ராஜீய அறிவுபெற்றவர் நினைக்கமாட்டார். முதல் எலெக்ஷனில் சிலர் ஒதுங்கலாம். இரண்டாவதில் அவர்களுடைய தொகை அதிகரித்து அபேக்ஷகர்களை அது பாதிக்கநேரலாம். அபேக்ஷகர்கள் தங்களுக்கு அந்த ஓட்டுக்கள் குறைந்தன் காரணத்தைச் சிந்திக்க நேரலாம். அதன் மூலம் ஓட்டர்களின் உணர்ச்சியை அறியவேண்டியும், அவர்களைத் திருப்திசெய்யவும் அபேக்ஷகர்கள் முன்வரவேண்டி வரலாம். ஆகையால் வோட்கொடுப்பதைவிட ஒரு கக்ஷிக்கும் கொடுக்காமலிருந்து விடுவதிலும் நன்மையுண்டல்லவா? முக்யமாக எல்லா ஓட்டர்களுடைய ஆதரவும் தங்களுக்குக் கிடைத்ததாகக்கூறி, மெம்பர்கள், தங்களுடைய கனத்தை அதிகரித்துச்சொல்லிக் கொள்ள முடியாதல்லவா?

(தொடர்ச்சி 4 ம் பக்கம் பார்க்க.)

திருவாங்கூர் ஆலயப்பிரவேச கண்டனம்.

பலவிடங்களில் பொதுக்கூட்டம்.

வேப்பத்தூர்.

1937-ஸூ ஜனவரி மாதம் 25உ கும்பகோணம் தாலூகாவைச்சேர்ந்த வேப்பத்தூர் கிராமம் பெருமாள் கோவிலில், ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாள் அவர்கள் ஆக்ஞையை முன்னிட்டு அவ்வூர் ஆஸ்திக மஹாஜனங்களால் மேற்படியூர் அப்பாக்குட்டி நாராயணசாமி அய்யர் அவர்கள் தலைமையின்கீழ் ஒருபொதுக்கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு திருவிசலூர் T. N. S. S. பாடசாலை தலைமை உபாத்தியாயர் ப்ரம்ஹஸ்ரீ ராமசுப்ப சாஸ்திரிகளும் ஷை பாடசாலை உபாத்தியாயர்கள N. K. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் V. H. சுப்ரமண்ய சாஸ்திரிகள் முதலியவர்களும் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

ஷை கூட்டத்தில் ப்ரம்ஹஸ்ரீ P. K. ராமசுப்பா சாஸ்திரிகள் அவர்களால் தற்காலம் சில சீர்திருத்தக்காரர்களின் முயற்சியை ஆதாரமாய்க்கொண்டு நாம் தொன்றுதொட்டு ஜாதிமுறைப்படி அனுஷ்டித்துவரும் தேவாலயங்களில் பஞ்சமர்களை புகுறவிட்டு நம் ஆகம சாஸ்திரங்களுக்கு விரோத கொள்கைகளை உண்டுபண்ணியும் நாஸ்திக மதத்தை பெருகவைப்பதும் ஸநாதநிகளுக்கு முற்றிலும் விரோதம் என்பதையும் ஷை பஞ்சமர்கள் ஆலயப்ரவேசமானது சநாதனிகளால் முற்றிலும் கண்டிக்கத்தக்கது என்பதையும் தெளிவுற கூறப்பட்டது. V. H. சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களால் கீழ்கண்ட தீர்மானங்கள் ப்ரேரிக்கப்பட்டு சபையோர்களால் ஏகமனதாய் ஆமோதித்து நிறைவேற்றப்பட்டன.

1. திருவாங்கூர் ஆலயப்ரவேசம் வேதம் சாஸ்திரம, ஆகமம், ஆசாரம் முதலிய ஒவ்வொரு மத ப்ராமாணத்திற்கும் நேர் விரோதமாய் இருப்பதால் அதை இக்கூட்டம் பலமாக ஆக்ஷேபிக்கிறது.

2. அரசர்களுக்கு தர்மத்தைக் காப்பாற்றும் அதிகாரம் உண்டேயன்றி அதைமாற்றவும் அழிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பதை இச்சபை பூர்ண நம்பிக்கையுடன் அறிவித்துக் கொள்ளுகிறது.

3 திருவாங்கூரிலிருக்கும் அநந்த பத்மநாபஸ்வாமி கோவில் வைக்கம் கோவில் முதலிய ஆலயங்கள் பக்தர்களான எல்லா ஹிந்துக்களுக்கும் பொதுவாகையால் ஆலயப்ரவேச உத்திரவு மற்ற பக்த ஹிந்துக்களுக்கும் மத ஆசாரப்படி தொழுவதற்கு உள்ள சாஸ்திர முறைப்படி அவ்வாலயங்களில் உள்ள உரிமைகளை பாதிப்பதால் ஷை உத்திரவை ரத்து செய்ய வேண்டுமாய் மஹாராஜாவை இந்த ஸமிதியானது வேண்டிக்கொள்ளுகிறது.

4. இந்தியாவில் உள்ள பத்ரிகைகள் ஆலயப்ரவேசம் முதலிய தர்ம விஷயங்களில் பக்ஷபாதமாக புரட்சி ஏற்படும்படி செய்து வரும் ப்ரசாரத்தை இக்கூட்டம் ஏகமனதாக எதிர்க்கிறது.

5. எல்லாவூர் சநாதனிகளும் ஆலயப்ரவேசத்தை பலமாக கண்டித்து தீர்மானிப்பதுடன் சட்டசபை அபேக்ஷகர்களிடம தர்ம விஷயங்களில் எதிராக தலையிடாமல் இருப்பதற்கு வாதாடி உறுதிமொழி வாங்கவேண்டும் என்று இச்சபை தீர்மானிருக்கிறது.

6. சென்னையில் ஸநாதன தர்ம மகாநாடு நடப்பதைப்பற்றி இக்கூட்டம் சந்தோஷிப்பதுடன் அம் மகாநாடு நன்கு நடைபெற எல்லா ஆஸ்திகர்களும் பூர்ணமாய் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

முடிவில் வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது. நமது நிருபர்.

திருவிசநல்லூர்.

1937 வருஷம் ஜனவரி மாதம் 26 தேதி அன்று கும்பகோணத்தைச்சேர்ந்த திருவிசநல்லூர் மணஞ்சேரி இந்த கிராமங்களிலுள்ள சநாதனிகளின் கூட்டம் ஒன்று திருவிசலூர் அய்யர்வாள் மடத்தில் மாலை $4\frac{1}{2}$ மணிக்கு நடைபெற்றது. ஷை இரண்டு கிராமங்களிலும் உள்ள ஆஸ்திக மகாஜனங்கள் யாவரும் விஜயம் செய்திருந்தார்கள். பிரம்மஸ்ரீ சுப்பராயபாகவதர்கள் அவர்கள் அக்ராசன பதவியை ஏற்றுக்கொண்டார். அக்ராசனர் ஆலயங்களில் அவர்கள் ப்ரவேசிப்பது இந்து மதாசாரத்திற்கு விருத்தமென்று முகவுரை சொன்னபிறகு பிரம்மஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள் ஆலய பூஜையினுடைய அவசியத்தைப்பற்றியும் அதில் ஏன் அவர்கள் ப்ரவேசிக்ககூடாது என்பதையும்பற்றி விசேஷமாக உபன்யஸித்து ஷை கூட்டத்தில் கண்டனத் தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டன.

பிறகு இவ்வூர் வைத்தியம் பாலகிருஷ்ண அய்யர் அவர்களால் ஸநாதனதர்மத்தின் தற்கால மாறுதல்களுடைய குணதோஷங்கள் விவரமாய் உபன்யஸிக்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் சபை இனிது முடிந்தது.

பெனுகல்லு.

விசாகப்பட்டனம் ஜில்லாவைச்சேர்ந்த, பெனுகொல்லு என்னும் கிராமத்தில், நிகழும் ஜனவரி-மீ 28உ சாயங்காலம் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டம் திருவாங்கூரில் ஆலயபிரவேசத்திற்கு தீண்டக்கூடாதவர்களை, உரிமை அளித்து, மேற்படி ஸமஸ்தானத்தின் மஹாராஜா உத்திரவு பிறப்பித்ததுபற்றி கண்டிப்பதற்கு கூட்டப்பட்டது. அப்போது பண்டிட் இந்திரகண்டி வெங்கடாவதானுலு சாஸ்திரிகள் தலைமை வகித்தார். பிறகு பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இக்கூட்டம் ஸமீபத்தில் திருவாங்கூர் மஹாராஜா அந்த ஸமஸ்தானத்தில் தீண்டாதவர்களை ஆலயங்களில் அநுமதித்து விடுத்த அறிக்கையை சாஸ்திர விருத்தமென்றும் அது அகில இந்தியாவிலுள்ள ஹிந்துக்களையும் பாதிப்பதாகவும், அதை சீக்கிரத்தில் மேற்படி ஸமஸ்தானத்தின் மஹாராஜா உடனே ரத்து செய்துவிட வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

2. இக்கூட்டம் மேன்மைதங்கிய வைஸ்ராய் பிரபுவை மேற்கூறிய திருவாங்கூர் ஆலயப்ரவேச அறிக்கையையும் சாரதா சட்டம் எனப்படும் Child Marriage Restraint சட்டத்தையும் ரத்துசெய்ய உடனே முயற்சிசெய்யவேண்டும் என்று பிரார்த்தித்து கொள்கிறது.

3. இக்கூட்டம் அக்ராஸனரை மேற்படி இரண்டு தீர்மானங்களையும் திருவனந்தபுரம் மஹாராஜாவுக்கும், மேன்மைதங்கிய இந்தியா வைஸ்ராய்க்கும், அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறது.

தீர்மானங்களை ஒரு பிரார்த்தனை ரூபமாக செய்து திருவாங்கூர் சமஸ்தான பதவிக்கும் வைஸ்ராய்க்கும் அனுப்பப்பட்டது.

ஒரு நிருபர்.

பம்பாய்.

பம்பாய் மாதவபாக்கில் 3உ யன்று திருவாங்கூர் உத்திரவைக் கண்டிக்கவும், எலெக்ஷனில் ஸநாதநிகளை ஆதரிக்கவும் ஸநாதனிகளின் கூட்டம் ஸ்ரீமான் தேவநாயகாசாரியரின் தலைமையில் நடைபெற்றது. காங்கிரஸ் வாதிகள் சிலர் கூட்டத்தில் குழப்பமுண்டுபண்ண முயற்சித்தனர். ஆயினும் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் ஒழுங்காக நடந்துமுடிந்தது. திருவாங்கூர் கோவில்களுக்கு ஸம்ப்ரோக்ஷணம் செய்யும் வரையில் ஜாதி ஹிந்துக்கள் ஒருவரும் அக்கோவில்களுக்குப் போககூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வெதுர்பார்த்தி விசாகப்பட்டணம்.

31—1—1937ல் விசாகப்கட்டணம் ஜில்லா வெதுர்பார்த்தி கிராமத்தில் பிரம்மஸ்ரீ வராஹ நரசிம்மலுகாரு அவர்கள் தலைமையில் சநாதனிகளின் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கிராஸனர் தம் முகவுரையில் ஹிந்துமதத்தின் மேன்மையைப்பற்றி விஸ்தாரமாய்பேசியபின் திருவாங்கூர் மஹாராஜா அவர்களின் ஆலயப்பிரவேச பிரகடனம் ஆகம சாஸ்திர விதிகளுக்கு முரண்பட்டதென்றும், ஹிந்து ஸமூஹத்திற்கே பெருத்த நஷ்டத்தை உண்டாக்கக்கூடியதென்றும் மஹா புகழ்பெற்ற ஸ்ரீ அனந்தபத்மநாபஸ்வாமி கோவிலும் வைக்கம் சுப்பிரமணியஸ்வாமி கோவிலும் இந்த பிரகடனத்தில் கட்டுபட்டதாகிவிட்டதென்றும் கண்டித்தும் அதை உடனே ரத்துசெய்யவேண்டுமென்றும் ஹிந்து ஸமூஹத்தின் தனிப்பட்ட உரிமைகளை பாதிக்கக்கூடியதாயிருக்கிற சாரதாசட்டத்தையும் ரத்துசெய்யவேண்டுமென்று ராஜபிரதிநிதி அவர்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின. சநாதன தர்மத்திற்கு யாதொரு இடையூறும் நேரிடாதபடி எல்லாம் வல்ல இறைவனைக் குறித்து பிரார்த்தனைக்கு பிறகு சபை இனிது கலைந்தது.

ஒரு நிருபர்.

அனந்தபூர்.

31—1—37 ஞாயிற்றுக்கிழமை மாலை இந்நகருக்கு விஜயம் செய்திருக்கும் உடுப்பி ஸ்ரீ அசேஷாப்ப தீர்த்த ஸ்வாமிகள், பல ஆஸ்திகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி கோவிலில் அத்வைத விசிஷ்டாத்வைதங்களைப்பற்றி விரிவாக பேசியும் வேதங்கள் ஸ்மிருதி புராணங்கள் தர்மங்கள் ஆகம சாஸ்திர விதிகள் இவைகளிலிருந்து சுலோகங்களை எடுத்துச்சொல்லி தீண்டாதவர்கள் ஆலயபிரவேச பிரச்னையை கண்டித்து கர்பகிருஹத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்தியை முதல் நான்கு வர்ணத்தார்களும் தரிசிக்கலாமென்றும் அவர்களுக்கும் முறைகளும் கட்டுப்பாடுகளும் உண்டென்றும் அவைகளுக்கு கட்டுப்பட்டே தரிசிக்கலாமென்றும் கோட்பாடுகளை தெளிவாக விவரித்து பிரசங்கம் செய்தார்கள். இந்த பிரசங்கத்தில் ஆலயப்பிரவேச பிரச்னையே யில்லாமல் செய்ய தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பொதுஜனங்களிடையே உணர்ச்சி ததும்பியது.

ஒரு நிருபர்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச எதிர்ப்பு

சைதாப்பேட்டையில் ஸநாதனிகள் கூட்டம்.

மேற்கண்ட சங்கத்தின் ஆதரவில் சைதாப்பேட்டையில் நாளது ஜனவரிமீ 31௳ ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பிராம்மணத்தெரு ஸ்ரீசௌந்தரேஸ்வரஸ்வாமி ஆலயத்தில் ஒரு பெருங்கூட்டம் நடைபெற்றது. அநேக ஆஸ்திகர் வந்திருந்தனர். ஸ்ரீமான் ஆர். வரதாச்சாரியாரவர்கள் பி. ஏ. எல். டி. தலைமை வஹித்தார். சைதாப்பேட்டை ஸ்ரீஸத் வித்யாபாடசாலையின் மாணவமாணவிகள் இனிய கீதத்துடன் கடவுள் வாழ்த்தாக திருநெடுந்தாண்டகப்பாக்கள் பாடினர்.

தலைவர்முன்னுரையில் ஸநாதனதர்மத்தின் சீர்மையையும், எக்காலத்தும் எவராலும் அழியப்படாத அதன் நீர்மையையும், தற்காலத்திய தர்மசங்கடங்களையும் எடுத்துக்கூறி இப்பொழுது சுதர்மாக்ஷணத்துக்குப் பாடுபடுவதே உத்தமமான கைங்கரியம் என்றும், அவர்ணர்கள் ஆலயப்பிரவேசம், மதவிரோத மசோதாக்கள் மிகுந்த பரபரப்பை உண்டாக்கி இருப்பதாகவும் அவற்றை நன்கு ஆலோசித்து சபையார் தீர்மானங்கள் செய்யவேண்டுமென்றும் கூறினர்.

பண்டித ஸ்ரீநிவாஸதாதாசாரியாரும் ஸ்ரீமான் திருமலை அய்யங்காரும் பேசியபின் திருவிதாங்கூர் மஹாராஜா விடுத்த ஸ்ரீமுகம் இதுகாறும் நடைபெற்றுவந்த ஆசார அநுஷ்டானங்களுக்கும் ஆகமசாஸ்திரங்களுக்கும், இதுவரை அநுட்டானத்திலிருந்து வந்த சட்டதிட்டங்களுக்கும் ஆலயங்கள் எதற்காக எந்த ரீதியில் நிர்மாணஞ்செய்யப்பட்டு நடந்துவருகிறதோ அதற்கும் விரோதமாகவும் ஆக்ஷேபகரமாகவும் இருக்கிறதென்றும், அசெம்பிளியில் மசோதா முதலியது கொண்டுவந்து அதன்பேரில் ஆக்டுகள்மூலம் இம்மாறுதல்கள் செய்யவேண்டியிருந்தும் அப்படிக்கூடச் செய்யாமல் மஹாராஜா யதேச்சாதிகாரமாக விளம்பரம் விடுத்தது முற்றிலும் ஒப்பத்தகுந்ததல்லவென்றும், திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஸ்ரீ அனந்தபத்மநாபஸ்வாமி ஆலயம் போன்ற பல கோயில்கள் அகில இந்தியருக்கும் பொதுவானதால், அவர்கள் சம்மதத்தையும் கவர்ன்மெண்டு அநுமதியையும் பெறாது இங்ஙனம் மஹாராஜா விளம்பரம் விடுக்க யோக்யதை அற்றவர் என்று தீர்மானிக்கிறதாகவும், வருகிற எலக்ஷனில் சநாதனதர்மத்தை ரக்ஷிப்பதாக உறுதிமொழி கொடுப்பவருக்கே ஓட்டுக்கொடுக்க வேணும் என்ற தீர்மானங்களை ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாஸவாதாச்சாரியாரவர்கள் பிரேரேபித்தார். ஸ்ரீமான் பஞ்சாக்ஷரம் செட்டியாரவர்களும், யம். நடேசய்யரவர்களும் தீர்மானங்களை முறையே ஆமோதித்தும், ஆதரித்தும் நன்கு பேசினார்கள். சபையோரால் ஏகமனதாய் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யரவர்கள் பின்னர் பேசுகையில் சநாதனி அபேக்ஷகராக நிற்பவர்களுக்கு ஓட் முதலிலும் கிரமமான உறுதிமொழிகொடுப்போருக்கு அடுத்தபடியாகவும் கொடுக்கவேண்டுமென்றும் தருமமே சிறந்ததென்றும் நன்கு விளக்கினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் ஸ்ரீமான் சுதர்சநாசாரியாரவர்கள் வழங்கிய வந்தனோபசாரத்துடன் சபை பகல் 11மணிக்கு இனிது முடிவடைந்தது.

ப. ரா. திருமலை ஐயங்கார்.

(2ம் பக்கத்தொடர்ச்சி.)

இனும் மசோதாவை ஆதரித்தவர்களுக்கா வோட் ?

ஜஸ்டிஸ் கக்ஷியார் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் பல சட்டங்களை இயற்றிவைத்து விட்டார்களென்றும் மிராசுதார்களுக்கு நன்மை செய்யவில்லையென்றும் அவர்களுக்கு ஓட்கொடுக்கக் கூடாதென்றும் காங்கிரஸ்காரர்கள் கூச்சல்போடுகிறார்கள்

இவ்விஷயத்தில் காங்கிரஸமட்டும் ஒழுங்காக நடந்ததா? 50 லக்ஷம் பட்டதார்களின் உரிமையைப் பறித்து ஏழை மிராசுதார்வாயில் மண்ணைப்போடும் இனும்மசோதாவைக் காங்கிரஸ்வாதிகள் ஆதரிக்கவில்லையா? நஷ்டஈட்டுத்தொகை 2வருஷ வருமானமாக இருந்ததை காங்கிரஸ்மெம்பரான ஸ்ரீமான் ஸி. ஆர். ரெட்டி ஒருவருஷ வருமானக்குறைவில்லையா? ஜனசம்மதத்திற்கு விரோதமாயும், ஜன உபத்திரவகாரியுமான சட்டத்தைச்செய்ய காங்கிரஸ்மட்டும் பின்வாங்குமா? மற்ற கக்ஷிகளைவிட காங்கிரஸுக்கு என்ன நேர்மையுள்ளது? ஓட்டர்களிடம் இது சலுகை கொண்டாட நியாயமென்ன?

சேங்காலிபுரம் ஆஹிதாக்னி ஸமாஜம்.

தாது-ஸு தை-மீ 24௳ சேங்காலிபுரம் ஆஹிதாக்னிகளின் ஒரு கூட்டம்கூடியது. ஷை கூட்டத்தில் பிரும்மஸ்ரீ நாராயணஅக்னிசித்வாஜபேயி அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள் அப்பொழுது பிர்மஸ்ரீ ஸௌதகேஸரீ அய்யாதீக்ஷிதர் அவர்கள் பிர்மஸ்ரீ சுப்பராம தீக்ஷிதரவர்கள் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்கள் முதலியவர்கள் திருவாங்கூர் ஆலயப்பிரவேசம், சாஸ்திரம், ஆசாரம் இவைகளுக்கு விரோதமென்றும் நம்போன்ற ஆஸ்திகர்களுக்கு ஸ்ரீ பத்மநாபஸ்வாமியின் ஸன்னிதியில் செல்லமுடியாமல் நேர்ந்திருப்பதையும் வருந்தி சீக்கிரத்தில் மஹாராஜா அவர்கள் அந்த உத்திரவை மாற்றவேணுமென்று தீர்மானித்தார்கள்.

கல்லிடக்குறிச்சியில் பிரஸித்தமாக விளங்கியவர்களும் வேதம் ச்ரௌதம் தர்மம் சாஸ்திரம் அனுஷ்டானம் இவைகளில் வசிஷ்டருக்கு ஒப்பானவர்களும் தன் புத்ரர்களையும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களையும் அனுஷ்டிக்கும்படி செய்வித்தவர்களுமான பிரும்மஸ்ரீ யஞ்ஞதீக்ஷிதர் அவர்களுடைய பாகநிலையை உத்தேசித்து வருந்துவதாயும் அவர்களுடை குடும்பத்துத்துன்பங்களுக்கு தங்கள் அனுதாபத்தை தெரிவிப்பதாயும் பேசினார்கள்.

சூரியநாராயண தீக்ஷிதர்.

தேவகோட்டை.

தேவக்கோட்டை ஹிந்து மத்திய கமிட்டியின் ஆதரவில் 3—2—37 யன்று வக்கீல் ஸ்ரீமான் S. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் தலைமையில் சநாதன ஹிந்துக்கள் ஓர் பொதுக்கூட்டம் கூட்டினர், அது காலை ஷை திருவாங்கூர் சமஸ்தானத்திற்குட்பட்ட சகல ஹிந்துக் கோவில்களிலும் வைக்யம் ஸ்ரீ மஹாதேவர்கோவில், ஸ்ரீபத்மநாபஸ்வாமி கோவில் இவைகளிலும் தீண்டத்தகாதவர்கள் சென்று தரிசிக்க அனுமதியளித்த பிரகடனத்தை பண்டையகாலத்திய சம்பிரதாயங்களும் ஆகமசாஸ்திரத்திற்கும் விரோதமானதென்று சொல்லி கண்டித்தும் ஹிந்துமத வைதீக தர்மத்தையும் கோயில்களில் பகவத் சாந்நித்தியத்தையும் நிலைநிறுத்தி சநாதனதர்மத்தை ரக்ஷித்துவரும் கொச்சி மஹாராஜா அவர்களை

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க.)

WONDERFUL PREDICTIONS
AND
ACCURATE LIFE READING.

Simply write your questions clearly and send them on to us well packed in a cover. Correct replies are sent by next post. Answers to prashnas and annual Life reading are our specialities. please omit questions relating to theft and Gevernment. Kindly mark the exact time of your writing or of your birth and date

	Rs. As. Ps.		Rs. As. Ps.
FEES: 1 TO 4 QUESTIONS ...	2 0 0	1 YEAR LIFE READING IN 8 PERIODS ...	5 0 0
ABOVE 4, EACH QUERY ...	0 8 0	ANY SINGLE DHASA WITH 9 SUB-PERIODS	12 0 0

OPINIONS.

P. H. Sundaram Esq., B.A., B.L.,
Dt. Munsif Kulitalai, 7-12-36

"I am quite satisfied with the accuracy of your predictions and your remarkable grasp of the science".

M. N. Choudhury, Lt. col. I.M.S.,
Ag. Surgeon General Madras.

"You predicted that I would get Rs. 35,000/- I practically got the sum unexpectedly. Your predictions for the period are practically correct."

B. K. Chaturvedi Bar-at-Law Suratgar,
Dt. Judge, Bikaner State.

"Daibagya T. V. Jayarama Sastry of Teppakulam has been known to me for some time past and I can readily say that his predictions are both wonderful and accurate".

K. Kuppusami M.A., F.C.S.
Acct. General Madras.

"The accuracy of your predictions is marvellous. My transfer and promtion took place exactly on the day fixed by you".

Brihmasri T. V. Jayarama Satrigal, Director,
Venus Astrological Bureau, Teppakulam P. O. TRICHY.

சென்னை மாகாண ஸநாதநதர்ம மஹாநாடு.

நடவடிக்கை விபரம்.

என்றும் காணாத உத்ஸாஹத்துடன் சென்னைமாஹாண ஸநாதநதர்ம மஹாநாடு ஜனவரி 6௳ சனிக்கிழமை ஆரம்பமாயிற்று. கோயம்புத்தூர், பாலக்காடு, மதுரை, தேவக்கோட்டை, காரைக்குடி, திருச்சினாப்பள்ளி, கும்பகோணம், சீயாழி, ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் முதலிய மாஹாணத்தின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ப்ரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். வரவேற்புக்கமிட்டியினர் மிகவும் பலமானமுறையில் மஹாஸபை நடக்க ஏற்பாடு செய்திருந்தனர். குஜராத்தி வல்லபஸம்பிரதாயத்தைச் சேர்ந்த பல ப்ரமுகர்களும், தென்னிந்திய ப்ரமுகர்களும் மிகவும் ஒற்றுமையுடன் மஹாநாட்டை மிகவும் அழகாக நடத்தினர். மஹாஸபையின் விளம்பரங்கள் சென்னையின் எல்லா பாகங்களிலும் காணப்பட்டது. ஸநாதநதர்மத்தை ரக்ஷிப்பதாக அபேக்ஷகர்களிடம் உறுதிமொழி வாங்கவேண்டுமென்று கூறும் விளம்பர காகிதங்கள் நகரத்தில் ஒவ்வொரு சுவரிலும் ஒட்டப்பட்டிருந்தன. தவஜோத்ஸவ பங்களாவில் மஹாஸபைக்காக எலக்டிரிக்லைட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட விசேஷப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான தொண்டர் மஹாஸபையில் ஊழியம்புரிந்தனர்.

சனிக்கிழமை மாலை 4-மணிக்கு அக்ராஸநாதிபதி ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டது. ஊர்வலத்திலும், மஹாஸபையிலும் கலந்துகொள்வதற்காக நடுப்பகலிருந்தே நகரின் நாலா பாகங்களிலிருந்தும் ஏராளமாக மஹாஜனங்கள் வந்தவண்ணமாகவிருந்தனர் ஊர்வலத்தில் முதலில் நன்றாக அலங்கரிக்கப்பட்ட பகவானின் படம் காரில் வைக்கப்பட்டு முதலில் சென்றது. அடுத்த காரில் புருஷோத்தமதாஸ், கோகுல்தாஸால், அக்ராஸநர் ராவ்ஸாஹிப் N. நடேசய்யர் இவர்கள் மாலையிடப்பட்டு அழைத்துவரப்பட்டார், தலையில் சிகப்பு தலைப்பாகையுடன் குஜராத்தி மாணவத்தொண்டர்கள் அக்ராஸநர் காருடன் சென்றது மிக்க மனோஹரமாக இருந்தது. ஊர்வலத்தில் அடிக்கடி ஸநாதநதர்மத்திற்கு ஜே என்ற கோஷம் வானத்தைப் பிளந்தது. அபேக்ஷகரிடம் மதவிஷயமான உறுதிமொழி வாங்கக் கூறும் விளம்பர அட்டைகள் ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கில் காணப்பட்டன. வேதகோஷத்துடன் ஊர்வலம் பார்த்தஸாரதி வீதிவழியாகச் சென்று மஹாநாட்டுப் பந்தல்வாயில் முடிவுபெற்றது. பந்தல்வாயிலில் அக்ராஸநாதிபதி பூர்ணகும்பத்துடன் வரவேற்கப்பட்டார். வேதபாராயணத்துடன் ஸபை நடவடிக்கை ஆரம்பமாயிற்று. ப்ரதிநிதிகளும், விஸிட்டர்களும் ஆயிரக்கணக்காய் கூடியிருந்தனர். ஆரம்பத்தில் ஒரு பெண் தெய்வவணக்கம் செய்தாள். திருப்புகழ்மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அட்வோகேட் தேவாரத்திலிருந்து தெய்வவணக்கம் செய்தார். திவான்பஹதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் (வரவேற்புக் கமிட்டித் தலைவர்) விஜயம்செய்திருந்தும் அவர் படிக்கமுடியாமையால் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் அவர்கள் வரவேற்புப் பிரஸங்கத்தைப் படித்தார். ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள், ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகியசிங்கர்ஸ்வாமிகள், ச்ருங்கேரி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள், கோவர்த்தன பீடாதிபதி இவர்களுடைய ஸ்ரீமுகங்கள் படிக்கப்பட்டன. ராஜாஸபாபூஷண K. R. ஸ்ரீநிவாஸய்யங்கார், தேசபூஷண பிரஸந்நவேங்கடேச்வர ராயர், திவான்பஹதூர் S ஆராவமுதய்யங்கார் தேவதாஸ்தாக்ஷர் ஸ்ரீ புரோபஸர் நூர்கால் முதலியவர்களிடமிருந்து மஹாநாடு நன்கு நடைபெறவேண்டுமென்று வந்துள்ள செய்திகள் படிக்கப்பட்டன. T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் மதுரை, ராவ்ஸாஹிப் N. நடேசய்யர் அவர்களை அக்ராசனத்திற்குப் பிரேரேபித்தார். C. நரஸிம்மாசாரியார், டாக்டர் சங்கரநாராயணய்யர் இவர்கள் இதை ஆமோதித்தனர். பலத்த கரகோஷத்துடன் அக்ராஸநாதிபதி மாலையிடப்பட்டு மேடைமீது வரவேற்புக்கமிட்டித் தலைவருடன் அமர்ந்தார். அக்ராஸநர் ஸுமார் 2 மணி தமது பிரஸங்கத்தை இங்கிலீஷில் செய்தார். மிகவும் ஆழ்ந்த கருத்துள்ள இப்பிரசங்கத்தை மஹாஜனங்கள் மிகப் பொருமையுடன் கேட்டுவந்தனர்.

இத்துடன் இரவு 8 மணிக்கு மஹாஸபை கலைந்தது. இரவு 9 மணிக்கு ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யரின் ராயப்பேட்டை லலிதாவிலாஸம் பங்களாவில் விஷயாலோசனைக்கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது. பல ப்ரதிநிதிகள் விஜயம்செய்திருந்தனர். காங்கிரஸின் ராஜீயக்கொள்கையை ஒத்துக்கொள்வதில் உக்ரமாக விவாதம் நடைபெற்றது இரவு 2 மணி வரை கூட்டம் நடைபெற்று தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மறுபடியும் மஹாஸபை ஆரம்பமாயிற்று. அதிகாலையிலிருந்தே பந்தலில் ஏராளமாக மஹாஜனங்கள் கூடிவிட்டனர். மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வெ. ஸாமிநாதய்யர் அவர்களும் இன்றும் விஜயம்செய்திருந்தனர். ஸநாதநதர்மத்தைப் புகழ்ந்து வைதேஹி விஜயாகவன் என்ற பெண்ணால் பாட்டுப் பாடப்பட்டது.

பிறகு தீர்மானங்கள்மீது விவாதம் ஆரம்பமாயிற்று.

முதல் தீர்மானம் பின்வருமாறு:—

திருவாங்கூர் அரசரின் அறிக்கை ஆகமசாஸ்திரங்களை அநுஸரித்து ஏற்பட்டுள்ள தேவாலய வழக்கத்தின் வேறை அறுப்பதாகவிருப்பதால் அவ்வறிக்கையை இம் மஹாநாடு பலமாக கண்டிக்கிறது.

ஷை அறிக்கை சட்ட விரோதமானதென்றும், சாஸ்த்ரமுறைக்கு முரண்பட்டதென் அரசியல் சட்டத்திற்கு புறம்பானதென்றும் ஸாதாரணந்யாயத்திற்கு ஒவ்வாததென்றும் இந்த மஹாஸபை அபிப்ராயப்படுகிறது. ராஜ்த்திற்கு உள்பட்டும் வெளிப்பட்டும் உள்ள ஸநாதநிகளின் பலத்த உணர்சியை மதித்து ஷை அறிக்கையை வாபீஸ் வாங்கக் கோருகிறது.

ஷை அறிக்கை ரத்தாகும் முறையில் சட்ட மூலமாக நடவடிக்கை எடுக்க சட்ட அறிவாளர்களின் அபிப்ராயத்தைக் கேட்க கார்யக் கமிட்டிக்கு இக்கூட்டம் பூர்ண அதிகாரமளிக்கிறது.

இம் மஹாநாடு தங்களுடைய ஆதிக்கத்திலுள்ள கோவில்களில் திருவாங்கூர் போல் சீர்திருத்தம் செய்யாது ஸநாதநிகளின் மதஉரிமைகளை காப்பாற்றியதற்காகக் மைஸூர் மஹாராஜா, மைஸூர் மஹாராஜாவின் கவர்ன்மெண்ட், கொச்சி மஹாராஜா, ஸேது லக்ஷ்மிபாய்(திருவாங்கூர் ஸீனியர் மஹாராணி) கள்ளிக்கோட்டை ஜாமோரின் இவர்களுக்கு தாங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறது.

இத் தீர்மானத்தை கோயம்புத்தூர் அட்வோகேட் R. சங்கரநாராயண அய்யர் பிரேரித்தார். N. ஸ்ரீநிவாஸசாரியார் (மாஜி தேவஸ்தானக் கமிஷனர்) கடப்பை ஸ்ரீ லக்ஷ்மி அம்மா, அட்வோகேட் நரஸிம்மாசாரியர் V.K. கிருஷ்ணமாசாரியர் காஞ்சி ராமச்சந்திர சர்மா, K. V. சர்மா இவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது. T. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அட்வோகேட் அவர்கள் கொண்டுவந்த திருத்தம் மஹாஸபையில் ஆதரிப்பாரில்லாததால் கைவிடப்பட்டது. கீழ்கண்ட இரண்டாவது தீர்மானத்தை தேவகோட்டை அட்வோகேட் S. ஸுப்பிரமணிய அய்யர் பிரேரித்தார்.

"மத ஆசார மதாசார ஸம்ப்ரதாயமான சட்டங்களை சட்டசபையில் கொண்டுவருவதில்லை என்றும், வேறு யாராவது இவ்வித தீர்மானங்கள் கொண்டுவந்தால் அவைகளையும் எதிர்பதாகவும் உறுதிமொழியைக் காங்கிரஸ்காரர்கள் அளித்தால் இம்மாகாணத்தில் முழுவதுமுள்ள ஸநாதநிகள் மட்டும் ராஜீயக்கொள்கை ஸம்மந்தப்பட்டமட்டில் காங்கிரஸை ஆதரிப்பதென்று உறுதிமொழி அளிக்கிறது."

மேலும் மதஸம்மந்தமாகவும் மதாசாரஸம்பந்தமாகவும், பூர்ணசுயேச்சை அளிக்கத் தவறிவிட்டதால் புதிய சீர்திருத்தச்சட்டத்தை இக்கூடம் ஏற்கமறுக்கிறது.

அட்வகேட் டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், மயிலை அட்வகேட் Y. ஜயராமய்யர் திருச்சி ஸ்ரீமான் டவாய் ராமநாத சாஸ்திரியள் இவர்கள் ஆதரித்துப் பேசின தீர்மானத்தை ஓட்டுக்கு விடப்பட்ட பொழுது அக்ராஸநாதிபதி காங்கிரஸ் மஹாஸபை பிரஸிடெண்ட் பண்டிட்ஜி இடமிருந்து மதாசார ஸம்பந்த விஷயங்களில் மெஜாரிட்டிப்படி நடப்போம் என்று எழுதப்பட்டு வந்திருந்த கடிதம் படிக்கப்பட்டது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றது.

ஸநாதநதர்மத்தை பிரசாரம்செய்ய கிராம, நகர, தாலூகா, ஜில்லா ஸங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறதென்ற தீர்மானத்தை தர்மபிரசார கமிட்டி மெம்பர், மாஜி இன்ஜினீர், கும்பகோணம் சாமிநாத சாஸ்திரிகள் பிரேரித்தார், அக்நிஹோத்ரம்ராமாநுஜதாதாச்சாரியார், ராமராவ் கும்பகோணம் இவர்கள் ஆதரித்துப்பேசு தீர்மானம் நிறைவேற்று.

"சீர்திருத்தக்காரர்களாலோ மற்றவர்களாலோ மத மதாசாரங்களால் எதிர்ப்பு ஏற்பட்டால் சட்டம் செய்ய முயற்சிசெய்யப்பட்டாலும் அதைத் தவிர்த்து நிற்க இந்த மஹாஸபை கூட்டியவர்கள் சென்னைமாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்த இக்கூட்டம் அதிகாரமளிக்கிறது. இதற்காக ஒரு லக்ஷம் ரூபா பண்டு வேண்டுமென்றும் மடாதிபதி முதலியவர்கள் தானமாக இதற்கு உதவவேண்டுமென்றும் இம்மஹாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. இந்த மாஹாண ஸங்கத்திற்கு, மதுரை ராவ்ஸாஹிப் நடேசய்யர் தலைவர், திவான் பஹதூர் கோவிந்ததாஸ், சதுர்புஜதாஸ், புருஷோத்தம

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க).

புதுமாதிரி கால் செயின், கொலுசு தினுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-ஸூ தை-மீ 29உ

ஸநாதனதர்ம மஹாநாடு.

சென்னையில் ஸநாதன தர்மிகளின் மஹாநாடு சிறப்பாக நடந்து பூர்த்தியடைந்ததைப் பற்றி ஸந்தோஷிக்கிறோம். சென்ற இரண்டு வருஷகாலமாக உறங்கிக்கிடந்த ஸநாதந இயக்கமானது இந்த மஹாநாடு மூலம் புத்துயிர் பெற்றுப் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டதென்று நினைக்கிறோம். நமது எதிரிகளும் இம் மஹாநாடு மூலமாகத் தங்களுடைய போக்கைப்பற்றிச் சிந்திக்கவேண்டியவர்களாயிருப்பார்கள். மஹாநாட்டைக் கூட்டியவர்கள் ஸ்வல்ப அவகாசத்திலேயே மிகுந்த பலனைக் கொடுக்கக்கூடிய வழியில் இதை ஸாமர்த்தியமாக ஸாதித்திருக்கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை. அவர்களுடைய பிரசார சிரத்தையால் இம்மஹாநாட்டின் செய்தி எங்கும் மூலை முடுக்குகளில்கூட பரவும்படி செய்யப்பட்டிருக்கிறது. ஸநாதனதர்மத்தை அலக்ஷ்யம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர்கள்கூட இந்த மஹாநாட்டின் நடவடிக்கைகளை சிரத்தையுடன் கவனித்துப் பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. மாகாணத்திலுள்ள பிரபல பத்திரிகைகள் இந்த மஹாநாட்டைப்பற்றி பிரசுரிக்கவும் அபிப்பிராயமெழுதவும் உதவியதன் மூலம் மிகுந்த பிரயோஜனமேற்பட்டிருப்பதில் ஸந்தேஹமில்லை. இந்த வழியில் மஹாநாட்டைக் கூட்டியவர்கள் நமது இயக்கத்திற்குப் புதிய உணர்ச்சியும், புதிய பலத்தையும் உண்டுபண்ணிவிட்ட விஷயத்தில் அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டியது அவச்யமாகும்.

உபசாரணைத்தலைவரான திவான் பஹதூர் கோவிந்தாஸ் சதுர்ப்புஜதாஸ் அவர்களைப் பற்றி நாம் நமது வாசகர்களுக்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை. அவர் பெரிய தனவானாக இருப்பதுடன் அந்தரங்க பூர்வகமாக மதபக்தி நிறைந்தவர். ஸநாதனதர்மபிரசாரத்திற்கு அவர் இதுவரைச் செய்துள்ள உபகாரங்களும் அதிகம். இவர் தமது வரவேற்பு பிரஸங்கத்தில் பல முக்யவிஷயங்களை குறிப்பிட்டுள்ளார். திருவாங்கூர் ஆலயப்பிரவேச உத்திரவைப்பற்றி இவர் வெகு திறமையாகக் கண்டித்திருப்பதும் மெச்சத்தக்கதாயிருக்கிறது. திருவாங்கூர் யதேச்சாதிகாரத்தைக் காங்கிரஸ்வாதிகள் ஆதரிப்பதுபற்றி இவர் அசைக்கத் திருப்பமுடியாத வழியில் அவர்களுடைய பிழைகளையும் முரண்பட்ட கொள்கைகளையும் காட்டியிருக்கிறார்.

காங்கிரஸ் வாதிகள் ஜனநாயகத்தை விரும்புகிறார்கள் அதற்காகவே பாடுபடுகிறார்கள். யதேச்சாதிகாரத்தால் பொதுஜன உரிமையைப் பாதிக்கக்கூடாதென்று கூச்சல் போடுகிறார்கள். லார்டு வில்லிங்டன் ஒன்றன்பின் ஒன்றாகப் பல அவசரச்சட்டங்களை இயற்றியகாலத்தில், உலகத்தார் இந்த அநீதியைக்கண்டிக்க முன்வரவேண்டுமென்று ஓலமிட்டார்கள். புதிய அரசியலில் கவர்னர்களுக்கு விசேஷ அதிகாரம் கொடுத்திருப்பது அபாயமென்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இத்தகைய காங்கிரஸ்வாதிகள், திருவாங்கூர் அரசர் பொதுஜனங்களைக் கேளாமலும், சட்டஸபையைக் கலக்காமலும், கேவலம் யதேச்சாதிகாரத்தால் பிறப்பித்த ஓர் அவஸரச்சட்டத்தைப்போன்ற அபாய உத்திரவைமட்டும் மெய்மறந்து கொண்டாடிக் கூத்தாடுவது என்ன ஜனநாயகத்தில் சேர்ந்ததென்று உபசாரணைக்கமிட்டித்தலைவர் கேட்பதற்கு எவ்வளவு பாடுபட்டாலும் காந்திஜியால்கூட பதில் கூற முடியாது பெரும்பாலோரான ஆஸ்திகர்களுடைய உரிமையை நிர்ப்பந்தம் அல்லது பலாத்காரமுறையில் த்வம்ஸம் செய்யும் இந்த யதேச்சாதிகாரத்தை ஆதரிக்கும் காங்கிரஸ் வாதிகள் ஒரு நிமிஷம்கூட இனி தங்களை ஜனநாயகப் பிரியர்களாகச் சொல்லிக்கொள்ள அர்ஹதையற்றவர்களென்று சொல்லத் தடையுண்டோ? இவர்களுடைய கூச்சல் யாவும் வெறும் வேஷமென்று வெளிப்படவில்லையா? இம்மட்டுமில்லை. சாரதாச்சட்டத்தை இவர்கள் செய்ததன்மூலம் பிரஜைகளின் சரீரஸ்வதந்திரத்தையும், மனஸ்ஸாக்ஷி உரிமையையும் எவ்வளவுதூரம் நாசமாக்கிவிட்டார்களென்பதும் கவனிக்கத்தக்கதே. மத ஸம்பந்தமான விவாஹதர்மத்தை அநுஷ்டிக்கும் ஸாத்விகர்களை ஜயிலில் போடவும், அபராதமூலமாக அவர்களின் பணத்தைப்பறித்து ஸர்க்கார் பொக்கிஷத்தை நிறப்பவும் துணிந்தவர்கள் ஸ்வதந்திரப் பிரியர்களென்று தங்களை வர்ணித்துக்கொள்ளத் தலைகுனியவேண்டாமா?

மஹாநாட்டின் தலைவர் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் கர்மவீரர். அஞ்சாநெஞ்சத்துடன் தாக்ஷிண்யமின்றி தர்மத்தை ஆதரித்து நிற்பவரென்பது யாவரும் அறிந்ததே. அவர் தமது தலைமைப்பிரஸங்கத்தில் பல அரிய விஷயங்களை வெளியிட்டிருக்கிறார். கம்பீரமான நடையும், மிகுந்த அர்த்தபுஷ்டியும், சிறந்த நியாயவாதமும், முதிர்ந்த அநுபவமும் உண்மையும் நிறைந்த அவருடைய பிரஸங்கமானது ஸநாதனிகளைப் போல் நமது எதிரிகளுடையவும் மனதில் ஊடுருவிப்பாயும் தன்மை வாய்ந்ததாய் இருக்கிறது. சீர்திருத்தவாதிகள் கூட இவருடைய கக்ஷி நியாயங்களை எளிதில் புறக்கணித்துவிடமுடியாது. தேசத்தில் வியாபாரப் பொருளாதாரம் மந்தம் வேலையில்லாத் திண்டாட்டம், முதலிய ராஜீய நெருக்கடியைப்போல் ஸமூக நெருக்கடியும் அதிகரித்துவிட்டதை அவர் குறிப்பிட்டு மேற்றிசைப் படிப்பினாலும், நாகரிகத்தாலும் இந்தியாவில் தாய், தந்தை, குடும்ப தர்மம் இவைகளின் மரியாதை அழிந்து வருவதாயும் இந்த அதிக்ரமங்களை ராஜீயவாதிகள் போஷித்து வருவதாயும், ஸ்வதர்மத்தையும் ஸ்வாபிமானத்தையும் இழந்த இந்த ஸ்வராஜ்யம் நமக்கு வேண்டியதில்லை என்றும் ஸ்வதர்மமே நமக்குப்பெரிதென்பதையும் தெளிவாக்கியிருக்கிறார். வர்ணாச்ரம தர்மங்களை அநுஷ்டிப்பதில் சிரமமிருப்பது வாஸ்தவமாயினும் அதற்காக அதை விடமுடியாதென்றும், உலகில் ராஜீயம், வியாபாரம் முதலிய எந்தப் பொதுக் காரியங்களிலும், கட்டுப்பாடும் வியவஸ்தையும் கஷ்டமும் மிகுந்திருப்பது ஸாதாரணமென்றும் அதற்காக அவைகளை நாம் விட்டுவிடவில்லை என்றும் அதுபோல் கட்டுப்பாட்டிற்கும் கஷ்டத்திற்கும் உள்பட்டாவது தர்மத்தை ஆதரிக்கவேண்டியது அவச்யமென்றும் ராஜ சக்ரவர்த்திக்கு நடக்கப்போகும் பட்டாபிஷேக ஸமயத்தில் கீழ்த்தரமனிதன் முதல் ராஜ குடும்பத்தினர் வரையில் அவரவர்களுடைய அந்தஸ்திற்கு ஏற்றவாறு கௌரவம் ஏற்படுத்தப்போவதை உணர்ந்தவர்களுக்கு இந்தியாவில் மனிதர்களில் ஏற்றத் தாழ்வு இருப்பதைப்பற்றிப்புகார் கூற நியாயமில்லையென்றும் எடுத்துக்காட்டுகிறார். இந்தியாவில் பொதுவுடைமை அபாயம் பரவாமல் தடுக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் தெளிவாக எடுத்துச்சொல்லி ஸநாதனிகள் உண்மையான சிரத்தையுடன் தர்மங்களை அநுஷ்டித்து வரவேண்டுமென்றும் தர்மாசரணம் குறைந்திருப்பதும் தற்போதைய துர்தசைக்கு ஓர் காரணமென்றும் எங்கும் பலமாக தர்மப்ரசாரங்களை நடத்தத்தக்க முயற்சி செய்ய வேண்டுமென்றும் பல அரிய அபிப்பிராயங்களைவெளியிட்டிருக்கிறார். தலைவர்களின் அபிப்பிராயங்களையும் மஹாநாட்டின் தீர்மானங்களையும் நமது மாகாண ஸநாதனிகள் கவனித்து அதன்படி கட்டுப்பாடான முறையில் எங்கும் தீவிரபிரசாரம் நடத்தத் துடங்கினால் சட்டசபைகளிலோ, வெளியிலோ நாம் நமது எதிரிகளுடைய அநீதிகளிலிருந்து தப்பித்துக்கொண்டு நமது தர்மங்களை நிர்பயமாக அநுஷ்டிக்கச் சக்தி பெறுவோம்.

குறிப்புகள்.

ஸ்ரீமான் ஸி. ரா ஆசாரியாரின் மழுப்பல்.

சென்னை சட்டஸபைக்கு அபேக்ஷகராக நிற்கும் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸி. ரா. ஆசாரியர் குடந்தை வக்கீல் சங்கத்தில் பேசினார். ஸநாதன அபிமானிகளாகிய ஸ்ரீமான்கள் எம். கே. வைத்தினாத அய்யர், ஜி. வி. வெங்கடராம அய்யர், கே. நரஸிம்ம அய்யங்கார் முதலியவர்கள் ஆச்சாரியாரை பல கேள்விகள்கேட்டார்கள். ஸ்ரீமான் ஆச்சாரியர் பதில் அளிக்கையில், தம்மைப் போன்ற உறுதியான ராஜீயவாதியாக ஒரு ஸநாதனி பிரமுகர் யாராவது அபேக்ஷகராக நிற்க முன்வந்தால் தாம் விலகிவிடத்தயாரென்று சொன்னாராம். மேலும் திருவாங்கூர் விளம்பரம் ஏற்பட்டுவிட்டதைக்கொண்டு எங்கும் ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று கேட்க நியாயமில்லையென்பதை தாம் அறிந்திருப்பதாயும், திருவாங்கூருக்கும் மற்ற விடங்களுக்கும் மிகுந்தவித்யாசமுடென்றும், காங்கிரஸானது பெரிய ராஜீய பிரச்னையொன்றையே முக்யநோக்கமாகக் கொண்டு சட்டஸபையில் பிரவேசிக்க முற்பட்டிருப்பதாயும் ஆகையால் விவாதத்திற்கு இடமான விஷயத்தில் அது இப்போது பிரவிர்த்திக்காதென்றும், தாமோ வேறு எந்த அபேக்ஷகரோ காங்கிரஸ் சார்பாக எவ்வித உறுதிமொழியும் கொடுப்பதற்கில்லையென்றும் தம் போன்றவர்கள் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவுகாட்டுகிறவர்களாயினும் தற்போது சட்டஸபையில் அரசியல் பிரச்னையே முக்யமாகக் கவனிக்கப்படுமென்றும் பதில சொன்னாராம்.

கராச்சி தீர்மானத்தின்படி மத நடுநிலைமை காங்கிரஸ் கொள்கையானால் ஏன் இவர் போன்றவர்கள் காங்கிரஸ் சார்பாக ஓட்டர்களுக்கு உறுதிமொழி கொடுக்கக்கூடாது. இதற்கு இவர் ஸம்மதியாததிலிருந்து சட்டஸபையில் ஸமயோசிதவேஷம் போடவே காங்கிரஸ் வாதிகள் நிச்சயித்திருப்பது விளங்கவில்லையா? ஆலய பிரவேச பிரச்னை இப்போதில்லையென்று இவர் மழுப்புவதை யார் நம்பமுடியும். மேலும் இவர் அங்கு சிலர் கேட்டதற்கு நேர் முகமான பதில் ஏன் சொல்லக்கூடாது? உண்டு, இல்லையென்று ஸ்பஷ்டமாக பேசாதது என்ன நேர்மை!" "உம்மால் கெடுதிநேருமென்று பயப்படுகின்றேன்" என்று ஒருவர் கேட்டால், இப்போது இதைக்கிளப்பவேண்டாம். நான் வேறு கார்யமாகவே இங்கு வந்துள்ளேன்,, என்கிறார் இவர் இத்தகையவர்களை எப்படி நம்ப முடியும்?

தவிரவும் சென்ற இந்தியா சட்டஸபை காலத்தில் இருந்தது போலில்லாமல், இப்போது இவருடைய பதிலும், போக்கும் அலக்ஷ்யம், பித்து, அஹம்பாவம் நிறைந்ததாயிருப்பதும் நம்மவர்களால் கவனிக்கத்தக்கது.

கலப்புவிவாஹ மசோதா கவிழ்ந்துபோயிற்று.

பகவான் தாஸின் கலப்பு விவாஹமசோதா இந்தியா சட்டசபையில் நிராகரிக்கப்பட்டு விட்ட நற்செய்தி ஆஸ்திகர்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கக்கூடியது. ஆசாரத்திருத்தக்காரர்கள் இந்த மசோதாவை ஆதரித்து ஆர்ப்பாட்டம் செய்தனராயினும் தேசத்தில் இந்த மசோதாவிற்கு உண்மையான எதிர்ப்பு இருப்பதை கவர்ன்மெண்டார் சிரத்தையுடன் அறிந்து இதை நிராகரித்ததுதான் இதில் விசேஷம். ஆரம்பத்தில் ஸ்ரீமான் பகவன்தாஸ் இந்த மசோதாவைக்கொண்டுவந்த ஸமயம், இது நிர்ப்பந்திக்கும் சட்டமல்லவென்றும் கலப்புவிவாக ருசியுள்ளவர்களுக்கு அதைச்செய்து கொள்வதில் இடையூறு இருக்கக்கூடாதென்பதுமே தமது நோக்கமென்றும் கூறினார். ஆனால் 4உயன்று இவர் முடிவாக்பதில் அளித்துப் பேசுகையில் தமதுகெட்ட நோக்கத்தை மறைவில்லாமல் சொல்லியிருப்பது முக்கியமாகக் கவனிக்கத் தக்கது

ஹிந்துக்களில் ஜாதி வியவஸ்தையானது பிறப்பினால் ஏற்பட்டதல்லவென்றும், அது குணகர்மங்களை அநுஸரித்து, தானாகவே ஏற்படுத்திக்கொள்ளக் கூடியதென்னும் கொள்கையை நிலைநிறுத்தவே இந்த மசோதாவை தாம் கொண்டுவந்ததாகச் சொன்னார். ஆகையால் சாஸ்திரமரியாதையை அழிக்கவும் ஜாதிநாசத்தைச் செய்யவுமே இவர் இக்கார்யத்தில் இறங்கினதாகக் கூசாமல் சொல்லிக்கொண்டார். இவரது நோக்கம் இதுதான் என்பதை நாம் அறியாமலில்லை. ஆயினும் இவர் தமது குரூர எண்ணத்தை ஆரம்பத்திலேயே கூறாமல் இப்போது வெளியிட்டதன் கருத்து என்னவோ? எப்படியும் ஸ்ரீமான் ஸர்க்கார் விழித்துக்கொண்டு இந்த மசோதாவுக்கிடம் கொடுக்க மறுத்தது பெரிய உபகாரமாகும்.

ஒரு ஹிந்து, ஒரு வெள்ளைக்காரியையோ, ஜப்பானிய ஸ்திரீயையோ, பஞ்சமஸ்திரீயையோ கல்யாணம் செய்துகொண்டு குடும்பத்திற்குவந்தால் இது பிடிக்காத குடும்பத்தினர் என்னசெய்வது? அவர்களுக்கு இது அருவருப்பாயிருப்பினும் சட்டப்படி அதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகிறார்கள். இது இந்த வகையில் நிர்ப்பந்தகாமான மசோதா தானென்று கனம் என். ஸர்க்கார் எடுத்துக் காட்டினார். பொது ஜனப்ரதிநிதிகளென்று வேஷம்போட்டு அங்கு வீற்றிருக்கும் சில அவ்யவஸ்தைக்காரர்களுக்கு மேற்கண்ட அபாயம் விளங்காமற் போனது விந்தையே. இவர்களுக்கு ஹிந்து ஸமூகத்தின் க்ஷேமத்தில் சிரத்தையுண்டா? இந்த துஷ்ட மசோதாவை அங்கு ஆதரித்துப் பேசிய காங்கிரஸ்காரர்களும் மற்றவர்களும் ஹிந்து ஸமூஹ ப்ரதிநிதிகளென்று பெயர் வஹிக்க அருஹதையுள்ளவர்களா? இந்த மசோதா விஷயத்தில் தீவ்ரமாக எதிர்த்துநின்று ஹிந்து ஸமூஹத்தையும், ஹிந்து தர்மத்தையும் காப்பாற்றிய கவர்ன்மெண்டாரிடம் ஆஸ்திகர்கள் எப்போதும் நன்றியுள்ளவர்களாயிருப்பார்கள்.

கார்ப்பரேஷனுக்கு ஸம்பந்தமென்ன ?

திருவாங்கூர் மஹாராஜாவுக்கு ஸாதாரண நிலைமையில் சென்னைக் கார்ப்பரேஷன் இது வரையில் உபசாரம் நடத்தியதில்லை, ஆனால் தற்போது அது ஆலயப்ரவேச விளம்பரத்தை முன்னிட்டு அவரை உபசரிக்க முன்வந்திருக்கிறது. காங்கிரஸ்காரர் கார்ப்பரேஷனில் புகுந்ததின் பலன்களில் இதுவும் ஒன்று போலும்? நகரஸபைக்கு எவ்விதத்திலும் அடியோடு ஸம்பந்தமில்லாத மத ஸமூஹச் சீர்திருத்த விஷமத்திற்கு, கார்ப்பரேஷன் ஆதரவு அளிக்க என்ன நியாயம் மெம்பர்கள் எலெக்ஷன் காலத்தில் சொல்லியதென்ன? நகர நன்மைகளை கவனிக்க ஏற்பட்ட ஸபையில் விவாதத்திற்கிடமான விஷயத்தைத் தீர்மானிப்பது என்ன நேர்மை? ஆள் பலமும், ஓட்டு பலமும் கிடைத்துவிட்டால் எந்த அநீதியையும் செய்துவிடலாமா?

ஜஸ்டிஸ் கக்ஷியார் மீது சீறி விழுந்த காங்கிரஸ் வாதிகள் என்ன நியாயமாக நடந்துவிட்டார்கள்? கக்ஷிபலம் ஏற்பட்டால் ஜஸ்டிஸை விட, காங்கிரஸும் அதிக்ரமம் செய்யுமென்பதற்கு இதைவிட ருஜு என்னவேண்டும்? சென்னை நகரவாஸிகளான வரிசெலுத்துவோர்களில் எல்லோரும் இதை ஒப்புகிறார்களா? லக்ஷக்கணக்கான வரி செலுத்துவோருக்கு இது பிடிக்காதென்பது கௌன்ஸிலர்கள் அறியாததன்றே? அப்படியிருக்க ஒரு பிரதிநிதி ஸபையை இம்மாதிரி நியாயமற்ற கார்யத்தில் ஸம்பந்தப்படுத்தும் காங்கிரஸ் வாதிகளின் ஜனநாயகவேஷத்தையும், நேர்மையையும் என்னென்று சொல்லுவது! ஜொந்த ஹோதாவில் அந்த மஹாராஜாவை கௌன்ஸிலர்கள் தலையில் தூக்கிக் கூத்தாடுவதை யார் தடுத்தார்கள்? எல்லாவிதக் கொள்கையுடையவர்களின் பிரதிநிதி ஸபையை இம்மாதிரி ஏகதேச கார்யத்திற்கு இழுத்து விடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. சென்னை வாஸிகள் இந்த உபசாரத்தில் தங்களுக்கு ஸம்மதமில்லையென்பதை வெளிப்படுத்துவது நியாயமாகும்.

ஸங்கேதமான ஆடம்பரம்!

ஆலயப்பிரவேச அபிமானிகளான காங்கிரஸ் வாதிகளும் வேறு சிலரும், திருவாங்கூர் மஹாராஜாவின் சென்னை விஜயத்தை ஸங்கேதமான முறையில் ஆடம்பரப்படுத்த முற்பட்டிருப்பதாகத்தெரிகிறது. இதன்மூலம் அந்த மஹாராஜாவுக்குத் தமது செய்கையில் திருப்தியேற்படச் செய்யவும் பிரிடிஷ் பிரதேசத்தில் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு தேடிக்கொள்ளவும் சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தலைவர்களான ஸி ரா, ஆசாரியரும், ஸத்யமூர்த்தியும் இந்த எலெக்‌ஷன் பிரசார மும்முறத்திற்கிடையில், திருவாங்கூர் மஹாராஜாவை வரவேற்கவும், உபசரிக்கவும், ரயில்வே ஸ்டேஷனில் கூட்டம் காட்டவும் பொதுஜனங்களை வேண்டிக்கொண்டு அறிக்கை வெளியிட்டனர். பத்திரிகைகளிலும் இவ்விஷயம் ஸங்கேதமாகப் பலப்படுத்தப்பட்டது.

சென்னையில் மஹாராஜாவுக்கு விசேஷ உபசாரங்கள் நடத்தவேண்டுமென்று திருவாங்கூரிலிருந்தே பலவிதத்திலும் தூண்டுகோல் ஏற்பட்டதாகச் சொல்லப்படுவதின் உண்மை எப்படியோ நாமறியோம். ஆயினும் சென்னையிலுள்ள பற்பல ஸ்தாபனங்களுக்கும் முன்னாடியே தூண்டுதல் ஏற்பட்டதென்ற விஷயம் ஒருவாறு நிச்சயமென்றே தெரிகிறது. திருவாங்கூர் மஹாராஜாவின் செய்கையை ஹிந்து ஸமூஹம் ஆதரிப்பது போலவும், அதன் மூலம் ஹிந்து ஸமூஹத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டதுபோலவும் காட்டுவதற்காகச் செய்யப்பட்ட பகட்டு வேலையேயல்லது இது வேறல்ல. ரஹஸ்யமறிந்தவர்கள் இந்த ஆடம்பரத்தைக்கண்டு கலங்கார். இது சீர்திருத்தவாதிகளின் சூழ்ச்சி நிறைந்த வெறும் ஆடம்பரமென்பதைப் பொதுஜனங்கள் அறிவர்! ஒருவரும் இதனால் ஏமாறமாட்டார் என்பது உண்மை. ஆடம்பரத்தால் உண்மையை மறைக்க முடியாது.

ஸநாதநதர்ம மஹாநாடு.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

தாஸ், கோகுல்தாஸ், மாஜி கமிஷனர் என். ஸ்ரீநிவாஸாசாரியர் இவர்கள் உபதலைவர்கள் ஹரிதாஸ், கிரிதர்தாஸ் டிரஸ்டிகள் T. S. ராமஸ்வாமி அய்யர், S. லக்ஷ்மீநரஸிம்மாசாரியார் இவர்கள் கார்யதர்சிகள். பல ஜில்லாக்களைச் சேர்ந்த செல்வாக்குள்ளதோர் கார்யக்கமிட்டியையும் இக்கூட்டம் நியமிக்கிறது."

இத்தீர்மானத்தை சாஸ்திரரத்ன தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரி பிரேரித்துப்பேசியபின் மஹோபதேசக ஸோமதேவசர்மா K. நடேச சாஸ்திரிகள், ரங்கநாதய்யர் இவர்கள் ஆதரித்துப் பேசினார்கள். தீர்மானம் நிறைவேறியது இச்சமயம் வேண்டுகோளுக்கிணங்கி பலரும் தாராளமாகப் பொருளுதவி செய்தனர். ஆயிரக்கணக்கில் ரூபா ஸ்தலத்திலேயே சேர்ந்துவிட்டது.

இந்தஸபைசாரதாசட்டத் திருத்தமாக B. தாஸ் அவர்கள் அஸம்பிளியில் கொண்டுவந்துள்ள மசோதா M. C. ராஜா கொண்டுவந்துள்ள தீண்டாமை விலக்கு மசோதா இவைகளை பலமாகக் கண்டிப்பதுடன் டி மசோதா பெரும்பான்மையோரின் உணர்ச்சிக்கு எதிராக இருப்பதால் அதை ஆதரித்து ஓட்டுக்கொடுக்க கூடாதென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.

ஆர்யதர்மம், தர்மராஜ்யா, மார்க்கபந்து, ஸநாதநிஸ்ட், மாத்வமித்ரன், கலைமகள், பிரஸந்நலக்ஷ்மி முதலிய ஸநாதன வாரப்பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டுமென்று ஸநாதநிகளை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

கலப்பு விவாஹ ஸம்பந்தமாக பகவான் தாஸ் கொண்டுவந்த தீர்மானத்தை தோற்கடித்ததற்காக ஸநாதநி சட்டஸபை மெம்பர்களையும், முஸ்லீம் அங்கத்தினரையும், இந்தியா கவர்ன்மெண்டாரையும் இக்கூட்டம் பாராட்டுகிறது.

இந்த ஸபை அரசாங்கத்தாரையும் பிரைவேட் ஸ்கூல் அதிகாரிகளையும், மதபோதனையை மாணவர்களுக்குச் செய்வதற்கான ஏற்பாட்டைகையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் தாய்தகப்பன்மார்கள் இதை வீட்டிலும் பள்ளிக்கூடங்களிலும் கவனித்து வரவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

இத்தீர்மானத்தை ஆதரித்து டாக்டர் மஹாமஹோபாத்யாய ஸ்வாமிநாதய்யர் அக்நிஹோத்ரம் தாததேசிக தாதாசார் இவர்கள் பேசினார்கள்.

ஸநாதநிகளுக்கு உறுதிமொழி யளித்துள்ள G. பத்மநாப நாயுடு, S. ராஜகோபாலன் (அட்வகேட்,) P. S. முத்துசெட்டியார், S. கிருஷ்ணராவ் இவர்களின் அபேக்ஷையை இக்கூட்டம் ஆதரிக்கிறது. ஸநாதநிகளை பூர்ணமாக ஆதரிக்க கேட்டுக்கொள்ளுகிறது.

இத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் தலைவர் முடிவுரையுடன் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு ஸநாதநதர்மத்திற்கு ஜே என்ற கோஷத்துடன் ஸபை கலைந்தது.

ஒரு நிருபர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Tuni

கண்டனக் கூட்டங்கள்

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

வாழ்த்தியும், திருவாங்கூர் பழைய (Senior) மஹாராணியவர்கள் தம் ஆதீனத்திலுள்ள ஹிந்துகோவில்களை தர்மத்திற்கனுசரணையாக பரிபாலனம் செய்துவருவதை மெச்சியும் சென்னை மாகாண சனாதனதர்ம மகாநாட்டிற்கு அட்வகேட்கள் ஸ்ரீமான் S. சுப்ரமண்ய அய்யர் S. V. குப்புசாமி அய்யர் இவர்களை பிரதிநிதிகளாக தெரிந்தெடுத்தும் தீர்மானங்கள் நிறைவேறின. ஒரு நிருபர்.

ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மகாசபை,

1937ஞு சென்னைமாகாண ஸநாதனதர்ம மகாநாட்டு அறிக்கைக்கிணங்க 7-2-37 ஞாயிற்று கிழமை பிறபகல் 3மணிக்கு ஜோதிஷ வித்வான் பிரும்மஸ்ரீ முத்துசாமியய்யங்காரவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 1.திரு.சு.வீர. கதிரேசன்செட்டியார் (2) வேதசாஸ்திர வித்வான் கல்யாணசுந்திர கனபாடிகள் (3)ஜெகதீசையர் (4)வெங்கட்டராமகனபாடிகள் (5)ஸபைத்தலைவர் முறையே அடியில் கண்ட பிரேரணைகளைபிரேரிக்க சபையினர் ஆமோதிக்கத்தீர்மானங்கள் நிறைவேறின. மாலை 6மணிக்குச்சபை கலைந்தது. 1.தீண்டாதார் ஆலயப்பிரவேசப்பிரகடனத்தைச்செய்த திருவாங்கூர் மகாராஜா அவர்களின் செய்கை வேதாகமசாஸ்திர பரம்பரை அனுஷ்டானவிரோதமாயும் எதேச்சாதிகாரமாயுமிருப்பதால் இச்சபை அதனைப் பலமாய் கண்டிக்கிறது. 2. தீண்டாதார் ஆலயப்பிரவேச விஷயத்தில் வேதாகமசாஸ்திரங்களுக்கேற்ப உறுதியுடனிருந்தவரும், திருவாங்கூர் மூத்தராணி, கொச்சிமகாராஜா முதலானோரைப்பாராட்டுகின்றது. 3 மதசமூகவிஷயங்களில் தலையிடுவதில்லை என்ற மே த. விக்டோரியாமஹாராணியின் வாக்குறுதிக்கு விரோதமாய் புதிய அரசியல் சட்டமிருப்பதாலும் மேலும்அவ்வரசியல் இந்தியாவின்பிரவிர்த்திக்கு ஏற்றதாக இல்லாததாலும் முக்கியமாக மதசமூகப்பாதுகாப்புடன் கூடிய நல்லரசியலாக இருக்கும்படி அவ்வரசியலைத்திருத்தும்படி அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்ளுகிறது.

4. சீர்திருத்தத்தின் பெயரால் வரும் மதசமூகபாதகமான சட்டங்களை சட்டசபைகளில் எதிர்த்துப் போராட உறுதி அளிக்கும் அபேக்ஷகர்களுக்கே வருகிற எலக்ஷனில் ஸநாதனிகள் தங்கள் வாக்கை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

5. சமீபத்தில் நடைபெற்ற சென்னைமாகாண ஸநாதனதர்மமகாநாட்டுத் தீர்மானங்களுக்கேற்ப செயல் புரியும்படி ஸநாதனிகளை வேண்டிக்கொள்ளுகின்றது.

நகரத்தாரவர்களின் போஷாவில் சிவன் கோவில் அம்மன் சந்நிதியில் வேதசாஸ்திர வித்வான் ப்ரும்மஸ்ரீ கல்யாணசுந்தர கனபாடிகளவர்கள், தாதுஞு தைமீ 4உ முதல் ஸ்காந்தபுராண ப்ரவசனம் இனிமையாகச் செய்துவருகிறார்கள். பக்தகோடிகள் பக்தி சிரத்தையுடன் சிரவணம் செய்து வருகின்றனர். எஸ். வெங்கட்டராம கனபாடிகள்.

தஞ்சை ஜில்லா பிராம்ஹண ஸபை,

மகாநாடு நடத்தத்தீர்மானம்.

காரியக் கமிட்டிக் கூட்டம்.

தஞ்சை ஜில்லா பிராம்மணஸபையின் நிர்வாஹஸபைக் கூட்டமொன்று சென்ற வியாழக்கிழமை மாலை 6மணிக்கு அட்வகேட் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யர் தலைமையில் நடைபெற்றது.

வருகிற மார்ச்சுமாதம் கடைசி வாரத்தில் பிராம்மண ஸபையின் ஜில்லா மஹாநாடு நடத்தத் தீர்மானிக்கப்பட்டு அதற்காக ஒரு கமிட்டியும் நியமனம்செய்யப்பட்டது. கமிட்டியார் சீக்கிரத்தில் கூடி மஹாநாடு நடத்தவேண்டிய தேதி இடம், அக்ராஸனர், பணவஸூல் முதலிய விஷயங்களைநிச்சயிப்பார்கள்.

அதன் பிறகு சென்னை ஸநாதந தர்ம மஹாநாட்டிற்கு ஸ்ரீமான்களான எம். கே. வைத்நாதய்யர், ஜி. வி. வெங்கடராமய்யர் அக்நிஹோத்ரம் தாதாசாரியஸ்வாமி எஸ். மஹாலிங்கய்யர், எம். ராமராவ், ஜி. வி. கணேசய்யர், டி. எல். சுப்பையர் பாகவத ரங்கநாதாசாரியர், ஸ்வாமிநாதசாஸ்திரிகள், ராமாநுஜதாதாசாரியர் முதலியவர்கள் பிராம்மண ஸபை பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப்பட்டனர்.

குடந்தை பொதுக்கூட்டம்.

திருவாங்கூர் யதேச்சாதிகார கண்டனம்.

பிராம்மண ஸபையின் ஆதரவில் 7உ ஞாயிற்றுக்கிழமை மாலை டபீர் படித்துறையில் குடந்தை ஸநாதநிகளின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. ஸ்ரீமான் வேம்பு சாஸ்திரிகள் மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ கிருஷ்ணமாச்சாரியர் ஜி. வி. வெங்கட்டராமய்யர், அட்வகேட். எஸ். மஹாலிங்கய்யர். கோபாலதேசிகாசாரியார் முதலியவர்களும் பல பொது ஜனங்களும் கூடியிருந்தனர். பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் தலைமை வகித்து கூட்டத்தின் நோக்கத்தைச் சுருக்கமாகக் கூறி திருவாங்கூர் அநீதியைக்கண்டித்துவிட்டு ஸ்ரீமான் மஹாலிங்கய்யரைத் தீர்மானங்களைப் பிரேரிபிக்கும்படி வேண்டிக் கொண்டனர். ஸ்ரீமான் அய்யர்,

திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரம் அநீதியாயும், ஆகம சாஸ்திர விரோதமாயுமிருப்பதால் அதை பலமாகக் கண்டிப்பதாயும் ஜனநாயகத்திற்குப் பாடுபடுகிறவர்களும், கவர்னர் முதலியவர்களுக்கு விசேஷ அதிகாரம் கொடுப்பதை எதிர்ப்பவர்களும், அவ்வாறு விசேஷச்சட்டங்களை ஆக்ஷேபித்தவர்களுமான காங்கிரஸ்வாதிகள் திருவாங்கூர் ஆலயப்பிரவேச விஷயத்தில் மட்டும் மஹாராஜாவின் யதேச்சாதிகாரத்தை ஆதரித்து நிற்பது கண்டிக்கத்தக்கதாயிருப்பதாயும்,

வருகிற சட்டஸபை எலெக்ஷனில் ஸநாதநிகள் அபேக்ஷகர்களிடமிருந்து மத ஸமூஹ விஷயங்களில் பிரவேசிப்பதில்லையென்ற உறுதிமொழி கிடைக்காத வரையில் ஸநாதநிகள் ஒருவருக்கும் ஓட்போடவேண்டியதில்லையென்று கேட்டுக்கொள்வதாயும்,

பாபு பகவான் தாஸின் கலப்புவிவாஹ மசோதா இந்தியா சட்டஸபையில் நிராகரிக்கப்பட்டதைக்கண்டு ஸந்தோஷிப்பதாயும், இந்த மசோதாவை எதிர்த்துப்பேசிய மெம்பர்களுக்கும், முக்யமாக இது நிர்ப்பந்தகாமானதென்று சொல்லி எதிர்த்த கவர்ன்மெண்ட் மெம்பருக்கும் இக்கூட்டம் தனது நன்றியை தெரிவிப்பதாயும்,

குடந்தை வக்கீல் ஸங்கத்தில் ஸ்ரீமான் ஸி. ரா. ஆசாரியர் பேசுகையில் சட்டஸபையில் ஆலயப்பிரவேசம் முதலிய மதவிருத்தச் சட்டங்கள் விஷயமாக நேரடியான வாக்குறுதி கொடுக்க இசையாமல் மழுப்பியதைப் பொதுஜனங்கள் கவனிக்கவேண்டுமென்றும்,

கருத்துக்களடங்கிய தீர்மானங்களை பிரேரிபித்து ஒவ்வொரு தீர்மானத்தின் கருத்தையும் விரிவாகவும்,தெளிவாகவும் எடுத்துச் சொன்னார்.

அட்வோகேட் ஸ்ரீமான் ஜி. வி. வெங்கடராமய்யர் தீர்மானங்களை ஆமோதித்துப் பேசுகையில், உலோகங்களிலும், சிலைகளிலும் தைவஸாந்நித்யமிருப்பதாக நம்புவது ஆகம சாஸ்திரத்தினால்தானென்றும், அதை நம்புகிறவர்கள் தீண்டாதார் பிரவேசத்தைத் தடுக்கும் ஆகமவிதிகளை மட்டும் நம்ப மறுப்பது விந்தையாயிருக்கிறதென்றும், வக்கீல் ஸங்கத்தில் ஸ்ரீமான் ஸி. ரா. ஆசாரியர், தமது கேள்விகளுக்கு நேரடியாயும் திருப்திகரமாயும் பதில் சொல்லாமல் மழுப்பியதைப்பற்றியும் விவரமாகக் கூறினார்.

பிறகு ஸ்ரீமான் கிருஷ்ண சாஸ்திரிகள் ஆதரித்துப் பேசியதும் அக்கிராஸனாதிபதியால் தீர்மானங்கள் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறின.

ஸ்ரீமான் கோபால தேசிகாசாரியாரால் உபசாரவார்த்தைகள் சொல்லப்பட்டபின் ஸபை பூர்த்தியடைந்தது.

மேற்படிக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவன:—

1. (a) This Meeting condemns the Temple Entry proclamation of His Highness the Maharajah of Travancore as being opposed to the Agama Sastras, and the traditional usages governing temple worship, and deeply deplores that the erstwhile conservative State of Travancore has made itself party to the violation of Dharma yielding to the pressure of Reformers.

(b) This Meeting calls public attention to the inconsistency of the Congress Leaders who object to the Ordinance making power of Governors and the Viceroy as being anti-democratic, but welcomes the arbitrary and unconstitutional ordinance of the Travancore Ruler and attributes the same to their notorious antipathy to the Sanathana Dharma.

II. This Meeting exhorts the voters to demand from the candidates who seek their suffrage pledges for religious neutrality and non-interference in the socio-religious affairs of Sanathana Hindus, and to refrain from going to the polls if the pledge is not forthcoming.

III. This Meeting condemns the support given by some Congress members of the Legislative Assembly to the Inter-Caste Marriage Bill of Dr. Bhagavan Das, and thanks the Government and, the others who exposed the coercive nature of that legislation, the inevitable effect of which would have been to disintegrate Hindu family life and destroy the religious basis of Hindu Society

IV. This Meeting calls the attention of Sanathanists to the evasive replies given by Mr. C. Rajagopalachar at the Bar Association Kumbakonam and declares that vague political appeals in the name of Swaraj or Freedom are no answer to their definite demand for protection to their religion and Dharma and that his plea that Sanathna Dharma is a minor matter which should stand aside when he canvasses support for his politics, is opposed to the fundamental position of Sanathanists that politics which attacks or ignores religion is of no value to them, and that Swaraj without guarantee to Swadharma is only a delusion and a snare.

நமது நிருபர்.

சகிந்திராபாத் பிராம்மணஸமாஜம்.

ஸ்ரீ கன்னிகாபரமேசுவரி தேவாலயத்தில் ஸநாதன ஆர்யதர்ம வைதிக பிராமணஸமாஜத்தின் சார்பாக அநேக பிராமணர்கள் கூடினார்கள். வைசிய மகாஜனங்கள் தங்கள் குருவை மேளுவில் அழைத்து வந்தார்கள்.

ஸமாஜஸ்தாபகரால் முதலெடுப்பில் மதராஸ் ஸ்ரீ கன்னிகாபரமேச்வரி தேவாலயத்தில் ஷை தேவாலயம் தர்மகர்த்தா ஸ்ரீமான் ஸனாதனி கொல்லா வெங்கராககசெட்டியார், அவர்கள் ஆதரவில் இதேமாதிரி ஸபைகூட்டி இந்த ஸமாஜத்தை ஸ்தாபித்த விஷயமாய்ப் புகழ்ந்து இந்தவிடத்திலும் சென்ற மார்க்கசிர அமாவாஸ்யை தினம் பண்டிட் பிரம்மஸ்ரீ உமாமகேச்வா பண்டிதரைமுன்னிட்டுக் கொண்டு இந்த ஸமாஜத்தை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸமாஜத்தை பிராம்மணர் மூலம் அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டி இந்த தேவாலய டிரஸ்டிகள் அபிமானித்து மேல்பார்வை பார்த்துவர வேண்டுமென்று ஸமாஜஸ்தாபகர் கேட்டுக்கொண்டார். அது விஷயம் அங்கீகரிக்கப்பட்டது.

ஒரு நிருபர்.

ஸ்ரீ குரு ஆராதனை உத்ஸவம்.

சேங்காலிபுரத்தில் விளங்கிவந்தவர்களும் வேதம் சாஸ்திரம், சிரௌதம், காவ்யம் முதலிய வித்தைகளை வெகு உத்தம சிஷ்யர்களுக்கு உபதேசித்தவர்களுமான ஸ்ரீமுத்தண்ணவாளென்ற நித்யாக்னிஹோத்ரிகள்ஸந்யாசம் செய்துகொண்டு ஸித்தியடைந்ததுமுதல் சுமார் 38-வருஷகாலமாக அவாளுடைய ஸமாதிக்கு பூஜையும் அவர்கள் சிரார்த்த ஆராதனை ஸமயத்தில் வேதகோஷங்களுடன் அபிஷேகம், பஜனம், ஸத்கதாப்ரவசனம் முதலிய அரிய விஷயங்கள் நடந்து வருவது எல்லா ஆஸ்திகர்களுக்கும் தெரிந்த விஷயம். ஷை உத்ஸவம் இந்த வருஷமும் மிகவும் நன்றாக ஷை மகான்களுடைய புத்ரானான சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ வேதமூர்த்திகளும் அத்யாக்னிஹோத்ரிகளுமான பிரும்மஸ்ரீ சுப்ரமணயதீக்ஷிதர்வாள் ரொம்பவும் நடத்தினார்கள். மகா-ா-ஸ்ரீ T. L. சுப்பய்யர்வாள் என்கிற ப்ரதமதார்மிகாள் வந்திருந்து மிகவும் அற்புதமாக தர்மஸ்வரூபத்தைப் பற்றி இன்றிரவு சுமார் 3-மணி நேரம் வர்ஷித்தனர். அவ்வமயம் கூடியிருந்த பெருங்கோஷ்டியானது ஷை உபன்யாசத்தைக் கேட்டு பரவசமானது மிகவும் குறிப்பிடத் தக்கது. முடிவில் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் ஷை அய்யர்வாள் வெகு சிரத்தையுடன் இவ்வைபவத்தை நடத்தி வைத்ததற்கும் ஒவ்வொரு ஆஹிதாக்னிகளுடைய கிருஹத்திற்குப் போய் உபகரித்ததையும் உபன்யாஸத்தில் ஸ்வயம் அனுபவித்து தர்மத்தைப் பற்றிச் சொன்னதையும் கொண்டாடி பிறகு மஹாபாரதத்திலிருந்து யமபயம் முதலிய கஷ்டங்கள் மஹரிஷிகளை பாதிக்காததற்கு காரணமான ஹேஹட்சரித்திலுள்ள ஆசாரம், சோம்பலின்மை, ஸந்த்யோபாசனம் சுத்த ஆசாரம், சுத்தவஸ்துக்கள் ஸத்யம் வேதவித்துக்களிடமுள்ள நற்குணத்தை மட்டிலும் வாக்கினால் உரைப்பது முதலிய தர்மங்களை அற்புதமாக உபன்யசித்தார்கள். அவ்வமயம் பிரும்மஸ்ரீ நாராயணாக்னிசித்வாஜபேயி முதலிய ஆஹிதாக்னிகளும் மற்றுமுள்ள லௌகிகர்களும் கூட்டமாகவந்திருந்து ஸந்தோஷித்தனர். அன்று மகா-ா-ஸ்ரீ பஞ்சாபகேசய்யர் அவர்கள் மகா-ா-ஸ்ரீ கே. எஸ். வெங்கட்டராமய்யரவர்கள் ஆஹிதாக்னி மண்டலம் மகா-ா-ஸ்ரீ டி. எல். சுப்பய்யர்வாள் முதலியவர்களும் சேர்ந்து அதில் தீர்மானித்த விஷயங்களாவன:—

1. சென்னையில் மகா-ா-ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர்வாள் இககாலத்தில் ஸனாதன தர்ம மஹாகான்பரன்ஸ் நடத்துவது மிகவும் அவசியமென்றும் அதை நாம் எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்றும் ஹிந்துமதத்தை பாதுகாக்க அனுஷ்டானம் பண்ணுகிறவர்களை விருத்தி செய்வது ஒன்றுதான் வேண்டுமென்றும் திருவாங்கூராலயப்ரவேசம் சாஸ்திர விரோதமென்றும் அதை சீக்கிரத்தில் ஸ்ரீ மஹாராஜா மாற்றிவிடவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

அய்யா தீக்ஷிதர்
சேங்காலிபுரம்

அத்வைத வேதாந்த ஸத்காலக்ஷேபம்

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில் ஸந்நிதி பஜனைமடம் பிரும்மஸ்ரீ பாகவதர் வாசுதேவராவ் அவர்களால் உபந்யாசமாக செய்யப்பட்டு வந்த 26உ (8-2-37) திங்கள் கிழமை இரவு 7-மணிக்கு மேல் 9-மணிக்குள் ஸங்க்ரஹ நிருபண பூர்த்தி செய்யப்பட்டது. மகா-ா-ஸ்ரீ திவான் பகதூர் கே எஸ். ராமஸ்வாமிசாஸ்திரிகள், பிராம்மண மகாசபை காரியதரிசி எஸ். ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள், மன்னார்குடி எஸ். வேம்புசாஸ்திரிகள் அவர்கள், டவுன் ஹைஸ்கூல் ரிடையர்டு ஹெட்மாஸ்டர் ஆர் ஸ்வாமிநாதய்யா அவர்கள், இன்கம்டாக்ஸ் ஆபீசர் ஹெட்கிளர்க்கு மகா-ா-ஸ்ரீ டி. எஸ். வெங்கடேச்வரய்யர் அவர்கள், ரிடையர்டு சப்ரிஜிஸ்டர் சிவசாம்பய்யர் அவர்கள், இன்னும் இதர கனவான்களும் வந்திருந்து மிகச் சிறப்பாய் நடைபெற்றது.

ஒரு நிருபர்.

ஒரு உபந்நியாசம்.

கும்பகோணம் கோபால்ராவ் லைப்ரரி ஹாலில் சென்ற 6உ சனிக்கிழமை $6\frac{1}{2}$-மணி முதல் 8-மணி வரையிலும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மாலை 5-30 மணி முதல் 8-மணி வரையிலும் ராமாயணம் யோகசாஸ்த்ரநிருபணம்என்பதைப்பற்றிரிடையர்டு ஸப்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான அய்யாதுரை அய்யரவர்களால், ரிடையர்டு டிஸ்டிரிக்டு ஜட்ஜ் திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரிகளவர்கள் அக்ராசனத்தின்கீழ் உபன்யசிக்கப்பட்டது. ஷை உபன்யாசம் மிகவும் இனிமையாயிருந்தது. அவர் உபன்யசித்ததே புஸ்தகரூபமாய் தயாராகி வருகிறது. கூடிய சீக்கிரம் வெளிவரும்.

ஒரு நிருபர்.

சென்னை.

ஸ்ரீ பகவத்கீதை உபன்யாஸ பூர்த்தி:— ஸ்ரீ கீதாச்ரவணபக்த சபையார் கோரியவண்ணம் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா ஐந்து ஆண்டுகளாகக் கூறிவரும் ஸ்ரீ கீதை பூர்த்தியானது. சென்ற ஞாயிறன்று ஸ்ரீகிருஷ்ணனுக்கு புஷ்பப்பந்தலில்ல பூஜைநடந்தது ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு அனுப்பியதிவ்ய ப்ரஸாதம் ஸபைக்கு வழங்கிய பின் உபந்யாசம் துவக்கப்பட்டது. முடிவில் பக்தர்கள் கீதாசாரியனுக்குப் பல காணிக்கைகள் அளித்தனர். கீதா சப்த ச்லோகீ அச்சிட்டு இலவசமாக பக்தர்களுக்கு அளிக்கப்பட்டது. சந்தன தாம்பூலம் புஷ்ப பழங்களும் விநியோகம் செய்யப்பட்டது ஸ்ரீமத் பாகவத உபந்யாஸம் அங்கு நடைபெறும்.

ஸ்ரீமத்ராமாயணம்:— லக்ஷ்மீபுரம் சங்கத்தினரது வேண்டுகோளுக்கு இணங்கி பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ சர்மா அவர்கள் 20 காலக்ஷேபமாக ஸ்ரீமத்ராமாயணத்தைக் கூற சென்ற ஞாயறன்று ஸ்ரீ வால்மீக சரிதத்தை ஸ்ரீமத் ஆனந்த ராமாயணத்தில் கூறியபடி உபன்யசித்தார். பல இடங்களிலிருந்து பக்தர்கள் வந்து கேட்கின்றனர்.

கண்டனக்கூட்டம்:— திருவாங்கூர் மன்னருக்கு சென்னை நகர பரிபாலன ஸபை வரவேற்பளிக்கக் கூடாதென்று முத்யால் பேட்டையில் ஸ்ரீ ஸோமதேவசர்மா தலைமையிலும் புரசைப் பாக்கத்தில் ஸ்ரீமான் வைத்யநாதய்யர் தலைமையிலும் ஓர் கூட்டம் கூடிற்று. அவருக்கு நடக்கும் வரவேற்புகள் பணத்தை செலவு செய்து போலித்தனமாய் நடத்தப்படுவதென பலர் கூறினர்.

நமது நிருபர்

ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் பிரம்மோத்ஸவம்.

ஸ்ரீ மஹாமேரு சிகரத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீ புரவாஸினியாய் பஞ்சப்ருஹ்மாகார மஞ்சத்தில் ஸ்ரீ காமேச்வராங்க பரியங்கத்தில் வீற்றிருப்பவளாய் பிரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கின்ற பிரம்ம விஷ்ணு ருத்ராதிகளுக்கு சக்தியைக்கொடுத்து ஆக்ஞை செய்யும் பஞ்சகிருத்ய பராயணியாயுமுள்ள பராசக்தியான ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தரி தேவியானவள் இப்புவியிலுள்ள ஆன்மகோடிகளுக்கு தர்மாதி சகல புருஷார்த்தங்களையும் அனுக்ரஹிக்குமாறு அகில பூமண்டலாலங்காரமாயும் ஸ்ரீ ஹரிஹராதி ஸமஸ்த தேவதைகளின் ஸான்னித்யம் பெற்றதும், த்ரயஸ்த்ரிம்சத்கோடி தேவதா ஸேவிதமாயும் இப்பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் பிரதானமாயுமிருக்கின்ற ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தில் உருத்திரகோடியில் ஸ்ரீ ஏகாம்பரநாதரென்று புகழப்பட்டு வருகின்ற ஸ்ரீ மஹாகாமேச்வரரூபிணியாயும், ஸ்ரீ புண்ணியகோடியில் ஸ்ரீ வரதராஜரென்று ஸ்துதிக்கப்பட்டுவருகிற ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயும், "ஸ்ரீ காமகோடியில்" பிலாகாசரூபிணியாயும் கன்னிகாரூபிணியாயும் விசேஷமாய்த் தன்னுடைய ஸமஸ்த ஆவரண சக்திகளுடன் யந்திரரூபிணியாயும் விளங்கா நிற்க,

மார்க்கண்டேய ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடி ஜகத்குரு ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாவர்களால் உத்தாரணம் செய்யப்பட்ட ஸ்ரீ காமகோடி ஸ்ரீ சக்ரத்தில் ஸான்னித்யமடைந்து விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவிக்கு நாளது தாது-ஞு மாசி-மீ 3உ (1937-ஞு பிப்ரவரிமீ 14உ) ஆதிவாரம் முதல் விசேஷ மஹோத்ஸவம் வேதபாராயணாதி ஸந்தர்ப்பணை வைபவங்களோடு உபக்ரமித்து வழக்கப்படி த்வஜாரோகணம் முதல் 11 நாள் உத்ஸவங்கள் நடந்தேறியபின்,

மார்க்கண்டேய புராணத்தில் ஸ்ரீ காமாக்ஷி விலாஸத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்ரீ ஜகன்மாதாவினால் தேவர்களுக்கு தந்தருளப்பட்ட திவ்ய ஸேவையாகிய விசுவரூப தரிசனமும் அன்று முதல் வழக்கம்போல் விடாயாற்றிஉத்ஸவங்களும் நடக்கிறபடியால் அக்காலங்களில் ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து, ஸ்ரீ காமாக்ஷி திவ்யமங்கள மூர்த்தியை தரிசித்து ஐஹிகாமுஷ்மிக பல புருஷார்த்தங்களையும் ஜன்மஸாபல்யத்தையும் அடையுமாறு கோருகின்றனம். என்று கோவில் அதிகாரிகளும் ஸ்ரீ மடம் ஏஜண்டு அவர்களும் தெரிவிக்கிறார்கள்.

ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி நியமாத்யயன பாடசாலை

3வது வருஷபூர்த்தி உத்ஸவம் நடந்தவிபரம்.

பிரம்மஸ்ரீ விச்வேச்வர கனபாடிகளால் நடத்தப்படும் ஜ்யோதிர்மய ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி நியமாத்யயன பாடசாலையின் 3வது வருஷபூர்த்தி, ஜனவரி 24உ மஹாலிங்கஸ்வாமி கோவிலில் அம்பிகையின் ஸன்னிதியில் சாஸ்திரதிலக, சாஸ்திரரத்னாகர மஹாமஹோபாத்யாய பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரியள் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது.

அன்றுகாலை மஹாலிங்கஸ்வாமிக்கு ஒப்பற்ற அபிஷேக ஆராதனைகளும் பஞ்சமுகார்ச்சனைகளும் செய்யப்பட்டன. ஸ்ரீ அம்பாளுக்கு சந்தனகாப்பும் சாத்தப்பட்டது. ஊர் பிரமுகர்களுக்குள் பலபிராமணர்களுக்கு ஸமாராதனை நடந்தது.

அன்றுமாலை 3மணிக்கு பிரம்மஸ்ரீ மஹாமஹோபத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் பூரணகும்பத்துடன் வரவேற்கப்பட்டார்கள். அப்போது திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீ டி. எல். சுப்பையர், கும்பகோணம் ஸ்ரீமான் ஸ்வாமிநாத சாஸ்திரிகள், மாஜிஹெட்மாஸ்டர் ஆர். ஸாமிநாதஅய்யர் முதலியோரும் பல உள்ளூர் பிரமுகர்களும் திருவிசநல்லூர், வேப்பத்தூர், ஆனைதாண்டவபுரம் முடிகொண்டான் கோனேரிராஜபுரம் முதலான பக்கத்துகிராமங்களிலிருந்து பல ஆஸ்திகமஹாஜனங்களும் விஜயஞ்செய்திருந்தனர். எல்லோரும் பாடசாலையிலிருந்து மேளதாளங்களோடு ஊர்வலமாக கோவிலுக்கழைத்துச்செல்லப்பட்டனர்.

அங்கு மஹாமஹோபாத்யாய சாஸ்திரிகள் அவர்களை அக்ராஸனம் வஹிக்கும்படி கேட்டுக்கொள்கையில் சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ ப்ரசங்கபானு வைத்யநாத சாஸ்திரியள் அவர்கள் சாஸ்திரியளை வெகுவாய்ப் புகழ்ந்தும், எவ்வளவோ அசௌகரியங்களுக்கிடையிலும் அக்ராஸனம் வஹிக்கும்படி சாஸ்திரிகள் அவர்களைத் தூண்டிய பிர்மஸ்ரீ விச்வேச்வர கனபாடிகள் அவர்களுடைய சிரத்தையையும் திறமையையும் சிலாகித்தும் பேசினர்.

பின்பு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளால் அனுக்ரஹபூர்வமாக அனுப்பப்பட்ட ஸ்ரீமுகம் படிக்கப்பட்டு ஸ்வாமிகளால் அனுப்பப்பட்ட வெண்பட்டும் விபூதிப் பிரஸாதமும் விச்வேச்வர கனபாடிகளுக்களிக்கப்பட்டது. பிறகு மைஸூர் முதலிய இடங்களிலிருந்து வந்திருந்த ஸர்டிபிகேட்டுகள் படிக்கப்பட்ட பின் பாடசாலையின் வருஷாந்திர அறிக்கையை ரிடையர்டு இஞ்சினீர் ஸ்வாமிநாதசாஸ்திரியள் படித்தார்.

பிறகு அக்ராஸனாதிபதி பேசுகையில் விச்வேச்வர சாஸ்திரிகள் யஜுஸ்ஸாமவேதங்களில் ஸாமர்த்தியம்பெற்றவர் என்றும் ஸாமவேதாதாரமான ரிக்வேதமும் தெரிந்தவரென்றும் இரண்டுவேதங்களிலும் ஏககாலத்தில் ஸந்தைசொல்லும் திறமைவாய்ந்தவரென்றும் எவ்வித மூலதனமும் இல்லாமல் சிரத்தையாய் இப்பாடசாலையை நடத்தும் அன்னாரின் திறமையும் ஊக்கமும் அபூர்வமானதென்றும் இப்பாடசாலையில் ப்ராசீன குருசிஷ்யக் கிரமத்தில் ஸலக்ஷணமாய இரண்டுவேதங்களும் போதிக்கப்படுகிறதென்றும் இக்காலத்தில் பாஷ்யத்தோடு அத்யயனம்செய்வது மிகவும் அவசியமென்றும், கூறிவிட்டு ஸ்ரீமான் டி. எல். சுப்பையர் அவர்களை பேசும்படிகேட்டுக்கொண்டார்கள்.

டி. எல். சுப்பையர் ஸ்வாரஸ்யமான ஓர் உபன்யாஸம்செய்தார், வேதமந்திரங்கள் புனிததன்மையுடன் இஷ்டப்ராப்தி, அநிஷ்ட பரிஹாரம் முதலிய நன்மைகளையும் செய்யக்கூடிய பெருமைவாய்ந்தவையென்றும், ஆகமசாஸ்திரங்கள் மாற்றிவைக்கக்கூடியவை யென்று பிரபல பிரமுகர்கள் கூறுவது விபரீதமானதென்றும் ஆகமசாஸ்திரங்களால்தான் ஈச்வர ஸான்னித்தியம் ஏற்படுமென்றும், த்ருஷ்டிதோஷம் உண்டென்றும், இன்னும் பல விஷயங்களைப்பற்றியும் தகுந்த மேற்கோள்களுடன் விளக்கினர்

அடுத்தபடி பேசிய ஆங்கரை பிர்மஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் தீண்டாமையைப் பற்றியும ஆலயப்ரவேசத்தின் அசாஸ்திரீயத்தையும் எடுத்துக்கூறினர்,

ப்ரம்மஸ்ரீ சேங்காபுலிரம் ப்ரசங்கபானு சாஸ்திரிகள் மிகுந்த ஆவேசத்துடன் பேசுகையில் அக்ராஸனர்போன்ற பண்டிதர்கள் தலைமையின்கீழ் தான் ஸனாதனதர்ம பிரசாரம்செய்ய மிக்க ஆதாரமாயிருப்பதாயும், ஸ்ரீமான் டி..எல். சுப்பையர்போன்ற ஓர் சிலர்களைத்தவிர பெரும்பாலும் லௌகிகர்களுக்கே ஆஸ்திகசிரத்தை மிகவும் குறைந்துபோயிருப்பது மிகவும் வருந்தத்தக்கதென்றும் சொல்லிமுடித்தார்.

பின்பு ஆனதாண்டவபுரம் ஸ்ரீமான் பட்டாபிராமய்யர் முதலியவர்கள் பாடசாலையை பற்றியும் தர்மவிஷயங்களைப்பற்றியும் சிறந்த சிறந்த உபன்யஸித்தார்கள்.

மைசூர் பரீக்ஷைகளில் சென்று விசேஷ சிறப்புடன் தேர்ச்சிபெற்றுவந்த வித்யார்த்திகளுக்கு ஸமஸ்தானத்திலிருந்து வந்திருந்த சால்வைகள் அக்ராஸனரால் அளிக்கப்பட்டன.

பின்பு ஸ்ரீமான் ஸ்வாமிநாத சாஸ்திரிகள் ப்ரம்மஸ்ரீசாஸ்திரிகளுக்கும் மற்ற உபன்யாஸகர்களுக்கும் விஜயஞ்செய்துள்ள கனவான்களுக்கும் வந்தனோபசாரம் கூறிமுடித்தார். பிறகு சந்தனம், பழம், தாம்பூலம் எல்லோருக்கும் வழங்கப்பட்டதும் கூட்டம் இனிது கலைந்தது.

ஒரு நிருபர்.

திருவையார் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள்உத்ஸவம்.

பூலோககைலாஸம் என்று ப்ரஸித்திபெற்ற திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் உத்ஸவம் வழக்கம்போல் இவ்வருஷமும் வெகு விமரிசையாய் நடந்தது. பல மஹான்கள் அரியபெரிய ஸங்கீதக் கச்சேரிகளை நடத்தினர். ஷை உத்ஸவம் ஆராதனை தினத்தில் அகரமாங்குடி மஹாகதகவ்வு, அபினவபாதாசார்ய ப்ரம்மஸ்ரீ சிதம்பரபாகவதரவர்கள் ஸ்ரீ ராம பட்டாபிஷேக கதாகாலக்ஷேபம் செய்தார். சென்ற பலவருஷங்களாக பல அசௌகரியங்களால் ஸ்ரீ பாகவதரவர்கள் இங்கு கதை பண்ணமுடியாமல்போனது பல பக்தர்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணியது. ஆனது பற்றி இவ்வருஷம் ஸ்ரீ பாகவதர் அவர்கள் இங்குவந்து கதை பண்ணவேண்டுமென்று சாதகபக்ஷிபோல் எதிர்பார்த்துக்கொண்டிருந்த பல பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி தற்சமயம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த சரீர அசௌகர்யத்தைக்கூட கவனிக்காமல் ஸ்ரீ பாகவதரவர்கள் கதைபண்ணியது மிகவும் போற்றத்தக்கதாகும், ஸ்ரீ பாகவதரவர்களின் குணாதிசயத்தை வர்ணிக்க யான்முன்வந்தது ஸஹஸ்ரகிரணனை சூர்யனை தீபத்தால் உலகத்திற்கு காட்டுவதுபோலாகும். ஆயினும் மனமகிழ்ச்சியை வெளியிடாமலிருக்கமுடியவில்லை. இந்த கதையில் அவர்கள் ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தை அம்ருதம்போல் இடைவிடாமல் வர்ஷிப்பதும் பாவ ராக தாளங்களை ஸமயோசிதம் போல் காண்பிப்பதும் சொற்சுவை பொருட்சுவை கூடிய உபன்யாஸ சக்தியும் ஸ்ரீ த்யாகராஜ கீர்த்தனங்களை நன்கு பாடி அதற்கு அர்த்தத்தை வர்ணித்து அதை ராமாயணத்தில் இணைக்கும் மேன்மையும் விசேஷமான உலகபரிக்ஞானமும் அனேக பாஷைகளில் பாண்டித்யமும் அபிமானத்தினால் எண்ணங்களை வெளியிடும் பெருமையும் இத்தகைய உத்தம குணங்கள் யாரைத்தான் பரவசமாக்கவில்லை. இத்தகைய பெருமைவாய்ந்த நமது பாகவதரவர்கள் பெரிய ஸனாதனியும் பெரிய வம்சத்தைச் சேர்ந்தவரும் ஸனாதன தர்மப்ரதிஷ்டாபகருமாய் இருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும். இன்னும் பலகாலம் அரோகதிருடகாத்ரராய் வாழ்ந்து பல சிஷ்யர்களையும் உலகிலிம்மாதிரியாக தயார்செய்து ஆஸ்திகர்களுக்கு ஆதாவளிக்குமாறு ஸர்வேச்வரனை வேண்டுகிறேன். சேஷாராம சாஸ்திரிகள்.

உங்களுக்கு பெரிய அதிர்ஷ்டம் வருகிறது. விட்டுவிடாதீர்கள்.
வைத்திய நிபுணர்களாலும் செய்யமுடியாத, அபூர்வசக்தியுள்ள அசல் ரசமணியை செய்து விட்டோம்.
பழனி டாக்டர் கே. எஸ். பதி அவர்களின் அபூர்வ ரசமணி
இன்றே ஆர்டருக்கு முந்துங்கள்! முந்துங்கள்!
இதன் பெருமையை எவராலும் அளவிட முடியாது.
ரசமணி
பெரியமகானல் இம்மணி கிடைத்தது.
இதை நீங்கள் அணிந்துகொண்டால், சகல கஷ்ட நஷ்டங்களும் விலகி விடுகிறது. அதிர்ஷ்டம் பிறந்து செல்வம் உண்டாகிவிடும். தொழில் விருத்தியாகும். லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும். இடுப்பிலணிந்துகொண்டு இல்லற இன்ப ரகசியத்தில் ஆனந்திக்கலாம். பாலில் போட்டு சாப்பிடுவதால் இந்திரியம் கெட்டியாகி தாது புஷ்டியில் யானை பலம் உண்டாகும். துரிதஸ்கலிதம், இந்திரிய ஒழுக்கு, சொர்ப்பன ஸ்கலிதம் நீங்கும். க்ஷயம், காசம், மூலம், குஷ்டம் முதலிய அநேக வியாதிகள் மாயமாய் மறையும். இரவில் பயமின்றி போகலாம். பேய், பிசாசுகள், துஷ்டதேவதைகள் பயந்து ஓடிவிடும். வாயில் அடக்கிக்கொண்டால், சகல வசியமும் நினைத்த காரியம் அனுகூலமும் உண்டாகும். விஷக்கடிகள் நீங்கும். இதன் விலை ஒரு மணி ரூ 25.
குறிப்பு:— இந்த விளம்பரத்தை குறிப்பிட்டு வரும் ஆர்டர்களுக்குத்தான் பிப்ரவரி 26உ வரை ஒருமணி ரூ. 7க்கு அனுப்புவோம். சில மணிகளே இருப்பதால் மணிகள் சிலவானபின் வரும் ஆர்டர்களை கவனிக்கமுடியாது. ஆர்டருக்கு முந்தினால்தான் மணி கிடைக்கும். உடனே ஆர்டர் அனுப்புங்கள்.
F. M. S. மலாய்நாட்டினர் ரூ. 12 முன் பணமாக அனுப்பிவிட வேண்டும்.
கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி. S. I. (ஆ. த)

ஸ்ரீ ராமாயணப்ரவசன ஆரம்பவிழா. கும்பகோணம்.

1—2—37 ஸோமவாரம் மாலை 7-மணிக்குபத்திரிகைகள்மூலம் வெளியிட்டிருந்தபடி ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்யாள் மடத்தில் மன்னார்குடி சாஸ்திர ரத்னாகர மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ யெக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் சிஷ்யர் மன்னார் குடி பிர்மஸ்ரீ வேம்புசாஸ்திரிகள் அவர்களால் ஆசார்யவந்தன புரஸ்ஸரம் இனிய ஸங்கீத ஸாகித்யத்துடன் பக்தி ததும்பும்படி ஸ்ரீமத் ராமாயண கதா பிரவசனம் ஆரம்பம்செய்யப்பட்டது. முதலில் மங்களாசரணம் செய்து கிரந்தத்தை ஆரம்பஞ்செய்து பிறகு ருசிகரமாக ஜீவன்களின் நிலைமையையும் அவர்கள்படும் துன்பங்களையும் விளக்கி அத்துன்பத்தைப் போக்கி இன்பத்தைபெற வழியை இந்நூல் எப்படி விளக்குகிறதென்பதை பல மேற்கோட்பாடுகளின் நாஸ்திகர்களையும் ஆஸ்திகராகும்படி தன் நாவன்மையால் செய்துவிட்டாரென சொல்லுவது மிகையாகாது. ஸ்ரீமத் வால்மீகி பகவானின் சரித்திரத்தையும் அதன்கண் அடங்கியுள்ள அரிய தத்வங்களையும் அதனால் நாம் அறிந்துகொள்ளவேண்டிய முக்ய முறைகளையும் பல ப்ரமாணங்களுடன் பண்டித பாமர ரஞ்ஜகமாக அழகிய நடையில் விளக்கினார்கள். இப்பெரியார் இங்குவந்து 2 நாள் ஆவதற்குள் இவரது புகழ் எங்கும் பரவிவிட்டதுடன் எங்கும் இவர்பேச்சாகவே இருப்பதிலிருந்து இவரின் பாண்டித்யம் கொண்டாடப்படுகிறது. முதல் இரண்டு ச்லோகங்களுக்கு பல விதமாகப் பொருள்கூறி விசேஷிக்கச்செய்தார். பிறகு 9-மணிமுதல் உபன்யாஸத்தை முடித்தனர். இன்றும் தொடர்ச்சியாய் முறையே உபன்யாஸம் நடைபெற்றும் 6மாத அளவில் நடைபெறும். பிறகு பிராமணஸபா காரியதர்சி வக்கீல் சேங்காலிபுரம் ஸ்ரீனிவாஸய்யர் அவர்கள் எல்லோருக்கும் வந்தனம் கூறி இவ்வமிர்த வர்ஷத்தை கேட்டபின் ஸபையோருக்குச் சொல்லவேண்டியது வெகுவாக இல்லையும். பிற்காலத்தில் நமது மதம் ஆசாரம் ஒழுங்காக நடைபெற நமது சிறுவர்களுக்கு நல்ல பழக்கங்களைக்கற்பிக்க வேண்டுமென்றும் ஆகவே நாம் கதாச்ரவணத்திற்கு வரும்போது நமது குழந்தைகளை கூடவே அழைத்து வரவேண்டுமென்றும் அப்படியே நமது கிரஹத்திலிருக்கும் ஸ்திரீ கிருஹிணீயையும்வந்து கதாச்ரவணம் செய்யும்படி செய்யவேண்டுமென்றும் இதனால் விசேஷப்பயன் கிடைக்குமென்றும் இக்காலத்தில் இதைவிட வேறு வழிகள் எளிதல்லவென்று தனது முதிர்ந்த அனுபவத்தை முன்னிட்டு எல்லோரையும் வேண்டிக்கொண்டனர், பிறகு தீபாராதனம் செய்து ஆரம்ப விழா முடிவடைந்தது.

மேலக்காவேரி கே.ஆர்.வி சாஸ்திரி:

வரப்போகும் தேர்தல்களைக் குறித்து ஓர் ஸந்தேஹம்.

வருகிற பிப்ரவரி மாதம் நடைபெறப்போகும் சென்னைமாகாண சட்டசபைத்தேர்தல்களுக்காக தமிழ்நாடு முழுவதும் வெகு மும்மரமாக தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. ஜஸ்டிஸ்கக்ஷி, வெளிவேஷத்திற்காக நாங்கள் ஏழை விவஸாயிகளுக்குகாகப் பாடுபடுகிறோம். நாங்கள் ஏழை குடியானவர்களின் நிலவரியை மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்போகிறோம், (நாங்கள் வானத்தை வில்லாக வளைக்கப்போகிறோம், மணலைக் கயிராகத்திரிக்கப்போகிறோம்' என்று ஒரு சாரார் சொன்னால், நாம் அதை எவ்வளவுதூரம் நம்புவோமோ, அதைப்போல்தான் இவர்களுடைய பசப்புவார்த்தையும் இருக்கிறது.) ஆதலால் உங்கள் ஓட்டைத் தயவுசெய்து எங்களுக்கே கொடுத்துதவுங்கள்" என்று பறையடிக்கிறது. ஆதலால் உங்கள் கையிலிருக்கும் ஓட்டு என்னும் அதிகாரத்தை தயவுசெய்து எங்களுக்கே கொடுங்கள் என்று கூறுகிறது.

"தற்சமயம் இருக்கும் நிலைமையில் பட்டம் பதவி இவைகளில் மிதமிஞ்சிய மோகம், கொண்ட ஜஸ்டிஸ்கக்ஷிக்கு நம்போன்ற ஆஸ்திகர்கள் ஆதாவளிப்பதைக்காட்டிலும் காங்கிரஸிற்காக நாம் நம்மாலியன்ற உதவியைச் செய்வது நலமாகத் தோன்றுகிறது. ஆனால் "ஆலயப் பிரவேசம்" என்னும் மதஸம்பந்தமான விஷயம் நம்மையும் காங்கிரஸையும் வேறுபடச்செய்கிறது. இவ்விஷயத்தில் காங்கிரஸ் தலையிடாமலிருந்தால் நாம் நமது ஓட்டை அவர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் நிச்சயம் இவ்விஷயத்தில் தலையிடத்தான் செய்வார்கள். இந்நிலைமையில் நாம் நமது ஓட்டை—யாருக்குக்கொடுப்பது? அல்லது நமது ஓட்களை ஒருவருக்கும்கொடுக்காமல் இருந்துவிடலாமா? இவ்விஷயத்தை நம்போன்ற ஸனாதனிகளும், ஆசிரியரும் தீர்க்க ஆலோசித்து இவ்வார்யதர்மத்தின் வாயிலாகவே தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏ. வெங்கடாரமன்.

ஓட்டுரிமையுள்ள சகல வகுப்பாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

தற்சமயம் (காங்கிரஸ்) கட்சியார் அரசாங்க பொதுஸ்தலங்களுக்கும், சட்டஸபைகளுக்கும் செல்லுவதின் உண்மை அதாவது ஷை கக்ஷியில் காந்திஜீயால் தன் வகுப்பாளரின் முன்னேற்றத்தைக்கருதி ஷையாரால் கிர்மாண திட்டமாய் வகுத்துக்கொண்டிருப்பதை சட்டபூர்வமாய் (பாதுகாப்பு) ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கமாக தெரிவதாலும் (கலப்புமணம்) ஆசையிற் சிக்கி பிராமண்யத்தைக் குலைத்துக்கொண்ட (சி ரா) ஆசாரியார் அதற்கு அனுசரணையாக தற்சமயம் தோன்றி பிரஸங்கித்துவருவதாலும் ஷை கக்ஷிகாரர்களுக்கு நம் தேசபுத்தியைப் புகட்ட தற்சமயம் நம் ஓட்டுரிமையுள்ளவர்கள் கையிலிருப்பதால் ஷை கக்ஷியாருக்கு ஓட்டுரிமைகளை கொடுத்து தங்கள் வகுப்பாளரின் கஷ்டங்களை பெருக்கவிடாமல் தவிர ஷைகக்ஷியாரே இப்பிரவேசங்களால் (சுயராஜ்யம்) வராதென்று பகன்றுவருவதையும் ஒவ்வொருவரும் கவனத்தில் வைத்துக்கொண்டு அவரவர்கள் வகுப்பாளரின் ஏழை கைத்தொழிலாளர்கள் முன்னேற்றத்தையும், புகழையும் கருதி உழைக்கக்கூடிய நபர்களையே நமது வாக்குரிமைகளைக்கொடுத்து உதவவேண்டுமென்பதையும் முக்யமாய் கைத்தறியில் ஈடுபட்டிருக்கும் வகுப்பாளர்கள் மிகவும் கவனமாய் நடந்துகொள்ளவேண்டுமென்பதையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஓட்டுரிமையுள்ளோர்கள்
மதுரை.

எலெக்ஷன் கலகங்கள்.

ஐக்ய மாகாணத்தின் பல பாகங்களிலும் எலெக்ஷன் கலஹங்கள் அதிகரித்து வருகின்றன. காசியில் ஒரு பிரசாரகர் அரிவாளால் தாக்கப்பட்டார். ஒரு முஸ்லீம் அபேக்ஷகரின் ஏஜெண்டு பிலிபித் ஜில்லாவில் கொல்லப்பட்டாராம். அநேக இடங்களில் காங்கிரஸ்காரர்கள் கைதுசெய்யப் படுவதாயும் தெரிகிறது.

வைதிக தர்மஸங்க பிரசாரம். சோழதேசம்.

ஆனைதாண்டவபுரம்,

சென்றவாரம் தர்மப்ரசார விஷயமாய் நான் ஆனைதாண்டவபுரத்திற்கு சென்று சில கனவான்களைக்கண்டு வைதிக தர்மத்தின் தற்கால இடையூறுகளையும் தர்மப்ரசார வேலையின் அவச்யத்தைப்பற்றியும் நேரில் எடுத்துச் சொன்னேன். ப்ரம்மஸ்ரீ பட்டாபிராமய்யர் அவர்கள் சமீபத்தில் இந்த விஷயத்தில்கூடிய முயற்சியை எடுத்துக்கொள்வதாய் சம்மதித்தனர். பிறகு அவ்வூரில் வசித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் ரிடயர்டு ஜட்ஜு சுப்ரமண்யய்யர் அவர்களை சந்திக்கும்படி எனக்கு அவகாசம் கிடைத்தது. அப்பொழுது மேற்படி சுப்ரமண்யய்யர் அவர்கள் வைதிக நியமம் தவறாமல் பிரதிதினம் செய்யவேண்டிய ஸ்நாநம், ஸந்த்யா, ஜபம், ஹோமம், தேவபூஜை, வைச்வதேவம், அதிதிஸத்காரம் முதலியவைகளை சிரத்தை பக்தியுடன் செய்து வருவதுடன் தன்னுடைய பிற்பகல் அவகாசம் முழுவதையும் தன் ஸந்த்ய சாகையாகிய ஸாமவேதத் க்ருஹ்ய ஸூத்ரங்களையும் பாஷ்யங்களையும் நேரில் மூலக்ரந்தங்களைவைத்துக்கொண்டு சர்ச்சைசெய்து தானும் தெரிந்துகொண்டு அனுஷ்டித்து ஊர்வாசிகளுக்கும் எடுத்து உரைத்துக்கொண்டு வருவதைப்பார்த்து எனக்கு மிக ஆனந்தமும் தர்மப்ரசாரவேலை ஸுலபமாவதற்கு சுபசகுனமாகவும் இருந்தது. இப் பெரியோரைப் போல் ஒவ்வொரு பிராமண கிராமத்திலும் ஸம்பத்தும் ஸாவகாசமும் உள்ள பிராமணர்களெல்லோரும் இவரை நிதர்சனமாகக்கொண்டு தங்கள் வாழ்நாளை நல்லவழியில் நடத்த ஸர்வவ்யாபியான ஆநந்தத்தாண்டவ நடராஜமூர்த்தியை மனதால் ப்ரார்த்தித்துக் கொண்டேன். கலிபத்தியிலும் க்ருதயுக அனுஷ்டானம் இருக்கிறது திண்ணம்.

S ஸ்வாமிநாத சாஸ்திரிகள்.

கோனேரிராஜபுரம்.

1—2—37ல் தர்ம பிரசார விஷயமாய் நான் கோனேரிராஜபுரம் சென்று அவ்வூர் ப்ரமுகர்களை சந்தித்தேன். அங்கே K. S. தேவராஜய்யர் என்கிற ஸ்ரீமான் நித்யாநுஷ்டானத்தை சாஸ்திரப்படி நடத்திக்கொண்டும் தன்னுடைய சாகையாகிய ருக்வேதத்தில் ஸங்கீர்த்தமான விஷயங்களை பல பெரியோர்களிடம் கேட்டுத்தெரிந்துகொண்டும் வருகிறார்கள். சாஸ்திரிகள் என்கிறஉலகப்பிரசித்திபெற்ற ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் தேவராஜய்யர் வேண்டுகோள்படி அவர் வீட்டில் தைத்ரிய உபநிஷத் அர்த்தத்தைப்பற்றியும் அத்யாத்ம உபாசனா மார்க்கங்களையும அவ்வூர் ப்ரமுகர்களுக்கு இரண்டு அற்புத உபந்யாசங்கள் செய்தனர். மேற்படியார் செய்த மேருயாத்ரை என்கிற அபூர்வ ஆச்சர்யங்கள் அடங்கிய புஸ்தகம் ஒன்றை அச்சிட்டு ஆராய்ச்சிக் காரர்களுக்கு இனாமாக தேவராஜய்யர் அளித்து வருகிறார். வேத ஆராய்ச்சி விஷயகாரியம் இவரால் ஓங்கிவளரும் என்று எனக்கு விளங்கிற்று. இவரும் ஸ்வாமிநாதய்யர், ராமஸ்வாமியய்யர், வெங்கட்டராமய்யர் முதலிய மற்ற ஊர் ப்ரமுகர்களும் ஒரு சாஸ்திர பண்டிதரை ஊரில்வைத்துக்கொண்டு தர்சநம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களை ஸேவித்து வருகின்றனர். இவ்வூரார்களை தஞ்சை வைதிக ஸங்கத்தில் சேர்ந்து தர்மம், வித்யை ஆராய்ச்சி முதலிய ஸங்க காரியங்களை நடத்தி தலைகட்டி வைக்கும்படி ஸங்க சார்பாக நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

S. ஸ்வாமிநாத சாஸ்திரிகள்.

(215172)
95

மார்சளியே

சுவாஸப்பைகளில் கடுமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால், விலை சரஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோ ரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R. Ramaswami Iyengar, Proprietor

கும்பகோணம்.

தர்மபிரசாரம்.

தஞ்சை வைதிகதர்ம சங்கத்தின் ஆதரவில் 30-1-37 ல் கும்பகோணம் டபீர் கீழப் படித்துறையில் வக்கீல் மகா-ாஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள் அக்ராசனத்தின் கீழ் "கீதோபதேச இரகஸ்யார்த்தம்" என்ற விஷயத்தை ராமாயணகேஸரி ப்ரும்மஸ்ரீ முத்துசாமிய்யர் அவர்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் அடியிற்கண்டவாறு உபன்யாஸம் செய்தார்.

பாண்டவரைவரும் பாண்டு புத்திரர்களாயினும், இவர்களுக்குத் தனித்தனித் தந்தை ஒவ்வொருவர் உண்டென்றும், தருமன், பவனன், இந்திரன், அசுவினி தேவர்கள் முறையே தந்தையாவாரென்றும் இவர்களின் அம்சாவதாரம் என்றும் பொறுமையில் பிருதிவி ஸ்தானத்தில் தருமனும், பலபராக்ரமத்தில் வாயுஸ்தானத்தில் பீமனும், ஆகாசஸ்தானத்தில் (Ether) அர்ஜுனனும், ஏனைய அக்னி, ஜலம் ஸ்தானங்களில் நகுல சஹதேவர்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும், மனுஷ்ய தத்துவத்துக்கு வேண்டிய பஞ்சபூதம் இவ்வாறு அமைந்திருக்கிறதென்றும், "ஐம்பெரும் பூதத்தானமைந்தவுடலம்பார்க்கும் நம்பனுமொருவனுள்ளே ஞானியாய் நடத்துகின்றான்" என்றும், அர்ஜுனன் ஜீவாத்மாவென்றும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பரமாத்மாவென்றும் த்ரௌபதி இன்னார் தந்தை என்று உணரப்படாத ஆச்சர்யமான யோகமாயையின் ஸாரோபம் என்றும், ஜீவாத்மாவாகிய மாயையும் பகவானுக்கு அதிசமீபமான சேர்க்கையில் இருந்துவந்தனவென்றும், கௌரவாதிகள் துக்கங்கள் தீமைகள் என்றும் ராஜரீகத்தையடையவேண்டுமானால் அதாவது தன்னடக்கம் வேண்டுமானால் பந்துக்களாயினும் முதலில் ஜயிக்கவேண்டுமென்றும், அறிவைப் புகட்டுவதற்கு யுத்தபூமி சரீரம் என்றும், ஜீவாத்மாபலமுறைஞானத்தை அடைய விரும்பினாலும் கெட்டவுணர்ச்சிகளின் தடையினால் அர்ஜுனன் அடிக்கடி சோகப்பட்டதே காரணம் என்றும் மனித சரீரம் ரதம் ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரதியென்றும், இதற்கு, இவ்வாறு மனிதசரீரம் 7- கூறு பூர்த்தியாகிறது என்றும், இதற்கு நிதர்சனமாகப் பாண்டவர்கள் பரமபதம் செல்லுகையில், மாயை த்ரௌபதி முதலிலும், ப்ருதிவி அல்லது தேகத்தின் ஸ்தூலக் கூறாகிய தருமன் கடையிலும், அந்தர்த்தானமாயினர் என்றும் வெகு விரிவாக எடுத்துரைத்த உபன்யாஸகரின் வாக்வன்மையைப் பற்றி யாவரும் புகழ்ந்து பேசினார்கள்.

நமது நிருபர்.

ஸாமவேத நவீன பாட கண்டனம்.

திருவிடமருதூர் ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி புஷ்ய மஹோத்ஸவ சமயத்தில் தாதுவரு தைமீ 12வக்குச் சரியான 25-1-36 9-வது திருநாள் இரவு மணி 8-முதல் 11½ வரையில் கோனேரிராஜபுரம் பிரும்மஸ்ரீ ஜி ராமஸ்வாமி ச்ரௌதிகள் அவர்களால் நடைபெற்ற ஸாமவேத பாராயண ஸமாராதனை கிருஹத்தில் ஆஸ்திகர்களான ஸாமவேத வித்வான்களின் மஹாசபையில் நடந்ததீர்மானம்என்னவென்றால் ஷை சபையில் பிரும்மஸ்ரீ ஸாமவேத வித்வான் சிதம்பரம் A. ராமஸ்வாமிச்ரௌதிகள் அவர்களை ஆஸ்திக ஸாமவேதவித்வான் ஸாமவேதத்தின் ஸ்வரங்களையும் மாத்ரா காலங்களையும் விசதமாகச் சொல்லி சம்சய நிவர்த்தி செய்ய வேணுமென்று கேட்டுக் கொண்டபடியினால் ஷை சிதம்பரம் ஏ, ராமஸ்வாமி ச்ரௌதிகள் அவர்கள் ஷை ஸபை உபன்யாஸம் செய்து ஸாமவிதானப்ராமணம் ஸம்ஹிதோபநிஷத் இவைகளுள்ள வசனங்களிலும் நாரத சிக்ஷாவசனங்களிலும் ஸாமவேதத்தில் உள்ளது 7-ஸ்வரங்களென்றும் அதில் ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் அவாந்தர பேதங்கள் உண்டு என்றும் அதினால் ஒரே ஸ்வரமானது தன்னுடைய உச்சநீசபாவத்தால் சிலவிடத்தில் உச்சம்போலவும் சில இடத்தில் நீசம்போலவும் தோணும். அதினால் ஸ்வராந்தரமில்லையென்றும் தவிரவும்மாத்ராலக்ஷண வசனங்களிலும் த்ராஹ்யாயன ஸூத்ரத்திலுள்ள வசனங்களிலும் 8-வித மாத்ரா காலங்கள் உண்டு என்றும் அநேக வசனங்களுடைய அர்த்தங்களை நன்றாக உபன்யாஸம் செய்து லக்ஷ்ய லக்ஷணங்களை ஸமன்வயம் செய்து எங்கள் சந்தேகத்தை நிவர்த்திசெய்தபடியால் வெகு காலமாக குருபரம்பரையாக சொல்லிவருகிற ஸாமவேதபாடமானது லக்ஷணானுஸாரி என்றும் ஶ்ரேய: வஹுஹவஹ்ர திஜ்ஞாநோவாரணை । ஹாஹாவஉ ராமத ஊதூ ஹ்ராவயாரணம் முதலான வசனங்களுக்கு விரோதமாக ஸ்வரங்களையும் மாத்ராகாலங்களையும் உச்சாரணம் செய்தால் உண்டாகும் என்கிற விஷயத்தில் சம்சயமில்லாதபடியாலும் வெகு காலங்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறபாடம் தான் லக்ஷணானுஸாரி என்றும் அதுதான் தர்மம் என்றும் எங்களுடைய தீர்மானம். இந்தச் சபை அத்யக்ஷர்களான அடியில் கண்ட வித்வான்கள் இந்த ஆராய்ச்சி ஸம்பந்தமான தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரித்தவர்கள்.

திருவிடமருதூர் ரா. மெ. வித்யாசாலை ஸாமவேத உபாத்தியாயர் வி. வெங்கட்டராமசாஸ்திரிகள், சேங்காலிபுரம் பிரஸங்கபாநு வைத்தினாத் சாஸ்திரிகள், ஷை யூர் அய்யா தீக்ஷிதர் ஷை யூர் சுந்தர தீக்ஷிதர், விஷ்ணம்பேட்டை பிச்சுசாஸ்திரிகள், கோனேரிராஜபுரம் விசுவநாத சாஸ்திரிகள், பாவக்கரை ராமச்சந்திர ச்ரௌதிகள், கோனேரிராஜபுரம் ஸ்ரீ ராமஸ்வாமி ச்ரௌதிகள், ஷை யூர் நாராயணஸாமி ச்ரௌதிகள், தப்பளாம்பிலியூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், பொன்னூர் வெங்கட்டராம சாஸ்திரிகள், தப்பளம்பிலியூர் வெங்கட்டராமசாஸ்திரிகள்.

ஒரு நிருபர்.

நாகூர்.

ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவம்.

புன்னாகவனமென்னும் திவ்ய க்ஷேத்திரமாகிய நாகூரில் அக்ரஹாரத்தில் து. வீராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்டும் ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யாள் சுவாமிகள் அவர்கள் அனுக்ரஹமும் பெற்று பாதத்தூளியும் பட்டதுமான ஸ்ரீ பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீகோபாலகிருஷ்ண பரமாத்மா ஸ்ரீ ராதாதேவியினுடைய விவாஹத்தை பிருந்தாவனத்தில் காந்தர்வவிதியினால் நடத்தப்பட்ட திவ்ய கல்யாண மஹோத்ஸவம் நாளது தாது-வரு தனுர்மாசம் 29உ ஆரம்பிக்கப்பட்டு மகர-மீ 5உ ஸ்ரீ ராதாகல்யாணம் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டும் அன்று மாலை பிரம்மஸ்ரீ N. சாம்பசிவய்யர் அவர்களால் ஸ்ரீமத் பகவத்கீதையின் பரம தாத்பர்யம் என்பதைப்பற்றி உபன்யாசமும் அன்று ராத்திரி மைலாப்பூரிலிருக்கும் நாகர்கோவில் பிரம்மஸ்ரீ ஸ்தாணுபாகவதர் அவர்களால் தக்க பக்கவாத்தியங்கள் பாட்டுகளுடன் சந்திரகாச சரித்திரம் கதாகாலக்ஷேபமும் 5உ ஆஞ்சநேய உத்வமும் நடைபெற்றது.

து. வீராசாமி அய்யர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam. Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆன்மதர்மம்

18 - 2 - 1937

4 ௯
22 7

215173

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஸூ மாசி-மீ 7உ 1937-ஸூ பிப்ரவரி-மீ 18உ | ஸ 7

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

டில்லி தர்பார் ஒத்திவைப்பு.

ஆறாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியார் லண்டனில் பட்டாபிஷேகம் முடிந்தபின் இந்தியாவிற்குவந்து டில்லியிலும் பட்டாபிஷேகத்தை நடத்திக்கொள்வாரென்று ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அவர் செய்துள்ள யோஜனைப்படி இந்திய விஜயமும் டில்லிதர்பாரும் காலம் குறிப்பிடாமல் மற்றொரு ஸமயத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இதற்குக்காரணம், அவர் புதிதாகச் சக்ரவர்த்தி பதவியேற்ற பிறகு ராஜ்ய கார்ய நிர்ப்பந்தத்தால் இங்கிலாந்திலேயே சிறிதுநாள் தங்கியிருக்க வேண்டியிருக்கிறதாம். வெளிதேசம் செல்லுவது உசிதமாயிராதாம்.

இந்தக்காரணத்தைத்தவிர, இந்தியாவின், பணநெருக்கடியும், இந்திய ராஜ்ய நிலைமையும் எலெக்ஷனில் காங்கிரஸ் வெற்றிபெற்றுவருவதும் இதற்குக்காரணமென்று ஓர் அபிப்பிராயம் பத்திரிகைகளில் காணப்படுகிறது.

காங்கிரஸ் கார்யக்கமிட்டி.

பிப்ரவரிமீ 27உ வார்தாவில் காங்கிரஸ் கார்யக்கமிட்டி கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள் எல்லா மாகாணத்திலும் எலெக்ஷன் முடிந்து காங்கிரஸின் நிலைமை தெரிந்து விடுமாதலால், காங்கிரஸ் காரர்கள் சட்டஸபைகளில் வேலை செய்யவேண்டிய க்ரமத்தைப்பற்றி மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்க உத்தேசமாம்.

லாலா ஹரிகிருஷ்ணலால் காலஞ்சென்றார்.

பெரிய தனிகரும், சிறந்த காங்கிரஸ்வாதியும், பஞ்சாப் மந்திரியாகவுமிருந்த ஸ்ரீமான் லாலா கிருஷ்ணலால் மார்பு அடைப்பு காரணமாக திடீரென்று 13ல் காலஞ்சென்றார்.

இவர் பாங்க் பணவிஷயத்தில் மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டும், இன்ஸால்வெண்டாகவும் ஆகியிருந்தார். இவருடைய பிள்ளை ஒருவர் மஹம்மதியாகியிருக்கிறார். அவர் இந்தியா சட்டஸபை மெம்பராயிருப்பதுடன் பாங்க் மோசடிக்குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுமிருக்கிறார்.

ஹரிஜன ஸேவா ஸங்கத்தில் பணப்பஞ்சமாம்!

காங்கிரஸ் மந்திரிகளின் உதவி எதிர்பார்க்கப்படுகிறதாம்?

டில்லியிலுள்ள அகில இந்திய ஹரிஜனஸேவாஸங்கத்தில் பெருத்த பணப்பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் மாகாணக் கிளைச்சங்கங்களுக்குப் பண உதவி இனிமேல் கிடைக்காதாம்.

முக்யமாக எலெக்ஷனில் காங்கிரஸ்வாதிகள் வெற்றிபெற்றுவருவதால், அவர்கள் மந்திரியாக வந்தோ, அல்லது வேறு வழியிலோ இந்த ஸேவாஸங்கத்திற்கு ஸர்க்காரிலிருந்து வேண்டிய பணஉதவி செய்யக்கூடுமென்ற நம்பிக்கையிருக்கிறதாம். இம்மாதிரி பணப்பஞ்சம் ஏற்பட்டதன் காரணமென்ன? திருவாங்கூர் ஆலயப்ரவேச சாதனைக்காக இந்த ஸங்கத்திலிருந்து லக்ஷக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டதென்ற வதந்தி உண்மையோ?

ராஜீய சாஸ்திரபோதனை.

சென்னை யூனிவர்ஸிடியின் தீர்மானம்.

சென்னை ஸர்வகலாசாலையைச்சேர்ந்த அகடமிக் கௌன்ஸிலின் கூட்டம் 11உ யன்று நடைபெற்றபோது, யூனிவர்ஸிடியில், அரசியல்சாஸ்திரம், பொது நிர்வாஹசாஸ்திரம் ஆகிய படிப்புகளைப் போதிக்க காலேஜ்களில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இண்டர்மீடியேட் வகுப்பில் தேறியபின் 2வருஷம் இந்த வகுப்பில் படிக்கவேண்டும். இதில் தேறுகிறவர்களுக்கு டிப்ளோமாவும் அளிக்கப்படும்.

ரயில்வே வேலை நிறுத்த முடிவு.

வங்காள நாகபுரி ரயில்வேயில் வேலைக்காரர்கள் சில வாரங்களாக வேலைநிறுத்தம் செய்திருந்த விஷயம் இப்போது முடிந்து அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள் தொழிலாளத் தலைவர் ஸ்ரீமான் கிரி. இவ்விஷயத்தில் தீவ்ர முயற்சி எடுத்துக்கொண்டு திருப்திகரமான ராஜியை உண்டுபண்ணினார். ரயில்வே அதிகாரிகளும் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டனராம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்வேலட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம், டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச கண்டனம்.

பலவிடங்களில் பொதுக்கூட்டம்.

வைதிக தர்மசங்கம் கும்பகோணம்.

இச்சபையின் பிரசாரகர்களான ஸ்ரீமான் S. சுவாமிநாத சாஸ்திரிகள் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியார், M ராமாராவ் ஆகிய மூவர்களும் 6, 7உ களில் மதுரையில் நடந்த ஸநாதன தர்ம மாகாண மகாநாட்டின் டெலிகேட்டுகளாகச்சென்று பிரசாரம் செய்து வந்தனர். அங்கு நிறைவேற்றவேண்டிய தீர்மானங்களில் மூன்றாவதான தீர்மானத்தை ஸ்ரீமான் S. சுவாமிநாத சாஸ்திரி பிரேரித்து தர்மம் பகவானால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் அதைக் கெடுக்க யார் வேண்டுமானாலும் என்ன முயற்சி செய்தாலும் முடியாதென்றும் நாம் தர்மங்களை அறிந்து ஒழுகுவதோடு கூட பிறருக்கும் உபதேசிக்கவேண்டும் என்றும் ஆகவே பிரதி கிராமத்திலும், டவுனிலும் ஜில்லாவிலும் இத்தகைய சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும் கூறினர். ஸ்ரீமான் ஸ்ரீமான் அ. ராமானுஜ தாதாசாரியார் தர்ம ஸம்ரக்ஷணமானது ஜனங்கள் அதற்கு அளிக்கும் ஆதரவைப் பொருத்திருக்கிறதென்றும் வேதங்களில் கிடைத்திருக்கும் ஆதாரங்களிலிருந்து பழையகாலம் தொடங்கியே. வலுத்திருந்த தர்மத்தின் தன்மையை விஸ்தரித்து அத்தீர்மானத்தை ஆமோதித்தார். பிறகு ஸ்ரீமான் M. ராமாராவ் அதைத் தாங்கிப்பேசிய போது "பத்மநாபஸ்ய தாஸ:" என்ற தத்புருஷ ஸமாஸம் மாறி "பத்மநாப: தாஸ: யஸ்ய" என்ற பகுவ்ரீஹி ஸமாஸமாகி தர்மம் குன்றி வரும் இக்காலத்தில் தான் தர்மப் பிரசாரம் செய்யவேண்டியது அவசியமென்றும், யாக்ஞவல்க்யர், வைசம்பாயனர் காலத்திலேயே தர்ம சங்கங்கள் இருந்துவந்ததாயும் அக் கூட்டங்களுக்கு வராவிட்டால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்படும் என்ற கடுமையான அபராதம் விதிக்கு வந்ததாயும், ஸ்ரீமன் நாராயணனை எப்போதும் தியானிக்கவேண்டும் என்ற நிஜமொரு தத்வத்தைப் பிரசாரம் செய்யவே வேதவியாஸர் ஒரு நூலை இயற்றாது பற்பல வேத விபாகத்தையும், சூத்திரங்களையும், பதினெட்டு புராணங்களையும் இயற்றியுள்ளார் எனவும் கூறினர். இம்மாதிரி மூன்று மதங்களைத் தழுவிய இம் மூவரும் முறையே இதை ஆதரித்திருக்கே இவ்வித ஸ்தாபனங்களில் மத பேதமில்லாமல் சகோதர பாவத்துடனும் ஒற்றுமையுடனும் நாம் ஒத்துழைத்து ஸநாதனதர்மத்தைப் பிரசாரம் செய்யவேண்டும் என விளங்கவில்லையா?

நமது நிருபர்.

ஹிந்து மத்யக்கமிட்டி. காரைக்குடி.

4-2-37 வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு தேவகோட்டை வக்கீல் ப்ரம்மஸ்ரீ S. ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் அவர்கள் தலைமையில் ஸநாதநிகளின் கூட்டம் நடைபெற்றது. அடியில் கண்ட தீர்மானங்களைப்பற்றி விரிவாக ஸபையோர்களுக்கு எடுத்து விளக்கப் பெற்று அனைவர் ஏகமனதாய் நிறைவேறின.

தீர்மானங்கள்

1. தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஆகம சாஸ்திரங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் விரோதமாக திருவாங்கூர் மகாராஜா அவர்கள் கோவில்களை தீண்டாதார்களுக்கும் திறந்துவிட்டதை மிகவும் பலமாக இக்கூட்டம் ஆக்ஷேபிக்கிறது.

2 மேன்மைதங்கிய கொச்சி மஹா ராஜா அவர்கள் தங்கள் ஸம்ஸ்தானத்திலுள்ள கோவில்களின் புனிதத் தன்மையைக் காப்பாற்றியும் வைதீக ஹிந்து மதத்தின் கௌரவத்தை நிலை நிறுத்தியும் ஸநாதன தர்மத்தை பாதுகாத்துவரும் உறுதிக்கு இந்தக் கூட்டம் நன்றி பாராட்டுகிறது.

3. திருவாங்கூர் ஸீனியர் மகாராணி அவர்கள் தனக்கு சொந்தமான ஹிந்துக் கோவில்களின் புனிதத்தன்மையை நிலைநிறுத்தியதில் கொண்ட உறுதிக்கு இக்கூட்டம் நன்றி பாராட்டுகிறது.

ஒரு நிருபர்.

மதுராந்தகம்.

மஹா ஸம்ப்ரோக்ஷணமும் ஸநாதநிகள் கூட்டமும்.

ஸ்ரீ மதுராந்தக மென்னும் செங்கல்பட்டு ஜில்லாவைச்சேர்ந்த திவ்ய க்ஷேத்ரத்தில் நாளது தை-மீ 28உ (5-2-37) வெள்ளிக்கிழமை ஸ்ரீ காஞ்சீபுரம் முதலான க்ஷேத்ரங்களில் திருமங்கை யாழ்வாரைப்போல் திருப்பணி செய்துவந்த ஷை க்ஷேத்திரத்திலும் விஸ்தாரமான மண்டபாதிகளை, அங்கு கோயில் கொண்ட கருணாகரனான கோதண்ட ராமனைப் போல் உன்னதங்களாக செய்து உவந்த (மார்வார்ஜோத்பூர்ஸ்டேட் பீட்வானமங்னிரும் ராமகுமார பாங்கர்) என்னும் ஷேட் அவர்களால் ஸ்ரீ உ-ப-வே திருக்கோட்டியூர் மஹாவித்வான் ஸ்ரீ ஸௌம்ய நாராயணாசாரியர்ஸ்வாமியைக்கொண்டு பல மந்தரஞ்ஞர்களான அர்சகர்களும் வேத பாரங்கதர்களான வைதிக சிகாமணிகளும் ஹோமங்கள் வேதபுராண மதக்ரந்த பாராயணங்கள்செய்ய மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடத்தப்பட்டது. இதற்கு காஞ்சீபுரமிருந்து பரம-பரி ஸ்ரீகோழியாலம்ஸ்வாமியும் பரம-பரி கருடபுரம்ஸ்வாமியும் பல பெரியாரும் எழுந்தருளினர்கள். அன்றிரவு ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி ஜானகியும் இலக்ஷ்மணனும் இரு பக்கமுமிலங்க ஊர்வலம் கண்டருளினர்.

ஷை உத்ஸவத்திற்காக சென்னையிலிருந்து மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜி ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமி ஸ்ரீமான் டி. சுதர்சனமய்யங்கார் முதலிய பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

4-2-37ல் பகல் 3 மணிக்கு ஷை உத்ஸவத்திற்காக வந்திருந்த கோஷ்டீபுரம் ஸ்வாமியினால் அதிஷ்டானம் செய்யப்பட்ட பெரும் கோஷ்டியில் திருவாங்கூர் ஆலயப்ரவேச அனுமதி தவறென்றும், வரும் எலெக்ஷனில் தர்ம விரோதம் செய்வதில்லை என்று எழுதிக்கொடுத்தவருக்கே ஓட்டுக்கள் கொடுக்கவேண்டுமென்றும் சென்னையில் நாளது பிப்ரவரி 6, 7 தேதிகளில் நடந்த தென்னிந்திய ஸநாதனிக் கூட்டத்தை யாவரும் பின்பற்றவேண்டுமென்றும் ஸ்ரீமான் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யரால் சொல்லப்பட்ட பின் ஸ்ரீ உ-ப-வே திருக்கோட்டியூர் ஸ்வாமியாரால் தர்மத்தைப்பற்றி அழகாய் உபன்யஸிக்கப்பட்டது.

ப—ஸ்ரீ.

ஆழ்வார் திருநகரி.

நேற்று ஞாயிறன்று இந்நகர் ஆழ்வார் தேவஸ்வான கோபுரவாசல் மண்டபத்தில் பிரும்மாண்டமான பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் திரளாக விஜயமாயிருந்தனர் ஸ்ரீ வைகுண்டம் பிடேல் அட்வொகேட் ஸ்ரீமான் டி. எஸ் தாததாசாரியார் தலைமை வகித்தார். சமீபத்தில் திருவாங்கூர் மஹாராஜாவால் தீண்டாதார் ஆலயப்ரவேச அனுமதியளித்து செய்யப்பட்ட அதிக்ரம ஆர்டரைக் கண்டித்தும் மைசூர் கொச்சி சமஸ்தானங்களில் விஷமப்ரசாரங்களுக்கு எதிர்ப்பாக காரியம் நடைபெற்று வருவதற்காக மேற்படி மகாராஜாக்களைப் பாராட்டியும் காரப்பங்காடு ஸ்ரீ உ-ப-வே தேசிகவரதாச்சாரியார் முதலிய பல பண்டிதர்களாலும், பிரமுகர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. சனி ஞாயிறில் நடைபெற்ற சென்னை மாகாண சனாதன தர்ம மகாநாட்டுத் தீர்மானங்களை ஆதரிப்பதாகவும் யாவரும் க்ரியாம்சையில் நிறைவேற்றிவைத்து விஷமச்செயல் புரிவதில் தலைசிறந்து விளங்குவர்கள் சட்டசபைக்குச் செல்லாவண்ணம் கவனித்துக்கொள்ள வேண்டுமெனவும் ஏகமனதாய் முடிவு செய்யப்பட்டன.

நமது நிருபர்

கோபிசெட்டி பாளையம்.

சென்னை மாகாண சநாதனதர்ம கான்பரன்சின் கோரிக்கையின்படி கோபிசெட்டி பாளையத்தில் பெருமாள் கோவிலில் 7-2-37 சாயங்கிரம் 3 மணிக்கு சவர்ண சநாதனிகள் கூட்டம் நடைபெற்றது. பிரம்மஸ்ரீ A. செல்லப்பா சாஸ்திரியார் அக்கிராசனம் வகித்தார். சேலம் அட்வகேட் மகா-ள-ள-ஸ்ரீ Y. K. சேஷய்யா "மத விஷயங்களில் சட்டம் செய்வது உசிதமில்லை. அத்தகைய சட்ட விஷயமாய் சநாதனிகள் கடமை" என்பதைப் பற்றி உபன்யஸித்தார். முடிவில்

(a) திருவாங்கூர் சமஸ்தான தேவாலயப் பிரவேச உத்திரவைக் கண்டனம் செய்வதாயும்,

(b) அத்தேவாலயங்கள் பழைய ஆகம சாஸ்திர முறையில் முன்போல் பரிபாலிக்கப்பட வழிதேடவும்,

(c) மதம், மத சம்பந்தமான வாழ்க்கை, சமூக சட்டம் ஆகிய இவற்றைத் தாக்கும் எவ்வித சட்டம் அல்லது அதிகார திட்டங்களை எதிர்ப்பதாயும், சென்னை சநாதன சபைத் தீர்மானங்களை அநுசரிப்பதாயும் அசெம்பிளி, கவுன்சில் அபேக்ஷகரிடம் எழுத்துமூல்யமானதும் சந்தேகாஸ்பதம் இல்லாததுமான வாக்குறுதிகள் வாங்கவேணுமென்பதாயும்,

(d) சனாதன தர்ம பரிபாலனத்தில் கொச்சி மகாராஜா கள்ளிக்கோட்டை ஜாமொரின் (Zeomarin) ஆகிய இவர்கள் சிரத்தையை பாராட்டுவதாயும்,

(e) இப்போதைய தேவாலயப்பிரவேச உத்திரவை ரத்துசெய்து பழைய ஆகமமுறையை அனுஷ்டானம் செய்ய திருவாங்கூர் சமஸ்தானத்தை வேண்டிக்கொள்வதாயும்.

தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

ஷை தீர்மானங்களின் நகல்கள் ஷை மூன்று சமஸ்தானங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஒரு நிருபர்.

ஓர் ஸந்தேகம்.

இக் கலியுகத்தில் பிரதிலோம விவாகம் அதாவது தாழ்ந்த ஜாதி புருஷர்கள், மேல் வகுப்புப் பெண்ணை கலியாணம் செய்து கொள்வது கூடாது என்பதுபோல் மேல் ஜாதி புருஷர்கள் கீழ் ஜாதிப் பெண்ணை மணப்பதும் தவறு? அல்லது கூடுமா?

ப. ஸ்ரீ.

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமம்.

(27—1—37 தொடர்ச்சி)

சாச்வதீ 951

எப்போதும் இருப்பவள்.

1. 'சாச்வதஸ்து த்ருவோ நித்ய:' என்ற அமரகோசவசனத்தின்படி நித்யமாக இருப்பவள் சாச்வதீ.

'தேஷாம் ஸித்தி: சாச்வதீ நேதரேஷாம் |' (ச்ருதி)

2. சச்வத் என்றால் திரும்பத்திரும்ப என்று அர்த்தமாகையால் திரும்பத் திரும்பத் தன் பக்தர்களால் உபாஸிக்கப்படுகிறவள் என்றும் சொல்லலாம்.

சாச்வதைச்வர்யா 952

நித்யமான ஐச்வர்யத்தையுடையவள்.

1. அல்லது, இந்த நாமத்தை முக்தியதிலிருந்து ஈசாச்வதைச்வர்யா என்றும் சொல்லலாம். அப்போது, ஈச—ஜகதீச்வர்களான ப்ரம்ஹா முதலானவர்கள்(பஞ்சப்ரேதங்களாக இருக்கும்போது, அச்வதா—அச்வமாயிருப்பது (அதாவது வாஹனமாயிருப்பது) என்பதான, ஐச்வர்யத்தையுடையவள் என்று அர்த்தம். அதாவது, பஞ்சப்ரேதாஸனாரூடா என்று தாத்பர்யம்.

சர்மதா 953

ஸுகத்தைக் கொடுப்பள்.

சம்புமோஹினீ 954

சிவனை மோஹமடையச் செய்பவள்.

1. பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதினால் பரமசிவனுக்கு சம்பு, சங்கரன் என்ற பெயர்களுண்டு.

2. பரமசிவன் ஜிதேந்த்ரியராயிருந்தபோதிலும் அம்பாளிடம் ஈடுபட்டு மோஹித்திருப்பதால் அம்பாளுக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது.

தரா 955

ப்ருத்வீ ரூபமாயிருப்பவள்.

1. அல்லது, ஸகல ஜகத்தையும் தாங்குவதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

2. அல்லது, ல என்ற அக்ஷரஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம். லகாரமானது சைல, வன, கானனங்களையுடையதும், ஐம்பத்தோரு பீடங்களையும் ஸகலதீர்த்தங்களையுடையதுமான ப்ருதிவீ தேவியைக் குறிக்கும்.

'லகார: ப்ருதிவீதேவீ ஸசைலவனகானனா |
பஞ்சாசத் பீடஸம்பன்னா ஸர்வதீர்த்தமயீ பரா ||'
(ஞானார்ணவம்)

தரஸுதா 956

(ஹிமவத்)பர்வதத்தின் புத்ரியாயிருப்பவள்.

தன்யா 957

க்ருதார்த்தையாயிருப்பவள்

1. அல்லது, தனத்தைக்கொடுப்பவள், தனத்தையுடையவள் என்ற அர்த்தங்களும் சொல்லலாம்.

2. அல்லது, 'மங்களா பிங்களா தன்யா' என்பதாக ஜ்யோதிஷ சாஸ்த்ரத்தில் ப்ரஸித்தமான தன்யா என்ற யோகினீ விசேஷரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

3 சரீரத்திலிருந்து ஜீவன் பிரிவதாகிய கடைசிகாலத்தில் நான்குவிதமான சிந்தைகள் இருக்கக்கூடுமென்றும், அவற்றின் பெயர்கள் ஆர்த்த, ரௌத்ர, தன்ய, சுக்லங்களென்றும் பவிஷ்யோத்ர புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் தன்யா என்று சொல்லப்பட்ட த்யானரூபமாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

ஆர்த்தமென்பதின் லக்ஷணம்:—

'ராஜ்யோபபோக, சயனாஸன ஸாதனேஷு
ஸ்த்ரீ கந்த மால்ய மணி வஸ்த்ர விபூஷணேஷு |
இச்சாபிலாஷம் அதிமாத்ரம் உபைதி மோஹாத்
த்யானம் தத் ஆர்த்தமிதி ஸம்ப்ரவதந்தி ஸந்த: ||' என்றும்,

ரௌத்ரமென்பதின் லக்ஷணம்:—

'ஸஞ்சேதனைர் தஹன தாடன பீடனைச்ச
காத்ர ப்ரஹார தமனைர் விநிக்ருந்தனைச்ச |
யஸ்யேஹ ராக உபயாதி ந சானுகம்பா
த்யானம் து ரௌத்ர மிதி தஸ்ய வதந்தி ஸந்த: ||' என்றும்,

தன்யமென்பது:—

'ஸூத்ரார்த்த மார்கண மஹாவ்ரத பாவனானி
நிர்பந்த மோக்ஷ கமனாகதி ஹேது சிந்தா |
பஞ்சேந்த்ரியாத்யுபசமச்ச தயா ச பூதே
த்யானம் து தன்யமிதி தத் ப்ரவதந்தி ஸந்த: ||' என்றும்,

சுக்லமென்பது

'யஸ்யேந்த்ரியாணி விஷயைர் ந விசர்ச்சிதானி
ஸங்கல்ப நாசன விகல்ப விகாஸ யோகை: |
தத்வைக நிஷ்ட த்ருதியோக ப்ருதாந்தராத்மா
த்யானம் து சுக்லமிதி தத் ப்ரவதந்தி ஸந்த: ||'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச்சொல்லுகையில், ஸ்ரக், சந்தன், வனிதாதி போகங்களில் ஆசையுடனிருப்பதை ஆர்த்தமென்றும், தான் கஷ்டங்களை அனுபவித்திருந்தபோதிலும் மேலேசொல்லிய ஸ்ரக் சந்தனாதிகளில் உபேக்ஷை ஏற்படாமல் ஆசையாயிருப்பதை ரௌத்ரமென்றும், ஸூத்ரார்த்தங்களாலும் மஹாவ்ரதங்களாலும் ஏற்படும் பாவனையோடும் பாச மோக்ஷங்களை பற்றிய அறிவுடனும் இந்த்ரியாதிகளின் சமனத்தோடும் ஸகல பூதங்களிடத்தில் தயையோடும் இருப்பதான த்யானத்திற்கு தன்யமென்றும், விஷயங்களில் பற்றில்லாத இந்த்ரியங்களோடும் தத்வமொன்றிலேயே நிலையோடு கூடியதுமான த்யானத்திற்கு சுக்லமென்றும் பெயர். இவ்விதமான த்யானபேதங்களால் ஏற்படும் பலன்களைப்பற்றி

'ஆர்த்தே திர்யக் அதோகதிச்ச நியதா த்யானே ச ரௌத்ரே [ஸதா
தன்யா தேவகதி: சுபம் பலமதோ சுக்லே ச ஜன்மக்ஷய: |
தஸ்மாத் ஜன்மருஜாபஹே ஹிததரே ஸம்ஸார நிர்வாஹகே
த்யானே ச்வேததரே ரஜ: ப்ரமதனே குர்யாத் ப்ரயத்னம் [புத: ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஆர்த்தத்தில் (புல், பூண்டு, பக்ஷி முதலான) திர்யக் பிறப்பையும், ரௌத்ரத்தினால் அதற்கும் கீழான அதோகதியையும், தன்யமென்பதினால் தேவலோகத்தையும், சுக்லமென்பதினால் முக்தியையும் அடைவதாகச் சொல்லப்பட்டது.

தர்மிணீ 958

தர்மஸ்வபாவத்தை யுடையவள்.

1. அல்லது, ஆனந்தானுபவம், நித்யத்வம் முதலான தர்மங்களோடிருப்பவளென்றும் சொல்லலாம்.

தர்மவர்த்தினீ 959

தர்மத்தை வ்ருத்திசெய்கிறவள்.

1. அம்பிகை தன்பக்தர்களுக்கு ஜிதேந்த்ரியத்வம், சௌசம், மாங்கள்யம், பக்தி முதலிய தர்மங்களை அதிகரிக்கச் செய்வதாக

'ஜிதேந்த்ரியத்வம் சௌசம் ச மாங்கள்யம் பக்திரேவ ச |
சங்கரே பாஸ்கரே தேவ்யாம் தர்மோऽயம் மானுஷ: ஸ்ம்ருத: ||
த்யாத: ஸாம்ப இமான் தர்மான் வ்ருத்திம் நயதி தேஹினாம் |'

என்று வாமன புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. வ்ருத் என்ற தாதுவுக்கு சேதனம் (துண்டாகச் செய்கிறது) என்ற அர்த்தமுண்டு. தர்மமென்பது ப்ரம்ஹம் அதிஷ்டானமாயிருக்கும் த்ருச்ய ஜாதம் (கண்ணுக்குப் புலப்படுகிறவை) எல்லாவற்றையும் குறிக்கும். அவை தர்மமாத்ரமாயிருப்பதில் வித்யாஸத்தோடு இருப்பதாக அம்பாள் தோன்றச்செய்வதால் தர்மவர்த்தினீ என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

லோகாதீதா 960

லோகங்களுக்கெல்லாம் அப்பாலிருப்பவள்.

1. அதாவது, இந்த்ரலோகம் முதலாக விஷ்ணுலோகம் முடிய இருக்கும் லோகங்களையெல்லாம் கடந்ததும் பரமசிவனுடைய ஸ்தானமானதும் மஹாகைலாஸமென்ற பெயருடையதுமான லோகத்திலிருப்பவள் என்று அர்த்தம். பரசிவபுரமானது ஸர்வலோகங்களுக்கும் அதீதமாயிருப்பது சிவதர்மோத்தரத்தில், கீழிருக்கும் லோகங்களை வர்ணித்துவிட்டு

'ஜ்ஞேயம் விஷ்ணுபதாத் ஊர்த்வம் திவ்யம் சிவபுரம் மஹத் |'

என்று ஆரம்பித்து

'இத்யேதத் அபரம் தூப்யம் ப்ரோக்தம் சிவபுரம் மஹத் |
தேஹினாம் கர்மநிஷ்டானாம் புனராவர்த்தனம் ஸ்ம்ருதம் ||'

என்பதாக கர்மடர்கள் அடைவதான சிவபுரத்தை வர்ணித்துவிட்டு

'ஊர்த்வம் சிவபுராத்ஜ்ஞேயம் ஸ்தானத்ரயம் அனுத்தமம் |
நித்யம் பரமசுத்தம் ச ஸ்கந்தோமாசங்காரத்மகம் ||'

என்று ஆரம்பித்து

'யே ஸம்ப்ராப்தா: பரஸ்தானம் த்யானயோகரதா நரா: |
ந தேஷாம் புனராவ்ருத்தி: கோரே ஸம்ஸார ஸாகரே ||
ஸர்வக்ஞா: ஸர்வகா: சுத்தா: பரிபூர்ணா மஹேச்வரா: |
சிவதுல்ய பலோபேதா: பரம் சிவபுரம் கதா: ||'

என்பதாக பரசிவபுரத்தை வர்ணித்து அங்கு போகிறவர்களுக்கு புனராவ்ருத்தி கிடையாதென்பதாகச் சொல்லப்பட்டது.

2. அல்லது, லோகங்களுக்கு—ஜீவன்களுக்கு, அதீதமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

குணாதீதா 961

குணங்களுக்கு அதீதமாயிருப்பவள்

ஸர்வாதீதா 962

ஸர்வத்திற்கும் அதீதமாயிருப்பவள்.

1. அல்லது, சப்தங்களுக்கெல்லாம் அதீதமாய் (அவற்றால் குறிக்க முடியாதவளாய்) இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'சப்தாதீதம் பரம் ப்ரம்ஹ கணா ரஹிதம் ஸதா |
ஆத்மஸ்வரூபம் ஜானீஹி .... |'
(ஞானார்ணவம்).

வாரக்குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா)

வரம்பு மீறிய செயல். சென்னை நகரபரிபாலன ஸபை திருவாங்கூர் மன்னனுக்குவரவேற்பளிக்க தீர்மானித்தது. அது வரிசெலுத்துபவரான தங்களுக்கிஷ்டமில்லை என்றும் தங்கள் சார்பாக ஷை ஸபை வரவேற்பு அளிக்கக் கூடாதென 3பிரிவுகளிலிருந்து ஸபை தலைவருக்குக்கண்டனம் சென்றது. அதை கவனியாது வரவேற்பளித்தது வரம்பை மீறியதன்றோ? இத்தகைய சமயத்தில் இனி 40 பிரிவுகளிலும் கிளர்ச்சி வேண்டும்.

30-ஆண்டிற்கோர் கும்பாபிஷேகம். செய்யவேண்டும். இல்லையேல் அர்ச்சைகளில் மூர்த்திகரம் குறையுமென்பது ஆகம விதி. சிலமனிதருக்கும் இது பொருந்தும்போலும்! ஸ்ரீமான் சுந்தரராமய்யர் என்னும் பழுத்த மத அபிமானமுள்ள கிழ வீர ஸிம்ஹத்திற்கு பிரும்மஸ்ரீ வேதாந்தகேஸரியால் ஏற்பட்ட வீரியம் குன்றிவிட்டதுபோலும். ஆதலால் தான் ஸமீபகாலந்தொட்டு சாஸ்திரீயமரியாதையைத் தாண்டி போலி கருணையில் புகுந்தாரோ? என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

பேய் கூட்டத்தில் பெண்மணி. விழுப்புரத்தில் கற்பரசிகளது கடமையை இழந்த சில தற்கால பெண்களென்போர் கூடி பற்பல அதர்மம் நிறைந்த தீர்மானங்களைச் செய்தனர். அதில் பெண்மக்களுக்குரிய குணம் வாய்ந்த ஓர் கிழவி "விதவையை மணந்த ஒருவன் நீங்கள் கூறியபடி "டைவோர்ஸ்" செய்தால் அவள் கதி என்ன? எத்தனை புருஷனை மணப்பது?" என்று கேட்டாள். பெண்மக்களும் கெடாதபடி புராணப்ரவசநம் செய்யும்; ஆதலால் இவ்வேளைகளில் கிராமந்தோறும் புராணம் நடத்தவேண்டும்.

நரியை நம்பலாமா? இறந்த குழந்தையை சுடுகாட்டில் வைத்துக்கொண்டு தந்தை கதற ஓர் வஞ்சகநரி இறந்தவர் பிழைக்கலாம். பொழுதுபோமளவும் இங்கிரு என்றது. ஓர் கழுகு அதை கேளாதே. இப்போதே நீ போ என்றதாம். முடிவில் சிவனருளால் குழந்தை பிழைத்ததென பாரதம் ஓர் கதை கூறுகிறது. அதேபோல் மிகதந்திரியான ஸ்ரீமான் ஸி. ரா. ஆசாரி ஓட்டுக்காக கும்பகோணத்தில் தந்திரமாக பேசுகிறார்? யாரிவரை நம்புவர்? இவர் குணமறிந்ததே? ,

இவரைத் தோற்கடிப்பீரா? பி. ஏ. க்களது வாக்பலத்தால் சட்டஸபைக்கு நுழைய இவர் விரும்புகிறார். இவருக்குப் போட்டியாக S. ராஜகோபாலாசாரியார் B.A., B.L., நிற்கிறார். அவர் ஸநாதநி. காங்கிரஸிலும் உள்ளவர். அவருக்கு அபரிமிதமான வாக்கையளித்து காந்தி ஸம்மந்தி கட்டிய பணத்தை இழக்கும்படிசெய்தால் ஸநாதநிகள் சென்னை மாகாணத்தையே ஜயித்ததாகும்.

யாருக்கு செல்வாக்கில்லை? இந்திய சட்டசபையில் பெண்கள் சொத்துரிமை சட்ட விஷயமாக பேசும்போது ஒருவர் ஸநாதநிகளுக்கு செல்வாக்கில்லை எனத் தேர்தலில் நிச்சயமாய்விட்டதென்றார். இரண்டோரிடத்தில் சில ஸநாதநிகள் நின்றார்களே தவிர கட்டுப்பாடாக எல்லா மாகாணங்களிலும் பிரதிநிதியை நிறுத்த இவர்கள் முன்வரவில்லை. அப்படி தக்க பிரசாரத்துடன் வேலைசெய்தால் ஆஸ்திகமக்கள் நிறைந்த இந்நாட்டிலே பல காங்கிரஸ்காரர் கட்டிய பணத்தை இழப்பர்.

ராமகிருஷ்ணர் வாழி. சென்னையில் நடந்த தர்மஸபையின் கூட்டம், பக்தர்களின் உத்ஸாஹம், ஸாதுக்களின் அழகிய பேச்சு, பந்தலின் அழகு, விசித்ர விளக்கு, நான் முன் நான் முன் என பணம் புஷ்பம்போல் சொரிந்தது; தீர்மானங்கள் முதலியன ஆஸ்திகர் மனதிற்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. திருவாங்கூர் மன்னனும், அவர் திவான் ஸர். ஸி. பியும் அந்தப் பந்தலில் பொறுமையுடன் ஓர் முகூர்த்தகாலம் உட்கார்ந்திருந்தால் தனது செயலை திருத்தியிருப்பர்! அதற்குத்தான் அன்று அவ்வாசனை பத்மநாபன் அழைத்துவந்தாரோ என நினைத்தோம். இச்சிறப்பிற்கெல்லாம் காரணமான பிரும்மஸ்ரீ ராமஸ்வாமியும், அய்யர்வாளும், ஸ்ரீ கிருஷ்ணதாசும் நீடூழிவாழ.

அரிய காக்ஷியே! தர்மரக்ஷகரான பார்த்தஸாரதி ஆலயத்தைச்சுற்றி வேதபாராயண வாத்யகோஷ ஜயகோஷத்திடையே ஊர்வலம் வந்து கண்ணன் அடிச்சுவட்டிலே ஸபை ஆரம்பித்ததும், பாலக்காடு, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, தஞ்சை, கும்பகோணம், திருநெல்வேலி, நல்லூர், காரக்குடி முதலிய பற்பலவிடங்களிலிருந்து பல ப்ரதிநிதிகள் வந்தது, கார்யதர்சி ஸ்ரீ மதாசார்ய அநுக்ரஹத்தைக் கூறும்போது ஆநந்தக்கண்ணீர் சொரிந்ததும், பல துஷ்டர்கள் தக்க ஏற்பாட்டுடன் ஸபையைக் கலைக்க முயற்சித்தும், பயன்படாததும், பார்த்தால் தைவஸான்னித்யமங்கு பூர்ணமாயிருந்ததென அறியலாம்!

உண்மைதானோ? திருவாங்கூர் மூத்த மஹாராணியின் செயலால் (அதாவது தனது சொந்த ஆலயத்தில் மஹாராஜா சண்டாளனுக்கு ஆலயத்தைத் திறந்துவிட்டதால் வரக்கூடாதென்றதால்) மஹாராஜாவின்மனம்திரும்பி ஆலய உத்தரவை மாற்றலாமா? எனக்கருதியதாகவும் அவரை உத்ஸாகப்படுத்தவே திவான் அவரை சென்னைக்கழைத்துவந்தது என்றுமில்லாதபடி பல ஆர்ப்பாட்டமான கார்யங்களைச் செய்கிறார் என்று எங்கும் ஜநவதந்தி. இது உண்மைதானென எண்ணுவதற்கேற்ற பல காரணங்களிருக்கின்றன.

விருந்துகள்!! திவான் தானொரு விருந்தளித்ததோடு பலரை அங்ஙனம் செய்யும்படி தூண்டுகிறார். பல ஆடல் பாடல்களிலும் கண்காக்ஷிகளிலும் திருவாங்கூர் மன்னன் ஸம்பந்தப்படும்படி செய்கிறார். ரயிலடியில் புஷ்பபந்தலும் கவர்னர் கார்யதர்சி வரவேற்கும்படி செய்ததும் முந்திய சங்கையை பலப்படுத்துகிறது!

கண்ணைக்கவரும் விளம்பரம்!! திருவாங்கூர் அரசன் ஆணையை கண்டித்தும் தார்மிகரை தேர்ந்தெடுக்கும்படியும் பலமான கொட்டை எழுத்துக்களில் சென்னை நகர் பூராவும் சுவர்களில் சென்னை ஸநாதன தர்மஸபை விளம்பரம் செய்கிறது. தேசிய ஸபை தலைவன் தார்மிக வழிக்கு வாக்களிக்காததால் எந்தக் கக்ஷியைச் சார்ந்தவராயினும் தர்மத்தில் தலையிடுவதில்லையென வாக்களித்தால் வாக்களி. இல்லையேல் பேசாதிரு என கார்யதர்சி தெரிவிக்கிறார்.

உண்மை வெளியாகிறது! திருவாங்கூரில் வேநனது ஆக்ஷி நடப்பதை நேரில்கண்டபலர் கூறுகிறபடியும் கடிதம் மூலமாக தெரிவிக்கிறபடியும் பார்த்தால் தற்கால பத்ரிகைகளும் நிரூபர்களும் எவ்வளவு கட்டுப்பாடாக உண்மையைத் திரித்து கூறுகின்றனரென அறியலாம். கண்யமும் ஆஸ்திகதையும் உள்ளவர் அக்கோயிலுக்கும் ஸத்ரத்திற்கும் செல்வதில்லை. சண்டாளப்ரவேசத்தைக் கண்டித்து எவரும் பேசக்கூடாதாம். அதிகாரிகளும் பென்ஷன் வாங்குபவரும் சண்டாளருடன் ஆலயம் செல்ல நிர்ப்பந்தப்படுத்துகின்றனர். மற்றும் எத்தினையோ?

பணம் பல செய்யும்!! திருவாங்கூர் விஷயத்தை ஆதரிப்பவருக்கு அதிர்ஷ்டகாலமெனலாம். பேபரில் பேரடிபடும். திவான்கடாக்ஷவீக்ஷணம் கிட்டும். அதனால் குடும்பத்திற்கும் ஸௌகரியம் கிடைக்கலாம். விரைவில் ஓர் பண்டிதரென்பார் ஸபை கூட்டப் போகிறாராம்!! பணம் என்னதான் செய்யாது? இதுவரை ஸ்ரீராமாநுஜருடனிருந்தது. இப்போது ஸ்ரீ சங்கர் பாஷ்யத்திலும் பிரதாபருத்ரன் சித்தகன் சரிதத்திலும் சிலாசாஸநத்திலும் தீண்டாதாரைச் சேர்த்துக்கொள்ள ஆதாரம் காட்டப்படுகிறது.

சென்னை.

ஸ்ரீ கர்க்கஸம்ஹிதை:—ஸ்ரீபாரதத்தின் ஏகதேசமாயும் புத்ரப்ரதமாயுமுள்ள ஸ்ரீ ஹரிவம்சம் மாம்பலத்தில் மூன்றுண்டுகளாக உபன்யஸிக்கப்பட்டு நேற்று ஞாயற் பூர்த்தியானது. ஸ்ரீமான் லோகநாதய்யர் பஞ்சநதபவருத்தை அலங்கரித்துகாலையில்வேதபாராயணத்துடன் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு திவ்யாபிஷேகம் ஸஹஸ்ரநாமார்ச்சனை பிராமண ஸமாராதனை முதலியவைகளை நடத்தினர். இரவு 8-மணிக்கு பஜனைகோஷ்டி. தலைவர் பிரும்மஸ்ரீ ராமசந்திர ஹரிஹரி திவ்ய பஜனைசெய்ய, பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் அவர்கள் பிரும்மஸ்ரீ கவிரத்னம் மாஜி ஆர்யதர்மம் பத்திரிகாசிரியர் பஞ்சாபகேசசாஸ்திரிகளவர்கள் முதலிய பல பண்டித ரத்னங்கள் சூழ பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ. ஸோமதேவசர்மா அவர்கள் உஷாகல்யாணம் கர்க்க ஸம்ஹிதை சிவ விஷ்ணுவ பேதம். பக்தி பக்தர் இவைகளைப் பற்றி உபந்யசித்தார். பிரும்மஸ்ரீ உ. வே. ஆவியூர் ஸ்ரீனிவாஸாசாரியார் ஸமயோசிதமான சில பத்யங்களை கவனம் செய்து ஸ்ரீ சர்மாவின் கல்வி குணம் பிரவசனசக்தி ப்ரசாரம் முதலியவைகளைக் கூறி ஆசீர்வதித்தார், ஸ்ரீ சர்மாவும் ஸ்ரீ ஹரிஹரிக்கும் ஸப்யர் ஸம்பாவனை செய்து பகவத்ப்ரசாதம் எல்லோருக்கும் அளிக்கப்பட்டு இரவு 10-மணிக்கு ஸபை கலைந்தது. தேகச்ரமும் ஊக்கமும் கொண்ட ஸ்ரீமான் கே. கங்காதரய்யரையும் ஸ்ரீமான் லோகநாதய்யரையும், போற்றி வாழ்த்தாதார் இல்லை.

ஒரு நிருபர்.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி, பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

Pandit Jawaharlal's Misconception about the Sanatanists.

Close upon the heels of Mr. Rajagopalachariar's reply to us comes the denunciation of Pandit Jawaharlal's, least expected from a leader of his standing, holding the responsible position of the President of the Congress. He labels the "so called Sanatanists of today as "Allies of Government", 'If they do not realise how to preserve their religion." If today it is a sin to be an ally of the Government, it will be lauded as a virtue tomorrow when the Congressmen form a Goverment in any of the provinces. It is because we realise the need to preserve our Religion, that we ask the Congress, to give us certain safeguards. Instead of honestly meeting our demand and removing effectively our apprehensions, his sweeping condemnation that we are all "Allies of the Government," is a cheap appeal to the prejudice of the mob. Again, it is an untrue and misleading statement of his that the Varnashramites condemn the Congress on the ground that it is out to destroy Hindu Religion. But there is no denying the fact that there is considerable apprehension among the Hindus that unless explicit assurances to the contrary are forthcoming, the Congress members may not withstand the temptation of monkeying with our socio-religious practices and customs.

A wise leader would, in such circumstances, try to allay as far as possible such apprehensions and win the confidence of the sections concerned. Instead, Pandit Jawaharlal embellishes his accusations with platitudes like "Swaraj means religion for all", "The question before the country is not religion, but the removal of the appalling poverty of the masses.' This is not pouring water on troubled waters.

T. S. Ramaswami Aiyar.

Mr. Rajagopalachariar and the Sanatanists.

I pass by the large claim made on behalf of Mr. C. Rajagopalachariar that there could be no truer Sanatanist than Mr. C. Rajagopalachariar. But his reply to the Sanatanists published in the press recently reveals no zeal or concern for the Sanatanism of which he is claimed to be one of the best representatives. Let me assure him at the outset, that we, the Sanatanists are in the hands of no political party and our present agitation must convince him that we are not so unwary as to walk into any traps laid for us.

Our attitude towards the Indian National Congress has been clearly enunciated, in a special resolution passed in the recent Sanatanists' Conference held in Madras. The large body of Sanatanists in this presidency are in entire sympathy with the political aims of the Congress and are prepared to support the same, as they have been doing all along, in all political matters.

But we add the proviso that the Congress members of the new Legislatures should give us an explicit assurance that they will not introduce any bills in the Legislatures opposed to the Religious, social or Socio-religious practices of the Hindus and will oppose them if introduced by others. The resolutions passed at the recent Conference also brings the Sanatanists into line with the national Congress on the question of the new constitution, the extinction of which will be supported by them on the particular ground, among others, that it fails to guarantee the fundamental right of freedom of religion and religious worship. Mr. Rajagopala Achariar meets this frank offer of support to the National Congress with an airy statement that the Congress has vouchsafed freedom to all people in matters of Religion" This vague assurance, in its ultimate analysis coms to nothing, particularly in the light of various legislations introduced into the Legislatures by the Congress members or with their active co-operation, which jettison Religion and its practices in the social sphere by throwing overboard recognised customs and usages which have been proved to be neither immoral nor opposed to public ideal Thus neither the extra emphasis laid on the political issue on which the Congress seeks public support at the elections nor the airy assurance of freedom to all people in matters of religion serves to guard us against the danger we apprehend.

Mr. Rajagopalachariar gives an additional assurance that the Congress will reflect the mind of the people of India and the party is bound to carry out the behests of the Congress. Does his statement imply that the Congress had not been till now reflecting the mind of the people of India and that the Congress members had not been carrying out its behests? The implication is perhaps supported by the socio-religious legislations which have been already placed on the statute book and those that are yet on the anvils of the Legislatures. It is precisely againt a repetition of this danger that we want to be guarded. The mere statement that the Congress reflects the mind of the people even in matters religious and the customs and usages based upon religion in the social sphere and to argue therefrom that what the Congress members do *ipso facto* reflects the mind of the people do not carry us even a small step ahead. Will the Congress undertake not to introduce any socio-religious legislation, before ascertaining the opinion of the public affected, by means of a referendum or any other equally effective method.

T. S. Ramaswami Aiyar.

Pandit Nehru on the Sarda Act.

Pandit Nehru said at Sholapur (15—2—37) that the Sarda Act was a perfectly right one. Its fault lay in not going far enough. He would like to see a still stronger law and one vigorously enforced. At the same meeting he characterised the Hindu Dharma as a "petty issue."

மதுரை.

வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கம்.
பொதுக்கூட்டம்

தமிழ் சங்கம் ரோட் 53வது நெ. வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள், தில்லையம்பூர் அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் பண்டித பூஷணம் சக்ரவர்த்தி ஆச்சார் ஸ்வாமிகள் அக்ராஸனத்தின் கீழ் நம்முடைய சநாதனிகளின் இனிமேல் செய்யவேண்டிய அவச்யத்தைப்பற்றி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது, Rao sahib N. நடேசய்யர் அவர்கள் பட்டணத்தில் நடந்த கான்ப்ரென்ஸின் விசேஷத்தையும் அதில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானத்தையும்பற்றி சுருக்கமாய் உபன்யாசம் செய்ததுடன் ஸ்ரீ ஆச்சாரியார் பிரசாரமுழுப்பு தலையும் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் உபன்யாசங்களைப்பற்றியும் கண்டித்து சநாதனிகள் இனிமேல் தீவிரமாய் வேலைசெய்து சீர்திருத்தவாதிகளிடமிருந்து ஆத்மரக்ஷணை செய்துகொள்ள பாடுபடவேண்டுமாக கேட்டுக்கொண்டு டிஸ்ரிக்டு சபை தாலூகாசபை கிராமசபைகளை ஸ்தாபித்து நம்முடைய பிரசார விஷயங்களை பரப்புவதற்கு நமக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் தினசரி பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்த நாம் fund சேர்க்க வேணுமென்றும் கிராமந்தோறும் பிரசாரம் செய்வதற்கு பிரசாரகர்களை நியமிக்கவேணுமென்றும் அதற்கு மடாதிபதிகளை Deputation ஆக போய் பிரார்த்தித்து பணம் சேகரிக்கவேணுமென்றும் ரொம்பவிவரித்து உபன்யசித்தார்கள்.

அதன்பின் முறையே M. N. சுப்ரமணிய சாஸ்திரிகளும் B. ஜெகதீசய்யர் அவர்களும் அய்யர்வாள் அவர்களுடைய உபன்யாசத்தையும் ரொம்பவும் ஆமோதித்து அவசியம் இன்று பேசிக்கலைவதுடன் நிற்காமல் இதை கூடிய சீக்கிரம் காரியத்திற்கு கொண்டுவர வேணுமென்றும் உபன்யசித்தார்கள். அக்ராசனாதிபதி முடிவுரையில் நாம் இந்த காரியங்களை செய்யவேண்டியதுடன் நாம் பின்சன் வாங்கின விருத்தர்கள் கூடுவதிலும் தீர்மானிப்பதிலும் பிரயோஜனமில்லையென்றும் ஒவ்வொரு காலேஜ் ஹைஸ்கூல் மாணவர்களையும் வாலிப வக்கீலவர்களையும் சநாதனிகளுடைய blidgeல் கையெழுத்துசெய்யசொல்லி சநாதன தர்மத்தை பிரசாரம் செய்வதற்கு மடாதிபதிகளை போய் அர்த்த சகாயத்தை விரும்பி அவர்களும் அதற்கு இதுசமயம் தாராளமாய் உபகாரம செய்தால்தான் சநாதன தர்மம் என்பது இன்னும் கொஞ்சகாலமாவது நிலை நிற்கத்தக்கதென்றும் சநாதனிகளென்று சிலருவது இருக்கலாமென்றும் ரொம்பவும் அழகாய் உபன்யசித்து முடித்தார்கள் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ஜீ. ஏ. சிவநாத சாஸ்திரிகள்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-ஞூ மாசி-மீ 7௳

நேருஜியின் நேர்மையற்ற பேச்சு.

காங்கிரஸ் தலைவராக விளங்கும் ஸ்ரீமான் ஜவஹர்லால் நேரு மத தர்ம விஷயங்களில் அடியோடு நம்பிக்கையற்றவரென்பதும் தர்மங்களை அவர் வெகுவாக அலக்ஷ்யம் செய்து பேசுகிறவரென்பதும் நமக்கு நன்கு தெரிந்ததே. ஆயினும் ஜனப்பிரதிநிதி ஸபையென்று பறைசாற்றப்படும் காங்கிரஸின் தலைமைப்பதவியை இவர் வஹித்துவரும் ஸமயத்திலாவது பொதுஜன அபிப்ராயத்தை மதித்து எல்லாப்பிரிவினருடையவும் உரிமையை இவர் பாதுகாக்க வாக்களிப்பதன்றோ ஜனநாயகத்திற்கு ஏற்றதாகும்? அப்படியிருந்தும் அத்தகைய நியாயபுத்தி இவருக்கு ஏற்படாமல் தர்மங்களையும், தார்மிகர்களையும் வெகு லேசாக அவமதித்துப் பேசுவது சிறிதும் ஸஹிக்கக்கூடியதாக இல்லை. இந்த எலெக்ஷன் பிரசார ஸமயத்தில் அவர் தன்னுடைய மிதமிஞ்சிய அஹம்பாவத்தையும், அலக்ஷ்யத்தையும் தார்மிகர்கள் விஷயத்தில் வெளிப்படுத்திவருவது மிக்க ஆக்ஷேபகரமாயிருக்கிறது.

மஹாராஷ்டிரத்திலும் வேறு சில விடங்களிலும் தார்மிகர்கள் தர்மரக்ஷணத்திற்காகச் சிறிது கிளர்ச்சி நடத்திவருவது ஸ்ரீமான் நேருவுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியிருப்பதாகத் தெரிகிறது. அதனால் அவர் ஆத்திரக்காரனுக்கு ஏற்படக்கூடிய புத்திப்போக்குடனேயே அங்கு பேசியிருப்பது அதிசயமல்ல.

பண்டர்பூரத்தில் சில தார்மிகர்கள் சாரதாச்சட்டத்தைப்பற்றி நேருஜியின் அபிப்ராயத்தைக் கேட்டதற்கு அவர் சொல்லியுள்ள பதில் மிகக் குரூரமாயுள்ளது. அச்சட்டத்தை தாம் ஆதரிப்பதாயும், அது நியாயமானதென்றும் அது இன்னும் கடுமையாக்கப்பட்டு அமுல் நடப்பதில் தமக்குப் பூர்ண இஷ்டமிருப்பதாயும் தெரிவித்தார். இத்தகைய குரூர எண்ணமுள்ளவர், தம்மை ஸ்வதந்திரப் பிரியரென்றும் பாமரஜன நண்பரென்றும் எப்படிச் சொல்லிக்கொள்கிறாரென்பது அதிசயமாயிருக்கிறது. மதக்கட்டளையை மனஸ்சாக்ஷிப்படி செய்பவனுக்கு சரீர தண்டனையும், அபராதமும் விதித்து அவனுடைய ஸ்வாதந்திரியத்தைப் பாழாக்குகிறவர் ஒருநாளும் ஸ்வதந்திரவாதியாக இருக்கமுடியாது. அவர் ஒரு அஹம்பாவம் பிடித்த யதேச்சாதிகாரியாகவே மதிக்கப்படுவார். பிரஜா உரிமைகளைப் பாதுகாக்க எங்கும் ஸங்கம் ஏற்படுத்தி ஸர்க்கார் அடக்குமுறையைக் கண்டிக்க முன்வந்துள்ள இவர் தம் இனத்தாரையே அடக்கி ஜயிலில் போடத் துணிவுகொண்டிருப்பது என்ன நேர்மை? சாஸ்திரங்களைக் குப்பைத்தொட்டியில் போடவேண்டுமென்றும், தமது தொகுதியிலுள்ள வாக்காளர்களின் அபிப்ராயத்தைக்கூட மதியாமல் சாரதாச் சட்டத்தைத் தாம் ஆதரிப்பதாயும் கூறி அதை நிறைவேற்றிவைத்த பெரியநேருவின் பிள்ளையான இவர், அவரைவிட குரூரமாயிருப்பதில் ஆச்சர்யமென்ன? இத்தகையவர்கள் இந்தியாவில் ஸ்வாராஜ்ய நிர்வாஹிகளாக வந்தால் நமது தர்மமும், தார்மிகர்களும் என்ன கதியை அடைவார்களென்பது யாவராலும் கவலையுடன் யோஜிக்கத்தக்கது.

ஸ்ரீமான் நேரு அங்கு பேசுகையில் இந்த ஸ்வராஜ்யப் போராட்டத்தில் மதவிஷயமானது ஒரு "சில்லரைக்கார்யம்" என்று சொல்லியிருக்கிறார். வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும், எல்லா ஜனங்களையும் ஒரே மாதிரியில் வாட்டிவருவதாயும் இந்த சமயத்தில் மத தர்மவிஷயத்தைப்பற்றிய பேச்சுக்கு இடமில்லையென்றும் அவர் சொல்லுகிறார். இதிலும் அவர் தமது தர்மத்வேஷத்தையும், அலக்ஷ்யத்தையும், அவஸரபுத்தியையும் வெளிக்காட்டிக்கொண்டிருக்கிறார். தர்மத்தை இவர் ஒரு சில்லரை விஷயமென்று பேசுவது பெரும் அநீதியாகும். அளவற்ற நெஞ்சுத் துணிவுடன் இது தர்மத்தைப் பழிப்பதேயாகும். தார்மிகர்கள், ராஜ்யம் வியாபாரம், பொருளாதாரம், விவஸாயம்போன்ற ஸகல உலக கார்யங்களுக்கும் தர்மமே அடிப்படையென்று நிர்ணயித்திருக்கிறார்கள். தர்மமில்லாவிடில் உலகம் ஒரு நொடிகூட நிலைத்துநிற்காது. இந்த உண்மையை நேருஜி ஊன்றி கவனிக்காததே அவருடைய அபத்த எண்ணத்திற்குக் காரணமாகும். தர்மத்தை அழித்து, அதர்ம மூலம் தேச க்ஷேமத்தை உண்டாக்கிவிடலாமென்று நினைப்பது கானல் நீரில் தாஹசாந்தி செய்துகொள்ளவும், ஆற்று மணலிலிருந்து எண்ணை எடுக்கவும் முற்பட்ட மூடனுடைய செய்கைக்கே ஒத்ததாகும்.

வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஜனநாயக ஆக்ஷிநடத்தும் எந்த தேசத்தில்தான் இல்லை? ஜனநாயகத்தின் உன்னத ஸ்தானத்திலிருக்கும் அமெரிக்காவில் வேலையில்லாத காரணத்தாலும், வறுமையாலும் பிரதிவருஷமும் கோடிஜனங்களுக்குமேலாக ஸர்க்காரின் உதவியைப் பெற்று ஜீவித்துவருகிறதாகத் தெரிகிறது. இதுபோல் ஜர்மனி, இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய எல்லா தேசங்களிலும் வறுமையும் வேலையில்லாத்திண்டாட்டமும் ஜனங்களைக் கடுமையாக வாட்டிவருவதாகவே அறிகிறோம். நேருஜியும் இதை நேரில் அறிந்தவரே. ஆகையால் ஜனநாயகம் ஏற்பட்டுவிட்டதால் மாத்திரமே வறுமையும், வேலையில்லாத உபத்திரவமும், நீங்கி விடுமென்றும், அதொன்று மட்டுந்தான் அவஸரமாக கவனிக்கப்படவேண்டுமென்றும் மத தர்மவிஷயங்கள்போன்றவை சில்லரை விஷயங்களென்றும் இவர் வாதிப்பது அபத்தமாயிருக்கிறது. படித்தவர்களும் மேதாவிகளும் மதாசாரியர்களும்நிறைந்த நம் பாரததேசத்தில் நேருஜியைப்போன்றவர்கள் தங்களையே ஸர்வாதிகாரிகளாக நினைத்துக்கொண்டு தாங்களே தேசத்திற்குச் சிறந்த வழிகாட்டிகளென்றும், மற்றவர்யாவரும் தங்களுடைய அபிப்ராயத்திற்குக் கீழ்படியவேண்டுமென்றும், மற்றமேதாவிகள்எவ்வித அபிப்ராயமும் வெளியிடத்தகாதவர்களென்றும் நினைத்து அஹம்பாவமும் அலக்ஷ்யமும் நிறைந்து நடந்துகொள்ளுவதானது இந்தியாவின் எதிர்கால க்ஷேமத்திற்கும் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் பெருத்த அனர்த்தத்தை விளைவிக்குமென்று எச்சரிக்கிறோம்.

குறிப்புகள்.

அன்னிய தேசங்களில் கலப்பு விவாஹத் தடை.

விக்ஞானசாஸ்திர தத்துவங்களில் கரைகண்ட நமது முன்னோர்கள் ஜாதிக் கலப்பு விவாஹத்தினால் ஏற்படக் கூடிய கெடுதிகளை நன்கு அறிந்து நமக்கு அத்தகைய விவாகத்தை சாஸ்திர மூலமாகத் தடைசெய்துள்ளார்கள். ஜாதிக் கலப்பு செய்துகொள்ளாத காரணத்தாலேயே நம் தேசம் இன்னும் பல விஷயத்தில் சிறந்து விளங்குகிறது. இந்த உயர்ந்த தத்வம் தற்காலம் மேனாட்டு விக்ஞான நிபுணர்களாலும் உணரப்பட்டு வருகிறது. புதிய ஜர்மனியில் ஹர்ஹிட்லர் ஜாதிக் கலப்பு விவாஹங்களை வெகு உக்ரமான சட்டமூலமாகத் தடைசெய்ய முன் வந்தார். ஜர்மன் ஜாதியின் பரிசுத்தியையும், நல்ல ஆர்ய ரக்தத்தையும் காப்பாற்றவேண்டிய அவசியம் என்று அவரும் அவருடைய பிரஜைகளான மேதாவிகளும் கண்டுபிடித்து கலப்பு விவாகத்தைத் தடை செய்துவிட்டனர். ஹிட்லர் எழுதியுள்ள ஒரு புஸ்தகத்திலும் இதைபலமாகவற்புறுத்தியிருக்கிறாராம். மேலும் கலப்பு விவாகமானது ஜாதியின் பரிசுத்தத்தை நாசமாக்குவதுடன், ஸமூகப்பொருளாதார வியாபாராதி ராஜ்யவிஷயங்களிலும் தேசத்திற்கு தீங்கு இழைக்கக்கூடியதென்பதையும் ஐரோப்பிய தேசங்கள் உணரத் தலைப்பட்டிருக்கின்றன. எட்வர்ட் அரசர் அமெரிக்க ஸ்திரீயை மணப்பதில் ஏற்பட்ட ஆக்ஷேபத்தின் முடிவு தெரிந்ததே. இதாலியும் இந்தக் கலப்பு விவாஹ முறையை எதிர்க்க முன் வந்திருக்கிறது. அபிஸீனியாவில் உள்ள இதாலிய ஸ்திரீ புருஷர்கள் அந்த தேச ஸ்திரீ புருஷர்களிடம் விவாஹம் செய்துகொள்ளக்கூடாது என்று ஸமீபத்தில் கடுமையான உத்திரவு போட்டது. பம்பாயில் வஸித்துவரும் பார்ஸிகள் தங்கள் ஜாதியின் பாதுகாப்பையும் பரிசுத்தியையும் கருதி அன்னிய ஜாதியாருடன் விவாஹம் செய்து கொள்ளக் கூடாது என்று தீர்மானித்தனர்.

சில வாரங்களுக்குமுன் தென்னாப்பிரிக்கா பார்லிமெண்டில் ஜனரல் பிரன்னர் என்பவர் கலப்பு விவாகத்தடை மசோதா ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்.

ஆப்பிரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், ஹிந்துக்கள் முதலிய ஆசியாக்காரர்களுக்கும் பரஸ்பரம் கலப்பு விவாகம் கூடாது என்பதே இந்த மசோதாவின் நோக்கம். தென்னாப்பிரிக்காவில் ஏராளமான இந்தியர்கள் குடியேறியிருக்கின்றனர். ஹிந்து ஸ்திரீ புருஷர்களுடைய க்ஷேமத்தை நோக்கினால் இந்த மசோதா முற்றிலும் நம்மவர்களால் வரவேற்கத் தக்கதே. ஸமீபத்தில் அங்கு ரஸா அலி என்ற மஹம்மதியர் பணக்கார இந்தியப் பெண் ஒருவளைக் கல்யாணம்செய்துகொண்ட விஷயமாக அங்குள்ள இந்தியாடைந்த ஆத்திரத்திற்குக் கணக்கில்லை. ஆதலாலங்கு உள்ள இந்தியர்கள் இத்தகைய மசோதாவை ஆதரிப்பார்களென்றே நினைக்கிறோம்.

இப்படியிருக்க சென்னையில் விளங்கும் தேசீயப் பத்திரிகையொன்று இந்தக் கலப்பு விவாகத் தடை மசோதாவை ஆக்ஷேபித்து எழுதியிருப்பதுவிசித்திரமாயிருக்கிறது. இந்த மசோதா ஆசியாக்காரர்கள் மீது த்வேஷத்தாலும் ஜாதி அஹம்பாவத்தாலும் கொண்டுவரப்பட்டிருக்கிறதாக அது சாதிக்கிறது. இதைவிட அபத்தம் வேறு இருக்க முடியாது. இப்பத்திரிகை அங்குள்ள இந்திய ஸ்திரீகள் ஆப்பிரிக்கர்களையோ, ஆப்பிரிக்கா ஸ்திரீகளை இந்திய புருஷர்களோ விவாகம் செய்துகொண்டு கலப்பு ஜாதியினராக மாறிவிட இஷ்டப்படுகிறதா? இம்மாதிரி இந்தியர்கள் கலப்பு ஜாதியினராக ஆகிவிட்டால் பிறகு அவர்களை இந்தியர்களென்று அழைக்கவோ, இந்தியர் உரிமைக்காகப் பரிந்துபேசவோ என்ன அவகாசம்? கலப்பு விவாஹமூலம் இந்தியர்களின் சொத்துக்களும் நாகரிகமும் நாசமாகிவிடாதா? இந்தியரும் ஐரோப்பியரும் ஆப்பிரிக்கரும் கலப்பு விவாகத்தால் ஒரே ஜாதியினராக ஆகிவிட்டால் இந்தியாவில் யாருடைய நன்மைக்காக ஸ்வராஜ்யம் வேண்டுவது? புதுக்கோட்டை முதலிய சில அரசர்கள் அந்நிய ஜாதி விவாகம் செய்துகொண்டதற்காக ராஜ்யத்தைத் துறப்பானேன்? ஜாதிக் கலப்பு ஸந்ததிக்கு ராஜ்யம் கூடாதென்று இந்தப் பத்திரிகையே வாதிக்கவில்லையா?

ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரின் உபந்யாஸம்.

சென்னை ஸர்வகலாசாலையின் ஆதரவின்கீழ் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் "இந்தியர்களின் ராஜீய அபிப்ராயங்கள்" என்பதைப் பற்றி இரு உபந்யாஸங்கள் செய்தார். அதில் அவர் பண்டைகாலத்தில் ராஜீய விஷயங்களில் இருந்த பலவித உயர்வுகளை நன்கு விளக்கியுள்ளார். ஆனாலும் திருவாங்கூர் ஆலயப்ரவேச அறிக்கை ந்யாயமானதென்று வாதிக்க இவ்வுபந்யாஸங்கள் பூர்ணமாகக் கையாளப்பட்டுவிட்டன. உபந்யாஸத்தின் எந்த பாகத்திலும் இவ்வுணர்ச்சியே காணப்படுகிறது. அவ்வுபந்யாஸத்தில் கால தேசங்களுக்கு தக்கமுறையில் தர்மம் மாற்றப்பட்டிருக்கிறதென்றும், அவ்வித மாறுதல்களை அரசனே அமுல் நடத்தியுள்ளார் என்பதை வாதிக்க சரித்ரத்திலும், க்ரந்தங்களிலும் பல உதாஹரணங்களைக் காட்டுகிறார். ஆனால் திருவாங்கூர் அறிக்கை விஷயத்தில் அவை பொருத்தமுள்ளவைகளாகக் காணப்படவில்லை. எங்கெந்த விஷயங்களில் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுகின்றனரோ, அவைபிரமாணங்களை அநுஸரித்தே ஏற்பட்டதாகத் தெரிகிறது. ப்ரமாணங்களுக்கு முற்றிலும் முரண்பட்டதாகவும் எந்த ப்ரமாணத்திலும் அங்கீகரிக்கப்படாததாகவும் சீர்திருத்தம் எதுவும் செய்யப்பட்டதாக இவர் நிரூபிக்கவில்லை. இந்நிலையில் திருவாங்கூர் அறிக்கைக்கு அவை எப்படி உதாஹரணமாகும்.

திருவிதாங்கூர் அறிக்கை இதுவரையிலுள்ள எல்லாவித ஆகமங்களும் முரண்பட்டது. இவ்வறிக்கைப்படி ஏற்படவிருக்கும் பஞ்சமாலய பிரவேசத்தை எந்த ப்ரமாணமும் அங்கீகரிக்கவில்லை. இவ்விதமிருக்க தர்மமான சில ப்ராமாணிக மாறுதல்களை உதாஹரித்து அதர்மமான திருவாங்கூர் அறிக்கையை ப்ராமாணிகமானதாக எப்படி ஸ்தாபனம் செய்யமுடியும்? அரசன் மாறுதல்களை அமுலுக்குக் கொண்டுவந்திருப்பதாகச் சொல்லுவதும் திருவாங்கூர் விஷயத்தில் பொருத்தமுள்ளதாகாது. எங்கு அரசன் மதவிஷயங்களில் சட்டம் செய்தாலும் தமது ஸொந்த அபிப்ராயமாக அதை அரசர் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. பரிஷத்துக்கள்கூடி ப்ராமாணிகமான முறையில் தர்ம விஷயங்களில் பரிசீலனைசெய்து நிர்ணயம் செய்வதே இதுவரை ஸம்பிரதாயத்தில் காணப்படுகிறது. அப்பரிஷத்துக்களின் முடிவுகளை நடத்திவைக்கும் பொறுப்புமட்டும் அரசனிடம் காணப்படுகிறது. திருவாங்கூரிலோ அரசரின் அறிக்கைக்கு முன்னால் பண்டித பரிஷத்துக்கூடி ஆலயப்ரவேச விஷயத்தில் நிர்ணயம் செய்ததாகத் தெரியவில்லை. அரசருடைய அறிக்கையிலிருந்தும் யதேச்சாதிகாரமாக இவ்விஷயத்தை முடிவு செய்ததாகவே வெளியாகிறது. ஆகவே தார்மிகர்களுடைய ஆலோசனையை அடியோடு பின்பற்றாத யதேச்சாதிகாரமான இந்த அரசரின் முடிவானது பரிஷத்துக்களுடைய முடிவுகளை அநுஷ்டானத்தில் நடத்திவைக்கும் ப்ராசீன அரசர்களின் நடவடிக்கைக்கு ஒத்ததாக ஆகாது.

அ. ரா.

மதுரை

பொது ஜனக்கூட்டம்.

ஸ்ரீ. பி. ஆர். கேசவய்யர், அவர்களின் தலைமையில் நடந்த கூட்டமொன்றில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

தற்சமயம் நமது தேசத்தில் கைத்தொழில்களினால் ஜீவனம்சம் செய்துவரும் ஏழை ஜனங்களுக்கு ஆதரிப்போரில்லாமல் ப்ரிதபித்து க்ஷீணதசை அடைந்து வறுமை மிகுந்து வருவதை அறிந்த அறிவாளிகள் விக்ஞாபனங்களை தயாரித்து சுமார் (250) வரை பொதுஜன கையெழுத்துடன் (தேச மகா சபை) தலைவர்களுக்கும் சென்னை மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் அனுப்பியிருக்கும் விஷயத்தையும் ஷெடி ஏழைகளுக்கு பாதுகாப்பு ஏற்படுத்திக்கொள்ளும் விபரத்தையும் தெரிவித்துக்கொள்வதற்கே இக் கூட்டம் கூட்டப்பட்டது.

தீர்மானம்.

1. கிருஷ்ணராயர் தெப்பக்குளம் மைதானத்திலும் கீழ் மதுரை மணல் ரோடு மைதானத்திலும் ஒவ்வொரு கூட்டத்தில் கூடிய சுமார் (500) பேர்கள்கொண்ட இக் கூட்டங்களானது குரங்குகளின் நாடகமென்ற நோட்டீசையும் இரண்டு விக்ஞாபனங்களையும் முழு மனதுடன் ஆதரிப்பதோடு இவ்விபரங்களை சரியான முறையில் தடுத்து உண்மையை நிலைநிறுத்தவேண்டி கூடிய சீக்கிரத்தில் பொதுவகுப்பு ஜன ஐக்யசங்கம் என்றதை (ஸ்ரீ அகில இந்திய வர்ணாச்ரம தர்ம சுயராஜ்யசங்கம்) ஏற்படுத்தி வேலைசெய்து வரவேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. ஒவ்வொரு வகுப்பாளரும் அதாவது பிராமண வகுப்பு முதல் குசவன் தோட்டி வகுப்புகள் வரை சபைகள் ஏற்படுத்தி அதன் மூலம் கட்டுப்பட்டு அதிலிருந்து பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து கவர்ன்மெண்ட் பொது ஸ்தாபனங்களுக்கு அனுப்பி அந்தந்த வகுப்பு கைத்தொழில்களுக்கும் மதவுணர்ச்சிகளுக்கும் ஆபத்து ஏற்படாமல் சட்டபூர்வமாக பாதுகாப்பு ஏற்படுத்திக்கொள்ள வேணும் என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது

3. வகுப்பு சபைகள் ஏற்பட்டு அனுஷ்டானத்திற்கு வரும் வரை அரசியல் பொது ஸ்தாபனங்களுக்கு செல்லும் எந்த வகுப்பாளரும் சரி, அல்லது காங்கிரஸ் கக்ஷி முதல் எந்தக் கக்ஷிக்காரர்களும் ஓட்டு உரிமை உள்ள ஒவ்வொரு வகுப்பாளரும் தங்கள் தங்கள் வகுப்புக் கைத் தொழில்களுக்கும் மத உணர்ச்சிகளுக்கும் சட்டபூர்வமாய் ஆதரவு பெறக்கூடிய வழியில் உழைக்கும் உண்மையாளரிடம் பிரதி ஓட்டு வாங்கிக்கொண்டு பொதுஜனப் பிரதிநிதிகளாக அனுப்பவேண்டும் என்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இனிமேலும் ஆலஸ்யமாயிராமல் கூடியசீக்கிரத்தில் சங்கத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை நடத்தி கண்டிப்பான முறைகளைக்கையாண்டு ஏழைகளின் கைத் தொழில்களும் மதவுணர்ச்சிகளும் உன்னத நிலைமைக்கு கொண்டுவர வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை.

ஒரு நிருபர்.

ஐக்யமாகாண எலக்ஷன்.

காங்கிரஸ்ஸுக்கு 94ஸ்தானம்.

ஐக்யமாகாணசட்டசபைக்கு நடந்த எலக்ஷனில் காங்கிரஸ்காரர்கள் பெரிய வெற்றி அடைந்திருக்கிறார்கள். இதுவரை அவர்களுக்கு 94-ஸ்தானங்கள் கிடைத்து விட்டன.

மிதவாதித்தலைவரான ஸ்ரீமான் சிந்தாமணி, ஸர். ஸீதாராம் போன்ற பல பிரபலஸ்தர்கள் தோல்வி அடைந்தனர், அனேக ஜமீன்தார்களும் தோற்றுப்போனார்கள்:

ஸ்ரீமான் பண்டித நேருவின் ஸஹோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மீ, அவளுடைய கணவன் ஸ்ரீமான் எஸ். ஆர். பண்டிதர், ஜவஹர்லால் நேருவின் வேலைக்காரரான தீண்டாத வகுப்பு அபேக்ஷகர் ஆகியவர்கள் வெற்றி பெற்றிருப்பது அங்கு விசேஷமாகக் கருதப்படுகிறது.

ரயில்வே வரவு செலவு திட்டம்.

இந்தியா சட்டசபையில் ரயில்வே வரவு செலவு திட்டம் 16௳யன்று ஆஜர் செய்யப்பட்டது. சில வருஷங்களாகச் செலவதிகமாகியும் வரவு குறைந்தும் இருந்த நிலைமைமாறி இப்போது 15-லக்ஷம் மிகுதித் தொகை கிடைத்திருக்கிறது. அடுத்த வருஷத்தில் 95-கோடி ரூபாய் வருமானம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. சில புதிய வேலைக்காக 8½-கோடிரூபாய் செலவு செய்யப்படுமாம்.

தேர் தப்பிப்பிழைத்தது.

ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீநம்மாழ்வார் கோவிலுக்குச் சொந்தமான பெரிய தேர் வெகு காலமாக இழுக்கப்படாத காரணத்தால் பழுதாகிவிட்டது, இந்தத்தேரைப் பிரித்து அடுப்பு விறகுக்கு உபயோகமாகும்படி ஏலம் போட்டுவிடலாமென்று டிரஸ்டிகளும், தேவஸ்தான போர்டாரும் கருதினார்கள். ஆனால் பொதுஜனங்கள் பலத்த ஆக்ஷேபம் செய்ததன் பேரிலும், இந்த தேரைச் செய்துகொடுத்த ஸ்ரீவானமாமலை மடத்தாரின் எதிர்ப்பின் பேரிலும், தேரை பிரிப்பதில்லை யென்றும், அப்படியே ஜாக்கிரதையாக ரக்ஷித்துவரவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டு விட்டதாம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Tuni.

குடந்தை ஸநாதநிகளின் கூட்டத்தில் காங்கிரஸ் அபேக்ஷகர்.

பொதுஜன வாக்குப்படி நடப்பதாக உறுதிமொழி.

மத விஷயமான விவாதம் சட்டசபையில் வந்தால் காங்கிரஸ் சட்டசபை அபேக்ஷகர் எவ்விதம் நடந்துகொள்ளுவார் என்பதை அறிவதற்காக பிப்ரவரி 14௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஸநாதநிகளின் பொதுக்கூட்டம் ஒன்று கும்பகோணம், டபீர் கீழப்படித்துறையில் நடைபெற்றது. தஞ்சை, குடந்தை நகரத்தொகுதி காங்கிரஸ் அபேக்ஷகரான ஸ்ரீமான் பூவராஹ அய்யங்காருடைய யோஜனையை அநுஸரித்தே இந்த கூட்டம் நடைபெற்றது.

ஸநாதநிகள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். கூட்ட நடவடிக்கை ஆரம்பத்தில் அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர் கூட்ட நோக்கத்தை விளக்கிப்பேசினர். புதிய சட்டசபையில் மதஸம்பந்தமான பல தீர்மானங்கள் விவாதத்திற்கு வருமாதலால் அந்த ஸமயங்களில் காங்கிரஸ் அபேக்ஷகர் எப்படி நடந்துகொள்வார் என்பது தெரியவேண்டும். மத விஷயங்களை சட்டசபை விவாதிக்க அதிகாரம் கிடையாதென்பதே ஸநாதநிகளின் உறுதியான கொள்கை. அதனுல் மதஸம்பந்தமான தீர்மானங்களை சட்டசபை விவாதிக்க இடங்கொடுக்கக் கூடாது. பல மதத்தினர் நிறைந்த சட்டஸபையை மத ஸம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்ய காங்கிரஸ் அபேக்ஷகர் உபயோகப் படுத்திக்கொள்ளக் கூடாதென்றும் மதச் சீர்திருத்த ஸம்பந்தமான தீர்மானங்களை வேறு யார் கொண்டு வந்தாலும் எதிர்க்கவேண்டுமென்றும் ஸநாதந தர்மத்தில் மதம், மதாசாரம் இவைகளை பிரிக்க முடியாததால் மதாசார ஸம்பந்தமாக எவ்வித தீர்மானம் செய்தாலும் மதத்தில் தலையிடுவதாகவே ஸநாதநிகளில் கருதுகின்றனர் என்றும் அதனுல் மதாசார ஸம்பந்தமாக எந்த சீர்திருத்தத்தையும் சட்டசபையில் செய்யாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ராஜீய ப்ரச்னையே முக்யமாக இருந்தாலும், சட்டசபைகளில் மதாசார ஸம்பந்தமான தீர்மானங்கள் விவாதத்திற்கு வர இடமுண்டு என்றும் காங்கிரஸ் சார்பாக இவ்விஷயத்தில் உறுதிமொழி கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டாலும் தனிப்பட்ட ஹோதாவில் அபேக்ஷகர் உறுதிமொழியளிக்கமுடியுமா, மேலும் கக்ஷி ப்ரச்னையாக வராத மதாசார சீர்திருத்தச் சட்டத்தில் தனி ஹோதாவில் எப்படி நடப்பார் என்பதும் தெரியவேண்டும் என்றும் பேசினர்.

அக்ராஸநாதிபதி ஸ்தானத்திற்கு அட்வகேட் ஜி. வி. வெங்கட்ராமய்யர் பிரேரிக்கப்பட்டு தலைமை வகித்தார். தலைமையுரையில் ஸநாதநிகள் காங்கிரஸ்பால் விச்வாஸம் உள்ளவர்களே என்றும், ஸமீபத்தில் சில காங்கிரஸ்காரர்கள் நடந்துகொண்ட முறையினுல் அவர்கள் மிகுந்த க்லேசத்தை அடைந்திருப்பதாகவும், அவர்களுடைய உண்மையான உணர்ச்சிகளை மதிக்கவேண்டியதவச்யமென்றும் கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் அபேக்ஷகர் ஸ்ரீமான் பூவராஹ அய்யங்கார் பின்வருமாறு பேசினர்:—

ஸநாதந தர்மம் மிகவும் உயர்ந்தது. உபநிஷத்துகளின் உபதேசமும் மிகவும் உயர்ந்தது. அடிமை வாழ்வினுலேயே தேசம் மதம் இரண்டும் சீர்கேடடைந்துவிட்டது. ஸநாதந தர்மத்தில் நான் பூர்ணமான நம்பிக்கையுள்ளவன். ஆனுலும் பால்ய விவாஹம், தீண்டாமைவிலக்கு முதலியவைபோன்ற வெளிப்படையான விஷயங்களைக்காட்டிலும் உபநிஷத்தின் உபதேசங்களையே நாம் முக்யமாக கவனிக்கவேண்டும். ப்ரம்ஹசர்யம் முதலிய பல தர்மங்கள் இன்று நன்கு நடைபெறவில்லை. இவைகளைச் சீர்திருத்த நாம் முற்படவில்லை. இப்பொழுது அரசியல் விஷயமே முக்யமானது. ஸமுஹாசார ஸம்பந்தமான சட்டங்கள் இப்பொழுது கொண்டுவரப்படா. தேசத்தில ஒற்றுமையை ஸ்தாபிக்க நினைக்கும் காங்கிரஸ்காரர்கள் ஷை சட்டங்களைக் கொண்டுவரமாட்டார்கள். பால்ய விவாஹம் கோஷாமுறை இவை போன்ற மதத்தின் உள்படையான விஷயங்கள் அன்று. இவை தேசீய நலத்திற்குப் புறம்பானதாகவும் காண்கிறது. சட்டசபையில் மதாசார ஸம்பந்தமான தீர்மானங்கள் வந்தால் நான் காங்கிரஸ் உத்திரவுப்படியே நடப்பேன். ஸொந்த ஹோதாவில் ஒன்றையும் செய்யமுடியாது.

அவர்கள் தேசத்தில் பிளவுஉண்டுபண்ணும் வழியில் மதவிஷயத்தில் செல்லமாட்டார்கள். காங்கிரஸ் தலைவர்கள் C. R. போன்றவர்கள் எவ்வழியைக் காட்டுகிருர்களோ அவ்வழியிலேயே செல்லுவேன் என்றும் சொன்னுர்.

பிறகு ரெங்கவிலாஸ் கமர்ஷியல் இன்ஸ்டியூட் புரோப்ரைடர் ஸ்ரீமான் M. R. ஸ்ரீநிவாஸாசாரியர் காலதோஷத்தாலோ வேறுஎக்காரணத்தாலோ நாம் பலதர்மங்களைச்செய்ய முடியாது விட்டுவிட்டோம், என்றுலும் இப்பொழுது சிறிதளாவது உள்ள தர்மத்தின் கதி என்ன? அவைகளையாவது சட்ட மூலமாக மாற்ருமல் இருப்பீர்களா, என்று கேட்டார்.

பிறகு அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர் பேசுகையில் தர்மங்கள் பூர்ணமாக அநுஷ்டிக்கப்படவில்லை என்பது உண்மையானுலும் பாக்கியுள்ள தர்மங்களின் மீதாவது சட்டம் செய்யக்கூடாதென்றும், பால்ய விவாஹம், போன்றவை வெளிப்படையான விஷயங்களென்பதைதான் ஒத்துக்கொள்ளக் கூட வில்லையென்றும், தர்மங்களில் இவைதான் உள்படை, இவைதான் வெளிப்படை என்று நிர்ணயிப்பது அஸாத்யமென்றும், பால்ய விவாஹம் ஸம்பந்தப்பட்டமட்டில் இது அநாதியான ஆசாரம்,பிறருடைய உபத்ரவத்தில் இது ஏற்பட்டதன்று, மநுஸ்மிருதியிலேயே இவ்வாசாரம் காணப்படுகிறது. விவாஹம் பால்யத்தில் செய்தால் சீர்நன்மை கெட்டுவிடாதென்றும், அவ்விதமே கோஷா முறை அநாதியானதென்றும், தீண்டாமை ஸம்பந்தப்பட்டமட்டில் ஸயன்ஸ்ரீதியில் தீண்டத்தகாத சில வகுப்பினர் இருப்பது நிச்சயமாக ஏற்படுவதால் அதை அழித்து விடுவதாகச் சொல்லுவது ஏற்கக்கூடியதன்று என்றும், இவைகள் முக்யமில்லாத ஆசாரங்கள் அன்று. இவைகளை மாற்றினதால் மதம் மாறியதாகாதென்றும், ஒரு சிலர் பூர்ணமாக தர்மங்களை அநுஷ்டிக்க முடியாமல் போனுலும், பல மஹான்கள தர்மங்களை அநுஷ்டித்து வருவதாகவும், இதனுல் மதாசாரமே நசித்துவிட்டதாக ஊஹிக்க இடமில்லையென்றும், ஏற்கனவே உள்ள அரசியல் சட்டபடி உள்ள பாதுகாப்பும் இப்பொழுது இல்லாது போய்விடுவதாகவும், பல மதத்தினர் நிறைந்த ஸபையில் நம் மதாசார ஸம்பந்தமான விவாதம் நடக்க இடமளிக்கலாகாதென்றும் கூறினுர். ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் மறுபடியும் ஸமாதானம் சொல்லுகையில் ஏற்கனவே வெள்ளைகாரர்களிடம் பாதுகாப்பிருந்ததைக்கண்டு திருப்திப்பட்டவர்கள் இப்பொழுது மஹாத்மா முதலானவர்களை ஏன் நம்பலாகாதென்றும், பல மதத்தினர் நிறைந்ததாக சட்டசபை இருந்தாலும்' வேறு மதத்தினர் மதாசார ஸம்பந்தபடடமட்டில் ஓட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

அ. ரா. தாதாசாரியர் ஏற்கனவே வெள்ளையர்களிட மிருந்ததென்பதற்காக யாரும் திருப்திப்பட்வில்லையென்றும் சட்ட மூலமாக பாதுகாப்பு இருந்ததையே கண்டு திருப்திப்பட்டதாகவும், மஹாத்மாவைக்காட்டிலும் பதினுயிரமடங்கு உயர்ந்தவர்களான மனுமுதலிய மஹர்ஷிகளுக்கே தர்மாதர்மங்களை மாற்ற அதிகாரம் கிடையாதென்பதே ஸநாதநிகள்கொள்கை. ஆகவேஅவர்கள் மஹாத்மாவிற்கோ அவரைப் போன்றவர்களுக்கோ ஸொந்தமான அதிகாரம் வருவதை அங்கீகரிக்கமாட்டார்கள் என்றும் சட்டசபை அங்கத்தினர் வேறு மதத்தினராயினும் ஓட்டுக்கொடுக்கக் கூடாதென்ற தடையில்லாததால், யாரும் ஓட்டுக்கொடுக்க இடமேற்படுமென்றும் பதில் கூறினுர்.

ஸ்ரீமான் ஆத்ம வித்யாபூஷணம் ஜகதீச்வரசாஸ்திரிகள், கட்டுப்படுத்திக்கொள்ளாமல் ஸமாதானம் சொல்லக்கூடாதென்றும், நேரடியான ஸமாதானம் சொல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கடைசியாக ஸ்ரீ பூவராஹஅய்யங்கார் பேசுகையில் அப்படி ஏதாவது விவாதாஸ்பதமான மதாசார ஸம்பந்தமான மத விஷயமான சட்டம் விவாதத்திற்கு வந்தால் தன்னுடைய தொகுதியில் பொதுஜன 'வாக்கெடுத்து அதன் மெஜாரிடியாரினர் அபிப்ராயப்படி நடப்பதாகவும், மெஜாரிடியாரின அபிப்ராயப்படி நடக்கமுடியாமல் போனுல் சட்டசபையிலிருந்து ராஜீநாமா செய்துவிடுவதாகவும் இப்படியே காங்கிரஸ் செய்யச்சொல்லுமென்றும் கூறினுர்.

அக்ராஸநாதிபதி தமது முடிவுரையில் ஸி. ரா. ஆசாரியாரிடம் நடந்த ஸம்பாஷணையைப்பற்றிப் பிரஸ்தாபித்துவிட்டு, அந்த ஸம்பாஷணையைக்காட்டிலும் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் மதவிஷயத்தில் தொகுதியிலுள்ளவர்களின் மெஜாரிடி அபிப்ராய்ப்படி தாம் நடப்பதாக உறுதி கூறியது சிறிது முன்னேற்றமானதென்றும், ஸந்தோஷிக்கத்தக்கதென்றும் கூறினுர். வந்தனுேபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

நமது நிருபர்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண உபன்யாஸம்.

உடையாளூர் பிரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால், சென்னை தம்பு செட்டித்தெருவில் காளியம்மன், கோயிலில் 27–1–37முதல் பிரதி ஞாயிறு,திங்கள், செவ்வாய் முதலிய தினங்களில் இரவு8மணி முதல் 9-40 மணிவரையில், ஸ்ரீமத் வால்மீகி ராமாயண உபன்யாஸம் நடைபெற்றுவருகிறது.

அன்பர்கள் அனைவரும் தவருது வந்திருந்து கதாச்ரவணம் செய்து, பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களைக் கௌரவிக்கவேண்டுமாகப்பிரார்த்திக்கின்ருேம். ராமபக்தர்கள்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு தினுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

சென்னை மாகாண ஸநாதந தர்ம மஹாநாட்டில் பண்டிதர்களின் தீரமொழிகள்.

மஹாமஹோபாத்தியாயர் கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் பாரதநாட்டின் அடிப்படை ஸநாதந தர்மம்தான் மூலபூதகாரணமாக எவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டதென்றும் அதை எங்கும் பிரசாரம்செய்ய ஆர்யதர்மம், தர்மாஜ்யா, மார்க்கபந்து, சநாதநிஸ்ட், மாத்வமித்திரன், கலைமகள், பிரஸன்ன லட்சுமி, முதலிய சநாதந வாரப்பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டுமென்றும், இதற்குமுன் நடுக்காவேரி ஸ்ரீநிவாசசாஸ்திரிகள் பிர்ம்மவித்யா பத்திரிகைமூலம் நமது சனுதனதர்மப் பிரசாரம் செய்ததால் நம் மதம் மிகவும் உயர்ந்த பதவிக்கு வந்ததென்றும், சாதாரணமான புருஷர்களும், நமது பதிவிருதாக்களும், ஒவ்வொரு கிரகத்தில் ஆர்யதர்மத்தை படித்து அதன்மூலம் தர்மாசரணங்கள் செய்கிருர்கள் என்றும், சமீபத்தில் ஸரஸகாவ்யமான நடையில் எழுதிய மூகபஞ்சாசதியை, எவர்களும் படிப்பதும், அதன்மூலம் பரதேவதாத்தியானம் செய்வதும் போற்றத் தகுந்ததென்றும் ஸத்யமே ஸநாதன தர்மம் என்றும் கம்பீரமொழியால் ஜனங்களை பரவசமாக்கினுர்கள்.

சாஸ்திர ரத்னுகரம் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் ஆஸ்திக சபைத்தலைவர்கள் எழுந்ததும், மஹாஜனங்கள் கரகோஷம் செய்தார்கள். சாஸ்திரிகள் அவர்கள் கம்பீரமொழியில் பல,ஜில்லாக்களை சேர்ந்த செல்வாக்குள்ளதோர் கார்யக்கமிட்டியை இக்கூட்டம் நியமிக்கிறது, பாரதீயர்கள் ஸத்யத்தை நிலைநாட்டியவர்கள் எந்த காலத்திலும் மாயிகமான வேலைகள் செய்வது இல்லை என்பது திண்ணம். நவீன நாகரீகர்கள் எப்போதும் ஒருமதத்திலும் நம்பிக்கை அற்றவர்கள். அவர்கள் சமூகத்தில் எந்த சீர்திருத்தம் செய்தாலும் அது மாறுதல் அடையும். அவர்களுக்கு ஸ்திரமான ஓர் பிரமாணமும் இல்லை. பாச்சாத்திய பண்டிதர்கள் மாதிரி மாறுதலே வேண்டியவர்கள், ஆகையால் அவர்கள் செய்கைகளும் எண்ணமும் ஸ்திரமில்லாதது. நம் ஸநாதநிகள் ஸ்திரபுத்தியுள்ளவர்கள். ஸத்தியத்தை கைகொண்டவர்கள். ஸத்தியபூதமான வேதம் முதலிய பிரமாணத்தை அவலம்பம் செய்து மதத்தை நிலைநாட்டியவர்கள். ஆகையால் பிரசாரகர்கள் ஸத்தியத்துடனும் தைரியத்துடனும் தீவிர முயற்சியுடனும் ஈசுவர அநுக்கிரஹத்துடனும் காரியம் செய்யவேண்டுமென்ருர்கள்.

பிரஸங்கபானு சேங்காலிபுரம் கே. வைத்திநாத சாஸ்திரிகள் பிரஸங்கம் செய்யப்போகிருர் என்று அக்கிராஸனர் குறிப்பிட்டவுடன் மஹாஜனங்கள் கரகோஷம் செய்தார்கள். பிறகு பண்டிதமணி பேசுகையில் சென்னையில் ஆலயப்ரவேசத்திற்கு ஆதரவு தேடிக்கொள்ள, மயிலை ப்ராமணர்கள் சூழ்ச்சி செய்யப்படுகிறதை தாம் நேரில் பார்ப்பதாகவும், ஓர் பெரியார், இங்கிலீஷ்படித்த மேதாவி, சூழ்ச்சி நடக்கிறது, சத்தியம் என்று சொன்னதையும் தெரிவித்துவிட்டு நமதுகொள்கைக்கு, வேதாதி பதினுன்கு பிரமாணங்கள் தான் ஆதாரமென்றும், பாச்சாத்தியப்படிப்பு முற்றிலும் விருத்தமென்றும், குரு சிஷ்ய பரம்பரை மிகவும் முக்யமான காரணமென்றும் சீர்திருத்தக்காரர்கள் சாஸ்திரங்கள்சொல்லுவதெல்லாம் முழுமையும் பிதற்றல் என்றும் வைதிகர்களுக்கு தைரியமும் உத்ஸாஹமும் தான் மூலாதாரமென்றும், பிருதுகளை வைதிகர்கள் பாராட்டத் தகாதென்றும் பாரதீயர்களுக்கு பசி, பிணி, வறுமை, இது போவதற்கு ஸநாதன தர்மானுஷ்டானம் தான் மேலானதென்றும் ராஜாக்களுக்குஸநாதன தர்ம பிரசாரகர்களை ஆதரிப்பது அவர்கள் கடமை என்றும், நியாயசபையில் சமீபத்தில் கவர்ன்மெண்டார் இப்போதுதான் ஸநாதனதர்ம விருத்த மசோதாவை கண்டித்தது மிகவும் மேலானதென்றும் ஜாதிஸம்ரக்ஷணம் எல்லாவற்றிலும் மேலானதென்றும் இன்னும் அவர்கள் பிரஸங்கம் செய்தது அவருடைய டைடிலை சத்தியமாக செய்துவிட்டது. ஒரு நிருபர்.

கண்டனக்கூட்டங்கள்.

அநந்தபூர் அத்வைத சபா.

அநந்தபூர் ஸ்ரீ விஸ்வேஸ்வர கோவிலில் பிப்ரவரிமீ 7௳ நடந்த அத்வைத சபையின் 28-ம் வருஷாந்தர கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) சமீபத்தில் திருவாங்கூர் மகாராஜாவின் ஆலயப்ரவேச பிரகடனமானது ஆகம சாஸ்திர வேதங்களை அடிப்படைக்கொண்ட கோவில் ஆராதனைக்கு விருத்தமானதென்றும் ஷை உத்திரவானது மகாராஜாவினுடைய அதிகாரத்திற்கு மீறியதென்றும் சாரதா சட்டமானது ஹிந்து தர்மத்துக்கும், ஆசாரத்துக்கும் விரோதமானதென்றும் ஆகையால் அதை ரத்துசெய்யப்படவேண்டுமென்றும், புதிய அரசியல் திட்டத்தில் தார்மிகர்களை ஆதரிக்க வேண்டுமென்றும், வருகிற எலக்ஷனில் நிற்கும் அபேக்ஷகர்களிடமிருந்து மதவிஷயத்தில் தலையிடுவதில்லை என்று வாக்குறுதி வாங்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மதனப்பள்ளியில் கண்டனம்.

மதனப்பள்ளியில் ஸ்ரீ வெங்கடரமணஸ்வாமிகோவிலில் ஸ்ரீமான் நம்பூரு வெங்கடரமண செட்டியார் தலைமையின்கீழ், ஸனுதனிகளின் கூட்டமொன்று சென்றவாரம் நடைபெற்றது. அச்சமயம் திருவனந்தபுரம் மஹாராஜா அவர்களின் ஆலயப்ரவேச விளம்பரமானது தொன்றுதொட்ட சம்பிரதாயத்திற்கும் ஆகமங்களுக்கும் விரோதமென்பதாக தங்களுடைய அபிப்ராயத்தைத் தெரிவித்து அந்த விளம்பரத்தை ரத்துசெய்யும்படி மஹாராஜா அவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த மீடிங்கைக்கூட்டிய ஸ்ரீமான் B. S. சேஷகிரிராவ் அவர்கள் மூலம் கனம் வைஸிராய் அவர்களுக்கு இந்தத்தீர்மானத்தை அனுப்ப ஏற்பாடும் செய்யப்பப்பட்டது.

ஒரு நிருபர்.

பெரிய காஞ்சீபுரம்.

பிர்மஸ்ரீ டி. கே. பாஷ்யகாராசார்யார் அவர்கள் தலைமையில் உதாஸீன மடத்தில் 4—2—37௳ நடந்த ஸநாதனிகளின் பொது கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

தீர்மானங்கள்:—

1. திருவாங்கூர் மஹாராஜாவினுல் செய்யப்பட்ட தீண்டாதார் ஆலயப்பிரவேச ப்ரகடனம் வேதாகம சாஸ்திரங்களுக்கு விரோதமாயிருப்பதால் அதை ரத்து செய்யும்படிக்கு மகாராஜா அவர்களை கேட்டுக் கொள்கிறது.

2. தீண்டாதார் ஆலயப்ரவேசத்தில் உறுதியுடனிருந்துவரும் திருவாங்கூர்மூத்தாராணி கொச்சிமஹாராஜா முதலானேரைப் பாராட்டுகிறது.

3. சீர்திருத்தத்தின் பெயரால் வரும் மத சமூக பாதகமான சட்டங்களை சட்டசபைகளில் எதிர்த்துப் போராட உறுதி அளிக்கும் அபேக்ஷகர்களுக்கே வருகிற எலெக்ஷனில் ஸநாதனிகள் தங்கள் வாக்கை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

4. மேலேகண்ட தீர்மானங்களின் காபியானது மே. த. திருவாங்கூர் மஹாராஜா அவர்களுக்கும், மூத்த மஹாராணி அவர்களுக்கும், மே. த. கொச்சி மஹாராஜா அவர்களுக்கும், கவர்ன்மெண்டிற்கும், சென்னைமாகாண ஸநாதன தர்ம மகாநாடு தலைவருக்கும் அனுப்பப்பட்டு, வந்தனேபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. நமதுநிருபர்.

சாத்தனுஞ்சேரி.

ஸனுதன தர்மசங்கம்.

ஷை ஸங்கத்தின் ஆதரவில் 2-2-37 இரவு 8 30மணிக்கு கிராமவாஸிகளின் பொதுக்கூட்டம் கூடியது. ம-ா-ா-ஸ்ரீ C.B. சுப்பிரமணிய அய்யர்(RETIRED HEAD ACCCUNTANT.) அக்ராஸனம் வகித்தார். செங்கற்பட்டு,ஹிந்து மத்யக்கமிட்டி உதவிகார்யதர்சி, திருவாங்கூர் ஆலயப்பிரவேச ஸ்ரீமுகத்தைக்கண்டித்தும் வரப்போகும் எலக்ஷனில் ஸனுதனிகளின் கடமையைப்பற்றியும் உபன்யாஸித்தார்.

பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின. (1) திருவாங்கூர் ஆலயப்பிரவேச இக்கூட்டம் பலமாய் கண்டிப்பதுடன், ஷை ஸ்ரீமுகதை—வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று மே.த.மஹாராஜா அவர்களையும் அவருடைய திவானையும் கேட்டுக்கொள்கிறது, (2) மெ.த. கொச்சி மஹாராஜா அவர்கள் தர்மத்தை அவலம்பித்து ஆலயங்களை ரக்ஷித்ததற்காக— இக்கூட்டம் அவரைப்பாராட்டுகிறதுடன் மேலும் அவ்வாறே மனஉறுதியுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறது (3)வரப்போகும் எலெக்ஷனில் ஸனுதனிகள் மதவிருத்தமான சட்டங்களை சட்டஸபையில் கொண்டு வருவதோ ஆதரிப்பதோஇல்லையென்று வாக்குறுதி கொடுப்பவர்களுக்கே ஓட்டு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது (4-5) சென்னையில் நடக்கும்,ஸனுதன தர்மகான்பரன்ஸை இக்கூட்டம் பலமாய்ஆதரிப்பதுடன்,ஷைகான்பரன்ஸுக்கு P.N. நாராயணசாஸ்திரியை இவ்வூரின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஓருநிருபர்.

ஆழ்வார் திருநகரி.

மற்றெரு கண்டனக்கூட்டம் சில முக்ய தீர்மானங்கள்.

சென்றவாரம் ஸ்ரீ ஆழ்வார் தேவஸ்தானத்தில் வக்கீல் ஸ்ரீமான் தாதாசாரியார் தலைமையில் நடைபெற்ற ஸனுதநிகளின் கூட்டத்தில் திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்துடன், சாரதாச்சட்டத் திருத்த மசோதாவையும், மதவிஷயத்தில் சட்டஸபை பிரவேசிப்பதையும் கண்டித்து தீர்மானம் செய்யப்பட்டது.

மேலும், புதிய சக்ரவர்த்தியார் தமது பட்டாபிஷேக காலத்தில் ஓர் உறுதிமொழியை பிரகடனம் செய்து மதவிஷயத்தில் தமது ராஜாங்கம் உறுதியாக நடுநிலைமை வஹிக்குமென்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்றும், மடாதிபதிகள் இன்னும் பலமாக ஸனுதந தர்மபிரசாரத்திற்கு உதவிசெய்யவேண்டுமென்றும் மடத்தின் வருமானத்தில் 100ல் 10 வீதத்தை இந்த பிரசாரத்திற்கு செலவிடவேண்டுமென்றும், 2 ஆயிரம் ரூபாய்களுக்கு மேல்பட்ட வருமானமுள்ள கோவில்களின் சொத்துக்களிலிருந்து தர்மபிரசாரத்திற்காகவும், ஆகமாதி சாஸ்திர பாடசாலைக்காகவும் செலவுசெய்யவேண்டியது அவச்யமென்றும் நம்மாழ்வார் ஸபையை மறுபடி தீவ்ரமாக நடத்தி வரவேண்டுமென்றும் சில முக்ய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவென்று நமது நிருபர் அறிவிக்கிருர்.

பத்திரிகையின் அவசியமும், நமது கடமையும்.

(பிரும்மஸ்ரீ டி. வி. தர்மராஜ கனபாடிகள்.)

ஆஸ்திக அபிமானிகளே! தயவு செய்து எனது வாசகத்திற்கு செவி கொடுங்கள்! நம் நாட்டில் நமது (ஸநாதன) மதத்தையழிக்க எவ்வளவு உபாயங்கள் உண்டோ அவ்வளவும் பூர்ணமாக இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. எவ்வளவு, கக்ஷிகள் சங்கங்கள், சபைகள், பத்திரிகைகள், ஸினிமா மேடைகள் உண்டோ அவ்வளவிலும். நமது மதத்தை அழிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. போதாக் குறைக்கு சென்னை சட்டசபைகளிலும், இந்தியா சட்டசபைகளிலும் நமது மதத்தை அழிக்க, ஒரு கூட்டமும் இருந்து வருகிறது. (வரவும் இருக்கிறது.) இவ்வளவு இடையூறுகளுக்கும் நடுவில் (சப்பாத்திக்கள்ளிக்கு நடுவில் பில்வமரம் போல) நமது மதம் ஜீவித்துவருகிறது. சுத்தியிருக்கும் சப்பாத்திக்கள்ளிகளால் மரத்திற்கு இடையூறில்லை என்று நினைக்கக் கூடாது. ஜலம் விட்டு வளர்க்க முடியாதும் பூஜைக்கு பில்வம் உபயோகப்படாமலிருந்தால் அதனால் யாதும் பயனில்லையல்லவா? நமது மதமாகிய பில்வவிருக்ஷத்திற்குச் சத்ருக்களாகிய இதர கக்ஷிகளையும், பத்திரிகைகளையும் வேர் பிடுங்கி தினசரி (மதாபிமான) பத்திரிகையாகிய ஜலத்தை வார்த்து, நமது மத ரஹஸ்யங்களாகிற பில்வ தளங்களைக்கொண்டு பகவானை பூஜை செய்யவேண்டியது மிகவும் அவசரமும், அவசியமும் நமது கடமையுமாகும்.

தற்காலம் உலகில் ஆஸ்திகர்கள் படிக்கவேண்டிய (மதாபிமான) பத்திரிகைகள் மிகவும் ஸ்வல்பம். ஆனால் அதை ஆதரிக்கும் சந்தா நேயர்கள் அதனிலும் ஸ்வல்பம் என்றே கூறவேண்டியிருக்கிறது ஆஸ்திகர்கள் மதாபிமான பத்திரிகைகளை விருத்திக்குக் கொண்டுவரலாம். நித்திரையிலேயே இருந்தால் நாளுக்குநாள் நமதுமத ரஹஸ்யங்கள் க்ஷீண தசையை அடைந்துவிடும் என்பதை யாரும் மறுக்க முடியாது. மத விசுவாஸம் உள்ள பத்திரிகைகளால் தான் மதத்தைக் காக்க முடியும்.

நமது ஹிந்துக்களில் உத்தம ஜன்மமெடுத்த சிலர் நமது (ஸநாதன) மதத்தை தூஷித்தும், எழுதியும் வருவது கண்டிக்கத்தக்க விஷயம். இவர்கள் கூட்டக்குத் தடையின்றி, தாராளமாக சில பத்திரிகைகளும் இடமளித்துவருகிறது. நிமிஷத்திற்குத் தோன்றியபடியும் சில விகட பத்திரிகைகளும், ஸினிமா படக்காக்ஷியும் வைதிகர்களையும் வைதிக மதாசாரங்களையும் மனம் போனபடி தூஷித்துவருவது ஆஸ்திகமணிகளின் மனதைப் புண்படுத்தவில்லையா? பத்திரிகைகளிலும் ஸினிமாக்களிலும் இதர வகுப்பினரை அவமதித்திருப்பதைக் கண்டு, அம்மதத்தினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டதை, நமது ஆஸ்திகர்கள் பத்திரிகைகளில் படித்தது இல்லையா? இனியாவது அம்முறையைக் கண்டிக்க முன்வருவார்களா? நமது மதத்தையும், மதாசாரத்தையும் இழிவாக யார் பேசினாலும் எழுதினாலும் அதைத் தகுந்தபடி தண்டிக்க அரசாங்கம் இருக்கும்போது ஏன் பயப்பட வேண்டும்? தூதுகோஷ்டியாகக் காருண்ய கவர்ன்மெண்டை அடைந்து முறையிட முன் வாருங்கள். நமது மதத்தை அழிக்க எந்தக்கக்ஷிகள் ஆரம்பித்தாலும் அவைகள் மண்ணுடன் மடிந்துவிடுமென்பது நமக்கு வெகு நாளைய அனுபவம் உண்டு. ஆனால் நாம் நித்திரையைவிட்டு எழுந்து முயற்சி செய்துகொண்டிருக்க வேண்டும். "முயற்சியின் பலனே அதிருஷ்டம் என்றுன்றோர் கூறுவர்.

உலகிலிருக்கும் இதர பத்திரிகைகளெல்லாம் நமது மதத்தை விட்டு நம்மை எவ்வளவு தூரம் பிரிக்க முடியுமோ, அவ்வளவு தூரம் பிரிக்க வழிதேடி வருகிறது. நமது, மதப்ரசாரங்கள் ஆங்காங்கே நடந்து வருகிறது. அவ்விஷயங்களுக்கு இந்த பத்திரிகைகள் பூர்ண இடமளிக்காமல் விஷயத்தை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து ஏதாவது ஒரு மூலைகளில் படிப்பவர்களுக்கு உத்ஸாகக் குறைவை உண்டுபண்ணுகிற முறையில் காலதாமதத்தோடு பிரசுரிக்கப்படுகிறது. நமது மத ரகஸ்யங்களை மட்டும் பிரசுரம் செய்யவும், நமது மதத்தை தூஷிக்கும் பத்திரிகைகளை கண்டனம்செய்யவும், நம்மிடம் சொந்தமாக தினசரிப் பத்திரிகள் இல்லாதது வருந்தத் தக்க விஷயம். நமது சொந்த பத்திரிகைகள் விசேஷ அபிவிருத்தியை அடைந்தால் தான் ஆஸ்திகர்கள் மனம் புண்படாமல் இருக்கும். அதற்கு தகுந்த வழியை ஒவ்வொரு ஆஸ்திகர்களும் சநாதன சபைகளும் சிந்தித்து, ஆங்கிலம், தமிழ், இரு பாஷைகளிலும் தினசரி பத்திரிகைகளாக வெளியிட வேண்டியது மிகவும் அவசரமும் அவசியமும் ஆகும். அதுவே நமது கடமையுமாகும். நிற்க,

காங்கிரஸ் மகாசபை ஆரம்பித்தகாலத்தில் இந்தியாவில் உள்ள எல்லா மகா ஜனங்களுக்கும் நன்மை செய்யும் நோக்கோடுதானாரம்பித்ததே தவிர, ஸநாதனிகளுக்கும் இடையூறு செய்வதற்காக அல்ல என்பதை தற்கால காங்கிரஸ் தலைவர்கள் உணராமல், சநாதனிகளை வசை மொழிகளால் ஏன் பிரசாரம் செய்யவேண்டும்? "மதசம்பந்தமான விஷயங்களில் காங்கிரஸ் தலையிடாது" என்று பூர்வீக காங்கிரஸ் தலைவர்கள் தீர்மானம்செய்ததைத் தற்கால காங்கிரஸ் தலைவர்கள் ஏன் மறந்துவிட்டார்களோ தெரியவில்லை. ஸநாதன தர்மிகளாகிய நமக்குக் காங்கிரஸினிடம் த்வேஷம் கிடையாது. ஆனால் மதசம்பந்தமான பிரச்னைகளில் காங்கிரஸ் தலையிடுவது பற்றித்தான் நமக்கு அதிருப்தி ஏற்படுகிறது. மதசம்பந்தமான விஷயங்களை மதாசாரியர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அதன்படி நடக்கவேண்டுமேயொழிய வேறு தனிப்பட்ட நபர்கள் கூறுவதை சத்யவாக்காக நம்பி பாமரஜனங்களின் மனதைக் கலக்கக் கூடாது. மதாசாரியர்களும் நமது 'மதக்ரந்தங்கள்' கூறுகிறபடி தான் நமக்கு ஆக்ஞாபனம் செய்வார்கள். அந்த விதிகளைக் கூட்டவும் குறைக்கவும் வேறு யாருக்கும் (மதாசார்யாள் உள்பட) அதிகாரம் கிடையாது. இங்ஙிப்படியிருக்க, காவிரபீடாதிபதி என்னும் ஒருவர் இருப்பதாகவும் அவர் தீண்டாதார் ஆலயபிரவேசத்திற்குப் பூர்ண ஆதரவு அளித்துவிட்டதாகவும் முன்னொருநாள் பத்திரிகைகளில் வெளிவந்துளது. "இந்த மஹான் யார் என்பது விளங்கவில்லை. ஒரு சமயம் ஆர்யசமாஜியாக இருக்கலாம் என நினைக்கிறோம். எல்லாம் கலியின் கூற்று. மதக்ரந்தத்திற்கு விரோதமாக கூறுபவர்கள் உண்மை மதாசாரியர்களாயிருக்கமுடியாது என்பது ஆஸ்திகர்களின் துணிபு.

யுகக்கணக்காக நமது மதாசாரங்களை "தீர்க்கதரிசி"களான மகரிஷிகள் பாதுகாத்து நம்மிடம் வந்திருக்கிறது என்பதை மதாபிமானமுள்ள எவனும் மறுக்கமுடியாது. அக்காலங்களில் உள்ள "தீர்க்கதரிசி"களைவிட தற்காலம் (போலியாகவுள்ள) தீர்க்கதரிசி என்று சிலர் கூறும் பேர்வழிகள் மனம் போனபடி மதத்தைப்பற்றிக் கூறுவதும் இவர்களுக்குப் பின் பாட்டாக சில "அறிவிலிகள்" தாளம் போடுவதும் "மன்னிக்க முடியாத குற்றம்" என்பதை ஒவ்வொரு ஆஸ்திகர்களும் மறவார்கள். போதாக் குறைக்கு கீதையும் உபநிஷதங்களையும் ஆதாரம் காட்டுகிறார்கள். ஏனெனில் இவர்களிடமிருந்துதானே நமக்கு கீதோபதேசம் செய்து கொள்ள வேண்டும்? ஐயோ பாபமே!!

WONDERFUL PREDICTIONS AND ACCURATE LIFE READING.

Simply write your questions clearly and send them on to us well packed in a cover. Correct replies are sent by next post. Answers to prashnas and annual Life reading are our specialities. please omit questions relating to theft and Government. Kindly mark the exact time of your writing or of your birth and date

	Rs. As. Ps.		Rs. As. Ps.
FEES: 1 TO 4 QUESTIONS ...	2 0 0	1 YEAR LIFE READING IN 8 PERIODS	5 0 0
ABOVE 4, EACH QUERY ...	0 8 0	ANY SINGLE DHASA WITH 9 SUB-PERIODS ...	12 0 0

OPINIONS.

P. H. Sundaram Esq., B.A., B.L., Dt. Munsif Kulitalai, 7-12-36

"I am quite satisfied with the accuracy of your predictions and your remarkable grasp of the science".

M. N. Choudhury, Lt. col. I.M.S., Ag. Surgeon General Madras.

"You predicted that I would get Rs. 35,000/- I practically got the sum unexpectedly. Your predictions for the period are practically correct."

B. K. Chaturvedi Bar-at-Law. Dt. Judge, Suratgar, Bikaner State.

"Daibagya T. V. Jayarama Sastry of Teppakulam has been known to me for some time past and I can readily say that his predictions are both wonderful and accurate".

K. Kuppusami M.A., F.C.S. Acct. General Madras.

"The accuracy of your predictions is marvellous. My transfer and promtion took place exactly on the day fixed by you".

Brihmasri T. V. Jayarama Satrigal, Director,
Venus Astrological Bureau, Teppakulam P. O. TRICHY.

வெளியூர்ச்செய்திகள்.

ஆலங்குடி.

ஆலங்குடி ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் தாது-ஞூ தை-மீ 25௳ பானுவாரம் 7-2-37 அன்று மாரியம்மனுக்கு காலை 10 மணி முதல் 12½ மணி வரையில் மகான்யாஸபூர்வமாய் அபிஷேக ஆராதனைகளும் இரவு 7 மணிக்கு சந்தனக்காப்பு அலங்கார வைபவமும் 9 மணிக்கு முத்துச்சிபிகையில் ஸ்ரீ அம்பாளை அலங்கரித்து வீதி ஊர்வலக்காக்ஷியும் அதிவிமர்சையாக நடைபெற்றது. இவ்வூர் நாதசுரம் வேணுகோபாலபிள்ளையால் தக்க முயற்சியுடன் தக்க வித்வான்கள் 4 ஜதை மேளக்கச்சேரிகளும நன்றாக நடைபெற்றது.

வருஷா வருஷம் இதேமாதிரி ஸ்ரீ மாரியம்மனுக்கு பக்தகோடிகளாகிய பல பிரமுகர்களும் ஒன்று சேர்ந்து மேன்மேலும் விமர்சையாக நடைபெறவேணுமென்று ஸத்ஸங்க ஸபையார் ஸ்ரீமாரியம்மனை பிரார்த்திக்கின்றோம் ஸ்ரீ மாரியம்மன் கிருபைகூர்ந்து எல்லோரையும் ரக்ஷிக்கவேணும்.

ஒரு நிருபர்.

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

ஹே கலிபுருஷர்களே! நீங்கள் ஆஸ்திகர்களுடைய வயற்றெரிச்சலை ஏன் கிளப்புகிறீர்கள்? தீண்டாதாருக்கு ஆலயப்ரவேசம் செய்துவைத்து விட்டால் அவர்களுக்குப் பசி ஆறிவிடாது. அவர்களுக்குசெய்யவேண்டிய நன்மைகள் வேறு எவ்வளவோ இருக்கிறது. அவைகளில் ஈடுபடுங்கள். தெய்வ சாபம் பொல்லாது. "அரசன் அன்று கொடுத்தால் தெய்வம் நின்று கெடுக்கும்" என்கிற பழமொழியை ஏன் மறந்துவிட்டீர்கள்? திருவாங்கூர் ராஜ்யத்தில் பஞ்சமர்கள் ஆலயப்ரவேசம் செய்துவிட்ட சந்தோஷம் இன்னும் உங்களுக்கு அடங்கவில்லை. உலகம் பூராவும் அதுமாதிரி நடக்கவேண்டுமென்று பறை சாற்றி வருகிறீர்கள். காங்கிரஸ் அரசியல் விஷயத்தில் ஈடுபட்டது போக மதவிஷயத்தில் தலையிட்டு உலகத்தவர்களைப் பிரித்துவிட்டு ஆஸ்திகர்கள் மனதையும் புண்படுத்தி வருகிறது.

காங்கிரஸ் சபைக்கு ஒருவரிடமும் த்வேஷமில்லை என்று கூறுவது உண்மையானால் இனியாவது மதவிஷயங்களில் பிரவேசிக்காமல் இருந்தால் சநாதனிகளும் உங்களுக்குப் பூர்ண ஆதரவு காட்டுவார்கள். அதில்லாவிட்டால் என்றைக்கும் சநாதனிகள் உங்களுக்கு விரோதிதான் என்பதை நம்புங்கள். இவர்களுடைய விரோதம் என்ன செய்ய முடியும் என்று "ஹிரண்யகசிபு" போல் மார் தட்டி நீங்கள் பேசினாலும் "பிரஹ்லாதனுக்கு அருள்புரிந்த பரந்தாமன்" எங்களிடம் அந்தர்முகமாக இருந்து எங்கள் விரோதிகளை ஸம்ஹாரம் செய்யக் காத்துக்கொண்டு இருக்கிறார் என்பதை அதிசீக்கிரம் உணருவீர்கள். நிற்க,

ஹே ஆஸ்திக கனவான்களே! மடாதிபதிகளே! ஸ்ரீ காமகோடிபீடாதிபதி ஆசாரியாளுடைய அனுக்ரஹத்துடன் நடந்து வரும் "ஆர்யதர்மம்" என்னும் பத்திரிகையையும் ஸ்ரீ புரி ஆசார்யாள் அனுக்ரஹத்துடன் நடந்துவரும் "தர்மராஜ்யா" என்னும் பத்திரிகையையுமாவது தினசரிகளாகவும், பெரியசைசிலுமாகவும் வெளியிட முன் வரவேண்டியது மிகவும் முக்கியம் என்பதை மறுமுறையும் வற்புறுத்துகிறேன். மதத்திற்காக செலவிடும் பணம் ஈச்வரார்ப்பணமாகி பரலோகத்திலும் நன்மையை அளிக்கும் என்று தாழ்மையுடன் தெரிவிக்கிறேன். ஸர்வேச்வரனும் அருள்புரிவானாக.

கல்கத்தா.

ராதாகல்யாணம்.

கல்கத்தா பவானிபூர் ஹரீஷ்முகர்ஜீ ரோட் 68/3 A நற்பர்க்ருஹத்தின் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கின்ற ஸ்ரீ கோதண்டராம பஜனாலயத்தில் சென்ற தை-மீ 18௳ (31-1-37) பானுவாரம் ஹஸ்த நக்ஷத்திரம்கூடிய சுபதினத்தில் ஸ்ரீ ருக்மணீ ஸத்யபாமாஸமேத ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுக்கு ஸ்ரீ ராதாகல்யாண மகோத்ஸவம் அதி விமர்சையாக நடந்தேறியது. ஷை மகோத்ஸவதினம் காலை 7 மணிமுதல் 10 மணிவரையில் பஜனை பத்தியும் அதன் பிறகு உஞ்சவ்ருத்தியும் ஸ்ரீ ராதா கல்யாண மகோத்ஸவமும் நடந்தபின் சுமார் 400 பிராம்மணர்களுக்கு ஸந்தர்பணையும் ஸாயங்காலம் 4½ மணி முதல் ப்ரும்மஸ்ரீ மணிபாகவதர் அவர்களால் ஸ்ரீ ருக்மணீ கதா காலக்ஷேபமும் ரொம்ப அழகாய் செய்யப்பட்டது. மறுநாள் திங்கள்கிழமை தினம் ஸ்ரீ ஆஞ்சநேய உத்ஸவமும் அதி விமர்சையாய் நடந்தேறியது. கலியின் கோலாஹலத்தால் விபரீதமான இக்காலத்திலும்கூட மேல் கண்ட பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டு தங்களாலான த்ரவ்ய ஸகாயத்தை செய்து சரீர ப்ரயாஸத்தையும் எடுத்துக்கொண்ட கல்கத்தா வாஸிகளான தென்னிந்தியர்களுக்கு ஸ்ரீ ராதா ருக்மணீ ஸத்யபாமா ஸமேத ஸ்ரீ கோபால கிருஷ்ணஸ்வாமி ஸர்வாபீஷ்டத்தையும் அனுக்ரஹிக்கும்படி ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை ப்ரார்த்திக்கிறேன்.

கிட்டு சாஸ்திரிகள்.

திருவெண்காடு.

ஸநாதனதர்ம சபை.

திருவெண்காடு சன்னதி ராம மடத்தில் தாது-ஞூ தை-மீ 29௳ வியாழன் பகல் 3½ மணிக்குசன்னதி பிர்ம்மஸ்ரீ நாராயண வாத்தியார் அக்ராஸனத்தின் கீழ் பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியாரின் பிரேரணையில் இச்சபை கூடியது.

ஷை யூர் அ. முத்துஸ்வாமி சாஸ்திரிகள் கீழ்வருமாறு பேசினார்.

ஆஸ்திகர்களே (சாந்தோக்யம் 6-வது அத்யாயத்தில்) பிராணிகள் மூன்றுவிதமாக பிரிக்கப்பட்டன. அதில் பக்ஷிகளும், பசுக்களும், செடி, கொடிகளும் இப்பவும் நம் கண்முன்னே சுகமாய் இருந்துகொண்டும் பிறரால் ஆதரிக்கப்பட்டும் நிலைமையான ஆகாரத்துடன் இருக்கின்றன. அதின் ஓர் பிரிவிலும் ஏகதேசமான நாம் எப்படிப்பிழைப்போம். எங்கே செல்வோம். நம்மைக் காப்பாற்றுவோரில்லையே என்று வருந்துகிறோம். அதை சிறிது ஆலோசித்தால் நமது நிலைமைக் கேடுதான் காரணமாய்த் தோன்றுகிறது. என்னவென்றால் நமது நோக்கத்தில் தாழ்ந்ததான ஓர் மரமானது நிலைமையான ஆசாரமுண்டு. தன் கனிகளை பக்ஷிகளுக்கும் நமக்கும் உபகாரம் செய்கிறது. பசுவானது புல் பூண்டுகளையுண்டு நமக்கும் தேவர்களுக்கும் பாலையளிக்கிறது. அவைகளை எப்பொழுதும் சமீபத்தில் பார்த்துவருகிற நாம் வேதத்தில் கூறியவாறு நமக்குமேம்பட்ட தேவருஷிபித்ருக்களுக்கு ஒரு விதமான உபகாரமும் செய்தோமில்லை. தவிர நமதுசகோதரர்களான பசு முதலிய பிராணிகள் ஆடையணியாமலும் நாம் ஆடை உடுத்துவதும் விவேகியான மனிதன் கார்யமேயாகும் அதை அனுசரித்தே நமது மூதாதைகள் ஆண் மக்களுக்கு 7-வது வயதில் உபநயனம் செய்து கௌபீனத்தையும் விவாஹம் முதல் கச்சத்தையும் விதித்தார்கள். பெண் மக்களுக்கும் 7-வது வயதில் வஸ்திரத்தினால் அவச்யமான அவயவத்தை மறைக்க விவாஹத்தை விதித்தார்கள் நாம்அதை மறந்தோம். துணிகட்டாத மிருகம் எப்படி சஞ்சரிக்கிறதோ அவ்விதம் நக்னன் என்று சொல்லத் தகுந்தவாறு வஸ்திரம் தரிக்கிறோம். இதுபோன்ற நம்மிடமுள்ள பல தோஷங்களையும் ஒவ்வொரு குருவாரமும் சொல்லுகிறேன். நாம் இனி தாமதிக்காமல் நமது நிலைமையை ஆலோசித்தால் அதே க்ஷணத்தில் சௌக்யம் பெறலாம். பின்பு அக்ராஸனாதிபதின் முடிவுரையுடன் ஸபை இனிது கலைந்தது.

ஆழ்வார் திருநகரி.

சமூஹ பகிஷ்காரம்.

கோனார்களின் ஊர்க்கூட்டம்.

ஆழ்வார் திருநகரியில் சமீபத்தில் நடைபெற்ற இந்நகர் பஞ்சாயத்துக் கோர்ட் தேர்தலில் பெரும் போட்டியாயிருந்து இறுதியாக ஸ்ரீமான் யு. பி. திருவேங்கடத்தய்யங்கார் பிரஸிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். கோனார் சமூகத்தைச்சேர்ந்த பஞ்சாயத்து மெம்பராயுள்ள ஒருவர் யாதவர்களின் ப்ரியப்படுகிறவர்களுக்கு ஓட் செய்யவில்லையென்பதற்காக இரண்டொரு தினங்களுக்கு முன் ஊர்க்கூட்டங்கூடி மேற்படி மெம்பர் வீட்டு விசேஷங்களுக்கு எந்தக்கோனாரும் செல்லக்கூடாதெனவும், ஷையாரிடம் எவரும் எந்தக்காரியத்தை யொட்டியும் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதெனவும் நாவிதன், வண்ணான்கூட ஷைமெம்பருக்கு வேலை செய்வது கூடாதெனவும் முடிவு செய்திருக்கின்றதாய் தெரியவருகிறது, திருச்சி டாக்டர் ஸ்ரீமான் எஸ். எஸ். ராஜன் முதலியோர்மீது காங்கிரஸ் காரர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைக் காட்டிலும் கோனார்கள் கட்டுப்பாடு நடவடிக்கை கடுமையானதாகும். இம்மாதிரி லௌகீகமான அற்பவிஷயங்களுக்கெல்லாம் கட்டுப்பாடான நடவடிக்கையிருக்கையில் சாஸ்திரீயமான மஹா பெரியவிஷயங்களில் அதிக்ரமச்செயல்புரியும் விஷமிகளுக்கு கேள்விமுறையில்லாமலிருக்கிறதே! அவைகளைமுக்பஸ்தர்கள் கவனிப்பார்களாவென யாவராலும் பேசிக்கொள்ளப்படுகிறது.

காலக்ஷேப உபந்யாஸம்.

காரப்பங்காடு ஸ்ரீ உ. வே. வித்வான் தேசிக வரதாச்சாரியார் இந்நகர் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில் பிரதிதினமும் மிக ரமணீயமாக பகவத்விஷய காலக்ஷேப உபந்யாஸம் செய்துவருகிறார். பக்தர்கள் பலரும் திரளாக வந்து கேட்டுப் பரமானந்தமுற்று வருகின்றனர்.

ந. வி. நி.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.

எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால், விலை சாஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோ ரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.

R. Ramaswami Iyengar, Proprietor

(215123)

அநாவசியமாக ஏன் - -
- அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

புஷ்யோத்ஸவமும், திருப்புகழ் மகாநாடும்.

சேலம்ஜில்லா ஆத்தூர் தாலூக்கா,ச்வேதநதியின் உத்தர கூபத்தில் விளங்காநிற்கும் ஆனயாம்பட்டி என்னும் தேவகுஞ்சரி க்ஷேத்திரத்தில் சென்ற பதினைந்து 15-வருஷங்ளாக நடைபெற்றுவரும்ஸ்ரீவல்லி தேவஸேநா ஸமேத ஸ்ரீ ஸ்கந்தனுடைய இவ்வருஷ புஷ்யோத்ஸவமும் வெகு விமரிசையாக அவ்வூர் ஆஸ்திக மகா ஜனங்களுடைய முயற்சியினுல் நன்ருக நடைபெற்றது.

ஷை உத்சவத்தில் மகா வித்வத்சிகாமணிகளால் உபந்யாஸங்களும் ஸங்கீதக் கச்சேரிகளும் பாமர ஜனங்களையும் ஸந்தோஷிக்கும்படியாக நடைபெற்றதுடன், மூன்று வேத பாராயணமும் மகன்யாஸ புரஸ்ஸரமாகஏகாதச ருத்ரபாராயணத்துடன் அபிஷேகமும் லக்ஷார்ச்சனையும் நடைபெற்றது.

மைசூர் ஆஸ்தான வித்வானுகிய பிரும்மஸ்ரீ ஆர். எஸ். விசுவனுதசாஸ்திரிகள் அவர்களால் குமார ஜனனம் உபன்யசிக்கப்பட்டது. 25-1-37 முதல் பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தாராமதீக்ஷிதர் அவர்களால் மாத்தியான்ஹிக பூஜா காஜத்தில் ஸம்ஸ்க்ருதம் தெரியாத ஆஸ்திக மகா ஜனங்களுக்கும் விளங்கும்படி வாக்யார்த்தமும் இரவில் ஸ்ரீ ருக்மணி கல்யாணமும் 28-1-37 ல் ஸ்ரீ வாமனுவதார ரஹஸ்யமும் பாமர ஜனங்களுக்கும் ஸ்ரீ பகவானிடத்தில் பக்தியின் பெருக்கினுல் பரவசிக்கும்படி ரொம்பவும் லலிதமாகவும் அழகாகவும் உபன்யாசம் நடைபெற்றது.

பிரதி தினமும் குஹதாஸ் என்னும் மகா-ா-ஸ்ரீ சேங்காலிபுரம் நடராஜய்யர் அவர்களால் திருப்புகழ் பஜனையாது பாமர ஜனங்களை சாந்நியுடன் பகவானிடத்தில் லயிக்கச் செய்தது.

27-1-37 ல் பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் திருப்புகழ் மகாநாட்டில் தலைமை வகித்தார், குஹதாஸ் என்னும் சேங்காலிபுரம் நடராஜய்யர் அவர்கள் திருப்புகழ் மஹிமையைப பற்றி அழகாக உபன்யசித்தார.

மகா-ா-ா-ஸ்ரீ டி. எஸ். சுந்தரமய்யர், கோயம்புத்தூர் கலாசாலை உபாத்தியாயர் முதலியவர்கள் வந்து நடத்தியது கொண்டாடத்தக்கது.

பி. என். ராமனுதசாஸ்திரி.

ஆலப்புழையில் அத்ருப்தி.

திவானின் ஸமாதானம்.

திருவாங்கூர் விளம்பர விஷயமாக ஆலப்புழை நகரத்தில் பெரும்பாலோர்க்குப் பெருத்த அத்ருப்தி இருப்பது வெளிப்பட்டது. திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவிடம் போயிருந்தபோது இது அவருக்கு தெரிவிக்கப்பட்டது. பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில், ஆலப்புழையில் பெரும்பாலோர்க்கு ஆலயப்ரவேச விளம்பரம்பிடிக்கவில்லையென்பதைத் தாம் அறிந்துகொண்டதாகவும், ஆயினும், அந்த விளம்பரத்தை இங்குள்ளவர்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாயும், எதிர்ப்பு உணர்ச்சியானது தாத்காலிகமாக இருந்தபோதிலும் அது நீடித்திராதென்று தாம் நம்பியிருப்பதாயும் வேண்டிக்கொண்டாராம்.

உங்களுக்கு பெரிய அதிர்ஷ்டம் வருகிறது. விட்டுவிடாதீர்கள்.
வைத்திய நிபுணர்களாலும் செய்யமுடியாத, அபூர்வசக்தியுள்ள அரல் ரசமணியை செய்து விட்டோம்.
பழனி டாக்டர் கே. எஸ். பதி அவர்களின் அபூர்வ ரசமணி
இன்றே ஆர்டருக்கு முந்துங்கள்! முந்துங்கள்.
இதன் பெருமையை எவராலும் அளவிட முடியாது.
ரசமணி
பெரியமகானுல் இம்மணி கிடைத்தது.
இதை நீங்கள் அணிந்துகொண்டால், சகல கஷ்ட நஷ்டங்களும் விலகி விடுகிறது.
அதிர்ஷ்டம் பிறந்து செல்வம் உண்டாகிவிடும். தொழில் விருத்தியாகும். லக்ஷ்மி கடா
க்ஷம் உண்டாகும். இடுப்பிலணிந்துகொண்டு இல்லற இன்ப ரகசியத்தில் ஆனந்திக்கலாம்.
பாலில் போட்டு சாப்பிடுவதால் இந்திரியம் கெட்டியாகி தாது புஷ்டியில் யானை பலம் உண்
டாகும். துரிதஸ்கலிதம், இந்திரிய ஒழுக்கு, சொர்ப்பன ஸ்கலிதம் நீங்கும். க்ஷயம், காசம்,
மூலம், குஷ்டம் முதலிய அநேக வியாதிகள் மாயமாய் மறையும். இரவில் பயமின்றி போக
லாம். பேய், பிசாசுகள், துஷ்டதேவதைகள் பயந்து ஓடிவிடும். வாயில் அடக்கிக்கொண்
டால், சகல வசியமும், நினைத்த காரியம் அனுகூலமும் உண்டாகும். விஷக்கடிகள் நீங்கும்.
இதன் விலை ஒரு மணி ரூ 25.
குறிப்பு:— இந்த விளம்பரத்தை குறிப்பிட்டு வரும் ஆர்டர்களுக்குத்தான் பிப்ரவரி
26உ வரை ஒருமணி ரூ. 7க்கு அனுப்புவோம். சில மணிகளே இருப்பதால் மணிகள் சில
வானபின் வரும் ஆர்டர்களை கவனிக்கமுடியாது. ஆர்டருக்கு முந்தினுல்தான் மணி கிடை
க்கும். உடனே ஆர்டர் அனுப்புங்கள்.
F. M. S. மலாய்நாட்டினர் ரூ. 12 முன் பணமாக அனுப்பிவிட வேண்டும்.
கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி. S. I. (ஆ. த)

மதிப்புரை.

தேவஸ்தான பத்திரிகை.

ஸாஹித்யசிரோமணி ஸ்ரீமான் பார்த்தஸாரதி அய்யங்காரால் ஸ்ரீரங்கத்திலிருந்து திங்கள்தோறும் பிரசுரிக்கப்படும் மேற்படிப்பத்திரிகையின் 11ஸஞ்சிகைகள் நமக்குக்கிடைத்திருக்கின்றன. இப்பத்திரிகையில் பல முக்கிய விஷயங்கள் காணப்படுகின்றன. சிவ, விஷ்ணு ஆலயஉத்ஸவ விவரங்களுடன் அந்தந்த உத்ஸவங்களின் உள்கருத்தும் வெளியிடப்படுகிறது. ஆகமங்களில் காணப்படும் பல முக்ய விஷயகளையும் பத்திரிகை மொழிபெயர்த்து வெளியிடுமெனத்தெரிகிறது. இக்காலத்தில் இத்தகைய பத்திரிகையின் அவசயத்தை நாம் அதிகம் வற்புறுத்த வேண்டியதில்லை. இதை யாவரும் ஆதரிப்பது அவசயம்.

வருஷச்சந்தா ரூ. 3 0 0

திருவிசலூர்.

ஒரு பெரியார்.

பிரம்மஸ்ரீ சிறுகுடி கிருஷ்ணஸ்வாமி தீக்ஷிதரவர்கள் திருவிசலூரில் தன் கிருஹத்தில் நியமத்துடன் அக்னிஹோத்ரம் நடத்திவந்து, சென்ற 7வருஷகாலமாய் ஸப்தாஹ நவாஹ மஹோத்ஸவங்களை நடத்திவந்ததும் ஆஸ்திகர்கள் யாவரும் அறிந்த விஷயமே. இந்த வருஷம் மார்கழிமாஸத்தில் பிரம்மஸ்ரீ சிமிழி வெங்கட்டராம சாஸ்திரிகளவர்களைக்கொண்டு ஸ்ரீமத் பாகவதஸப்தாகத்தை விதிப்படி நடத்தினர். அதிஸாரரோகத்தினுல் பிடிக்கப்பட்டு அசக்தராயிருந்தாலும், 7வருஷ காலமாய் பகவத்குண சிரவணம் செய்த மஹிமையாலேற்பட்ட விரக்தியாலும் ஆபத் ஸன்யாஸம் ஸ்வீகரித்துக்கொண்டார். அன்னார் வெகுகாலம் அலவணபோஜன நியமத்துடன் பிரம்மசர்யாச்ரமத்தையும், ஸகல சிரௌத ஸ்மார்த்த கர்மாக்களை யநுஷ்டித்தவராய் கிரமப்படி அக்கிஹோத்ரம் கொண்டு கிருஹஸ்தாச்ரமத்தையும் பரிபாலனம் செய்து இப்பொழுது கிரம்ஸன்யாஸியாய் விளங்கி வருகிருர். இக்கலியில் இம்மாதிரி மஹான்களை நாம் இன்னும் காண்கிறோம். ஆஸ்திகர்கள் யாவரும் இம்மாதிரி பெரியோரைக் கண்டாகிலும் தம் ஆச்ரமதர்மங்களை தவருது அநுஷ்டித்து தர்மத்தை நிலை நிறுத்துவார்களென்று நம்புகிறோம்.

பாலகிருஷ்ணய்யர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam: Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அக்ஷயதிரிதம்

25-2-1937

அ 22　　ஞ 8

1130 1/30
215774

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஃ 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஞூ மாசி-மீ 14உ 1937-ஞூ பிப்ரவரி-மீ 25உ | ஸ 8

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

ஐக்யமகாண எலக்ஷன்.

காங்கிரஸுக்கு 133 ஸ்தானம்.

ஐக்கிய மாகாண எலக்ஷனில் முடிவுசொல்லப்பட்டு விட்டது. அந்த சட்டசபையிலுள்ள 228-ஸ்தானங்களில் 133 ஸ்தானங்கள் காங்கிரஸ்காரர்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

மத்ய மாகாணத்தில் இதுவரையில் காங்கிரஸுக்கு 51-ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன.

பதவி ஏற்கும் விஷயம்.

சில மாகாண சட்ட சபைகளில் காங்கிரஸுக்கு மெஜாரிடி கிடைத்திருப்பதால் இப்போது மந்திரி பதவி ஏற்கும் விஷயமாக காங்கிரஸ் தீவ்ர வாதிகளுக்குள்ளேயே அபிப்பிராயம் மாறிவருகிறது. அபேத வாதிகள் கூட பதவி ஏற்பதை அங்கீகரிக்கிறார்கள். ஏற்கனவே உத்யோகமேற்பதை எதிர்த்துவந்த இடங்களில் கூட காங்கிரஸ்காரர்கள் இவ்விஷயத்தில் அபிப்பிராய மாறுதல் அடைந்து பதவி ஏற்பதை அங்கீகரிக்க முற்பட்டிருக்கிறார்களாம்.

காலஞ்சென்றார்.

சென்னையில் பிரபலமாக விளங்கிவந்த டாக்டர் ஸி. நடேசமுதலியார் சிலதினங்களுக்கு முன் காலஞ்சென்றார். இவர் சென்னைசட்டசபை கார்ப்பரேஷன் முதலியவைகளில் மெம்பராக இருந்தவர். ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்தவராயிருந்தாலும் எல்லா ஜாதி மதஸ்தர்களிடமும் இவர் பக்ஷபாதமில்லாமல் நடந்துவந்ததாகச் சொல்லப்படுகிறது. மயானத்தில் சுமார் 30 ஆயிரம் பேர்கள் வரையில் கூடியிருந்தார்களாம்.

இவர் சென்னை சட்டசபைக்கு சென்னை நகரத் தொகுதியில் ஒரு அபேக்ஷகராக நிற்கிறார். இவருடைய மரணத்தால் அந்தத்தொகுதிக்கு மறு எலக்ஷன் நடைபெறவேண்டியது அவசியமில்லையாம்.

மன்னர்களுள் எலக்ஷன்போட்டி.

ஒரு கோடி ரூபாய் செலவு!

இந்தியாவில் ஏற்பட்டுள்ள சுதேச ஸம்ஸ்தான மன்னர்களின் ஸபைக்கு ஒரு தலைவரைத் தெரிந்தெடுக்கவேண்டும். இந்த ஸ்தானத்திற்கு பாட்டியாலா மகாராஜாவும், தோல்பூர் மகாராஜாவும் போட்டி போடுகிறார்கள். இந்தஎலக்ஷன் விஷயமாக ஒருகோடிரூபாய் செலவு ஆகுமென்று சொல்லப்படுகிறது.

ஸமஷ்டி திட்டம் உருப்படுமா ?

மார்க்கன் ரிபோர்ட்டின்போக்கு

சுதேசி ஸம்ஸ்தானாதிபதிகள் ஸமஷ்டியில் சேருவதைப்பற்றி யோஜித்து ரிபோர்ட்செய்யும்படி நிர்த்தக் கமிட்டியால் நியமிக்கப்பட்டிருந்த மிஸ்டர் மார்க்கன் என்றவர் தமது ரிபோர்ட்டை வெளியிட்டு விட்டார். இதன் மூலம் மன்னர்கள் ஸமஷ்டியில் சேருவதைப் பற்றி அதிக கலக்கம் உண்டாகிவிட்டது. ஸமஷ்டியைப் பற்றிக் கூறும் புதிய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டமானது மிகவும் அக்ருப்திகாமாயும் சுதேச அரசர்களுடைய பாத்தியங்களைப் பாதிக்கக் கூடியதாயும் இருக்கிறதென்றும், இந்த அபாயத்தைத் திருத்தினாலல்லது மன்னர்கள் ஸமஷ்டியில் சேருவது அபாயமென்றும் [illegible] பட்டிருக்கிறது. இதனால் ஸமஷ்டி ஆக்ஷி ஏற்பட பெரிய தடை ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

கலப்பு விவாகத் தடை மசோதா.

தென்னாப்பிரிக்காவில் நெருக்கடி.

மந்திரி ராஜிநாமா.

தென்னாப்பிரிக்காவில் ஆசியக்காரர் ஐரோப்பியர் ஆபிரிக்கர்களுள் நடக்கும் கலப்பு விவாகத்தைத் தடுப்பதற்காகவும், ஐரோப்பியரல்லாதவர்கள் ஐரோப்பியர்களை வேலைக்காரர்களாக வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடுத்தும் ஆசியாக்காரனை மணந்துகொள்ளும் ஐரோப்பிய ஸ்திரீயோ அல்லது மலேய் ஜாதி ஸ்திரீயோ டிரான்ஸ்வாலில் சொத்து வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடுத்தும் 3-மசோதாக்கள் அவ்வூர் சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த மசோதாக்களைப் பற்றி மந்திரிகளுள் பலத்த அபிப்பிராயபேதம் உண்டாயிருக்கிறது. இதன் பலனாக மிஸ்டர் ஹாப்மியர் என்ற மந்திரி ராஜிநாமா செய்துவிட்டார். இவர் ஷை மசோதாக்களை எதிர்ப்பவர். இவர் சமீபத்தில் இந்தியாவிற்கு வந்துபோனார். இவரைத் தவிர மற்ற மந்திரிகள் ஷை மசோதாக்களை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

இந்தத் தகராரைத் தீர்ப்பதற்காக ஜெனரல் ஸ்மட்ஸ் முதலிய பிரமுகர்கள் முன்வந்து ராஜி பேசுவதாயும் தெரிகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம், டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூ க ப ஞ் ச ச தீ’

(4—2—37 தொடர்ச்சி.)

அப்போது வந்த கோரமான ப்ரளயத்தைக் கண்டு கம்பத்தை(நடுக்கத்தை) அடைந்த அம்பிகையானவள்.

‘தஸ்மின் மஹா கௌரீ ப்ரளயோதே ஸமாகதே |
சிவ ஏவ கதிர் மேऽத்ய தஸ்மின்னேகாக்ர மானஸா |
ப்ரளயாம்பு விசோஷாய லிங்கமாலிங்க்ய ஸம்ஸ்திதா ||’

என்றபடி லிங்கமூர்த்தியை இறுகத் தழுவவும், பகவான் ப்ரஸன்னமாகி அம்பிகையைத் தன்னிருகைகளாலும் எடுத்துத் தன்னுடைய இடது பக்கத்தில் வீற்றிருக்கச்செய்தார்.

‘தத: ஸ பகவான் ஈச: ஸ்வகீயார்த்தாஸனே சுபே |
கௌரீமுத்க்ருத்ய ஹஸ்தாப்யாம் ஸ்தாபயாமாஸ வாமத: ||
ததோ விமுக்த பாபா ச தப்த காஞ்சன ஸன்னிபா |
ப்ரணம்ய சிரஸா நாதம் ஸுப்ரஸன்னம் மஹேச்வரம் |
சிவார்த்தாஸனமாருஹ்ய பபௌ ச்ருங்காரவேஷத: ||’

2. இப்படி ஆலிங்கனம் செய்யப்பட்டபோது அம்பிகையின் ஸ்தனங்கள் அங்குரித்து அவற்றின் தழும்பும் கைவளையல்களின் தழும்பும் லிங்கமூர்த்தியில் ஏற்பட்டதை இங்கு

‘அங்கித சங்கரதேஹாம் அங்குரிதோராஜகங்கணச்லேஷை:’

என்று சொல்லப்பட்டது.

3. பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பிகையானவள் ‘அஜரோऽம்ருத:’ என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி நித்ய யௌவனத்தோடு கூடியவளாகையால் தருணியென்று இங்கு சொல்லப்பட்டது.

16. மதுரதனுஷா மஹீதரஜனுஷா
நந்தாமி ஸுரபிபாண ஜுஷா |
சித்வபுஷா காஞ்சிபுரே
கேளிஜுஷா பந்துஜீவ காந்திமுஷா ||

மதுரதனுஷா - இனிப்போடுகூடிய வில்லையுடையதும், மஹீதரஜனுஷா - பர்வதராஜனிடமிருந்து பிறப்பையுடையதும், ஸுரபிபாணஜுஷா - மணமுள்ள பாணங்களையுடையதும், காஞ்சிபுரே - காஞ்சீபுரியில், கேளிஜுஷா - விளையாடிக்கொண்டிருக்கிறதும், பந்துஜீவ காந்திமுஷா - செம்பரத்தம்பூவின் காந்தியை அபஹரித்ததுமான (தோற்கடித்த காந்தியோடுகூடிய), சித்வபுஷா - சித்ஸ்வரூபத்தோடு கூடிய ஒரு மூர்த்தியினால், நந்தாமி - ஆனந்தமடைகிறேன்.

1. அம்பாளுடைய வில்லானது கருப்பாகையில் மதுரதனுஸ் என்றும், பாணங்கள் ஐந்து புஷ்பங்களாகையால் ஸுரபிபாணங்களென்றும் அம்பாளுடைய நிறமானது அருணமாகையால் பந்துஜீவபுஷ்பத்தின் காந்தியை அதிசயித்ததென்றும் சொல்லப்பட்டது. அம்பிகையின் பாணங்கள்

‘கமலம் கைரவம் ரக்தம் கல்ஹாரேந்தீவரே ததா |
ஸஹகாரகமித்யுக்தம் புஷ்ப பஞ்சகமீச்வரி ||’

என்று சொல்லப்படும்.

17. மதுர ஸ்மிதேன ரமதே
மாம்ஸல குசபார மந்தகமனேன |
மத்யே காஞ்சி மனோ மே
மனஸிஜ ஸாம்ராஜ்ய கர்வ பீஜேன ||

மதுரஸ்மிதேன - அழகான மந்தஹாஸத்தோடு கூடியதும், மாம்ஸலகுசபார - பருத்ததான ஸ்தனங்களின் பாரத்தால், மந்தகமனேன - மெதுவான நடையோடு கூடியதும், மத்யேகாஞ்சி - காஞ்சீபுரியின் மத்தியிலிருக்கும், மனஸிஜஸாம்ராஜ்ய கர்வ - மன்மதன் ராஜ்யபாரம் நடத்துவதிலுள்ள கர்வத்திற்கு, பீஜேன - காரணமாயிருப்பதுமான, ஒரு பரம்பொருளால், மே மன: - என்னுடைய மனதானது, ரமதே - களித்துக்கொண்டிருக்கிறது.

1. பூர்வம் பரமசிவனுடைய நேத்ராக்னியினால் பஸ்மீகரிக்கப்பட்ட மன்மதனானவன் காமேச்வரியின் கடாக்ஷத்தினால் மீண்டும் உயிர் பெற்றவுடன் அவன் அம்பிகையை நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்தபோது, அம்பிகையானவள் அவனுக்கு ஸகல லோகங்களிலும் ஸாம்ராஜ்யத்தைக்கொடுத்து அவனுக்கு வசப்படாதவர்களும் அவனை நிந்திப்பவர்களும் பாபிகளாவார்களென்றும், தன் பக்தர்களுக்கு அவன் வசப்பட்டு அவர்களுடைய காமங்களைப் பூர்த்திசெய்யவேண்டுமென்றும் அநுக்ரஹித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

‘கச்ச வத்ஸ மனோஜன்மன் அபயம் தவ வித்யதே |
மத் ப்ரஸாதாத் ஜகத் ஸர்வம் மோஹய அவ்யாஹதாசுக: ||
....
அத்ய ப்ரப்ருதி கந்தர்ப்ப மத் ப்ரஸாதாத் மஹீயஸ: |
அத்ருச்யமூர்த்தி: ஸர்வேஷாம் ப்ராணினாம் பவ மோஹக: ==
த்வன் நிந்தாம் யே கரிஷ்யந்தி த்வயி வா விமுகாசயா: |
அவச்யம் க்லீபதைவ ஸ்யாத் தேஷாம் ஜன்மனி ஜன்மனி ||
யே பாபிஷ்டா துராத்மானோ மத்பக்த த்ரோஹிணச்ச யே |
தான் அகம்யாஸு நாரீஷு பாதயித்வா விநாசய ||
யேஷாம் மதீயபூஜாஸு மத்பக்தேஷ்வாதரும் மன: |
தேஷாம் காமஸுகம் ஸர்வம் ஸம்பாதய ஸமீப்ஸிதம் ||’

இவ்விதம் மன்மதனுக்குத் தடையில்லாத ஸாம்ராஜ்யமேற்பட்டதற்கும் அம்பிகையின் அனுக்ரஹமானது காரணமாயிருப்பதால் அவனுடைய கர்வத்திற்கு பீஜமாயிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

18. தரணிமயீம் தரணிமயீம்
பவனமயீம் ககன தஹன ஹோத்ருமயீம் |
அம்புமயீம் இந்துமயீம்
அம்பாம் அனுகம்பம் ஆதிமாம் ஈக்ஷே ||

தரணிமயீம் - பூமியின் ஸ்வரூபமாயும், தரணிமயீம் - ஸூர்ய ஸ்வரூபமாயும், பவனமயீம் - வாயுஸ்வரூபமாயும், ககன தஹன ஹோத்ருமயீம் - ஆகாசம், அக்னி, ஹோதா இவர்களின் ஸ்வரூபமாயும், இந்துமயீம் - சந்த்ர ஸ்வரூபமாயுமிருக்கிற, ஆதிமாம் அம்பாம் - ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ஆதியான தாயாரை, அனுகம்பம் - கம்பாநதியின் கரையில், ஈக்ஷே - பார்க்கிறேன்.

1. பரமசிவனுக்குச் சொல்லப்படும் அஷ்டமூர்த்திகளும் அம்பிகைக்குமிருப்பதாகச் சொல்லப்படும். இந்த அஷ்டமூர்த்திகள் ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசங்களாகிய பஞ்ச பூதங்கள், ஸூர்யன், சந்திரன், யஜமானன் (ஹோதா) என்றவை. அவை இங்கு முறையே தரணி, அம்பு, தஹன, பவன, ககன, தரணி, இந்து, ஹோத்ரு என்று சொல்லப்பட்டன. பரமசிவனுக்கு இந்த எட்டு மூர்த்திகளிருப்பது.

ஜலம் வன்ஹிஸ் ததா யஷ்டா ஸூர்ய சந்த்ரமஸௌ ததா |
ஆகாசம் வாயுரவனீ மூர்த்தயோऽஷ்டௌ பினாகின: ||

என்றும்

‘யா ஸ்ருஷ்டி: ஸ்ரஷ்டுராத்யா வஹதி விதிஹுதம்
யா ஹவிர் யா ச ஹோத்ரீ
யே த்வே காலம் விதத்த: ச்ருதி விஷயகுணா
யா ஸ்திதா வ்யாப்ய விச்வம் |
யாமாஹு: ஸர்வபூதப்ரக்ருதிரிதி ச யயா
ப்ராணின: ப்ராண வந்த:
ப்ரத்யக்ஷாபி: ப்ரபன்னஸ்தனுபிரவது வஸ் -
தாபிரஷ்டாபிரீச: ||’

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பிகைக்கு இவையிருப்பது

‘புவி பயஸி க்ருசானௌ மாருதே கே சசாங்கே
ஸவிதரி யஜமானே ऽப்யஷ்டதா சக்திரேகா |
வஹதி குசபாராப்யாம் யாऽவனம்ராபி விச்வம்
ஸகலஜனனி ஸா த்வம் பாஹிமாம் அத்யவச்யம் ||’

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. இங்கு தரணி என்று இரண்டு இடங்களில் வருவதில் முதலிலுள்ள த என்பதை தனுஸ் என்பதிலிருப்பதுபோலும், இரண்டாவதிலுள்ள த என்பதை தமிழ் என்பதிலிருப்பதுபோலும் உச்சரிக்கவேண்டும்.

19. லீனா ஸ்திதி முனிஹ்ருதயே
த்யான ஸ்திமிதம் தபஸ்யத் உபகம்பம் |
பீனஸ்தனபரம் ஈடே
மீனத்வஜ தந்த்ர பரம தாத்பர்யம் ||

முனிஹ்ருதயே - முனீச்வரர்களுடைய ஹ்ருதயத்தில், லீனஸ்திதி - லயத்தையடைந்திருப்பதும், உபகம்பம் - கம்பாநதிக்கரையில், த்யானஸ்திமிதம் - த்யானத்தில் அசைவற்று, தபஸ்யத் - தபஸ் செய்கிறதும், பீனஸ்தனபரம் - பருத்த ஸ்தனபாரங்களுடையதுமான, மீனத்வஜ தந்த்ர பரம தாத்பர்யம் - மன்மத சாஸ்த்ரத்தின் ஸாராம்சத்தை, ஈடே - ஸ்தோத்ரம் செய்கிறேன்.

1. காஞ்சீபுரியில் தன்னைக்குறித்து எப்படி தபஸ் செய்யவேண்டுமென்பதை பரமசிவன் அம்பிகைக்குச் சொல்லும்போது, பஞ்சாக்னிமத்தியில் ஸூசிமுனையில் நின்றுகொண்டு தன்னைத்யானித்துத் தபஸ் செய்யவேண்டுமென்று சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

‘கரே த்ருத்வா சுகச்ரேஷ்டம் பஞ்சாக்னௌ ஸூசிகோபரி |
ஸ்தித்வா மாம் த்யாயதீ பக்த்யா தப: குரு ஸுதுச்சரம் ||’

20. ச்வேதா மந்தர ஹஸிதே
சாதா மத்யே ச வாங்மனோதீதா |
சீதா லோசனபாதே
ஸ்பீதா குசஸீம்னி சாச்வதீ மாதா ||

சாச்வதீ மாதா - அழிவில்லாத தாயாரானவள், மந்தரஹஸிதே - மந்தஹாஸத்தில், ச்வேதா - வெளுப்பான நிறத்தோடும், மத்யே - இடையில், சாதா - இளைத்தவளாயும். ச - இன்னும், வாங்மனோதீதா - வாக்குக்கும், மனதிற்கும் எட்டாதவளாயும், லோசனபாதே - பார்வையில், சீதா - குளிர்ச்சியோடு கூடியவளும், குசஸீம்னி - ஸ்தனப்ரதேசத்தில், ஸ்பீதா - பருத்தும் (விளங்குகிறாள்).

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ ல லி தா ஸ ஹ ஸ் ர ந ா ம ம்

(18—2—37 தொடர்ச்சி)

சமாத்மிகா 963

சாந்தஸ்வரூபமாயிருப்பவள்.

1. அல்லது, ப்ரபஞ்சத்தின் உபசமமே (சாந்தியே) ஸ்வரூபமாக உடையவள் என்றும் சொல்லலாம்.

‘ப்ரபஞ்சோபசமம் சிவம் அத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே |’
(ந்ருஸிம்ஹதாபனீயம்)

2. அல்லது, சம்—ஸுகத்தை, ஆத்மாவாக உடையவள் என்றும் சொல்லலாம்.

பந்தூக குஸும ப்ரக்யா 964

பந்துஜீவ புஷ்பத்தின் காந்திபோன்ற காந்தியையுடையவள்.

1. பந்தூக (பந்துஜீவ)மென்பது வங்கதேசத்தில் ப்ரஸித்தமான ஒரு மஹாவ்ருக்ஷம். அதின் புஷ்பமானது அதிகமான சிகப்பு நிறமாகையால் அவ்வித நிறத்தையுடையவள் என்று இங்கு சொல்லப்பட்டது.

பாலா 965

குமாரீ ஸ்வரூபமாயிருப்பவள்.

1. இதையே ச்ருதியில் ‘த்வம் குமார உத வா குமாரீ’ என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. சிறுபெண்போல் லீலையில் (விளையாட்டில்) ஆசைப்பட்டிருப்பதால் அம்பிகைக்கு பாலா என்று பெயர் என்பதாக

‘பாலா லீலா விசிஷ்டத்வாத் பாலேதி கதிதா ப்ரியே |’

என்பதாக த்ரிபுராஸித்தாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. அல்லது பாலாம்பிகா (பாலை) ஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம். பாலாம்பிகை எப்போதும் ஒன்பது வயதுடையவளாய், அம்பாளைப்போன்ற ரூபத்தையுடையவளாய், அம்பாளுடைய அத்யந்தமான ப்ரியத்திற்கு இருப்பிடமாய் இருப்பதாகச் சொல்லப்படும்.

‘குமாரீ லலிதாதேவ்யா: தஸ்யா நிகடவாஸினீ |
ஸமஸ்த சக்திசக்ராணாம் பூஜ்யா விக்ரமசாலினீ ||
லலிதாஸத்ருசாகாரா குமாரீ .... |
யா ஸதா நவவர்ஷைவ ஸர்வவித்யா மஹாதனி: ||
பலாருண தனுச்ரேணீ சோணவர்ண வபுர்லதா |
மஹாராக்ஞீ பாதபீடே நித்யமாஹித ஸன்னிதி: |
தஸ்யா பஹிச்சரா: ப்ராணா யா சதுர்த்தம் விலோசனம் ||’
(லலிதோபாக்யானம்)

பாலாம்பிகை பண்டாஸுரனுடைய புத்ரர்களை வதம் செய்ததைப் பற்றி ஏற்கனவே வந்த 74வது நாமத்தில் பார்க்கவும். பாலாம்பிகையின் அனுக்ரஹம் ஏற்பட்டால் அம்பாளுடைய அனுக்ரஹமானது ஸுலபமாய் ஏற்பட்டுவிடுமென்பது உபாஸனா ரஹஸ்யம்.

லீலாவினோதினீ 966

லீலைகளால் (விளையாட்டுக்களால்) ஸந்தோஷமடைகிறவள்.

1. இங்கு லீலையென்பது ப்ரபஞ்ச ஸம்பந்தமான ஸ்ருஷ்டி முதலானவை.

‘மன்வந்தராண்யஸங்க்யானி ஸர்க: ஸம்ஹார ஏவ ச |
க்ரீடன்னிவைதத் குருதே பரமேஷ்டீ புன: புன:
(மனுஸ்ம்ருதி)

‘லோகவத்...........லீலாகைவல்யம் |’ (ப்ரம்ஹஸூத்ரம்)

2. அல்லது லீலா என்பவளை, வி—விசேஷமாக, நோதினீ (ஸத்கர்மாக்களில்) தூண்டுகிறவள் என்றும் சொல்லாம். யோக வாஸிஷ்டத்தில் பத்மராஜனுடைய பார்யையான லீலா என்பவளைப் பற்றி விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவளுடைய தபஸினால் ஸந்தோஷமடைந்த ஸரஸ்வதீ தேவீயானவள் அவளுக்கு ஞானத்தைக்கொடுத்து அவளுடைய புருஷனையும் உயிர்பெறச் செய்தாள் என்பதாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. (தன்னுடைய குழந்தைகளான ஜீவகோடிகளை) லாலனம் செய்வதினால் அம்பாளுக்கு லீலா என்று பெயர் என்பதாக ‘லக்ஷ்மீ லாலனதோ லீலா’ என்று தேவீ புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதை அனுஸரித்து இந்த நாமத்தை லீலா, விநோதினீ என்று இரண்டு நாமங்களாகவும் பிரித்துச் சொல்லலாம்.

ஸுமங்கலீ 967

ஸுவாஸினீ ரூபமாயிருப்பவள்.

1. ஸு— சோபனமான, மங்களத்தையுடையவள் ஸுமங்கலீ. ஜீவித்திருக்கும் பதியையுடையவளுக்கு ஸுமங்கலீ, ஸுவாஸினீ என்பதான பெயர்களுண்டு.

2. மங்களமென்ற பதமானது ப்ரம்ஹத்தைக் குறிக்குமாகையால் சோபனமான ப்ரம்ஹ ஸ்வரூபமாயிருப்பவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

‘அசுபானி நிராசஷ்டே தனோதி சுபஸந்ததிம் |
ச்ருதிமாத்ரேண யத் பும்ஸாம் ப்ரம்ஹ தன் மங்களம் விது: ||
(விஷ்ணுபுராணம்)

3. சரியான கார்யங்களைச் செய்வதும் தப்பான கார்யங்களைச் செய்யாதிருப்பதும் மங்களமென்பதாக

‘ப்ரசஸ்தாசரணம் நித்யம் அப்ரசஸ்த விவர்ஜனம் |
ஏதத் ஹி மங்களம் ப்ரோக்தம் ருஷிபிர் ப்ரம்ஹவாதிபி: ||’

என்று அத்ரி ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸுகரீ 968

ஸுகத்தைச் செய்பவள்.

ஸுவேஷாட்யா 969

சோபனமான வேஷத்தால் அலங்கரிக்கப்பட்டவள்.

1. வேஷமென்பது வஸ்த்ர, அலங்கார, மால்ய, பூஷணாதிகளைக் குறிக்கும்.

ஸுவாஸினீ 970

ஸுவாஸினீ ரூபமாயிருப்பவள்

1. ஜீவித்திருக்கும் பதியையுடையவள் ஸுவாஸினீ. எல்லா ஸுவாஸினிகளோடு அம்பாள் அபின்னமாயிருப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

2. அம்பிகையின் புருஷனான பரமசிவனுக்குக் கல்பாந்தத்திலும் அழிவில்லையாதலால் அம்பிகையானவள் நித்ய (ஸர்வகாலமும்) ஸுவாஸினியாக இருக்கிறாள். இதையே ஸ்ரீமதாசாரியாள்

‘விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்னோதி விரதிம்
விநாசம் கீனாசோ பஜதி தனதோ யாதி நிதனம் |
விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலித த்ருசா
மஹாஸம்ஹாரேऽஸ்மின் விஹரதி ஸதி த்வத் பதிரஸௌ ||

என்று வர்ணித்திருக்கிறார்கள்.

ஸுவாஸின்யர்ச்சன ப்ரீதா 971

ஸுவாஸினிகளுடைய அர்ச்சனையினால் ப்ரீதியடைகிறவள்.

1. ஸுவாஸினிகளை அர்ச்சிப்பதினால் என்றும், ஸுவாஸினிகள் செய்யும் அர்ச்சனையினால் என்றும் இரண்டுவிதமான அர்த்தம் சொல்லலாம். ஸுவாஸினீ பூஜையென்பது தேவீபூஜையின் முக்யமான அம்சங்களில் ஒன்றாகும்.

ஆசோபனா 972

பூர்ணமான ஔஜ்வல்யத்தையுடையவள்.

சுத்தமானஸா 973

சுத்தமான (நிர்மலமான) மனதையுடையவள்.

பிந்து தர்பண ஸந்துஷ்டா 974

பிந்து தர்பணத்தால் ஸந்தோஷமடைகிறவள்.

1. பிந்து என்பது ஸ்ரீசக்ரத்தின் மத்தியிலிருக்கும் ஸர்வானந்தமய சக்ரத்தைக்குறிக்கும். அதில் ப்ராம்ஹணன் முதலான நான்கு வர்ணத்தார்களால் க்ரமமாக க்ஷீர, ஆஜ்ய, மது, ஆஸவ பிந்துக்களைக் கொண்டு செய்யப்படும் தர்ப்பணத்தை இங்கு சொல்லப்பட்டது. இதைப்பற்றி ‘லகுஸ்துதி’யில்

‘விப்ரா: க்ஷோணிபுஜோ விசஸ்ததிதரே க்ஷீராஜ்யமத்வாஸவை:
த்வாம் தேவி த்ரிபுரே பராவரமயீம் ஸந்தர்ப்ய பூஜாவிதௌ |
யாம் யாம் ப்ரார்த்தயதே மன: ஸ்திரதயா தேஷாம் த
[ஏதே த்ருவம்
தாம் தாம் ஸித்திம் அவாப்னுவந்தி தரஸா விக்னைரவிக்னீ—
[க்ருதா: ||’

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய விபரங்கள் அந்த ஸ்தோத்ரத்தின் வ்யாக்யானத்திலும் பரசுராம கல்பஸூத்ரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, ‘பிந்துரிச்சு:’ என்பதில் சொல்லப்பட்ட பிந்து பதத்தை அறிந்தவர்களால் செய்யப்படும் தர்ப்பணத்தினால் ஸந்தோஷமடைகிறவள் என்றும் சொல்லலாம்.

பூர்வஜா 975

(எல்லாவற்றிற்கும்) முதலாக ஜனித்தவள்.

1. ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் பரப்ரம்ஹத்தின் இச்சாரூபிணியாக அம்பாள் இருந்ததைப்பற்றி ச்ருதியிலும்

‘இயமேவ ஸா யா ப்ரதமா வ்யௌச்சத் |’ என்றும்
‘அஹமஸ்மி ப்ரதமஜா ருதஸ்ய |’ என்றும்

சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, அபுத்திபூர்வகமானதும் குணத்ரயத்தின் ஸாம்யாவஸ்தையோடு கூடியதுமான மூலப்ரக்ருதி ரூபமானவளென்றும் சொல்லலாம்.

த்ரிபுராம்பிகா 976

த்ரிபுராம்பிகா என்ற தேவியின் ரூபமாயிருப்பவள்.

1. ஸ்ரீசக்ரத்தின் எட்டாவது சக்ரத்தின் அபிமானினியான தேவிக்கு த்ரிபுராம்பிகா என்று பெயர். அந்த தேவியோடு அபின்னமாயிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. அல்லது, ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்திகளாகிய மூன்று அவஸ்தைகளையும் உண்டுபண்ணுகிறவளென்றும், அம்மூன்று அவஸ்தைகளையுடைய ஜீவனை உண்டுபண்ணுகிறவளென்றும் சொல்லலாம்.

‘புரத்ரயே க்ரீடதி யச்ச ஜீவ: |’ (ச்ருதி)
‘யதாக்னே: க்ஷுத்ரா விஸ்புலிங்கா வ்யுச்சரந்தி |’ (ச்ருதி)

வாரக்குறிப்பு.

வெ. ஸோ. சர்மா.

எதிர்பார்த்ததுதான்:— தேசிய சபை முக்கிய தலைவரில் பலர் தர்மவிருத்தமான செயலுக்கு அஞ்சாதவர். ஜவஹர் நேரு சாரதா சட்டவிஷயமாக கடுமையாக்கவேண்டுமென்றதும் தர்மசபை தலைவருக்கு தர்மத்ரோஹம் செய்யவில்லை என்று கூற மறுத்ததும் ஆச்சரியப் படத்தக்கதல்ல. கூட்டமாக நாம் தேசிய சபையில் சேர்ந்து இவர்களை ஆட்டி வைத்தாலொழிய வேறு வழியில்லை.

மதாபிமானமூட்டுவாரா:— கல்கத்தாவில் ராமகிருஷ்ண மடத்தவரால் ஸர்வமத மஹா ஸபை கூட்டப்படுகிறது. அவர்கள் அத்வைத அபிமானிகள். எனினும் பல விஷயங்களில் ஆர்ய ஸமாஜத்தைத் தழுவுவது போல்காண்கின்றனர். எப்படியாவது போகட்டும். மதாபிமானத்தை உண்டுபண்ணுவாராகில் நலம்.

கட்டுப்பாடானவேலை:: தேசியசபையின் ஆணையை பல பத்திரிகைகள் பிரஸாவஹித்து விதம் விதமாய் தேசிய ஸபை அங்கத்தவருக்கே வாக்களிக்கும்படி விளம்பரம் செய்தன. இத்தகைய, அதாவது சென்னை மாகாணவர்ணாச்ரம ஸ்வராஜ்யசபையில் அங்கத்தினராக சேரும்படியும் மூலதனம் தரும்படியும் ஆங்காங்கு ப்ரசாரம் செய்யும்படியும் தர்மத்தை காப்பதற்காக ஷை மாஹாணசபையில் முன் வந்த வாரப்பத்திரிகை மாதப் பத்திரிகைகள் கட்டுப்பாட்டுடன் வேலைசெய்தால் விரைவில் சபை விருத்தியாகும்.

ஆயிரம் வந்தது ஆறுல்போதாது:- நடந்த தர்மஸபையில் ஓர்லக்ஷம் ரூபாய் மூலதனம் வேண்டுமென்ற தீர்மானத்தை ஆமோதிக்கும்படி கூறியபோது "ஆயிரம் ரூபாயை மேஜைமீதுவைத்து நீங்கள் என்ன கொடுக்கிறீர்" எனக்கேட்கும் லக்ஷ்மீபுத்ரரிதை ஆமோதிக்க வேண்டும் என்றாலும் ஓராயிரம் நான் சம்பாதிக்கிறேன். இந்த ஒரு ரூபாயை வைத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு ஆஸ்திகர்கூற சபைத் கலைவதற்குள் அந்தத்தொகை வந்துவிட்டது. ஆயினும் ஆஸ்திகர், காரியதரிசி லஸிதாஸதநம் ராயப்பேட்டை சென்னை என்ற விலாசத்திற்கு பொருளுதவி செய்தால் விசித்திரமாய் தர்மம் வளரும்.

ஊர் ஊராக அழையுங்கள்:- ஆஸ்திகர்கள் ஆங்காங்கு சென்னை மா. வ. ஸ்வராஜ்ய சங்கத்தவரை அழைத்து தர்மப்ரசாரம் செய்து எதேஷ்டமாக தனவுதவி புரிந்தால் உத்ஸாகம் குறையாது. புது சட்டசபையில் அதர்ம சட்டம் தலை நீட்டாது, தர்மம் ஓங்கும். அதர்மம் அழியும் !

தர்மத்திற்கு வாக்கு:— கடைசிகாலத்தில் தர்ம சபை கூடிற்று. தார்மிகருக்கு வாக்களிக்கும்படி வேண்டிற்று. இவ்வாக்கை ஸைய பிரஸாவஹித்து பலர் தார்மிகருக்கே வாக்களித்தனர். பலர் அதார்மிகர்களுக்கு வாக்களித்தனர். பலர் அதார்மிகர்களுக்கு வாக்களிக்க மறுத்தனர். சிலர் ஸநாதகிகளாது ராஜீய அபிப்ராயத்தை அறியாமல் விருந்தினர். கட்டுப்பாடாக தார்மிகர் முன் வந்தால் தர்மம் ஜெயிக்குமென்பதை இந்தத் தேர்தல் காட்டுகிறது.

பேராபத்து அகன்றது:-தேர்தலில் சென்னை மாகாணத்தில் என்னென்ன நிகழ்ந்து விடுமோ என அஞ்சினோம். சென்னை நகரில் ஓர் தலையில் காயத்துடனும், வடஆற்காட்டில் மோட்டார் ஆபத்தால் இருவர் ஜீவனிழந்ததும், செவிடத்தே சாதாரண அடிதடி நிந்தையுடனும் சென்றது. போலீஸார் முன் ஜாக்ரதையுடன் நடந்தது கொண்டாடத் தக்கதாகும்.

பெண்ணில்லாத கல்யாணமா:— தர்ம விஷயங்களில் நிர்ணயம்கூற பண்டித பரிஷத்திற்கே உரிமை உண்டு. சாரதாசட்டமும் தீண்டாதார் ஆலயப்ரவேசமும் சாஸ்திரீயமெனவென ஓர்பண்டிதர். பின்னதை மட்டிலும் ஆமோதிக்கும்பண்டிதர்மற்றொருவர். காஜிக்குப்பசென்னையிலேயே ஞாயான்றுஓர்வித்வத்பரிஷத்து கூடிற்று. அது ஆலயப்ரவேச விஷயமாக பேசக்கூடாதென ஓர்விதிமுறை ஏற்படுத்திக் கொண்டதால் சில பண்டிதர்கள் அங்கு செல்லவில்லை. எதிரிகள் என்ன நினைப்பர். இத்தனைநாளில்லாது இப்போது,வேதம்,தர்ம சாஸ்த்ரம், ராமாயணம் இதற்கு என்ன ஆபத்து வந்தது?

நிருபர் கவனிப்பரோ:— பல பண்டிதர் கூடிய சபையில் தனக்குப் பிடித்த அல்லது வேண்டிய ஒருவரை மட்டிலும் துதித்து நிருபம் எழுதுவோர் சபை நிர்வாகிகளுக்கு எத்தகைய துன்பத்தை விளைவிக்கின்றனர் என்பதை அறியவில்லை. உண்மையாய் மற்றவர் மனம்கோணாவண்ணம் அவர்கள் நேராகவோ மாறாகவோ நிர்வாஹிகளிடம் வெறுப்புக் காட்டாவண்ணம் எழுதுவதே நேர்மை. அனுபவத்தில் பலமுறை பல கஷ்டங்களை நேரில் கண்டபின் எல்லோருடைய நன்மைக்காகவும் கூறுமிதை நல்ல எண்ணத்துடன் நோக்கும்.

ஸ்ரீ ராம மடம்.

பக்தபுரி அக்கிரஹாரம் படித்துறை.
கும்பகோணம்.

ஷை மடத்தில் ஆதி பகவத் பாதாசாரியார் அவர்களுடைய சந்நிதானத்தில் வாணாதுறை சன்னதி பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் அவர்களால் வெகு காலங்களாக ராமாயண பாரதாதி கிரந்தங்கள் வாசிக்கப்பட்டு வந்த விஷயம் ஆஸ்திகர்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயமே. ஷை யாரால் சமீபத்தில் பக்தர்களுடைய ஸர்வாபீஷ்டத்தையும் கொடுக்கக் கூடிய ஸ்ரீ மகாகணபதி புராணமானது வாசிக்கப்பட்டு வருகிறது. பண்டித பாமர ரஞ்ஜகமாக இருக்கும் என்பது திண்ணம்.

கே. எஸ். வெங்கடராமய்யர்.

கர்க்க ஸம்ஹிதா ஆரம்ப வைபவம்.

சென்னை.

பிரும்மஸ்ரீ ஸ்ரீமான் ஸோமதேவசர்மா என்னும் வித்வன்மணியவர்கள் 14-2-37 ல் சென்னை தியாகராஜ நகர் ராமநாதன் தெரு பஞ்சநதவனத்தில் நீடித்த காலமாக ப்ரவசனம் பண்ணிவந்த ஸர்வபுராண சிரேஷ்டமான "ஹரிவம்சத்தின்" பூர்த்தியான உஷாபரிணய கதா சந்தர்ப்பத்தை ஸகலார்த்திஹரமாய் செவிக்கமிருதமாய் உபந்யசித்து அனேக பக்தகோடிகள் சிரவணம் செய்து ஆத்ம ஸாபல்யமடையக் கண்டு இப்படியே இந்த அமானுஷ ஸ்வபாவமுள்ள மஹான் உபந்யாசம் இதே இடத்தில் நீடித்தகாலமும் நடக்க வேறுமென்று ஸர்வஸாக்ஷிருத்தாய் ஸர்வ சக்தனான பகவானை எப்பவும் பிரார்த்திக்கிறேன்.

ஆவியூர் ஸ்ரீநிவாஸாசாரியர்.

சென்னை ராஜாங்க ஸபை.

எலெக்ஷன் முடிவு.

மாகாண ராஜாங்க ஸபைக்கு நடந்த எலெக்ஷனின் முடிவுகள் சில வெளியாகி இருக்கின்றன. செவ்வாய்க்கிழமை மாலைவரையில் காங்கிரஸுக்கு 22 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன.

சென்னையில் காங்கிரஸ் அபேக்ஷகர்களான ஸ்ரீமான்கள் கே. வெங்கிடஸாமி நாயிடுவும், டாக்டர் யூ. ராமராவும் ஜயித்தார்கள்.

தஞ்சையில் ஸ்ரீமான்களான, ராமநாதன் செட்டியார் சாமியப்பா முதலியார், கே. சிவசுப்ரமண்ய அய்யர் ஆகிய மூன்றுபேர் ஜயித்தனர். ஸ்ரீமான் டி. ஆர். வெங்கிடராம சாஸ்திரியார் தோல்வி யடைந்தார். சிலவிடங்களில் காங்கிரஸும் தோல்வியடைந்திருக்கிறது.

ஒரிஸா சட்டஸபை.
கவர்னர் காங்கிரஸ்தலைவர் ஸந்திப்பு.

நேருஜியின் ஆக்ஷேபம்.

ஒரிஸா கவர்னர் அவ்வூர் சட்டஸபை காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ஹரி கிருஷ்ணரை அழைத்து மந்திரிஸபை அமைக்கும் விஷயமாகப் பேசினர். அகில இந்தியக் கமிட்டி இதுவிஷயமாக முடிவு செய்யும் வரையில் தாங்கள் ஒன்றும் செய்யமுடியாதென்று அவர் கவர்னரிடம் கூறிவிட்டார்.

காங்கிரஸின் அநுமதியின்றி கவர்னரைக் கண்டு பேசியது உசிதமல்லவென்றும், இச்செய்கைக்கு ஸமாதானம் சொல்லவேண்டுமென்றும் ஸ்ரீமான் நேரு அவருக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்.

ராணி லக்ஷ்மீ பாய்மீது தூஷணம்.

டாக்டர் கவரின் நோட்டீஸ்.

ஜான்ஸி ராணி லக்ஷ்மீ பாயைப்பற்றி லண்டன் பிலிப்ஸ்காஸ், அன்வின் கம்பெனியார், பம்பாய் தாராபூர் வாலா கம்பெனியார் ஆகியவர்கள் ஒருபுஸ்தகம் எழுதிப் பிரசுரிக்க முன் வந்திருக்கிறார்கள். அதில் ராணி லக்ஷ்மீபாயைப்பற்றி மிகக் கேவலமான முறையில் அவதூறு செய்யப்பட்டிருப்பதால், அந்த புஸ்தகத்தை உடனே அவர்கள் பிரசுரிக்காமல் நிறுத்தவேண்டுமென்றும், அது இந்திய ஸ்திரீகளையே அவமானப்படுத்துவதாயிருப்பதாயும் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்றும், இல்லையேல் ஒரு லக்ஷ ரூபாய்களுக்கு மான நஷ்ட தாவா செய்யப்படுமென்றும் டாக்டர் ஹரிஸிங்கவர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.

அருப்புக்கோட்டையில் 144.

காங்கிரஸுக்கும் ஜஸ்டிஸுக்கும் நடக்கும் சச்சரவுகாரணமாக அருப்புக்கோட்டையில் பொதுக்கூட்டங்களோ ஊர்வலங்களோ 6 மாத காலம் வரையில் நடத்தக்கூடாதென்று 144வது பிரிவுப்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

புதுமாதிரி கால் செயின், கொலுசு நிறுசுகள்
குறைந்த கூலிக்கு, தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஓர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்,

"Rulers and Social Usages"

In his recent lecture on the above subject, Sir C. P. Ramaswami Aiyar makes several objectionable statements one of which is his suggestion that the adoption of Tamil as a 'Concurrent sacred language' by the Vaishnavas, has 'remodelled' society 'by virtue of a process of religious fusion and *consequent unification of sects and communities*. This is sphinx-like talk. I assure the gentleman that the Vaishnava Brahmans keep their blood as pure as any other section of Brahmans, if not purer. It is his duty herein to speak plainly and withdraw the insinuation.

The Tamil saints referred to by him, belong both to Thengalais and Vadagalais. Their inter-sectarian cleavage is of a very recent origin, considerbly enhanced for a long time past on account of the race for temple honours and litigation arrising therefrom. The prabandhams are merely tamil recensions of the *Upanishods;* and their recital by the Vaishnavas, side by side with the Vedas does not warrant the catastrophic conclusions of the talented lecturer; there has been 'no religious fusion' at all.

Again, Sir C. P. R. deftly quotes scripture to support the Travancore Temple Proclamation and sustain his theory that 'the King is the person who has to introduce new customs and usages', and refers to Manu Sukra and the Mahabaratha, perhaps thinking that people may not trouble to look into those books!. Not one of them helps him; on the other hand they prove exactly the contrary. By way of illustration-for fear of of length-the last reference alone is set out here, so that the reader may draw his own conclusions from the passages in their context.

Sir C. P. R. quotes from Ch. 69 of the Santi parva of the Mahabaratha in the section of Rajadharma. This chapter extorls the merits of the ruler who adminsters well, strictly adhering to *danda niti* (the constitutional rules or law relating to civil and military administration.) In chap. 68 Bhishma describes *danda niti* in detail to Yudhishtira and concludes thus:— 'The king shall not take advice from women, the wicked, persons whose wits are struck with ill-fate, and those who are bereft of the Vedas. Their minds always go astray (paranmuki). Countries wherein women have the upper haud, where there are not wise men versed in sastras and which become burnt by the fire of perverse ministers dry up like a drop of water.'

Thereafter Bhishma's praise of *Danda niti* begins. He explains it again briefly thus:— 'Danda Niti secures people of the four castes in their swadharma(Own duties). Danda niti well administered rescues them from adharmas (violations thereof). When it gives protection by sustaining the four varnas (castes) in their own dharmas and prevents their transgression and confusion and wrecking up their boundries, people have no fear from any quarter and also attain to supreme happiness. Have no doubts as to whether the times make the king (*is* enable him to administer danda niti well or ill), or vice versa. *It is the king who makes or mars his age (raja kalasya karanam)*. If he acts in strict accordance with the said constitutionl law, he brings in the Kritha yuga (the age golden when dharma would reign supreme and adharma vanish) People would them have prosperity and happiness and remain well protected.................... When kings forsake *Danda niti* and cause misery to people, then the Kali (evil) age would holds way. In Kali adharma would reign supreme and dharma would be nowhere. The minds of people would stray out of their swadharma, the varnas get mixed up and misery would overtake the people.................... The king perptuates *Kritayuga* by following the danda niti, and *Kali* by violating the same. The king who brings in *Krita* goes to swarga while the one who cause *Kali* to prevail gets immersed in sin and goes to eternal hell. Thou scion of the Kurus! know that the supreme dharma of the king is the right rule in accordance with the danda Niti'

The above and also the references in Manu and Sukra - indeed every text of our ancient literature— will clearly show that the king is only the protector and not the maker or introducer of dharma. To 'introduce' 'new customs' is a contradiction in terms like 'mobile social order'. Customs and usages unconscisously develop in society; and when they become crystallised and universal then alone the king comes in the scene and protects it, as even our law courts do. Introdcing a new dharma is sapping the old one and laying a new foundation if at all To be brief, Sir, C. P. R. will not find any shelter for his proclamation in the ancient Hindu texts or customs or for any arbitrary action by the king.

The Mysore ruler really followed the directions contained in the authorities quoted by Sir C. P. R and the others, when during the previous agitation for temple entry in Mysore, His Highness's government referred the matter to a commitee of eminent pandits. Their report was published and acted upon. Is His Highness or the young ruler of Travancore a 'conforming Hindu sovereign'?

Lastly, in his secnd lecture, Sir C. P. R expatiates on the 'aunthentic back-ground and lineage' behind the Travancore proclamation. Where are tney? The tolerant Rajas of old, it appears from the lecturer's description, were the cream of courtesy to foreign proselytisers and evidently neglected the needs of their own subjects with the result that 'today the largest christian population in India is found in the state of Travancore.' In spite of this background and lineage, 'the present ruler, according to Sir C. P R. would be justified in intolerance towards the ancient faith of the land and this the liberality of His Highness's ancestors towards Christians is now demurred to, in that he has opened the door of the Caste-Hindu temples to all that may go in, ostensibly to prevent the conversion of low class Hindus Here too, there is still a relic of the ancient 'liberality', for even foreigners have free access to these temples now; They have only to to recognise that 'Hinduism is also a path of salvation.' In time, even this may be deemed unnecessary!

Sir C. P. Ramaswamy Aiyar's eloquence is no doubt, at first sight enchanting. But the next moment brings to memory these lines of Shakespeare, namely 'Full of sound and fury, signifying nothing'.

N. Srinivasacharya, B.A. B.L.

The Modern way.

"Britain is arming in order to promote the cause of peace."

Reformers are defiling Hindu temples in order to purify Hindu Religion.

This is the modern way of saying things.

"Hindu Mahasaba stands for freedom of worship. Everybody would be allowed to follow his own religion.

'The ideal of the Congress that reconstruction on communistic or socialistic lines, discarding religion, is an impracticable ideal. Even if Hindus would give up religion, Muslims and Christians could not discard their religion.' Dr. Moonje.

பட்டம் துறந்த எட்வர்ட் மன்னர்.

ஸஹாய நிதி திரட்ட யோஜனை,

மாஜி சக்ரவர்த்தி எட்வர்ட் தமது அரசுரிமையைத் துறந்துவிட்டதால், அவருடைய உதவிக்காகப் பணம் சேகரிக்க ராஜகுடும்பத்தினர் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய உதவிக்காக சர்க்கார் பொக்கிஷத்திலிருந்து பணம் கொடுக்க காமன்ஸ் ஸபையில் பலத்த ஆக்ஷேபம் இருக்கிறது. அவருடைய சகோதரி ஒருலக்ஷம் பவுன் கொடுத்திருக்கிறார். பலர் உதவிசெய்து வருகிறார்கள்.

எட்வர்ட் அரசர் தமது காதலியான மிஸஸ் ஸிம்ஸனுக்கு 2-லக்ஷம் பவுன் பெருமானமுள்ள நகைகள் பூட்ட ஏற்பாடு செய்திருக்கிறாராம்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சாஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R.Ramaswami Iyengar, Proprietor

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-ஹு மாசி-மீ 14உ

ஓட்டர்களின் அபிப்பிராயமென்ன?

இந்தியாவின் சரித்திரத்தில் இதுவரையில் இல்லாத பெரிய எலெக்ஷன் தேசமெங்கும் நடந்து முடிந்துவிட்டது. எதிர்பார்த்த அளவு எலெக்ஷன் சச்சரவுகள் அதிகமாயில்லையென்பதும், கூடியவரையில் அமைதியாகவே எங்கும் அது நடந்துவிட்டதென்பதும் உண்மையே. இந்த எலெக்ஷனில் ஓட்டர்களும் ஓட்டில்லாத பொதுஜனங்களும் விசேஷ உத்ஸாஹம் காட்டியிருக்கிறார்கள். மோடார்கள், ஸாதாரண வண்டிகள், முதலிய எவ்வித ஸௌகர்யங்களையும் எதிர்பாராமல் ஓட்டர்கள் தாங்களே பூர்ண உத்ஸாகத்துடன் சென்று ஓட்டுப்பதிவு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்க விஷயமே. தவிரவும் இதற்கு முன்போல் இல்லாமல் ஓட்டர்கள் சிறிது விஷய ஞானம் பெற்றும், மனிதர்களையோ, பணம் முதலிய தூண்டுதலையோ லக்ஷ்யம் செய்யாமலும் ஓட் ஸ்வதந்திரத்தை உபயோகித்திருக்கிறார்களென்பதும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. இவ்வளவுக்கும் சென்ற சிலமாதங்களாக காங்கிரஸ்காரர்கள் தேசத்தின் மூலைமுடுக்குகளில்கூட தீவ்ரமான கட்டுப்பாடுடன் பிரசாரம் நடத்தியதே காரணமாகும்.

இந்த எலெக்ஷனில் ஓட்டர்கள் காங்கிரஸையே திட்டமாக ஆதரித்து அது பல மாகாணங்களிலும் மிகுந்த வெற்றியடையும்படி செய்திருக்கிறார்கள். காங்கிரஸுக்கு ஓட்டுச்செய்வதில் மிகுந்த கட்டுப்பாடும் உத்ஸாகமும் காட்டியிருக்கிறார்கள். ஆகையால் ஜனநாயகக் கொள்கையின்படி இந்த எலெக்ஷனின் முடிவை நிர்ணயிப்பதாயிருந்தால் தேசம் முழுவதும் காங்கிரஸ் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறதென்றே நிச்சயிக்கவேண்டும். முக்யமாகக் காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையில் வெளியிட்டுள்ள அம்சங்களைப் பொது ஜனங்கள் அங்கீகரித்திருப்பதாக ஆகிறது.

இந்தியாவில் அன்னியருடைய ஆக்ஷியை விலக்கி, ஸ்வய நிர்ணய பாத்யமும், ஸ்வராஜ்யமும் கிடைக்கவேண்டுமென்று காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை ஓட்டர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லலாம். இரண்டாவதாக ஸ்வதந்திரம் என்ற விஷயத்தையும் பொதுஜனங்கள் விரும்புவதாக இந்த எலெக்ஷனில் வெளிப்பட்டிருக்கிறதெனலாம். தவிர சென்னை மாகாணத்தைப்பற்றியவரையில் சென்ற 16 வருஷங்களாக ஆக்ஷி நடத்திவந்த ஜஸ்டிஸ் கக்ஷியை ஜனங்கள் அடியோடு இனி விரும்பவில்லை யென்பது வெகு தெளிவாக ஓட்டர்களாலும் ஓட்டில்லாதவர்களுடைய முயற்சிகளாலும் வெளியிடப்பட்டுவிட்டது.

ஆகையால் பொதுஜனங்கள் மேற்கண்ட மூன்று அம்சங்களில் மட்டும் தங்களுடைய அபிப்பிராயத்தைக் காங்கிரஸ் சார்பாக வெளியிட்டிருக்கிறார்களே யல்லது, சட்டஸபை சென்றபின் காங்கிரஸ்காரர்கள் செய்யவிருக்கிற அநேக அவாந்திர விஷயங்களுக்கு அவர்கள் திட்டமாக ஸம்மதி கொடுத்துவிட்டதாக நினைக்க இடமில்லை. இப்போது காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள வெற்றியானது, ஆரம்ப வெற்றியேயல்லது முடிவானவெற்றியல்ல. யுத்தரங்கத்திற்குப் போகும் படையாட்களுக்கு மாலையிட்டு உபசரித்து வழியனுப்புவதற்கு இது ஒப்பாகுமேயல்லது, யுத்தத்தில் வெற்றிபெற்று வந்தவனுக்குச் செய்யும் வெற்றியுபசாரமாகாது. சட்டஸபை யுத்தத்திற்கு மற்றவர்களைவிடக் காங்கிரஸ்காரர் சிறந்தவர், அவரை அங்கு அனுப்ப ஸம்மதிக்கிறோமென்பதே தற்போதிய முடிவின் அர்த்தமாகும். ஆகையால் காங்கிரஸ்காரர்கள் சட்டஸபையில் இனி செய்யப்போகும் வேலையை அநுஸரித்தே அவர்களுடைய ஜயம் நிர்ணயிக்கப்படவேண்டும். அதன் பலன் அடுத்த எலெக்ஷனில் தான் ஜனங்களால் நிர்ணயித்துக் காட்டப்படும்.

தற்போது காங்கிரஸுக்கு மிகுந்த உத்ஸாஹத்துடன் ஓட் கொடுத்தவர்கள் இந்தியாவிலுள்ள மத்யத்தர வகுப்பு ஜனங்களேயாவர். இவர்களில் பணக்காரர்கள், நிலச்சுவான்தார்கள், வியாபாரிகள், முதலிய பல தரப்பட்ட அதிகாரிகள் இருக்கின்றனர். இவர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அநேகக் கொள்கைகளும் தேவைகளும் இருக்கின்றன். காங்கிரஸ்காரர்கள், இந்த எலெக்ஷனில் சிறிய விஷயங்களைப் புகுத்தக் கூடாதென்றும் முக்யமாகப் புதிய அரசியல் திட்டத்தை உடைப்பதே தங்களுடைய வேலையென்றும், அதற்கு அநுமதி தரவேண்டுமென்றே வோட்டர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு மட்டுமே அவர்கள் ஸம்மதியளித்திருக்கின்றனர் காங்கிரஸ்வாதிகளுக்குள்ளேயே காந்திஜி குடிசைத்தொழில் அபிவிருத்தியாகவேண்டுமென்கிறார். நேருஜியோ மேனாட்டைப்போல் யந்திர ஸாதனங்களே இந்தியாவுக்கு அவசியமென்கிறார். அபேதவாதம், உத்யோகமேற்பதுபோன்ற விஷயங்களிலும் காங்கிரஸில் பலத்த அபிப்ராயபேமிருந்து வருகிறது. மேற்கண்ட விஷயங்களில் எது சிறந்தது, எதை ஆதரிக்கிறோமென்று இந்த எலெக்ஷனில் வோட்டர்கள் அபிப்ராயம் தெரிவிக்கவில்லையென்பது நிச்சயம். ஆதலால் காங்கிரஸ்வாதிகள் சட்டஸபைகளில் செய்யவேண்டிய வேலைத்திட்டங்களை நிர்ணயிக்கும்போது மிகுந்த ஜாக்கிரதை காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பணக்காரர்களும் நிலச்சுவான்தார்களுமான மத்ய வகுப்பாருடைய ஏராளமான ஓட்டைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய அபேதவாதம்போன்றவைகளைச் சட்டசபைத் திட்டத்தில் சேர்ப்பது நியாயமாயிராது.

மத்ய வகுப்பு ஜனங்களில், பணம், நிலம் வியாபாரம் முதலியவைகளை முக்யமாகக் கருதி அவைகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாதென்று நினைப்பவர்களைப்போல், மத, ஸமூஹ விஷயமாயும் சட்டஸபையால் எவ்வித உபத்திரவமும் ஏற்படக்கூடாதென்று நினைப்பவர்களும் கணக்கில்லாமல் இருக்கின்றனர். இந்த எலெக்ஷனில், சிறிய விஷயங்களைப் புகவிடாமல், ராஜீய அமைப்பு மாறுதல் ஒன்றையே கவனிக்கப்போவதாகத் தலைவர்கள் கூறிய உறுதியை நம்பியே மத ஸமூஹ க்ஷேமவாதிகளும் காங்கிரஸைப் பெருவாரியாக ஆதரித்திருக்கிறார்களென்பதை காங்கிரஸ்வாதிகள் மறந்துவிடமுடியாது. ஆதலால் தங்களுடைய வாக்குறுதியையும், ஓட்டர்களுடைய கட்டளையையும் கவனித்தே சட்டஸபையில் செய்யப்படவேண்டிய கார்யங்களை நிச்சயிப்பதில் ஜாக்கிரதை காட்டப்படுமென்று நம்புகிறோம்.

குறிப்புகள்.

புதிய ஹிந்து மதமா?

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸருடைய 100-வது ஆண்டு நிறைவுக் கொண்டாடம் சென்னையில் ஜட்டிஸ் வெங்கட சுப்பராவ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பம்பாய் பிரபலத் தலைவரான ஸ்ரீமான் ஜயகர் அப்போது பிரதான உபன்யாசகராகவிளங்கினர். ஸ்ரீமான் ஜயகரைப்பற்றி நம் வாசகர்கள் அறிந்திருக்கலாம். அவர் ஹிந்து மஹாசபையில் விசேஷ ஊக்கமுள்ளவர், ஹிந்து சமூகம் அபிவிருத்தியடைய வேண்டுமென்பதில் தீவிர சிரத்தையுள்ளவர். இதற்காக அவர் உழைத்து வருகிறாராயினும் தீவிரமான ஆசாரத்திருத்தப்பித்தனாலும் அதன் நிமித்தமாக அவருக்கு பிராம்மணர்களிடமும் பிராமண தர்மத்தினிடமும் இருந்துவரும் த்வேஷத்தினாலும் அவருடைய கொள்கைகளை ஹிந்துக்களில் பலர் ஏற்பதில்லை. ஏற்கனவே பல தடவை அவர்ஹிந்து மஹாசபைக் கூட்டங்களில் தலைமை வஹித்துப் பேசியதில் ஜாதிபேதத்தை அழிக்கவேண்டுமென்றும், பஞ்சமர் முதலியவர்களுக்குக் கூட பூணூல், காயத்ரீ இவைகளைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்றும் விதவா விவாஹாதிகள் வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். இத்தகையவர் ஹிந்து மதத்தின் உயர்வைப் பற்றி சென்னையில் வாசாமகோசரமாகப் புகழ்ந்து பேசினால் நாம் அதை எப்படி ஒப்புக்கொள்ளுவது? இவரிஷ்டப்படி ஹிந்துமதம் ஒன்று ஏற்படுவதாயிருந்தால் அதற்கு "நவீன ஹிந்துமதம்' என்று பெயர்கொடுக்கலாமேயன்றி பழையகாலத்திலிருந்து இந்தியாவில் வியாபித்துள்ள வைதிக ஹிந்துமதத்திற்கும் அதற்கும் ஸம்பந்தமில்லையென்பது நிச்சயமே.

சென்னை உபந்யாஸத்திலும் இவர் தமது நவீன புத்திப்போக்கைக் காட்டிக்கொண்டிருக்கிறார். வெளிவேஷங்கள் எப்படியிருந்தாலும் பாதகமில்லையாம். நடை, உடை பாவனைகளை இஷ்டப்படி மாற்றிக்கொண்டாலும் பாதகமில்லையாம். ஆனால் மனதால்மட்டும் பரிசுத்தமான ஹிந்து மதத்தை நேசித்தால் போதுமாம். இம்மாதிரி ஸ்ரீமான் ஜயகர் பேசுவது விந்தையாகவே இருக்கிறது. இது உண்மையாக ஹிந்துமதத்தை ஆதரிப்பதாகாது. ஹிந்து மதத்தை மனதினால்மட்டும் தியானித்துக் கொண்டிருந்தால் போதுமா? முக்யமாக ஆசாரங்களே ஹிந்து மதத்திற்கு ஜீவநாடியாயிருப்பவை. நடை, உடை, பாவனைகள் யாவும் ஹிந்துமதத்தில் பிரிக்கமுடியாத அங்கங்களாக அமைந்திருக்கின்றன. தலையில் தொப்பியும், வாயில் சுருட்டும், உடம்பு முழுவதும் வெள்ளைக்கார உடுப்பும், நவீன ஆகாரபான வகைராக்களும் ஹிந்துமதத்திற்கு ஒவ்வாதவை. மேற்கண்ட வேஷ ஆசாரமுள்ளவர்களை ஹிந்துமதத்தினராக கருதமுடியாது. ஸ்ரீமான் ஜயகர் மேற்கண்டபடி அந்நியர்களைப்போல் நடை உடை உள்ளவர் என்பது பலருக்குத்தெரியும். ஆதலால் அவர் ஹிந்து மதத்திற்கு நடை உடை பாவனைகள் அநாவச்யமென்று கருதுவது இயல்பே.

விதவா விவாஹம், கலப்பு விவாஹம், ஜாதி நாசம், அந்நியவேஷம், முதலிய

கணக்கற்ற துராசாரங்களை ஆசரித்துக்கொண்டே ஒருவன் எப்படி ஹிந்துவாக இருக்க முடியுமென்று தெரியவில்லை.

ஹிந்துமதத்தின் பரிசுத்தத் தன்மையைக் கலப்படமில்லாமல் காப்பாற்றவேண்டுமென்று ஸ்ரீமான் ஜயகரும், ஜஸ்டிஸ் வெங்கட ஸுப்பராவ் அவர்களும் பேசுவதில் அர்த்தமுண்டாவென்றே நாம் ஸந்தேஹிக்க வேண்டியிருக்கிறது.

டாக்டர் ரவீந்த்ரநாதரின் பிரஸங்கம்.

17உயன்று நடந்த கல்கத்தா ஸர்வகலாசாலையின் பட்டமளிப்புக்கொண்டாட்ட ஸமயத்தில் ஸ்ரீமான் ரவீந்திரநாத் டாகூர் சில முக்ய விஷயங்களைப் பிரஸ்தாபித்திருக்கிறார். இந்தியாவில் தாய் பாஷையின் சிறப்பை உணர்ந்து அதை அபிவிருத்தி செய்வதில் மற்ற யூனிவர்ஸிடிகளைவிட வங்காளம் அதிக சிரத்தை காட்டிவருகிறது. எந்த விஷயத்திலும் வங்காளிகள் உண்மையான தேசபக்தி கொண்டு முன்னணியில் நிற்பதுபோல் தங்கள் தேச பாஷாபிவிருத்தியிலும் அவர்கள் விசேஷ ஊக்கத்தைக் கார்யத்தில் காட்டி வருகிறார்கள். இவ்வருஷப்பட்ட விழா உபந்நியாஸத்தை ஸ்ரீமான் டாகூர் வங்காளபாஷையில் செய்யவேண்டுமென்று யூனிவர்ஸிடியார் செய்திருந்த ஏற்பாடு மற்ற மாகாணங்களுக்கும் புத்தி கற்பிப்பதாயிருக்கிறது. சென்னை மாகாணத்தில் தாய் பாஷைமூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்ற முயற்சி சிலகாலமாகக் கிளம்பியிருக்கிறது. ஆயினும் என்ன? இதை ஊக்கத்துடனும் தேசாபிமானத்துடனுமநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவோரைக்காணோம். திராவிட இயக்கத்தை ஜாதிப்பூசலுக்காகக் கிளப்பி 16 வருஷ ஆக்ஷி நடத்தியவர்கள் கூட திராவிட பாஷையின் உத்தாரணத்தில் எவ்வித உருப்படியான கார்யத்தையும் ஸாதித்ததாகத் தெரியவில்லை. கீழ்படிப்புக்களிலும் ஸர்வகலாசாலைப் படிப்புகளிலும் தமிழ் மூலம் போதனை செய்யப்பட்டால் விசேஷ நன்மையுண்டாகும் என்பதை நாம் மாகாணயுனிவர்ஸிடி உணரும் காலம் எப்போதோ? நமது மாகாணத்திலுள்ள மூன்று ஸர்வகலாசாலைகளும் வங்காளத்தைப் பின்பற்றி கார்யம் செய்ய முன் வருமா? பேச்சளவில் தேசாபிமானம் காட்டுவதில் பயன் இல்லை.

ஸ்ரீமான் டாகூர் தமது பிரசங்கத்திலும் தாய் பாஷையை ஆதரிக்கவேண்டிய அவசியத்தை வெகு சாதுர்யமாக வற்புறுத்தியிருக்கிறார். "நம்முடைய ஆஹாரங்களை நம்முடைய பற்களைக்கொண்டே கடித்து உள்ளே செலுத்துவது போல் நமது தாய் பாஷையின் மூலமாகவே நாம் அறிவை அடைந்து உள்ளத்தில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லுகிறார். மேலும் நாம் பாஷை விஷயமாக அன்னிய நாட்டாரிடம் கடன் வாங்கிப் பழகியும், அவர்களுக்கு அடிமைகளாகியும் நமது சிந்தனைசக்திகள் இதனால்மழுங்கிவிட்டதாயும் குறிப்பிடுவதை நம் தேசச் சிறுவர்கள் தேசாபிமானத்துடன் கவனிக்க வேண்டும். ஆங்கிலேயரைப்போல் வேஷம் போடுவதிலும், ஸ்வாபிமானம் இழந்து வீட்டிற்குள் ரஹஸ்ய கார்யங்களில் கூட அந்நிய பாஷையான ஆங்கிலேயத்தில் பேசுவதை ஒரு கௌரவமாக நினைப்பதிலும் முனைந்துள்ள நம் தேச நாகரிகர்கள் வங்காளத்தின் தாய் பாஷாபிமானத்தைக் கண்டு வெட்கப்பட வேண்டாமா?

மேனாட்டு நாகரீகத்தின் வீழ்ச்சி.

ஸ்ரீமான் டாகூர் தமது பிரஸங்கத்தில் தற்காலம் மேனாட்டு நாகரித்தின் நிலைமையை சிறிது வர்ணித்திருப்பதும் ஸமயோசிதமானது. நம் தேச ஸர்வகலாசாலைகளிலிருந்து வெளிவரும் மாணவர்களில் பெரும்பாலர்கள் மேனாட்டு நாகரிகத்தைப் பெரிய கௌரவமாக நினைத்து அதன்படி நடக்க ஆரம்பிக்கிறார்கள். முக்கியமாக அவர்களுக்கு நம் தேச நாகரிகாதிகளில் தாழ்ந்த எண்ணமும், வெறுப்பும் ஏற்பட்டு அவைகளைக் கைப்பற்ற லஜ்ஜைப்படுகிறார்கள். இந்தப் பெரிய தீங்கைச் சிறிது சிறிதாகச் நிவர்த்திக்க வேண்டியது இந்தியத் தலைவர்களின் முக்கிய கடமையாயிருக்கிறது. இவ்விஷயத்தில் ஸ்ரீமான் டாகூர் ஸந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் தக்க எச்சரிக்கை கொடுத்து மாணவருக்கு உபதேசித்து வருவது பாராட்டத் தக்கதே.

மேனாட்டினர் ஏதோ சில விஞ்ஞானக் கலைகளில் தற்போது சிறந்து விளங்கி வருகின்றனராயினும் அவர்களுடைய ஜீவகாருண்ய உணர்ச்சியும் மனித ஸமூஹ ஊழியமும் நீதிபுத்தியும் பெரும்பாலும் குறைந்துவருவதைக் கவனிக்காத மனிதர் ஒருவரும் இருக்கமாட்டார். தற்கால ஐரோப்பிய நிலைமையை கவனித்துவரும் எந்த மனிதனும் அந்த தேசங்கள் யாவும் அந்தகாரத்தில் மூழ்கியிருப்பதை நன்கு அறியமுடியும். பண ஆசையும் பூமி ஆசையும் பிடித்து அதற்காக எவ்வளவு ஆபாஸமான வழியிலும் போக ஐரோப்பிய ராஜதந்திரிகள் துணிந்து விட்டார்கள். ஸத்யம், தயை இவை அங்கு மறைந்து வருகின்றன ஒருவரையொருவர் இரக்க மற்ற வழியில் கொல்லுவதற்காக எவ்வளவோ புதிய வழியில் அநேக கருவிகளை உத்பத்தி செய்ய முனைந்து நிற்கிறார்கள். ஏராளமான கடன் வாங்கியாவது யுத்த சாதனங்களை அதிகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இத்தகைய கோரமான மனிதக்கொலையில் முனைந்து கிடக்கும் மேனாட்டு நாகரிகத்தின் ஆபாஸத்தை ஸ்ரீமான் டாகூர் தம் எதிரில் இருந்த மாணவர்களுக்கு மனதில் பதியும்படி செய்தது அவருடைய தேசாபிமானத்தை விளக்குகிறது.

ஆப்பிரிக்காவிலும் ஜாதி ரக்ஷணம்.

தென் ஆபிரிக்காவில் ஜாதிபேதவிஷயமாக ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த தேசத்தில் ஐரோப்பியர், ஆசியாக்காரர் முதலிய அந்நிய ஜாதியினர் ஏராளமாகக் குடியேறியிருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதனால் அங்கு ராஜீய ஸமூஹ விஷயத்தில் பெருத்த சிக்கலும் துன்பமும் ஏற்பட்டிருக்கிறது. அங்கு குடியேறிய அந்நியர்களும், ஆப்பிரிக்கர்களும் கலப்பு விவாஹம் செய்து கொள்ளுவதால், அத்தேச சுதேசிகளின் நிலைமை நாளுக்கு நாள் கீழ்பட்டு வருகிறது. கலப்பு விவாஹ மூலமாகவும் வேறு பல வழிகளிலும் அந்நியர்கள் ஆதிக்யம் பெற்று அங்கு பொருளாதார வியாபாராதி ஸங்கடங்களும் அதிகரித்துவிட்டன. ஆதலால் ஆபிரிக்கர்கள் அங்கு விழித்துக்கொண்டு தங்கள் ஜாதியையும் ஸமூக ராஜீய க்ஷேமங்களையும் காத்துக்கொள்ள முற்பட்டிருக்கின்றனர். இதற்காகக் கலப்பு விவாகத் தடை மசோதா ஒன்று அந்த பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டிருப்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இதைத் தவிர அங்கு ஐரோப்பியரல்லாதவர்கள் ஐரோப்பியர்களை வேலைக்காரர்களாக வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், ஐரோப்பிய ஸ்திரீகளோ ஆப்பிரிக்க ஸ்திரீகளோ கலப்பு விவாஹம் செய்துகொண்டால் அவர்களுடைய பிரஜைகளுக்கு அத்தேசத்தில் ஸொத்து வைத்துக் கொள்வது முதலிய உரிமை கிடையாது என்றும் இரு மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த மசோதாக்களை மந்திரிகளில் பலர் ஆதரிக்கின்றனர். மிஸ்டர் ஹாப்மியர் என்ற மந்திரிமட்டும் இம்மசோதாக்களை ஒப்புக்கொள்ளாமல் மந்திரி பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

எந்த தேசத்திலும் அந்யர்கள் குடியேறி கலப்பு விவாஹம் நடத்தி அதன்மூலம் அந்தந்த ஜாதிகள் மறைந்து வருவது காணப்படுகிறது. இந்த அனர்த்தத்தைத் தடுத்துத் தம் ஜாதியின் சுத்தியைக் காப்பாற்றிக்கொள்ள முதல் முதலாகத்துணிவுகொண்டவர் ஹர் ஹிட்லரே யாவர். ஜர்மன் ஜாதியின் ரத்தத்தையும் புரிசுத்தியையும் காப்பாற்ற அவர் எவ்வளவு பிடிவாதமாக நிற்கிறார் என்பதையும் அதற்காக அவர் இயற்றியுள்ள பல சட்டங்களென்ன என்பதையும் யாவரும் அறிவோம், ஜாதிக் கலப்பினால் ஏற்படும் அனர்த்தத்தை இன்னும் பல தேசங்களும் உணர்ந்து விழித்துக்கொண்டு வருவதையும் பார்க்கிறோம். பாலஸ்தீனம் முதலிய இடங்களில் யூதர்களுக்கு எதிராக நடந்து வரும் கிளர்ச்சியும் இதில் சேர்ந்ததேயாகும். தற்போது ஆப்பிரிக்காவும் இந்த வழியில் புத்திசெலுத்தியிருப்பது புத்திசாலித்தனமே ஆகும்.

இந்தியாவில் மட்டும் இன்னும் இந்தவுணர்ச்சி உண்டாகாததோடு விபரீதப் போக்கும் இருந்துவருகிறது. நாகரிக உலகமெல்லாம் கலப்பு விவாகத்தைத் தடை செய்யமுற்பட்டிருக்கையில் இந்தியா மட்டும் கலப்பு விவாகம் வேண்டுமென்பது விபரீதமல்லவா?

இங்கு இந்தியர்கள் வெள்ளைக்காரிகளையும் வெள்ளைக்காரர்கள் இந்திய ஸ்திரீகளையும் விவாகம் செய்துகொள்ளும் வழக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் இந்திய ஜாதிக்கும், நாகரிகத்திற்கும் பொருளாதாராதிகளுக்கும் பெருத்த தீங்கு ஏற்பட்டு வருவதையும் ஆங்காங்கு பார்க்கிறோம்

ஆதலால் ஜர்மனி ஆப்பிரிக்கா போன்ற தேசங்களைப் போல் இந்தியாவிலும் பரிசுத்த ஹிந்து ஜாதியைக் காப்பாற்றுவதற்காக அந்நிய ஜாதி கலப்பு விவாஹத்தை தடை செய்யவும் அத்தகையவர்களுக்கு இங்கு சொத்து ஸ்வதந்திராதிகள் இருப்பதில் நிர்ப்பந்தம் ஏற்படுத்தவும் ஓர் சட்டம் அவசியமென்று நினைக்கிறோம்.

திருவாங்கூர் அரசர். ஸ்ரீ பார்த்தஸாரதி கோவிலுக்கு வருவதில் ஆக்ஷேபம்!

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் தீர்மானம்.

சென்னைமாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் கார்யக்கமிட்டியானது 21-2-37 கூடி கீழ்கண்ட தீர்மானங்களைச்செய்தது.

சென்னைநகர கார்ப்பரேஷன்ஸபையானது, ஆலயப்ரவேச சீர்திருத்தம்செய்த காரணத்திற்காகத் திருவாங்கூர் மஹாராஜாவுக்கு உபசாரப்பத்திரம் படித்ததைக் கண்டிப்பதாயும், ஷை பத்திரத்தில் ஆலயப்ரவேசமானது எல்லா ஜனங்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாக் சொல்லியிருப்பதை ஆக்ஷேபிப்பதாயும், திருவாங்கூர் அரசர் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிகோவிலுக்கு வந்து ஸ்வாமி தர்சனம், செய்யவும் கோவில் மரியாதைகள் செய்யவும் நடந்துவரும் முயற்சியைக் கண்டிப்பதாயும், அப்படிச்செய்வது அவருடைய ஆலயப்ரவேச விளம்பரத்தை ஆதரிப்பதாக ஆகுமென்றும், 'இது பொதுஜனங்களுக்கு ஆக்ஷேபகரமாயிருப்பதாயும் தீர்மானிக்கப்படுகிறது என்று கார்யதர்சி அறிவிக்கிறார்.

ஸ்ரீ ஜகத்குரு விஜயபாத்திரை முகாம்.

காக்கிநாடா.

ஸநாதனிகள் கூட்டத்தில் காங்கிரஸ் அபேக்ஷகர்.

ஒரு விளக்கம்.

பெருகவாழ்ந்தான் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ. ப. வே. ரங்காசாரியர்ஸ்வாமி குமாரர் ஸ்ரீமான் M. R. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்கள் எழுதுவதாவது:—

ஆர்யதர்மம் பத்ரிகையில் கண்டபடி 14–2–37ல் கும்பகோணம் கீழ டபீர் படித்துறை ஸ்நான கட்டத்தில் கூடின குடந்தை ஸநாதநிகூட்டத்தில் அக்ராஸனம்வஹித்த ஸ்ரீமான் G. V. வெங்கிட்டராமய்யர் அவர்கள் நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் முன் "எந்த சமாசார பத்ரிகைக்கும் நிரூபர்கள், கூட்டங்களில் நடந்த விஷயங்களை சரிவர ரிப்போர்ட் செய்கிறதில்லை" என்று ஒரு குறையை எடுத்து காட்டிவிட்டுத் தான் மேல் நடவடிக்கைகளை நடத்தினர். இப்போது ஆர்யதர்ம 18—2—37 பத்ரிகையிலும் அதேமாதிரி தான் விட்டுப்போயிருக்கிறது. இந்த குறையை நிவர்த்திசெய்வது நம்மைப்போன்ற ஸநாதநிகளின் கடமை.

மதராஸ் சட்டசபையில் காங்க்ரஸ் மெம்பர் ஸ்தானத்திற்கு அபேக்ஷகரான ஸ்ரீமான் பூவராக அய்யங்கார் அவர்கள் ஷை பொது கூட்டத்தில் கேள்வைகள் கேட்ட ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லிக்கொண்டு வந்ததில் மேல்கண்ட பிரசுரத்தின் 8-வது பாராவில் கண்டபடி என்னுல் கேழ்க்கப்பட்ட கேழ்வைக்கு "என்னை எவ்வளவு கேழ்வைகள் கேட்டாலும், நான் "நூற்றுக்கு நூற்றுன்று" காங்க்ரஸ்காரன் ஆகையால் நான் எனக்குமேல் தளகர்த்தர்களாக வந்திருப்பவர்களுடைய ஆஞ்ஞையைத்தான் நடத்த முடியும் மற்றபடி என்னுல் செய்யக்கூடியது ஒன்றுமில்லை" என்று கண்டிப்பாய்ச் சொன்ன பதிலுக்கு அடுத்த மூன்று பாராகளில் கண்டபடி நடந்த நடவடிக்கைகள் முடிந்ததும் காங்க்ரஸ் அபேக்ஷகரான ஸ்ரீமான் அய்யங்கார் பிடிகொடாமலும் யாதொரு வழியும் சொல்லாமலுமிருந்ததால் நாங்கள் என்னசெய்வதென்று யோசித்துக் கொண்டிருந்த ஸமயத்தில் என்னுல் அடியில் கண்ட கேழ்வை கேழ்க்கப்பட்ட பிறகுதான் ஸ்ரீமான் பூவராக அய்யங்கார் அவர்கள் 21 வது பாராவில் கண்டபதிலை அழுத்தந்திருத்தமாக மும்முறை சொன்னுரேதவிற அவராக (Volunteer)செய்யவில்லை இவ்விஷயம் தான் மீட்டிங்கின் முக்யமான ஸாராம்சமானுதால் அதை பிரசுரிக்கவேண்டியது தவறி விட்டது.

நான் கேட்ட கேழ்வையாவது:—

சென்னை சட்டசபைக்கு எங்கள் தொகுதியால் தாங்கள் ஒரு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டபிறகு தாங்கள் ஷை சபையில் ஹிந்து மதத்தின் கொள்கைக்கும் அபிவிருத்திக்கும் ஹானிகரமான எவ்விதப்ரேரணையும் கொண்டுவாதிருக்கிறீர்களா? அப்படி சொன்னதில் தாங்களாவது அல்லது மற்ற அங்கத்தினர்களில் ஒருவரோ பலரோ மேல் கண்டவிதமாக ப்ரேரணைகளைக் கொண்டுவந்தால் அவைகளைத் தாங்கள் எங்கள் சார்பாக நன்ருய் எதிர்க்கவேண்டியதற்காக நாங்கள் தங்களைத் தேர்ந்தெடுத்து தொகுதி ஜாடா வோட்டர்களையும் பிசார மூலமாக அபிப்ராயம் கொடுக்கும்படிசெய்து அப்படியே தொகுதிவோட்டர்கள் ஒரே முகமாகவோ அல்லது பெரும்பான்மையாகவோ (மெஜாரிடி விஷயமாகவோ) தீர்மானங்களை தங்களுக்கு அனுப்பினுல் தாங்கள் என்ன செயவீர்களென்று கேட்டதற்குத்தான் 12-வது பாராவில் கண்ட பதில் கொடுத்தார்.

ஆர்ய சாஸ்திர ரகஸ்ய விவரணம்.

யக்ஞோபவீதம்.

(T. V. தர்மராஜ கனபாடிகள் வேதபாடசாலை திருக்கோகர்ணம்.)

ஐயா! எப்பொழுதும் உபவீத முடையவனுய் சிகையை முடிந்தவனுய் எச்சமயமும் இருக்கவேண்டும் என்றும், யக்ஞ ஸூத்திரமில்லாது செய்யும் எந்த கார்யமும் 'அப்பிரயோஜனம்' என்றும், "பிருகு" முதலிய பெரியோர் கூறியபடியால் அந்தணர் குலத்தோர்க்கு அருந்தவப்பயன் கைகூட வேண்டி இது முக்கியம். ஆகவே யக்ஞோபவீதத்துடனேயே எல்லா கார்யங்களையும் செய்யவேண்டுமேயன்றி, அஃதில்லாமல் செய்தால் அது பயனற்றுப்போவதுடன் பெரும் பாபத்தையும் விளைவிக்கும் என்பது ஆன்ருேர் கருத்தாதலாலும், அதன் முறையை அடியில் எழுதப்படுகிறது.

விதி வழுவாமல் ஸ்நானம், ஆசமனம் முதலியன செய்து பிரும்ம, விஷ்ணு, ருத்திரன் இவர்களை வணங்கி, தேவாலயங்களை வழிபட்டு அசுவத்தம், பில்வம் முதலிய நன் மரங்கள் கூடிய விடம்தேடி, அல்லது, நதிதீரம்தேடி, கீழ்திசை நோக்கி உட்கார்ந்து கையை சுத்திசெய்து வர்த்திகையில் பருத்தியை எடுக்கவேண்டும். பிறகு அதற்கென விதிக்கப்பட்ட வேத மந்திரங்களை சொல்லிக் கொண்டே யக்ஞோபவீதத்தை உண்டு பண்ணவேண்டும். யக்ஞோபவீதம் முதல் மூன்று வர்ணத்தார்க்கும் பொதுவானதேயாகும்.

யக்ஞோப வீதத்தைப்பற்றி "மனு" சொல்வதாவது:—

அந்தணர் பருத்தி நூலையும், அரசன் (க்ஷத்திரியன்) சணல் நாரையும், வணிகர் ஆட்டு ரோமத்தையும் முப்பிரியாக்கித் திரித்திடவேண்டும். என்பது எல்லாப் பிராமணங்களாலும் முதல் மூவர்ணத்தாருக்கும் யக்ஞோபவீதம் உண்டு எனவாகின்றது. அது ஒன்பது நூல்களால் அமைந்த முன்னுலாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதுகொண்டே "தேவலர்" யக்ஞோபவீதத்தை ஒன்பது நூல்களால் அமைந்த பூணூலாக தரிக்கவேண்டும் என்றும், யக்ஞோபவீதப் பிரதிஷ்டாப்-பிரயோகத்தையும் கூறியிருக்கிருர்.

அதாவது:— ஊருக்கு வெளியில் (முற்கூறிய விலக்கணம் அமைந்த இடம்) சென்று எண்ணிபடியே 'தொன்னூற்றி ஆறு' அங்குல நீளம்வைத்து நூற்று, (இங்கு அங்குலம் என்றது "ஸங்கியாதாங்குலம் என்னும் சிற்பாங்குலம்" நாட்டங்குலம் 12 கொண்டது) அதை மூன்ருக மடித்து, அதை நீரில் மும்முறை நனைத்து, மந்திர ஸம்ஸ்காரம்செய்து தேவாலயம், அல்லது பசுக்கள் கட்டுமிடம் நதிதீரம், அல்லது சுத்தமான வெவ்வெறிடத்தாவது உட்கார்ந்து காயத்ரீ மந்திர ஜபத்துடன் மீண்டும் முப்பிரியாக்கவேண்டும். பிறகு நவசந்தி ருத்திரமாகும்.

பிறகு, பில்வம், அசுவத்தம் முதலிய விருக்ஷங்களின் சிறுகிளையை ஜீவனுகச் சேர்க்கவேண்டும். பிறகு கையை மும்முறை அலம்பி இடது புறத்தில் ஸ்வல்பம் மிருத்திகையைவைத்து, அதில் உபவீதத்தைவைத்து பத்ரபுஷ்பங்களால் அர்ச்சித்து, "பூரக்நி" முதலிய மந்திரங்களால் மந்திரித்து, பிரம்ஹ விஷ்ணு ருத்திரர்களை தியானித்து, நமஸ்கரித்து தரிக்கவேண்டும் என்று ஸ்ரீ பாராசரஸ்மிருதி, மனுஸ்மிருதி, நிர்ணயஸிந்து, ஸ்மிருதி முக்தாபலம் முதலான கிரந்தங்களால் தெரிகிறது. இதில் முடிபோடும் முறையை காத்யாயனர்:— முன்னுலாகவுள்ளது யக்ஞோபவீதம், அதற்கு முடி ஒன்றேயாகும் என்ருர். மேலும் யக்ஞோபவீதத்தின் அளவையும் அவரே குறித்திருக்கிருர். அதாவது:— முதுகு எலும்பிலும் தொப்புளிலும், சம்பந்தித்து, அதிகமாக தொங்காமலும், குறையாமலும் இருக்கவேண்டும் என்றும், மார்புக்கு மேலும், நாபிக்குக் கீழும் தரித்தல் கூடாது என்றும் கூறுகிருர். மேற்கண்டபடி மந்திர, தந்திர நியம வைபவ விசேஷங்கள் நிறைந்த இவ்வுபவீததாரணம் கிடைத்தபிறகு தான் பிரும்மசரியாசிரமம்பெற்று அந்தணர் கூட்டத்தில் சேருவான்.

இங்ஙனம் யக்ஞோபவீததாரண வைபவமிருக்க கலி விலாஸத்தால் மூவருணங்களிலுமகப்படாத சிலரும் உபவீததாரணம் செய்கிருர்கள் அந்தோ! இதுவும் கலி சங்கடம் தான். (பிரும்ஹவித்யா.)

திருவெண்காடு.

ஸநாதன தர்ம ஸபை:

தாதுஹு மாசிமீ 7வ வியாழன் பகல் 3½-மணிக்கு இச்சபை வழக்கம்போல் சன்னதிராம மடத்தில் கூடிற்று. ஷை யூர் வித்யார்த்தி சிந்தாமணி ஸம்ஸ்க்ருத ஸ்கூல் உபாத்தியயர் பிரும்மஸ்ரீ எஸ். வைத்திநாத சாஸ்திரிகள் தர்மம் என்ற விஷயத்தைஅழகாய் உபந்யஸித்தார். பின்புபரோபகாரம் என்ற விஷயத்தை ஷையூர் அ. முத்துஸ்வாமிகள் உபந்யஸித்தார். பின்பு ஷை ஸபை கார்யதரிசி சுப்பிரயமணிய சிவாசாரியாரின் உலக விஷயத்தில் தற்கால நிலையை கொஞ்சம் சொல்லவேண்டும் என்ற பிரேரணையின்பேரில் பேசுகையில் "இவ்வுலகில் காங்கிரஸ்ஸைப்போல் ஊக்கத்துடன் சுயநலம் கருதாது உலகக்ஷேமத்திற்கு உழைக்கும் கக்ஷி ஒன்றுமேயில்லை. என்று நாம் உணர்ந்திருக்கிருேம். ஆனுலும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்தை முன்னிட்டு அவர்கள் மத விஷயத்தில் ஈடுபடுவது ஸாஹஸமான கார்யமாகும். வர்ணுச்ரமிகள் தமது கடமைகளைச் செய்யாமல் நிந்திக்கத்தகுந்த கார்யங்களை அனுஷ்டித்தால் அவர்களே சண்டாள ஜன்மம் அடைகிருர்களென்று சாந்தோக்யத்தில் கூறியவாறு நானே கெட்ட காரியம் செய்தால் சண்டாளனுகப்பிறப்பேன். அதற்குறிய நியமங்களை அப்பிறவில் அனுஷ்டித்து பின்பு மேன்மையடைய முடியும். ஆகவே ஹரிஜனங்களை ஆலயத்தினின்று விலக்கியது மற்ருேரின் முயற்சி என்ற உணர்ச்சியை விலக்கி நாம் ஸ்வதர்மானுஷ்டானத்தை கைவிடாமலிருந்து மேன்மை அடையவேணும். ஆலயப்ரவேச விஷயத்தில் ஹரிஜநங்களுக்கு ஆதரவு செய்யும் மஹாநுபாவர்கள் உண்மையாய் அவர்களுக்கு தீங்கு விளைவித்தவர்களாவார்கள், நன்மை தேடியவர்கள் அல்ல" என்று அய்யர் உபன்யஸித்தார். பின்புஸபைகலைந்தது. ஒரு நிரூபர்

உத்ஸவம்.

நாளது தாதுஹு மாசிமீ 11வ திங்கட்கிழமை இந்த க்ஷேத்ரத்தில் இந்திரமகோத்ஸவம் ஆரம்பம். 19வ ரதோத்ஸவம் 20வ ஷஷ்டி விசாகம் தீர்த்தம் ஷை தேவஸ்தானம் டிரஸ்டி மானேஜர் பாலசுப்ரமணிய முதலியார் கோவில் காரியங்களை உசிதமான காலத்தில் நடத்தி வருகிருர். நமது நிருபர்.

40-கோடி பவுன் கடன்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார், தற்காப்பையும் ஆயுத பெருக்கையும் உத்தேசித்து புதிதாக 40-கோடி பவுன் கடன் வாங்க நிச்சயித்திருக்கிருர்கள். ஏற்கனவே 110 கோடி பவுன் செலவுசெய்ய நிச்சயித்திருப்பதைச் சேர்த்தால் 150 கோடிபவுன் ஷை காரியத்திற்காக செலவாகும்.

வேதமும், அர்த்தஞானமும்.

(திருப்புறம்பியம் சிதம்பரசாஸ்திரிகள்.)

தைமாதம் 1வ வெளியான ஆர்யதர்மத்தில் 'வேதாந்த தீபிகையில் வேதவைபவ விசாரம்' என்ற தலைப்பின்கீழ் சில ஸந்தேஹங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதைப்பார்த்ததில் வேதாந்த தீபிகையில் வேதாத்யயந ஸம்பந்தமான விசாரம் நடைபெற்றதாகத் தோன்றிற்று. அதனுல் வேதாந்த தீபிகையில் இது ஸம்பந்தமாக வெளிவந்துள்ள வ்யாஸங்களை பார்க்கவேண்டுமென்று ஆவலுண்டாயிற்று. உடனே வேதாந்த தீபிகையின் ஸஞ்சிகைகளை அடைய முயற்சித்தேன். இது ஸம்பந்தமான ஸஞ்சிகைகள் கிடைத்தன. இதைக்கொண்டு விசாரத்தின் போக்கைக் கவனித்தால் வேதவைபவத்தைப்பற்றின வ்யாஸம் ஒன்று வெளிவந்து அர்த்தக்ஞானம் அவச்யமா இல்லையா என்ற சண்டை கிளம்பிவிட்டதாக நினைக்கவேண்டிவருகிறது. எனக்குக் கிடைத்துள்ள ஸஞ்சிகையை கவனித்தால்

ஸுஜாநுஹெெவ, யம்யங்க்ருதூயிதெ த

என்பதுபோன்ற ச்ருதிகளை விசாரிக்குமிடங்களில் பொருத்தமில்லாத அர்த்தவர்ணநம் காணப்படுகிறது. இவை எல்லாவற்றையுமே விசாரித்துவிடவேண்டுமென்ற அவா உண்டாகிறது. ஆனுலும் ஆர்யதர்மத்தில் அவ்வளவு முக்யமில்லாத ஷை விஷயத்தை விசாரித்துக்கொண்டிருப்பது அவச்யமில்லையென்று நிறுத்திக்கொண்டுவிட்டேன். ஆகவே ஆர்யதர்மத்தில் வெளியிடப்பட்டுள்ள ஸந்தேஹங்களுக்கு மட்டும்சுருக்கமாக ஸமாதானம் எழுதுகிறேன்.

அத்யயந விதி அர்த்த க்ஞானத்தையும் விதிக்காதென்பதே ஸாயனரின் அபிப்ராயம் யஜுர்வேத பாஷ்ய பூமிகையில்

ஜூாநஸ்ய வ்யதிரிக்தஸ்யாநஸ்யநம் தஸ்ய வாமாக்ருதிதிவெசு । ஸ்வஸ்தாநாச வணப்யஷிவெவஸெவம்காம ஃமப்ப் நாநாவஸாமி ணாஃ ॥

என்று சொல்லுகிருர். ரிக்பாஷ்ய பூமிகையில்

தஸ்யவாயஸ்யநஸ்ய ஊஷ்டாய ஸ்வஊ க்ஷாரஹ்ணாஞசவணு வாஷா யூ நாஸாவஸெ வஸ்த்ருதிதூ ।

என்று சொல்லி அத்யநவிதி அர்த்தஞானம் பர்யந்தமானது அன்றுஎன்று புருஷார்த்தாநுஸாசந ஸூத்ரங்களைக்கொண்டு விஸ்தாரமாக நிரூபிக்கிருர். இவைகளை கவனித்தால்ஸாயனருடைய அபிப்ராயப்படியும் சங்கரபகவத்பாதருடைய ஸித்தாந்தப்படியும் அத்யயந விதி, மூலத்தை மட்டும் அத்யயநம் செய்யச் சொல்வதாகவே ஏற்படுகிறது. ரிக்பாஷ்ய பூமிகையில்,

தயா கெவலுவாரகஸ்ய வ்ராத்யவஞ ஹவதி ।

என்று சொல்லுவதால் மூலத்தையட்டும் அத்யயநம் செய்வதாலேயே வ்ராத்யத்வம் நீங்கி விடுவதாகவும் சொல்லுகிருர்.

யஜுர்பாஷ்ய பூமிகையில்

தமிருதமியிவஞாதெவவெதநஜாநெர்த்ரு ணஸ்தந்த்ரும் கிஞ்சிவதவஹூஸ்து ।

என்று சொல்லுகிருர். இதனுல் அத்யயநஜந்யமான அபூர்வத்தைக் காட்டிலும் அர்த்தக்ஞானத்தால் ஏற்படும் அபூர்வம் வேருனதென்றும் ஏற்படுகிறது.

கர்மாவிற்கு அர்த்தக்ஞானத்தின் அபேக்ஷை உண்டா என்பதை அடுத்தாப் போல் கவனிப்போம். அர்த்தக்ஞானம் கர்மாக்களுக்கு அங்கமென்று நிரூபித்தால்தான் அர்த்தக்ஞானம் இல்லாது செய்யப்படும்கர்மாகள் வ்யர்த்மாகும். ப்ரமாணங்களில் ஒன்ருவது அர்த்தக்ஞானம் கர்மாங்கமென்று சொல்லவில்லை. கர்மாக்களின் அங்கங்களை விஸ்தாரமாக நிரூபிக்கவந்த கல்பஸூத்ரக்காரர்களும் அர்த்தக்ஞானத்தை அங்கமாகச் சொல்லவில்லை. அர்த்தக்ஞானத்தை ப்ரசம்ஸை செய்யும் பல வசனங்கள் இருந்தாலும் மூலமாத்திரத்தை அத்யயநம் செய்வதே வ்ராத்யத்வத்தை நிவர்த்தித்துவிடுவதாகஸாயனர்சொல்லுகிருர் இந்நிலையில் அர்த்தக்ஞானம் எல்லோருக்கும் நியதமாக இருக்கவேண்டியதில்லை என்றே ஏற்படுகிறது. மேலும் அந்தந்த மந்திர ப்ராஹ்மணங்களின் க்ஞானம் பலவிடங்களில் சாகாந்திரங்களின் உபஸம்ஹாரத்தாலேயே ஏற்படவேண்டியிருக்கிறது. பலவிடங்களில் அங்கங்களின் அபேக்ஷையும், மீமாம்ஸா, புராணுதிகளான உபாங்கங்களின் அபேக்ஷையும் வேண்டியிருப்பதும் யாவருக்கும் தெரிந்ததே. இந்நிலையில் அர்த்தக்ஞானம் கர்மாவிற்கு அங்கமென்று நிரூபித்தால் ஸகலசாகைகளையும், ஸகலாங்கங்களையும், ஸகலஉபாங்கங்களையும் அத்யயனம் செய்ய வேண்டியது நிர்ப்பந்தமாகிவிடும். ஸ்மிருதிக்காரர்களோ ஏகசாகாத்யயனத்திற்கு மேல் எல்லாவற்றையும் அதிகாரி விசேஷவிஷயமாகவே சொல்லுகின்றனர். ஆகவே ஏகசாகாத்யநம், மூலமாத்ராத்யயனம் இவை சாஸ்திரீயமென்று ஒப்புக்கொள்ளும் எந்த சாஸ்திரக்காரர்களும் அர்த்தக்ஞானம் கர்மாங்கமென்று சொல்லத் துணியமாட்டார்கள். அர்த்தக்ஞானம் கர்மாங்கமன்று என்பதை குதூஹலவ்ருத்தியிலும் கிரிகாண்டி மண்டனத்திலும் விஸ்தாரமாக நிரூபித்திருக்கிருர்கள். ஸ்ரீ சங்கர, ராமாநுஜ, ஸாயனுதிகள் இதற்கு விருத்தமாக ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே கர்மாக்களில் அர்த்தக்ஞானம் இல்லாவிடில் கர்மாகள் வ்யர்த்தமாகா.

யம் யம் க்ருதூயிதெ

என்று ஆரம்பித்து சொல்லப்படும் இடத்தில் மூலாத்யயனம் மட்டுமே ப்ரஸ்தாபிக்கப்படுகிறது. ஸ்வாத்யாய விதியை அநுஸரித்து ஏற்பட்டுள்ள இப்பிரகாணத்தில் அர்த்தக்ஞானிகள் இல்லாதிருக்கக் கூடாதென்று நினைக்க இடமில்லை. மேலும் இந்த இடத்தில் ஸாயனுசாரியாள்

தத்ராயெஸ்தாவ்யூராவிகஸ்ய நிஷ்தளவத நாவெஸ்த்வ விவாஃ ஸ்வஸ்ராயெஸ்தூ:

என்று சொல்லுகிருர். அடுத்தாற்போல் வெஃம் விஸாம்வஸம் என்ற விடத்தில்,

வாராஃயூராவ வெஃதஜவாஸிஜூம் । தெ வஃஜ்ராஜயெஸ்தாவ்யூராவி ... வதூஜெந

என்றும் சொல்லுகிருர். இதனுலும் ஸாயனுசார்யாள் இந்த ப்ரகாணம் மூலமாத்ராத்யநவிஷயம்என்றும் ஒப்புவதாக ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. அதனுல் வேதாத்யயனம் செய்தவனின் மஹிமையைச் சொல்லுமிடத்திலும் மூலத்தை மட்டும் அத்யயனம் செய்தவனின் மஹிமையும் சொல்லுவத்ரக ஏற்படுகிறது. ரிக்பாஷ்ய பூமிகையில் காணப்படும் விவரணம் யஜுர்பாஷ்யத்திற்கு விருத்தமாக இருப்பதாக யாரும் நினைக்க இடம் இல்லை. ரிக்பாஷ்யத்தில் மூலாத்யயனம் செய்தவனுக்கும் பூஜாதிகள் உண்டென்று சொல்லுகிருர்.

நமெவெஃயஸ்ய நஸ்ய ஹஶு

என்ருரம்பித்து அர்த்தகஞானத்திற்குமிங்கு ப்ரஸ்தாபம் உண்டென்றே நிருபிக்கிருர். அர்த்தக்ஞானமுள்ளவனைப் பற்றியே இப்ரகாணம் ஏற்பட்டதாக நிரூபிக்கஸாயனுசாரியாள் அங்கு முயற்சிக்கவில்லை.

ஸ்வாயஸ்ராயொயெஸ்தவ்ஃ என்பதற்கு ஸ்விதூ விதாஃஹ வா ஊராவ்ராவ்த வவ (வஸெகா) வெஷொயெஸ்தவ்ஃ

என்று ஸாயனுசாரியார் அர்த்தம் சொல்லுகின்ருர்.

ப்ராஹ்மணாயஸ்யநம் வ்ரஹ்யஜ்ஞாயஸ்யந ஞு கதூவஸ்ஶு

என்றுசொல்லுவதால்இந்த விதியில் க்ரஹணுத்யயனமும் ப்ரஹ்மயக்ஞாத்யநமுமே விதிக்கப்படுகிறது.

மதகுருக்களுக்குக் கட்டளை.

ஸர்க்காருக்கு விரோதம் செய்யக்கூடாது.

ஜர்மனியிலுள்ள கிறிஸ்தவ மதகுருக்கள் ஸர்க்காருக்கு விரோதமான கார்யங்களில் பிரவேசிக்கக்கூடாதென்றும், ஜர்மன் ஜாதியையும் தேசத்தையும் பற்றி நாஸிக் கக்ஷியின் கொள்கைப்படியே அவர்கள் நடக்கவேண்டுமென்றும் மீறி நடப்பவர்கள் குரு ஸ்தானத்திலிருந்து விலக்கப்படுவார்களென்றும் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

உயர்ந்த புஸ்தகங்கள்.

மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணுத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் எழுதப்பட்டன.

		ரூ. அ.
ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—பாகம்	1	2—0
" "	2	2—0
உதயணன் சரித்திரம்		1—0
மணிமேகலைக் கதைச்சுருக்கம்		0–10
புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்		0–12

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனுர்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல்ரோட், கும்பகோணம்

முக்கிய கவனிப்பு.
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

இனிச் செய்வதென்ன?

(ப. ரே. திருமலே அய்யங்கார்.)

சென்னை மாகாண ஸநாதன தர்மமகாநாடு வெகு சம்ப்ரமத்துடன் காரியகரமாகவும் வெற்றிகரமாகவும் முடிந்ததைக் குறித்தனைவரும் சந்தோஷிக்தன்றனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் தலைமையில் ஒரு மகாநாடும் வால்டாக்ஸ் தியேடரில் வங்காள குலதிலகரான பண்டித ஷயாம் சுந்திரசக்ரவர்த்தித்தலைமையில் ஒரு மகாநாடும், குருவாயூரில் ஒரு மகாநாடும், கோவிந்தப்ப நாயக்கன்தெருவில் ஸ்ரீமான் வி.வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் தலைமையில் ஒரு அவசர மகாநாடும் நடைபெற்றவிருத்தாந்தங்களையும் அனைவரும் அறிவர். நிரந்தரமாக இடைவிடாது விடாமுயற்சியுடன் தீவிரமாக உழைத்தாலன்றி எடுத்த காரியமும் கைகூடுவது முடியாத காரியம். இதற்கு முக்கியமாக வேண்டுவன திரவியமும் மனிதருமே. இவ்விரண்டும் நன்கு பூர்ணமாகப் பெற்றாலன்றி எவ்வியக்கமும் நிலைபெற்று நடைபெறாது என்பது திண்ணம். எனவே இவற்றைச் சேகரிப்பதில் ஸநாதநிகள் விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

சென்னை மாகாண வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. 'ஆங்காங்குள்ள சநாதன தர்மப்ரசாரக சபைகள் எல்லாம் இதன் கிளைகளாக மாறி தாங்கள் ஜீவிதமாக இருப்பதை வியக்தமாக கிரியாம்சையில், வெளிக்காட்டல் அத்யாவசியம்.

கைங்கர்ய புத்தியுடன் உழைப்பதற்கு தியாகிகள் முன்வரல் வேண்டும். கூடுமானவரை இதில் ஈடுபடுபவர்கள் இன்சொல்லாரும் கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மை உடையவராயும், பொறுமையையேமேற்கொண்டொழுகுபவராயும், எக்காரணத்தை முன்னிட்டும் சுயநலம் கருதாதவராயும், மிகத் துன்புறுத்தப்பட்ட காலையும் பிறரை எவ்விதத்திலும் இகழாதவராயும் இருத்தல் அத்யாவசியம், சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும். சுதர்ம ரக்ஷணத்தில் நான்கு வர்ணத்தாரும் நன்கு கலந்துகொண்டு ஒத்து உழைத்து தேவ, தேச சேவைகள் புரிதல் வேண்டும். பிராசீன சம்ப்ரதாயத்திற்கு முரணான எக்காரியமும் செய்தல் கூடாது. பிரசாரகர்கள் ஆங்காங்கு சென்று நம் சநாதன தர்மத்தை அனைவரும் நன்குணருமாறு செய்து புத்துணர்ச்சி உண்டாக்கல் வேண்டும். கேவலம் ஒரு வகுப்பினரே முன்னணியில் நின்று பாடுபடுகின்றனர் என்ற சாமான்ய உலகநிந்தனையைப் போக்கி ஆஸ்திக சிகாமணிகளைத் தேர்ந்தெடுத்து அசூயை அகற்றி உண்மை பக்தியை ஊட்டிவிட்டால் நாடு க்ஷேமமடைவதில் என்ன சந்தேகம்? எடுத்துக்கொண்ட காரியம் எளிதல்ல. செயற்கரிய செய்வார் பெரியர், மனச்சோர்வு படலாகாது. ஆரம்ப சூரத்துடன் நின்று விடுதல் ஆரியர்கழகல்ல, உறுதி பயப்ப கடைபோகவேணும், முயற்சியே திருவினையாக்கும்.

தீர்மானங்களை நிறைவேற்றுதல் என்பது அவற்றின்படி நடத்தலே. சநாதன தர்ம பிரசாரமே செய்துவரும் நம் 'ஆர்யதர்மத்தை எங்ஙனம் பலப்படுத்தப் போகிறீர்கள்? சொல்லுதல் யார்க்கும் எளியதே. தனித் தினசரிப்பத்திரிகை வேண்டுவது அத்யாவசியமே ஆயினும் அது எப்பொழுது கைகூடும் என்பதையும் யோசிக்க வேண்டும். வர வர 'ஆரியதர்ம' பலங்குன்றி வருகிறது. சென்னையிலேயே இதனைப்பூர்ணமாக ஆதரிப்பவர் ஏதோ ஒரு சிலரே. இதை ஒவ்வொரு சநாதனியின் கிருஹத்திலும் வரவேற்கும்படி செய்துவிட்டால் விசேஷ நன்மை உண்டு. பத்திரிகைகள் மூலமாக நடைபெறும் பிரசாரத்துக்கு எப்பொழுதும் விசேஷ சக்தி உண்டு. இதனை நன்கு கவனிப்பாராக.

அவ்வப்போது ஆயிரக் கணக்கில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடல் வேண்டும். பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை. மற்ற இயக்கங்களிற் போல விசேஷ தனவந்தர்கள் வேண்டியமட்டும் பண உதவி செய்தாலன்றி தற்போதுள்ள காலநிலையில் ஸநாதனிகள் வெற்றி பெறுவது முடியாத காரியம். இதர இயக்கங்களைப் பார்த்து அவற்றின்படியே ஒவ்வொன்றையும் செய்வேண்டும் என்பதும் இல்லை.

ஸநாதனித் தலைவர்கள் முக்கியகனதனவான்கள் ஒரு கூட்டமாக நிமிடந்தாமதியாது நம் மாகாணம் முழுமையும் ஒரு சுற்றுப் பிரயாணம் செய்ய ஆரம்பிக்கவேண்டும். கேவலம் பண்டிதர்கள் மாத்திரம் போவதில் பூரண பலமேற்படாது. நகரங்கள் கிராமங்கள் தோறும் சென்று நம் திட்டத்தை அனைவருக்கும் எடுத்துரைத்து ஆங்காங்குள்ள சபைகளை புனருத்தாரணம் செய்து சரியாக நடைபெறுமாறு செய்தல் வேண்டும். ஆற்றிலொருகால் சேற்றிலொருகால் என இருத்தல் பயன் தாராது. தியாகம் தேவை. ஒன்றுபட்டால் தான் வாழ்வு உண்டு, இங்ஙனம் குறைந்தது ஒரு வருடகாலம் உழைத்து அடுத்த மகாநாட்டை மாகாண மத்யப்ரதேசத்தில் நடத்தினால் சகலவித நன்மைகளும் உண்டாகும். தகுந்த கட்டுப்பாட்டுடனுழைத்தல் வேண்டும். தக்க பலமின்றி வெறுந் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டிருந்தால் நம்மையே நாம் ஏமாற்றிக்கொண்டதாக ஆகும். நம் சிறுவர்களுக்கு நல்ல பயிர்ச்சி கொடுக்க வேண்டும். அவர்களை முதலில் கவனிக்கஎல்லாம் எளிதில்நிறைவேறும்.

திருப்பறங்குன்றம். ப்ரம்மோத்ஸவம்.

ஸ்ரீ ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தைச் சேர்ந்த பாசலம் என்னும் பாடல் பெற்ற திருப்பறங்குன்றம் என்றதிவ்விய க்ஷேத்திரத்தில் சகல மங்கள ஸ்வரூபியாகவும் சர்வாபீஷ்ட பிரதாயகருமாய் விளங்குகின்ற ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமிக்கு பங்குனி மாதந்தோறும் நடந்து வருகின்ற ப்ரம்மோத்ஸவத்தில் சென்ற 25 வருஷங்களாக அடியிற்கண்ட எங்களால் வேதாபிமானிகளுடைய உதவியைக்கொண்டு ஸாமவேத பாராயணம் செய்வித்து ஷை பிராஹ்மணர்களுக்கு ஸமாராதனை தெக்ஷிணை முதலிய பிரயோஜனமும் செய்யப்பட்டு வருகிறதில் நிகழும் தாதுஸு பங்குனிமீ 4௨ புதன்கிழமை கார்த்திகை தினம் உத்ஸவத்திற்கு கொடியேறி அன்று முதல் ஸாமவேத பாராயண ஆரம்பம். உத்ஸவம் பங்குனிமீ 4௨ முதல் 18௨ முடிய அதாவது (17–3–37) முதல் (31–3–37) 15 நாளும் ஷை ஸாமவேதஸ்வஸ்திவாசனம் வகையரு நடத்தவேண்டிய செலவுக்காக ஆஸ்திக பிரபுக்களெல்லோரும் சென்ற வருஷங்களில் அபிமானித்ததுபோல் இவ் வருஷமும் தங்களாலின்ற மட்டில் உதவி செய்து ஷை தர்மத்தை நடத்தி வரும்படிக்கும், ஷை தர்மத்திற்கு திரவிய மூலமாகவாவது தண்டுலாதி ஸாமக்கிரியை மூலமாகவாவது அடியில் கையொப்பமிட்டவர்களிடம் உதவி செய்து ஸ்ரீ சுப்பிரமணிஸ்வாமி அனுக்கிரகத்தையும் அடையவேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம் என்று ஸ்ரீமான்களான யக்ஞஸாமிசிரௌதி முதலியவர்கள் அறிவிக்கிறார்கள்.

WONDERFUL PREDICTIONS
AND ACCURATE LIFE READING.

Simply write your questions clearly and send them on to us well packed in a cover. Correct replies are sent by next post. Answers to prashnas and annual Life reading are our specialities. Please omit questions relating to theft and Government. Kindly mark the exact time of your writing or of your birth and dade.

	Rs. As. Ps.		Rs. As. Ps.
FEES: 1 TO 4 QUESTIONS ...	2 0 0	1 YEAR LIFE READING IN 8 PERIODS ...	5 0 0
ABOVE 4, EACH QUERY ...	0 8 0	ANY SINGLE DHASA WISH 9 SUB-PERIODS	12 0 0

OPINIONS.

P. H. Sundaram Esq., B.A., B.L., Dt. Munsif Kulitalai, 7-12-36
"I am quite satisfied with the accuracy of your predictions and your remarkable grasp of the science".

M. N. Choudhury, Lt. col. I.M.S., Ag. Surgeon General Madras.
"You predicted that I would get Rs. 35,000/- I practically got the sum unexpectedly. Your predictions for the period are practically correct."

B. K. Chaturvedi Bar-at-Law, Dt. Judge, Suratgar, Bikaner State.
"Daibagya T. V. Jayarama Sastry of Teppakulam has been known to me for some time past and I can readily say that his predictions are both wonderful and accurate".

K. Kuppusami M.A., F.C.S. Acct. General Madras.
"The accuracy of your predictions is marvellous. My transfer and promtion took place exactly on the day fixed by you".

Brihmasri T. V. JAYARAMA SASTRIGAL, Director,
Venus Astrol[illegible] Bureau, Teppakulam P. O. TRICHY.

125

மதிப்புரை.

ஹரி ஹர கீதா.

இந்தப் பெருடைய க்ரந்தத்தின் முதல் பாகம் வரப்பெற்றோம். இதில் ஜயதேவர் இயற்றிய கீதகோவிந்தமும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் 62வது பீடபதியாயிருந்த ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளியற்றிய சிவகீதிமாலா என்பதும் எதிரெதிராக அச்சிடப்பட்டு மொழிபெயர்ப்பு, குறிப்புகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. புஸ்தகம் முழுவதும் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டிருக்கிறது. மூலம் ஸம்ஸ்கிருதத்திலிருப்பதைத் தெலுங்கு லிபியிலும், மொழிபெயர்ப்பு, குறிப்புகள், தெலுங்கு பாஷையிலும் இருக்கின்றன. இம்மாதிரி மொழிபெயர்த்து வெளியிட்டவரான ஸ்ரீ என். கே. வெங்கடேசம் பந்துலு அவர்கள் ஸநாதனதர்மத்திலும் சாஸ்த்ர விசாரங்களிலும் ஈடுபட்டவராய் நெடுநாளாக சர்க்கார் கலாசாலைகளில் ஆங்கில பாஷா போதகாசிரியராயிருந்து கொஞ்ச நாளைக்கு முன் பென்ஷன்பெற்று அனந்தப்பூரிலேயே ஸ்திரவாஸமாயிருந்துவருகிறார். இவர் இந்தப் புஸ்தகத்தைத்தான் ஆங்கிலத்திலெழுதிய முகவுரையுடனும் தற்காலம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் விளங்கிவரும் ஸ்ரீ சங்கராசார்யாள் அருளிய ஸ்ரீ முகத்துடனும் எல்லாருக்கும் சுலபமாகக்கிடைக்கும் விதமாய் இந்த பாகத்தை 12 அணு விலையிட்டு பதிப்பித்திருக்கிறார்.

கீதகோவிந்தத்தின் அழகைப்பற்றியும் சப்தார்த்தங்களின் மேன்மையைப்பற்றியும் அறியாதவர் யாருமிருக்கமாட்டாராகையால் அவற்றைப்பற்றி எழுதுவது அனாவசியம். ஜயதேவருடைய வழியை பின்பற்றி அதே விதமாக கிரந்தம் இயற்றியவர்கள் அனேகர். இவர்களைப்பற்றி சென்ற வருஷம் 'ஹிந்து' பேபரில் அநேகம் கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டன. இவ்விதமான காவ்யங்கள் செய்தவர்களில் ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதியவர்கள் ஒருவர். இவர்கள் எல்லா வகைகளிலும் கீதகோவிந்தத்தைப் பின்பற்றி (ஏகாம்ரநாத ரூபமான) பரமசிவன், பார்வதி இவர்களுடைய லீலைகளை வர்ணித்து 'சிவ கீதிமாலா' என்ற க்ரந்தத்தை இயற்றினார்கள். கீதகோவிந்தத்திலிருப்பதுபோல் ஒவ்வொரு பாகமும் எட்டு அடிகளையுடையதாயிருப்பதால் இதற்கு 'சிவாஷ்டபதி' என்றும் பெயருண்டு. இதுவும் பாடக்கூடிய விதமாய்ப் பல ராகங்களுடன் அமைக்கப்பெற்றிருக்கிறது.

இந்த 'சிவகீதி மாலா' என்ற கிரந்தத்தை முதன் முதலாக மன்னார்குடியிலிருக்கும் ஸம்ஸ்கிருத பண்டிதர் ப்ரம்ஹஸ்ரீ என். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் நாகரத்திலும், தமிழிலும் அச்சிட்டு வெளியிட்டார். இப்போது அதை ஸ்ரீமான் வெங்கடேசம் அவர்கள் தெலுங்கில் வெளியிட்டதில் மூல க்ரந்தமான கீதகோவிந்தத்தையும் சேர்த்து இரண்டையும் மொழிபெயர்த்து தனது குறிப்புகளில் அவ்விரண்டிற்குமுள்ள லக்ஷணங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். கீதகோவிந்தத்தில் ராதா மாதவர்களுடைய கேளிகளைப்பற்றிச் சொல்லியிருப்பதுபோல் சிவகீதிமாலையில் பார்வதீ பரமேசுவரர்களுடைய கேளிகளைப் பற்றி வர்ணிக்கப்பட்டிருந்த போதிலும் ஜயதேவர் ச்ருங்காரரஸத்தை ப்ரதானமாகக்கைக்கொண்டிருக்க, யதிச்ரேஷ்டாளான ஸ்ரீ சந்த்ரசேகரேந்திரர் ச்ருங்காரரஸத்திற்கு அவ்வளவாக ப்ராதான்யம் கொடுக்காமல் ஞானப்ரதாரயும் யோகீச்வராயுமிருக்கும் பரமசிவனுடைய குணங்களை முன்வைத்து வர்ணித்திருக்கிறார். ஆயினும் க்ரந்தமானது பார்வதீபரமேச்வரானுடைய ச்ருங்கார லீலைகளைப் பற்றிச் சொல்வதற்கு ஏற்பட்டதால் அந்த விஷயங்களையும் கீதகோவிந்தீய வர்ணனையையனுஸரித்து சொல்லப்பட்டிருக்கிறது. [அனேக இடங்களில் பதங்களின் சேர்க்கையே ஒரேமாதிரியாக அமைந்திருப்பது கவனிக்கத் தக்கது.] இப்படி இவ்விரண்டு கிரந்தங்களிலுள்ள ஒற்றுமைகளையும் பேதங்களையும் ஸ்ரீமான் வெங்கடேசம் அவர்கள் அழகாகவும் தெளிவாகவும் அங்கங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இப்போது வெளிவந்திருக்கும் பாகத்தில் கீதகோவிந்தத்தின் முதல் ஆறு அஷ்டபதிகளும் அவற்றிற்குச் சரியான சிவகீதமாலையின் அஷ்டபதிகளும் காணப்படுகின்றன. பாக்கிபாகங்கள் சீக்கிரம் வெளியாகுமென்று நம்புகிறோம். இம்மாதிரியான க்ரந்தத்தை தமிழ்மொழி பெயர்ப்புடனும் ஸ்ரீமான் வெங்கடேசம் அவர்களாவது வேறு எந்த பக்தர்களாவது வெளியிட்டால் தமிழ்மட்டும் தெரிந்தவர்களாயிருப்பவர்களுக்கு அத்யந்தம் உபகாரமாய் இருக்கும். ஸ்ரீமான் வெங்கடேசம் அவர்கள் இந்த புஸ்தகத்தை மொழிபெயர்த்து குறிப்புகளுடன் வெளியிட்டிருப்பதற்கு நம்முடைய நன்றியை சந்தோஷத்துடன் வெளியிடுகிறோம்.

G. V. G.

"ஸம்ஸ்கிருத ஸ்வபோதினீ"

(கிடைக்குமிடம் மானேஜர் ஸ்ரீ சென்னை ஆண்டாள் தனசேகர் நிதி, 109, சைனாபஜார் ரோட், ஜீ. டி. மதராஸ் விலை ரூ. 1–5–0)

இதில் அமரஸிம்ஹரியற்றிய "நாமலிங்கானுசாஸன"த்தின் முதலிரண்டு காண்டங்களை அவற்றில் வரும் பதங்களுக்கு தமிழ் அர்த்தத்துடன் ஸ்ரீமான் கே. ஈ. வேங்கடேச சர்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார். இதில் பெயற்சொல்கள் அடங்கிய பாகமானது அடங்கியிருக்கிறது. இடம்விட்டு இடத்திலிருந்த சில பெயர்களை அவற்றின் வகுப்பில் சேர்த்து தொகுக்கப்பட்டிருப்பது இதில் ஒருவிதமான சௌகர்யம் ஏற்பட்டாலும் அமரஸிம்ஹருடைய கிரந்தத்தின் சேர்த்தியானது பின்னப்பட்டிருப்பதாக அபிப்ராயம் கொள்ள இடமுண்டு.

அமரஸிம்ஹருடைய க்ரந்தம்மாதிரி எந்த பாஷையிலும் கிடையாதென்று தைர்யமாகச் சொல்லலாம். அதைப் பின்பற்றி ஸம்ஸ்க்ருதத்திலும் இதர பாஷைகளிலும் சில க்ரந்தங்களிருந்தபோதிலும் அவையெல்லாம் அமரர் முன் நிற்கும்படியானவை யல்லவென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டியது ஸம்ஸ்க்ருத பாஷைக்கு ஜயினர்களால் செய்யப்பட்டிருக்கும் உபகாரங்கள் மறக்க முடியாதவை. (அதேமாதிரி தமிழுக்கும் அவர்கள் பேருபகாரம் புரிந்திருக்கிறார்கள்.) அவற்றில் முக்யமானது அமரஸிம்ஹருடைய நாமலிங்கானுசாஸனம். பாஷ்யக்காரர்கள் முதலாக எல்லா க்ரந்த கர்த்தாக்களும் 'இத்யமர:' (இப்படி அமரர் சொல்லிருக்கிறார்) என்று அவரிடமிருந்து மேற்கோள்கள் காட்டாதவர் இல்லை. சுலோக ரூபமான நிகண்டுக்களில் அமாருடைய க்ரந்தமானது பதங்களின் சேர்க்கை யழகினாலும் அந்த சேர்க்கையிலுள்ள அம்சங்களின் விசேஷத்தினாலும் முதன்மை வாய்ந்தது. இதை மனப்பாடம் செய்யாத யாரையும் ஸம்ஸ்க்ருத பாஷையில் பாண்டித்ய முள்ளவராகக் கருத முடியாது. இப்பேர்ப்பட்ட உத்தமமான க்ரந்தத்தை நமது பாடசாலைகளில் கற்பிக்காமல் பெரியோர்களுக்குக்கூட புரியாத புஸ்தகங்களை சிறுவர்களுக்குக் கற்பித்துவருவது புத்திசாலித்தனமல்லாத காரியம். ஸம்ஸ்க்ருத எழுத்துக்களைத் தெரிந்தவுடனேயே அமரத்தை மனப்பாடம் செய்துவிட்டால், அப்போது அர்த்தம் தெரியாமல் கற்றுக்கொண்டாலும் பிறகு அது அத்யந்தம் உபகாரமாயிருக்கும். பிற்காலம் ஸம்ஸ்க்ருதம் பயில முயற்சிப்பவர்கள் தாங்கள் எளிதில் மனப்பாடம் பண்ணக்கூடிய வயதில் அமரத்தைக் கற்றுக்கொள்ளவில்லையே யென்ற வருத்தமடைபவர்கள் பலருண்டு. ஸ்ரீமான் வெங்கடேசசர்மா அவர்களுடைய இந்த கைங்யத்திலாவது அவ்விதமான குறை நமது பள்ளிக்கூடங்களில் நீக்கப்பெற்று சிறுவர்களால் எல்லோரும் அனுக்ரஹத்தினால் பாண்டித்யமடைய வழியேற்படுமென்று நம்புகிறோம்.

G. V. G.

காந்த மலர்

(கிடைக்குமிடம் E. S. ரெகுநாதையர், சோதிட பரிபாலனமடம் கொக்குவில் சிலோன்) விலை ரூ. 1—8—0

இலங்கையிலிருந்து வெளியாகும் சோதிட பரிபாலனியில் தொடர்ச்சியாய் வெளியான இந் நாவலே புஸ்தக ரூபமாய் வெளிவந்துள்ளது.

இந்நாவலில் காந்தமலர் என்னும் பெண்மணி தன் மைத்துனன் பணக்காரனாயிருந்த போதிலும், குணத்திற்சிறந்த லக்ஷ்மீகாந்தனை காதலித்து துஷ்டனான தன் மைத்துனனால் ஏற்பட்ட பல துன்பங்களுக்கிடையில் தன் கற்பைக்காத்து கடைசியில் தன் காதலனை மணந்து சுகமடைவதும், துஷ்டர்கள் தண்டனை யடைவதும் வெகு விரிவாக 216 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. நல்ல காகிதத்தில் சுத்தமாக பதிப்பிக்கப்பட்டு நேர்த்தியாய் பைண்ட் செய்யப்பட்டுள்ளது.

A. S.

செல்வரத்னம்.

(கிடைக்குமிடம் E. S. ரகுநாதையர் சோதிட பரிபாலன மடம், கொக்குவில், விலை ரூ. 1—0—0.

ஷை நாவலின் பிரதி ஒன்று கிடைக்கப் பெற்றோம். இது இலங்கையில் நிகழ்வதாக எழுதப்பட்டுள்ளது. இதில் செல்வரத்னம் என்பவனின் நண்பன் நடராஜா கொல்லப்படுதலும், அவனால் எழுதப்பட்டதாக கருதப்படும் கடிதத்தால் செல்வரத்னம் வஞ்சிக்கப் படுதலும், பல கஷ்டங்களுக்குட்பட்டு கொலை செய்தவரை கண்டுபிடிக்க செல்வரத்னம் காதலியை மணந்து சுகப்படுதலும் இனிமையாய் எழுதப்பட்டு மேலும், மேலும் படிக்க ஆவலுண்டாகிறது. நாவலில் விருப்பமுள்ளவர்க்கு இது இன்பமளிக்கக் கூடியது.

A. S.

ஈசுர வருஷ வாக்கிய பஞ்சாங்கம். வருஷப்பெயர் விளக்கம்.

யாழ்ப்பாணம் கொக்குவில் இரகுநாதையரவர்கள் தத்த புத்திரர் சிவராமலிங்கையரால் கணிக்கப்பெற்ற "ஈசுரவருஷ வாக்கிய பஞ்சாங்கம்" வரப்பெற்றனம். இவர் தில்லைத் தீக்ஷித பரம்பரையைச் சார்ந்து கூழங்கைச் சக்கிரவர்த்தியின் சமஸ்தான ஜோதிஷராக விளங்கிய ஆதி சைவப் பிராமணகுலத்தில் தோன்றியவர். பஞ்சாங்க வெளியீடிற்கென்றே தர்மசாஸனம் செய்து கொடுக்கப்பட்ட "இரகுநாதையர் சோதிடபரிபாலனமடத்தின்" பிரசுராலயத்திலிருந்து பிரசுரிக்கப்பட்டுள்ள இப் பஞ்சாங்கம் நல்ல கடிதத்தில் வாக்கிய முறைப்படி, கணிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திகர்களனைவருக்கும் அவசியம் வேண்டிய பல அங்கங்களை திரட்டி அமைக்கப் பெற்றுள்ளது. சோதிடர்களுக்கு பிரயோசனப்படுமான அனேக விஷயங்கள்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

215174

127

மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

இதில் காணப்படுவதுடன், விவசாயிகளுக் கவசியமான சுப முகூர்த்தங்கள் குறிப்பிடப் பட்டுள்ளது. சைவத் திருநக்ஷத்திரங்கள் கிரஹ நிர்மாண சுபவேலைகள், மற்றும் பல முக்கிய விஷயங்களை சிரமமின்றி உணரும் முறையிலுள்ள குறிப்புகள் பல உள்ளன. இத்துடன் 'வருஷப்பெயர் விளக்கம்' எனப் பெயர்கொடுக்கப்பட்ட இடைக்காடர் அருபது வருஷப்பலன் வெண்பாவும் புத்தக ரூபமாய் இரண்டணு விலையிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்தியர்களுக்கு இன்றியமையாத இப்பஞ்சாங்கம் நன்கு கணிக்கப்பட்டிருப்பதுடன் அனைவரும் வாங்கக்கூடிய முறையில் குறைந்த விலைக்கே வெளியிடப்பட்டுள்ளது.

C. N. G. சர்மா.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

திருக்குறள் கம்பராமாயண இலவச வகுப்புகள்.

சென்ற நான்குமாத காலமாக அகில இந்திய பிராஹ்மண மஹாசபை, சென்னை வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம் இவற்றின் சார்பாக சென்னையில் பல பேட்டைகளிலும் ஸைதாப்பேட்டை, ஸ்ரீ பெரும்பூதூர் முதலிய இடங்களில் தீவிர ஸநாதனதர்ம பிரசாரம் செய்துவந்ததாலும், சென்னைமாகாண ஸநாதனதர்ம மஹாநாட்டின் வெற்றிக்காக உழைத்துவந்ததாலும் நிறுத்தப்பட்டிருந்த தமிழ்ச்சங்கத்தின் திருக்குறள் கம்பராமாயண இலவச வகுப்புகளை காரியதரிசி சங்கம் காரியாலயத்தில் 11-2-37உ வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மறுபடியும் ஆரம்பிவித்தார். பொருட்பால், அறிவுடைமை அதிகாரம் முதற் குறளான "அறிவற்றங்காக்கும் கருவி" விளக்கப்பட்டது.

சங்கத்தலைவர் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் தமிழ் வரலாறு, தமிழின் சீர்மை, வேங்கட வெற்பன் பெருமை, தமிழின் தத்துவம், குமரித்தலைவர் பான்மை, கம்பர் கவி இன்பம், ஆழ்வார் அருமை, அகத்தியன் சேவை, மஹரிஷிகளும் காணாத படியை ஆழ்வார் கண்டமை, முதலிய அரிய விஷயங்களை நன்கு போதித்தார்.

அன்று விஜயஞ்செய்திருந்த பண்டித திருவாலி ராமாநுஜாச்சார்ஸ்வாமி கம்பர் கவியின் ஆழ்ந்த கருத்துக்களை பாலகாண்டம் சுந்தர காண்டம் சடகோபரந்தாதி இவற்றில் அழகான பாடல்களைப்பாடி ஸ்வாபதேசத்துடன் நன்கு விளக்கி கேட்டோர் அனைவரும் மனமுருகுமாறு செய்தார்.

ஸ்ரீமான் வி. துரைசாமி ஐயங்கார் தமிழின் இனிமையைப்பற்றி சற்று தெளிவித்தார்.

உங்களுக்கு பெரிய அதிர்ஷ்டம் வருகிறது. விட்டுவிடாதீர்கள்.

வைத்திய நிபுணர்களாலும் செய்யமுடியாத, அபூர்வசக்தியுள்ள அசல் ரசமணியை செய்து விட்டோம்.

பழனி டாக்டர் கே. எஸ். பதி அவர்களின் அபூர்வ ரசமணி

இன்றே ஆர்டருக்கு முந்துங்கள்! முந்துங்கள்.

இதன் பெருமையை எவராலும் அளவிட முடியாது.

ரசமணி

பெரியமகானால் இம்மணி கிடைத்தது.

இதை நீங்கள் அணிந்துகொண்டால், சகல கஷ்ட, நஷ்டங்களும் விலகி விடுகிறது. அதிர்ஷ்டம் பிறந்து செல்வம் உண்டாகிவிடும். தொழில் விருத்தியாகும். லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும். இடுப்பிலணிந்துகொண்டு இல்லற இன்ப ரகசியத்தில் ஆனந்திக்கலாம். பாலில் போட்டு சாப்பிடுவதால் இந்திரியம் கெட்டியாகி தாது புஷ்டியில் யானை பலம் உண்டாகும். துரிதஸ்கலிதம், இந்திரிய ஒழுக்கு, சொர்ப்பன ஸ்கலிதம் நீங்கும். க்ஷயம், காசம், மூலம், குஷ்டம் முதலிய அநேக வியாதிகள் மாயமாய் மறையும். இரவில் பயமின்றி போகலாம். பேய், பிசாசுகள், துஷ்டதேவதைகள் பயந்து ஓடிவிடும். வாயில் அடக்கிக்கொண்டால், சகல வசியமும், நினைத்த காரியம் அனுகூலமும் உண்டாகும். விஷக்கடிகள் நீங்கும் இதன் விலை ஒரு மணி ரூ. 25.

குறிப்பு:— இந்த விளம்பரத்தை குறிப்பிட்டு வரும் ஆர்டர்களுக்குத்தான் பிப்ரவரி 26உ வரை ஒருமணி ரூ. 7க்கு அனுப்புவோம். சில மணிகளே இருப்பதால் மணிகள் சிலவானபின் வரும் ஆர்டர்களை கவனிக்கமுடியாது. ஆர்டருக்கு முந்தினால்தான் மணி கிடைக்கும். உடனே ஆர்டர் அனுப்புங்கள்.

F. M. S. மலாய்நாட்டினர் ரூ. 12 முன் பணமாக அனுப்பிவிடவேண்டும்.

கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி. S. I. (ஆ. த)

காரியதரிசி கூறிய வந்தனோபசாரத்துடன் ஸபை இரவு 9 மணிக்கு முடிந்தது.

பிரதி செவ்வாய் வியாழன்களில் கிரமமாக வகுப்புகள்மேல் நடைபெறும்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

வைதிக தர்ம ஸங்கம்.

(தமிழ்நாடு)

தஞ்சைஜில்லா.

மேற்படி ஸங்க தர்மப்ரசாரவிஷயமாய் இந்தவாரம் திருவாலங்காடு கிராமத்துக்கு சென்றேன். இவ்வூர் சுமார் 400வருஷங்களுக்கு முன் கங்காதர வாஜபேயர் என்கிற ஒரு மகா வித்வானுக்கு ஸர்வமான்யமாய் தஞ்சை மகாராஜாவால் அளிக்கப்பட்டு வித்வத் ஸந்ததியார்களால் பிரித்துக்கொண்டு இப்போது அனுபவிக்கப்பட்டு வருகிறது. மூலபுருஷரால் ஸ்தாபிக்கப்பட்ட வடாரண்யேசுவரர் தேவாலயம் சமீபத்தில் ரிடையர்டு ஜட்ஜ் கிருஷ்ணமூர்த்தி வாஜபேயரால் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் செய்து பூஜைகள் நன்றாய் நடந்துவருகிறது. இவ்வூரில் கொஞ்சகாலம் வரையில் ஒரு பெரிய ஸமஸ்கிருதபுத்தகசாலை இருந்து அடையார் புஸ்தகசாலையுடன் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது. தற்காலம் இக் கிராமத்தில் ரிடையர்டு ஜட்ஜ் கிருஷ்ணமூர்த்தி வாஜபேயர், ரிடையர்டு பிரின்ஸிபால் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய அத்வைதசபா முக்கியபண்டிதர் யக்ஞசுவாமி சாஸ்திரிகள், வித்வான் ராமசேஷ சாஸ்திரிகள் முதலியோர் ஸ்திரமாய் வசித்து வருகிறார்கள். இன்னும் லௌகில சம்பத்தும் வைதிக ச்ரத்தையும் பரம்பரையில் உள்ள அநேக கிருஹஸ்தர்கள் இருக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து ஒருதர்ம சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு தர்ம, அர்த்த, காம மோக்ஷ சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைய ஏற்பட்டிருக்கும் சாஸ்திரீய சாதனங்களை அனுஷ்டித்து மேன்மேல் ச்ரேயஸ் அடையவேண்டும் என்பது பலபேர் கோரிக்கை. புதுவருஷப் பிறப்பன்று இந்த நற்காரியம் ஆரம்பிக்கப்படுமென்று நம்புகிறேன்.

எஸ். சுவாமிநாத சாஸ்திரிகள்.

உயர்ந்த புஸ்தகங்கள்.

வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரலிபியில்)

தின்பேப்பர்	5	0	0
திக்பேபர்	4	0	0
2 த்வாதச உபநிஷத் (தமிழில்)	3	0	0

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்

டவுன் ஹைஸ்கூல்ரோட், கும்பகோணம்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road,
... Published by ... ikachariar, and S. Kalyanasundaram.

அக்ஷயதர்மம்

4- 3-1937
4 ஸ
22 9

215175

215175

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22	❁	கும்பகோணம். கலி 5038 தாது-ஷு மாசி-மீ 21உ 1937-ஷு மார்ச்-மீ 4உ	❁	ஸ 9

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதி [illegible]

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

சென்னை சட்டஸபை எலெக்ஷன் முடிவு.

காங்கிரஸுக்கு 159 ஸ்தானங்கள்.

நமது மாகாணத்தில் ராஜாங்கஸபை அஸம்பிளிஸபை இரண்டிற்கும் நடந்த எலெக்ஷன் முடிவு பூர்ணமாக வெளிப்பட்டுவிட்டது. இரு ஸபைகளிலும் காங்கிரஸுக்கு மெஜாரிடி கிடைத்திருக்கிறது.

அஸம்பிளியில் மொத்தம் 215 ஸ்தானங்களிருப்பதில் காங்கிரஸுக்கு 154 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. ஜஸ்டிஸுக்கு 16 ஸ்தானங்களே கிடைத்தன. ஸ்வேச்சைவாதிகள் 16 பேர்களும் வேறு சிறிய கக்ஷியினர் சிலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த எலெக்ஷனில் ஜஸ்டிஸ்கக்ஷியானது அடியோடு அபஜயம் அடைந்துவிட்டது. பொப்பிலி ராஜா, ஸர். பாத்ரோ, சட்டஸபைத்தலைவரான ஸ்ரீமான் ராமசந்திரசெட்டி பி. டி. ராஜன், எஸ். முத்தையமுதலியார், பித்தாபுரம் ராஜா (ஜனநாயகம்) போன்ற அநேக பிரபலஸ்தர்கள் தோல்வியடைந்தனர்.

உத்யோகம் ஏற்கும் விஷயம்.

வார்தாவில் விவாதம்.
அநுகூலமான முடிவு?

இந்தியாவில் பொதுத்தேர்தல் முடிந்து காங்கிரஸுக்குப் பல மாகாணங்களில் மெஜாரிடி கிடைத்துவிட்டபடியால் மந்திரி பதவிவஹிக்கும் விஷயமே அடுத்தபடியாக ஜனங்களின் மனதைப்பற்றி நிற்கின்றது.

வார்தாவில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டத்தில் இவ்விஷயம் முடிவு செய்யப்படவில்லையாயினும், தலைவர்கள் ஒன்றுசேர்ந்து ஒருவித முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது காங்கிரஸுக்கு மெஜாரிடி கிடைத்துள்ள மாகாணங்களில் கடுமையான நிபந்தனைக்குள்பட்டுக் காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி வஹிக்கலாமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாம். ஆயினும் இது அகில இந்தியக் கமிட்டியாலேயே முடிவாகத் தீர்மானிக்கப்படும்.

அநேக மாகாணங்களிலும் பதவி ஏற்புக்கு விசேஷ ஆதரவு இருந்துவருதாகத் தெரிகிறது.

காரியக்கமிட்டியானது, வோட்டர்களுக்கு நன்றி செலுத்தியும் சட்டஸபைகளில் காங்கிரஸ்வாதிகள் ராஜவிச்வாஸப் பிரமாணம் செய்வது ஸ்வேச்சைக் கோரிக்கைக்கு மீறியதல்லவென்றும் வேறு சில தீர்மானங்களும் செய்துவிட்டுக் கலைந்தது.

சென்னையில் புதிய மந்திரிகள்.

ஒரு ஹேஷ்யம்.

காங்கிரஸ்காரர் மந்திரிபதவியேற்க அநுமதிகிடைத்தால் சென்னையில் யார் யார் அதை வஹிக்கக்கூடுமென்பதைப்பற்றிப் பத்திரிகைகளில் ஹேஷ்யம் செய்யப்படுகிறது.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் முதல் மந்திரியாக இருப்பாராம். அவருக்கு உதவியாக ஸ்ரீமான்கள், வி. வி. கிரி, ஏ. பி. ஷெட்டி, ஸி. கே. வர்க்கி, டாக்டர் ஸுப்பராயன், ஜனாப் ஹாருப் ஹாஸன், ஐ. முனிஸாமிபிள்ளை, டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் முதலியவர்கள் மந்திரிகளாக நியமிக்கப்படக்கூடும். அஸம்பிளிக்கு ஸ்ரீமான் பிரகாசமும், ராஜாங்க ஸபைக்கு ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியாரும் தலைவர்களாக வரக்கூடும்.

மந்திரிகள் 500 ரூபாய்க்குமேல் சம்பளம் பெறமாட்டார்கள். காங்கிரஸ் மந்திரிகள் ஏற்பட்டால் கோடை வாஸத்திற்காக கவர்ன்மெண்ட் உதகமண்டலம்போவது நிறுத்தப்படும். [illegible]

விவாஹ நிர்ப்பந்தம்.

ஆஸ்திரியாவில் ஒரு ஸம்பவம்.

ஆஸ்திரியாவில் சான்ஸலராக இருப்பவர் தாம் ஒரு ஸ்திரீயை விவாஹம் செய்துக் கொள்ள விரும்பினார். ஆனால் அந்த ஸ்திரீ ஏற்கனவே பலருக்கு மனைவியாயிருந்து விவாஹரத்து செய்துகொண்டவள். இவளை சான்ஸலர் மறுபடி மணப்பதில் அங்கு விசேஷ ஆக்ஷேபம் ஏற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டில் அரசருக்கு ஸமமாக இருக்கும் சான்ஸலர் இந்தமாதிரி விவாஹரத்து கொண்ட ஸ்திரீயை மணக்கக்கூடாதென்பது ஜனங்களின் பிடிவாதம்.

ஆதலால் அவர் தமது உத்யோகத்தைவிட்டு விலகித் தமது மனோரதப்படி விவாஹம் செய்துக்கொள்ள உத்தேசிக்கிறாராம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுநீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஜிட் ஜெம்லெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம், டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

தமிழ்நாடு வைதிக தர்மஸங்கம்.

தர்மப்ரசாரம்.

கும்பகோணத்தில் சென்ற பல வருஷங்களால் மக உத்ஸவத்தை முன்னிட்டு பிரதி வருஷம் நடத்தப்பட்டுவரும் ஆஸ்திக தர்ம வேதாபிமானஸம் மேளனம் இந்த வருஷம் சென்ற புதன்கிழமை கும்பேசுவரஸ்வாமி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதியில் மாஜி இஞ்ஜினீர் S. சுவாமிநாத சாஸ்திரிகளால் கூட்டப்பட்டது. 5 வேதகோஷ்டி ப்ராம்மணர்களும் இன்னும் பல லௌகிக வைதிக வித்வான்களும் விஜயம் செய்தனர். சபை கூடியவுடன் முதலில் கடலங்குடித்தெரு K. S. மங்களம் என்ற சிறு பெண்ணால் தேவாரம், திருவாசகம், ராமாயணம் முதலியவைகளிலிருந்து ஸ்தோத்ரங்கள் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் ஒப்புவிக்கப்பட்டது.

பிறகு தர்ம சங்க காரியதரிசி எஸ். சுவாமிநாத சாஸ்திரிகள் முன்னுரையில் வைதிக ஹிந்து தர்மம் முன்காலத்தில் உலகம் முழுவதும் பரவியிருந்ததென்றும் இதர மதங்களெல்லாம் ஹிந்து மதத்தின் போலி மாறுபாடுகளென்றும் அதற்கு நிதர்சனமாக இப்பவும் ஸம்ஸ்க்ருத பெயர்களோ ஈஜிப்ட், இடாலி, பெர்சியா, ஈரோப், ஆபிரிக்கா முதலிய கண்டங்களிலும் இப்போதும் அபப்ரம்சமாய் மாறிசிதைந்து வழங்கி வருகின்றவன என்றும், இதற்குஉதாஹரணமாய் அத்ரிபட்டணம், காச்யபக் கடல் கௌசிகா, தன, தன்பா, தனிஷ்ட, நீல, ப்ராண, அபான், வியான, த்ரிபுரீ, த்ரயீ, ஸ்மரண கர்தம, சுங்கவம்சம், கங்கா, சடகூஸ, ஸுமேரு, ஸுவ்ருத, முதலிய அனேக நகர நதிகள், மலைகளின் பெயர்களை எடுத்துக்காட்டி. இப்படி பூகோளம் முழுவதும் பரவி வியாபித்திருந்த வைதிக ஹிந்து மதமும் காலக்ரமேண நம்முடைய அச்ரத்தையினாலும் சிரத்தை குறைவினாலும் தற்காலமும் சுருங்கிக் கிடைப்பது நமக்கு எல்லோரும் தீராத்துயரத்தையும் கவலையும் அவமானத்தையும் உண்டுபண்ண வேண்டும். இனிமேலாவது ஹிந்துமத ஆபிமானமுள்ள ஒவ்வொருவரும் தனியாயும் சங்கங்கள் மூலமாயும் நம்முடைய விலையில்லாத வேத தர்ம மஹிமை ரஹஸ்யங்களை ஆராய்ந்து உணர்ந்து அகமகிழ்ந்து பிறருக்கும் அங்கங்கேயுரைத்து உபன்யசித்து வரவேண்டும். இப்படிச் செய்வதற்கு சங்கங்களும் சம்மேளனமும் தர்ம பிரசாரமும் மிக்க அவச்யமென்றும் ஆர்ய ஸமாஜத்தினின்று நாம் அக்னி உபாசனமும் வேதப் பாராட்டலும் கைப்பிடிக்க வேண்டுமென்றும், த்யாஸாபிகல் கூட்டத்திலிருந்து Orgnisahin அல்லது பல சபைகளை அமைப்பித்துக் கொள்வதையும் பௌத்தர்களிடமிருந்து அடிக்கடி சங்கம் கூடுவதும் தர்மப்ரசாரம் செய்வதையும் கிருஸ்தவர்களிடமிருந்து பரோபகாரமாய் ப்ரசாரவேலையும் ஆவல் உத்ஸாகத்துடன் நாம் ஹிந்துக்களெல்லோரும் உடனே கைக்கொண்டு இடைவிடாது செய்தும் செய்வித்தும் வரவேண்டுமென்றும் இன்னும் பல விஷயங்களை விவரமாய் எடுத்துக் கூறிவிட்டு பிறகு மன்னார்குடி வேம்புசாஸ்திரிகள் அக்ராசனம் வகிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அப்படியே பிரும்மஸ்ரீ வேம்பு ராமாயண சாஸ்திரிகள் அவர்கள் ஒப்புக்கொண்டு தர்மத்தின் ஸ்வரூபம் (அவசியம்) நிதர்சனம் முதலியவற்றைப் பற்றி ராமாயணத்திலிருந்து வெகு அழகாய் எடுத்து நிரூபித்து ஜடாயுவைப் போல் ஒவ்வொருவரும் பிராணனைக்கொடுத்து கூட தர்ம ரக்ஷணம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார்.

பிறகு சேங்காலிபுரம் வித்வான் வைத்யநாத சாஸ்திரிகள் பட்டினத்தில் சமீபத்தில் நடந்த ஸநாதன தர்ம மகாநாடு விஷயங்களை எடுத்துச் சொல்லி லௌகிகர் உதவிக்காகாத்திராமலே தர்மப்ரசாரத்தில் வைதிக சிரோமணிகள் தாங்களே முயற்சிகொண்டு ஈடுபடவேண்டுமென்று கூறினார்,

பின்பு கும்பகோணம் பச்சயப்ப முதலி தெருவக்கீல்எஸ்.கிருஷ்ணஸ்வாமிஅய்யங்கார் தற்காலம் தர்ம, இடையூறுகளை தன் அனுபவத்திலிருந்து எடுத்துக்கூறி தர்மப்ரசார வேலையில் தானும் கைங்கர்யம் செய்யத் தயாராயிருப்பதாய் மொழிந்தனர்.

கடைசியில் ராமானுஜ தாதாசாரியார்ஸ்வாமிகள் தற்காலம் பொது ஜனங்களுக்கு ஆர்ய ரக்ஷணத்தில் இருக்கும் அச்ரத்தையை மிகவும் உணர்ச்சியுடன் எடுத்துக் கூறி எல்லோரும் க்ஷத்ரிய தர்மத்தை ஆபத்து தர்மமாய் அவலம்பித்து மறுபடியும் ஹிந்துதர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்றும் இப்படியேதான் முன்காலத்தில் வஸிஷ்டர் வித்யாரண்யர் முதலிய மகரிஷிகள் செய்திருக்கிறார்களென்றும் இதுவே ஹிந்துமத ஸம்ரக்ஷணை சாஸ்திரீய ஸம்ப்ரதாயமென்றும் சொல்லி எல்லோரையும் அப்படியே உடனே செய்யும்படி கேட்டுக்கொண்டனர்.

அப்பொழுது திருக்கருக்காவூர் டி. எல். சுப்பையர் கிருஷ்ணராஜபும் ஸேராயாகத்திற்காக போயிருப்பதாகவும் வழக்கம்போல் இந்த வருஷாந்திரக் கூட்டத்திற்கு வரமுடியாததற்காக அனுதாபப்படுவதாயும் சபைக்குத் தெரிவிக்கப்பட்டது.

பின்பு சுவாமிநாத சாஸ்திரிகளால் சபைக்கு வந்திருந்த ம. ம. கிருஷ்ணமாசார்ஸ்வாமி முதலிய எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 6-30க்கு சந்த்யாகாலமானதால் மங்களத்துடன் சபை முடிக்கப்பட்டது.

நமது நிருபர்.

புதுவரவு செலவுதிட்டம்.

இந்தியா கவர்ன்மெண்ட் புதுவரவு செலவு திட்டம் இந்தியா சட்டஸபையில் ஆஜர் செய்யப்பட்டது. பொக்கிஷ மெம்பர் அதை ஆதரித்துப் பிரஸங்கம் செய்தார். வெள்ளிக்கு இறக்குமதித் தீர்வை 1 அணு அதிகப்பட்டிருக்கிறது. உள்நாட்டுச் சர்க்கரைக்கும் எதிர்வரி சிறிது அதிகம் போடப்பட்டிருக்கிறது. புர்போஸ்டின் கட்டணம் முக்காலணுவாக இருந்ததைமாற்றி $2\frac{1}{2}$ தோலாவரை அரையணு கட்டணம் போதுமென்று திருத்தப்பட்டிருக்கிறது. பார்ஸல் கட்டணம் 4 அணுவாக உயர்த்தப்பட்டுவிட்டது.

கார்டுவிலையைச் குறைப்பதான ஆலோசனையே இல்லையென்று தெரிகிறது.

இந்தியா சட்டஸபை.

காங்கிரஸ்காரர் வெளியேற்றம்.

பொக்கிஷ மெம்பர்மீது கோபம்.

இந்தியா சட்டஸபையில் வரவு, செலவு திட்டத்தைப்பற்றி பொக்கிஷ மெம்பர் பேசிவருகையில் உப்புவரி விஷயமாக காங்கிரஸ் மெம்பர்களைப் பரிஹாஸமாகப் பேசியதை ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஆக்ஷேபித்து அதை வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றார். அக்ராஸநாதிபதியும் வாபீஸ் வாங்கவேண்டியது அவச்யமென்று தீர்ப்புக்கூறினார். ஆயினும் பொக்கிஷமெம்பர் ஒரு பதத்தை யோஜித்துப் பிரயோகித்துத் திருத்திக்கொள்ளுவதாகக் கூறினார். ஆயினும் காங்கிரஸ்காரர்கள் உடனே வாபீஸ்பெறவேண்டுமென்று வற்புறுத்தியபடி பயன்படாததால் அவர்கள் யாவரும் இதை கண்டிக்கும் நோக்கத்துடன் ஸபையைவிட்டு வெளியேறிப்போனார்கள்.

WONDERFUL PREDICTIONS
AND ACCURATE LIFE READING.

Simply write your questions clearly and send them on to us well packed in a cover. Correct replies are sent by next post. Answers to prashnas and annual Life reading are our specialities. Please omit questions relating to theft and Government. Kindly mark the exact time of your writing or of your birth and dade.

	Rs. As. Ps.		Rs. As. Ps.
FEES: 1 TO 4 QUESTIONS ...	2 0 0	1 YEAR LIFE READING IN 8 PERIODS ...	5 0 0
ABOVE 4, EACH QUERY ...	0 8 0	ANY SINGLE DHASA WISH 9 SUB-PERIODS	12 0 0

OPINIONS.

P. H. Sundaram Esq., B.A., B.L.,
Dt. Munsif Kulitalai. 7-12-36
"I am quite satisfied with the accuracy of your predictions and your remarkable grasp of the science".

M. N. Choudhury, Lt. col. I.M.S.,
Ag. Surgeon General Madras.
"You predicted that I would get Rs. 35,000/- I practically got the sum unexpectedly. Your predictions for the period are practically correct."

B. K. Chaturvedi Bar-at-Law Suratgar,
Dt. Judge, Bikaner State.
"Daibagya, T. V. Jayarama Sastry of Teppakulam has been known to me for some time past and I can readily say that his predictions are both wonderful and accurate".

K. Kuppusami M.A., F.C.S.
Acct. General Madras.
"The accuracy of your predictions is marvellous. My transfer and promtion took place exactly on the day fixed by you'

Brihmasri T. V. JAYARAMA SASTRIGAL, Director,
Venus Astrological Bureau, Teppakulam P. O: TRICHY.

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமம்

(25—2—37 தொடர்ச்சி)

3. அல்லது, 'வாமஜ்யேஷ்டா புராணும் து ஜனனீ த்ரிபுராம்பிகா |' என்ற வசனத்தின்படி வாமாதி சக்திகளின் ஜனனீயென்றும் சொல்லலாம். வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்ற சக்திகள் மூவரும் புருஷ ரூபத்தில் முறையே ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ரர்களாகவும், அவர்களுடைய சக்திகளாகிய பாரதீ, லக்ஷ்மீ, ருத்ராணிகளாகவும் ஞான, இச்சா, க்ரியா என்ற சக்தி ரூபிணிகளாகவும், ஸத்வ ரஜஸ்தம, ப்ரதானைகளாகவும் இருப்பதாகச் சொல்லப்படும். இவர்களுடைய ஜனனீயாகிய அம்பாள் இவர்களுடைய ஸமஷ்டி ரூபமாகவும் சாந்தா என்ற சக்திரூபமாயும் அம்பிகா என்ற பெயருடனிருப்பதாகச் சொல்லப்படும். ஸ்ரீ சக்ரத்திலிருக்கும் தேவதைகளாகச் சொல்லுகையில் இவர்கள் மூவரும் அஷ்டமாவரணத்திலிருக்கும் காமேச்வரீ, வஜ்ரேச்வரீ, பகமாலினீ என்ற தேவதைகளாயும் அம்பாள் நவமாவரணமான பிந்துவிலிருக்கும் மஹாத்ரிபுரஸுந்தரியாகவும் இருப்பதாகச் சொல்லப்படும்.

'ஏஷா ஸா பரமா சக்தி: ஏகைவ பரமேச்வரீ |
த்ரிபுரா த்ரிவிதா தேவி ப்ரம்ஹ விஷ்ணவீச ரூபிணீ ||
ஞானசக்தி: க்ரியாசக்தி: இச்சாசக்த்யாத்மிகா ப்ரியே |
த்ரைலோக்யம் ஸம்ஸ்ருஜத்யேஷா த்ரிபுரா பரிகீர்த்யதே ||'
(வாமகேச்வர தந்த்ரம்)

976

தசமுத்ரா ஸமாராத்யா

பத்துவிதமான முத்ரைகளால் நன்றாய் ஆராதிக்கப்பட்டவள்.

1. இவற்றின் பெயர்கள் ஸம்க்ஷோபண, த்ராவண, ஆகர்ஷண, வச்ய, உன்மாதன, மஹாங்குச, கேசரீ, பீஜ, யோனி, த்ரிகண்டா என்பவை. இவை பூஜாகாலத்தில் செய்யவேண்டியவை. இவற்றின் லக்ஷணங்கள் தந்த்ரராஜம், வாமகேச்வர தந்த்ரம் முதலியவற்றில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவைகளைப்பற்றியும் அவைகளை எப்படிச் செய்வது, எந்தெந்த ஸமயங்களில் செய்வது என்பதைப்பற்றியும் குருமுகமாகவே தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யம். பொதுவாகச் சொல்லுகையில் இரு கைகளினுடைய விரல்களெல்லாவற்றையும் உபயோகப்படுத்தி, இரு கைகளையும் சேர்த்தாற்போல் ஸமானரூபமாக ப்ரதிமுத்ரையையும் செய்ய வேண்டியது. ஒவ்வொரு கையிலுமுள்ள ஐந்து விரல்களும் பஞ்சபூதங்களைக் குறிக்குமென்றும், வலது கையும் (சரீரத்தின்) அந்தப் பக்கமுமே ப்ரகாசாம்சமான சிவஸ்வரூபமென்றும் இடது கையும் (சரீரத்தின்) அந்தப் பக்கமுமே விமர்சாம்சமான சக்தி ஸ்வரூபமென்றும் சொல்லப்படும். ஆகவே, அந்தந்த முத்ரையில் கைகளைச் சேர்த்துக்காட்டும்போது சிவசக்தி ஸாமரஸ்ய ரூபமாக இருந்து அவர்கள் ஜகத்தைப்பற்றிச்செய்யும் ஸ்ருஷ்ட்யாதி க்ருத்யங்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

2. லோகத்தில் ஜனங்கள் ஸம்பாஷிக்கும்போது அவர்கள் கைகளால் காட்டும் ஸம்ஜ்ஞைகள் அவரவர்களுடைய மனோபாவத்தை வெளிப்படுத்துவதை நாம் ஸாதாரணமாய்ப் பார்க்கிறோம். அதே மாதிரி, முத்ரைகளைக் காட்டுவதால் தேவதைகளுக்கு அந்தந்த பாவமானது ஏற்பட்டு பக்தர்களிடத்தில் பூர்ணமான அனுக்ரஹமேற்படும். இவற்றை ஸரியாகச்செய்தால் தேவதைக்கு ஸந்தோஷம் ஏற்படுவதுபோல், தவறாகச்செய்தால் கோபம்ஏற்படுமென்றும்சொல்லப்படுமாதலால் அவற்றை ஸரியாகச்செய்வது மிகவும் கவனத்துடன் (குருமுகமாக) தெரிந்துகொள்ளவேண்டியது. முதம்—ஸந்தோஷத்தை, ராதி—கொடுக்கிறது, உண்டுபண்ணுகிறது, என்பதால் முத்ரையென்று பதம் ஏற்படுகிறது.

'ஸ்வல்ப பேதாத் கோபஹர்ஷௌ ப்ராணினாம் ஜனயத்யத: |
தேனைவ ஸர்வமுத்ராணாம் முத்ரா ஹர்ஷப்ரதா மதா |
பூஜா காலே தர்சனீயா முத்ராஸ்தா: ஸர்வதா சிவே ||'
(தந்த்ர ராஜம்)

3. முத்ரைகளுக்கு அதனின் ரசனை (செய்வது), மந்த்ர, தத்வங்களையொட்டி ஸ்தூல, ஸூக்ஷ்ம, பரா என்ற அர்த்தபேதங்களுண்டு.

'முத்ரா: ஸ்யுஸ் த்ரிவிதா தேவி ரசனா மந்த்ர தத்வத: |
ஸ்தூல ஸூக்ஷ்ம பராக்யாதா தத்த்ரைவித்யம் ச்ருணு ப்ரியே ||'
(தந்த்ர ராஜம்)

அவற்றிற்கு தனித்தனியான பீஜாக்ஷரங்களுமுண்டு.

4. ஸ்ரீ சக்ரத்திய நவாவரண பூஜையின்போது அந்தந்த ஆவரண பூஜையின் கடைசியில் இம்முத்ரைகள் காட்டப்படுவது வழக்கம். முதலாவது ஆவரணமாகிய த்ரைலோக்ய மோஹன சக்ர பூஜையின் கடைசியில் ஸர்வஸம்க்ஷோபிணீ முத்ரையையும் அதிலிருந்து ஆரோஹணக்ரமத்தில் ஆவரணங்களைப் பூஜிப்பதில் ஸர்வவித்ராவிணீ முதலாக இருக்கும் முத்ரைகளை க்ரமமாகக் காட்ட வேண்டும். கடைசியாகிய ஸர்வானந்தமய சக்ரத்தின் பூஜையின் அந்தத்தில் யோனிமுத்ரையைக் காட்டவேண்டும். இந்த ஒன்பது முத்ரைகளின் ஸமஷ்டியான ரூபம் த்ரிகண்டாமுத்ரை.

'முத்ராऽऽக்யா ஸா யதா ஸம்வித் அம்பிகா த்ரிகலாமயீ |
த்ரிகண்டா ரூபமாபன்னா ஸதா ஸன்னிதி காரிணீ |
ஸர்வஸ்ய சக்ரராஜஸ்ய வ்யாபிகா பரிகீர்த்திதா ||'
(யோகினி தந்த்ரம்)

978

த்ரிபுராஸ்ரீ வசம்கரீ

த்ரிபுராஸ்ரீ தேவியைத் தன் வசப்படுத்துகிறவள்.

1. சக்ரத்தின் ஐந்தாவது சக்ரமாகிய ஸர்வார்த்தஸாதக சக்ரத்தின் அதிஷ்டான தேவதையின் பெயர் த்ரிபுராஸ்ரீ.

'ஸர்வார்த்த ஸாதகாக்யே சக்ரேऽஸ்மின் ஸமஸ்த பல [தாத்ரீ |
த்ரிபுராஸ்ரீர் மம குசலம் திசதாத் உத்தீர்ண யோகினீ ஸேவ்[யா ||'
(லலிதாஸ்தவரத்னம்)

979

ஞானமுத்ரா

ஞானமுத்ரையின் ரூபமாயிருப்பவள்.

1. ஞான முத்ரையென்பது சின் முத்ரை. வலது கை கட்டைவிரல், ஆள்காட்டிவிரல் இவற்றின் நுனிகளைச் சேர்ப்பதினால் ஏற்படுவது. ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியை இந்த முத்ரையோடிருப்பதாக த்யானம் செய்வது வழக்கம்.

2. அல்லது, ஞானத்தினால் ஸந்தோஷத்தைக் கொடுப்பவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, ஞானம்—சித்அம்சம், முதம்—ஆனந்தாம்சம், இவையிரண்டையும் மறைக்கிறவள் என்றும் சொல்லலாம்.

980

ஞானகம்யா

ஞானத்தினால் அடையப்படுகிறவள்.

1. அம்பிகையினுடைய நிஷ்களமான ரூபமானது ஞானத்தினால் மட்டும் அடையப்பெறும் என்பதாக (அம்பிகையால்) கூர்ம புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யத் து மே நிஷ்களம் ரூபம் சின் மாத்ரம் கேவலம் சிவம் |
ஸர்வோபாதி விநிர்முக்தம் அனந்தம் அம்ருதம் பரம் ||
ஞானேனைகேன தல்லப்யம் க்லேசேன பரமம் பதம் |
ஞானமேவ ப்ரபச்யந்தோ மாமேவ ப்ரவிசந்தி தே ||'

981

ஞான ஜ்ஞேய ஸ்வரூபிணீ

ஞானம், ஜ்ஞேயம் இவற்றின் ஸ்வரூபமாயிருப்பவள்.

1. ஞானமென்பது அறிவு. ஜ்ஞேயம் என்பது அறியப்படும் பொருள். இவ்விரண்டும் அம்பாளுடைய ரூபமென்பதாக இங்கு சொல்லப்பட்டது. இதையே த்ருக், த்ருசய மென்றும் சொல்லப்படும்.

2. அல்லது, ஞான—ஞானத்தினால், ஜ்ஞேய—அறியக்கூடிய ஸ்வரூபத்தையுடையவளென்றும் சொல்லலாம்.

982

யோனி முத்ரா

யோனிமுத்ரையின் ரூபமாயிருப்பவள்.

1. மேலே சொல்லப்பட்ட தசமுத்ரைகளில் யோனி முத்ரையென்பது ஒன்பதாவது. இதையே முத்ரைகளில் ப்ரதமமென்று சொல்லப்படும். இது அம்பாளுடைய ஸ்வரூபமென்றும் இதிலிருந்து மற்ற முத்ரைகள் உண்டாயினவென்றும்

'ஏகா சைஷா மஹா முத்ரா யோனிமுத்ராத்வமாகதா |
தயா விபக்த: ஸ்வாத்மா து ஸம்க்ஷோபாதி ப்ரபேதத: ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி பாஸ்கரராயருடைய ஸேது பந்தத்தில் பார்க்கவும்.

2. அல்லது, யோனியில் ஸந்தோஷத்தைக் கொடுப்பவள் என்று சொல்லலாம்.

3. அல்லது, யோனியையே ஆச்சாதிகமாக (மறைவாக) உடைய பிந்துவின் ரூபமாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

4. அல்லது, குதம், மேட்ரம் இவற்றின் நடுவுக்கு யோனியென்று பெயர். அந்த இடத்தின் ஸம்பந்தமாகச் செய்யப்படும் முத்ரையானது மந்த்ரங்களின் தோஷங்களைப் போக்குவதற்காகச் செய்வது. இதைப்பற்றி குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது

983

த்ரிகண்டேசீ

த்ரிகண்டா முத்ரையின் ஈச்வரியாக இருப்பவள்.

1. த்ரிகண்டா முத்ரையென்பது மேலேசொல்லிய தசமுத்ரைகளில் பத்தாவது. இதையே மஹாயோனி முத்ரையென்று சொல்லப்படும்.

'கனிஷ்டாங்குஷ்ட ஸம்ச்லேஷா மஹாயோனிஸ் த்ரிகண்[டிகா |'
(தந்த்ர ராஜம்)

2. அல்லது, ஸ்ரீ வித்யையின் ஸோம, ஸூர்ய, அக்னி கண்டங்களென்ற மூன்று கண்டங்களின் அதிதேவதையென்றும் சொல்லலாம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

தாது-ஹு மாசி-மீ 21உ

காங்கிரஸ்காரர்களின் பொறுப்பு என்ன ?

இந்தியாவில் சட்டஸபை எலெக்ஷன் முடிந்துவிட்டது. அநேக மாகாணங்களில் காங்கிரஸ் கக்ஷிக்கு மெஜாரிடி ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. புதிய அமைப்பின்படி பார்த்தால் இந்தியாதேசத்தின் பெரும்பாகம் காங்கிரஸ் ஆளுகைக்கு உள்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸ்திதியில் காங்கிரஸ் வாதிகளின் பொறுப்பு மிக அதிகமாயிருக்கிறது. தேச ஜனங்கள் இதுவரை இருந்துவந்த ஆக்ஷிமுறையில் அதிருப்தியடைந்து, காங்கிரஸ் ஆக்ஷியின் தன்மையை பரீக்ஷிக்க அதிகாரத்தை அவர்களுக்கு ஒரு ஸந்தர்ப்பத்தைக் கொடுத்திருப்பதாகவே எலெக்ஷன் முடிவினால் தெரிகிறது.

ஆதலால் காங்கிரஸ் தலைவர்கள் வெகு ஜாக்கிரதையாகவும் புத்திசாலித்தனமாகவும் இச்சமயத்தில் நடந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். நமது மாகாணத்தைப்பற்றிய வரையில் பொது ஜனங்களுக்கு மிக முக்யமான அநேகதேவைகள் இருந்துவருகின்றன. சென்ற 15 வருஷ ஆக்ஷியால் அல்லல் அடையாத வகுப்பாரே கிடையாது. அவர்கள் யாவரும் காங்கிரஸ் மூலம் நன்மையை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

நிர்வாஹ அதிகாரங்களை ஏற்றுக் கார்யம் நடத்துவதில் மிகுந்த சிரமமுண்டு. வெளியிலிருந்து நிர்வாஹிகள்மீது ஓயாமல் தோஷம் சொல்லிக்கொண்டிருப்பது ஸுலபமே. காங்கிரஸ்வாதிகள் இந்த வேலையோடு நின்றுவிடுவார்களா, அல்லது நிர்வாஹத்தை ஏற்று நல்லவழியில் தங்களுடைய ஸாமர்த்தியத்தை வெளியிடுவார்களாவென்பது தெரியவேணும். நிர்வாஹத்தில் அமர்ந்தால் நல்ல பெயர் கிடைக்காதென்ற பயத்தினால் அதைப் புறக்கணிப்பது பயங்கொள்ளித்தனமாகவே கருதப்படும்.

காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையில், சட்டஸபை வேலைகளைப்பற்றிக் குறிப்பாக ஒன்றும் சொல்லப்படவில்லை. பொதுவாகவே அதில் கூறப்பட்டிருக்கிறது. ஸ்வதந்திரம், பிரிடிஷ் ஸம்பந்த நீக்கம்போன்ற வெறும் கொள்கைகளை மாத்திரம் நம்பி வோட்டர்கள் காங்கிரஸ்காரர்களை அனுப்பவில்லை. எவ்வளவோ தலைமுறைக்குப்பிறகுகூட சந்தேகத்திற்கிடமான மேற்கண்ட கொள்கைகளைப்பட்டும் ஓட்டர்கள் விரும்பி வோட் செய்யவில்லை. வெறும் கொள்கைகளைமட்டும் நம்பிக்கொண்டிருந்தால் ஏழைகளின் பசியும், பிணியும் ஆறிவிடாது. ஆதலால் சட்டஸபைகள் மூலம் வெகுதுரிதமாக ஏற்படக்கூடிய ஹிதங்களை உடனே பெறவேண்டியும், ஏற்கனவே ஏற்பட்டுள்ள தீமைகளை அகற்றிக்கொள்ளவுமே தேசஜனங்கள் காங்கிரஸை ஆதரித்து நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் மந்திரிப்பதவி வஹிக்கலாமா கூடாதா என்ற ராஜீய தத்வம் பேசிக்கொண்டிருப்பதில் ஏழை ஓட்டர்களுக்கு நன்மை யொன்றுமில்லை. இப்போது ஆக்ஷிநடத்திய கக்ஷிகளுக்கு ஏற்பட்ட படிப்பினையை அடுத்த எலெக்ஷனில் பொது ஜனங்கள் காங்கிரஸுக்குக் காட்டாமலிருக்க வேண்டுமானால் காங்கிரஸ் வாதிகள் நிர்வாஹம்நடத்தி மக்களுடைய சிரமத்தைத் தீர்க்கப் பாடுபட வேண்டும். வீண் தத்வங்கள் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

கவர்ன்மெண்டை உடைத்தெறிந்து அதன் மூலம் தங்கள் கொள்கையை நிலைநிறுத்த விரும்பும் காங்கிரஸ்வாதிகள் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் இந்தக் கொள்கையால் ஜனங்களுக்கு உபயோக மேற்படக்கூடிய, கார்யகர வேலையொன்றும் நிறைவேற அவகாசமில்லை. இது உடனே பலனை எதிர்பார்க்கும் ஜனங்களுக்கு ஏமாற்றத்தையே கொடுக்கும். நிர்வாஹ அதிகாரத்தை வஹிப்பதானால் சட்டதிட்டங்களை அங்கீகரித்து, அவைகள் மூலம் செய்யக்கூடிய நன்மைகளை கிரமமான வழியில் செய்துகொண்டு போகவேண்டும். இவ்வாறு ஸர்க்கார் சட்டங்களையும் நியமங்களையும் உபயோகித்துக்கொண்டு ஆக்ஷி நடத்துவது ஸர்க்காருடன் ஒத்துழைப்பதாயும், மிதவாதிகளுடைய கொள்கைக்குத் திரும்புவதாயும் ஆகுமென்று தீவ்ரவாதிகள் நினைக்கக்கூடும். ஆனாலும் வோட்டர்களுடைய திட்டமான கட்டளை என்னவென்பது கவனிக்கப்படவேண்டும். காங்கிரஸ் வாதிகள் ஸாத்யமான [illegible] அனுபவத்திற்கு வரக்கூடிய கொள்கையுடன் "செய்யுங் கார்யங்"களில் புத்தி செலுத்தவேண்டுமென்பதே ஜனங்களுடைய கோரிக்கை. நமது மாகாணத்திலுள்ள பிரபல தேசீயப் பத்திரிகைகள்கூட, சட்டஸபையில் காங்கிரஸ் வாதிகள் வீண் தத்வங்கள் பேசிக்கொண்டிராமல் உடனே செய்யக்கூடிய நன்மைகளில் புத்திசெலுத்த வேண்டுமென்று எச்சரிக்கின்றன.

சட்டஸபை வேலைத்திட்டத்தை அமைக்க வேண்டிய வழியையும் அவை சுட்டிக்காட்ட முன்வந்திருக்கின்றன. ஸமூஹ, பொருளாதாராதி விஷயங்களில் மாறுதலை விரும்பாத கக்ஷியாரும் நம் தேசத்தில் வெகுபேர் இருப்பதை எடுத்துக்காட்டி, எல்லாருடைய நன்மைக்கும் பாதகமில்லாதவழியில் சட்டஸபையில் வேலைத்திட்டம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று மேற்படி பத்திரிகைகள் யோஜனைசொல்ல முன்வந்திருக்கின்றன. இவைகளையெல்லாம் காங்கிரஸ் வாதிகள் கவனித்து அடுத்த எலெக்ஷனில் பொதுஜனங்களுடைய பிரீதியை இழக்காமல் அதை விருத்திசெய்து கொள்ளவேண்டிய வழியில் நடப்பது விவேகமாகும்.

குறிப்புகள்.

தபால் கார்டு விலைக்கு விமோசனம் இல்லையா ?

இந்தியா கவர்ன்மெண்டின் புதுவருஷவரவு செலவுத்திட்டத்தை பொக்கிஷமெம்பர் தயாரித்து சட்டசபையில் ஆஜர் செய்து, தந்திரமாகப் பிரஸங்கமும் செய்துவிட்டார். தமது திட்டத்திற்கு ஆதாரமாக அவர் பலவித வாதங்களை வெளியிட்டுப் பேசினார். வெள்ளிக்கு ஒரு அவுன்சுக்கு 2-அணா இறக்குமதி வரியாயிருந்ததை 3-அணாவாகச் செய்யப்பட்டது. உள் நாட்டுச் சர்க்கரைக்கு எதிர்வரி விதித்தும் வெளிதேச சர்க்கரைக்கு இறக்குமதி வரியை குறைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது நிற்க, தபால் இலாகாவில் சில வருஷங்களாக பல வழியிலும் கட்டணங்கள் அதிகரித்துவிட்டதை வியாபாரிகளும் பொது ஜனங்களும் பலமாக ஆக்ஷேபித்து வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் கவர்ன்மெண்டார் அந்த இலாகவில் ஏழை ஜனங்களுக்கு ஹிதமாக எவ்வித மாறுதலும் செய்யாமல் பிடிவாதம் காட்டி வருகிறார்கள்.

முக்கியமாக போஸ்ட் கார்டுகளின் விலையை காலணாவிலிருந்து முக்காலணாவரையில் உயர்த்திவிட்டிருக்கிறார்கள். இந்த அநீதியை நிவர்த்திக்கும்படி தேச ஜனங்களும் சட்ட சபை மெம்பர்களும் பலமாக வற்புறுத்தி வருகிறார்கள். அப்படியிருந்தும் சர்க்கார் மெம்பர்களும் வைஸ்ராயும் இதைப்பொருள் படுத்தியதாகத் தெரியவில்லை. காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் புகுந்தபின் சென்ற 2-வருஷங்களாக வரவு செலவு மசோதாவை நிராகரித்து வருவதற்கு தபால் கார்டுகளின் விலையைக் குறைக்காததும் ஓர் முக்ய காரணமான விஷயம். இதைப் பற்றி சட்டஸபையில் மெம்பர்கள் பலமாக வற்புறுத்தியும் பொக்கிஷமெம்பர் குழந்தைகளை ஏமாற்றுவது போல் ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு மாதிரியாக ஏதாவது சால்ஜாபு சொல்லிக்கொண்டே வருகிறார். முக்கியமாக சென்ற வருஷம் பொக்கிஷமெம்பர் பேசுகையில் 37-ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் கார்டு விலையை அரையணாவாகக் குறைக்க ஏற்பாடு செய்வதாகச் சட்டசபையில் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். இப்படியிருந்தும் இந்த வருஷத்திய திட்டத்தில் அதைப் பற்றி ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. தமது பிரசங்கத்திலும், மௌனம் சாதித்திருக்கிறார் ஆகையால் புது வருஷத்திலும் கார்டு விஷயமாக ஏழைகளுக்கு எவ்வித விமோசனமும் இல்லையென்பது நிச்சயமாகிவிட்டது. இதைவிட ஏமாற்றகரமாயும் உறுதிமொழி மீறியதாயும் உள்ள காரியம் வேறு கிடையாது. புக்போஸ்ட்டுகளுக்குக் கட்டணத்தைக் குறைப்பதால் ஏழைகளுக்கு பயனென்ன ? இது ஒட்டகை பாரத்தைக் குறைக்கும் தந்திரமாகவே இருக்கிறது. ஏழைகள் புக்போஸ்டை அதிகமாக உபயோகிக்கநியாயமில்லை. கார்டுகளையே அவர்கள் அதிகம் உபயோகிக்கிறார்கள். விலையைக்குறைப்பதால் ஜனங்கள் கார்டுகளை அதிகம் உபயோகிக்க முன் வருவார்கள். இதனால் சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்பட நியாயமில்லை

இவ்வருஷத்திலும் மெம்பர்கள் இதைப் பற்றிப் பேசுவார்கள். கண்டிப்பார்கள். வரவு செலவு மசோதாவை நிராகரிப்பார்கள். ஆனாலும் வைஸ்ராய் அவர்களின் விசேஷாதிகாரத்தால் எல்லாம் அடங்கிவிடும். இந்த பலம் ஸர்க்காருக்கு இருப்பது வாஸ்தவமாயினும் கார்டு விலையைக் குறைப்பது போன்ற முக்கிய விஷயத்தில்கூட பொது ஜன அபிப்ராயத்தை இவ்வாறு கட்டுப்பாடாக உதாசினம் செய்துவருவது கவர்ன்மெண்டுக்குப் பெருமையாகாது.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

காஞ்சிபுரம்.

காங்கிரஸுக்கும் ஸனாதந முறையே கதி !

இந்தியாவில் காங்கிரஸ் வாதிகளும், வேறு சிலரும், மதம், மதக்கொள்கை, ஆசாரம் நம்பிக்கை, பேச்சு முதலிய யாவற்றையும் அலக்ஷ்யம்செய்து பேசுவதும், அவமதிப்பதும், அவை மூடநம்பிக்கை நிறைந்தவையென்று நம்மைப் பரிஹஸிப்பதும் வெகு ஸாதாரணமாயிருக்கிறதல்லவா ? அத்தகையவர்கள் இந்த எலெக்ஷன் காலத்தில் பொது ஜனங்களிடம் கையாண்ட முறையும், ஜனங்கள் மனதைக்கவர வேண்டி பேசிய பேச்சுகளும் என்னவென்பதை நாம் அவசியம் கவனிக்கவேணும். மதஸம்பந்தமான பேச்சே மூடநம்பிக்கையென்று சிரித்தவர்கள், ஜனங்களிடம் நெருங்குவதற்கு மத ஸம்பந்தமான பேச்சுக்களை ஸம்பந்தப்படுத்தியே வெற்றிபெற வேண்டியிருந்தது ஒரு விசேஷமாகும். காங்கிரஸ் சட்டதிட்டங்களும், காங்கிரஸ் பிரசாரப் பேச்சுகளும், பெரும்பாலும் ஸனாதந தர்மிகளுடைய முறையிலேயே நடைபெற வேண்டியிருக்கிறது. மூடநம்பிக்கையென்றும், வெறும் கட்டுப்பாடென்றும், மனித ஸ்வாதந்திரிய விரோதமென்றும் நமது தர்மங்களைப் பழித்தவர்கள் அதே கொள்கையே தங்களுக்கு கதியாக வைத்துக்கொண்டிருப்பதை கவனித்தார்களா ?

காங்கிரஸில் சேருவோர் அதன் சட்டதிட்டங்களுக்கும், உத்திரவுக்கும் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். காங்கிரஸின் ஒழுங்குமுறையை மீறக்கூடாதென்று ஆக்ஞை போடுகிறார்கள். மீறுகிறவர்களை, காங்கிரஸ் துரோஹியென்று பஹிஷ்கரிக்கிறார்கள். அல்லது காங்கிரஸ் நியமத்தைமீறிய தோஷத்திற்காக பிராயச்சித்தம் விதிக்கிறார்கள் ? இது ஏன் ? இது மனிதஸ்வதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாயில்லையா? தார்மிகர்கள்மட்டும் மேற்கண்ட மாதிரியில் தார்மிகர்களுள்கட்டுப்பாடும் மீறக்கூடாதென்ற நியமும், மீறியவர்களுக்கு பிராயச்சாதிகளும் பஹிஷ்காரங்களும் விதித்திருப்பதைமட்டும் இவர்கள் ஏன் பரிஹஸிக்க வேண்டும் ? தார்மிகக் கட்டுப்பாடுகளை மீறியவர்களை தர்மத்ரோஹி என்று நினைப்பதிலும் தவறு என்ன ?

காங்கிரஸ்காரர், காங்கிரஸ்காரரல்லாதவர் என்று பெரிய பிரிவினையைக் கற்பித்து, தங்களைச் சேர்ந்தவர்களையே உயர்ந்தவர்களாக நினைப்பதும், மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாக நினைப்பதும், அவர்களுக்கு ஒரு வழியிலும் ஆதரவுகொடுக்காமல் தள்ளிவைக்கவேண்டுமென்றும் சொல்லுவது மதக் கொடுமையைவிட மேலான கொடுமையாக இருக்கவில்லையா? கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களையும், மஹம்மதியர்கள் மஹம்மதியரல்லாதவர்களையும், ஹிந்துக்கள் ஹிந்துக்களல்லாதவர்களையும், பரஸ்பரம் தாழ்ந்தவர்களாயும், ஏசியும், தூஷித்தும் பேசுவதாக இவர்கள் புகார்கூற என்ன நியாயமுள்ளது. காங்கிரஸ் விரோதிகளுக்கு நீர்-நெருப்புக்கூட உதவக்கூடாதென்று இவர்கள் கட்டுப்பாடு செய்வது மதக்கட்டுப்பாட்டைவிட எவ்வகையில் குறைந்தது ?

வஸிஷ்டர் சொன்னார், பராசரர்சொன்னார், அவர்களுடைய வார்த்தைகளை நம்புங்கள். அதன்படி நடவுங்கள் என்று தார்மிகர்கள் சொன்னால்அதை காங்கிரஸ்வாதிகள் ஏளனம் செய்வார்கள். வஸிஷ்டரையும், பராசரரையும் யார் கண்டார்கள், அவர்களுடைய வார்த்தைக்கு நாம் ஏன் கட்டுப்படவேண்டுமென்கிறார்கள். ஆனால், காந்திஜீ சொல்லுகிறார். நேருஜீ சொல்லுகிறார், அதை நம்புங்கள், அதைச் செய்யுங்கள், அதில் கக்ஷி பேசக்கூடாது. கண்ணை மூடிக்கொண்டு அந்த தலைவர்கள் சொல்படி நடக்கவேண்டும், யுக்தி விசாரம்கூடாது என்று ஸர்வாதிகாரி முறையில் இவர்கள் ஜனங்களை கட்டுப்படுத்தவில்லையா ? காந்திஜியையோ நேருஜியையோ கோடிக்கணக்கான ஜனங்கள் பார்த்தவர்களன்று. அப்படியிருக்க ஜனங்கள் மேற்படியார்களுடைய உத்திரவுப்படியே நடக்கவேண்டுமென்று உபதேசிப்பது எதில் சேர்ந்தது?

இம்மட்டுமா? தார்மிகர்கள் உபயோகிக்கும் புனிதமான வார்த்தைகளை இவர்கள் தங்களுக்கும் உபயோகித்துக் கொள்ளுகின்றனர். காந்திஜியையும், நேருஜியையும் "தர்சனம்" செய்ய ஏராளமாக ஜனங்கள் கூடியிருந்ததாக வர்ணிக்கிறார்கள். "தர்சனம்" என்ற வார்த்தையை உபயோகிப்பதன் கருத்தென்ன ? இதுபோல் க்ஷேத்திரங்களில் பேசும்போது காங்கிரஸ்காரர்கள் அவ்விடம் தாங்கள் "யாத்திரை" வந்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு ஜனங்கள் மனதைக்கவர முயற்சிக்கிறார்கள். "மங்களகரமான மஞ்சள் பெட்டி" என்கிறார்கள். மஞ்சள் மங்களகரமென்று ஹிந்துக்கள் நம்பிக்கை. இதை மத நம்பிக்கையற்ற காங்கிரஸ்காரர்கள் கூடச் சொல்லப் பின்வாங்குவதில்லை மஞ்சள் பெட்டியைப் பலர் நமஸ்காரம்செய்ததாகவும் பிரசுரப்படுத்துகிறார்கள்.

பனியிலும், குளிரிலும், வெய்யிலிலும் பாதிராத்திரியிலும் கூட ஜனங்கள் காங்கிரஸ் தலைவர்களைப் பார்க்கக்கூடுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். வெகு தூரங்களிலிருந்து கால் நடையாகக் கூட ஜனங்கள் வருவதை பெருமையாகப் பேசுகிறார்கள். காங்கிரஸ் காரியங்களுக்காக ஜனங்கள் இவ்வளவு சிரமத்தையும் ஸஹிப்பதை இவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

ஆனால், புண்ணிய காலங்களில் பனி,குளிர் வெய்யல்களைப் பாராமல் வெகு தூரத்திலிருந்தும் பக்தி சிரத்தையுடன் கால் நடையாக நம் ஜனங்கள் மத நம்பிக்கையை முன்னிட்டு உத்ஸவங்களுக்கும், புண்ணியதீர்த்த ஸ்நானங்களுக்கும் போவது மட்டும் மூடநம்பிக்கையாக சீர்திருத்தக்காரர்களுக்குத் தோன்றுகிறது. என்னே விபரீதம் !

கண்ணுக்குத் தெரியாத பலனை உத்தேசித்து, கண்ணுக்குத் தெரியாதவர்களுடைய உபதேசப்படி நடப்பது மூடத்தனமென்கிறார்கள். ஆனால் அநேக தலைமுறைகளுக்குப் பின்னும் காணக்கூடாதவைகளான ராஜீய பலன்களை உத்தேசித்து ஜனங்கள் தியாகம் செய்யவேண்டுமாம். அதற்காகச் பணத்தைச் செலவு செய்ய வேண்டுமாம். உபவாசம் முதலிய காயக்லேசம் செய்யவேண்டுமாம். இவ்வளவும் செய்தும் மேற்படி பலன் கிடைக்குமென்பது என்ன நிச்சயம் ? அந்த பலன்கள் பிரத்யக்ஷமாய் இருக்கின்றனவா? தார்மிகர்கள் மட்டும் அப்ரத்யக்ஷ பலனை உத்தேசித்து உபவாசாதிகள் இருந்தால் அது மூட நம்பிக்கையாம். ஸ்வராஜ்யமும் ஸ்வதந்திரமும் கையில் இருக்கின்றனவா ? பிரத்யக்ஷங்களா? இம்மாதிரி கணக்கற்ற உதாஹரணங்களை அநேகங்கள் ஊஹிக்கலாம். காங்கிரஸ்காரர் ஸநாதன தர்ம முறையைப் பரிஹஸித்தபோதிலும் இவர்களுடைய பிரசார முறை யாவற்றும் ஸநாதனத்தைப் பார்த்துக் காப்பி அடிக்கப்பட்டதே என்பதில் சந்தேகமில்லை. தர்ம விரோதமான கொள்கைகளையோ, தர்மவிரோதமான பேச்சுக்களையோ சொல்லிக்கொண்டு ஹிந்துக்களிடம் போய் ஜயம் பெற முடியாதென்பது இவர்களுக்குத் தெரிந்ததே. நமது முன்னோர்கள் தர்மத்தை காப்பாற்ற ஏற்படுத்திய வியவஸ்தைகளும் கண்டிப்பான விதிகளும் இவர்களுக்குப் பிடிக்காவிட்டாலும், அதே முறைதான் தங்கள் ஸ்தாபனத்தை உருக்குலையாமல் காப்பாற்றவல்லதென்பதை இவர்கள் உணர்ந்து தார்மிகர்களைவிட அதிக நிர்ப்பந்தங்களையும் கட்டுப்பாட்டையும் விதிக்கிறார்கள். இப்போதைய எலக்ஷனில் கிடைத்த வெற்றிக்கும் இதுவே முக்கிய காரணமாகும்.

ஆதலால் காங்கிரஸ் வாதிகள் எல்லா வழிகளிலும் ஸநாதனம் போன்ற வியவஸ்தையையே தங்களுக்கு ரக்ஷணமென்று நினைக்க வேண்டியது அவசியமாகும்.

தத்வவாதீ.

சென்னை ராஜாங்கஸபை எலக்ஷன்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சென்னை ராஜாங்க சபைக்கும் எலக்ஷன் முடிந்துவிட்டது. இதிலும் காங்கிரஸ் வாதிகள் மெஜாரிடி ஸ்தானங்களைக் கைப்பற்றிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அஸம்பிளித் தேர்தலில் காங்கிரஸ்வாதிகள் அடைந்துள்ள ஜயத்தைக் கொண்டு கணக்கிட்டால் ராஜாங்கசபை வெற்றியில் காங்கிரஸ்காரர்கள் திருப்தியடைய நியாயமில்லை. சென்னை மகாணத்தில் அதிக ஸ்தானங்கள் கிடைத்திருப்பது உண்மையாய் இருந்தாலும் மற்ற பல மாகாணங்களிலும் ராஜாங்க சபைகளில் காங்கிரஸிற்கு வெற்றி கிடைத்ததாகத்தெரியவில்லை. அநேக இடங்களில் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் பெருந் தோல்வி அடைந்திருப்பதையும் காண்கிறோம். அஸெம்பிளி வோட்டர்களைவிட ராஜாங்கசபை வோட்டர்களுக்கு அதிகயோக்யதை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தவிரவும் ராஜாங்கசபை வோட்டர்களில் பலர் விசேஷப் படிப்பு, பணம் முதலிய கௌரவம் அதிகம் பெற்றவர்களாயிருக்கலாம். அவர்கள், ஆலோசனை நிதானம் முதலியவை மூலமாகத் தங்கள் வோட்டை ஜாக்ரதையாக உபயோகிப்பவர்களாயிருக்கலாம். ஆதலாலநேக மாகாணங்களில் ராஜாங்கசபை வோட்டர்கள் மூர்த்தன்யமாகக் காங்கிரஸை ஆதரிக்கமுற்படாததில் ஆச்சர்யமில்லை.

சென்னையில் மட்டும் அதிக ஆதரவு காங்கிரஸுக்குக் கிடைத்ததற்கு வேறு காரணம் இருக்கலாம். இங்கு சென்ற 16-வருஷங்களாக நடந்துவரும் ஒரு கக்ஷி ஆக்ஷியை ஒழிப்பதில் எல்லாவகை ஜனங்களுக்கும் ஓர் உறுதியிருந்தது. அதுவே இங்கு முக்கியமான காரணமாகும்.

ராஜாங்க ஸபையின் பொறுப்பும், கார்யமும் விசேஷமாயுள்ளது. அஸம்பிளியில் தீர்மானிக்கப்படும் விஷயங்கள் இந்த ஸபையிலும் விவாதித்துத் நிச்சயிக்கப்படவேண்டும். ஆதலால் இங்கு இருக்கக்கூடிய மெம்பர்கள் கக்ஷிபலத்திற்காகக் கைதூக்குபவராக மட்டுமில்லாமல் விஷய ஞானமும் சட்டபரிசயமும் பெற்றவராயிருப்பது நல்லதாகும். தஞ்சைஜில்லாவில் அபேக்ஷகராக நின்ற ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியாரை அந்த ஜில்லா வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கத்தவறியதுபற்றி ஜில்லாவெங்கும் விசேஷ வருத்தம் ஏற்பட்டிருப்பதை நாம் அறிவோம். எலெக்ஷன் வெற்றிக்கும், தோல்விக்கும் பல அஸாதாரண காரணங்கள் உண்டு. ஸ்ரீமான் சாஸ்திரியாரின் தோல்வியால் எல்லாவகுப்பு ஜனங்களும், எல்லாக்கக்ஷியாரும் வருத்தப்படுவதைப்பார்த்தால் அவர்மீது ஜனங்களுக்கு நல்ல நம்பிக்கையிருப்பதாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் அவர் தோல்வியடைய நேர்ந்ததற்கு வேறு ஏதோ காரணமிருக்கவேண்டும். எப்படியும் ஸ்ரீமான் சாஸ்திரியாரின் நுட்பமான சட்டஞானமும், பொது அறிவும் நல்ல ஆலோசனையும் நமக்கும் ஸர்க்காருக்கும் கிடைக்காமல் போனது வருத்தக்கதே.

வருந்துவோன்.

ஸோமலதா வரலாறு.

ஆர்யதர்மத்தின் 1925-ஹூ செப்டம்பர் மீ 5 தேதி பத்திரிகையின் 7-வது பக்கத்தில் 'ரஸமான ஆராச்சிக்கு உதவுக' என்ற முகப்புள்ள விஷயத்தை விளக்கும் விஷயத்தை ஈண்டு காண்க:—

ஸோமலதை என்பது 64 திவ்யமூலிகைகளில் ஒன்றாக பாரதீய ரஸாயன சாஸ்திரத்தில் கூறியுள்ளது மனிதனுடைய பாஞ்ச பௌதிக உடலை திவ்ய தேகமாக்கும் விசேஷ சக்தியானது ஸோமலதையில் இயற்கையாயமைந்திருக்கின்றது. இந்த ஸோமலதையானது குணத்தாலும், லக்ஷணத்தாலும் சந்திரனுக்கு சமமாயிருப்பதாலும் இதற்கு இப் பெயர் கூறப்பட்டது. மனிதர்களின் சஞ்சாரம் நெருங்கியிராததும், சுத்தமாயும், சீதளமாயும், ஜலவஸதி மிகுதியும் வாய்ந்த இடங்களில்தான் இது காணக்கிடைக்கும். இது அதிகமாக மலைப்பாங்குகளிலேயே இருக்கும் இயற்கை உடையதாம். நமது நாட்டிலுள்ள ஸோமயாஜி என்ற தீக்ஷிதர்கள் இதனை அறியமாட்டாதவராய் சிந்தில் கொடி, ஊறங்கொடி முதலியவைகளை ஸோமலதையாக பாவித்து யாகத்தை நடத்துகிறார்கள்.

இந்த ஸோமலதையைப்பற்றி சுச்ருதாசாரியர் கூறுவதாவது:

"பிரம்மன் முதலான தேவர்கள் கிழத்தன்மை மிருத்யு இவைகளைத்தவிர்ப்பதற்கு ஸோமன் என்ற அமிருதத்தை சிருஷ்டித்தனர். இதன் விதியை விளக்குவோம்"

ஒரே ஸோமபகவான் இருப்பிடத்தாலும், பெயராலும், உருவத்தாலும், வீரியத்தாலும் 24 பேதங்களுடையதாமெனினும் ரஸாயன குணத்தில் மாத்திரம் சமமான சக்தியுடையதாகும். 24 ஸோமலதைகளுக்கு உபயோகம் ஒரே விதமானதாம்.

எல்லா ஸோமலதையும் சுக்லபக்ஷத்தில் முதல் தினத்திலிருந்து தினந்தோறும் ஒவ்வோரிலை முளைக்கப் பெற்றதாய் பூர்ணிமையில் 15 இலைகளுடன் 15 கலைகளையுடைய சந்திரனைப்போலவும் விளங்கும். கிருஷ்ணபக்ஷத்திலும் அப்பக்ஷத்திலிருந்து சந்திரனுடைய கலையைப்போலவே தினமும், ஒவ்வொரு இலை குறையப்பெற்று அமாவாசை தினத்தில் ஒரு இலையுடைய சந்திரனைப்போலவே தனிக்கொடிமாத்திரமே மிகுதியாக நிற்கும்.

இவைகளில் "அம்சுமான்" என்ற ஸோமலதையானது பசு நெய்யினது வாடையுடன் தோன்றும். ரஜதபிரபன் என்ற ஸோமலதையானது வாழைக்கிழங்கு போன்ற கிழங்கை உடையதாகும். "முஞ்ஜவான்" என்ற ஸோமலதையானது வெள்ளுள்ளி இலையைப்போன்ற இலையை உடையதாம். "சந்திரமா" என்ற ஸோமலதையானது ஸ்வர்ணத்தைக் கொண்டு காந்தியை உடையதாக தோன்றும். இது தண்ணீரிலேயே எப்பொழுதுமிருக்கும். எப்படி சந்திரனுடைய அமிருதமயமான கலைகளை தேவதைகள் சாப்பிட்டு இன்பத்தை அடைகிறார்களோ அதுபோலவே மனிதர்களுக்கு .... நிறைந்து .... உலகத்திற்கு சந்திரனே ஸோமலதையாகத் தோன்றிப்பதாக வேதங்கள் கூறும். இந்த ஸோமலதை கல்பத்தை அதன் விதிப்படி ஒழுகும் புருஷனுக்கு .... உடல் பரிசுத்தப்படுத்தப்படுவதுடன் 10,000 வருஷங்கள்வரை நீண்ட ஆயுளும் உண்டாம், காற்று, தீ, ஆயுதம், விஷம், தண்ணீர் இவைகளால் உடல் அழியாது. யானைக்குச் சமமான பலம் உண்டாகும். இவ்விதம் நமது பழைய நூல்களில் கூறப்பட்டிருக்கும் ரஹஸ்யங்களை பார்ப்பவரும் கேட்பவரும் இல்லாமல் நூல்

ஸநாதன தர்மிகளே! ஓர் யோஜனை.

ஒருபேரியார்:— ஸமாசாரப்பத்ரிகைகளில்வர் ஞசாமஸ்வாஜ்யஸங்கம் என்றும், முத்யாஹிந்து கமிட்டி (Central Hindu Committee Madras) என்றும் ஸநாதன தர்மஸபாவென்றும் வித்யாஸமான பல பெயர்களால் தர்மரக்ஷண ஸபைகள் விளங்கி வருகின்றன. All Indian organisation Congress அகில இந்திய சேர்க்கையான காங்கிரஸ் சங்கமேத் தொடர்போல் ஒரே பெயரால் ஒரே ஸங்கமாக ஒரு தலைவரின் கீழ் ஒரே நோக்கத்துடன் ஒரே குரலோடு ஒற்றுமையுடன் வேலை செய்வதுபோல் பாதகமின்றி முழுவதும் ஒரே பெயருடன் ஒரு தலைக்கீழ் ஒரே ஸங்கமாக தர்மரக்ஷணத்திற்கும் அவசியம் வேண்டும்.

பாரத ராஷ்ட்ர தர்ம ராஜ்ய ஸங்கம்.

Indian National Dharmarajaya Congress.

என்றதுபோல் உள்ள ஏதாவது ஒரே பெயராக பெயர்கொண்டதாக எல்லா ஸபைகளும் விளங்கவேண்டும். மாகாண சங்கம் ஜில்லா சங்கம், தாலுகா ஸங்கம், ஏற்பாட்டு அங்கத்தினர்களை சேர்த்து கட்டுப்பட்ட ஐக ஸங்கத்தொடராக அமையவேண்டும்.

ஒரு பத்திரிகை:— ஸநாதனிகள் எல்லாரும் ஸநாதன தர்ம நோக்கங்களை அவ்வப்போது அறிந்து தர்ம ரக்ஷணத்தில் ஊக்கமும் சிரத்தையும் உண்டாவதின் நிமித்தம் பாரத தேசம் முழுவதுக்கும் ஒரே பத்திரிகை ஏற்பட முடியாதபோனாலும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரே பத்திரிகையை ஆதரித்து எல்லோரும் வாசித்து தெரிந்துகொண்டே வரவேண்டும். ஸநாதன ஸங்கம் இந்த பிரசாரம் செய்ய

கள் பழமையை விடுத்து வருகின்றனவென்பதை வருந்தவும் அதிகமாயில்லை

மேல்நாட்டு நாகரிகம் முதிர்ந்து, மேல்நாட்டு பாஷை பயிலுவதால் நமது சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்ய அறிவின்மையாலும், பிரயத்தனக்குறைவாலும், ஸ்திரமான மனதின்மையாலும், தரித்ரத்தின் மிகுதியாலும், அசிரத்தையாலும் .... மூலிகை சம்பாதிக்கக்கிடைக்காத காரணத்தாலும் ஸோமலதையின் ரஸாயனங்களைப்பற்றி அறிவோரும், கையாளுவோரும் அரிதாகிவிட்டனர். நமது நாட்டில் 'கூடும் பெரிய சபைகளில் "ஸோமயாஜீ" என்ற பட்டப்பெயர் படைத்த குலத்தவர்களும், முதல் தாம்பூலமும், மரியாதையும் இப்பொழுதும் .... ஸோமயாகத்தையும் அதன் பெருமையையும் நாம் ஒருகாலத்தில் கண்கூடாக .... நினைக்க இடமேற்படுகிறதை யாவரும் மறுக்க முடியாது. .... ஆசாரத்தையும் நாம் அனுஷ்டிக்க சக்தியற்றிருக்கும் பொழுது, பெரியகாரியங்களான ஸோமலதை கல்பத்தை நினைப்பதாலும் அசக்தர்கள் என்பது உண்மை. இம்மாதிரியான ச்ரேயஸ்கரமான காரியாதிகளை எக்காலத்தில் உத்தாரணஞ்செய்ய சர்வேசுவரன் .... என்பதை நினைப்பதற்கே அவகாசமில்லாமல் ஆய் விட்டது. இதற்குக்காரணம் கலியின் மஹிமையதனோ? அல்லது நமது அலட்சியத்தினாலுண்டான ஒற்றுமைக்குறைவோ, அல்லது நமது தாரித்திரியமோ அல்லது முயற்சிக்குறைவோ அறிகிலோம்.

B. A. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரி.

வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரே அபிப்ராயம்:— மத விஷயத்தில், ஸமூஹ தர்ம விஷயத்தில், ஆசார விஷயத்தில் ராஜ்ய அமைப்பு ஸநாதன தர்மிகள் அனைவரும் ஒரே நோக்கத்துடன் ஒரே அபிப்பிராயத்தைத் தான் வெளியிடவேண்டும். சிலர் Minorty அபிப்பிராயபேதம் வைத்துக்கொண்டிருந்தாலும் பலர் Majority அபிப்பிராயத்துக்கு ஒத்தே நிற்கவேண்டும். ஸங்கம் ஒருங்கே கூடி ஒரே அபிப்பிராயத்தை வெளியிடவேண்டுமே தவிர தனிப்பட்ட பிரமுகர்கள் தங்கள் தங்கள் தனித்த அபிப்பிராயத்தை வெளியிடக் கூடாது என்ற கட்டுப்பாடு ஸநாதனிகளுக்குள் வழக்கப்படவேண்டும்.

ஒரே ப்ரசாரம்:— அந்தந்த இடங்களில் தனித்தனி உபந்யாஸங்களும் ஸம்மேளனங்களும் நடந்து வருகின்றன. பிரசாரகர்களுக்குள் ஒற்றுமையில்லாமலும் இணைப்பு இல்லாமலும் அபிப்பிராய கலப்பில்லாமலும் கூடிப்பேட்ட காரியங்களைக் கைக்கொள்ளாமலும் காலம், இடம், விஷயங்களை நோக்கத்தில் வைக்காமலும் தனிப்பட்ட ப்ரசாரகர்கள் வேலை செய்து வருகிறார்கள். ஒரே ஸங்கத்தின் கீழ் ஒரே ப்ரசார ஸபைக்குட்பட்டு கால, காரிய, இடத்திட்டங்களுடன் கூட்டம் கூட்டமாக தேசமெங்கும் பரவி உபந்யாஸமூலம் ப்ரசாரம் செய்யும்படி ஏற்பாடு ஆகவேண்டும்.

ஒரே காரியம்:— ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரியம் அவஸ்யமாகச் செய்ய வேண்டிவரும். தேசம் பல்வேறு நோக்கங்கள் கொண்ட மனுஷ்யர்களாலும் பத்ரிகைகளாலும் தர்மக் கலக்கமும், ராஜ்யக் கலக்கமும், ஆசாரக்கலக்கமும், அபிப்பிராயக் கலக்கமும் நிறைந்திருப்பதால் அதனதயான நாடு போனாலும் .... கொண்ட நாடுபோலும் நினைத்து கீழ்க்கும் இந்த ஸமயத்தில் ராஜ்யப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவர்களான ஸநாதனிகள் அந்தந்த ஸமயத்தில் ஒரே காரியத்தில் இறங்கி ஒரே நோக்கத்துடன் வேலை செய்யவேண்டும்.

ஸாரம்
ரங்காசாரியர்.

மார்பவம்.

சென்ற 15-2-37 திங்கட்கிழமை உடையாளூர் பிரும்மஸ்ரீ ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகளால் மாம்பலத்தில் உபந்யஸிக்கப்பட்ட ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் "ஸ்ரீ ஸீதாகல்யாணம்" வெகு விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் கவிரத்னம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களின் ராமாயண உபந்யாஸத்தின் உயர்வைக் குறித்தும், ஸநாதன தர்மமகிமையைப் பற்றியும் ஒரு அரிய பிரசங்கம் செய்தார்.

நமது நிருபர்.

சுமார் ஒரு மாதகாலமாக சென்னை தம்பு செட்டித் தெரு காளியம்மன் கோவில் பிரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் உபந்யஸிக்கப்பட்டு வரும் "ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தின்" ஸீதாகல்யாண மகோத்ஸவம் வருகிற 4-3-37 வியாழக்கிழமை தினம் நடைபெறும். ஆஸ்திகர்கள் அனைவரும் விஜயம் செய்து சுதாச்ரவணம் செய்யப் ப்ரார்த்திக்கிறேன்.

ராமபக்தர்கள்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
மூடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சாஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R. Ramaswami Iyengar, Proprietor

வாரக் குறிப்புகள்.

(வெ. ஸெ. சர்மா)

இஃதோ தேசீயம்? தேசீயமெனப் பேசுபவர் முற்றிலும் அன்யதேச ஆடை பழக்க ஒழுக்க வேஷங்களுக்கும் அடிமையாயிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஸமீபத்தில் நடந்த தேர்தலில் உழைத்தவருக்கு தேசீய ஸபையின் ஆதரவில் ஓர் விருந்து நடந்தது. அதில் முற்றிலும் நமது தேச ஆசாரங்களுக்கு விரோதமான காரியங்களே நடந்தன. தோல் ஒன்றுதான் இந்தியருடையது மாற்ற முடியவில்லை.

முன் பின் முரணன்றோ? ராமகிருஷ்ணர் உபதயாசத்தில் தன் வீட்டு வேலைக்காரியான சூத்ர ஸ்திரீயினிடம் பிக்ஷை கேட்டார் என்பதைப் பட்டாக பலர் பேசுகின்றனர்! அவர் தமயன் சூத்ரர் கட்டிய கோவிலில் கும்பாபிஷேகம் நடத்த ராமகிருஷ்ணர் சூத்ரன்னம் சாப்பிடக் கூடாதென உபவாஸமிருந்ததை ஏனிவர்கள் கூறக்கூடாது. அவர் பெயரால் வர்ணாச்ரமத்தைக் கெடுப்பது மிகப்பாபம்! வைதிகர் எந்த புதுக் கூட்டத்திற்கும் அடிமையாகாது மறைவழியில் செல்க!

நன்மையை விட தீமை அதிகம். தற்காலம் ஆராய்ச்சியின் பயனாக கண்டுபிடிக்கப்படும் யந்த்ரதந்த்ரங்களால் ஸமூகத்தில் நன்மை போல் காணப்படினும் பல தீமை விளைகின்றனவென்பதை உலகம் உணர்கின்றது. பூமியிலிருந்தே ஆகாய விமானத்தை எரிக்கத்தக்க ஓர் யந்த்ரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதனால் எத்தனைய தீமை உண்டாகுமென்பதை பின்னரே அறியக்கூடும்.

நமக்கும் ஓர் ஜெயம்! தர்மத்தில் தலையிடவதில்லை என வாக்களிக்க நாலவர் கூட முன் .... அதில் நிலச்சுவான்தார் பிரதிநிதியாக நின்ற ஸ்ரீமான் ராமசந்திரராவ் ஜயித்தார். அவரை எதிர்த்த காங்கிரஸ்காரர் தோல்வியுற்றார். மதத்தில் ராஜாங்கம் தலையிடலாமா கூடாதா என்பதை முக்ய கொள்கையாகக்கொண்டு தேர்தலில் நடந்தால் பூர்ணஜெயம். ஸநாதனிகளுக்கே என்பது ஸ்பஷ்டமாகும். கக்ஷி கட்டுப்பாடில்லை! பணமில்லை! பத்திரிகையில்லை! ஜயம்!

ஏழைக்கு உதவுவரா? கிளிப்பிள்ளைகளைபோல் சில ஆங்கிலங்கற்றோர் வெள்ளையரிடம் கற்று நம் மடாதிபதிகள் சுதேசமன்னர் ஆகியோர் வீண் ஆடம்பரச்செலவு செய்வதாகக் கூறுவர். நாது மன்னர் மகுடாபிஷேகத்திற்கு ஓர் லக்ஷமும் 52 ஆயிரம் பவுனும் செலவு நடக்கிறது. ஜைஜாம் மன்னர் வெள்ளி விழாவில் 40-லக்ஷம் ரூபாய் ஏழைகளுக்கும் தர்மத்திற்கும் உதவினர். எது டாம்பீகச் செலவு? சட்ட சபை கவனிக்குமா?

ஆதலால்தான் கூடாது. ஆலய கோபுரமும் ரதமும் விச்வரூப அறிகுறியாம். ஆதலின் அனுசிதமான சில சித்திரங்கள் எழுத சில்ப சாஸ்திரம் இடமளிக்கிறது. அம்மாதிரியே தேசீயக்கொடி ரதத்தின்மீது பறப்பதை பல ஸநாதகர்கள் .... நிருவலத்தில் நடந்த தேர் திருவிழாவில் இக்கொடியால் தேரிழுக்க முடியாது சில சச்சரவு நேர்ந்தது. .... தேசீயவாதிக்கு இடமளித்தலாகாதென்பதை இது நன்கு விளக்கிற்று. ஆஸ்திகருக்கு இது எச்சரிக்கை.

கல்விக்கும் பாத்ரம் வேண்டும். மதக்கல்வியே கல்வி. அது அபாத்ரத்தில் செல்வதால் கல்வி கற்றவன் மதம் உலகம் இவைகட்கு தீங்கிழைக்கும் என்பதைப்பல உதாரண

நமது மதத்தின் தற்கால நிலைமையும் அதன் பரிகாரமும்.

(ஸே. வி. சுப்ரமண்ய சாஸ்திரிகள்.)

நமது ஸநாதன மதமானது எவ்வித இடையூறு வரினும் அதையும் தாண்டி, சில காலம் சோபிக்காமல் இருப்பினும், ஒரு காலத்தில் முன்போல் சிறந்து விளங்குமென்பது உண்மையாயினும் மதாபிமானிகள் அவ்வித இடையூறு வரும் சமயத்தில் அதினின்றும் ரக்ஷிக்கவேணுமே தப்பவைக்க வேண்டியதற்கான முயற்சிகளை செய்யவேண்டியதவர்களின் கடமையாகும்.

தற்காலம் அதே மாதிரி பலவகையான இடையூறுகள் நமது மதத்திற்கு ஒரே சமயத்தில் வந்துள்ளதென்பது நான் இங்கு விசேஷமாகச் சொல்லாமலே யாவருக்கும் தெரியவலாம். ஒரு பக்கம் இதர மதப்ரசாரகர்கள் நம்மவரை ஏமாற்றி அவர் மதத்திற்கு இழுக்கும் தொல்லை. மறுபக்கம் நம்மவரிலேயே சீர்திருத்தக்காரர்கள் என அபிமானிப்பவரின் தொல்லை. வேறுபக்கம் ராஜ்ய அதிகாரமுதலியோரின் தொல்லை. .... ஆங்கிலப்படிப்பால் நோக்க அனர்த்தம். கட்டுப்பாடில்லமை. இம்மாதிரி பலவிதமான இடையூறுகள் .... புலி, சிங்கம் முதலியதுஷ்ட ஜந்துக்கள் நிறைந்த காட்டில் தனிமையாய் அகப்பட்டுத் தத்தளிக்கும் .... இந்நிலைமையை ஒப்பிடலாம் நமது மதத்தை. தாயைக் காக்க மக்கள் கடமைப்பட்டிருப்பதுபோல் ஆயிரம் தாய்க்குமேலான நமது மதத்தைக் காக்கவேண்டியது நமது பிரதான கடமையென்பது நான் உரைக்காமலே விளங்குமல்லவா? நிற்க, இவ்விஷயங்களை யான் இதே பத்திரிகையில் 1928 .... தெரியப்படுத்தியுள்ளேன். .... நின் கொடுமையாலோ .... காதில் ஊதிய சங்கம் .... 'வர்ணதர்ம ஸ்வராஜ்ய சங்கம்' என்னும் சபை பலப்பட்டு நிலவிடத்தாவது பரவியதன் மூலமாய் சிறிது மதப்ரசாரம் நடந்து வருவதும் ஆறுதலைத் தருகிறது. எனினும் தற்காலம் நமது மதத்திலுள்ளவர்களில் 100-க்கு 95-வீதம் தனது கர்மாக்களைச்செய்யவேண்டிய வழிகளையும் அதற்குரிய மந்த்ரங்களையும் சரிவர அறியாதவர்களாயிருக்கின்றனர். சுருங்கக் கூறின் கோதிப் ப்ரவாஸம் கூட அறியாதவர்கள் பலர். மற்ற 5-ல் 4-வீதம் உண்மை குறைவாயும் வெளிக்குமட்டுமாயிருக்கும் (இதைத் தாங்க முடியாது உள்ளிருக்கும் வருத்தத்தால் அண்டப்பட்டு எழுதினேன். ஆகையால் பெரியோர்கள் மன்னிப்பாராக)

கள் விளக்குகின்றன. காவேரிக்கரையில் நடந்த பிராமணோத்தர வைஷ்ணவ கூட்டத்தில் திருவாய்மொழி அர்த்தம் ஆதரிக்கப்பட்டது. ஆதலின் வயிற்றின் கொடுமைக்காக அபாத்திரத்தில் ஸம்பிரதாய தர்ம ரஹஸ்யங்களை வெளியிட்டு பலருக்கும் பெருந்தீங்கை விளைவிக்காதிருக்க வேண்டும்.

ராவ்பஹதூர் வாழி. சென்னை சர்வகலாசாலை பண்டித பிரும்மஸ்ரீ பண்டிதராஜ பஞ்சநத சாஸ்திரிகளுக்கு ஷ்டி பட்டமளிக்கப்பட்டது. சென்றவாரம் பலர் அவர்க்கு கொண்டாடி வாழ்த்தினர். இது வெகு அபூர்வமான சம்பவம். மஹாமஹோபாத்யாய பிருதுக்கு 100 ரூபாய் ஆண்டிற்குக் கொடுப்பது வழக்கம். மற்றும் சில பிருதுகள் அளிக்கவேண்டும் என நாம் முன் கோரியுள்ளோம். ஆனால் பண்டிதருக்கேற்ற நல்ல வாசகமுள்ள பிருதுகளையே அளித்தல் வேண்டும். பண்டிததாது பாண்டித்யத்தை இது விளக்கவில்லை.

நிற்க, இம்மாதிரியான உள் கார்யங்களைத் திருத்தாது வெளியில் (அதாவது சட்டசபை முதலியன) போய் நாம் வாதாடுவதால் கண்டஷோபம்தான் மிச்சம் வரும். ஏனெனில் நாம் சிறுதொகையினராயிருப்பதே. ஆதலால் அதைப் பலப்படுத்தவும் ஜனங்களை போதித்து நமது வழியில் திருப்பவும் நமது மதாசாரியர்களை முன் வந்து பெரிய மனிதர்களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து பணவுதவி செய்து அப்பணத்தால் கிராமந்தோறும் சென்று பிரசாரம் செய்து, போதாவிடில் ஜில்லாவிற்கு 2-வீதம் பிரசாரகர்களை வைத்து பிரசாரம்செய்வித்து குறைந்தபக்ஷம் சந்நியாவந்தனமாவது சரிவர ஜனங்களையனுஷ்டிக்கச் செய்து அவர்களுக்கு மதப்பற்று ஏற்பட்டால்தானே நமது நிலைநிற்கும்? நம்மில் ஒற்றுமையிருந்தால் அரசாங்க நியமம் தான் நம்மை யாது செய்யும்? இல்லாமல் ஆங்காங்கு மூலை முடுக்குகளில் சத்தம் போடுவதால் என்ன பலன்?

மேலும் தற்காலம் நமது வைதிக கர்மங்களை அக்ஷரஸ்வரப் பிசகில்லாமலும் ஒழுங்காகவும் நடத்தக்கூடிய புரோஹிதர்களுமரிதாகத்தான் இருக்கிறது. வேதமறிந்தவர்களுக்கு விருப்பத்தியில்லை அஃதுள்ளவர்க்கு இது இல்லை ஆகலால் குறைந்த பக்ஷம் கிராமத்தில் அத்யயனமும் எல்லா சாஸ்திரங்களின் பிரகாரணத்த ஞானமும் ஒரே சமயத்தில் ஏற்படும்படியான திட்டத்துடன் ஒருநல்லரி .... சேர்த்து பிரம்மசரியம் முதலிய நியமங்களுடன் படிக்க ஏற்பாடு செய்தால் முன் சொன்ன குறைகளும் நீங்கும் அவர்களே மதப்ரசாரமும் செய்வார்கள். அவ்விதம் தற்காலம் அதிக சிரமமில்லாமலே நடத்தலாம். ஏனென்றால் திருவானைக்காவலில் ஸ்ரீமதாசாரியாள் நடத்திவரும் பாடசாலையை தனிகர்கள் .... மாற அதே சௌகரியமாயிருக்குமென்பதே.

ஆதலால் இவ்விஷயத்தில் சிறிது ஜாக்ரதையுடன் தனிகர்களும் மதாபிமானிகளும் மதத்தலைவர்களும் கண்ணைச் செலுத்தி முறைப்படி வாறு நடத்த ஏற்பாடு செய்தால் இனியும் சிறிது காலமாவது கலியின் கொடுமை நீங்கி உலகம் நல்வழியைப் பின்பற்றி நடக்கும். ஆதலால் அங்ஙனம் செய்ய அப்பெரியார்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பரமபதம் அடைந்தார்.

கும்பகோணம்.

இவ்வூர் பாட்டாசாரியர் தெரு ஸ்ரீ-உ-வே வித்வான் தாதாசாரியஸ்வாமிகள் சென்ற சனிக்கிழமை மாலை தமது 77-வது வயதில் பரமபதமடைந்ததைப் பரிவு விஷயம் மிகவும் துக்கிக்கத்தக்கது. ஸ்ரீ ஸ்வாமிகள் சிறிது நாளாக உடம்பு அஸௌக்யமாயிருந்தார். ஸ்வாமிகள் பெரிய மஹநீயவம்சத்தில் உதித்தவர். ஸ்ரீ நாத முனிகள் திருவம்சத்தில் உதித்தவர். கும்பகோணத்தில் .... நன்கு மதிக்கப்பட்டு மஹாவித்வான்கள் விளங்கி பலருக்கும் பாடப்ரவசனம், செய்துவந்த மகாஸ்ரீ ராகவசாஸ்வாமி என்ற மஹானின் திருக்குமாரராவர். மிகுந்த படிப்பும், ஆசாரங்களும், ஆத்ம குணங்களும் நிரம்பிய பெரியார். ஸ்ரீ வேதாந்ததேசிகர் முதலிய பூர்வாசார்யர்களுடைய கிரந்தங்கள் பலவற்றிற்கு சிறந்த வியாக்யானங்கள் செய்திருக்கிறார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் தஞ்சைஜில்லா பிராமண ஸபையின் உபத்தலைவர்களில் ஒருவராயிருந்து ஸநாதனதர்ம இயக்கங்களில் தீவிர சிரத்தை காட்டிவந்தார். வேத, வேதாந்தங்களிலும்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

ரே. திருமலை அய்யங்கார்.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற தமிழ்ப் பழமொழியை அறியதார் ஒருவரும் இரார், இது மிகவும் அர்த்தபுஷ்டியுள்ளது. "பார்மேல் முயன்றுன் முடியாப் பொருள் உண்டோ?" என வினவுகிறார் தண்டியலங்காரக்காரர். விடாது முயலவே தாம் பெருமை உடையவராவர். அரிய தொழில்களும் எளிதில் முடியும். முயற்சி செல்வத்தையும் அஃதின்மை தரித்திரத்தையும் உண்டாக்கும். முயன்று செய்த் தொழில் ஊழ்வகையால் கருதிய பயனைத் தாராதாயினும் முயற்சியானது தனக்கிடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு கொடுக்கும்; பாழாகாது. தெய்வத்தால் இடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன்று. முயற்சி மேற்கொண்டொழுகுவார் என்றும் எக்காரணத்தை முன்னிட்டும் இகழ்ச்சியடையார். அத்துடன் நிற்காது. புகழ்ச்சியே அடைவர் என்பது வெளிப்படை. என்றும் நிலவி நிற்கும் புகழுடம் மெய்துவர் முயற்சியின் திருவினையைக்கைக்கொண்டவர். ஆனால் இம்முயற்சி விடாமுயற்சியாய் இடைவிடாது நடத்தல் வேண்டும். இன்றேல் அதன் பூர்ண பலம் கிடைப்பதரிது.

ஊக்கம் என்பது ஆக்கத்திற்கு அழகு. சோம்பலை விட்டொழித்தாலல்லது எடுத்த காரியம் கை கூடுதல் இயலாத காரியம். படைப்புப் பொருள்களிற் பலவகையினும் சிறந்த மனிதன் தாளாண்மையாலேயே தக்க நிலை அடையலாம். எல்லா நாட்டுச் சரித்திரங்களிலும் முயற்சியின் தத்துவத்தையும் வீர்யத்தையும் அதிசயிக்கத் தக்க பலனையும் விளக்கக்கூடிய பகுதிகள் பல உள. அவரவர் அநுபவத்திலும் இதனை நன்கு உணரலாம். பகீரதப் பிரயத்தனம் என்பது நம்மவர் அறிந்ததே. தன் முதாதையரை நல்லுலகுக்கனுப்பி, சகல பாபத்தையும் அனைவர்க்கும் போக்க வல்லமையுள்ள விஷ்ணுபதி பகீரதியாய் அன்று முதல் இன்றளவும் புனிதமாகப் பிரவஹித்துப் போவது அச்சூரியவம்சத்து திலகனை பகீரதனின் விடாமுயற்சியின் பலனேயாகும். "என்னனைய முனிவரும்" என்று தாமேயும் புகழ்ந்து கூறும்படியான சக்தியை கௌசிக முனிவனுக்கு ஈந்தது அவன் இடைவிடாத முயற்சியே. மறையுங்காணுக்கரியவன் உருவத்தைக் கண்களாரக் கண்டுகளிக்க உதவியது, இளந்துருவனின் இணையற்ற முயற்சியே. பன்முறைத் தோற்றோடிய ராபர்ட் புரூஸ் சிலந்திப் பூச்சியின் செய்கையைக்கண்டு மறுபடியும் யுத்தகளம் புகுந்து ஜயம் பெற்றதின் மர்மம் அவனிடம் குன்றாது நின்ற முயற்சியே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியின் அஸ்தமிப்பதில்லை என்று பிருது கூற இடமளிப்பது அவ்வாளுகையை நடாத்துபவரின் வீங்காத விடாமுயற்சியே. தோல்வியுறினும் மயங்காது வீரத்துடன் எக்காரியத்தைச் செய்தாலும் ஜயம் அடைவது திண்ணம்.

சொந்த அனுபவங்களைக் கூறல்மிகையாகாதென நினைத்து ஈண்டு சிலவற்றைப் பகர்வாம். "அறிவுரைக் கொத்து" என்ற பெயர் புனைந்து சொன்ன சர்வ நலா சங்கத்தாரால் அனுமதிக்கப்பட்ட ஆக்ஷேபகரமான புத்தகத்தை எடுத்துவிடும்படி முதன் முதல் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 1-8-1935 ல் பொதுக் கூட்டம் கூட்டிப் பலமாகக் கண்டித்ததின் பயனாக இனி அம்மாதிரி புத்தகங்களை வைப்பதில்லை என்ற உறுதிமொழி வந்திருப்பதை அறிஞர் அறிவர். "கலப்பு விவாஹ மசோதாக் கண்டனக் கூட்டம்" இச்சங்கத்தின் சார்பில் 27-8-35 நன்றாக நடந்ததின் பயனாக அம்மசோதா சமீபத்தில் டில்லி சட்டசபையில் முழுத் தோல்வியுடன் புதைக்கப்பட்டதையும் அனைவரும் அறிவர். அவ்வப்போது இவைபோன்ற கூட்டங்கள் நடத்தி ஸநாதனிகளின் உண்மை அபிப்பிராயங்களை வெளியிட்டதனாலேயே நன்மையை அடைந்தமை நாடறியும் எனவே முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

ஆனால் நாம் செய்யும் காரியங்களை உற்சாகத்துடன், விடாமுயற்சியோடு, சுயநலங்கருதாது, தெய்வபக்தியுடன் செய்தல் அத்யாவசியகம். ஆடிக்கொருநாள் தைக்கொருநாள் என்றிருத்தல் ஆகாது காலசக்கரம் அதிவேகமாகச் சுழல்கிறது. அரைநொடி கூட வீணாக்குதல் கூடாது. ஒவ்வொருவரும் தம்மாலியன்றவரை தர்மஸேவையில் இறங்குதல் வேண்டும். பல துளி பெரு வெள்ளம். ஐம்பது வருடகாலங்களாக விடாமுயற்சியுடன் உழைத்து வந்த காரணத்தாலேயே எவ்வழியிலும் எங்கும் வெற்றி பெறுகின்றனர். பிறரை நிந்திப்பதோடு மாத்திரம் நின்றால் பயனில்லை. மதவிஷயங்களில் சநாதனிகட்கு எல்லா கக்ஷியினரும் ஒன்றுதான். பாதுகாப்புகளுக்கு யாசிப்பதில் எள்ளளவும்பயனில்லை நம் வலிமை வெளிப்பட்டாலன்றி அயலார் நம்மை கௌரவிக்கமாட்டார்கள். ராஜீய விஷயங்களில் பூர்ண அபிப்பிப்பிராயமிருக்கும் பக்ஷத்தில் அக்கக்ஷியுள் புகுந்து சநாதனிகள் பெரும்பான்மையோராக ஆக்கிவிட்டால் மெஜாரிடி அபிப்பிராயம் மதக்கோட்பாடுகளுக்கு வேறாக இருக்க முடியுமா? நமக்காவது தனித்த உறுதியான ராஜீய திட்டங்களை வைத்துக்கொண்டு தனிக்கக்ஷியாகநின்று போராடவேணும். இல்லையேல் பெருங்கட்சியினரோடு சேர்ந்து தேவதேச ஸேவைகளை பழுதற இயற்றல் வேண்டும். இதனை ஸநாதனிகள் நன்கு பராமர்சித்து சீக்கிரத்தில்முடிவான ஏற்பாடுகள் செய்து தகுந்த பிரசாரம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

பிரசாரத்துக்கு வேண்டுவன பணமும் கைங்கர்ய புத்தியுள்ள தியாகிகளுமே. ஊரூராய்ச் சென்று நம் திட்டங்களை நன்கு கற்பித்தல்வேண்டும். கிராமஸபை, நகரஸபை, ஜில்லா, மாகாணஸபை, அகில இந்திய ஸபைகள், ஸ்தாபித்து ஏகோபித்த மனத்துடன் உழைத்தல் மிகவும் ஆவசியகம். நம்முடையதென்ற தமிழ் ஆங்கிலத்தினசரிகளைத் தனியே நடத்த நாட்கடறுமானால், நமக்காக உழைத்து வரும் 'இந்துநேசன்' 'ஆர்யதர்மம்' இவற்றை ஏன் பலப்படுத்தக்கூடாது! இதற்கு உடனே செய்யவேண்டுவதைத் துவக்கவேண்டும். இவைகள் இருட்டறைகளில் உறங்குகின்றன. இவைகளைத் துயிலெழுப்புதல் நம் முதற்கடமையாகும். முன்னதற்கு முப்பத்தாறுவதாண்டு நடக்கிறது. சென்னையிலிருந்து வெளிவருகிறது. பின்னது நடுநாட்டின் நகரமான கும்பகோணத்திலின்று வருகின்றது. அதன் இருபத்திரண்டாம் ஆண்டு நடைபெறுகிறது. அது முதன் முதலாக பதினாறு பக்கங்களில் வர முயற்சிக்கலாகாதா? அது எங்கும் புகுர இடஞ்செய்தல் நலமல்லவா? வாய்ப்பறை சாற்றுவதுமாத்திரம் போதுமா? கூடுமானால் அதை விமிடைட்கன்சர்ன் ஆக ஆக்கி மிக்க வீர்யத்துடன் வெளிக்கிளம்புமாறு செய்தல் நம் கடமையல்லவா? தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு நின்றுவிட்டால் போதுமா? தனவந்தர்கள், மதாபிமானிகள் முனைந்தால் முடியாததும் உளதோ? இதுகாறும் நமக்கு உதவியதை நன்கு பலப்படுத்தி மேற்செல்லலாகாதா? ஆர்யதர்மத்தின் தனிப்பிரதி சென்னையில் ஒரு அபிமானிக்கு வேண்டும் என்றால் என்செய்வது? முழித்து விழித்து நிற்கவேண்டுவதுதானே? தனவந்தர்கள் பணம் எப்படியெல்லாமோ அழிகின்றதே? அடிக்கடி மனச்சஞ்சலப்படுவதில் சற்றும்பிரயோஜனமில்லை. நான்கு பக்கங்கள் பூர்ணமாக ஆங்கிலத்தில் வாராவாரம் ஆர்யதர்மத்தில் மழமழப்பில்லாதவர்களால் கட்டுரைகள் வெளிவரின் எவ்வளவோ நன்மையுண்டு, இதனையும் அறியோர் நன்கு கவனிப்பாராக.

ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் ஸநாதனித் தொண்டர்கள் அடிக்கடி தங்கள் அபிப்ராயங்களை ஒன்றுபடுத்தி வேலைசெய்ய இப்பத்திரிகைகள் மிக அனுகூலமாக இருக்கும். பகவத் கிருபையால் ராவ்சாகிப் என். நடேசய்யரவர்கள் நமக்குத் தலைவராகக் கிடைத்துளார். அவரும் வெறுப்புறாமல் தலைவர் சொற்படி கேட்டு நாம் ஏகோபித்த மனத்தினராய் விடாமுயற்சியுடன் உழைப்பின் வெற்றி நம்மதே. பண்டித சிகாமணிகளைப்போற்றல் வேண்டும் பிராசீன சம்பிரதாய முறைகளைக் கைவிடலாகாது தானடங்கித் தன்குலமடங்கும். ஸநாதனதர்ம ஸேவையில் ஈடுபடுபவர்கள் முதன் முதல் தங்களைச் சீர்திருத்தம் செய்துகொண்டு பிறரை நல்வழிப்படுத்த முயலவேண்டும். தாமே தம்மைச்சேர்ந்து தம்ஆக்ஞைப்படி நடக்க இருப்பவரோ சீர்கேடான நிலைமையிலிருந்து அவர்கள் பரோபதேசம் செய்தால் அது எள்ளளவும் பயன்பயக்காது. அநுட்டிப்பவன் உபதேசமே பயனளிக்கும். எனவே தம்மை முதலில் சீர்திருத்திக்கொண்டு இத்துறையில் இறங்குவது நலம். பூர்ண பலம் உண்டாகும்.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையாராதலின் நாம் உறுதியுடன் நல்வழியில் நின்று தீவிரமாகச் சோர்வுறாது இடைவிடாமல் நற்காரியத்தில் இழிவோமாக. அமலன் அருள் புபுகுவன். எங்கும் அறம் ஓங்கும். அல்லல் போம், இன்பம் மல்கும்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸம்பிரதாயக் கிரந்தங்களிலும் ஆழ்ந்த ஞானம் பெற்றவர். குடந்தை விசிஷ்டாத்வைத ஸபையில் பரீக்ஷாதிகாரியாயும், நிர்வாஹ ஸபை மெம்பராயுமிருந்தவர். சிரௌதவித்யையிலும் நல்ல பரிசயம் பெற்றவர். கும்பகோணம் ராஜா பாடசாலையின் நிர்வாஹத்தை சுமார் 15 வருஷகாலம் ஏற்றுக்கொண்டு வித்யாபிவிருத்தி விஷயமாக மெச்சத்தக்க சிறந்த காரியங்களைச் செய்தவிந்தார். இந்த ஸ்வாமிக்குச் சத்ருக்களே கிடையாதென்றுசொல்லலாம். அவ்வளவு சாத்விக மூர்த்தி.

இத்தகைய பெரியாருடைய பிரிவினால் குடந்தைநகரமும் வைதிக உலகமும் சோபையற்றுப்போய்விட்டதாகவே எங்கும் நினைக்கப்படுகிறது. ஸ்வாமிகளின் தேஹவியோகத்தைக்கேட்டு வருத்தப்படாதவரில்லை. முதல்தினத்தன்று பிரம்மவேதவிதிப்படி ஸம்ஸ்காரம் அவருடைய குமாரர் வித்வான் ஸ்ரீராகவாசாரியரால் வெகு விசேஷமாக நடத்திவைக்கப்பட்டது. மித்ரர்களும், பந்துக்களும், சிஷ்யர்களும் ஏராளமானபேர்கள் அன்று கூடியிருந்தனர். ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில் முதலிய எல்லா விஷ்ணுதேவாலயங்களிலிருந்து மரியாதைகள் வந்தன. ஸ்வாமிகளின் இரண்டாவது குமாரர் ஸ்ரீமான் டி. கிருஷ்ணமாசாரியார் M. A. மதுராந்தகத்தில் ஸ்கூல் இன்ஸ்பெக்டராயிருந்து வருகிறார். ஸ்ரீ ஸ்வாமிகளின் குடும்பத்தாருக்கு நமது மனப்பூர்வமான வருத்தத்தைதெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஓர் அநுதாபி,

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ குலசேகராழ்வார் திருநாட் கொண்டாட்டம்.

மேற்கண்ட தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் 22-2-37 ல் திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள் கோயில் தவன உத்ஸவ பங்களாவில் ஸ்ரீகுலசேகராழ்வார் திருநக்ஷத்திரக் கொண்டாட்டம் மிக சம்ப்ரமத்துடன் ஆரம்பமாகியது. சமீபத்தில் நடந்த ஸநாதன தர்ம மஹாநாட்டுக்காகப் போடப்பட்ட பந்தலில் வெகு நேர்த்தியாக ஆடவர் ஒருபால் பெண்டிர் ஒருபால் மிக கம்பீரமாகக் குழுமியிருந்தனர். கூட்டம் அதிகமே. மந்தமாருதம் ஜில்லென்று வீச நிலைக்கண்ணாடிகள் சுவரில் விளங்க சித்திரைத்திரைகள் கழன்று ஆட வெகு நேர்த்தியாக விளங்கிற்று பங்களா.

கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் காரியதரிசி எழுந்து அன்று மாசிப் புனர்பூசமென்றும், அன்றுதான் தூய்ய குலசேகரன் அவதரித்ததாகவும் அவரது ராமபக்தி அளவற்றதென்றும், பெருமாள் ராகவன் பெரியபெருமாள் அரங்கநகரப்பன் குலசேகராழ்வாரைப் பெருமாள் என்று அழைப்பது சம்பிரதாயம் என்றும் கூறி அன்னாரின் வைபவத்தைப் பிரசங்கிக்குமாறு ஸ்ரீ-உ-ப-வே. வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமியைவேண்டிக் கொண்டார்.

ஆச்சாரியார் அவர்களும் வெகு ரமணீயமாக கர்ணாம்ருதமாக நான்கு மணி நேரம் பிரசங்கமாரி பொழிந்தனர். ஆழ்வார் தனியன் வரலாறு, வியாக்யானம், அவதாரம் இடைவிடாத ராமபக்தி, கோயிலின் சிறப்பு 'ஆராதவருளமுதப்பாகரம்' வியாக்யானம், ஆழ்வாரின் ஸ்ரீரங்க யாத்திரை ஸ்ரீவைஷ்ணவ ததீயாராதனை, மந்திரிகள் சூழ்ச்சி, ராமாயண ஈடுபாடு, வான்மீகி கம்பராமாயண இன் கவிகளின் சிறப்பு, கோயிலடைதல், பாடி மகிழ்தல், குலசேகரவல்லியார் திருமணம், திருமலை அடைந்துவேண்டல், பலபடியாக அவாவுறுதல் முதலியவற்றை நன்கு தெளிவித்து ஆழ்வார் பாசுரங்களின் சிறப்பு, நம் நாட்டின் மகிமை, குலதர்ம மேன்மை, ஸ்திரீ தர்ம வைலக்ஷண்யம், தர்ம ரக்ஷணத்துக்கு பாடுபட வேண்டிய முறைகளையும் பற்றி விசதமாக விளக்கினார்.

ஸ்ரீ-உ-ப-வே. பண்டித திருவாலி ராமாநுஜாசார்ஸ்வாமி வந்தனோபசாரம் அளிக்கையில் தமிழ்ச் சங்கத்தின் அரிய ஸேவையை சிலாகித்துடன் மதக் கல்வியற்ற படிப்பு பயன்தராது என்று விளக்கி, சங்கத்தின் மாதப் பத்திரிகையாக வெளிவரும் 'வகுளமாலை'யை அனைவரும் ஆதரிக்கும்படி பேசி, நம் சிறார்கள் நன்னெறி நின்றொழுகும்படி செய்வதே முதற்கடமை என்று வற்புறுத்தி, வந்திருந்தோர் அனைவர்க்கும் வாழ்த்துக்கூறினார்.

சந்தனம், பழம், வெற்றிலை முதலிய வழங்கிய பின்னர் கொண்டாட்டம் இரவு $7\frac{1}{2}$-மணிக்கு மங்களகரமாக முடிந்தது.

ப. ரே. திருமலை அய்யங்கார்.

ஆழ்வார் திருநகரி.

மாசிமகோத்ஸவம்:— இந்நகர் ஸ்ரீ ஆதிநாதர், ஆழ்வார் தேவஸ்தான மாசிமகோத்ஸவம் 20-2-37 சனிக்கிழமையன்று த்வஜாரோகணமாய் அதிவிமரிசையாய் நடந்தேறி வருகிறது. 28-2-37 ரதோத்ஸவமாகும் மறுதினம் தொடர்ச்சியாக இரண்டு நாள் தெப்போத்ஸவம் சிறப்பாக நடைபெறும். இம்மகோத்ஸவத்தை ஒட்டி பல அரிய உபன்யாஸங்களும் நடைபெறும்.

பெரிய தேர் ஏலம்விடும் யோஜனை.

இந்நகர் கோயிலுக்கு மாசி பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய நாலு உத்ஸவத்துக்கும் வெவ்வேறாய் நான்கு ரதம் இருந்துவருகிறது. நான்குமே பெரியதாயினும் வைகாசித் தேர் சகல க்ஷேத்திர ரதங்களையும்விட மிகப் பெரிதாகும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ வானமாமலை மடாதிபதிஜீயர் ஸ்வாமிகளால் செய்துவைக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுவதுடன் பல ஆண்டுகளாகஷெ தேர் இழுபடாமலே இருந்துவருகிறது. இந்த ரதம் நிலை வந்துசேரஒரு மாதம் ஆகிறது அதற்கு பதில் மாசி உத்ஸவத் தேரையே வைகாசி மாதத்திற்கும் உபயோகப்பட்டு வருகிறது. தற்போது பெரிய தேர் ஜீர்ணமாயிருக்கிறதெனவும் அதை ரிப்பேர் செய்து இழுக்கவாவது அப்புறப்படுத்தவாவது செய்யவேண்டுமென தேவஸ்தான போர்டாரால் தகவல் அறிவிக்கப்பட்டதன் மேல் கோயில் டிரஸ்டி ஸ்ரீவைஷ்ணவமடாதிபதிகளுக்கும் முக்யஸ்தர்களுக்கும் இதுவிபரம் அறிவித்து எவ்விதம் செய்யவேண்டும் என்பதற்கு பொதுக்கூட்டம் நடத்தியதன் மேல் பக்தர்களின் பிரார்த்தனைக்கிணங்க ஸ்ரீ வானமாமலைமடாதிபதி ஜீயர் ஸ்வாமிகள் தேரை ரிப்பேர் செய்து ஓடும்படிசெய்வதாக வாக்குறுதி அளித்திருப்பதாகவும் அதன் மேல் தேரை அப்புறப்படுத்தி ஏலம்விடும் யோஜனை போர்டார்களால் கைவிடப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

சமூக பகிஷ்கார நிராகரிப்பு. ராஜீநாமாவும் அபராதமும். எலக்ஷன் எதிரொலி.

இந்நகர் பஞ்சாயத்துக் கோர்ட் பிரெசிடெண்டு தேர்தலில் கோனார் வகுப்பைச் சேர்ந்த ஷெ போர்ட்டுமெம்பர் ஒருவர் யாதவ சமூகத்தவரின் ப்ரியப்படி ஓட்டுசெய்வதற்காக சமூக பகிஷ்காரம் செய்ததான விபரம் சென்றவார ஆர்யதர்மத்தில் வெளியாயிருக்கிறது. ஷெ மெம்பர் கோனார் சமூகத்தார்கள் பிரஸ்தாபித்த பிரகாரம் பொதுக்காரியமொன்றுக்கு அவர்கள்குறிப்பிட்டபடி தொகையும் கொடுத்து மெம்பரையும் ராஜீநாமாச் செய்துவிட்டதாயும் அதின்மேல் பகிஷ்காரப் பிரயத்தனம் கைவிடப்பட்டு நிராகரிக்கப்பட்டு விட்டதாயும் தெரிகிறது.

ந. வி. நி.

சென்னை.

ஞாயறு செவ்வாய் லக்ஷ்மீபுரம் ஸ்ரீமத்ராமாயணம் திங்கள் மார்ப்லம் கர்க்க ஸம்ஹிதை புதன், வியாழன் ரூலே பாரதம். வெள்ளி சனி மைலாப்பூர் ஸ்ரீமத் பாகவதம். பிரதிதினம் மாலை ஸ்ரீ சங்கரமடத்தில் ஸ்ரீ மஹாஸ்காந்தம். இந்த உபன்யாஸங்கள் மூலமாக பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் ஸநாதன தர்ம ப்ரசாரம் செய்து பலரை ஸந்த்யாவந்தனம், தேவபூஜை, ஔபாஸனம், வைச்வதேவம் இவைகளைச் செய்யும்படி செய்து வருகிறார். ஆங்காங்கு பல வேதகாவ்விய வகுப்புகளையும் ஏற்பாடு செய்துவருகிறார். இது சென்னை எனும் கடலில் ஸஞ்சாரமெனும் பெருங்காயத்தைக் கரைத்தது போல் போகவில்லை. சுயநலத்யாகம் செய்து காலத்தை ஒட்டி நல்வழியில் உபதேசிப்பவர் பலர் தேவை.

ந. நிருபர்.

ஸநாதன தர்மஸபை, திருவெண்காடு.

25—2—37ல் நடந்தமேற்படி ஸபையில் ஸ்ரீமான் முத்துஸாமி சாஸ்திரிகள் பேசியதாவது;—

இவ்வுலகில் சிலரை அவர்செய்த தவத்தினால் மேன்மையடைந்தவர் என்றும் சிலரை அவர்செய்தவினையால் கஷ்டமடைந்தவர் என்றும் நன்கு அறிகிறோம். ஆயினும் அவ்விஷயத்தை அநுஷ்டானத்தில் நாம் கைக்கொள்ளவில்லை. அதை முன்னிட்டே நாம் அனுபவிக்கும் துன்பங்கள் விலகிற்று எனநினைக்கவும் முடியவில்லை. ஆகையால் இனிதாமதிக்காமல் நாம் க்ஷேமத்திற்கு முக்கியஸாதனத்தைத்தேட வேண்டும். அவ்விஷயத்தில் பெரியார் நம்மிடம் கருணைபுரிந்து நாம் நல்வழி பெற கர்மாநுஷ்டானத்தையே விதித்தார். அது நம்மாலே எவ்விதத்திலும் விலக்கத்தகுந்ததல்ல. பாமரர் மனதின் காலுஷ்யத்தை விலக்கவும் விவேகி லோகஸங்கிரஹத்தை முன்னிட்டும் கர்மாவை அநுஷ்டிக்கவேண்டும். அதுவிஷயத்தில் எல்லோரையும் பிரார்த்தனை முறையில் வற்புறுத்துகிறேன என்றார்.

பின்பு பிரும்மஸ்ரீ வைத்யநாதசாஸ்திரிகள் பின்வருமாறுபேசினார்:—இந்து ஸமூகத்திலுள்ள ஜாதிபேதங்களும். ஆசாரங்களும் ஜாதிக்கட்டுப்பாட்டினால்உண்டானதென்றும் ஸ்வயநலம் கருதி ஏற்படுத்தியதென்றும் சொல்லுகிற நவீன ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறதை அனுசரித்து ஜாதிமதங்களை ஒழிக்க வேண்டுமென்று பிரசாரம்செய்வது நமதுவேதசாஸ்திரங்களை சரியாக உணராததின் பலனேயாம். ஆகமவிதிப்படி வாமமார்க்கத்தை அனுசரிக்கும் ஆதித்ராவிடர்கள் சிவ விஷ்ணு ஆலயங்களில் பிரவேசிக்காமல் இதரதைவங்களை உபாஸிப்பதே அவர்களுக்கு மேன்மையுடைய முக்கிய ஸாதனமாகும். தைவம் எங்கும் நிறைந்திருப்பது உண்மையாயினும் அதைபறிந்து ஈசுவரனின் அருளைப் பெறுவதற்காகவே ஸ்வல்பமான அநுசாரங்களால் ஸாந்நித்தியம் குறைபடாமலிருக்கும்படிக்கு முன்காலத்தில் மஹரிஷிகளால் திவ்ய க்ஷேத்திரங்களில் ஆலயப்ரதிஷ்டை செய்யப்பட்டது. அதில் அதிக அநுசாரமுள்ளவர்களைப் புகுவிட்டால் ஆலயத்தின் லக்ஷ்யம் சித்திக்காது. எவ்விதத்திலும் நாம் முன்னோர்களின் நோக்கத்தை அநுசரிக்காமலிருப்பது நமது க்ஷேமத்தைக் கெடுத்துவிடும். உத்ஸவ சமயத்தில் ஜனங்களின் ஆதரவை முன்னிட்டு 28—2—37ல் ஸபை நடத்தப்பட்டது.

ஸுப்ரமண்யசிவாசாரியார்

காங்கிரஸ்வாதிகளுள் அடிதடி.

லாகூரில் பெரிய கலஹம்.

லாகூர் நகர காங்கிரஸ்கமிட்டிக்கு உத்யோகஸ்தர்களை தேர்ந்தெடுப்பதற்காக 6உ யன்று நடந்தகூட்டத்தில் பிரமாதமான சண்டை ஏற்பட்டுவிட்டது. டாக்டர் ஸத்யபால் கக்ஷியும் டாக்டர் கோபிசந்த் கக்ஷியும் பரஸ்பரம் கற்களை வீசியும், தடிகளை உபயோகித்தும் அடித்துக்கொண்டன. பலருக்கும் பலமான ரத்தகாயம் ஏற்பட்டிருக்கிறதாம். ஒருவர் மிக்க அபாயமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். இந்தமாதிரிக் கலஹம் காங்கிரஸ்வாதிகளுள் இதுவரை நடந்ததில்லையாம்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு, திறுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்;
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

28175

141



அநாவசியமாக ஏன் - -

- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்திசெய்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

உபாஸனையில் ஓர் ஸம்சயம்.

உபாசனை என்பது தேவதையின் ஆராதனையாகும். அவ்வுபாசனையானது மந்த்ரத்தால் செய்யப்படும் கர்மமாம். அங்கமானது ஜபம், ஹோமம், தர்ப்பணம், போஜனம் என நான்கு அங்கங்களுடையதாம். உபாசனையானது வேத மந்த்ரங்களாலும், தாந்த்ரிக மந்த்ரங்களாலும் செய்யப்படும். முதலாவது ஜபமென்பது அந்த தேவதைக் குறிய மந்த்ரத்தால் தேவதையின் ரூபத்தை த்யானித்தலாகும். மந்த்ரங்களின் ஜபமென்பது அதனதன் தன்மைக்கு ஏற்றவாறு பல வகை கணக்குடையதாம். சாஸ்த்ரத்தில் குறிப்பிட்ட அளவு மந்த்ரஜபம் முடிந்தவுடன் ஜபக்கணக்கில் ($1\frac{1}{10}$) தசாம்சம் ஹோமம் செய்விக்கவேண்டிய தவசியமாகும். இவ்விதம் ஜப ஹோமாதிகளால் ஆராதிக்கவேண்டிய தேவதையை ஓர் ப்ரதிமையிலாவது அல்லது அதற்கு அமைந்த சங்கங்களிலோ, ப்ராண ப்ரதிஷ்டை செய்வித்து தக்கான ஆவாஹனங்களுடன் 16 அல்லது 10 அல்லது 5 உபசாரங்களுடனாவது (குறைந்தபக்ஷம்) பூஜித்தல் முக்யமாம். அந்தப் பூஜைக்கு ஆதாரமான தேவதையை தனக்கு எதிர்முகமாக இருப்பதாகவே நினைத்து பூஜையில் ஏற்பட்ட உபசாரங்களை செய்விக்கவேண்டும். நாம் மற்றொரு மனிதனுக்கு செய்யும் மரியாதையை நேர்முகமாகவிருந்தும் மனிதன் தான் அறியமுடியும். அதுபோலவே நாம் பூஜையில்செய்யும் மரியாதைகளையும் நம்மால் ஆராதிக்கப்படும் தேவதை அறிந்து கொள்ளுமாறு மதிரங்க நேர்முகத்துடன் நிருஹிக்கப் படுவதாக பாவிக்கவேண்டும். தேவதைகளுக்குச் செய்யப்படும் உபசாரங்களில் முக்யமானது நைவேத்யம் எனப்படும். எப்படி நாம் நம் குழந்தைகளுக்கு அபிமானத்துடனும் லாலனையுடனும் ஆஹாரத்தை ஊட்டுகிறோமோ அதுபோலவே உபாஸ்ய தேவதைகளுக்கும் ஆஹாரத்தை மிக பக்தி சிரத்தையுடன் ஊட்டுவதே நைவேத்யமாம். உபாசகனுடைய இஷ்டத்தைப் பொருத்து சாஸ்த்ர விதிகளில் கூறப்பட்ட ஆஹாரங்களையே தேவதைக்கு நிவேதிக்க வேண்டும். இவ்வாறு பூஜையில் இரண்டாவதான ஹோமமென்பதை விஷேகதி, அதிலுள்ள ஸந்தேகங்களை எழுப்புவாம்.

ஹோமமென்பது அக்னியிடத்தில் மந்த்ரத்துடன் ஆஹாரத் த்ரவ்யத்தைக் கொடுப்பதாகும். அவ்வக்னியானது பூமியில் சுத்தமான ஸ்தலத்தில் தேவதையின் தன்மைக்கும் உபாஸகன் மனோபீஷ்டத்திற்கும் ஏற்றவாறு கூறப்பட்ட குண்டங்களில் மந்த்ரத்துடன் வைக்கப்படும். குண்டங்கள் சதுரச்ரம் (சதுரம்) அர்த்தசந்த்ரம் (பாதிவட்டம்) த்ரிகோணம் (முக்கோணம்) யோனி (அரசிலை போன்ற) ஷடச்ர (அறுகோணம்) குண்டங்களென ஐந்து விதங்களாகும். இவ்வைந்து குண்டங்களில், சதுரச்ர ஷடச்ர குண்டங்களிரண்டுமே நான்கு திக்குகளிலும் ஒரேவித உருவத்துடன் இருப்பதாகும். மற்ற அர்த்த சந்த்ர த்ரிகோணயோனி குண்டங்கள் நான்கு பக்கங்களிலும் சமமில்லாதவைகளாயிருப்பதால் இவைகளுக்கு கோணங்கள் இருக்குமிடமும் வட்டமிருக்குமிடமும் முகங்களாக கருதப்படும் முதலில் கூறப்பட்ட இரண்டு குண்டங்களுக்கும் ஓர் குறிப்பிட்டதிக்கை நிர்ணயித்துக்கொண்டே கர்மம் நடத்தவேண்டும். குண்ட முகத்திற்கு எதிராகவே உபாஸகன் உட்கார்ந்து அக்னியை அதில் ஸ்தாபித்து, த்யானிக்கும் காலத்தில் அக்னிதேவனை ஒரே முகத்துடன் முக்கண்களுடன் இருப்பதாகவே த்யானிக்கும்படி ஆசாரியர்களால் விதிக்கப்பட்டிருக்கிறது. நம் கர்மமுழுவதிலும், அக்னி தேவன் நம்மை பார்த்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. உபாஸ்யமான அக்னியானது நேர்முகமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடனே 'அங்நேத்வம் அபிமுகோபவ' என்னும் ஓர் வாக்யம் அக்னி காரியங்களில் சொல்லப்பட்டு வருகிறது. சிராத்தாதி கர்மாக்களிலும் வரிக்கப்படும் ப்ராம்மணர்களுக்கு நாம் நேர்முகமாக இருந்து ஆஸனாதிகளை எதிர்முகமாகப்போட்டு உபசரிக்கிறது போலவே நமக்கு நேர்முகமாக இருக்கும் அக்னிதேவதைக்கும் எதிர்முகமாகவே ஆஸனாதிகளைப்போட்டு உபசரிக்க வேண்டியதென்று ஏற்படுகிறது. தற்காலம் வைதிக காரியங்களில் நடத்தப்படும் ஹோமங்களில் அக்னி குறிய உதக்திக்கை நோக்கிக்கொண்டிருப்பதாயும், நாம் அக்னிக்கு பின்புறமாக இருந்துகொண்டு அக்னிக்கு முன்புறமான கிழக்கில் இருந்து ப்ராசீதிக்கையும் க்ரமமாக ப்ரதக்ஷிண முறையில் தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளை கல்பித்து வருகிறோம். இவ்விதம் நாம் அநுபவத்தில் வைத்துக்கொண்டிருக்கிற க்ரியையின் க்ரமமானது சாஸ்த்ர சம்மதமாகுமா? இதற்குத்தக்க ஆதாரங்கள் சாஸ்த்ரங்களிலிருந்து எடுத்துக் கூறினால் மிக லோகோபகாரமாயிருக்குமாகையால், அறிவாளிகள் இதனை விளக்க முன்வருவார்களென்று நம்புகிறேன்.

பி. எ. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரி.

மன்னார்குடி.

மன்னார்குடி கீழ இரண்டாந்தெரு பிள்ளையார்கோவில் குத்தாலம் கூடலூர் ப்ரம்மஸ்ரீ ராமக்ருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் அடியில் கண்டபடி உபந்யாசம் செய்தார்-

பிப்ரவரி 22உ மைல்ராவணன சரித்ரம், 23உ அம்பரீஷ சரித்ரம், 24உ ஷை ஷை ப்ரதோஷமகாத்ம்யம் ஷை உபன்யாசங்களில் கதையுடன்கூட அனேக தர்மங்களும் ரொம்ப விமரிசையாய் உபன்யசிக்கப்பட்டன. கனதனவான்கள் எல்லாரும் ஸந்தோஷப்பட்டு இன்னும் சில நாள் இப்படி தர்மஸூக்ஷ்மங்களை உபதேசிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க சாஸ்திரிகள் அவர்களுக்கு அவகாசம் இல்லாததினால் ஊருக்குப் போய்விட்டார்கள். ஸநாதன தர்மசபைகளில் அவர்கள் அடிக்கடி உபன்யசிக்கும்படி செய்வது கேட்போர்களுக்கு ஆனந்தத்தையும் முன்னேற்றத்தையும் விருத்தி செய்யும். ஒரு நிருபர்.

திருமயிலையில் வனபோஜன மஹோத்ஸவம்.

திருவல்லிக்கேணியில் தவன உத்ஸவம்.

28—2—37உ ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் விசேஷ சம்ப்ரமத்துடன் திருமயிலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸப்பெருமாள் பிராட்டிமார்கள், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஸமேதராய் பிலாத்தோப்பு மண்டபத்துக்கு எழுந்தருளி அதிவிசேஷமாக திருமஞ்சனம் கண்டருளி அங்குசேர்ந்த ததீயர்களுக்குக்கண் குளிரக் காட்சிதந்தருளினார். தனித்துப்போடப்பட்டிருந்த பந்தல்கீழ் ஸ்ரீவைஷ்ணவ ததீயாராதனம் மிக நேர்த்தியாக நடந்தது. அனைவரும் அனுபவித்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

விசேஷ அலங்காரத்துடன் பெருமாளும் தேசிகனும் வீற்றிருக்க ஸ்ரீஉ.வே வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாச்சார்ய ஸ்வாமி மாலை 3-மணிமுதல் 6-மணிவரை 'பேயாழ்வார் வைபவம்' எனும் விஷயத்தை அதிரமணீயமாய் உபந்யசித்தார். அவருக்கு விசேஷ மரியாதைகள் நடந்தன.

சில தினங்களாக சைதாப்பேட்டையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தில்லஸ்தான ஸ்ரீஸ்வாமி அங்கு மாலை எழுந்தருளி ஸேவைபெற்று அங்குருந்தோரை அநுக்ரஹித்துச்சென்றார். வாத்யக்கச்சேரி இனிது நடந்தது.

திருவல்லிக்கேணி ஸந்நிதியிலுள்ள ஸ்ரீவரதராஜப்பெருமாள் தவன உத்ஸவங்களாவுக்கு எழுந்தருளி வழக்கம்போல் தவன உத்ஸவம் சிறப்பாக நடந்தது.

ப. மெ. திருமலை ஐயங்கார்.

முக்கிய கவனிப்பு.
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூரல் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— எஸ். கன்னுசாமி பத்தர், பெரியதெரு. கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam. Published by A Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்.

11-3-1937

4 ல

22 10

215176.

215176
31 MAR 1937 MADRAS

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22	கும்பகோணம். கலி 5038 தாது-ஷு மாசி-மீ - 28ஃ 1937-ஷு மார்ச்-மீ 11ஃ	ஸபு 10

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

சட்டஸபை மெம்பர்கள் மஹாநாடு.

இந்தியா முழுவதும் மாகாணச் சட்டஸபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மெம்பர்களின் கூட்டமொன்று டில்லியில் இந்த மாதம் 19, 20 தேதிகளில் கூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ்காரால்லாதவர்களும் இதற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்தை முன்னிட்டு ஸ்ரீமான் காந்தி முதலிய தலைவர்களும் டில்லிக்கு 14ஃயே வருகிறார்கள்- சட்டஸபையில் மெம்பர்கள் ஒழுங்காக நடந்து கொள்ளவேண்டியதைப்பற்றி அவர்களிடமிருந்து உறுதிமொழி வாங்கப்படுமாம் இதன் வாசகத்தை காந்திஜீ தயாரித்து வருகிறாராம்.

டில்லியில் 17, 18 தேதிகளில் நடைபெறப் போகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் முதலியவைகளை முன்னிட்டு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

காங்கிரஸ்-ஸர்க்கார் ராஜி ?

காங்கிரஸ்காரர்கள் சட்டஸபைகளில் மெஜாரிடிஸ்தானங்களைக்கைப்பற்றி விட்ட நிலைமையை யோஜித்து ஸர்க்காருக்கும், காங்கிரஸுக்கும் ராஜி செய்து வைக்கவேண்டுமென்று ஒருமுயற்சி டில்லியில் ஆரம்பமாகியிருக்கிறது இது பலிக்கு முன்பாக காந்திஜியும் வைஸ்ராயும் ஸந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்படுமென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது.

அடுத்த காங்கிரஸ் ராஸ் கிராமத்தில் நடக்கும்.

காங்கிரஸ் மஹாஸபையின் அடுத்த வருஷத்திய கூட்டம் கூர்ஜ்ஜரத்திலுள்ள ராஸ் என்ற கிராமத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்படும். இந்த கிராமம் சட்ட மறுப்பு வரிகொடா இயக்கத்தில் பலமாக ஈடுபட்டிருந்தது, 1938 பிப்ரவரியில் காங்கிரஸ் நடைபெறுமென்று காரியக் கமிட்டி முடிவுசெய்திருக்கிறது.

500 ரூபாய் சம்பள பிரேரணை.

சென்னை கவர்ன்மெண்டின் அங்கீகாரம்.

சென்னை கார்ப்பரேஷனில் இஞ்சினீர் முதலிய பெரிய உத்யோகஸ்தர்களுக்கு இனிமேல் ரூ 500 மேல் சம்பளம் கொடுக்கக் கூடாதென்று காங்கிரஸ் மெம்பர்கள் செய்த தீர்மானத்தை சென்னை கவர்ன்மெண்டார் அங்கீகரிப்பதாக உத்திரவு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்தஏற்பாடு புதிதாக இனிமேல் நியமனம் செய்யப்படும் உத்யோகஸ்தர்களின் விஷயத்தில் தான் அமுலுக்கு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இத்தாலியில் பிரஜா உற்பத்திக்கு ஆதரவு

விவாஹம் செய்து கொள்ளுகிறவர்களுக்கு ஸர்க்கார் உதவி.

இதாலி மந்திரி ஸபையின் கூட்டம் 4ஃ நடைபெற்றது. அந்த தேசத்தில் ஜனன விகிதம் குறைந்து வருவதைத் தடுத்து பிரஜா விருத்தியை அதிகரிக்கவேண்டிய விஷயமாக மந்திரி ஸபை யோஜனை செய்தது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதற்கு ஏற்றபடி வருமானம் கிடைக்க வழிசெய்யவும், அதிகக் குழந்தைகள் உள்ளவர்களுக்கு ஸர்க்கார் உத்யோக நியமன விஷயத்தில் அதிகச் சலுகை காட்டவும், விவாஹம் செய்து கொள்ளப்பிரியப்படுகிறவர்களுக்கு ஸர்க்கார் கடன் கொடுத்து உதவி செய்யவும் மந்திரி ஸபை தீர்மானம் செய்தது.

ராணுவ மசோதா விவாதம்.

காங்கிரஸ் மெம்பர்களின் அச்ரத்தை?

இந்தியா சட்டஸபையில் ராணுவச் சட்டத்தைத்திருத்தக் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவை ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் பலமாக ஆக்ஷேபித்துப் பேசினார்கள். இந்த மசோதா ராணுவத்தில் இந்தியருக்குள்ள உரிமைக்குப் பாதகம் செய்வதாக இருக்கிறதென்று வாதிக்கப்பட்டது.

ஆயினும் மசோதா மீது வோட் எடுக்கும் போது ஸர்க்கார் பிரேரேபணை ஜயித்துவிட்டது. மூன்று வோட்டு வித்யாஸத்தால் ஜனப்பிரதிநிதிகளின் பிரேரேபணை தோற்றுவிட்டது. சென்னையைச் சேர்ந்த காங்கிரஸ் மெம்பர் ஒருவர் சட்டஸபைக்கே வராததுடன், அங்கு வந்திருந்த சென்னை மெம்பர்கள் நாலுபேர்களும் ஓட்டெடுக்கும் ஸமயத்தில் அங்கு ஆஜரில்லாது தமாஷுக்குப் போய் விட்டதே இந்த தோல்விக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. காங்கிரஸ் கக்ஷி மெம்பர்கள் இதைப்பற்றி யோஜித்து மேற்படி மெம்பர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களாம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co,
மேலான T. T. M. A. மிஸ்ரி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷித் ஜெம்லைட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம், டென்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்

வாரக் குறிப்புகள்.

வே. ஸோ. சர்மா.

துலாபாரமும் தர்மமும்:— ஆகாகான் என்ற மகம்மதியருக்குச் சம எடை ஸ்வர்ணத்தை நிறுத்து அவருக்குக் காணிக்கையாக அளித்தனர். அந்த இருபத்தி மும்வாயிரம் பவுனையும் அவர் தன் ஸமூஹ நன்மையை நாடி சிஷ்யர்களிடமே அளித்தார். அத்தகைய சீடரும் குருவும் நம் மதத்தில் தோன்றுவாரா ?

நல்ல முடிவு ஏற்படுமா ? நமது பங்களவாத்யத்தால் முகம்மதியர் நியாகம் கலைகிறதென்ற சண்டை ஓயாது பலவிடங்களில் நடக்கிறது. ஸர்வேசுவானது செயலால் வடநாட்டில் அவர்களுக்குள்ளேயே ஓர் சாரர் வாத்யம் முழங்க சண்டைநடக்கிறது. இதன் மூலமாவது இச்சண்டை ஓய்ந்து நல்லகாலம் பிறக்குமென நம்புகிறோம்.

தலைநகரில் தலைவரால் தலை தூக்குகிறது, தார்மிகாது தலைவரான ஸ்ரீ கோவர்த்தன மடாதிபதி ஸ்ரீ பூரி சங்காசாரிய ஸ்வாமிகள் தர்மராஜ்யமென்னும் பத்திரிகையை இந்திய தலைநகரான டில்லிக்குக்கொண்டு சென்றது முதல் ஆங்கு தர்மம் தலைதூக்கி நிற்கிறது. பலர் ஸநாதன தர்ம சபையின் சார்பாக நகரசபை ப்ரதிநிதியாக நின்று அதார்மிகருடன் போர் புரிகின்றனர். தர்மம் வாழி தார்மிகர் வாழி ! தலைவர் வாழி ! வாழி !

அழகான பதில்:— கல்கத்தாவில் நடந்த ஸர்வமத மகாசபைக்கு ஸ்ரீ காந்தி எந்த மதம் உயர்ந்தது என்ற பொருள்படும்படி ஓர் கேள்வி கேட்டார். தலைவர் ஒவ்வொருவனுக்குக் தன் தாயே பெரியவள் என்றார். கேட்டவருடைய நோக்கமென்ன ? ஆனால் ஏமாந்திருப்பார் பாவம்!

சாஸ்திரி வருந்துகிறார்:— சென்னையில் கலாசாலை தினக்கொண்டாட்டத்தில் தலைமை வஹித்த மஹாகனம் வலங்கிமான் சாஸ்திரி "சீமாட்டிகளே, சீமான்களேஎன்று கூற முடியாமல் கேவலம் ஸ்ரீமான்களே என அழைக்க நேர்ந்ததற்கு அதிலும் மைலாப்பூரில் அப்படி நேர்ந்ததற்கு வருந்துகிறார் பாவம் ! இவ்வளவு வயதாகியும் ஏனிவ்வளவு மோகம் இவருக்கு? ஒரு வெகு சிலரைத் தவிர பல மஹாகுல ப்ரஸூதைகளான கற்பரசிகள் இவற் கூற்றிற்கு செவி மடுக்கார். பல சாஸ்திரிகள் பல யுகம் பாடுபடினும் பயனிரா !

மிக்க அவசியமே:—குடந்தை தர்மாபிமானிகளது முயற்சியால் பிராமண அநாதாலயம் நடப்பது மிகமிகக் கொண்டாடத்தக்கதே. விவாக விஷயத்திலும் இத்தகைய பேருதவி அவசியம் வேண்டியதே ! ஏழ்மைத்தனத்தால் பல கஷ்டங்களும் பாபமும் ஏற்படுகின்றன. சென்னையில் ஸ்ரீமான் டி. ஆர். வெங்கட்டராமய்யர் அட்வகேட் அவர்கள் இத்தகைய ஸங்கடத்திலுள்ள ஓர் ஏழைப் பெண்ணுக்கு விவாகம் நடத்தினர். அநாதரக்ஷணம் சங்கம் அவசியம் வேண்டுமென யோசித்து விரைவில் சென்னையில் ஆரம்பிப்பதாயிருக்கிறோம்'

அனுபவத்தில் காட்டுக:— தேசீயசபை பதவி ஏற்பதை பலர் ஆமோதிக்கின்றனர். மந்திரிபதவி ஏற்று கூடியவரை வரிகளையும், அள்ளி அள்ளி கொடுக்கும் அதிகச்சம்பளங்களையும் குறைத்து தர்மத்தில் தலையிடாமல் ராமராஜ்ய அநுஷ்டானத்தை கைகொண்டு குடிகளுக்கு உதவிசெய்ய முடியாமல் அரசாங்கம் குறுக்கிடும்போது ஏழைகளிடம் இதை விவரித்து அவச்யமிருந்தால் பதவியைக் காலி செய்யலாம். பதவி மோகத்தை அறவே ஒழித்து வீடு வீடாக ஏறி தொண்டு செய்பவரை மந்திரியாக நியமிக்க வேண்டும்.

கம்பர் திருநாள்.

ஓர் வேண்டுகோள்.

ப. ரெ. திருமலை ஐயங்கார் எழுதுகிறார்:— 'கல்வியிற்பெரியன் கம்பன்' என்றபோது எத்துணைச் சிறப்புவாய்ந்தவர் கம்பநாடர் என்பது சொல்லாமலே போதரும். கற்றோர்க்கு இராமன் திருக்கதையில் கம்பநாடன் கவிதையிற்போல் இதயம் களியாது என்பது வெள்ளிடைமலை. தெய்வப் புலமைக் கம்பநாட்டாழ்வார் அவதாரதினம் யாம் அறிய அரிதாயினும் 'எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின்மேல்' என்ற திருவிருத்தத்தால் கண்ணிய அரங்கன் முன்னே கம்பநாடன் பண்ணிய இராம காதையை பங்குனி உத்திரத்தில் கவி அரங்கேற்றினன் என்று ஆன்றோர் கூறுப. ஸ்ரீ ராமாயணத்தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது என்பதற்கேற்ப இவ் வரங்கேற்று தினத்தையே கம்பர் தினமாகக் கொண்டாடுதல் மரபு. பங்குனி உத்தரமான பகற்போது இருக்கினிலாயிரச் சிங்க மணம் நடந்ததாக கவிச்சக்கிரவர்த்தி கூறுதல் காண்க. சென்ற இரண்டு வருடங்களாக இத்தினத்தைக் கூடியவரை திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம் சிறப்பாக நடத்தி வந்திருப்பது அனைவரும் அறிந்த விஷயம்.

இவ்வருடம் இச்சுதினம் பங்குனிமாதம் 13௳ (26—3—37) வெள்ளிக்கிழமை வருகிறது. இந் நன்னாளின் பெருமை எடுத்துரைக்க இயலாது. அன்று ஈஸ்டர் விடுமுறைநாள். இது கோல்விழுக காடாகும். இத்தினத்தைத் தக்கமுறையில் நந்தமிழ்நாடு முழுமையும் கொண்டாடவேண்டும் என்பது எமது மனமுவந்த பிரார்த்தனை. தமிழ்நாடு எதிலும் பின்வாங்காது. கவிச் சக்ரவர்த்தி [illegible] திருநாளை நாடும் நகரமும் நன்கு அறிய எங்கும் சிறப்பாகக் கொண்டாடவேண்டுவது தமிழன் முதற் கடமையாகும். கம்ப நாடுடையவள்ளல் காரணக்கொடையான் அவரைப்போற்றுதல் நம்மவர் கடனே.

தக்க பண்டிதர்களைக்கொண்டு கம்பர் கவி இன்பத்தைப் பருகுதல்வேண்டும். கம்ப ராமாயணப் பிரசங்கங்கள், வகுப்புகள் இடைவிடாது நடைபெற முயற்சிசெய்தல் வேண்டும். கம்பராமாயணப் பாக்களை இன்னிசையோடு பாடிக்கேட்டு மகிழல் வேண்டும். கம்பன் கவித்திறமையைக் காதாரக்கேட்டு அனுபவிக்கவேண்டும். கம்பன்போல் கவியாகவா அவாவுறவேண்டும். அம் மாக்கவிபோல் பாஷாபிமானம், தேசாபிமானம், செய்நன்றி போற்றல் முதலிய உத்தம குணங்களைப்பெற முயலல் வேண்டும். கம்பனைப் போற்றலே தமிழன்னையைப் பேணுதலாகும்.

இச்சுப தினத்தில் ஒவ்வோரிடத்திலும் தமிழ்ச்சங்கம் நிறுவி செவ்வனே அவற்றை நடத்வேண்டிய முயற்சி செய்தல்வேண்டும்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை." "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல்வேண்டும்." "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர்." "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்." "தமிழர் பெருமை தமிழ்ப்பெருமை யன்பார் தமிழ்ப்பணியே யின்பத்தவம்" தமிழ்க்கடலில் தாலை நாட்டி என்றும் இனிக்கும் பாட்டமுதைத்தந்த கம்பநாட்டாழ்வாரை முறையே ஏற்றிப் போற்றுமின்.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

அரிய ஆட்டம்:— திருவாங்கூர் திவான் தன் தவறுதலை மறைக்க பற்பல ஆட்டம் ஆடுகிறார். அதில் 50-பண்டிதர் பூர்ணகும்பத்துடன் அம்மன்னரை போற்றினரென்று பிரசுரித்ததொரு அபூர்வ நாடகம். எங்கே? எப்போது ? எவர்? என்று அறிவிக்காத காரணம் அதர்ம செயலை வெளியிட பண்டிதர் அஞ்சுவதும், பண்டிதர் பெயரால் பாமரைக் கொண்டு கார்யம் நடத்துவதேயாம் ! ஆட்டம் வேண்டாமே !

கேட்டை நக்ஷத்திரம் கூடாதாம்.

புதிய சட்டஸபை கூடும் நாள்.

ஏப்ரல் மீ 1௳யன்று இந்தியாவில் மாகாணஸ்வய ஆக்ஷி அமுலுக்கும் வரும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. அன்று கேட்டை நக்ஷத்திரமாகையால் பொருத்தமில்லையென்றும் அன்று சட்டஸபையின் முதல் கூட்டத்தை நடத்துவது உசிதமில்லையென்றும் எங்கும் மெம்பர்களிடம் ஓர் அபிப்ராயம் பரவி இருக்கிறது.

சென்னை சட்டஸபை காங்கிரஸ் மெம்பர்கள்,

10௳ கூட்டம்

சென்னை சட்டஸபைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மெம்பர்களின் கூட்டம் மாம்பலத்தில் 10௳யன்று நடைபெறும், சட்டஸபைக் காங்கிரஸ் கக்ஷி தலைவர் அச்சமயம் தெரிந்தெடுக்கப்படுவார். கார்யதர்சி முதலியவர்களும் பொறுக்கப்படுவார்கள். இதற்கென்றே ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி அய்[illegible]ழுப்பன் பால டில்லியிலிருந்து 10௳ சென்னை வருவாராம்.

கைதிகள் விடுதலை.

வங்காளத்தில் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுள்ள ராஜீயக் கைதிகளில் 250 பேரை விடுதலை செய்துவிட வங்காள கவர்ன்மெண்டார் நிச்சயம் செய்திருக்கிறார்கள்.

பிரிட்டனில் ராணுவமுஸ்தீப்பு.

பிரிடிஷ் கவர்ன்மெண்டார் 821 லட்சம் பவுன் செலவுசெய்து பிரிடிஷ்ராணுவ பலத்தை அதிகரிக்க முடிவு செய்திருக்கிறார்கள். யுத்தப்படைகளில் ஆள்களை அதிகமாகச் சேர்க்கும் வேலை வெகு வேகமாக நடத்தவும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாம்.

பஞ்சாபில் மந்திரிஸபை அமைப்பு.

ஸர். ஹயாத்கான் தலைமையில் பஞ்சாப் மந்திரி சபை அமைக்கப்பட்டுவிட்டது. எல்லா வகுப்புக்களிலிருந்தும் அவர் தமக்கு ஸகாக்களான மந்திரிகளைப் பொறுக்கிக்கொண்டிருக்கிறார். அங்கு காங்கிரஸ் வாதிகள் மிகச் சிறுபான்மையோராயிருப்பதால் மந்திரி சபை பற்றி அவர்கள் கவலை கொள்ளவே இல்லையாம்.

முக்கிய கவனிப்பு.
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கண்ணுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

(141)

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்

(4—3—37 தொடர்ச்சி)

த்ரிகுணா 984

ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களோடு கூடியவள்.

1. அதாவது, அம்மூன்று குணங்கள் பொருந்தியதாய் ஸாங்க்யர்கள் சொல்லும் ப்ரக்ருதி ரூபமாயிருப்பவள் என்று அர்த்தம். இந்த குணத்ரயத்தோடு ஸகல சரீரங்களிலும் அம்பிகை வ்யாபித்திருப்பதைப் பற்றி

'யோகேச்வரீ சரீராணி கரோதி விகரோதி ச |
நாநாக்ருதி க்ரியா ரூப நாம வ்ருத்தி: ஸ்வலீலயா |
த்ரிதா யத் வர்த்ததே லோகே தஸ்மாத் ஸா த்ரிகுணோ
[ச்யதே ||

என்று வாயுபுராணத்திலும்,

'ஸர்வபூதேஷு ஸர்வாத்மன் யா சக்திரபரா தவ |
குணாச்ரயா நமஸ்தஸ்யை சாச்வதாயை ஸுரேச்வரீ ||'

என்று விஷ்ணுபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. விஷ்ணுவானவர் பலிச்சக்ரவர்த்தியை அடக்கி லோகங்களையெல்லாம் அளந்தது மூன்றடியாலாகையால் அவருக்கு த்ரிவிக்ரமனென்றுபெயர். கங்கையானவள் ஸ்வர்க்கத்திலிருந்து பூமிக்கு வந்து அங்கிருந்து பாதாளத்திற்குப் போனதால் த்ரிபதகா என்று பெயர். இவ்விருவரும் அம்பிகையின் ரூபமாயிருப்பதாலும் அம்பிகையானவள் ஸத்வாதி குணத்ரயங்களால் உத்பத்தி ஸ்திதி நாசங்களைச் செய்வதாலும் த்ரிகுணா என்று பெயர் என்பதாக

'பதைஸ்திரிபிர்பலிர்பத்த: ஸ்வர்க்காதி த்ரிபதான் கதா |
உத்பத்தி ஸ்திதி நாசைச்ச ஸத்வாத்யைஸ் த்ரிகுணோச்யதே ||

என்று தேவி புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அம்பா 985

(மேலே சொல்லிய குணத்ரயத்திற்கும்) ஜனனியாயிருப்பவள்.

1. அதாவது, அவற்றின் காரணபூதையாயிருக்கிறாளென்று தாத்பர்யம். இந்த ரூபத்தையே தான் மந்த்ர ஜீவமென்று சொல்லப்படும்.

'[illegible] காரணம் |
குணத்ரயம் அமீஷாம் ச யத் காரணம் உதாஹ்ருதம் ||
தத் ஸ்வரூபானுஸந்தான ஸித்தி: ஸம்யக்தமீரிதம் |
தன் மந்த்ர வீர்யமுத்திஷ்டம் மந்த்ராணாம் ஜீவ ஈரித: ||'
[தந்த்ர ராஜம்]

2. அல்லது, ஸகல ஜகத்திற்கும் ஜனனியாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

த்ரிகோணகா 986

யோனி சக்ரத்தை அடைந்திருப்பவள்

1. ஸ்ரீ சக்ரத்தின் மத்தியிலிருக்கும் யோனி சக்ரமாகிய த்ரிகோணமே அம்பிகையின் ரூபமென்பதாகவும் பிந்துவானது சிவ ஸ்வரூபமென்றும்

'த்ரிகோணரூபிணீ சக்தி: பிந்துரூப: சிவ: ஸ்ம்ருத: |
அவினாபாவ ஸம்பந்த: தஸ்மாத் பிந்து த்ரிகோணயோ: ||

என்பதாக ஸ்ரீ லலிதா த்ரிசதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

அனகா 987

அகம் (பாபம், துக்கம்) யாதொன்றுமில்லாதவள்.

அத்புதசாரித்ரா 988

ஆச்சரியகரமான சரித்திரங்களை உடையவள்.

1. இதனால் பண்ட நிக்ரஹம், அனங்கானுக்ரஹம் முதலான அம்பாளுடைய லீலைகள் சொல்லப்பட்டன.

2. அல்லது, அத்புதங்களின்போது - பூகம்பம் முதலான உத்பாதங்கள் காரணமாக, சரிக்கும் - வெளிவரும், துஷ்ட பலன்களிலிருந்து த்ராணம் செய்கிறவள் (காப்பாற்றுகிறவள்) என்றும் சொல்லலாம்.

வாஞ்சிதார்த்த ப்ரதாயினீ 989

(பக்தர்களால்) கோரப்பட்ட அர்த்தங்களை அபரிமிதமாய்க் கொடுப்பவள்.

1. இதர தேவதைகள் போலல்லாமல், அம்பிகையின் சரணங்களே பக்தர்களுடைய மனோரதங்களை விரும்புவதற்கதிகமாகக் கொடுக்கும் சக்திவாய்ந்தவை என்பதாய்

'த்வதன்ய: பாணிப்யாம் அபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடிதவராபீத்யபிநயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகானாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ ||'

என்பதாக ஸ்ரீமதாசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

அப்யாஸாதிசயஜ்ஞாதா 990

அப்யாஸத்தின் பெருக்கினால் அறியப்படுகிறவள்.

1. அதாவது, அடிக்கடி

'ஆஸுப்தே: ஆம்ருதே: காலம் நயேத் வேதாந்த சிந்தயா |'

என்று சொன்னபடி செய்யப்படும் ப்ரஹ்மாத்மைக்யானுஸந்தானத்தின் (தன் ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்றாயிருப்பதைப் பற்றிய த்ருட பாவனையின்) ஆவ்ருத்தி அதிகரிக்க அதிகரிக்க, அம்பிகையைப் பற்றிய ஞானமானது மேலுக்குமேல் ஏற்படும் என்று தாத்பர்யம். இதையே தான்

'ஆவ்ருத்திரஸக்ருத் உபதேசாத் |'

என்று வ்யாஸ ஸூத்ரம், கபில ஸூத்ரம் இவற்றில் சொல்லப்பட்டது.

ப்ரம்ஹாண்ட புராணத்திலும்

'த்யானைக த்ருச்யா ஞானாங்கீ வித்யாத்மா ஹ்ருதயாஸ்பதா |
ஆத்மைக்யாத் வ்யக்திமாயாதி சிரானுஷ்டான கௌரவாத் ||'

என்று சொல்லப்படுகிறது.

ஷடத்வாதீத ரூபிணீ 991

ஆறுவிதமான அத்வாக்களையும் கடந்ததான ரூபத்தையுடையவள்.

1. அத்வா என்பது வழி, மார்க்கம். (அம்பிகையை) உபாஸிப்பதில் ஆறு அத்வாக்களிருப்பதாகச் சொல்லப்படும். அவை வர்ண, பத, மந்த்ர, கலா, தத்வ, புவன அத்வாக்கள்.

'உக்தம் கலாத்வா தத்வாத்வா புவனாத்வேதி ச த்ரயம் |
வர்ணாத்வா ச பதாத்வா ச மந்த்ராத்வேத்யபரம் பரம் ||'
[சாரதா திலகம்]

இவற்றில் அகாராதி க்ஷகாராந்தமான வர்ணங்களாலானது வர்ணாத்வா என்றும், வர்ணங்களின் சேர்க்கைகளான பதங்களாலானது பதாத்வா என்றும், மந்த்ரங்களாலானது மந்த்ராத்வா என்றும், கலைகளாலானது கலாத்வா என்றும், தத்துவங்களாலானது தத்வாத்வா என்றும், புவன (அல்லது, புர) ங்களாலானது புவனாத்வா என்றும் சொல்லப்படும்.

'நிவ்ருத்யாத்யா: கலா: பஞ்ச கலாத்வேதி ப்ரகீர்த்திதா: |
தத்வாத்வா பஹுதாபின்ன: சிவாத்யாகம பேதத: ||
.... |
ஈரிதோ புவனாத்வேதி புவனானி மனீஷிபி: ||
வர்ணாத்வேதி வதந்த்யர்ணான் ஆதி க்ஷாந்தான் மனீஷிண: |
வர்ணஸங்க: பதாத்வா ஸ்யாத் மந்த்ராத்வா மந்த்ர ராசய: ||
[சாரதா திலகம்]

2, இந்த ஆறு அத்வாக்களில் வர்ண, பத, மந்த்ர அத்வாக்கள் மூன்றும் சப்தஸ்வரூபமாயிருப்பதால் விமர்சாம்சங்களாய் சக்திபாகமாயிருக்கின்றன. கலா, தத்வ, புவன அத்வாக்கள் மூன்றும் அர்த்தஸ்வரூபமாயிருப்பதால் ப்ரகாசாம்சங்களாய் சிவபாகமாய் இருக்கின்றன.

'மந்த்ராத்வா ச பதாத்வா ச வர்ணாத்வா சேதி சப்தத: |
புவனாத்வா ச தத்வாத்வா கலாத்வாசார்த்தத: க்ரமாத் ||
[வாயவீயஸம்ஹிதை]

'சப்த ஜாதம் அசேஷம் து தத்தே சங்கர வல்லபா |
அர்த்த ஸ்வரூபமகிலம் தத்தே முக்தேந்துசேகர: ||'
[வாயவீய ஸம்ஹிதை]

'அஸ்ய விமர்சஸ்ய குண' பத மந்த்ரார்ணாத்மகஸ் த்ரிதா பவதி |
புரதத்வ கலாத்வோऽர்த்தோ தர்மிண இத்தம் ப்ரகாசஸ்ய ||'
[விரூபாக்ஷபஞ்சாசிகா]

(இதைப்பற்றி மேலே சொல்லிய க்ரந்தங்களுடன் ஞானார்ணவம், ப்ரபஞ்சஸாரம், தக்ஷிணாமூர்த்திஸம்ஹிதை முதலியவற்றையும் பார்க்கவும்.)

அம்பிகை இந்த அத்வாக்களுக்கு அதீதமாயிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

3. அல்லது சிவ, விஷ்ணு, துர்க்கா, ஸூர்யன், கணபதி, இந்து என்ற ஆறு தேவதைகளின் உபாஸனைகளை ஷடத்வாக்களென்றுசொல்லலாம். (இந்து உபாஸனை என்பது ஜைன தர்சனம்) இந்த உபாஸனைகளினால் பூர்வ ஜன்மங்களில் சித்தசுத்தியடைந்தவனுக்கு இந்த ஜன்மத்தில் அம்பிகையின் உபாஸ்தியானது கிடைக்கப்பெறுவதாகச் சொல்லப்பட்டிருப்பதால் அந்த ஆறுவிதமான அத்வாக்களுக்கு அதீதமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

'சைவ வைஷ்ணவ தௌர்கார்க காணபத்யேந்து ஸம்பவை: |
மந்த்ரைர் விசுத்த சித்தஸ்ய குலஞானம் ப்ரகாசதே ||'
[குலார்ணவம்]

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-ஹூ மாசி-மீ 28உ

வி. ரா. ஆசாரியாரின் சிறந்த பிரஸங்கம்.

மதனப்பள்ளி தியஸாபிகல் காலேஜில் 7உ யன்று ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் மாணவர்களுக்குச் சிறந்த பிரஸங்கமொன்று செய்திருக்கிறார். அதில் அவர் வெளியிட்டுள்ள ஸ்வாபிமான உணர்ச்சியானது ஹிந்துக்கள் யாவராலும் மிகப்போற்றத்தக்கதாயிருக்கிறது. மேற்றிசை நாகரிகத்தின் தீங்கு, இந்தியக் கலைகளின் சிறப்பு, ஹிந்துமதத்தின் உயர்வு, மதசிரத்தையின் ஆவச்யகதை போன்ற பல முக்கிய விஷயங்களைப் பற்றி நவீன காலமாணவர்கள் முன்னிலையில் அவர் வெகு அழகான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். பிரபல ராஜீய வாதியும், ஸமூஹத் திருத்த நோக்கமுள்ளவருமான வேறு எவரும் இத்தகைய உயர்ந்த அபிப்பிராயங்களை மாணவர்களின் முன்பாக வெளியிட்டுப்பேசியதை இதற்கு முன் நாம் பார்த்ததில்லை. ஸ்ரீமான் ஆசாரியாரின் தேசாபிமானமானது அவருக்குகந்தவழிகளில் தேசத்தின் க்ஷேமத்தை நாடிநிற்பது இதிலிருந்து நன்கு விளங்கக் கூடியதாயிருக்கிறது. ஸ்ரீமான் ஆசாரியார், நமதுதேசத்தின் கௌரவத்தையும் தேசக் கல்வியின் மஹிமையையும் மாணவர்களுக்கு நினைப்பூட்டினார்.

உலகத்தில் பல தேசங்களிலும் பரவியுள்ள கல்விகளை விட, அழகிலும், கௌரவத்திலும் இணையில்லாத கல்வியை பரம்பரையாக அனுபவித்து வரும் ஒரு உயர்ந்த தேசத்தில் நாம் பிறந்திருக்கிறோம் என்பதை வெகு பெருமையுடன் அவர் குறிப்பிட்டார். நமது கல்விக்கும் நாகரிகத்திற்கும் எதிரிகளால் பல சமயங்களில் ஏற்பட்ட பலமான தாக்குதலைத் தவிர்த்து நமது கல்வியைக் காப்பாற்றவேண்டிய அறிவும், சரீரபலமும் இன்றுகூட நமக்கு இல்லாமையைப் பற்றி மிகவும் வருந்திப் பேசினார். இந்தியா தேசமானது பிற்போக்கானதென்றோ, ஏழை தேசமென்றோ நாம் பாவிக்கக் கூடாதென்றும் இந்தியர்கள் உலகத்தில் மிகவும் முன்னேற்றமடைந்த ஜாதியினரென்றும், உபநிஷத்துக்களில் காணப்படும் உயர்ந்த வித்யைகளை இப்போதுகூட நாம் அநுபவசாத்ய முறையில் கையாண்டு வருவதாயும் சொன்னார்.

தற்காலம் அன்னியர் வழிகளை நம்மவர்கள் அப்படியே பின்பற்றி நடப்பது மிகவும் வெட்கமான காரியமென்றும், இந்த நவீன நடிப்பானது இந்தியர்களின் உயர்ந்த கல்வியை நாசம் செய்து விட்டதாயும், தற்கால பாடபுஸ்தகங்கள் நமது புராதன கல்வியை நாம் எப்படி அடைந்து மேன்மையுறலாமென்பதைத் தெரிவிக்கச் சக்தியற்றவையாய் இருப்பதாயும் ஸ்ரீமான் ஆசாரியர் சொன்னார்.

தற்காலக் கல்வியின் விளைவான நவீன நாகரிகம் உலக ஜனங்களிடையில் மிகுந்த அஸந்துஷ்டியையும், துரதிருஷ்ட நிலைமையையும் உண்டுபண்ணிவிட்டதாயும், அந்த நாகரிகத்திலிருந்து நாம் தப்பவேண்டுமானால் அதை அடியோடு மாற்ற முற்படவேண்டியதே நமது கடமையென்றும் அவர் வற்புறுத்தினார்.

முக்கியமாக நம் தேசத்திற்கு தர்மமே உண்மையான உயிரென்றும், அந்த தர்மம் மதத்திலிருந்துதான் ஏற்படக்கூடியதென்றும், மாணவர்கள் தர்மத்தை கௌரவிப்பதே அவச்யகார்யமென்றும் மாணவர்கள் ஆசைப்படும் ராஜீய நடவடிக்கைகள் நமக்கு எப்போதும் முக்கியமானவைகள் அல்லவென்றும், மாணவர்கள் ராஜீய விஷயங்களில் மிகுந்த ஸம்பந்தம் வைத்துக்கொள்ளாமலிருப்பதே நன்மையென்றும், வேறு பல அரிய விஷயங்களையும் ஸ்ரீமான் ஆசாரியர் மாணவர்களுக்கு உபதேசித்தார். ஸ்ரீமான் ஆசாரியரின் இப்பிரஸங்கமானது ஏறக்குறைய ஸனாதனிகளுடைய அபிப்பிராயங்களைத் தழுவியதாக இருக்கிறதென்று நாம் நினைக்கிறோம். ஆனால், ஸனாதனிகள் தங்கள் அபிப்பிராயங்களைக் கொள்கையளவில் மட்டும் வைத்துக்கொள்ளாமல் இவைகளை ஆசாரத்திலும் கொண்டுவந்து அநுஷ்டிக்க வேண்டும் என்கிறார்கள். ஸ்ரீமான் ஆசாரியர் போன்றவர்களோ நமது ஹிந்து மதாசாரங்களைக் காக்கும் விஷயமான காரியங்கள் வரும்போது, நமது அருமைப் பெருமைகளை மறந்தவர்களாய்த் தோன்றுகிறார்கள். எதிரிகளுக்கு எளிதில் இடம் கொடுத்துவிடுகிறார்கள்.

மாணவர்கள் ராஜீய விஷயத்தில் ஈடுபடுவதை ஸ்ரீமான்ஆசாரியர் விரும்பாததும் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்படக் கூடியது. பெரிய ராஜீயவாதியாயிருக்கும் இவர் இப்படி அபிப்பிராயப்படுவது யாவராலும் கவனிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறோம்.

மற்றப்படி நமது மதம், தர்மம், புராதன வித்யை ஆகியவைகளின் மேன்மையையும், அவைகளை நமது மாணவர்கள் கௌரவிக்க வேண்டியதையும், கண்மூடித்தனமாக அந்நியக் கல்வியிலும், அந்நிய நாகரிகத்திலும், நம் மாணவர்கள் மோஹம்கொள்ளக் கூடாதென்றும் ஸ்ரீமான் ஆசாரியர் எச்சரிகை செய்து பேசியது போற்றத் தக்கதே.

எதிர் காலத்தில் தலைவராக வந்து தேசத் தொண்டு செய்யக்கூடிய மாணவர்களுக்கு இந்த உபதேசம் உற்ற துணையாய் இருந்து உயர்ந்த உபகாரம் செய்யுமென்று நம்புவோம்.

குறிப்புகள்.

இதாலியில் பிராஜாவிருத்தி திட்டம்.

இந்தியாவில் பிரஜாவிருத்தியைக் குறைப்பதற்காக கர்ப்பத்தடை முதலிய உபாயங்களைக் கையாளவேண்டுமென்று நவீன நாகரீகப் பித்துப்பிடித்த சிலர் பிதற்றி வருவதை யாவரும் அறிந்ததே. இத்தகைய விபரீத மனப்போக்கை நம்மவர்களுக்கு உண்டு பண்ணியது மேற்றிசை நாகரீகமே. ஒவ்வொன்றிலும் அத்தேசத்தைப் பின்பற்றியே இந்திய ஸமூகத்திருத்தக்காரர்கள் நம் தேச ஆசாரங்களைப் பரிஷ்கரிக்கப்போவதாகக் கூறி வருகிறார்களல்லவா?

இச்சமயத்தில் நம் ஆசாரத்திருத்தக்காரர்களுக்கு வழிகாட்டியாக நின்ற மேற்றிசையிலேயே பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு வருவதை நாம் கவனிக்கவேண்டும். நவீன இந்தியர்களால் வேண்டப்படும் பல சீர்திருத்தங்களே மேற்றிசைகளில் விபரீத நிலைமையை உண்டுபண்ணிவிட்டபடியால் அவைகளைக் கைவிட அங்கு பெரிய முயற்சிசெய்யப்பட்டு வருகிறதைப் பார்க்கிறோம். ஜாதிக் கலப்பு விவாஹம், பொதுவுடைமைபோன்ற ஸமூகப் பொருளாதார திட்டங்களைப் பற்றி மேற்றிசைகளில் ஏற்பட்டுவரும் வேகமான மாறுதலை நாம் கவனித்துவருகிறோம்.

பிரஜாவிருத்தியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றும் கர்ப்பத்தடை உபாயங்களைக் கைப்பற்றவேண்டுமென்றும் நம்தேசத்தில் பலத்த பிரசாரம் நடந்துவருகையில் நாகரிகதேசமாக மதிக்கப்படும் இதாலியில், பிரஜாவிருத்தியை அதிகரிக்க அத்தேச கவர்ன்மெண்டார் திட்டம் போட்டிருப்பது கவனிக்கத்தக்க விஷயமாம்.

இதாலிதேசம் ஒரு காலத்தில் தீவிரமாக பிரஜாவிருத்தியை எதிர்த்து நின்றது. கர்ப்பத்தடை உபாயங்களும் அங்கு மிகமிஞ்சி கையாளப்பட்டன. யௌவனமுள்ள ஸ்திரீகள் விவாஹம் செய்துகொள்ளாமலே கெட்டு அலைந்தனர். குடும்ப தர்மமே அழிந்து கிடந்தது. இந்த ஆபாஸ நிலைமையால் அங்கு ஜனஸங்கியை நாளுக்குநாள் குறைந்து மிகுந்த அபாயமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதாலி ஸர்வாதிகாரியான முஸோலனி சென்ற வருஷம் ஒரு கூட்டத்தில் பேசுகையில் இதாலி ஜன ஸங்கியை எவ்வளவு வேகமாகக் குறைந்துவிட்டதென்பதைப் புள்ளி விவரத்துடன் விளக்கினார். ஜன ஸங்கியைக் குறைவால் ராணுவத்திற்குப்போதிய ஆள் கிடைக்காமல் சத்ருக்களுடைய படையெடுப்பை ஸமாளிக்க இதாலியால் முடியாமல் போய்விடுமென்று அவர் கருதினார்.

ஆகையால் இதாலியில் ஸ்திரீகள் கல்யாணம் செய்துகொள்ளாமல் திரிவதைத் தடுக்கவும், விவாஹம் செய்துகொண்டு பிரஜையை உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஸர்க்காரிலிருந்து பண உதவி செய்யவும் ஏற்பாடு செய்திருந்தார். ஆயினும் தற்போது அங்கு போதிய அளவு ஜனஸங்கியை விருத்தியாகாததுடன், புதிதாகக் பிடித்துக்கொள்ளப்பட்ட அபிஸீனியாவைக் காத்துக்கொள்ளவும் அதிக ஜனங்கள் வேண்டியிருக்கிறது. இதை உத்தேசித்து அத்தேச மந்திரிஸபை ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. விவாஹம்செய்துகொள்ளுகிறவர்களுக்கு ஸர்க்காரிலிருந்து கடன் கொடுக்கவும், அதிகக் குழந்தைகளைப் பெற்றவர்களுக்கு ஸர்க்கார் உத்தியோகங்களில் அதிகச் சலுகைக் காட்டவும் வேறு பல ஏற்பாடுகளும் செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

இந்தியாவில் ஜனஸங்கியைக் கண்டு கலங்கும் சில அந்நிய தேசத்திய விஷமிகள் கெட்டநோக்கத்துடன் நம் தேச ஜன ஸங்கியையைக்குறைக்க நம்மவர்களிடம் துர்உபதேசம் செய்கிறார்கள். இதை உண்மையென்று நினைத்து கிளிப் பிள்ளையைப் போல் இதைத் திருப்பி ஒப்பிவித்துக்கொண்டு கூத்தாடும் சில அறிவிலிகள் மேற்றிசைகளில் கர்ப்பத்தடை முறையால் ஏற்பட்ட அனர்த்தங்களை உணருவார்களா? பிரஜாவிருத்தியைப்புனித தர்மமாகக் கருதியும் அதற்கேற்றபடி குடும்ப தர்மங்களையும் ஸமூஹ தர்மங்களையும் வெகு அழகாக அமைத்து நம்ஸ்திரீகளின் மானத்தையும் கற்பையும் காப்பாற்றி, அதன்மூலம் தேசத்தையே உத்தாரணம் செய்துமுள்ள நமது மூதாதைகளின் தீர்க்கதரிசனத்தை இப்போதாவது நம்மவர்கள் உணர வேண்டாமா?

தேசீய வாதிக்குப் பரதேசி விவாஹம்?

(ஒரு தேசீயவாதி.)

ஸ்ரீமான் எம். என். ராய் என்ற இந்திய தேசாபிமானித் தலைவரைப்பற்றி நமது வாசகர்கள் அறிந்திருக்கலாம். ஸமீபகாலத்தில் தேசீயத் தலைவர்களும், தேசீயப் பத்திரிகைகளும் இந்த ராயைப்பற்றி அளவுகடந்து புகழ்ந்து ஆடம்பர விளம்பரங்கள் செய்ததை அறியாதவர் இருக்கமாட்டார். பத்திரிகைகளைப் பிரித்தால் எம். என். ராயைப்பற்றிய ஸமாசாரங்களே அநேகப் பத்திகளை அடைத்துக்கொண்டிருக்கும். எம். என். ராய் இவ்வளவு மணிக்குப் பல்தேய்த்தார், இன்ன ஆஹாரம் சாப்பிட்டார், இன்னாருடன் பேசினார், இவ்வளவு நாழிகை தூங்கினார் என்பன போன்ற ஒவ்வொரு சிறிய பெரிய விஷயங்களைக்கூடச் சிறிதும் விடாமலும், குறைக்காமலும் வர்ணித்துப் பத்திரிகை நிருபர்கள் தந்தி ஸமாசாரம் அனுப்பிவந்தார்கள் இவ்வளவு பெரிய பத்திரிகை மதிப்பிற்கு அவர் பாத்திரமானது என் தெரியுமா? அவர் இந்திய தேசாபிமானியாம். தொழிலாளர் முதலிய ஏழை இந்தியர்களின் நண்பராம். அவரிடம் பணமில்லாவிட்டாலும் பிறர் பணங்களைப் பங்கிட்டு ஏழைகளுக்கு வீதம் கொடுக்கப் பாடுபடும் அபேதவாதியாம். இந்தியா தேசத்தை கைதூக்கிவிட்டுக் காப்பாற்றத் தோன்றியவராம். வருங்கால இந்தியாவின் தலையில் இவர் எழுதப்போகிறாராம்.

இத்தகைய "சிறந்த ஸ்வதேசாபிமானி"க்கு இந்தியாவில் பிறந்து வளர்ந்த ஒரு இந்தியஸ்திரீ பெண்டாட்டியாக கிடைக்கவில்லை. தமது தேசப்பெண்ணை அலக்ஷ்யம் செய்து அமெரிக்கா தேசத்திலிருந்து ஒரு வெள்ளைப் பெண்ணை விலைக்கு வாங்கி மணந்துகொள்ளப் போகிறாராம். அந்த ஸ்திரீயும் பம்பாய் வந்துவிட்டாள். இவ்விருவருடைய போட்டோபடத்தையும் தேசீயப் பத்திரிகைகள் பிரசுரித்து ஜன்மஸாபல்யம் அடைந்துவிட்டன. ஸ்ரீமான் ராய் சீக்கிரத்தில் அந்த அமெரிக்க ஸ்ரீமதியைக் கல்யாணம் செய்து கொண்டு இந்தியாவின் தேசீயத் தலைவராக விளங்குவார். இதென்ன விபரீதம்?

ஸ்வதேசாபிமானி என்று வேஷம்போடுகிறவர்கள் இவ்வாறு பரதேச ஸ்திரீயை மணப்பது என்ன நேர்மை? இது தேசாபிமான கார்யமா? இந்திய ஜாதி, இந்திய நாகரிகம், முதலியவைகளை ஸம்ரக்ஷிக்க இது ஏற்றகார்யமாகுமா? நம் தேசத்தைக் கலப்பு ஜாதிமயமாக்கி, நமது பொருளாதாரசக்திகளை அந்நியர் அபஹரிக்கும்படி விடுவது தேசாபிமானமாகுமா?

ஒரு அமெரிக்க வெள்ளை யானையை இவர் தீனிபோட்டு ரக்ஷிப்பதென்றால் அதற்கு எவ்வளவு செலவு ஆகும், எவ்வளவு பணம்வேண்டும். நம்தேசஸ்திரீயை மணப்பதால் அந்நிய ஆடம்பரச்செலவு இல்லாமல் சிக்கனமாக வாழலாமல்லவா? ஏழைகளுக்கு நண்பராக நடிக்கும் இவர் இந்திய ஏழைப்பெண்ணை மணந்து நமது தேசப்பணங்கள் நம் ஜனங்களுக்கே உபயோகமாகும்படி ஏன் செய்யக் கூடாது? இவரைப்போல் பலர் செய்ய முற்பட்டால் நம்தேசத்தின் கதியென்ன? பேச்சொன்றும், செய்கையொன்றுமாயிருப்பது உண்மையான தேசாபிமானமாகுமா? இத்தகைய வியவஸ்தை கெட்ட காரியத்தால் இந்தியா தேசம் உருக்குலைந்து விடாதா?

சென்னையில் திருவாங்கூர் மஹாராஜா.

ஆலயப்பிரவேச விளம்பரம் விடுத்த குற்றத்திற்காகப் பச்சாதாபமடையாமல், தைர்யமும் திருப்தியும் கொள்ளவேண்டியதற்காக திருவாங்கூர் மஹாராஜாவை சென்னைக்குக் கொண்டுவந்து செய்ய உத்தேசித்த ஸங்கேத ஆர்பாட்டங்கள் யாவும் செவ்வனே நடந்து வருகின்றன. மஹாராஜாவுக்கு தற்போது சென்னையில் எவ்வித காரியமுமிருப்பதாகத் தெரியவில்லை. ராஜாங்க அவஸர கார்யங்களை உத்தேசித்து அவர் அங்கு வந்தவரன்று. ஆகையால் அநாவச்யகமான ஆடம்பரங்களுக்காக அவர் தமது ராஜ்யத்தைவிட்டு சென்னையில் ஒருமாதமாக குடும்பத்துடன் தாமஸித்து வீண் காரியங்களில் ஸம்பந்தப்பட்டு பணவிரயம் ஏராளமாகச் செய்துகொண்டிருப்பது நியாயமாகத்தோன்றவில்லை. ஒரு மஹாராஜாவின் கௌரவத்திற்கு ஏற்றதாயில்லாத பல கார்யங்களில் அவர் ஸம்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறார். ஸினிமாக்காக்ஷி, நாடகம், ஸங்கீதக்கச்சேரி, நாட்டியம் போன்ற தமாஷ்களால் அவர் உபசரிக்கப்பட்டார். அநேக விருந்துகள் நடந்தன. காஸ்மா பாலிடன் விருந்தும் விசேஷமாக நடந்தது. ஒரு பெரிய தேசாதிபதியும் வைதிகப்பற்றுள்ள ராஜவம்சத்தில் பிறந்தவருமான மஹாராஜா அவர்கள் இவ்வாறு தகாத காரியங்களில் ஸம்பந்தப்படும்படி செய்வது தகுதியாயில்லை. இவ் விஷயங்களில் மஹாராஜா மீது யாரும் குற்றம் சொல்லநியாயமில்லை அவருக்கு ஆலோசனை கூறித் தூண்டியவர்களே இதில் தவறு செய்தவர்களாவார்கள்.

ஆலயப்பிரவேச விளம்பரத்தால் அந்த சமஸ்தானத்திலும் வெளியிலும், பெருத்த அதிருப்தி ஏற்பட்டுவிட்டதை இந்த ஆடம்பரங்களால் மறைக்க முடியாது. ஏற்கனவே வியவஸ்தையை அழிக்கமுற்பட்டுள்ள ஸங்கங்களும், தனிப்பட்டவர்களும் மஹாராஜாவின் செய்கையை ஆதரிப்பதாகச் சென்னையில் காட்டிக்கொண்டதில் எவ்வித அர்த்தமும், பிரயோஜனமும் இல்லை. இதைக்கண்டு தார்மிகர்கள் உண்மையில் கலங்கார். மஹாராஜாவின்செய்கைக்கு உண்மையான ஆதரவு அங்கு கிடைத்து விடவில்லை.

சென்னையில் செய்யப்பட்ட ஸங்கேதங்களுள் சில வயிறுதாரிப் பண்டிதர்களைக்கொண்டு ஆலயப்ரவேச விளம்பரத்திற்கு ஆதரவு வாங்கப்பட்டதும ஒன்றாகும். ராஜவிளம்பரம் ஆகம சாஸ்திர விரோதமென்று பெரியதோஷம் கூறப்படுகிறதல்லவா? அதைப்பற்றியும் மஹாராஜா அதைர்யப்படாமலிருக்க வேண்டியதற்காகச் சில போலி பண்டிதர்களைப் பிடித்தார்கள். அவர்கள் மகாராஜாவுக்கு பூர்ணதும்ப வரவேற்புக் கொடுத்து "சாஸ்திர விரோதமென்று பயப்படாதீர், நாங்கள் ஆதரிக்கக் காத்திருக்கிறோம்" என்று அபயம் செய்து கொடுத்தார்களாம் இந்தப் பண்டிதர்களின் திருநாமங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டால் நல்லது.

சென்னை யாத்திரையால் திருவாங்கூர் மகாராஜாவும் மனோதைர்யம் அடைந்துவிட்டார். ஜாதிபேதம் மதச் சீர்திருத்தம்போன்ற பெரிய விஷயங்களில் அவர் தீர்ப்புக்கூறப் புறப்பட்டுவிட்டார். காலதேச ரீதிக்கு ஏற்றபடி ஹிந்துமதத்தைச் சீர்திருத்த வேண்டியது அவசியமாம். ராஜாவுக்கு அந்த அதிகாரம் இருக்கிறதாம். தாம் செய்த காரியம் முற்றிலும் நியாயமாம். இவ்வாறெல்லாம் மகாராஜா தர்ம நிர்ணயம் செய்ய ஆரம்பித்து விட்டார். ஆனால் இவருடைய முன்னோர்களுக்கு இந்த விசால புத்தி ஏன் ஏற்படவில்லை என்பதை இவர் யோஜித்ததாகத் தெரியவில்லை.

ஐரோப்பிய உபாத்தியாயர், ஐரோப்பா யாத்திரை, டில்லி, ஸிம்லாக்களில் ஓயாத விருந்துக் கச்சேரிகள், சீர்திருத்தக்காரர்களின் ஸஹவாசம், அவர்களுடைய தூண்டுதல், ஆகிய பல வழிகளாலும் மகாராஜா விபரீத மனப்போக்கு பெற்றுவிட்டதை அவர் மறைக்க முடியுமா? இவருடை முன்னோர்கள் மேலுலகங்களிலிருந்துகொண்டு இவருடைய யதேச்சாரிகார பிரவிருத்திகளையும் அதர்மச் செய்கைகளையும் கண்டு வருந்தி கண்ணீர் சொரிவதை இவர் அறிய வழியுண்டோ?

நியாயவாதி.

காலரா இனகுலேஷன்.

ஒரு மாணவனின் மரணம்.

மன்னார்குடியில் விசாரணை.

மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூலில் படித்துவந்த அனந்த பத்மநாபன் என்ற 15 வயதுள்ள மாணவனுக்கு காலரா தடுப்பு அம்மைகுத்தப்பட்டது. அன்றுதினமே அவனுக்குக் கடுமையான ஜுரம் கண்டு இறந்துபோனான். அவனுடைய பெற்றோரின் மனுவின்பேல் சென்னை ஸுகாதார இலாக்கா உதவி டைரக்டர் மிஸ்டர் மாத்யூ என்பவர் மன்னார்குடிசென்று இவ்விஷயமாக விசாரணை நடத்திவருகிறார். சென்னை ராஜதானியில் இனகுலேஷனால் இதுவரை மரணமே நேர்ந்ததில்லையென்றும், இந்த ஸம்பவம் மட்டும் ஆச்சர்யமாயிருப்பதாயும், உண்மையை விசாரித்து வருவதாயும் அவர் கூறுகிறாராம்.

அபிஸீனியாவில் இத்தாலி அக்கிரமம்.

இத்தாலியர் அபிஸீனியாவில் மிகக் குரூரமான ஆக்ஷி அமுல் நடத்திவருகிறார்கள். அபிஸீனியத் தலைவர்களான பல கௌரவஸ்தர்களைப் பிடித்துச் சிறைப்படுத்தி அவர்களை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுபோடுகிறார்கள். இத்தாலியர் நடக்கும் ரஸ்தாவில் அபிஸீனியர் நடக்கக்கூடாது. இதாலிய ஹோட்டல்களில் அபிஸீனியர்கள் நுழையக்கூடாது. வெள்ளைக்காரர்கள் ஓட்டும் மோட்டார்களில் அபிஸீனியர் ஏறக்கூடாது. இன்னுமிதுபோல் பல உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்திரவுகளை மீறுகிறவர்களுக்கு தண்டனை விதிப்பதற்காகவே இதாலியர் அங்கு கோர்ட்வைத்திருக்கின்றனர். நாட்டையும், மானத்தையும் இழந்த அபிஸீனியர்களின் கதி தங்கள் நாட்டிலேயே இப்படியிருக்கிறது.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

காக்கிநாடா,

ஸுகஜீவனமும், பண ஆசையும்.

[டி. வி. தர்மராஜகனபாடிகள்
வேதபாடசாலை, திருக்கோகர்ணம்.]

'ஸுகஜீவனம் என்பது பணக்குவியலில் புரளுதலல்ல'. அதற்குப் பணப்பைத்தியம் கிடையாது. பணம் தருவதெல்லாம் சுகம் தருவதாகாது. பலவிஷயங்களில் இரங்கி பக்தி சிரத்தையோடு உழைக்கிறவனுக்கு அவனுடைய உழைப்பே ஒருவித ஆனந்தத்தைத் தருகிறது. அவ்வித ஆனந்தம் பணவாசை பிடித்தவனுக்கு இல்லாமல் போகிறது. பண ஆசையுள்ளவனுக்கு எல்லாவிதத்திலும் பணம் வந்தால்தான் திருப்தி. அந்த திருப்தியும் க்ஷணிக நேரம் தோன்றி மறைவது. பணம் சேர்ப்பதில் மட்டும் அவனுக்குக்கண்ணேயன்றி, பணத்தினால் கிடைக்கும் 'ஸுகம்' இன்னது என்று அவனுக்குத் தெரியுமோ? அது தெரியாது. பணத்தினால்வரும் சுக, துக்கம் இன்னதென்று அவனுக்குத்தெரியாதபோது அவன் லுப்தன் பணம் சேர்ப்பதுபோல் பணம் சேர்ப்பதற்கு உழைக்கிறவனாகிறான். லுப்தன் பணத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான், இவன் பணத்திற்கு உழைத்துக்கொண்டிருக்கிறான். இவ்வளவுதான் வித்தியாஸம்.

பணம் சேர்க்கவும் மனோசக்தி வேண்டும். பணத்தில் மனம் ஏகாக்கிரப்பட்டு, அதைப்பற்றினாலன்றி பணம் சேர்க்கும்வழி காண்பது அரிதாகும் (மனம் ஏகாக்கிரப்படுவது ஒன்று மட்டும் பொது. அதன் லக்ஷியம் பல்வேறுபட்டுக்கிடக்கும்) பணத்தில் லக்ஷியம் வைத்துழைப்பவன் ஜடபுத்தி உள்ளவனாகிறான். 'ஸத்யாஸத்யவஸ்த்து விவேகம்' அவனுக்குகிடைக்காது. எதையும பணத்திற்கு வாங்கிவிற்கும் வகையில்தான் பார்ப்பான். பணத்திற்கு எட்டாத 'மணம்' உண்டு என்று அவனுக்கு தெரியாது. உள்ளம் மகிழ்வு காசு பணத்திற்குக் கிடைக்காது, என்று அவனுக்குத்தெரியாது. பணம் சேர்ப்பதே ஜன்ம ஸாபல்யம் என்று நினைப்பவன் பணத்தின் உபயோகம் இன்னது என்று அறியாதவனாகிறான். பணத்திற்குமேற்பட்டது 'சுகம்' என்று அவனுக்குத் தெரியாது. பணம் தேடுவதொன்றைத் தவிர தேடின பணத்தின் குணமென்ன? என்று அவனுக்குத் தெரியாது. நித்தியப்படி உழைத்து ஜீவனம் செய்கிறவனைவிட பணம் சேர்க்கும் உலோபி எப்படித் தாழ்ந்தவனோ, அப்படிப்போல் பணம் சேர்ப்பதே பிரதானம் என்று நினைத்து உழைப்பவன் பணமே பெரிதென்று உழைத்து ஜீவனம் செய்பவனிலும் தாழ்ந்தவனாகிறான்.

சுகஜீவனத்திற்கு மனோபக்குவம் இன்றியமையாததாகும். பணமே பெரிதென்றுழைப்போன் பணம் சேருவதற்கான ஆஸ்பதங்களில் சந்தர்ப்பம் எப்படி இருக்குமோ அததற்கெல்லாம் அடிமையாக இருந்து உழைக்கிறான். பணத்திற்கு அடிமைப்பட்டவன் நடைபிணமாகிறான். சுகஜீவனம் தேடுகிறவன் பணத்தை ஆள்கிறவனாகிறான். பணப்பைத்தியம் பிடித்தவன் பணத்திற்கு அடிமையாகிறான். இவனுக்குப் பரோபகாரமென்பது நஞ்சாக இருக்கும். செக்கில் கட்டியமாடு உழைப்பதுபோல் பணம் சேர்ப்பதற்கே உழைப்பவனைக்கண்டு துதிப்பது சிலரின் கொள்கையாகவுமிருக்கிறது. அது தர்மசம்மதமானதில்லை. பணப்பைத்தியம் பிடித்தவன் ருணபத்தனாகிறான். 'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினானிலங்கை வேந்தன்' என்றபடி லோகாந்தரத்தில் அவர்களுக்கு உண்டாகும் மனக்கலக்கம் சொல்லொணாததாகும்.

பக்தி.

பக்தியே மோக்ஷத்திற்கு இன்றியமையாத சாதனமாகும். வணக்கம், சிரத்தை, ஊக்கம், மரியாதை, அடங்குதல் முதலியவைகளுடன் கூடின அன்பிற்கே பக்தி எனப்படும். அவ்வித பக்தி பலவகைப்படும். மாதுர்பக்தி, பிதுர்பக்தி, ஆசார்யபக்தி, தெய்வபக்தி முதலியவைகள். தெய்வபக்திதான் மோக்ஷ சாதனமாகும். தெய்வபக்திக்கடிப்படை மத பக்தி. மதபக்திக்கடிப்படை குருபக்தி. அக் குருபக்திக்கு மாதுர்பக்தி, பிதுர்பக்தி சாதகமாகும். தெய்வபக்தியில் ஈடுபடும் மனிதன் மற்றைய பக்திகளையும் அடிப்படையாகக் கொள்ளல்வேண்டும். இல்லையேல் தெய்வ பக்தி எள்ளளவாவது ஏற்படாதென்பது திண்ணம். மாத்ருதேவோபவ, பித்ருதேவோபவ, ஆசார்யதேவோபவ என்று ஞானபாகமான உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. (தந்தைசொல்மிக்க மந்திரமில்லை. தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை) என்ற ஆன்றோர் வசனங்கள் பறை அறிவிக்கின்றன. வேதத்தின் கட்டளைப்படியும், ஆன்றோர் சொற்படியும் இவர்களிடம் பக்திசெலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

தாயார் பத்துமாதம் சுமந்து பிரசவவேதனைப்பட்டு இராப்பகல் ஓய்வின்றி குழந்தையின் க்ஷேமநிமித்தம் எவ்வளவோ பாடுபடுகின்றாள். பிதாவான் எவ்வளவோ கஷ்டப்பட்டு குழந்தைக்கு வேண்டிய சௌகர்யங்களில் ஈடுபடுகின்றான். மாதாபிதாக்களிடத்தில் குழந்தை தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டு அதனால் அவர்கள் குழந்தைக்கு நன்மை செய்கிறாரில்லை. குழந்தை என்ற பாசக்கயிற்றால் கட்டுண்டு தாங்கள் எவ்வளவு கஷ்டமடைந்தாலும், அக்குழந்தை தங்களுக்குப் பிரயோஜனம் செய்யும் என்ற எண்ணம் கொள்ளாது இயற்கையாகவே அக்குழந்தையைப் போஷிக்கிறார்களாதலால் அவர்களிடமும் குழந்தை பக்தி என்னும் அன்பு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

மஹரிஷி விஸ்வாமித்ரர் தன் யாகரக்ஷணார்த்தம் கேட்டதைக் கொடுக்கிறேனென்று வாக்குறுதிகொடுத்த தசரதரிடம் ஸ்ரீராமனை அனுப்பும்படிகேட்க, மஹரிஷியின் சாபம் தனக்கேற்படும் என்ற பயத்தையும் லக்ஷியம் செய்யாமல், தன் வாக்குறுதியையும் மறந்து "நான் தங்களுடன் கூட வருகிறேன்" குழந்தை ராமனைமட்டும் கேட்காதீர்கள் என்று புத்ரவாஞ்சையால் பதில் தெரிவித்தார். பிறகு குருவான வஸிஷ்டர் ஸ்ரீராமனை அனுப்பு! உன்போன்றவர்கள் வாக்குறுதியை மீறுவது அழகல்ல, சௌக்யமாக வந்துசேருவான் என்று சொல்லியும்கூட புத்ரன் என்னும் பாசத்தால் கட்டுண்டு மனசோர்வுடன் ஸ்ரீராமனை மஹரிஷியுடன் அனுப்பினார். கைகேயி தசரதரால் தனக்களிக்கப்பட்ட வரங்களை ஸ்ரீராம பட்டாபிஷேக காலத்தில் கேட்டபொழுது திடசித்தமுள்ளவரும், சொல்தவறாதவரும், ரவிகுலதிலகருமான தசரதர் இவ் வரத்தைத் தவிர மற்றதைக்கேள் என்று தன்னைமறந்து புத்ரவாஞ்சை என்னும் மயக்கத்தில் மூழ்கி கைகேயியைக்கெஞ்சி பன்முறையாடினார். பிறகு ராமனின் பிரிவால் பிராணவியோகமும் தசரதருக் கேற்பட்டது.

சில நூற்றாண்டுகளுக்கு முன் காலத்தில் பேபர் தன்குமாரன் ஹுமாயூன் வியாதியால் பீடிக்கப்பட்டு மரணவஸ்தையில் இருக்கும்சமயம், தன்னை நமனுலகிற்குக் கொண்டுபோகும்படியும், குமாரனைக் காப்பாற்றும்படியும் ஈஸ்வரனைப் பிரார்த்தித்தார். அப்படியே ஈஸ்வர கிருபையால் ஹுமாயூன் சௌக்கியத்தை அடைந்ததுடன், தன் பிராணனிடத்தில் பற்றற்று சந்தோஷத்துடன் இறந்தார். இக்காலத்திலும் பெற்றோர்கள் தங்கள் ஆஸ்திகளைவிற்று பிள்ளைகளைப்படிக்கவைத்து, பிறகு பெற்றோர்களை லக்ஷியம் பண்ணாமல் இருக்கும் அப்பிள்ளைகளையும், அவர்கள் சௌக்யமாக இருக்கவேண்டுமென்றும், நாம் இறந்த பிறகாவது எள்ளும் தண்ணீரு மிறைப்பார்கள் என்னும் எண்ணத்துடன் ஆசீர்வதிக்கும் பெற்றோர்களை நம் கண்ணாரப் பார்க்கின்றோம். தன்னைக் காட்டிலும் புத்ரனிடத்தில் பிரேமை அளவு கடந்ததென்பது தெரிந்தும், தாங்கள் எவ்வளவு கஷ்டமடைந்தாலும் பிள்ளைகளின் க்ஷேமத்திலேயே ஈடுபடும் பெற்றோரிடத்து பக்தி செலுத்தாத பாபிகள் நற்கதி அடையமாட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் நியாயமான முறையில் திரவியங்களை சம்பாதித்து, தான்சம்பாதித்ததை தனக்கென்றுமட்டில் உபயோகிக்காமல், தெய்வ சம்மதமான வழியில் பிறர்க்கும் உதவிசெய்து, வேதசாஸ்திரங்களை பூர்ண நம்பிக்கையுடன் ஆதரித்துப் பரலோகத்தில் நல்லகதியடையும் மார்க்கத்தையும் தேடவேண்டும். இதன்படி செய்வதே ஆஸ்திகர்களுக்கும் பெருமையும், சிரேயஸ்ஸுமாகும். சுபம்!

பெற்றோரிடத்துச் செலுத்தவேண்டிய பக்தியை விசதப்படுத்தினோம். குரு பக்தியை விசதப்படுத்துவோம். குரு இவர்களைக்காட்டிலும் ஒருபடி உயர்ந்தவர். குரு என்றால் சகல வேதார்த்தங்களையும் போதித்து அக்ஞானத்தைநிவர்த்திசெய்து பிரம்மக்ஞானத்தை எவர் போதிக்கிறாரோ அவரே ஆகையால் குருவினிடத்தில்மற்றவரைக்காட்டிலும் பக்திசெலுத்த வேண்டிய கடமை ஏற்படுகிறது. குருபக்தியால் நாம் எதையும் எளிதில் சாதிக்கலாம். உதங்கர், ஏகலைவன், கபீர்தாஸ்முதலியவர்கள் குருபக்தியால் சிறப்புற்றிருக்கின்றனர். குரு பக்தி இல்லையேல் ஒன்றையும் சாதிக்கமுடியாது. ஈஸ்வர சாபத்தை குரு[illegible]வன் விலக்கிக் கொள்ளமுடியும். குரு சாபம் ஏற்பட்டால் ஈசுவரனால்கூட விலக்கமுடியாது என்பதாக ஸ்மிருதிகள் கூறுகின்றன. குருவின் அனுக்கிரஹத்தால் தெரியாத விஷயங்களும் தானகவே உதயமாகும். நாம்மேன்மையை அடைவதற்கு குருவே காரணம். ஆனபடியால் குருவே யாவரைக்காட்டிலும் உயர்ந்து பிரகாசிக்கிறார். ஆகையால் குரு பக்தி அவச்யமானது.

குருபக்தியை அடிப்படையாகக் கொண்டவனுக்கு தெய்வபக்தி தானகவே வந்துசேரும். இயற்கையாகவே உம்மையே அடையவேண்டுமென்ற பிரார்த்தனையையே கோறி அவரது உத்தமமான குணங்களில் ஈடுபட்டு எக்காலத்திலும் அவரையே சிந்தித்து அவரிடம் இரண்டறக்கலக்க வேண்டுமென்பதே உத்தமமான தெய்வ பக்தி.

ஆகையால் சனாதனிகள் அடிப்படையான மதா, பிதா, மதம் குரு, தேச, ராஜபக்திகளுடன் சேர்ந்து ஈசுவரனை ஸதாகாலமும் சிந்தித்து நல்வழிப் படுவாராக.

சிவராம கணபதி கனபாடிகள்.

சட்டஸபை மெம்பர்கள் ஸங்கியை.

இந்தியாவில் எல்லாமாகாணங்களிலும் சட்டஸபையில் காங்கிரஸ் கக்ஷியின் பலம் பின்வருமாறு:—

சென்னையில் 215க்கு 159. ஐக்யமாகாணத்தில் 228ல் 133. பீஹாரில் 152ல் 98. மத்யமாகாணத்தில் 112க்கு 71. ஒரிஸா 60ல் 36. பம்பாயில் 175ல் 88. எல்லைப்புறத்தில் 50ல் 19. ஸிந்து 60ல் 7. வங்காளம் 250க்கு 50. அஸ்ஸாம் 108க்கு 40. பஞ்சாப் 175க்கு 17.

வேதமும் அர்த்த ஞானமும்.

ஓர் பதிலுரை.

தி. ஈ. வீரராகவாசாரியர்.
சிரோமணி, திருவாதி.

வேதாந்த தீபிகையில் பிரசுரிக்கப்பட்ட நமது வேத வைபவ விமர்சம் என்றும் வியாசத்தில் வேதவைபவ வியாசத்தின் நான்காவது தூஷண நிரூபண ப்ரகரணத்தில் 'ஸ்வாத்யாய விதியே அர்த்தக்ஞான பர்யந்தம் என்றார்கள். மீமாம்ஸகர்கள். ஞேயச்ச இத்யாதியால் அர்த்தஜ்ஞானம் ப்ரத்யேகமாக விதிக்கப்படுகிறது என்று ஸாயன மாதவ மஹாபாஷ்யகாரர் முதலியோர்பக்ஷம் அர்த்தஜ்ஞானம் நித்யமன்று என்று ஸித்தாந்திகள் பக்ஷம்" என்று ஸ்பஷ்டமாய் இருக்க, சென்ற வாரத்தின் ஆர்யதர்மத்தில் அத்யயன விதி அர்த்தஜ்ஞானத்தையும் விதிப்பதாக நாம் எழுதியிருப்பதாய் எண்ணி ஸமாதானம் சொல்லப்பட்டிருக்கிறது. இது அநப்யுபகதாம்ச தூஷணம். ஆகையால் ஆரம்பத்தில் அத்யயன விதி என்றாரம்பித்து ஏற்படுகிறது, என்றளவாகவுள்ள ஸமாதானத்திற்குப் பதில் அவசியமில்லை.

2. இனி கர்மாவுக்கு அர்த்தஜ்ஞானத்தின் அபேக்ஷையுண்டாவென்று சங்கித்துக்கொண்டு அர்த்தஜ்ஞானம் கர்மாவிற்கு அங்கம் என்று நிரூபித்தால் தான் அர்த்தஜ்ஞானம் இல்லாது செய்யப்படும் கர்மாக்கள் வ்யர்த்தமாகும் என்றாரம்பித்து அர்த்தஜ்ஞானம் இல்லாவிடில் கர்மாக்கள் வ்யர்த்தமாகா என்றளவாக உள்ளவற்றிற்குப் பதிலுரைக்கப்படுகிறது. பாசர மாதவத்தில்,

க்ருஷ்ணவாமாணை அயஜ்ய நதஷ்ய
ஸ்ருணோமாவை ப்ருதிவாயக் ஸ
யதெ என்று ஆரம்பித்து
யோயீது விதிவதூம் வெதாயும் ந
விசாரயெத் ।

என்று அர்த்தக்ஞானம் நித்யம் என்பதில் பிரமாணம் உதாஹரிக்கப்பட்டது. இந்த மாதவரே வேதபாஷ்யம் செய்து ஸாயனருடைய பெயரால் பிரசுரித்ததாய்ச் சில விமர்சகர்நிர்ணயம். இவரேயானாலும் வேறொருவரேயானாலும் வேதபாஷ்யத்திலும் ருக்வேத உபோத்காதத்தில் பலவிடங்களில் அர்த்தஜ்ஞானவிதியையும் அது நித்யமென்பதையும்ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதால் நித்யமன்று என்று அவர் அபிப்பிராயம் கல்பிக்க முடியாது.

"அயஜ்ய நவியெபெ ப்ராயாணசவாஹா
வெ விசாரஸாஸ்த்ரம் ந ப்ரவதெத"

என்று ஆரம்பித்துக்கொண்டு க்ரதுபோதவிதிகள் அர்த்த நிர்ணயமன்றியில்அநுஷ்டானம் பண்ணிவைக்க முடியதாகையால் க்ரதுவிசாரத்தை ஆக்ஷேபிக்காது என்றும்,

ஶ்ரவணவிதிவஸ் ஸாக்ஷாத் ப்ரஹ்ம
விசாரம் விதத்தெ என்றும்

கர்ம பிரும்ம விசார விதி ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும்,

க்ரது விசாரஸ்ய தைவணிக ஊ
தெவி நித்யவ விதிஃ கிம் வா ப்ர
ஹ்ம விசாரஸ்ய, தத்ராதெ்ய ஸநதெ
வி ஸஉ ஐதா்ஹ" அதோ நித்ய: க்ர
து விசாரஶெ்ச, வணிகஉது்வஸ்ய
யதொடக்ரணை ப்ரதுவாய ஶ்ரவ
ணாத் க்ரதுவஶ்ச, வணிகாநாம்
நித்ய: அத ஐதய: । ஷிதீயொ

நிஷ்டி ஐதா்ஹ — ப்ரஹ்ம விசாரஃ
வாநஃ வாரஉஹம்ஸவெவ ।

என்று அர்த்தஜ்ஞாந நித்யத்வம் கண்டோக்தம். அதற்கு மேல்,

ப்ராஹ்மணெந நிஷ்காரணஃ........
ஜ்ஞேயஶ்ச

என்று விதியை உதாஹரித்து

நிஷ்காரணமபெ நாயஜ்யந ஜ்ஞாந
யொ: காஉ்கவம் நிவாயதெ

என்றும் சொல்லியிருக்கிறார் பாசர மாதவத்தில் ஹோம ப்ரகரணத்தில்,

"வநதஸ் ஜ்ஞாதெவாநஷெயட் ।
அநஷ்யாதொஷ ஶ்ரவணாத் । தஶாஹ
அஜிராஃ— ஸ்தாவிப்ராயக்ருதம் கஉ
டக் கிஞ்சித் ஜ்ஞாநவஜிதம் ॥ க்ரீ
யாகதெவவாரா நாம் தத்வம்
நிஷ்பொஜநம் ॥

என்று அர்த்தஜாநமில்லாவிடில் அநுஷ்டானம் நிஷ்ப்ரயோஜனம் என்றார். இவ்வாறான மாதவ மஹாபாஷ்ய கையட மீமாம்ஸகாதி பக்ஷங்களைத் தீர்மானித்தே அவித்வானுக்கு கர்மானுஷ்டானத்தில் அதிகாரமில்லை என்று இவர்களுடைய அபிப்பிராயம் வெளியிடப்பட்டது.

3. 'ஸித்தாந்தத்திலும்'
"யொஹவா" ஐதாதி ப்ரமாணங்களால்

மந்த்ரார்த்தமான தேவதா ஜ்ஞானம் அநுஷ்டானத்துக்கு அவச்யாபேக்ஷிதம் என்று எழுதியுள்ளேன். தேவதாதிகரண ச்ருதப்ரகாசிகையில்

ஓஷிஜ்ஞாநவஏவ உெவ உஞ்ராணாஉ
நுஷ்டாநஸாயகி

என்று தத்வடீகையில்

ப்ரயொமகாரெ ப்ரதிஉஞ்ம் ப்ரஜ்ஞா
த ஓஷ்யாதீநுஸாரண வாரீ । அத
வவஹி அவிதிதாஷெய கவாதிதி
ஷெயஶ்தாவநாத்வாரஃ என்றும் இந்த ச்ருதிவாக்யம்.

"ஞாநஉெவஸ்உஞ்ராணா ந்ரஷிம் ஹ
நொயிஷெவதீ । அது ப்ரஹ்மணீ ।
யொஹவா......

உஞ்ர உஞ்ரவிதாஶ் என்றிவை முதலிய பாரத்வாஜாதி வசனங்களால்,

உஞ்ராயதெவதா ஜ்ஞாநத்துக்கு க
ர்மாங்கமுண்டாகையால் அதன்றி அநுஷ்டித்தல்நிஷ்பலமே. மீமாம்ஸாதி பரிசயமூலகமான அர்த்தஜ்ஞானம் எல்லாருக்கும் அபேக்ஷிதமென்றில்லை தேவதா ஞானம் அவச்யமே. அர்த்தக்ஞானம் கர்மாங்கமன்று என்பவர்களுக்கும் மீமாம்ஸாதிமூலக தத்வநிர்ணய நிஷேதமே அபிப்ரேதம்.

4. இனி வேதவித் சப்தார்த்தத்தைப் பற்றி பிரமாணங்கள் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன.

1. வெதஶாஸ்த்ராணிபெதயஃ ஶா
ஸ்த்ராயந்த நிஶெவதெ । தஶாவஸ
வெதவிஃ ஹொகெ வதநம் தவ
வாவநீ ॥

என்று அர்த்த ஸம்ஹிதை.

2. வவஶவஸ்யெதாதயம்
யதாவெதவிஃ ஶாஸ்த்ரவிஃ ஐதாஷ
வெதாதி ஶவாநீ ।

என்று ச்ருதப்ரகாசிகை

3. தஷிதெத வெத
என்று பாணினீ ஸூத்ரம்

4. கஷிஃ...... வாரம்வாதிநவெத்தி
கஷிஃ வெத்தி...... வாரம் நவாதி,

என்று மஹாபாஷ்யம்

அயதாவவொயொவெதநஉவித்தா
ந தா ஸ்ர ஏவஉத்ர வெதநீ ।

என்று வியாக்யாநகையடம்

6. வெதஸ்ர ஏவம் காவ்யாதியஞ்ஞ
யொவெத்திதவிது வெதம் வெத்தீதி ப்ர
யொம வாரணாய என்று ஸ்ரீ கஸ்தூரி ரங்காச்சாரியஸ்வாமியின் வசஸ்ஸாதாதத்வத்தின் நிஷ்கர்ஷம்,

7. மந்திரவித் என்கிற சாந்தோக்ய வசன பாஷ்யத்தில்

உஞ்ரவிஃ—ஶபாயஉஉத்ர விஜ்ஞாந
வாநு ।

என்று ஸ்ரீ சங்கரபகவத்பாத பாஷ்யம்.

8 இவ்வாறாகவே உபநிஷத்பாஷ்யகாருடையவும் ஸித்தாந்த யோஜனை (9) வேதவித் வேதார்த்த விசாரக: என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்தின் அத்வைத வியாக்யானம். என்றிவை முதலிய பல உதாஹரணங்களால் வேதவித் சப்தமானது வேதார்த்த வித் பரமே அல்லது கேவல அத்யேத்ருபரமன்று. மற்றது வேதாந்த தீபிகையின் நம் வியாசத்தில் ஸ்பஷ்டம்.

அஜாநு ஹவெ யம் யம் க்ரதுமஷீ
தெ ஐதாதி

ச்ருதிகளுக்கு நம்முடைய நிர்ணயம்விசிஷ்டாத்வைத ஸம்மதம். இதில் ஸங்க்ரஹமாக விஷயங்களை நிரூபித்தேன். இதனாலேயே,

யம் யம் க்ரதுமஷீதெ ஐதாதி ஸமாதானம் சொல்லப்பட்டது.

[குறிப்பு:—இந்த சர்ச்சையில் இருதரப்பு கக்ஷியையும் நாம் கவனித்தோம். இத்தகைய விவாதம் இக்காலத்தில் பத்திரிகைகளில் வெளிவருவது விரும்பத்தக்கதல்ல. வேதங்களின் வைபவத்தைப்பற்றி எவ்வளவு வழியில் எவ்வளவுவிஸ்தாரமாக ஒருவர்வர்ணித்து அதிசயோக்தியாக எழுதினால்கூட அதில் வைதிகமதஸ்தர்களுக்குச் சிறிதும் ஆக்ஷேபமிருக்க நியாயமில்லை. அந்த வேதவைபவத்தை மறுத்து அதைச் சிறுமைப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு விமர்சம் வெளியிடுவது நியாயமாகாது. கேவல வேதாத்யயனம் செய்தவர்களைத்தாழ்த்திப் பேச பிரமாணம் தேடுவதும் அர்த்த ஞானமில்லாமல் கர்மானுஷ்டானம் செய்வது நிஷ்பலமென்றால் இந்த வியாஸம் எழுதியவருள்பட ஒரு வைதிகனும் தப்ப முடியாது. கர்மாநுஷ்டானமே நசித்துவிடும். தற்கால சீர்திருத்த வாதிகளின் கக்ஷியும் பலப்படும். அர்த்த ஞானமின்றி மூடநம்பிக்கையுடன் கர்மங்களை செய்ய வேண்டியதில்லை யென்றே அவர்களும் வாதிக்கிறார்கள். அர்த்தஞான விஷயத்தில் முன்னோர்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதமிருக்கிறதாகத் தெரிகிறது. ஒன்றை ஸமர்த்திப்பதற்காக அதை ஸ்துதிசெய்வதும் மற்றொன்றை நிந்திப்பதும் இயற்கையான சாஸ்திர மர்யாதை. அதில் ஒருபக்ஷத்தை மட்டும் எடுத்துக்கொண்டு வாதிப்பது நியாயமல்ல. நம் சாஸ்திரங்களில், ஒன்றை உயர்த்தவும், தாழ்த்தவும் பலபிரமாணங்கள் கிடைக்கும். எதிர் கக்ஷியாருடைய கக்ஷிகளுக்கெல்லாம் இதில் ஸமாதானம் வந்துவிட்டதாக அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இவர்சொல்லியுள்ளவை ஏற்கனவே மறுக்கப்பட்டவைகளே வேதமும் தெரியாமல்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

921518

திருவாங்கூர் ஆலய ப்ரவேச கண்டனம்.

(குளித்தலை ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள்.)

தீண்டாதார்களின் விஷயமாக சுமார் 12 வருஷத்திற்கு முன் எம்மால் பல பண்டித சிகாமணிகளுடைய ஸம்மதியின் பேரில் சுருதிஸ்மிருதி புராணம், தமிழ்பெரியபுராணம், முதலிய நூல்களிலிருந்தும் எடுத்தெழுதப்பட்ட சிறந்த மேற்கோள்களுடனும் யுக்தி ஸாதனங்களுடனும் இயற்றப்பெற்ற சண்டாளஜாதித்தத்வ நிருபணம் என்கிற கிரந்தத்தில் நன்கு நிரூபிக்கப்பட்டு, அச்சிட்ட புஸ்தகமும் பலவிடங்களிலும் வெளிப்பட்டிருப்பதால் அதுவிஷயமாய் மறுபடியும் நாம் எழுத முன்வரவேண்டாமென்று நினைத்து இதுகாறும் மௌனம் ஸாதித்தோம். தற்காலம் தீண்டாமை விஷயமாய் நம்தேசத்திலேற்பட்டிருக்கும் கிளர்ச்சியை சற்று கவனிக்குங்கால் இனி நாம் மௌனமாயிருப்பது உசிதமில்லை என்றும் முன் நாம் எழுதி வெளியிட்ட நூல்களுக்கு 12 வருஷக் காலாவதி முடியப்போகிறபடியால் அதற்கு பலம் உண்டுபண்ணவேண்டுமெனக் கருதி மறுபடியும் இவ்விஷயமாக ஸ்வல்பம் வெளியிட முன்வருகிறோம்.

திருவாங்கூர் கனம் மஹாராஜா அவர்கள் தீண்டாதவர்கள் விஷயமாய் தற்காலம் வெளியிட்டிருக்கும் உத்திரவானது எவ்வித ஆதாரத்தைக்கொண்டு, யாது பயனைக்கருதி என்று பலவாறு நன்கு யோசித்தும் புலப்படவில்லை.

1. சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கின்றதா? 2. சிஷ்டாசாரப்பிரமாணங்களைக் கொண்டா? 3. தற்காலம் தமது ராஜ்யத்திலுள்ள பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கருதியா? 4. தீண்டாதவர்களுடைய வேண்டுகோளின் பேரிலா? 5. தீண்டாதவர்களுடைய நன்மையைக் கருதித் தாமாகச் செய்தார்களா? 6. அந்த ராஜ்யத்தில் முன்னிருந்த மன்னர்களுடைய அனுஷ்டானத்தை யநுஸரித்தா? 7. இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று தங்களுக்குத் தோன்றிய அபிப்பிராயத்தாலா?

1 சாஸ்திரங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு இந்தக்காரியம் நடத்தப்பட்டதென்று கூறுவதற்கற்பமேனுமிடமில்லை. சாஸ்திரங்களென்றால் சுருதி, ஸ்மிருதி புராணம் முதலியவைகளேயாகும். சுருதிகளில் சண்டாளன் என்கிற ஜாதியே சொல்லப்படவில்லை. என்று சிலர் பறையறைவதும் தவறே. பிருஹதாரண்யம் 4வது அத்தியாயம் 2வது பிராம்மணம் 22வது மந்த்ர பாஷ்யத்தில் ஸுஷுப்தி அவஸ்தையில் சண்டாளன் அசண்டாளன் புல்கஸன் அபுல்கஸன் என்று ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. இந்த பாஷ்யத்தின் வியாக்கியானத்தில் சண்டாளன் மிகவும் தாழ்ந்தஜாதி என்று சொல்லப்பட்டிருக்கின்றது

பின்னும் தைத்தரீய பிராம்மணம் 3வது அஷ்டகம் 4வது பிரச்னம் 14, 17வது அனுவாகத்தில் சண்டாளன் பௌல்கஸன் என்கிற பதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும் ஸ்ரீருத்ரத்தில் 4வது அனுவாகம் 8வது மந்திரத்தில் நிஷாத என்று பிரயோகமிருக்கிறது. இதற்கு பரமஹம்ஸபரிவிராஜக ஸார்வபௌம ஸ்ரீமதபிநவ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் தம்மாலெழுதப்பட்ட பாஷ்யத்தில் சண்டாளன் என்று பொருள் கூறியிருக்கிறார்கள்.

இனி அவன் அசுத்தன் என்பதற்கு ஆதாரமான சுருதியையும் வெளியிடுகிறோம். சாந்தோக்ய உபநிஷத்தில் 5வது அத்தியாயத்தில் புண்ய கர்மங்களின் பயனையநுபவித்து ஸ்வர்கலோகம் சென்றவர்கள் அங்கு அப்பயனை அனுபவித்துப் பிறகு எஞ்சி நிற்கும் பாபகர்மாக்களின் பயனையநுபவிக்கவேண்டி இவ்வுலகம் சென்று நாய் ஜன்மாவையாவது சண்டாள ஜன்மாவையாவது பன்றிஜன்மாவையாவது அவரவர்களின் பாபங்களுடைய வலிமைக்குற்றவாறு கீழான ஜாதியில் பிறவியையடைகிறார்களென்று சுருதிஸ்பஷ்டமாய் வெளியிடுகின்றது. இங்கு வெளியிடப்பட்ட சுருதிகளாலும் அவைகளின் பாஷ்யங்களாலும் சண்டாளன் என்கிற ஒருஜாதி உண்டென்பதும் அது கீழானஜாதி என்றும் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருப்பினும் இதைச்சற்றும் கவனியாமலும் பிறர் கவனிப்பார்களே என்கிற எண்ணமில்லாமலும் சுருதியில் சண்டாளன் என்கிற பதமே கிடையாது, அவ்விதம் ஒரு ஜாதியே இல்லையென்று ஸபைகளிலும் பத்திரிகைகளிலும் தைர்யமாய் பறை அறைந்து பிறரையும் ஏன் ஏமாற்றமுன்வருகிறார்களோ தெரியவில்லை? அந்தோ?

இனி ஸ்மிருதிகளின் கருத்தை கவனிப்போம்.

மனுஸ்மிருதியை முக்கியமாய் எவரும் எடுத்துக்கொண்டிருப்பதால் அதை முந்தி விசாரிப்போம்.

மனு 10வது அத்தியாயம் 16வது ஸ்லோகம் முதல் துவக்கி 51 52, 53, 54, 55, 56முடிய விஸ்தாரமாய் சொல்லியிருக்கிறார். அவைகளின் கருத்தாவது:- சண்டாளன் சுவபசன் இவர்களுக்கு கிராமத்திற்கு வெளியில்தான் வீடுகளிருக்கவேண்டும். அவர்களிடம் நல்ல பாத்திரங்களிருக்கக்கூடாது. அவர்களுக்கு நாயும் கழுதையும்தான் ஸொத்து, பிரேத வஸ்திரங்கள்தான் வஸ்திரம். ஸாப்பாடு மண்பாண்டங்களில்தான், இரவில் அவர்கள் வெளியில் வரக்கூடாது, பகலிலும் அரசர்களுடைய ஆக்ஞையின்பேரில் வெளியில் ஸஞ்சாரம் செய்யவேண்டும் என்று விஸ்தாரமாயும் நிரூபித்திருக்கிறார். விரிவிற்கஞ்சி சுருக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த விஷயத்தில் கௌதமர் யாக்ஞவல்க்யர் தேவலர், வியாக்ரபாதர், பிருஹஸ்பதி, ஆங்கிரஸ் ஸம்வர்த்தர், பிரஜாபதி, விஷ்ணு, யாக்ஞ வல்கியர், போதாயனர், பாராசரர், ஹாரீதர், வ்ருத்தஹாரீதர், ஆபஸ்தம்பர், ஸுமந்து, சாதாதபர், வியாஸர், வேதவியாஸர், யமன், ஆசுவலாயனர், வஸிஷ்டர், அத்திரி முதலான மஹரிஷிகள் ஸ்பஷ்டமாய் சண்டாளஜாதியையும் அவர்களிருக்கவேண்டிய முறையையும், பிறர் அவர்களிடம் இருக்கவேண்டிய ரீதியையும் நிரூபித்திருக்கிறார்கள். இன்னும் விஸ்தாரமாய் அறிந்துகொள்ள விரும்புவோர்கள் இந்த விஷயமாய் எம்மாலியற்றப்பட்ட சண்டாள ஜாதிதத்வ நிரூபணம் என்கிற புஸ்தகத்தை கவனித்தால் தெரியும்.

இவ்விதமே ராமாயணத்திலும் திருசங்கு என்கிற அரசனுக்கு வஸிஷ்ட புத்திரர்கள் கொடுத்தசாபத்தால் அவன் சண்டாளரூபத்தையடைந்ததும் அருகிலுள்ளபலரும் அவனை விட்டுவிலகி ஓடிவிட்டார்களென்று பாலகாண்டத்தில் 58வது ஸர்க்கத்தில் கூறப்பட்டிருக்கின்றது. மகாபாரதம் சாந்திபர்வாவிலும் தீண்டாதார்களைப்பற்றி நன்கு சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும் பெரியபுராணத்தில் நந்தனார் சரித்திரத்தைக் கூறுமிடத்தில் இவர் தாம் தில்லைக்குச் செல்லின் கோயிலினுள்ளே புகுவது தமதுஜாதிக்கு இசையாது என்பதை நினைந்து போகாதொழிந்தார். பின்னொருசமயம் பகவானுடைய தர்சனத்திலுண்டான அதிக அவாவால் தில்லையின் எல்லையையடைந்தும் உட்புகாதொழிந்து இரவு பகல் திருவெல்லையை வலஞ்செய்து வணங்கினமையால் வேதாகமவிதிக்கஞ்சி சாதிநெறி கடவாது நின்ற இவரது பெருந்தன்மை அறியப்படும் என்று ஆறுமுக நாவலர் நன்கு கூறியிருக்கிறார். எந்த சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்தாலும், தீண்டாதார்கள் பொதுவான ஆலயங்களுக்குள் செல்லுவதற்கு ஆதாரமேயில்லை என்றும் ஆலயங்களுக்கென்றேற்பட்ட ஆகம சாஸ்திரங்களிலும் இவர்களுக்கு ஆலயப்பிரவேசம் கூடாதென்று கண்டிப்பாய் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளால் மகாராஜா அவர்களுடைய உத்திரவுக்கு சாஸ்திரங்களில் அற்பமேனும் ஆதாரமில்லை என்றும் இதினால் அதிகதோஷமேற்படுமென்றும் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது.

(தொடரும்.)

சென்னை ஹைகோர்ட்

புதிய ஜட்ஜ் நியமனம்.

சென்னை ஹைகோர்ட்டில் ஸமீபத்தில் காலியாகப் போகும சீப் ஜஸ்டிஸ் பதவிக்கு ரங்கூன் ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்துவரும் கனம் லீச் என்பவரும், மற்றொரு ஸ்தானத்திற்கு பஞ்சாபில் வக்கீலாகஇருந்துவரும் ஸர் அபதுர்ரஹ்மான் என்ற முஸ்லீம் கனவானும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

வக்கீல் ஸமூஹத்திலிருந்தே சீப்ஜஸ்டிஸை நியமிக்கவேண்டுமென்று சென்னை வக்கீல் ஸங்கம் செய்துவந்த கிளர்ச்சி பலிக்கவில்லை. முஸ்லீம் ஜட்ஜ் வேணுமென்று முஸ்லீம்கள் செய்துவந்த கிளர்ச்சி பலித்தது.

துலாபாரம்.

கோஜா வகுப்பு முஸ்லீம்களின் குருவான கனம் ஆகாகானுக்கு நெய்ரோபியிலுள்ள அவருடைய சிஷ்யர்கள் துலாபாரம் நடத்தினார்கள். ஆகாகானை தராசில் ஒரு தட்டில் வைத்து, மற்றொரு தட்டில் தங்கக்கட்டிகளைப்போட்டு நிறைப்பியதில் 23 ஆயிரம் பவுன் கொண்ட தங்கம் இழுத்தது. இந்தத் தங்கத்தை அவர் பெற்றுக் கொண்டு அதைப் பொது ஜன நன்மைக்காகச் செலவு செய்யும்படி? நன் கொடைகொடுத்தவர்களிடமே திரும்பிக் கொடுத்துவிட்டாராம். இந்த விசேஷத்தைப் பார்ப்பதற்காக லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

வேதார்த்தமும் தெரியாமல் கர்மாநுஷ்டானம் செய்கிறவரைவிட, ஸ்வர-அக்ஷரங்களை யாவது நன்கு உச்சரித்து கர்மாநுஷ்டானம் செய்கிறவன் உயர்ந்தவனென்றே சாஸ்திரம் நினைப்பதாகக்கருதுகிறவர்களும் உண்டு. ஸொந்தமாத்ஸர்யத்தைக்கொண்டு நடத்தப்படும் இந்த விவாதம் பத்திரிகைகளில் இனி வெளியிடக்கூடியதல்ல. ப—ர்.]

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சரஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R.Ramaswami Iyengar, Proprietor

151

153

கும்பகோணம்.

மகாமகோபாத்யாய உ-வே சாமிநாதய்யர் 83-ம் வருஷப்பிறப்பு கொண்டாட்டம். 6—3—37

கும்பகோணம் கோபாலராவ் ஹாலில் சென்ற சனிக்கிழமை தினம் கும்பகோண மகாஜனக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

திவான் பஹதூர் ராமசுவாமி சாஸ்திரிகள் அக்ராஸநம் வஹித்தார். இவ்வூர் கடலங்குடித் தெரு ரிடையர்டு இஞ்ஜினீர் ஸ்வாமிநாத சாஸ்திரிகள், தாக்ஷிணாத்யகலாநிதி மகாமகோபாத்யாய ஸ்வாமிநாதய்யர் அவர்களுடைய அபார தமிழ் பாண்டித்யத்தையும் அவரால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் பாஷைக்கும் செய்யப்பட்டிருக்கும் பெரு உதவியையும் எடுத்துக்கூறி அன்றையதினம் அவருடைய 83வது வருஷ பிறப்பு தினம் என்றும் அவருக்கு மேன்மேலும் திடகாத்ரத்தையும் ஐச்வர்ய அபிவிருத்தியையும் நீண்ட சுகவாழ்வையும் எல்லாம் வல்ல கடவுள் அளிப்பித்து தமிழ்தாய்பாஷைக்கு அநேகம்பேர் உதவிகளை அப்பெரியார் மூலம் செய்வித்து தமிழ் உலகத்திற்கு அருள்புரிய ஈசனை வேண்டிக்கொண்டார். சபையோரெல்லோரும் எழுந்து நின்று ஆமோதித்தனர்.

ஒரு நிருபர்.

தமிழ்நாடு வைதிக தர்மசங்கம்.

தஞ்சை ஜில்லா மன்னார்குடி உபந்நியாஸங்கள்.

மேற்படி சங்க ஆதரவின்கீழ் மன்னார்குடி கீழ இரண்டாம் தெருவில் விஷஹரவிநாயகர் கோவிலில் வைதிக தர்மசங்க அந்தரங்க கைங்கர்ய பாரகிய ப்ரும்மஸ்ரீ புடார்ஜுன சாஸ்திரிகளவர்களால் சமீபத்தில் அவ்வூரில் நடத்தப்பட்ட தர்மசங்க ஸம்மேளனத்தின் தொடர்பாக ஸ்ரீ பாகவத புராண உபன்யாசங்கள் செய்யப்பட்டன. பிறகு அவ்வூர் பிராம்மண ஸமாஜ வேண்டுகோளின்படி "ஹாலாஸ்ய மகாத்ம்யம்" அதே இடத்தில் பிரதிதினம் இரவு 7-30 முதல் 9-30 வரையில் உபந்யஸிக்கப்பட்டு வருகிறது. National High School உபாத்தியாயர்கள் விசுவநாத சாஸ்திரிகள், ரெத்னசலமய்யர், Findlay College Pandit மகாலிங்கசாஸ்திரிகள், ஐயா கனபாடிகள், விசுவநாதய்யர், ஸுந்தரேசய்யர் முதலிய அநேகர்கள் ப்ரவசனஞ்செய்வதற்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுத்து பக்தி ச்ரத்தையுடன் கதாச்ரவணம் செய்து சிவபெருமான் திருவிளையாடல்களைக் கேட்டு இன்புற்று வருகிறார்கள். இதுவரையில் 48 லீலைகள் விரித்துரைக்கப்பட்டு அடுத்தவாரம் 'மாணிக்கவாசகர் சரித்திரமும்' அதன்பின் "ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் திருக்கல்யாணமும்" நடக்கும். ஆஸ்திக ஜனங்களெல்லோரும் விஜயஞ்செய்து உபந்யாசம் செய்யும் தர்மசங்க கைங்கர்ய பாரகிய சாஸ்திரிகளையும் 'வைதிக தர்மசங்க' வேலைகளையும் அபிமானித்து மேற்படி சங்கத்துக்கு மெம்பர்களாய்சேர்ந்து, சங்க காரியங்களை நடத்தி வைத்து, வைதிக தர்மத்தை மேன்மேல் நிலைநாட்டி வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வைதிக தர்மசங்க கார்யதரிசி,
S. சுவாமிநாத சாஸ்திரிகள்.

சாத்தனூர்.

தஞ்சை வைதீக தர்மசங்க ஆதரவில் ஷை சங்க உபகாரியதரிசி பிர்ம்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்கள் கும்பகோணம் தாலுக்கா நாரசிங்கன்பேட்டைகடுத்த சாத்தனூர் கிராமத்தில் மார்சு-மீ 5௳ வேத விஹித கர்மாக்கள் பிராமணர்களுக்கு முக்கியம் என்பதை எளிய நடையில் கேட்போர் மனம் குளிர உபன்யஸித்தார்கள். மேல்கண்ட சாஸ்திரிகள் அவர்கள் உபன்யாஸமானது சங்கத்தின் கொள்கை எல்லோர்களுக்கும் ஜீவாதாரம் என்பதை பொது ஜனங்கள் அறிந்து சங்காபிவிருத்திக்கு முன்வருவதற்கு ஒரு பெரிய தூண்டுகோல் என்பதையும் இது போன்ற கொள்கைகள் மனதில் வேரூன்ற இவ்வூர் மஹாஜனங்கள் அடிக்கடி அநேக சாதுக்களின் உபன்யாஸத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் ஷையூர் வேதபாடசாலை வாத்தியார் ராமமூர்த்தி சாஸ்திரிகள் அறிவித்துக்கொள்ளுகிறார்.

வி. ராமசாமி.

கோயம்புத்தூர்.

பஜனையினது யோகத்தன்மை

சென்ற 1937௵ பிப்ரவரிமீ 21௳ மாலை கோயம்புத்தூர் ராஜவீதியில் உள்ள ஸ்ரீசங்கர மடத்தில் தஞ்சை ஜில்லா சேங்காலிபுரம் வாஸியும் பிரபல சங்கீத வித்வானும், ஆழ்ந்த அனுபவியும், அத்யாத்மயோகம், ஸங்கீதம், பஜனை முதலிய விஷயமாகப் பல கிரந்தங்கள் இயற்றியவருமான ப்ரும்மஸ்ரீ குகதாஸ் எஸ். வி. நடராஜ அய்யர் பல பிரபலஸ்தர்களினது விருப்பத்திற்கிணங்கித் தகுந்த பக்கவாத்தியங்களுடன் ஆயிரக்கணக்கான ஜனங்கள் முன்பு ஒரு சங்கீதக்கச்சேரி செய்தனர். குகதாஸ் தான்பாடிய கீர்த்தனங்கள், திருப்புகழ் முதலிய பாக்களில் உள்ள உயர்ந்த பொருள்களை மஹாசபையின் முன்பு வெகு உருக்கத்துடன் விளக்கியது யாவரையும் மனமுருகச் செய்தது. பக்திரஸம் ததும்பிய சங்கீதக் கச்சேரி முடிந்தவுடன் சில பக்கதர்களினது விருப்பத்திற்கிசைந்து, மறுதினம் 22—2—37 தினம் மாலை சுமார் மூன்று மணிநேரம் 'பகவத் பஜனையின் அவசியம், அதினால் ஏற்படுகிற இக, பர க்ஷேமம், அநுபவ மார்க்கத்தில் அதன் உதவி, அதினால் சம்பவிக்கிற யோகத்தன்மை, பஜனை நடைபெறவேண்டிய விதம்' முதலிய பல விஷயங்கள் பற்றிப் பற்பல ஆதாரங்களுடனும் ஓர் அரிய உபந்நியாசம் செய்தது பல ஸ்திரீகள், புருஷர்கள் அடங்கிய சபையை ஆநந்தக் கண்ணீர் விடச்செய்தது. உபந்நியாசம் முடிவடைந்தவுடன் கோயம்புத்தூரின்கண் பல பாகங்களிலுள்ள பிரமுகர்கள் சிலர் பல இடங்களில் 'அத்யாத்ம மார்க்கம், சங்கீதம், பஜனை' முதலிய அநுபவ மார்க்கங்கள் பற்றிச் சில உபந்நியாஸங்கள் செய்யும்படி குகதாஸ் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். குகதாஸ் தான் சென்ற இரண்டு மாதகாலமாக தஞ்சை, திருச்சி சேலம் ஜில்லாக்களில் உள்ள பல இடங்களில் இவ்விஷயங்கள் பற்றி சற்றும் ஒழிவில்லாது பேசியதுமாத்திரமில்லாதும், பாடியதாலும், அதினால் சற்று களைப்படைந்திருப்பதாயும், தனது கிராமம் போய் சில தினம் ஒழிவெடுத்துக்கொண்டு பிறகு இவ்விடம் வந்து உத்தம பக்தர்களினது ஆக்ஞையை நிறைவேற்றுவதாயும் தெரிவித்தார். அவ்விதமே எங்கும் நிறைந்த பரம்பொருளினது அருள் பிரவாகத்தினால் நடைபெறப் பல பக்தர்களினால் ஆவலுடன் எதிர் பார்க்கப்படுகிறது, என நமது நிருபர் தெரிவிக்கின்றார்.

காரைக்குடி.

விஜயம்:— ஸ்ரீரங்கம் ஸ்ரீ மதாண்டவன் திருவணை யாத்திரார்த்தமாக எழுந்தருளுவதில் 6-3-37 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு காரைக்குடி முத்துப்பட்டணத்துக்கு எழுந்தருளியிருக்கிறார். மேளவாத்ய விருதுகள் பூர்ண கும்பம் சகிதம் ஸ்ரீ மதாண்டவனை மிகவும் விமரிசையாக வரவேற்றார்கள்.

13—3—37 சனிக்கிழமை அரியக்குடிக்கு ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் ஒரு மாதம்வரை ஸாதிப்பதாக இருக்கும்.

பக்தர்கள்.

மதிப்புரை.

சென்ற 25—12—36 தினம் திருச்சிஜில்லா கொல்லிமலையின் கண்ணுள்ள ஸ்ரீ தர்மகோசேச்வர ஸ்வாமி ஸந்நிதியில் விதேஹ கைவல்யம் அடைந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ யதீந்த்ராள் அவர்களின் அழகிய ஹாப்டோன் படம் ஒன்று நமது பார்வைக்கு வந்துள்ளது. இம்மகானது சரித்திரத்தைச் சுருக்கமாக நமது 'ஆர்ய தர்ம' வாசகர்களுக்கு தெரிவிப்போம். ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீயின் பூர்வாச்ரம நாமம் ராமச்சந்திர அய்யர். இவர் திருநெல்வேலியில் நிரபவும் கியாதிவாய்ந்த வக்கீலாக இருந்தவர். இவர் 1867௵ டிஸம்பர்மீ 13௳ பிறந்தவர். சென்ற 1907௵ முதல் பிரயத்தினம் இடைவிடாது தொடர்ந்து நடைபெற்றுக் கடைசியாக 1922-ல்-ஸந்யாஸ ஆச்ரமம் பூண்டு மாயாப்ரபஞ்ச உலகை முற்றிலும் துறந்தார். பிறகு இம்மகான் நெரூர், தேவர் மலை, மகாதானபுரம், ஸ்ரீராமசமுத்திரம், கடைசியாகக் கொல்லிமலை முதலிய பல இடங்களில் பற்பல பக்தர்களினது பிரார்த்தனைக்கு இணங்கி சிறிது சிறிதுகாலம் வசித்து அநுக்ரகித்து வந்தார். இவர் பலவருஷங்கள் தீவ்ர மௌனத்தை அவலம்பித்தவர், இவரது அத்யாத்ம தேஜஸ் அளவிடப்பட முடியாதது. இம்மஹானின் பாதகமலத்தின் கண் பதித்துள்ள பக்தியின் ஞாபகார்த்தமாக தஞ்சைஜில்லா சேங்காலிபுரம் குகதாஸ் எஸ். வி. நடராஜ அய்யர் தற்சமயம் ஆயிரம் காப்பிகள் கார்டு அளவில் ஜநந தினம், மஹாஸமாதி தினம் முதலியவிபரங்களுடன் அழகாக அச்சிட்டுப் பக்தர்களுக்கு இனமாக வழங்கி வருகிறார். இம்மகானின் படத்தை குகதாஸரிடம் நேரில் பெற முடியாதவர்கள் ஒரு அணா பெறுமானமுள்ள தபால் ஸ்டாம்பு அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பித் தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:— காரியதரிசி, 'குகாலயம்' சேங்காலிபுரம் போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா.

பதவி ஏற்கும் விஷயம்.

எங்கும் பலமான ஆதரவு.

காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்கும் விஷயமாக அபிப்பிராயம் தெரிவிக்கும்படி காங்கிரஸ் கமிட்டிகளுக்கு ஸ்ரீமான் நேரு எழுதிய சுற்றறிக்கையை அநுஸரித்து எங்கும் காங்கிரஸ்கமிட்டிகள் கூடி தீர்மானம் செய்துவருகின்றன.

இதுவரையில் வெளிவந்த விவரத்திலிருந்து அனேகமாக இந்தியா எங்கும் எல்லாக் கமிட்டிகளும், உத்யோகம் ஏற்பதை ஆதரித்து அபிப்பிராயம் வெளிப்படுத்தியிருக்கின்றன.

புதுமாதிரி கால் செயின், கொலுசு, கினுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.



மார்சலியே

சுவாசப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

வெளியூர்ச்செய்திகள்.

திருத்தணி.

ஸ்ரீ ஆண்டவனுடைய அநேக க்ஷேத்திரங்களுக்குள் உத்தம க்ஷேத்திரமான ஸ்ரீ திருத்தணிகை க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஆண்டவன் அருளை முன்னிட்டு சேங்காலிபுரம் ராமாயணம் பிரும்மஸ்ரீ அப்பாஸாமி சாஸ்திரியள் அவர்களால் ஸ்ரீ ஸ்காந்தம் ராமாயணம் பாகவதம் முதலிய புராணங்களின் மூலமாய் தர்மப்பிரசாரம் செய்துவருவதை கேட்டு சிவனடியார்கள் செவ்வனே ஆனந்தமடைந்தார்கள். இன்னும் ஆங்காங்கு க்ஷேத்திரங்கள் சென்று முறையே தர்மப்பிரசாரம் செய்துவருவது மிக மெச்சத்தகுந்தது. ஷை சாஸ்திரியள் அவர்களுக்கு (புராண கேஸரீ) என்ற பட்டமும் புகழத்தக்கது. திடகாத்திரமும் தீர்க்க ஆயுளையும் கொடுத்து ஆண்டவன் அருள்புரியும்படி ஸன்னதியில் பிரார்த்திக்கிறேன்.

ஒரு நிரூபர்.

பிராம்மண ஸங்கம் நாகூர்.

1935-ஃபிப்ரவரி-மீ 21௳ ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 8-க்கு கூடிய ஷை சங்கத்தின் சாதாரண சபையில் மதரூஸ் அகில இந்திய பிராமண மகாசபையிலிருந்து வந்த கடிதம் விஷயமாய் அடியில்கண்ட தீர்மானங்கள் மகா-ள-ள-ஸ்ரீ N. கிருஷ்ணமூர்த்தி ஐயாவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

தீர்மானங்கள்.

1. மேன்மைதங்கிய திருவாங்கூர் மகாராஜா அவர்களால் செய்யப்பட்ட தீண்டாதார் ஆலயப்ரவேச பிரகடனம், வேதம், ஆகமம், சாஸ்திரம், ஆசாரம், இவைகளுக்கு விரோதமாயும், தேவாலய வழக்கத்தின் வேரை அறுத்து தெய்வசாந்நித்யத்தை போக்கடிக்கக் கூடியதாகவிருப்பதால் அவ்வறிக்கையை இக்கூட்டம் கண்டிக்கிறதுடன் ஷை விளம்பரத்தை வாபீஸ்பெற்று ஆகம சாஸ்திர முறையில் முன்போல் தேவாலயங்களை பரிபாலிக்கவேணுமாய் மேன்மை தங்கிய மகாராஜா அவர்களை இக்கூட்டம் மிக்க தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. இச்சங்கத்தை மதராஸ் அகில இந்திய பிராமண மகாசபையின் கிளைச்சபையாக இணைக்கவேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஒரு நிரூபர்.

திருவல்லிக்கேணிகத் தமிழ்ச் சங்கம்.

இராயப்பேட்டையில் இலவச வகுப்பு ஆரம்பம்.

23-2-37௳ செவ்வாய்க்கிழமை மாலை 6மணிக்கு சங்கக்காரியாலயமான ஸ்ரீரங்கவிலாசத்தில் குறள் வகுப்பு நடந்தது. அறிவுடைமை என்பதன் உண்மை தத்துவம் நன்கு விளக்கப்பட்டது. 24-2-37௳ புதன்கிழமை மாலை 6 15மணிக்கு இராயப்பேட்டை அய்யா முதலித்தெரு 6ம்நம்பர் இல்லத்தின் மேன்மாடியில் சங்கக்காரியதரிசி ஒரு உபன்யாசம் செய்தார். அநேகஸ்திரீபுமான்கள் வந்திருந்தனர். ஆரம்பத்தில் படத்தில் எழுந்தருளியிருந்த பகவானுக்கு ஆராதனம் நடந்தது. 25-2-37௳ வியாழன் மாலை 6மணி முதல் 7.30 மணிவரை சங்கக்காரியாலயத்தில் குறள், கம்பராமாயண வகுப்புகள் நடந்தன. 8-3-37௳ திங்கட்கிழமை முதல் பிரதி திங்களிலும் முன்போல் பார்க்டவுன் மெமோரியல் ஹாலுக்கடுத்த கருணாநந்தர் ஹாலில் இலவச கம்பராமாயண வகுப்புகள் நடைபெறும்.

ப. ரெ. திருமலைஐயங்கார் காரியதரிசி.

கல்கத்தாவில் ஸர்வமத மஹாநாடு.

உலகத்திலுள்ள எல்லா மதஸ்தர்களும் சேர்ந்த ஸர்வமத மஹாநாடு கல்கத்தாவில் 1௳ யன்று ஆரம்பமாயிற்று. அமெரிக்கா, ஐரோப்பா, சைனா, ஜப்பான், திபேத்து முதலிய பலதேசங்களிலிருந்தும் வெகுபேர் பிரதிநிதிகளாக வந்திருந்தனர். எல்லா மதஸ்தர்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு மதம் வெகுதூரம் உதவியாயிருப்பதாகப் பலர் பேசினர்.

அநாதப்பெண் ரக்ஷணக் கமிட்டியின் கூட்டம்.

கும்பகோணம்.

ஷை கமிட்டியின் கூட்டம் மார்ச்மீ 1௳ திங்கள்கிழமை மாலை டபீர் படித்துறையில் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் ரிடையர்ட் இன்கம்டாக்ஸ் ஆபீஸர் பி. ஓ. சிவராமய்யர், அட்வோகேட் எம்.கே. வைத்யநாதய்யர், ஸ்ரீமடம் ஏஜெண்ட் அட்வோகேட் குப்புஸ்வாமி அய்யர், முனிஸிபல் ஸ்கூல் ஸூபரண்டெண்டு கணேசய்யர், அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியர், ராமலிங்க ராமஸ்வாமி அய்யர் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தனர். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கமிட்டிக்குப் ப்ராஹ்மண அநாதஸம்ரக்ஷணக்கமிட்டி என்று பெயர். இக்கமிட்டிக்குவஸூலாகும்பணங்களை ஸ்ரீமான் எம்.கே. வைத்யநாதய்யர், பி. சிவரூமய்யர் இவர்கள் பேரில் ஸ்ரீசங்கர ராமாநுஜ ஸித்தாந்த பரிபாலனநிதியில் ஸேவிங்ஸ் பாங்க் கணக்கில் போட தீர்மானிக்கிறது. மேலும் பணவசூல் செய்ய ராமலிங்கராமஸ்வாமி அய்யருக்கு அதிகாரமளிக்கிறது. கமிட்டியின் சார்பாக கொடுக்கவேண்டிய ரசீதுகளை ப்ரிண்ட்செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அம்மாசத்திரத்தில் மார்ச் முதல்தேதியிருந்து அநாதையான முத்துலக்ஷ்மிக்கு உணவை கொடுக்கும்படி செய்யப்பட்டுள்ள ஓர் உடன்படிக்கை படிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ததற்காக ஜில்லாபோர்ட்மெம்பர் ப்ரம்மஸ்ரீ த்யாகராஜ சாஸ்திரிகள், பிரஸிடெண்ட் ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை அவர்களுக்கு இக்கமிட்டி தங்களது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறது.

நமது நிரூபர்.

ஆர்யதர்மிகளுக்கு ஜே! ஜே!!

உங்களுக்கு அதிர்ஷடம் வருகிறது அப்படியானல்
பழனி டாக்டர் கே. எஸ். பதி அவர்களின் No. 1

ரசமணியை

வாங்கி அணியுங்கள், உண்மையில் நீங்கள் செல்வத்தை அடைவீர்கள். தரித்திரம் அணுகாது. சகல தொழிலும் நினைத்த காரியங்களும் ஜெயமாகும்.
தாதுபுஷ்டியில் யானையைப்போல் நல்ல சுகம் அடையலாம்.
ஆர்டருக்கு முந்தங்கள் ஒரு வாரம் வரையில் ஒரு மணி ரூபாய் 7.

கே. எஸ். பதி வைத்தியசாலை பழனி.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam. Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

அகஸ்யேதாமம்

18-3-1937

4 ஸ

22 11

[illegible]

163

215777

31 MAR 1937

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 . கும்பகோணம். கலி 5038 தாது-ஞு பங்குனி-மீ 5உ 1937-ஞு மார்ச்-மீ 18உ வ 11

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
மேல் விவரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காங்கிரஸ் - ஸர்க்கார் ராஜி?

பிர்லாவின் முயற்சி.

சட்டஸபைகளில் காங்கிரஸ்காரர்கள் மெஜாரிடியாகயிருப்பதால் ஏற்பட்டுள்ள ராஜீய நிலைமையை ஸமாளிப்பதற்காக ஸ்ரீமான் பிர்லா வைஸ்ராயுடன் ராஜிப்பேச்சு ஆரம்பித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீமான் பிர்லா வார்தாவில் காந்திஜியை ஸமீபத்தில் ஸந்தித்துப் பேசிவிட்டு 12உ யன்று டெல்லியில் கவர்னர் ஜனாலையும் கண்டுபேசினார்.

இவ்விஷயமாக லண்டனுக்கும் டெல்லிக்கும் அடிக்கடி தந்திபோக்குவரத்து நடப்பதாயும் பிரிட்டிஷ் மந்திரிகளும், இந்தியா மந்திரியும் ராஜியில் ஆதரவு காட்டுவதாயும் சொல்லப்படுகிறது. மாகாண கவர்னர்களை வைஸ்ராய் இவ்விஷயமாகக் கலந்து யோஜிப்பாரென்றும் தெரிகிறது. ஆனால் இவ்விஷயங்கள் ஸ்ரீமான் பிர்லாவால் மறுக்கப்படுகின்றன. அவர் வேறு கார்யமாகவே வைஸ்ராயைப் பேட்டிகண்டாராம்.

பெல்ஜியம் பார்லிமெண்டில் அடிதடி.

பெல்ஜியம்தேசத்திய பார்லிமெண்டில் ஒரு மசோதாவிஷயமாக மெம்பர்களுள் அபிப்பிராயபேதமேற்பட்டதன்மேல் வாய்ச்சண்டை முற்றி பலமான அடிதடி நடந்தது. இதனால் பார்லிமெண்ட் கூட்டம் ரத்துசெய்யப்படவேண்டிவந்தது. நாகரீகதேசமல்லவா?

ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின் பயம்.

ஐக்யமாகாண ஸர்க்காரின் உறுதிமொழி.

ஐக்கியமாகாண சட்டசபையில் காங்கிரஸ் மெஜாரிட்டியிருப்பதால் கவர்ன்மெண்டை நடத்த நேரிடலாம், அப்போது, ஏற்கனவே காங்கிரஸ்வாதிகளைத் துன்புறுத்திய ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பதிலுக்கு உபத்திரவம் செய்யக் காங்கிரஸ்காரர் உத்தேசித்திருப்பதாக ஒரு வதந்தி கட்டிவிடப்பட்டது. இதைக் கேட்டு ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மிகுந்த கலக்கமும் பீதியும் அடைந்திருக்கிறார்களாம். இவர்களை ஸமாதானப்படுத்துவதற்காக ஐக்யமாகாண கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கையை வெளியிட்டு, ஸர்கார் உத்யோகஸ்தர்களுக்கு காங்கிரஸ் ஆக்ஷியில் எவ்வித துன்பமும் நேரிடாதபடி காத்துக் கொடுப்பதற்கு கவர்னர் தமது முழு அதிகாரத்தையும் உபயோகிக்கத் தயாராய் இருப்பதாக அதில் அபய உறுதி கூறப்பட்டிருக்கிறது.

"நவீன ஸ்திரீகள்"

டெல்லியில் ஸ்ரீமான் மோடி என்பவர் "நவீன ஸ்திரீ" விஷயமாக ஓர் பிரஸங்கம் செய்தார். தற்காலம் நவீனஸ்திரீகள் தோன்றிவிட்டதாயும், இவர்களுக்கேற்றபடி குடும்ப ஸமூஹ கார்யங்களை இனிமேல் மாற்றியமைக்க வேண்டி வந்திருப்பதாயும், புருஷர்கள் செய்துவந்த எந்தக் காரியங்களிலும் ஸ்திரீகள் புகுந்துவிட்டதாயும், ரோடு கூட்டுவது, பிணம் தூக்குவது முதலியவேலைகள்தான் பாக்கி இருப்பதாயும், நவீனஸ்திரீகள் தாங்களே ந்யூஸ்பேபர்களில் புருஷன் வேண்டுமென்று விளம்பரம் செய்ய முற்பட்டுவிட்டதாயும் பேசினார். இவைகளில் அவருக்கு சந்தோஷமா? துக்கமா என்பது விளங்கவில்லை.

திருவாங்கூர் மகாராஜா.

சென்னையை விட்டுப்போனார்.

ஒரு மாதத்திற்கு மேலாகச் சென்னையில் தங்கிவந்த திருவாங்கூர் மகாராஜா சென்னையை விட்டுப் புறப்பட்டு திருவாங்கூருக்குப் பயணமானார். வழியில் அவர் திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை முதலிய தேவாலயங்களுக்கும் ஸ்வாமிதர்சனம் செய்யச் சென்றார்.

கட்டாயக் கல்வி.

கூடலூரில் எதிர்ப்பு.

கூடலூர் முனிசிபாலிடியில் சிறுவர், சிறுமிகளுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வி ஏற்படுத்த வேண்டுமென்று ஒருவர் கொண்டுவந்த தீர்மானம் ஆமோதிப்பாரின்றியே மறைந்து போக நேர்ந்தது. ஒருவர் ஆமோதிக்க முன்வந்தும் தீர்மானம் பெரும்பாலோரால் நிராகரிக்கப்பட்டது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co,
மேலான T. T. M. A. மிக்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம், டென்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

வாரக் குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா)

டில்லியில் மூன்று தர்ம வெற்றி:- டில்லி நகரசபை தேர்தலில் ஸநாதனிகள் பல ப்ரதிநிதிகளை நிறுத்தியிருக்கின்றனர். மூவர் எதிரியே இல்லாது வெற்றியுடன் வந்துள்ளர். மற்றும் பல ஸ்தானங்களும் வரலாம். இது போல் மற்றவிடங்களிலும் ஸநாதனிகள் முயற்சி செய்தால் அரசாங்கம் வைதிக மதத்தை உணர்ந்து கௌரவிக்கும். அதர்மசட்டம் அழிய இஃதே தக்க வழி.

இரண்டும் வேண்டும்:—பின்ன அபிப்ராயங்கள் தோன்றுவது கக்ஷியின் வளர்ச்சிக் கறிகுறி. கூட்டம்கூடி கூச்சலிட்டு சட்டசபை சென்றதனால் மதப் விருத்தியாமா ? அநுஷ்டானமன்றோ வேண்டும். என்பர் பலர், ஒருவர் இக்கருத்துக்கொண்டே நமது பத்திரிகையிலும் எழுதினர். எதற்கும் ஆக்கல் அழித்தல் என இருவகையான வேலை வேண்டும்: தர்மாநுஷ்டான ப்ரசாரம் ஆக்கலாம். சட்டசபையில் அதார்மிக சட்டங்களை ஒழிப்பது அழித்தல் வேலையாம். புண்யம் செய்யவேண்டும். பாபத்தை அகற்ற வேண்டுமன்றோ ? பயிரை வள. களையை பிடுங்கு.

இன்னும் அறியவில்லையா:— குடந்தையில் தாழ்ந்த வகுப்பைச்சார்ந்த ஓர் பெண்ணை மேல் வகுப்பார் பெஞ்சியைத் தொட்டதிற்காக பாதிரி அடிக்க பலத்தக் கிளர்ச்சிநடக்கிறது. காசாசையால் ஏமார்ந்து பறையர் அங்கு சென்றும் எந்த பயனையும் அடையவில்லை. எங்குசென்றாலும் நிழல் தன் கூடவே வரும் என்று உணர்ந்து ஹிந்து மதத்திற்கே திரும்பிவரக் கூடாதா ?

நந்தன்நல்விடம் ....:— அண்ணமலை நகரில் ஸர்வகலாசாலை, வித்யையைவிட அநாசார சீர்திருத்தத்தையே அதிகம் கற்பிக்கிறது போலும்! சண்டாளருடன் சமமாகப் புசித்தல், விதவா விவாஹம், ஜாதியொழித்தல் முதலியன அடிக்கடிப் பேசப்படுகிறது. அதில் சிறந்தோர் அழைக்கப்படுகின்றனர். அவர் பேச்சுக்கே செவிகொடுக்கப்படுகிறது. உத்தம பக்தன் நலம் பெற்றவிடமே இப்படி நாரின் கலியின் வெற்றிக்கு வேறென்ன உதாரணம் வேண்டும்.

வழி காட்டி வாழ்க— இக்காலத்தே உத்யோகத்திலிருந்து ஒய்வெடுத்து ஜீவித்திருப்பவரே வெகு சிலர். அதிலும் வைதிக சதாசாரத்துடன் கர்மானுஷ்டானம் செய்பவர் ஒரு சிலரே யாவர். உதவி இன்ஜினீர் பதவி இருந்தும் ஸதாசாரம் அநுஷ்டானம், குரு பக்தி, தெய்வபக்தி முதலியவைகளில் ஊக்கம் கொண்ட ஸ்ரீமான் எஸ். சுப்ரம்மண்ய அய்யர் என்ற பெரியார் உத்யோகத்திலிருந்து ஓய்வுபெற்று ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடம் வேதாந்த சாந்திபாடம் படிக்கிறார். விரைவில் தர்மபிரசாரம் செய்ய முன் வருவாரென நினைக்கிறோம்.

கார்டுவிலையைக் குறைப்பாரா:—இந்தியா சட்டசபை நடக்கிறது. பெருவாரியான ஓட்டுகளால் கார்டின் விலையைக் குறைக்கும் தீர்மானத்தைச் செய்யவேண்டும். அவசியமிருந்தால் கேவல தனிகர்மாத்திரம் உபயோகிக்கும் பிராந்தி, சிமை சுருட்டுகள் முதலியவைகளுக்கு அதிக வரி விதித்து கார்டு விலையை குறைக்க வேண்டும்.

முதற்கோணல்:— எம். ஸி. ராஜா என்பார் நமது தாதிருஷ்ட வசத்தால் தேர்தலில் சென்னை சபையில் நுழைந்துவிட்டார். இங்கேனும் டில்லியிலேனும் ஓரிடத்தில் தான் அவருக்கு ஸ்தானமுண்டு. அவர் எங்கிருந்தாலும் பழய தீண்டாமை விலக்கு சட்டத்தை கொண்டு வருவார். அப்படியே வெற்றி விழாவில் பேசினர். உடனே நாம் விழித்து எழுந்து மஹா ஜனங்களைத் திரட்டி கிளர்ச்சி செய்ய வேண்டும்.

ஸமயோசித வேலை:— டில்லியில் கூடும் அ. இ. கா. கமிட்டி கூட்டத்திற்கு சென்னை வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய சங்கம் மதவிஷயத்தில் தலையிடுவதில்லை என்று வாக்களித்து அதன்படி நடக்க ஓர் தந்தி கொடுத்திருக்கிறது.

ந. ர. தலைவர் அகில இந்திய தலைவரானர்:- பிரும்மஸ்ரீ ஆர்பாதி நடேசய்யர் அவர்கள் தலைமையில் பூரி க்ஷேத்திரத்தில் 26, 27. 28, தேதிகளில் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் மஹாநாடு நடக்கிறது.

தமிழ்நாடு வைதிக தர்மசங்கம்.

(எஸ். சுவாமிநாதசாஸ்திரிகள் கும்பகோணம்)

1 சிவராத்திரி பூஜாகரணம்:— கும்பகோணம் தமிழ்நாடு தர்ம சங்கத்தினால் சிவராத்ரி தினத்தில் கும்பகோணத்தில் ஸ்ரீகும்பேசுவரஸ்வாமி கோவிலில் மங்களாம்பிகா சன்னதியில் அனேக சிவ நேசர்கள் இரவு நான்கு ஜாமங்களும் கதாச்ரவணமும், கண்விழிப்பும் சிவதரிசனங்களும் செய்யப்பட்டது. 'கௌரி கல்யாணம்' என்கிறதிவ்ய கதை இராமாயண கேஸரி தமிழ் பண்டிதர் முத்துசுவாமிஅய்யர் அவர்களால் நன்று விரித்து உரைக்கப்பட்டு சிவனடியார்கள் விரதம் பூர்த்தி செய்யப்பட்டது.

2. தஞ்சாவூர்:— இப்படியே அன்றைய தினம் தர்மசங்க கைங்கர்யபரராகிய புடார் ஜானகசாஸ்திரிகளைக்கொண்டு தஞ்சாவூர் மேலவீதிராமஸ்வாமிகோவிலில் "ஹாலாஸ்யமஹாத்மிய திருவிளையாடல்கள்" சிவராத்திரி ஜாகரண காலத்தில் எடுத்து உரைக்கப்பட்டு ஆஸ்திக மகாஜனங்கள் சிவபெருமான் திருவருளும் அகமகிழ்ச்சியுமடைந்து ஆநந்தானுபவத்தில் காலங்கழித்தனர்.

தர்மசங்க தபோவனம்.

மாயவரம் தாலுகா கோமலுக்கடுத்த செம்பியன் கோமலில் நதிக்கரையில் ஒரு ரமணீயமான தென்னந்தோப்பு மத்தியில் ஒரு "தபோவனம்" ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை ப்ரம்மசர்ய ஆச்ரம ஸ்ரீ ஸ்வாமிகள் அங்கு பத்துமாஸம் தபோநிஷ்டையிலமர்ந்து வீற்றிருக்கின்றனர்.

ஆயுர்வேத அபிவிருத்தி.

விழுப்புரம் போர்டின் சிரத்தை.

புதிதாகப் பிரிக்கப்பட்ட விழுப்புரம் ஜில்லா போர்ட் கூட்டத்தில், ஆயுர்வேத சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு பிரதி வருஷமும் இரண்டு மாணவர்களுக்கு போர்டு நிதியிலிருந்து உபகாரச்சம்பளம் கொடுத்து ஆயுர்வேதம் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எம். என். ராய் விவாஹம்.

அமேரிக்க ஸ்திரீயை மணந்தார்.

ஸ்ரீமான் எம் என்.ராய் என்பவர் 10உயன்று அமெரிக்கப்பெண்ணான காட்சாக் என்பவளை பம்பாயில் கல்யாணம் செய்துகொண்டார். விவாஹப்பதிவு ஆபீசில் இது நடந்தது. நரிமன், முன்ஷி, மிஸஸ் மணிபென் முதலிய காங்கிரஸ்காரர்கள் கூட இருந்து, இதை நடத்திவைத்தார்கள். விருந்துக் கச்சேரியும் நடந்தது.

மாஜி அரசருக்குப் பணஉதவி.

மாஜி சக்ரவர்த்தி எட்வர்டு அவர்களுக்கு ராஜ்ய உரிமை போய்விட்டகாரணமாக ராஜ குடும்பத்திலிருந்து பணவுதவி செய்யும் விஷயம் ஒருவாறு தீர்மானமாகிவிட்டது. முதலில் ஒரு லக்ஷத்து இருபதனாயிரம் பவுன் மொத்தமாக அவருக்குக் கொடுக்கப்படும். பிறகு ஒவ்வொரு வருஷமும் 20 ஆயிரம் பவுன் பென்ஷன் போல் கொடுப்படும். இது 6-வது ஜார்ஜ் சக்ரவர்த்தியாரின் பொறுப்பில் கொடுக்கப்படுமாம்.

ஸ்ரீமான் ஸி. ஆர். ரெட்டி.

காங்கிரஸ்ஸிலிருந்து விலகினர்.

காங்கிரஸ் சார்பாக ஏற்கனவே சென்னை சட்டசபையில் ஸ்தானம் வகித்தவரும், ஆந்திர ஸர்வகலாசாலை வைஸ்சான்ஸலருமான ஸ்ரீமான் ஸி. ஆர். ரெட்டியார் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டார். காங்கிரஸானது ஸ்வேச்சை இயக்கத்தை நடத்துவதால் அதில் தாம் மெம்பராக இருக்கமுடியாதென்று அவர் காரணம் கூறியிருக்கிறார்.

மேலும் சென்னை அஸெம்பிளியில் யூனிவர்ஸிடி ஸ்தானத்திற்குத் தம்மை அபேக்ஷகராக காங்கிரஸ்காரர்கள் நிறுத்தாததைப் பற்றியும் அவர் புகார் கூறியிருக்கிறார்.

Books by Dewan Bahadur
K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P.
1.	Kalidasa's Heroes	0	6	0
2.	The service of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	0
4.	Sandilya Bakthi Suters	0	4	0
5.	The Gospel of Gita	0	3	0
6.	The future of Brahmin	0	2	0
7.	The Gita ideal of Devotion	0	4	0

Copies can be had of
The Sri Janardana Printing Works,
Ltd., Town High School Road,
Kumbakonam.

ஸம்ஸ்க்ருத ஸ்வபோதனீ.

ஸம்ஸ்க்ருத பாஷையில் கொஞ்சம் ஞானமடைய இந்நூல் ஓர் பேருதவியாகும். முதற்பாகத்தில் அமர நீதிப்படி சுலோகங்களைக் கொடுத்து பெயர்ச்சொற்களடங்கிய இரண்டு காண்டங்களுக்கும் பதத்தினர்த்தங்களும் தாதுக்களையுங் கொடுத்து ஸமாஸ அர்த்தங்களுங் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஒரு வஸ்துவிற்கே பல பெயர்கள் வருமிடங்களில் சுருக்கி வேறு ரூபமாக ச்லோகங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. இதில் மிருகம், பக்ஷி, முதலிய நூறு பாடங்களும் அவைகளுக்கு ஓர் அகராதி அட்டவணையும் கடைசியில் கொடுக்கப்பட்டு முதலில் நாகர எழுத்துக்களைத் தமிழினும் எழுதப்பட்டுள்ள உரிச்சொற்கள் இலக்கவும் ; இரண்டாவது பாகத்தில் வந்து நூல் முடிக்கப்படும்.

ரூபாய் ஒன்றே. நமது ஆபீசிலும் புஸ்தகம் கிடைக்கும். ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு இரண்டணா கமிஷன் குறைத்து விற்க அனுப்பப்படும்.

கிரந்த தமிழ் அகராதி ரூ 4க்கும் நமது சந்தாதார்களுக்கு 3½ ரூபாய்க்கு அனுப்பப்படும்.

ஓம் ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்

(11—3—37 தொடர்ச்சி)

அவ்யாஜ கருணாமூர்த்தி. 992

அவ்யாஜமான கருணையை ஸ்வரூபமாயுடையவள்.

1. அவ்யாஜமென்றால் சூது, கபடு இல்லாத, அல்லது பக்ஷபாதமற்ற என்று அர்த்தம். அம்பிகையின் கருணையைப்பற்றி எல்லா பக்தர்களும் எத்தனை விதமாகவோ புகழ்ந்திருக்கிறார்கள். (ஜயதி கருணா காசித் அருணா, அருணம் கருணாதரங்கிதாக்ஷீம்)

அக்ஞான த்வாந்த தீபிகா 993

அக்ஞானமாகிற இருட்டைப்போக்கும் தீபம் போன்றவள்

1. மேலே சொல்லியபடி. அம்பிகை பரம கருணாரூபிணியாய் இருப்பதால், ஜீவராசிகளைச் சூழ்ந்திருக்கும் அக்ஞானமாகிற அந்தகாரத்தை அகற்றி அவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறாள் என்று சொல்லப்பட்டது. இதே மாதிரி கீதையில்

'தேஷாமேவானுகம்பார்த்தம் அஹம் அக்ஞானஜம் தம: |
நாசயாம்யாத்மபாவஸ்த்தோ ஞான தீபேன பாஸ்வதா ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபால கோப விதிதா 994

குழந்தைகளாலும் இடையர்களாலும் கூட அறியப்படுகிறவள்.

1. அக்ஞானிகளுக்குள் குழந்தைகளையும் இடையர்களையும் உதாஹரணமாகச் சொல்வதுவழக்கம். அவர்கள்கூட அறியக்கூடிய ஸ்வரூபத்தை உடையவளென்று சொன்னதினால் அம்பாளுடைய ஸௌலப்யத்தின் அதிசயமானது சொல்லப்பட்டது.

2. அல்லது— பாலர்களானப்ரஹ்மாதிகளைக் காப்பாற்றுகிறவர் பாலகோபர். இதனால் ஸதாசிவன் குறிப்பிடப்படுகிறார். திரும்பவும், பாலனும் கோபனுமிருப்பவர் பாலகோபன். விஷ்ணுவின் அவதாரமாகிய க்ருஷ்ணன் தவிர, பாலகோபனென்றால் இடையர்களின் சிறிய பையன் என்றும் அர்த்தம். ஆகவே ஆபாலகோபம் என்றால் ஸதாசிவன், க்ருஷ்ணன் முதலாக இடைப்பையன் வரையில் யாவரும் என்று அர்த்தம். இவர்களெல்லாராலும் அறியப்படுகிறவள் என்றால் ஹரிஹராதிகள் முதல் பாமரர்கள் வரையில் யாவரும் அம்பாளை அறிகிறார்கள் என்று தாத்பர்யம்.

3. இதையே தான், ஸகலர்களும் தான் என்ற பாவத்தினால் அம்பாளை அறிகிறார்கள் என்பதாக

'தாம் அஹம் ப்ரத்யய வ்யாஜேன ஸர்வே ஜானந்தி ஜந்தவ: |'

என்று ஸ்காந்தத்தில் சொல்லப்பட்டது.

4. ஸாதாரணமாக லோக வழக்கத்தில் ஸமஸ்த ஜனங்களையும் குறிப்பதற்காக 'ஆபால கோபாலம்' என்று சொல்வதையும் பார்க்கிறோம்.

இவ்விதம் எல்லாரும் அறியக்கூடுவதாயிருப்பதினால் 'அதிபரிசயாத் அவக்ஞா' என்றபடி அம்பாளிடத்தில் மர்யாதைக் குறைவு ஏற்படக்கூடுமே என்ற ஸந்தேஹமானது அடுத்த நாமத்தினால் போக்கப்படுகிறது.

ஸர்வானுல்லங்க்ய சாஸனா 995

யாவரும் மீறக்கூடாத கட்டளைகளையுடையவள்

1. அதாவது, அம்பாளுடைய ஆக்ஞையை, ப்ரம்ஹா, விஷ்ணு முதலானவர்களும் அதிக்ரமிக்க முடியாதென்று சொல்லப்பட்டது. இதே அபிப்பிராயத்தில் அம்பாளுடைய புருவத்தின் அசைப்பினால் ஏற்படும் உத்திரவின்பேரில் ப்ரஹ்மா முதலானவர்கள் ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி முதலான பஞ்சக்ருத்யங்களைச் செய்கிறார்களென்று ஸ்ரீமதாசாரியாள் 'ஸௌந்தர்யலஹரி'யில்

'ஜகத் ஸூதே தாதா ஹரிரவதி ருத்ர: க்ஷபயதி
திரஸ்குர்வன்னேதத் ஸ்வமபி வபுரீசஸ் திரயதி |
ஸதா பூர்வ: ஸர்வம் ததிதம் அனுக்ருண்ஹாதி ச சிவ:
தவாக்ஞாம் ஆலம்ப்ய க்ஷணசலிதயோர் ப்ரூலதிகயோ: ||'

என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஸ்ரீ சக்ரராஜ நிலயா 996

ஸ்ரீ சக்ரத்தைத் தன்னுடைய இருப்பிடமாக உடையவள்

1. 'ஸ்ரீ சக்ரம் சிவயோர் வபு:' என்று ஸ்ரீ லலிதாத்ரிசதியில் சொல்லியபடி சரீரமானது ஜீவனுக்கு எப்படி அவஸ்தானமாயிருக்கிறதோ அவ்விதமாக ஸ்ரீசக்ரமானது சிவன், சக்தி இருவர்களுக்கும் இருப்பிடமாக இருக்கிறதென்று சொல்லப்பட்டது.

2. சக்ரங்களுக்கெல்லாம் ச்ரேஷ்டமானதால் பிந்து த்ரிகோணங்களாகிய நவயோன்யாத்மகமான அம்பாளுடைய சக்ரத்தை ஸ்ரீசக்ரமென்றும் சக்ரராஜமென்றும் ஸ்ரீசக்ரராஜமென்றும் சொல்வது வழக்கம்.

ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரீ 997

ஸ்ரீமதியாயும் பரசிவனுடைய பார்யையாயுமிருப்பவள்.

1. ப்ரம்ஹா, விஷ்ணு, சிவன் இம்மூவர்களுடைய சரீரங்களைத் திரிபுரங்களென்றும் அவற்றைத் தன் சரீரத்தின் பாகங்களாக உடைத்தாயிருப்பதால் பரசிவனுக்கு த்ரிபுரனென்று பெயர் என்பதாக

'ப்ரதானேச்சாவசாத் சம்போ: சரீரம் அபவத் த்ரிதா |
தத்ரோர்த்வ பாக: ஸம்ஜாத: பஞ்சவக்த்ர: சதுர்புஜ: ||
பத்ம கேஸர கௌராங்க: காயோ ப்ரம்ஹோ மஹேச்வர: |
தன் மத்யபாகோ நீலாங்க: ஏகவக்த்ர: சதுர்புஜ: ||
சங்க சக்ர கதா பத்மபாணி: காய: ஸ வைஷ்ணவ: |
அபவத் தததோபாகே பஞ்சவக்த்ர: சதுர்புஜ: ||
ஸ்படிகாப்ரமய: சுக்ல: ஸ காயச்சாந்த்ரசேகர: |
ஏவம் த்ரிபி: புரைர்யோகாத் த்ரிபுர: பரம: சிவ: ||'

என்று காளிகா புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய ஸுந்தரீ - பார்யை - த்ரிபுரஸுந்தரீ. அவளே ஸ்ரீயோடு பொருந்தியவளாய் இருப்பதால் ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரீ என்று பெயர்.

ஸ்ரீ சிவா 998

ஸ்ரீயையுடைய சிவா

1. அம்பிகை சிவனுடைய பத்னியாயிருப்பதுடன் அவரோடு அபேதமாயிருப்பதால் சிவா என்று பெயர். ஆகவே சிவனென்ற நாமத்திற்கு என்னென்ன விதமான அர்த்தங்களுண்டோ அவை எல்லாம் சிவா என்ற நாமத்திற்கும் உண்டு.

சிவ சக்த்யைக்ய ரூபிணீ 999

சிவன், சக்தி இவர்களுடைய ஸாமரஸ்யத்தையே ரூபமாக உடையவள்

1. பரப்ரம்ஹ ரூபிணியான அம்பாளை தனியான சிவஸ்வரூபமென்றாவது சக்திஸ்வரூபமென்றாவது நினைக்காமல் அவ்விருவருடைய (ஒன்றறக் கலந்த) ஸாமரஸ்ய ரூபமாக எண்ணவேண்டும் என்று தாத்பர்யம். இந்த பாவத்திற்கு அனேகவிதமான உபமானங்களுண்டு. திலத்தில் தைலம் போலவும், சந்த்ரனும் சந்த்ரிகையும் போலவும், ஸூர்யனும் உஷ்ணமும் போலவும், பலவிதமாக ஒப்பிடப்பட்டிருக்கிறது.

'பாவகஸ்யோஷ்ணதேவேயம் பாஸ்கரஸ்யேவ தீதிதி: |
சந்த்ரஸ்ய சந்த்ரிகேவேயம் சிவஸ்ய ஸஹஜா சிவா ||'
'இவேச்சயா பராசக்தி: சிவ தத்வைகதாம் கதா |
தத: பரிஸ்புரத்யாதௌ ஸர்கே தைலம் திலாதிவ ||'

2. இவர்களுடைய ஸாமரஸ்யமென்பது இவர்கள் அத்யந்தம் அபேதமாயிருப்பதைக் குறிக்கும்.

'ப்ரம்ஹணோऽபின்ன சக்திஸ்து ப்ரம்ஹைவ கலு நாபரா |
ததாஸதி வ்ருதா ப்ரோக்தம் சக்திரித்யவிவேகிபி: |
சக்தி சக்திமதோர் வித்வன் பேதாபேதஸ்து துர்கட: ||'
[ஸௌரஸம்ஹிதை]
'யதைகம் பவனஸ்பந்தம் ஏகம் ஔஷ்ண்யானலௌ யதா |
சின்மாத்ரம் ஸ்பந்த சக்திச்ச ததைவேகாத்ம ஸர்வதா ||'
[வாஸிஷ்டராமாயணம்]

3. அல்லது, ஸ்ரீசக்ரத்திலிருக்கும் சிவ சக்ரங்கள், சக்திசக்ரங்கள் இவற்றின் ஐக்கியத்தையே ரூபமாக உடையவள் என்று சொல்லலாம். ஸ்ரீ சக்ரத்திய ஒன்பது சக்ரங்களில் மேல்நோக்கி இருக்கும் நான்கு சக்ரங்களை சிவ சக்ரங்களென்றும் கீழ் நோக்கி இருக்கும் ஐந்து சக்ரங்களை சக்தி சக்ரங்களென்றும் சொல்லப்படும். இவற்றின் தத்வார்த்தங்களைப் பற்றியும் இவற்றால் ஸ்ரீசக்ரம் அமையப்பெறுவதைப்பற்றியும் ஸ்ரீமதாசாரியாளுடைய 'ஸௌந்தர்யலஹரி'யின் 11-வது ச்லோகமாகிய 'சதுர்பி: ஸ்ரீ கண்டை:' என்ற ச்லோகத்தையும் அதின் வியாக்யானத்தையும் பார்க்கவும்.

4. ஸ்ரீ சக்ரத்தினுடைய அமைப்பைப் பற்றியும் அதின் பாகங்கள் ஒன்றுக்குள் ஒன்று அவினாபாவ ஸம்பந்தமாக பொருந்தி இருப்பதைப்பற்றியும் ஸ்ரீலலிதாத்ரிசதியில் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'சதுர்பி: சிவசக்ரைச்ச சக்தி சக்ரைச்ச பஞ்சபி: |
நவ சக்ரைச்ச ஸம்ஸித்தம் ஸ்ரீசக்ரம் சிவயோர் வபு: ||
த்ரிகோணம் அஷ்டகோணம் ச தசகோண த்வயம் ததா |
சதுர்தசாரம் சைதானி சக்தி சக்ராணி பஞ்ச ச ||
பிந்துச் சாஷ்டதளம் பத்மம் பத்மம் ஷோடச பத்ரகம் |
சதுராச்ரம் ச சத்வாரி சிவ சக்ராண்யனுக்ரமாத் ||
த்ரிகோணே பைந்தவம் ச்லிஷ்டம் அஷ்டாரேऽஷ்டதளாம்[புஜம் |
தசாரயோ: ஷோடசாரம் பூபுரம் புவனாச்ரகே ||
சைவானாமபி சாக்தானாம் சக்ராணாம் ச பரஸ்பரம் |
அவினாபாவ ஸம்பந்தம் யோ ஜானாதி ஸ சக்ரவித் ||
த்ரிகோண ரூபிணீ சக்தி: பிந்துரூப: சிவ ஸ்ம்ருத: |
அவினாபாவ ஸம்பந்த: தஸ்மாத் பிந்துத்ரிகோணயோ: ||'

5. அல்லது, சிவ சக்திகளுடைய ஐக்யத்தை ப்ரதிபாதிக்கும் ஹம்ஸ மந்த்ரத்தின் ரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம். இந்த மந்த்ரத்தைப் பற்றி ஸூதஸம்ஹிதை யக்ஞவைபவ கண்டத்தில்

'சாந்தாந்தம் சக்திரஸ்யோக்தா ததந்தம் பீஜமுச்யதே |
வித்யா சக்திர்பவேத் பீஜம் சிவ ஏவ ந சான்யதா ||
தேனாऽயம் பரமோ மந்த்ர: சிவ சக்த்யாத்மக: ஸ்ம்ருத: ||'

என்று சொல்லப்பட்டது. [ச என்பதற்கு அந்தமானது ஷ. அதற்கு அந்தமானது ஸ. இதைத் தான் சாந்தாந்தம் என்றும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

சக்தியென்றும் சொல்லப்பட்டது. அதற்கும் அந்தமானது ஹ. இதைபீஜமென்றும் சிவனென்றும் சொல்லப்பட்டது. ஆகவே இவ்விரண்டின் சேர்க்கையான ஹம்ஸமந்த்ரமானது சிவசக்த்யாத்மகம் என்று ஏற்படுகிறது.]

6. அல்லது, சிவனுடைய சக்திகளாகிய தூமாவதீ முதலான ஐவர்களுடைய ஐக்யரூபமாக— ஸமஷ்டியான ரூபமாக, இருப்பவளென்றும் சொல்லலாம். அவர்கள் பெயர்— தூமாவதி, ஹ்லாதா, பாஸ்வதீ, ஸ்பந்தா, விப்வீ. தூமாவதீ திரோதானத்தையும், பாஸ்வதீ தெரியச் செய்வதையும், ஸ்பந்தா க்ஷோபணத்தையும், விப்வீ வ்யாபகத்தையும், ஹ்லாதா புஷ்டியையும், செய்யும் சக்திகள். தவிர, தூமாவதீ ப்ருதிவியிலும், ஹ்லாதா ஜலத்திலும் பாஸ்வதீ தேஜஸிலும், ஸ்பந்தா வாயுவிலும், விப்வீ ஆகாசத்திலும் இருக்கும் சக்திகள். இவர்களால் ஜகத்தானது வ்யாபிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது.

'தூமாவதீ திரோதௌ பாஸ்வத்ய்வபாஸனே
[Sத்வனும் சக்தி: |
க்ஷோபே ஸ்பந்தா வ்யாப்தௌ விப்வீ
[ஹ்லாதா து புஷ்டௌ மே ll
தூமாவதீ ப்ருதிவ்யாம் ஹ்லாதாப்ஸு
சுசௌ து பாஸ்வதீ ப்ரததே |
வாயௌ ஸ்பந்தா விப்வீ நபஸி வ்யாப்தம்
[ஜகத் தாபி: ll'
(விரூபாக்ஷ பஞ்சாசிகா)

இம்மாதிரி இதுவரையில் சொல்லப்பட்ட நாமங்களில் முதல் மூன்றாகிய ஸ்ரீ மாதா, ஸ்ரீ மஹாராக்ஞீ, ஸ்ரீ மத் ஸிம்ஹாஸனேச்வரீ என்ற நாமங்களால் ஜகத்தைப் பற்றிய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற மூன்று கார்யங்களையும் செய்பவளாக அம்பாளைச்சொல்லிவிட்டு, பாக்கி இரண்டு காரியங்களாகிய திரோதானம், அனுக்ரஹம், என்பவை அநந்தமான விஷயங்களைப்பற்றியவையாகையால் சிதக்னிகுண்ட ஸம்பூதா என்ற அடுத்த நாமம் முதல் இந்த நாமமாகிய சிவசக்த்யைக்யரூபிணீ என்பது முடிய வரப்பட்ட நாமங்களில் அந்த இரண்டு கார்யங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு, இவ்விதமான பஞ்சக்ருத்யங்களைச் செய்பவளான தேவதையை, இதர தேவதைகளுக்கு இல்லாததும் இந்த தேவதைக்கே உரித்தானதும் ஸர்வோத்க்ருஷ்டமானதுமான நாமத்தால் அடுத்தாற்போல் சொல்லுகிறார்.

லலிதாம்பிகா 1000

லலிதையாயும் அம்பிகையாயுமிருப்பவள்.

1. அம்பிகா, அம்பா, முதலிய பதங்கள் தாயாரைக் குறிக்குமாகையால் அம்பாள் ஸகல லோக ஜனனி என்பதாக இங்கு அம்பிகா என்பதினால் சொல்லப்பட்டது. அதோடு லலிதையாயுமிருப்பதால் லலிதாம்பிகாஎன்று சொல்லப்பட்டது.

2. லலனம் செய்வதால் லலிதா என்று பெயர். லலனம் என்றால் செல்லமாக விளையாடுவது. அம்பாள் லோகாதீதையாய்க் க்ரீடித்துக்கொண்டிருப்பதால் லலிதா என்று பெயர் ஏற்பட்டது என்பதாக

'லோகான் அதீத்ய லலதே லலிதா
தேன ஸோச்யதே |'

என்று பத்மபுராணத்தில் சொல்லப்பட்டது. தவிர, லோகங்கள் என்று இங்கு வந்த பதத்தினால் கிரணங்கள், அதாவது, ஆவரண தேவதைகள் குறிக்கப்படுவதால் அவர்களை அதிக்ரமித்து, (ஸ்ரீசக்ரத்தில்) அவர்களுடைய ஸ்தானங்களுக்கெல்லாம் மேல்பட்டதான பிந்து ஸ்தானத்தில் அத்யந்தமான சோபையோடு அம்பிகை விளங்குவதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

3. மனதிற்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும் ஸகலபாவங்களும் லலிதமென்ற பதத்தினால் குறிக்கப்படும்.

'சோபா விலாஸோ மாதுர்யம் காம்பீ
ர்யம் ஸ்தைர்ய தேஜஸீ |
லாலித்யம் ச ததௌதார்யம் இத்யஷ்
டௌ பௌருஷாகுணா: ll'

என்ற அபியுக்த வசனத்தில் சொல்லப்பட்ட அர்த்தங்களுண்டு. 'ஸௌகுமார்யம் து லாலித்யம்,' 'லலிதே ஸுந்தரம்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பாவங்களெல்லாம் அம்பாளிடமிருப்பதால் லலிதா என்றபெயர் ஏற்பட்டது.

இப்படி இந்த மூர்த்தியைப் பற்றியதான ஸகலமும் லலிதமாயிருப்பதால் லலிதா என்ற பெயர் ஏற்பட்டது பொருத்தமாகத்தான் இருக்கிறது என்பதாக

'லலிதேதி நாம யுக்தம் தவ கில
திவ்யா நவா வ்ருத்ய: |
தனுரைக்ஷவம் அஸ்த்ராண்யபி
குஸுமானி ததாகிலம் லலிதம் ll'

என்று சொல்லப்பட்டது.

4. தவிர, 'லலிதம் ரதிசேஷ்டிதம்' என்றபடி லலிதமென்ற பதமானது ச்ருங்கார சேஷ்டைகளை (காமோத்தீபனமான பாவஹாவங்களை) குறிக்கும். ஆகவே இந்த நாமத்தினால் இங்கு உபாஸிக்கப்படும் அம்பிகையின் மூர்த்தியானது ச்ருங்கார ரஸ ப்ரதானை என்பதாகவும் குறிப்பிடப்பட்டது.

5. பத்மபுராணத்தில் தேவியின் பீடங்களைப்பற்றிச்சொல்லுகையில் 'ப்ரயாகே லலிதா தேவீ' என்று சொன்னபடி ப்ரயாகையிலிருக்கும் அம்பிகையின்ரூபத்திற்கு லலிதா என்று பெயர். சுபம்! சுபம்!!

விக்ஞாபனம்.

இந்த வாரத்தின் வெளியீடுடன் ஸ்ரீ லலிதாம்பிகையின் ஆயிரம் நாமங்களும் பூர்த்தியாகி 'ரஹஸ்ய நாம ஸாஹஸ்ர'த்தின் மொழிபெயர்ப்பானது முடிவடைகிறது. இந்த கைங்கர்யமானது நிர்விக்னமாய் முடிவடைந்ததற்கும் ஸ்ரீ பாஸ்கர ராயருடைய அற்புதமான பாஷ்யத்தை ஏதோ என் சிற்றறிவிற்குப் புலப்பட்டவரையில் அனுஸரித்து நான் எழுதியதற்கும் அம்பிகையின் கருணையே முக்யமான காரணமாகும். குற்றங்களும் சொற்பிழைகளும் தமிழ் எழுவதில் அனேகக் குறைகளும் இருந்தாலும் அவற்றையெல்லாம் பாராட்டாமல் பக்தர்கள் வாசித்து வந்ததற்கு என் மனமார்ந்த வந்தனத்தை இதன் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த புனிதமான கார்யத்தில் என்னை ஈடுபடும்படி சொல்லி ப்ரோத்ஸாஹம் செய்தவர்கள் ஸ்ரீமான் S மஹாலிங்க அய்யாவர்கள் ஆவார். இரண்டேகால் வருஷங்களாக 'ஆர்ய தர்மம்' பத்திரிகையில் 'ஸ்ரீ லலிதாஸஹஸ்ர நாமம்' வெளியாகி வந்ததைப்பற்றி சிற்சில விடங்களில் அபிப்ராயபேதம் இருந்துவந்தது எனக்குத் தெரியும். அப்படியிருந்தும் அதைப் பொருட்படுத்தாது எனக்கு எழுதுவதற்கு அவகாசம்கொடுத்து பூர்த்தி செய்வித்தற்கு ஸ்ரீமான் அய்யாவர்களுக்கும் 'ஆர்யதர்மம்' பத்திராதிபர் ப்ம்ஹஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசார்யர் அவர்களுக்கும் 'ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் மானேஜர் ஸ்ரீமான் S. கல்யாணஸுந்தரம் அவர்களுக்கும் என் நன்றியை ஸந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன்.

இனி இம் மொழிபெயர்ப்பானது புத்தக ரூபமாக அச்சிட்டு வெளியிடப்படும். அதில் ஸ்ரீ பாஸ்கரராயவர்களுடைய பாஷ்யத்தை அனுஸரித்து பூர்வபாகம், உத்திரபாகம், (பலச்ருதிபாகம்), ஸ்ரீந்ருஸிம்ஹானந்த நாதருடைய பரிபாஷா ச்லோகங்கள் இவைகளின் மொழிபெயர்ப்பும், நாமாவளியும் நாமங்களின் அகாரதி வரிசையும் சேர்க்கப்படும், ஸ்ரீ பாஸ்கர ராயருடைய ஜீவிய சரித்திரமும் சேர்க்கப்படும். புஸ்தகம் சுமார் 600 பக்கங்களுக்குக் குறையாது. புஸ்தகம் வெளியான பிறகு (தபாற்செலவு தவிர) விலை ரூபாய் மூன்று ஆகும். புஸ்தகத்தை அச்சுப்போடுவதற்கு பெருந்தொகையாக வேண்டியிருப்பதால் சுமார் இருநூறு பக்தர்களாவது முன் பணமனுப்பி உதவிசெய்தால் தான் சீக்கிரம் வெளிவர சௌகர்யமாக இருக்கும். அப்படி உதவி புரிபவர்களுக்கு விலை ரூபாய் இரண்டு, தபாற்செலவுள்பட ரூபாய் இரண்டரை. 'ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமம்' என்பதைத் தென் இந்தியாவிலும் தமிழர்கள் எங்கிருந்தாலும் தெரியாதவர்கள் யாருமிருக்கமாட்டார்கள். அதைப்பாராயணம்பண்ணி அதிலுள்ள விசேஷங்களையறிந்து அம்பிகையை உபாஸித்து வந்தால் ஐஹிக ஆமுஷ்மிகங்களான ஸகல புருஷார்த்தங்களும் கிடைக்கப்பெறுவதில் கொஞ்சமும் ஸந்தேஹம் கிடையாது ஆகவே இவ்விதமான கார்யத்தை முடித்துக்கொடுக்கும்படி அம்பிகையின் பக்தர்களை மிகப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுர ஸுந்தர்யை நம:

G. V. G.

பால்டுவின் ராஜீநாமா வதந்தி.

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகவிருக்கும் மிஸ்டர் பால்டுவின் மேமீ 26உ வாக்கில் தமது பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டு பொது வாழ்விலிருந்து விலகிவிடுவாரென்று பிரஸ்தாபிக்கப்படுகிறது. அவருக்கு லார்டு பட்டம கொடுக்கப்படுமாம். மிஸ்டர் நெவில் சேம்பர்லேன் பிரதமமந்திரியாக வரக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

கும்பகோணத்தில் கட்டாயக் கல்வி ரத்து.

குடந்தை முனிசிபாலிடியார் இதுவரையில் இருந்துவந்த கட்டாய இலவசக் கல்வித்திட்டத்தை சிக்கனம் காரணமாக ரத்து செய்துவிட்டார்கள். அநேக ஆரம்ப உபாத்தியாயர்கள் வேலையை விட்டுத் தள்ளப்படுவார்கள். இதைக் கண்டிப்பதற்காக பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. ஒரு தூது கோஷ்டியார் கல்வியிலாகா அதிகாரியைப் பேட்டிக் கண்டு பேச ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

சென்னை சட்டசபை காங்கிரஸ்கக்ஷி

ஸ்ரீமான் ஸி. ரா. ஆசாரியார் தலைவர்.

சென்னை சட்டசபைக்குத்தெரிந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மெம்பர்களின் கூட்டம் 10உயன்று மாம்பலம் ரங்கசாமி அய்யங்கார் மண்டபத்தில் நடைபெற்றது. 170-மெம்பர்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் கக்ஷித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கார்யதரிசி முதலியவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர். உத்யோகம் ஏற்கவேண்டுமென்று ஒரு தீர்மானமும் செய்யப்பட்டது.

முக்கிய கவனிப்பு.

திருப்பந்துருத்தியில் சுமார் 300 வருஷங்களுக்குமுன் ஸ்ரீ அமர்சிங்கு மகாராஜா காலத்தில் ஜீவன் முக்திசமாதியில் அடைந்தவரும் ஸ்ரீ கிருஷ்ணலீலா தாங்கிணியென்னும் அரிய நூலை இயற்றியவருமான ஸ்ரீ தீர்த்தநாராயண குருஸ்வாமிகள் ஸ்ரீ விஜய சரித்திரமும் அவரைப்பற்றிய ஆராய்ச்சியும் தெரிவிக்குமாறு கோரப்படுகிறது.

ஸ்ரீ தீர்த்தநாராயண குருஸ்வாமிமூர்த்தி
மடாதிபதி.
திருப்பந்துருத்தி,
டி யூர் P. O.
(தஞ்சாவூர்.)

Adoption Myth Exploded.

So-called Adopted Son Beheads Father On Battlefield.

Evidently, Sir C. P. Ramaswamy Iyer's statement in his Right Honourable V S. S. Sastri University Extension lectures on "Indian Political Theories" that 'the wife of Rama Raja on this occasion adopted the King as her son, and at the end of three days which were spent in an inter-change of friendly professions and presents, Ali Adil Shah took his leave......" quoting Dr. Saletore's Social and Political Life in Vijayanagara Empire, Volume I page 408, is of academical and public importance. In the first instance it appeared in the papers that RAMANUJA'S wife adopted a Muhammadan Sultan for son, which however was latterly corrected Rama Raja.

Shortly the facts of the case are that about the middle of the 16th century A D. the Vijayanagar Empire was the scene of interminable wars and political factions. And in the scramble for power and riches sometimes Hindus and Muslims coalesced into groups and fought together. It is well here to remember that political strategy and palace intrigues are as far removed from 'harmony' as the North Pole is from the South.

Firishtha, the prejudiced Muslim Historian, speaks of Hindu-Muslim matrimonial alliances, but even Dr. Saletore admits that in all cases of Hindu-Muslim alliances, sheer compulsion alone prevailed, and never once does the Doctor record a case where a Hindu prince has been willingly consenting to such an alliance Hindu-Muslim relations in the Mediaeval ages in the Vijayanagar Empire have been remarkably vivified by these two incidents among others, which Doctor Saletore relates:

"One evening, when the fragrance of the garden of pleasure had suffused the cheek of Mahomed Shah (Bahmani I) with the rosy tinge of delight, a band of musicians sang two verses of Ameer Khuaros, descriptive of royal festivity, when the King, delighted beyend measure, commanded Mullik Seif-ood-Deen Ghoory to give the three hundred performers a draft for a gratuity on the treasury of the Raja of 'Beejanuggur'. Firishtha also relates how the Hindu King received this order of the Sultan.

"The Raja, naturally haughty, and proud of his independence seated the person presenting the order for the money on an ass, and having exhibited him through all the quarters of Beejanuggur, sent him back, after he had been subjected to every mark of contempt and derision".

* * *

"From various historians we learn, that Firoze Shah excelled his predecessors in power and magnificense, and that in his reign the house of Bahmuny attained its greatest splendour. He compelled the Ray of Beejanuggur to give him his daughter in marriage, though contrary to the custom of the Hindus, who marry only in their own cast".

This was obviously after the disastrous campaign of A. D. 1406, which Deva Raya II commenced with vigour but ended in ignominy. *Firishtah is the only authority for this piece of information.*

Now coming to the particular facts of the case, in a series of complications which followed soon after 1551 A. D Rama Raja on receiving 1,200,000 Hoons as a present from Ebrahim Adil Shah, despatched his brother Venkatadri s to expel Saif-in-ul-Mulk who had beseiged Bijapur. Venkatadri's success was complete.

And Dr. Saletore preceeds to relate the story of adoption:—

"Alli Adil Shah, intent on adding to his dominions and repairing the losses sustained by his father, entered into a close alliance with Rama Raja and on the occasion of the death of a son of that Prince, he had the boldness, attended only by 100 horse, to go to Beejanuggur to offer his condolence in person on that melancholy occasion.

Rama Raja received him with the greatest respect and the King, with the kindest persuasions, prevailed upon him to lay aside his mourning. The wife of Rama Raja, on this occasion, adopted the King as her son, and at the end of three days, which were spent in an interchange of friendly professions and presents, Ali Adil Shah took his leave".

In the circumstances and the evidence, the only conclusion that could be drawn is that there has been no adoption whatever. Rama Raja only reciprocated the gesture of friendship which Ali Adil Shah extended to him on the occasion of the loss of one of his sons. It is probable that Rama Raja might have called him 'my son', but that does not warrant an inference of adoption.

Ladies' hearts can be touched to the quick, especially in matters where their off-springs are concerned, and it is quite likely that when Ali Adil Shah came to Rama Raja to condole with him on the occasion of of the loss of one of his sons, the Queen might have indulged in extravagance of expression.

Even taking *ex-hypothesi* that there had been an adoption, no record about the adoption ceremony is to be found anywhere. Who all were present on the occasion? How befitting royalty was the adoption celebrated?

Latterly when Ali Adil Shah succumbed to the persuasions of his co-religionists and turned the tide of battle against Rama Raja by joining in the affray in the nick of time on the battlsfield of Rakshasa Tangadi, betraying his so-called and supposed adopted father, the Hindu King is reported to have asked, "You have been hitherto considered and *called* my son; is it then honourable to deceive me at last?" All the emphasis lies on the word *called* Why should the word *called* be put into the mouth of the King, if there really has been an adoption? And is it to be wondered that we have the authority of history that the so-called adopted son beheaded the so-called adopted father?

Another point that would strike any ordinary person is that Rama Raja only lost one of his sons. Where then was the necessity to adopt a son?

Even Dr. Saletore does not attach much credence to the stories of Firishtah the Historian. It is impossible to believe of any adoption having taken place in the absence of further light and evidence and it is to be hoped that Sir C. P. Ramaswamy Iyer will go to the originals i. e., epigraphical records and other ancient works of Hindu Culture, rather than prejudiced Historians and foreign commentators on such essentially Hindu matters of public importance.

Sir C P.'s statement is capable of doing any amount of mischief which, if not nipped in the bud, will do Hinduism great harm.

A Sanatanist.

Vaidika Dharma Sangam.

A debate on the subject of "The Brahmans—their present problems and further Programmes of Works" has been inaugurated in the Study Club of the Gopala Rao Library Kumbakonam by Dewan Bahadur K S Ramaswamy Sastrigal, Retired District Judge on Saturday 13—3—37. M.R.Ry. P O Sivarama Iyer, B.A., Retired Income-tax Officer presided on the occasion. The debate was arranged by S. Swaminatha Sastry, Retired Engineer, Kadalangudi Street with a view to focus attention on the practical problems of the Brahmin Society today. The debate has continued for 2 days and will continue next Saturday also at 6-30 P. M. in the same Study Club with the permission of the Club authorities. A number of leading gentlemen are taking part. All are invited attend and take part in the debate on 20—3—37.

A Correspondent.

"By the elections they (Congress) wanted to raise a storm to create revolutionary outlook."

Pandit Nehru.

புதுமாதிரி கால் செயின், கொலுசு தினுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-௵ பங்குனி-மீ 5௳

பத்திரிகைகளின் மீது ஜவஹர்லாலின் கோபம்.

டெல்லியில் "நாஷனல் கால்" என்ற பத்திரிகையின் கட்டிடத்தில் பிரபல பத்திரிகா நிரூபர்கள் சுமார் 70 பேர் ஸ்ரீமான் நேருவை ஸந்தித்துப்பேசினார்கள். அச்சமயம் ஸ்ரீமான் நேரு பத்திரிகைகளின்மீது குற்றம் சாட்டிப் பேசியிருப்பது கவனிக்கத்தக்கதாயிருக்கிறது. ஸ்ரீமான் நேரு உத்யோக மேற்கும் விஷயத்திற்கு மிகுந்த ஆக்ஷேபமுள்ளவரென்பது தெரிந்தவிஷயம். ஆனாலும் எலெக்ஷன் முடிந்தபிறகு இந்தியாவெங்குமுள்ள பத்திரிகை நிருபர்கள், உத்யோகம் ஏற்பதற்கு தேச மஹாஜனங்களின் பெருத்த ஆதரவு இருப்பதாகக் கட்டுப்பாடான முறையில் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கினார்கள். பத்திரிகைகளும் இதை ஆதரித்து பிரசாரம் செய்தன. ராஷ்ட்ரபதியாக விளங்கும் நேருஜியின் அபிப்ராயத்திற்கு தேசத்தில் ஆதரவு இல்லாததுபோல் பத்திரிகைகள் பிரசாரம்செய்வதை அவர் எப்படி ஸஹிப்பது? ஆகலால் அவர் பத்திரிகைகளையும் நிருபர்களையும் கண்டிக்கப் புறப்பட்டார். பத்திரிகா நிருபர்களோ பத்திரிகைகளோ, பொதுஜன அபிப்ராயங்களை, முக்யமாக கிராம வாசிகளுடைய அபிப்ராயங்களை அறிந்தவர்களல்லவென்றும, நகர வாஸிகளாகிய சிலருடைய அபிப்ராயங்களையே நிருபர்கள் பொதுஜன அபிப்பிராயம்போல் பிரபலமாக்கி எழுதுவதாயும், அதையே பத்திரிகை ஆசிரியர்களும் தாங்கி எழுதுவதாயும் பத்திரிகைகளில் வருவதையே ஜனங்கள் நம்பிவிடுவதாயும் கிராம ஜனங்களின் உண்மையான போக்கு தமக்குத்தான் தெரியுமென்றும் நேருஜி சொல்லி பத்திரிகைகள் உண்மையான ஜன அபிப்ராயங்களை வெளியிடும் கருவியல்லவென்பதை வெளிப்படுத்தியிருகிறார். ஸனாதனதர்மிகள் வெகுகாலமாகச் சொல்லிவந்த உண்மையையே இன்று நேருஜீயும் ஸொந்த அனுபவத்தைக்கொண்டு ஒப்புக் கொள்ளவேண்டியதாயிற்று. நேருஜி போன்றவர்கள் தாங்கள் செய்துவரும், ராஜீய, ஸமூஹப் பிரசாரங்களுக்குப் பத்திரிகைகளையே முக்ய கருவியாகக்கொண்டு, கடுகை மலையாகவும், மலையைக் கடுகாகவும் ஆக்கி ஜனங்களை மயக்கித் தங்கள் கார்யங்களை ஸாதித்து கொள்ளுகிறார்கள். ஆனால் அதே பத்திரிகைகள் இவர்களுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக எழுதினால் அப்போது இவர்கள் பத்திரிகைகள் பொதுஜன அபிப்ராயத்தை வெளிடக் கூடியவையல்ல வென்று சாதிக்க முன்வருகிறார்கள். நேருஜி போன்றவர்கள் ராஷ்ட்ரபதியாகவும், தேச ஜனத் தலைவராகவும் பிரஸித்தி பெறுவதற்கு இந்த நிருபர்களும், பத்திரிகைகளுமே பெரும்பாலும் காரணமென்பதைப்பலர் அறியாமலில்லை.

நேருஜி போன்றவர்களுக்குப்போல் ஸனாதநிகளுக்கும் சில கொள்கைகளும், பிரசார வேலைத்திட்டமும் இருந்துவருகின்றன. ராஜீய விஷயமாக ஜனநாயகக் கொள்கைகளை தேசத்தில் ஸனாதநிகள் உள்படப் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் சாரதாச்சட்டம் ஆலயப்ரவேசம் முதலிய ஸமூஹச்சீர்திருத்தங்கள் விஷயமாகவும் நமக்கு பலமான ஆக்ஷேபமுண்டு. கோடிக்கணக்கான ஜனங்கள் மேற்கண்டவைகளை ஆக்ஷேபிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருந்தும் நாம் சிறுபான்மையோர் போலவும், பெரும்பாலோர் சீர்திருத்தங்களை ஆதரிப்பவர் போலவும் நேருஜிபோன்றவர்கள் பத்திரிகைகளின் உதவியைக்கொண்டே மாயைசெய்கிறார்களென்று நாமும் நினைக்கிறோம். சாரதாச்சட்ட காலத்தில் இந்தப் பத்திரிகை மாயையைக்கொண்டே அது தேசமகாஜனங்களுக்கு ஸம்மதமென்று காட்டப்பட்டது. நேருஜியால் கண்டிக்கப்படும் இந்தப் பத்திரிகை நிருபர்களே இத்தகைய கதைகளைக் கட்டிவிட்டு தார்மிகர்களுடைய உண்மைஅபிப்பிராயங்களை வெளியிடாமல் மறைத்தனரென்பதை நாம் அப்போதே வெளியிட்டிருக்கிறோம். இப்போதும் நேருஜி முதலியவர்கள் ஸமூஹச் சீர்திருத்த விஷயமாகச் சட்டம் செய்வதானால் பொதுஜன அபிப்பிராயப்படி நடக்கப்போவதாயும், ஆனால் பொதுஜன அபிப்பிராயம் சீர்திருத்தத்திற்கு ஆதரவாயிருப்பதாயும் சொல்லுகிறார்கள். இது எப்படி இவருக்குத் தெரிந்தது? இது பத்திரிகை நிருபர்களின் கட்டுப்பாடான கயிர் திரிப்புத்தானே? ஸொந்த அநுபவம் ஏற்பட்ட பிறகாவது நேருஜிபோன்றவர் பத்திரிகைமாயைகளைக்கொண்டே தார்மிகர்விஷயத்திலும் தப்பான முடிவுக்கு வாராமல் உண்மையை அறிய முயற்சிப்பது நியாயமென்று உணருவார்களா?

ஜர்மனியில ஹிட்லரும், இதாலியில் முஸலோனியும் பொதுஜன அபிப்பிராயத்தை மறைத்துப் பத்திரிகை உதவியால் யதேச்சாதிகாரம் நடத்துவதாக நேருஜிகுறிப்பிடுகிறார். ஆனால், அதே யதேச்சாதிகாரத்தை நேருஜி பத்திரிகைகளின் உதவியால் தார்மிக ஜனங்கள் மீது செலுத்தப் பாடுபடுவதாக நாம் நினைப்பதற்கு இடமில்லாமல் போகவில்லையன்றோ?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

காக்கிநாடா.

குறிப்புகள்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பூர்த்தி.

சென்ற இரண்டு வருஷங்களுக்கு மேலாக ஸ்ரீமான் ஜி. வி. கணேசய்யர் அவர்களால் நமது பத்ரிகையில் வெளியிடப்பட்டுவந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமானது இந்த சஞ்சிகையுடன் நிர்விக்னமாகப் பூர்த்தியாவதை ஸந்தோஷத்துடன் குறிப்பிடுகிறோம்.

ஸ்ரீ பாஸ்கரராயாதிகளான பூர்விகர்களுடைய வியாக்யானங்களின் கருத்து மாறுபடாமலும், மிக லலிதமாயும், விரிவாயுமுள்ள வழியில் அழகாக இந்த ஸ்தோத்ரத்தைத் தமிழில் மொழிபெயர்த்த ஸ்ரீமான் அய்யரவர்களுடைய அரிய கைங்கர்யத்திற்கு ஸ்ரீ தேவீ பக்தர்கள்யாவரும்மிகுந்த க்ருதஜ்ஞதையுடன் இருக்கவேண்டியது அவச்யமாகும். இந்த ஸ்தோத்ரம் பிரசுரிக்கப்பட்ட காரணத்தால் பலருக்கு ஸந்தோஷம் ஏற்பட்டு பத்ரிகையின் அபிமானிகளும் அதிகரித்ததை நாம் அறிவோம். இத்தகைய சிறந்த க்ரந்தத்தை வெளியிட உதவியதற்காக ஸ்ரீமான் அய்யரிடம் பத்திரிகை நிர்வாகிகளும் நன்றி பாராட்டுகிறார்கள். ஸ்ரீமான் அய்யரவர்கள் இந்த லலிதா ஸஹஸ்ரநாம க்ரந்தத்தைத் தனியாக அச்சிட்டு வெளியிட முன் வந்திருப்பதும் ஸந்தோஷிக்கத் தக்கது. இந்த நல்ல ஸந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு பக்தர்கள் இந்த முயற்சிக்குத் தங்களால் செய்யக் கூடிய எல்லா உதவிகளைச்செய்ய முன் வருவார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீமான் அய்யரவர்கள் ஏற்கனவே ஸௌந்தர்ய லஹரீ என்ற ஸ்தோத்ரத்தை அழகிய தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளியிட்டிருப்பதுடன் உத்தம காவ்யமாகிய மூகபஞ்ச சதீ என்ற ஸ்ரீ அம்பாள் ஸ்தோத்ரத்தையும் தமிழில் மொழிபெயர்த்து நமது பத்திரிகையில் வெளியிட்டுவருவதையும் நமது நண்பர்கள் கவனித்திருக்கலாம். இத்தகைய ஸத்கார்யங்களில் சிரமபெடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு உபகாரம்செய்துவரும் ஸ்ரீமான் அய்யரவர்களுக்கு ஸர்வேச்வரன் ஸகல சிரேயஸ்களையும் அளிப்பாராக.

ஸர்வமத மஹாநாடு ஸாதித்ததென்ன?

கல்கத்தாவில் நடந்த சர்வமத மகாநாடு பூர்த்தியடைந்துவிட்டது. இதற்கு ஆசியா ஐரோப்பா, அமெரிக்கா முதலிய எல்லா கண்டங்களிலும் உள்ள தேசங்களிலிருந்தும் பல பிரதிநிதிகள் வந்திருந்தனர், இந்தியாவிலிருந்தும் அனேகபிரதிநிதிகள் விஜயமாகியிருந்தார்கள். உலகத்திலுள்ள பற்பல மதங்களை சேர்ந்தவர்கள் தம் தம் மதத்தின் உயர்வையும், உண்மை நோக்கத்தையும் பற்றிச் சிறந்த பிரஸங்கங்கள் செய்தனர், ஒவ்வொரு மதமும் வெவ்வேறு முறையில் அமைந்திருந்தாலும், அவைகளின் முடிவான நோக்கம் ஸம்பந்தப்பட்ட வரையில் எல்லா மதமும் ஒன்று தானென்றும், மனிதஸமூஹத்திற்கு மதத்தினால் விசேஷ நன்மையுண்டென்பதும் அந்த மஹாநாட்டில் வெளியிடப்பட்டது.

இந்த மஹாநாட்டைக் கூட்டியதன் கருத்தும் பயனும் யாதாயிருப்பினும், இதனால் பொதுவாக ஒரு முக்கிய நன்மையுண்டென்பதை ஒப்புக்கொள்ளலாம். உலக ஜனங்கள் ஐஹிக விஷயங்களிலேயே தற்போது பெரிதும் மூழ்கிக் கிடப்பதால் மதத்தின் மஹிமையை அவர்கள் மறந்து வருகிறார்கள். ஐஹிக சௌக்யத்திற்கு விரோதமாக நினைக்கப்படும் மதஸம்பந்தமான கார்யமெதையும் செய்ய முன் வருவதில்லை. மதப் பேச்சைக் கேட்டால் வெறுப்பு அடைகிறார்கள். இந்தமதத்வேஷம் சிறிது சிறிதாக முற்றி தீவ்ரநாஸ்திக வாதம் பலவிடங்களில் பரவ ஆரம்பித்துவிட்டது. மதத்தைத் தகர்ப்பதற்கென்றே பல இயக்கங்கள் தோன்றிவிட்டன. மதத் தத்துவம் மனதிலிருந்து மறைந்த காரணத்தாலேயே பூத தயை என்ற உயர்ந்த குணம் நசித்து ஸ்வயநலமும், பணப்பேயும் உலகத்தை ஆட்டி வருகிறது. பெரிய சிறந்த ராஜீட தோவிகள் கூட இந்த அபாய வழியில் இறங்கி விட்டதை ஐரோப்பிய நாடுகளில் தற்காலம் நடக்கும் சம்பவங்களால் அறிகிறோம் கோரமான மனிதக்கொலை அங்கு நடந்து வருவதற்கு மதப்பற்றும் பரலோக பயமும் குறைந்ததன்றோ காரணம்?

இந்த அபாயம் இந்தியா போன்ற மற்ற நாடுகளிலும் தலைநீட்ட ஆரம்பித்திருப்பதை பார்க்கிறோம் ஆதலால் உலகம் மீண்டும் நல்ல நிலைமைக்குத் திரும்பவேண்டுமானால் எங்கும் மதச்ரத்தையை பலமாக உண்டாக்க வேண்டுமென்று ஐரோப்பியப் பாதிரிகளே பலவிடங்களில் வற்புறுத்தி வருவதைப்பார்க்கிறோம்.

இந்தநிலைமையில் யோஜித்தால் இத்தகைய மத மகாநாட்டினால் சிறிது நன்மை உண்டாகலாம் என்று தோன்றக்கூடும்.

மதக்கலப்பினால் விளையும் தீங்கு.

ஆனால் இந்தியாவில் ஹிந்துமதத்தைப்பற்றிய வரையில் இத்தகைய மகாநாடுகளால் விளையும் பயனை நாம் கவனிக்க வேண்டியது அவசியம்.

மதங்களுக்குள் ஒற்றுமைவேண்டுமென்று வாதிக்கப்படுகிறது இதன் அர்த்தம் நமக்கு விளங்கவில்லை. ஸத்யம், தயை, அஹிம்ஸை போன்ற பொது அம்சங்களில் எல்லா மதங்களும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அடிப்படையான அவாந்திரபேதங்களில் அவை எப்படி ஒன்றுபட முடியும்? அப்படி ஒன்றுபட்டால் அந்தந்த மதஸ்வரூபமே உருக்குலைந்து விடாதா? இந்த அனர்த்தம்தான் தற்போது ஹிந்து மதத்திற்கு உண்டாகியிருக்கிறது. மதச்சீர்திருத்தமென்றும், விசால நோக்கமென்றும் புதிய எண்ணங்கொண்டு பரிசுத்தமான நமது ஹிந்து மதத்தில் அந்நிய மதக்கொள்கைகளைக் கலந்து அதை ஒரு கலப்பு மதமாக்கி வருகிறார்கள். ஜைநம், பௌத்தம், தியாஸபி, ஆர்யஸமாஜம், முதலியவிருத்த மதங்களுடைய கொள்கைகள் சிறிது சிறிதாக ஹிந்து மதத்தில் புகுந்துவிட்டன. ஒவ்வொரு மதங்களிலிருந்தும் "உயர்ந்த" அம்சங்களை ஹிந்து மதத்தில் கலந்து அதை விசால நோக்கமுள்ளதாகச் செய்கிறோம் என்கிறார்கள். ஹிந்துமத உத்தாரணம்செய்ய முன் வந்துள்ளவர்களாகப் பெருமைக்கொள்ளும் காந்திஜி முதலியவர்களும், ஹிந்துமஹாசபைபோன்ற ஸ்தாபனங்களும் இந்தவழியிலேயே இறங்கியுள்ளன. இந்த ஸர்வமத மகாநாடும் இந்தத் தீங்கையே விருத்தி செய்யக் கூடியதென்று நினைக்கிறோம். மற்ற மதஸ்தர்கள் உறுதியாயிருப்பார்கள். ஹிந்துக்கள் மட்டும் இதர மதங்களைக் கண்டு மோஹித்து அந்த வழியில் தமது மதத்தைச் சீர்திருத்த முயற்சிப்பார்கள். இது நெடுநாளைய அநுபவம். ஆதலால் கலப்பட மற்ற பரிசுத்தஹிந்து மதத்திற்கு இந்த மகாநாடு போன்றவைகளால் சிறிதும் நன்மை இருப்பதாகத் தெரியவில்லை.

ஆசாரமற்ற மதம் எதற்கு?

மேலும் இத்தகைய மகாநாட்டால் எவ்வித பிரயோஜனமும் இல்லை என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. மதமென்றால் இக்காலத்தில் மனதோடு நிற்கும் ஒரு வெறும் கொள்கை மாத்திரந்தானென்று நினைக்கப்படுகிறது. மதத்தையொட்டி செய்யவேண்டிய வெளி ஆசார அநுஷ்டானங்கள் அவசியமில்லை என்று நினைக்கப்படுகிறது. ஹிந்து மதத்தின்படியோ வென்றால் மதத்திற்கு ஆசாரமே உயிர்நிலையாக அமைந்திருக்கிறது. ஆசார அனுஷ்டானங்களை விட்டவன் மதப்பற்று உள்ளவனாக நினைக்கப்படமாட்டான்.

இந்த மத மஹாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் யாவரும் தலையில் தொப்பியும், உடம்பு முழுவதும் சட்டையும், காலில் பூட்சும், வாயில் புகைச்சுருட்டும், வயிற்றில் பலவகைப் பட்ட பானங்களையும் ஸ்வீகரித்துக்கொண்டு எவ்வித சுத்தியோ, ஆசாரமோ, அநுஷ்டானமோ இல்லாமல் மதத்தைப் பற்றிச் பேசினார்கள். மதம் மனதில் மட்டும் இருக்க வேண்டியது என்பதே இவர்களுடைய கொள்கை.

நம் தேசத்தில் பரவியுள்ள வைதிகஹிந்து மதம் இத்தகையதா? மனிதனுடைய இஹபர பிரவ்ருத்திகள் யாவும் மதத்தின் பெயரால் வியவஸ்தையுடன் செய்யப்படவேண்டியிருக்கிறது. இந்த ஸர்வ மத மகாநாட்டில் வந்த அந்யர்களைப் பார்த்து ஆசாரப் பிரதானமான ஹிந்துமதத்தினரும் தமது மதாசாரங்களை "மூடநம்பிக்கையுள்ள சடங்குகள்" என்று உதாஸீனம் செய்ய இடம் ஏற்பட்டுவிடும். ஏற்கனவே காந்திஜி முதலியவர்கள் இந்த வழியில் வியவஸ்தையை அழித்து வருகிறார்கள். காந்திஜி பிரார்த்தனை நடத்துவது ஒன்று மட்டுமே ஹிந்துமதத்தில் இருப்பதற்குப் போதுமென்று நினைக்கிறார். மற்றபடி அவர் தமது வர்ணத்திற்குரிய எந்த ஆசாரத்தையும் அனுஷ்டிப்பவர் அல்லர். சிராத்த கர்மா, புண்ட்ரம், புண்யதீர்த்தஸ்னானம் புண்யகால நியமம் போன்ற சகல ஆசாரங்களையும் விட்டுவிட்டார். அவைகளில் நம்பிக்கையில்லாமலேயே தாமும் ஓர் ஹிந்துவென்றும், ஸநாதனஹிந்துவென்றும்கூடக் கூறிக் கொள்ளுகிறார். இவரைப் போல் பல ஹிந்துக்கள் ஆரம்பித்துவிட்டார்கள். இத்தகைய ஆசாரமற்ற போலி ஹிந்து மதத்தை விருத்தி செய்ய இந்த ஸர்வமதநாடு உதவுமேயல்லாது வேறு நமக்கு எவ்வகையிலும் நன்மை செய்யக் கூடியதல்ல.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

ஸ்ரீ புரி க்ஷேத்ரத்தில் 9-வது மஹாநாடு.

(மார்ச்சு 27, 28, 29-௳ களில் நடைபெறும்)

அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் 9வது மஹாநாடு நாளது பங்குனிமீ 14 தேதிக்குச்சரியான மார்ச்சு-மீ 27, 28, 29 தேதிகளில் ஸ்ரீ புரி ஜகன்னாத க்ஷேத்திரத்தில் மதுரை அட்வகேட் பிரம்மஸ்ரீ ராவ் சாகிப் என். நடேசய்யர் அவர்களுடைய தலைமையில் நடைபெறும். பாரததேசத்திலுள்ள தார்மிகர்கள் யாவரும் விஜயம் செய்து நன்கு இதை நடத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கார்யக்கிரமம்.

மார்ச்சு 24௳ விஷ்ணுயஜ்ஞ ஆரம்பம். 26௳ மஹாநாட்டுத்தலைவர்களுக்கு ஊர்வலம், வரவேற்பு முதலியவை. அன்று கொடி வணக்க விழா. 27, 29 தேதிகளில் காலை $7\frac{1}{2}$-மணிமுதல் $10\frac{1}{2}$-மணிவரையில் வித்வத் பரிஷத். ஷை தேதிகளில் மாலை 1மணிமுதல் 5மணிவரையில் மஹாநாடு. 27௳ இரவு 7 மணிமுதல் 10மணிவரையில் விஷயாலோசனைக்கூட்டம். என்று உபசாரணைக்கமிட்டித் தலைவர் ஸ்ரீயுத கதாதர ராமாநுஜதாஸரும், கார்யதர்சி ஸ்ரீ கோவிந்தமிச்ரசர்மாவும் அறிவிக்கின்றனர். பண உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் ஸ்ரீ ராதாசரணதாஸ் பொக்கிஷதார், அ. இ. வ. ஸ். ஸ. ஆபீஸ் புரி என்ற விலாசத்திற்கு அனுப்புக.

உத்யோகம் ஏற்கும் விஷயம் முடிவாகிவிட்டது.

கார்யக்கமிட்டியின் தீர்மானம்.

ஹிந்துப் பத்திரிகைக்குக் கடைசியாக வந்துள்ள செய்தியின்படி காங்கிரஸ் கார்யக்கமிட்டியானது சில நிபந்தனைகளுக்கு உள்பட்டு உத்யோகம் ஏற்பதை ஒப்புக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறதாகத் தெரிகிறது.

அந்தந்த மாகாணக் காங்கிரஸ்கக்ஷித்தலைவர்களுக்கு, கவர்னர்கள் கொடுக்கும் உறுதிமொழியில் திருப்தியேற்பட்டால் அதை அநுஸரித்தும், கார்யக்கமிட்டி விதித்துள்ள சில நிபந்தனைகளை அநுஸரித்தும் உத்யோகம் ஏற்கலாமென்று கார்யக்கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

17, 18 தேதிகளில் நடைபெறும் அகில இந்தியக்கமிட்டி இதை ஊர்ஜிதம் செய்யுமென்று நம்பப்படுகிறதாம்.

கல்யாணப் பரிசு கொடுக்கலாமா?

சென்னை கார்ப்பரேஷனின் முடிவு.

சென்னை கார்ப்பரேஷன் கல்வியிலாகா உத்யோகஸ்தர் ஒருவருடைய வீட்டில் நடந்த கல்யாண காலத்தில், அவருடைய கீழ் உத்யோகஸ்தர்களான பள்ளிக்கூட உபாத்யாயர்கள் சிலர் வெள்ளிப்பாத்திரங்களைப் பரிசாகக் கொடுத்ததைப்பற்றி கார்ப்பரேஷன் கூட்டத்தில் விவாதம் நடைபெற்றது.

பெரிய உத்யோகஸ்தர்களுக்கு, கீழ் உத்யோகஸ்தர்கள் இம்மாதிரி பரிசு கொடுப்பது அநுசிதமென்று தீர்மானிக்கப்பட்டு அந்தப் பரிசுகளை அந்த உத்யோகஸ்தர் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ருஷ்யாவில் ஜனநாயக ஆட்சி.

போதுவுடமை மறையுமா?

ருஷ்யாவிலுள்ள பொதுவுடமைக் கக்ஷியின் கூட்டமொன்று ஸமீபத்தில் நடந்தபோது அத்தேச ராஜ்ய நிர்வாஹத்தை ஜனநாயக முறைக்கு ஒத்தவாறு திருத்தி அமைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஜார்ஜ் ஜோஸப்புக்கு ஸ்தானம்

ஸமீப எலக்ஷனில் காங்கிரஸ் அபேக்ஷகராக நின்று தோற்றுப்போன ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோஸப்புக்கு இந்தியா சட்டசபையில் ஸ்ரீமான் குமாரஸாமி ராஜாவினால் காலிசெய்யப்படப் போகும் ஸ்தானத்தை அளிக்க காங்கிரஸ்காரர் உத்தேசிப்பதாகத்தெரிகிறது. ஸ்ரீமான் குமாரஸாமி ராஜா சென்னை அஸம்பிளிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதால் இந்தியா சட்டசபை ஸ்தானத்தை அவர் ராஜிநாமா செய்ய வேண்டும்

ஓர் புதிய யந்திரம்.

கூலிக்காரர்களுக்கு ஆபத்து.

சுவர்களில் ஸிமெண்டுபூசுவதற்காக என்று ஒரு புதிய யந்திரம் சென்னைக்கு வந்திருக்கிறது. இதன் உதவியால் சென்னைக்கோட்டைச் சுவர்களில் சிமெண்ட் பூசப்பட்டுவருகிறதாம். சிமெண்டையும் மணலையும் கலந்து கொட்டினால் இஞ்ஜின் தண்ணீர்விட்டுக் கலந்து அதைச் சுவர்களின்மீது வேகமாக வீசுகிறதாம். இந்த யந்திரத்தால், கொத்துவேலை செய்து பிழைக்கும் கூலிகளுக்கு வாயில் மண் விழக்கூடும். இதுதான் நவீன நாகரிகத்தின் பயன்!

நாம் செய்யும் ஹிம்ஸை ஹிம்ஸையல்லவோ?

(ஸ்ரீமான் எம். எம். ஆனந்தராவ். மானேஜர் ஸ. த. கார்யாலயம், சென்னை.)

பண்டித நெஹ்ருவானவர் சோலாபூர் பட்டணத்தில் சென்ற பிப்ரவரி மாதம் 15-ந் தேதியில் பால்ய விவாஹ நிரோத சட்டவிஷயத்தைப்பற்றி பேசியிருக்கிறதாக அறியப்படுகிறது. அவ்விடத்தில் அவர் சொன்ன விஷயங்களென்னவென்ருல்:—

பால்யவிவாஹ நிரோதசட்டமானது மிகவும் சரியானது. அந்த சட்டமானது வெகுதூரம் போகாமலிருப்பதனுல் தோஷயுக்தமென்று சொல்லலா.ர். இப்பொழுதுயிருக்கிறதைக் காட்டிலும் இன்னும் தீவ்ரமாய் அந்த சட்டத்தை செய்யவேண்டுமென்று இச்சிக்கிருர். இன்னும் அந்த சட்டத்தை ப்ரயோகத்தில் ப்ரபலமாக்கவேண்டும். ஆனுல் ஹிந்து தர்மமானது அல்பவிஷயம்.

இப்பொழுது இருக்கிற அளவில் மேற்சொன்ன சட்டமானது ஸனுதநதர்மத்தை அனுஷ்டிக்கிறவர்களுக்கு எல்லாவித துன்பத்தை உண்டுபண்ணும் சட்டமாயிருக்கின்றது நஷ்டமென்ன, காராக்ருஹநிவாசம் என்ன, தர்மங்களுக்கு ப்ரம்சமென்ன — இவைகளெல்லாம் செய்யும்படியான சட்டமாயிருக்கின்றது இப்படியிருக்கையில், இதைக்காட்டிலும் அதிகமான துன்பத்தை உண்டுபண்ணும் சட்டமாக அதை செய்யவேண்டுமென்ற கருத்து அவருக்கு உள்ளதாகத் தோன்றுகிறது.

கொஞ்சகாலத்திற்கு முன் சட்டசபை நியோஜனத்தில் 'காங்க்ரெஸ்' ப்ராபல்யம் கிடைத்தது. சட்டசபைகளில் செய்யவேண்டிய கார்யங்களுக்குள் ஓர் முக்கியமான கார்யமென்னவென்ருல்:—

சட்டபுக்சுத்திலிருக்கின்ற ஹிம்ஸிக்கிற சட்டங்களெல்லாவற்றையும் நிவர்த்திக்கவேண்டியது.

ஏனெனில் இவ்விதமான சட்டங்கள் ஜனங்களுக்கு எல்லாவித துன்பங்களையுண்டுபண்ணும் சட்டங்களாகயிருக்கின்றன. அன்ய தேசிய ஜனங்களுக்கு அனுகூலமாயும் நம்ம தேசிய ஜனங்களுக்கு ப்ரதிகூலமாய் நிக்ரஹிக்கின்ற சட்டங்கள் சரியான சட்டங்களல்ல. இவ்வெல்லா சட்டங்களையும் நிவர்த்திக்கவேண்டும். ஆனுல் நம்மதேசிய ஜனங்களுக்குள் ஒருவகுப்பு ஜனங்களுக்கு கொஞ்சம்கூட உபயோகத்தை உண்டுபண்ணுமலிருந்தபோதிலும் மற்ருெரு வகுப்பு ஜனங்களுக்கு ப்ரதிகூலமாய் நிர்ப்பந்திக்கிற சட்டமானது:—

'மிகவும் சரியானது' 'இப்பொழுது யிருக்கிறதைக்காட்டிலும் இன்னும் தீவ்ரமாய் அந்த சட்டத்தை செய்யவேண்டும்.' இன்னும் அந்தசட்டத்தை ப்ரயோகத்தில் ப்ரபலமாக்க வேண்டும்' என்று

மேற்சொன்ன ப்ரகாரம் பண்டித் நெஹ்ரு ப்ரபுவின் நடத்தையை நன்ருக சோதித்துப் பார்த்தால் நமக்கு அடியிற்சொன்ன ஓர் மனிதன் கதியாக தோன்றுகிறது:—

ஒருமனிதன் கனமான முள்வேலியில் மாட்டிக்கொண்டிருக்கிருன். ஒருகையில் முள்ளு பொத்திக்கொண்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிருன். மற்ருெருகையில் காயத்தினுல் அது வீங்குகிறது. இப்பொழுதுயிருக்கிற ஸ்திதியில் அவ்விரண்டுகைகளையும் உபயோகிக்கிறதற்காக முடியவில்லை. இப்படியிருக்கையில் அவன் என்ன செய்யவேண்டும்? ஒரு கையிலிருக்கும் காயத்தை ஸ்வஸ்தப்படுத்தி மற்ருெருகையிலிருக்கும் முள்ளை எடுத்து எறியவேண்டும். இப்படிச்செய்தால் மாத்ரம் இவ்விரண்டு கைகளின் ஸஹாயத்தையெடுத்துக்கொண்டு முள்வேலியிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். பால்யவிவாஹ நிரோதசட்டமானது ஒரு பெரிய முள்ளு. இம் முள்ளையும் இன்னும் இதாதல்யமான முட்களையும் எடுத்து (பிடுங்கி) போடவேண்டியது. இப்படி செய்யாமல் எந்த பிரஹஸ்பதியானவர் கையிலிருந்த முள்ளை இன்னும் உள்ளே தள்ளிவிட்டு உறுதியாக்கும்படி ப்ரயத்னம் செய்வார்?

'பூர்ண ஸ்வராஜ்யமானது' லௌகிகத்திற்கும் பாரமார்த்தத்திற்கும் சொன்னவிஷயம். நம் பரமோத்தேசமானது என்னவென்ருல் இவ்விரண்டுவகை 'ஸ்வராஜ்ய'ங்களை சாதித்தால் மாத்ரம் 'பூர்ண ஸ்வராஜ்ய'மெனப்படும். மற்ருெரு விஷயமென்னவென்ருல் லௌகிக 'ஸ்வராஜ்ய'மே ஒரு அவதி ஆகாது. பாரமார்த்த 'ஸ்வராஜ்ய'மே எல்லா மானிடர்களுக்கும் சாதிக்கிறதான அவதி. ஆனுல் லௌகிக 'ஸ்வராஜ்ய'மானது பாரமார்த்த 'ஸ்வராஜ்யத்தை' சாதிக்கிறதற்காக ஒரு உபாயம். பாரமார்த்த 'ஸ்வராஜ்ய'த்தை ஒழிக்கும்படி ஏற்பாடுகளை பண்ணினுல்

'பூர்ண' 'ஸ்வராஜ்யம்' ஸ்வப்னத்தில்கூட வாராது;

'லௌகிக' 'ஸ்வராஜ்யம்' வந்தபோதிலும் மானிட ஜன்மத்தின் பரமோத்தேசமாகாது.

ஆர்யதர்மம்.

நம் ஆர்யதர்மாபிமானிகள் நாடெங்கும் உளர் என்பது மிகையாகாது. ஆனுல் அவர்கள் தங்கள் அபிமானத்தை நன்கு வெளிச்காட்டுகிருர்களா வென்பது கவனிக்கவேண்டிய விஷயம். ஸநாதன ப்ரசாரக சபைகள் எல்லாம் ஏகமனதாய் ஆர்யதர்மாபிவிருத்தியைக் கோருகின்றன. அவை பத்திரிகை வாயிலாக வருகின்றன. இவை எம்மட்டில் காரியகரமாகியுள்ளன என்பது அநுபவத்தை உணர்ந்தோர் அறிவர். சமீபத்தில் நடந்த சென்னைமாகாண மகாநாட்டிலும் இத்தீர்மானத்துக்குக் குறைவில்லை.

இப்பத்திரிகையில்அடிக்கடி எம்போல்வார் 'ஆர்யதர்மம்' சிறப்புற்ரோங்கி வரவேண்டும் என்று செய்திவிடுத்துள்ளார். குறைந்தது சத்தியாக பதினுறு பக்கங்களாகவாவது இவ் வாரப்பத்திரிகை வந்தால் நலம்.

வருமுன் காப்பது முதல்தரம். வருங்கால் காப்பான் பரவாயில்லை. இப்பத்திரிகைக்குத் தற்போது கடுதாசி விலையேற்றத்தால் வந்துள்ள சிரமத்தை நீக்க முன்வரவேண்டியது தார்மீகர்கள் முதற்கடமையாகும். சொல்லளவிற்பயனில்லை. சொல்லானது செய்கையாகமாறி பயனளித்தலே பண்பு இதனை அறிஞர் அறிந்திருந்தும் வேண்டிய முயற்சிகள் காலந்தாமதியாது செய்யாதிருப்பது வருந்தத்தக்கதே, தாய்மொழி பேணல் அத்யாவசியகம் என்பதைப் பலமுறைக் கூறினும் வீணுகாது. அடிக்கடி இவ் விஷயத்தைக் குறித்துக் கூறவேண்டியிருப்பதை நோக்க மனம் நோவடைந்தாலும் இதற்கு ஒரு தக்க ஏற்பாடாகும்வரை சொல்லாமலிருக்கக்கூடவில்லை யாதலால் கூறத்துணிகின்றனம்.

ஆகையால் தார்மிகர்கள் சற்றே விசேஷ சிரத்தை எடுத்து முன்போல ஆர்யதர்மம் பதினுருகவாவது வரும்படி செய்யவேண்டும். புதுக்கோயில் கட்டுவதினும் பழைய கோயிலைப் பாதுகாத்தல் நலம் என்பர் பண்பாளர். இம்மாகாணத்துக்கு இவ்வாரியதர்மம் ஒன்றே சுத்தசநாதனிப் பத்திரிகையாகத் திகழ்வதால் இதனை ஆதரித்து அது வன்மையுடன் உழைக்கப் பாடுபடவேண்டியதே நம்மவர் கடமை என்று கூறவும் வேண்டுமோ? சொல்லியவண்ணம் செயல் அரியவாம் என்பதை 'எளியவாம்' என்று நிலை நாட்டுமாறு நம்மவரை வேண்டுகின்றனம்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

36-வது சுத்தாபிஷேக மகோத்ஸவம்.

கும்பகோணம் ஸ்ரீ மங்களாம்பா ஆதிகும்பேச்வரரின் 36 வருஷத்திய சுத்தாபிஷேக மகோத்ஸவமானது ஷை ஆலயத்தில் 1937-ஸு மார்ச்-மீ 4௳ குருவாரத்தன்று ஸகல வாத்யகோஷங்களுடன் திருமஞ்சனம் செய்து சதகலசஸ்தாபன பூர்வமாய் மகந்யாஸத்துடன் ஆஸ்திகோத்தமர்களின் முயற்சியாலும் பிரும்மஸ்ரீ துரையப்பா என்கிற சபாபதி சிவாசாரியார் அவர்களின் முயற்சியாலும் வழக்கம்போல் சுத்தாபிஷேகமும் அலங்கார தீபாராதனங்களும் நடந்தேறின. அன்றிரவு 8 மணிக்கு அகரமாங்குடி அபிநவ பாதாசார்ய மஹாகதக கண்டீரவ பிரும்மஸ்ரீ சிதம்பரபாகவதர் அவர்களால் வள்ளிப்பரிணய ஸத்கதாகாலக்ஷேபமும் நடைபெற்றது. பாகவதர் அவர்கள் தனது சரீர அசௌகர்யத்தையும் கவனியாமல் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி காலக்ஷேபம் நடத்தியது மிகவும் போற்றத்தக்கதே. ஜனங்களிடம் பக்தியைப் பரவச்செய்வதுடன் பாவரஸ தாள நடனங்களை ஸமயோசிதம்போல் காண்பிப்பதும் சொற்சுவை பொருட்சுவையுடன்கூடிய உபன்யாஸ சக்தியும் எவராலும் கொண்டாடப்படுகின்றது. இன்னும் பலநாள் அரோகதிடகாத்ரத்துடன் வாழ்ந்து பல சிஷ்யர்களையும் தயார்செய்து ஆஸ்திகர்களுக்கு ஆதாரவளிக்குமாறு சர்வேச்வரனை வேண்டுகிறேன்.

எஸ். சேஷராம சாஸ்திரிகள்.

சென்னை மாகாண வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

சில முக்யத் தீர்மானங்கள்.

ஷை சங்கத்தின் ஆதரவில் 14—3—37 ஞாயிற்றுக்கிழமை நடந்த சென்னை ஸநாதனிகளின் பொதுக்கூட்டத்தில் திவான் பகதூர் கோவிந்ததாஸ், சதுர்புஜதாஸ் அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாரை மதவிரோதமான சட்டங்கள் இயற்றக்கூடாதென்று அவர்களை உறுதிகூறும்படி இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2. இந்தியாவின் தொழிலாளர்கள் சங்கத்தின் 11௳ நடந்த கூட்டத்தில் ராவ்பகதூர் எம். ஸி. ராஜாவினுல் செய்யப்பட்ட சொற்பொழிவில் (12௳ ஹிந்துவில் வெளியானபடி) வரப்போகிற லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியில் தீண்டாதார் ஆலயப்ரவேச அநுமதி மசோதாவையும், தீண்டாதார் அசௌகரியத் தடை மசோதாவையும் கொண்டுவந்து நிறைவேற்றப்போகிருராம்.

இப் பொதுக்கூட்டமானது மேற்படி தீர்மானத்தை எதிர்க்கிறதுடன் தீண்டாதார் கோவிலுக்குள் பிரவேசிப்பதை ஆக்ஷேபிக்கிறது.

இக் கூட்டமானது மாகாண முழுவதுமுள்ள எல்லா ஸநாதநிகளையும் மதவிரோதமாய் செய்யப்படும் தீர்மானத்திற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறது.

வர்ணுச்ரம சுயராஜ்ய சங்கத்தின் கிளை ஸ்தாபனம் ஒன்று புரசவர்க்கம் டிவிஷனில் ஏற்படுத்தப்பட்டு ஸ்ரீமான் P. K. ஜானகிராமய்யர் அட்வகேட் பிரஸிடெண்டாகவும், ஸ்ரீமான் A. S. நடராஜய்யர் அட்வகேட், B. S. வைத்யனுதய்யர் அவர்கள் கார்யதர்சிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று கார்யதர்சிகள் அறிவிக்கிருர்கள்.

வெளியூர்ச்செய்திகள்.

ஆழ்வார் திருநகரி

உபயவேதாந்த கலாசாலை.

தேவஸ்தான முன் மண்டபத்திலுள்ள மேற்படி கலாசாலைக்கு சென்ற சனியன்று சென்னை ரெவினியூ போர்டு மெம்பர் ஸ்ரீமான் என். கோபாலஸ்வாமி ஐயங்கார் ஸி. ஐ. ஈ. விஜயமானுர். டிஸ்டிட்ஜட்ஜ் ஸ்ரீமான் வி. ஸி. தியாகராஜய்யர் ஜில்லாகலெக்டர் மிஸ்டர் வீ. ராமகிருஷ்ணு ஐ. ஸி. எஸ். முதலியோரும் வந்திருந்தார்கள் கலாசாலை சூப்ரண்டெண்ட் ஸ்ரீமான் டி. கோவிந்தய்யங்காரால் கோயில் மரியாதைகளுடன் யாவரும் வரவேற்கப்பட்டார்கள். கனம் ரெவினியூபோர்டு மெம்பரால் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியாக யாவரும் ஆலய தர்சனம் செய்துகொண்டு பயணமானுர்கள். தர்சில்தார் ஆதிநாராயண செட்டியார் தேவஸ்தான டிரஸ்டி ஸ்ரீமான் ராமநாராயணப்பிள்ளை சனுதனதர்ம மஹாசபா நிர்வாஹக்கமிட்டி மெம்பர் ஸ்ரீ அ. தே. ராமாநுஜய்யங்கார் முதலிய பிரமுகர்களும் கலாசாலைக்கு விஜயமாயிருந்தனர்.

பெருமாள் ஆவேசம்

ஆழ்வார் திருநகரியில் மார்ச் 8௳ இந்நகரின் கீழ்புறமுள்ள தெந்திருப்பேரை திவ்யஸ்தலத்தில் வக்கீல் ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் கிரஹத்தில் மேற்படியார் குமாரனுக்கு சென்றவாரம் உபநயன முகூர்த்தம் விமர்சையாய் நடைபெற்றது. இந்த விசேஷத்தை திருப்பதியில் நடத்துவதாக பிரார்த்தனை செய்துகொண்டிருந்ததாயும் அதை மறந்து இங்கு நடத்தவே அன்றிரவே வக்கீல் ஸ்ரீமான் ஐயங்கார் மனைவிக்கு திருப்பதிப் பெருமாள் ஆவேசம்வந்து ஆர்ப்பாட்டம் செய்யவே யாவரும் திருப்பதிக்கு வந்து சேவிப்பதாக பிரார்த்தித்து அன்றிரவே ஆவேசம் வந்த நபருக்கு தலைபூராவும் சடையாய் விட்டதாயும் சொல்லப்படுகிறது.

ந. ந. வி.

திருவாங்கூரில் பெரும் எதிர்ப்பு.

உயர்தர ஹிந்துக்களின் ஆலயபஹிஷ்கரிப்பு.

திருவாங்கூர் கோயில் ப்ரவேச அனுமதி ஆர்டருக்குப்பின் உத்தம உயர்தர ஹிந்துக்கள் ஆலயபஹிஷ்காரம்செய்து கோயிலுக்குச் செல்வதையே நிறுத்திக்கொண்டுவிட்டதாயும், தீண்டாதவர்களும் அதிகமாக ஆலய தர்சனுர்த்தம் செல்வது கிடையாதெனவும் ஆகவே தற்போது தேவஸ்தானச்சிப்பந்திகள் தவிர விசேஷ ஆள் நடமாட்டமின்றி யிருப்பதாயும் இம்மாதிரி பெரும் எதிர்ப்பு நடப்பும் தெரியாமலிருப்பதற்காகவே மகாராஜாவையும் மதராஸ் செல்லுமாறு செய்யப்பட்டதாயும் தெரிகிறது.

ஒரு நிருபர்.

ஸ்ரீ காசீ யுனிவர்ஸிடி.

ஸ்ரீநடாதூர் ஸ்வாமிகளின் பிரசங்கம்.

ஹிந்து யுனிவர்ஸிடி ஸர்வகலாலை மதனமோஹன மஹாஸபையில் வைஸ்சான்ஸலர் ஸ்ரீ மதநமோஹன மாளவ்யாஜீயின் கோரிக்கைப் படிநாச்சியார்கோவில் லக்ஷ்மீமந்திரம்ஸ்ரீஉபய வேதாந்தாசாரியஸிஹ்மாஸநாதிபதி அபிநவ சாஸ்வதீ வாங்முக ரத்ன கோச: குருவர்ய: வித்வத் சிரோமணி முதலிய பிருதுள்ள நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் பகவத் கீதை பக்தி விஷயங்களைப்பற்றி பலவுதாரணங்களுடன் ஸம்ஸ்க்ருத பாஷையில் 28-2-37ல் உபந்யசித்ததில் மாளவ்யாஜீ விச்வவித்யாலய ஸம்ஸ்க்ருத பண்டிதாளான சின்னஸ்வாமி சாஸ்திரிகள், பல மேல் வகுப்பு மாணக்கர்கள், மாணவிகள் முதலான பல ஆஸ்திகமகாஜனங்கள் நிறைந்து ஆனந்தமாகக் கேட்குமாறு திவ்யாஸனத்திலிருந்து இன்றியமையாத உபந்யாஸாம்ருதத்தை வர்ஷித்த நடாதூர் ஸ்வாமிகளுக்கு பூமாலை சூட்டி வைஸ்சான்ஸலர் புகழ்மொழி கூறினதுடன் 2-3-37 ல் நடந்த கான்வோகேஷனுக்கும் ஸ்ரீ நடாதூர்ஸ்வாமிகளை பிரார்த்தித் தழைத்து காசீ கோட்டர் மஹாராஜா முதலியவர்கள் குழுமியிருந்த சபையில் பாராட்டின வைபவம் புகழத் தக்கது. ஸ்ரீ வல்லபராய ஸாங்க வேத வித்யாலய சபையில் காசீ ஆதித்ய நாராயண ஸிஹ்ம மஹாராஜபகதூர் கே. ஸீ. எஸ். ஐ. அவர்களால் பாராட்டி சால்வை முதலிய ஸம்பாவனைப் பெற்று ஸ்ரீ சுகதேவ மடத்திலுள்ள பல ஆஸ்திகர்கள் கோரினபடியே மனமகிழ்ந்து சுமார் நாலுமணி சாவகாசம் பகவத்பக்தி ஸனுதன தர்ம விஷயங்களை காசிவாசிகளான பகுஜனங்கள்கேட்டுக் களிக்குமாறு செங்கமலநயனனும் ஸ்ரீ பிந்துமாதவாதி பகவத் குணங்களையும் கங்கா சாகரமேளா பஞ்கோட் காசீபூர் விஜயம் ஸ்ரீ கயாக்ஷேத்திரங்களைப் பற்றியும் காதலாமலகம் போல் அநுமையான ச்லோகங்களைக் கொண்டும் உபந்யாஸாம்ருதங்களைப் பொழிந்து பரமானந்தத்தை விளைவித்தனர்.

ஒரு நிருபர்.

சகிந்திராபாத்.

தமிழ் மாணவர் சங்க ஆண்டுவிழா.

5—3—37 மாலை 5மணிக்கு, மாபூம் கல்லூரி தமிழ்மாணவர் சங்க ஆண்டுவிழா, மகா-ள-ள-ஸ்ரீ அருணுசல சாஸ்திரியார், M.A., L.T., அவர்களின் தலைமையின்கீழ் நிகழ்ந்தது. அதுசமயம், நைஜாம் கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமான் நாராயணசாமி அய்யர், M.A., B.L., L.T அவர்கள் 'நா' என்பதைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றினுர். அன்னுர் 'நாவின் அமைப்பு' நாவின் பல பொருள்கள், 'நா' நமக்கு ஏன்கொடுக்கப்பட்டது, அதற்குரிய பல குணங்கள், அதைப்பயன் படுத்துவதெப்படி, 'எவ்வெப்போது அதை அடக்கவேண்டும்' என்று எடுத்துக்கொண்ட விஷயத்தை பல வாருகப் பிரித்துக்கொண்டு சுமார் 1½ மணி நேரம் பிரசங்கமாரி பெய்தார். காரியதரிசி, தலைவருக்கும், உபன்னியாஸகருக்கும் நன்றி செலுத்திய பிறகு விழா முடிவடைந்தது.

எஸ். ரகுராமன்.

நாங்குனேரி.

தங்கத்தேர்.

வானமாமலை பங்குனி மஹோத்ஸவம் 16—3—37-ல் ஆரம்பமாய் அதி விமர்சையாய் நடைபெறும். இவ்வுத்ஸவத்தில் தங்கரதம் மிக விசேஷமாகும். மதசம்பந்தான அரிய பல உபன்யாஸங்களும் இவ்வுத்ஸவத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது. ஆழ்வார் திருநகரிவேதபாடசாலைமாணவர்கள் வேதாத்யயனக்கோஷ்டிக்காக வானமாமலை வந்திருக்கிருர்களெனத் தெரிகிறது.

ந. வி. நி.

ஸ்ரீரங்கம்.

அனுபவிகளின் ஸங்கம்.

சென்ற 3—3—37 தினம் இரவு ஸ்ரீரங்கம் சித்திரை வீதியிலுள்ள மஹான் ஸ்ரீ வெங்கடாத்திரி ஸ்வாமிகள் மடத்தில் தஞ்சைஜில்லா சேங்காலிபுரம் குகதாஸ் எஸ். வி. நடராஜய்யர் அவர்களின் பக்திரஸம் ததும்பிய சங்கீதக்கச்சேரி ஒன்று பல பக்தசிகாமணிகளின் விருப்பத்திற்கிணங்கி ரொம்பவும் விமரிசையாக பக்கவாத்தியங்களுடன் சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்றது. கச்சேரி முடிவடைந்ததும் 'அநுபவிகளின் ஸங்க'த்தினுல் ஏற்படுகின்ற மகிமைப் பற்றியும், அவர்களை பூஜிப்பதினுலும், தியானிப்பதாலும் உண்டாகின்ற இக-பர க்ஷேமங்கள் பற்றியும், அவர்கள் இவ்வுலகில் இருந்தாலும் சரி, பரவுலகு சென்றிருந்தாலும்சரி, எவ்விதம் பற்பல ஜீவன்களை காக்கின்ருர்களென்பது பற்றியும் பற்பல உபநிஷத்துக்களின் ஆதாரங்களுடன் ஸ்ரீமான் குகதாஸ் சுமார் ஒருமணிநேரம் நிரம்பவும் உருக்கமாக ஓர் உபந்நியாஸம் செய்தகாலையில் சபையோர்கள் ஆனந்தப்பரவசமாக இருந்தார்களென்பது குறிப்பிடத்தக்கது.

டி. யு. லக்ஷ்மண அய்யர் பி. ஏ.

சென்னை.

தர்மஸபையின் பயன்:— பிர்ம்மஸ்ரீ ராஜதண்டலம் ராமஸ்வாமி அய்யரவர்களால் துவக்கப்பட்டது ஷை ஸபை பலவகையில் பலனை அளித்துவருகிறது. முக்யமாக பி. எல் படிக்கும் ஓர் மாணவன் தலைவாது உபன்யாஸத்தைப் படித்தபின் தனது மாணவருக்கியற்கையான ஸ்வபாவ துராசாரங்களைவிட்டு ப்ராதஸ்நாநம் ஸந்த்யா ஜபம் முதலியவைகளைக் கைகொண்டதுடன் தனது தேசத்திலும் தர்மப்ரசாரம்செய்ய முன்வந்துள்ளார். புரசையில் நடந்த தர்மஸபையில் முதலாவதாக ஆந்த்ரபாஷையில் அழகாக பேசினுர். தற்கால மாணவர் அதிலும் சட்டமாணவர் திருந்தினுரெனில் இச்சபைகூட்டுவதன் பயன் விளங்கவில்லையா?

ஓர்நாள் விவாஹம் வேண்டாம்!! விவாஹத்தில் வேண்டாத பல செலவுகளைக் கைகொண்டு சிக்கன நிமித்தமாக ஒரேநாளில் அதை ஆஸ்திகர்கூட நடத்துகின்றனர். இதைக்கண்டு மனம் தாளாத பிரும்மஸ்ரீ உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி இதை முதலில் சீர்திருத்தும்படி பலமாக வற்புறுத்துகிருர். ஒரே நாளில் விவாகம்செய்ய சாஸ்த்ர ஸம்மதமில்லை. அதற்குதவ பிரமாண அநுக்ரஹமிராது. விவாஹமும் ஸித்திக்காது அந்த ஸந்ததியில் தோன்றுவர் செய்யும் பரலோககர்மா பயனற்றது. ஆதலின் லௌகிக ஊர்வலம் முதலிய ஆடம்பரங்களை விலக்கி விதிப்படி ஔபாஸநத்துடன் தீக்ஷையுடன் விதிப்படிசேஷஹோமாதிகளை உரியகாலத்தே செய்யும்படி வேண்டுகிரும்.

நமது நிருபர்.

முக்கிய கவனிப்பு.
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது.
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கண்ணுசாமி பத்தர். பெரியதெரு, கும்பகோணம்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சாஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R.Ramaswami Iyengar, Proprietor

திருவாங்கூர் ஆலயப் பிரவேச கண்டனம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

கவிரத்னம், ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள்.

தீண்டாதார்களின் வேண்டுகோளின் பேரில் நடத்திருந்தாலும் அதுவும் ஸரியல்ல. இவ்வளவு காலமாய் பத்மநாபஸ்வாமி ஆலயத்திற்குட்சென்று தர்சிக்கவேண்டுமென்று நினைக்காதிருந்த தீண்டாதார்களுக்கு தற்காலம் இவ்விதத்தோற்றம் திடீரென்று ஏற்பட்டதற்கு யாதுகாரணம்? யாராவது இரண்டொருவருக்கு துர்புத்திதோன்றி ஆலய தர்சனத்திற்கு தாங்களும்போகவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டாலும், தர்மஸ்தானத்தில் இருந்து ஜகத்தை நன்கு பாதுகாற்கும் மஹாராஜா பண்டித பரிஷத்தைக்கூட்டி இந்த காரியத்தை நடத்தலாமா, சாஸ்திர ஸம்மதந்தானு, இதுவரையில் நடக்காமல் புதிதாயிருப்பதால் இதினுல் தர்மத்திற்கு யாதொரு குறைவுமேற்படாமலிருக்குமா என்பது முதலான ஸகல விஷயங்களை நன்ருய் விசாரித்து தீர்க்காலோசனைபண்ணிச் செய்யவேண்டிய காரியம், அவ்விதம் விசாரித்து நடத்தியதாகத் தெரியவில்லை. ஒரு சமயம் அவர்களுக்கும் உண்மையில் பகவத்பக்தியிருந்து தங்களுக்கு ஆலயதர்சனம் செய்யவேண்டும் அதற்கு வேண்டிய ஸௌகர்யம் செய்து கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தால் லக்ஷக்கணக்கில் பணத்தைச்செலவிட்டு அவர்களபிப்ராயம்போல் சிறந்த ஆலயமாக ஒன்ருே, இரண்டோ நிர்மணம் செய்து கொடுத்து அவர்களை அவர்கள் ஜாதி முறைப்படி ஸ்வாமிதர்சனம் செய்யும்படி ஏன் ஏற்பாடு பண்ணக்கூடாது? அவ்விதம் செய்வதன்ருே உசிதம். தர்மமாயுமாகும். இவ்விதம் செய்துவைக்கக்கூடிய சக்தி நம் மஹாராஜா அவர்களுக்கில்லையா? அல்லது "பத்மநாபஸ்வாமி ரூபமாயிருக்கும் என்னை தர்சனம்செய்தால் தான் அனுக்கிரகம் செய்வேன் வேறு ரூபமான மூர்த்தியை தர்சித்தால் அனுக்கிரகம் செய்யமாட்டேனெ"ன்று பகவான் எங்காகிலும் கூறியிருக்கிருரா? கீதாசாஸ்திரத்தில் "யொ யொ யாம் யாம் தநும் பக்த:" என்று எந்தெந்த ரூபமாக பக்தன் என்னை ஆராதிக்கின்ருனே அந்தரூபமாக நானிருந்துகொண்டு அவனுக்கு அனுக்கிரகம் செய்கிறேனென்று ஸ்பஷ்டமாய்ச்சொல்லியிருக்கிருர். ஆகையால் அவர்கள் கேட்டாலும் அதற்கு இவ்விதம் செய்தது உசிதமாகத் தோன்றவில்லை

தீண்டாதார்களுடைய நன்மையை கருதினுலும் இவ்விதம் செய்தது உபயோகமில்லை. தற்காலம் தீண்டாதவர்கள் ஸ்ரீ பத்மநாபஸ்வாமி ஆலயத்திற்குட்புகுந்து தர்சனம் செய்யாதபடியால் நாங்கள் கஷ்டப்படுகிருேமென்று கூறுவதற்கில்லை. அவர்களுக்கு ஸரியான வேலையும் சம்பளமும் கிடைக்காதபடியால் ஆகாரத்திற்கில்லாமல் கஷ்டப்படுகிருர்கள். அந்த கஷ்டம் இதினுல் நிவர்த்திக்கக்கூடியதல்ல. ஸ்வாமிதர்சனமேற்பட்டவுடன் தாரித்திரியம் விலகி தனவந்தர்களாக ஆய்விடுகிறதாயிருந்தால் தாரித்திரியசமனமாயிருக்கும். கோடிக்கணக்கான ஜனங்கள் பல வர்ஷங்களாக தர்சித்தும் அவர்களுடைய கஷ்டம் விலகவில்லை என்பது யாவருக்கும் பிரத்தியக்ஷ அனுபவத்தில் தெரிந்தவிஷயம். ஆகையால் அவ்வித நன்மையைக்கருதி இந்த காரியம் செய்யப்பட்டதென்று சொல்வதற்கில்லை. தங்கள் கையிலிருந்து பூமியையோ, பொருளையோ இவர்களுக்குக்கொடுத்து ஒத்தாசை பண்ணினுல்மட்டும் அவர்களுடைய சிரமம் விலகி சுகமாயிருப்பார்கள். அஃதன்றி அவர்கள் ஆலயப்ரவேசம் பண்ணும்படிசெய்வதால் அதர்மத்தை ஸ்தாபித்ததாக ஆகுமே யன்றி அற்பமேனும் நன்மை ஏற்படாதென்பதும் திண்ணம்.

அந்த ராஜ்யத்தில் முன்னிருந்த பெரியோர்களான மன்னர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததை நாமும் அனுஷ்டிக்கும்படி நேர்ந்ததென்று சொல்வதும் உசிதமில்லை. இந்த ஸம்ஸ்தானத்தில் இதற்கு முன் லௌகிகத்திலும் வைதிகத்திலும் ராஜ்யபாரத்தை நன்கு நடத்துவதிலும் மிகவும் சிறந்தவர்களென்று விசேஷமான பிரஸித்திபெற்ற அரசர்கள் விளங்கிக்கொண்டிருந்தார்கள் என்று நாமும் கேள்விப்பட்டிருக்கிருேம். அவர்களும் பிரஜைகளிடம் அதிக அபிமானமுள்ளவர்களாயும், கருணாநிதிகளாகவும் இருந்தார்களென்றுதான் தெரிகின்றது. அவ்விதமிருந்தும் இந்தமாதிரிகாரியம் தர்மமென்ருவது அவசியம்செய்யவேண்டுமென்ருவது அவர்களுக்குத்தோன்றிச் செய்யவில்லை அதற்கு காரணம், அவர்கள் கருணையில்லாதவர்களல்ல. விஷயம்தெரியாதவர்களுமல்ல. பின்னே இந்த மாதிரிக் காரியங்கள் சாஸ்திர விருத்தங்கள் அவைகளைமீறி நாம் செய்தாலும் யாதொரு பயனும் ஏற்படாது. அதர்மத்தை யனுஷ்டித்தோமென்கிற பெயரும் அதினுலேற்படும் பாபத்தையும் நாமடையும்படி நேருமென்று கருதியே இதில் அவர்கள் பிரவேசிக்கவில்லை என்றேஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. அவர்கள் எப்பொழுதும் சாஸ்திரீயமான தர்மநெறிகளிலிருந்தும் அற்பமும் மாருமல் ராஜ்யபாரத்தை நடத்திவந்தபடியால்தான் வேறு ஒரு ராஜ்யத்திற்கும் ஏற்படாத பல ஜனங்களாலும் புகழக்கூடிய மிகவும்பெருமைவாய்ந்த தர்ம ராஜயம் என்கிற பெயர் இந்த ராஜ்யத்திற்குமாத்திரமேற்பட்டு இன்று வரையில் உலகில் எங்கும் கதிரவன்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் முன்னோர்களின் அனுஷ்டானத்தை நாமும் பின்பற்றினேம் என்று ஸமாதானம் சொல்லவும் இடமில்லை.

தீண்டாதவர்களுக்கு ஆலயப்பிரவேசத்தில் உரிமையளிக்கவேண்டுமென்று மகாராஜா அவர்களுக்கு அபிப்ராயமிருந்தபடியால் அவ்விதம் நடைபெற்றது என்பதும் உசிதமாகாது. மகாராஜனென்கிற பதவியையடைந்தவர்கள் எவரும் பகவானுடைய அம்சம் பொருந்தியவர்களென்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகையால் அவர்கள் விசேஷமகிமையுள்ளவர்கள். ஸ்வதந்திரமாய் ஒரு காரியத்தைச் செய்யச் சக்தியுள்ளவர்களென்று பொதுவாய் ஏற்பட்டிருந்தாலும் லோகக்ஷேமகரமான காரியங்கள், தர்மகாரியங்கள், பொது காரியங்கள் இவைமுதலான சில காரியங்கள் தமக்கு ஸொந்தமாயிருந்தாலும் தாமாகவே செய்வதற்கு அவர்களுக்கதிகாரமில்லை என்றே தெரிகிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில் தசரதர் ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேகம் செய்ய வேண்டுமெனக்கருதி, தம்மிடம் செய்யக்கூடிய சக்தியும் அதிகாரமும் அவருக்கிருப்பினும் அதைப் பெரிதாய் கருதாமல் பொது ஜனங்களுடைய அபிப்ராயத்தையும் அறிந்து தான் தீர்மானம் செய்யவேண்டுமென்று ஸபைகூட்டி ஸபையில் தமதபிப்ராயத்தைத் தெரிவித்து மிகவும்சந்தோஷத்துடன் கொடுக்கப்பட்ட அபிப்ராயங்களைப்பெற்றுப் பிறகு தான் பட்டாபிஷேகத்திற்கு யத்தனம் செய்தார் என்பதை யாவருமறிந்திருக்கலாம். தம் புதல்வருக்குக் கிரமமாய் செய்யவேண்டிய காரியத்திற்கே பொதுஜன ஸம்மதியை யபேக்ஷித்தாரென்ருல் வெகுகாலமாய் நடைபெருமலிருக்கும், புதிதாய் ஒருகாரியத்தை நடத்த வேண்டுமென்று தமக்குத் தோன்றினுலும் பொதுஜனங்களுடைய மனோபாவத்தை யறியாமல் திடீரென்று மகாராஜா அவர்கள் இந்த காரியத்தை நடத்த ஆரம்பித்தது சரியல்லவென்று தான் யாவரும் கருதக்கூடியதாயிருக்கிறது. நம் அரசாங்கத்திலும் பெரிய காரியங்களை நடத்தும்படி நேர்ந்தால் ஸபைகள் மூலமாகவோ கமிஷன் மூலமாகவோ பொதுஜனங்களுடைய அபிப்ராயங்களையறிந்து தான் பிறகு முடிவு செய்கிருர்களென்பதும் பிரஸித்தமே. ஆகையால் தம இஷ்டமிருந்தாலும் பொதுஜன ஸம்மதியைப் பெருமல் உத்திரவிட்டு அனுஷ்டானத்திற்கும் கொண்டுவந்திருப்பது ஆஸ்திகர்களுக்கு அதிகமான அதிருப்தியைத்தான் உண்டுபண்ணும்.

சாஸ்திரங்களுக்கும் சிஷ்டாசாரங்களுக்கும் தங்கள் முன்னோர்களுடைய அனுஷ்டானங்களுக்கும் ஆஸ்திகர்களுக்கும் இதர பொது ஜனங்களுக்கும் அற்பங்கூட ஸம்மதமில்லாத இந்த காரியத்தை நடத்தியதால் தீண்டாதவர்களை அவர்களுக்குத் தகாதகாரியத்தைச் செய்யும்படி ஏவி அதினுல் அவர்களை பாபத்திற்குள்ளாகும்படி செய்வதைத்தவிர அற்பமேனும் பயன் ஏற்படாதென்பதையும் இனி நிரூபிப்பாம்.

(தொடரும்)

மாம்பலம்.

உபந்நியாஸம்.

இவ்வூரில் நடைபெறும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரவர்களுடைய ஹைஸ்கூல் உபாத்தியாயர் சங்கத்தின் ஸெக்ரடரியவர்களுடைய ப்ரார்த்தனையின் பேரில் 12—2—37 வெள்ளிக்கிழமையன்று ஷை ராமக்ருஷ்ண ஹைஸ்கூலில் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக கவிரத்னம் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் 'ஒற்றுமை' என்ற விஷயத்தைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். அவ்வமயம் அந்த ஸ்கூல் உபாத்தியாயர்களனைவரும் மற்றுமுள்ள ஆஸ்திக ஜனங்களும் விஜயம் செய்திருந்தார்கள். சிறந்த மேற்கோள்களுடன் எளிய தமிழ்நடையில் பலரும் நன்கறியும்படி சிறப்பாக உபன்யஸித்தார்கள். ஸபையோர் அதனுல் மிக திருப்தியடைந்தார்கள். முடிவில் உபன்யாஸகருக்கு வந்தனம் கூறினதுடன் ஸபை பூர்த்தியடைந்தது.

எம். கணபதி சர்மா.

ஆத்தன்குடி.

ஸநாதனதர்ம மகாசபை.

தாது௵ மாசிமீ 29௳ வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு பிரம்மஸ்ரீ கல்யாணசுந்தர கனபாடிகள் தலைமையில் வி. ராமஸ்வாமி அய்யங்கார் ராமகீர்த்தனம் பாடியபின், மீனுக்ஷி சுந்தர வித்யாசாலை ஆங்கில ஆசிரியர் ஜி. சுப்பிரமண்ய அய்யர் மாணவர்களின் எதிர்காலம் என்பதுப்பற்றி பேசும்பொழுது மதசம்பந்தமான தத்துவத்தையும், இந்தியாவின் மஹத்வத்தையும், மாணவர்கள் நன்கு தெரிந்துகொள்ளவேண்டுமென்றும், சொற்பொழிவாற்றிய பின் எஸ். வெங்கட்டராம அவதானிகள் சிவராத்ரி மஹிமையை விரிவாக எடுத்துரைத்ததும், தலைவரவர்கள் முடிவுரை சொல்லும்பொழுது பாலர்கள் முதல்கொண்டு விருத்தர்கள் வரை மதத்தில் போதுமான நம்பிக்கை வைத்துக் கடைப்பிடித்தால்தான் இந்தியா முன்னேற்றமடையுமென்றும், அதுவே இந்தியாவிற்கு இன்றியமையாததென்றும் விரிவாக எடுத்துரைத்தார்கள். காரியதரிசியால் வந்தனோபசாரஞ்செய்யப்பட்டபின் ஸபையின் 4-வது ஆண்டுவிழா மங்களகரமாக நடைபெற வேணுமாய் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கப்பெற்றது.

காரியதரிசி.

தார்மிக மகா ப்ரசார திட்டம்.

அதர்மம் அபரிமிதமான அணிகாக்கோடு தனது குரூர ஸ்வரூபத்தை பஹிரங்கப்படுத்தும் காலத்தில் தார்மிகப்ரசாரம் துள்ளிக்குதித்துத் தனது பாதுகாப்பைச் செய்யாத காலமே இப்புண்ணிய பூமியில் கிடையாது என்பது சத்யம். இதற்கு நிதர்சனம் தற்காலம் பல இடங்களில் பொறுப்பு வாய்ந்த ஹிந்து மதத் தலைவர்கள் கோஷித்த தார்மிக வீர கர்ஜனையாகும். இது அகில பாரத வீர கர்ஜனையாயிருக்க வேண்டியிருக்க ஓர் அவசா நிமித்தம் தக்ஷிண பாரத வீர கர்ஜனையாயிற்று. ஏன்? சமயமறிந்தல்லவோ ரூடு போடவேண்டும். திருவாங்கூர் ப்ரகடனத்திற்கும் காங்கிரஸ்காரரின் சந்தைகளிடை மதப்ரகடனத்திற்கும் இடையில் ஓர் தார்மிக சுவர் போடவேண்டிய பொறுப்பை மதருவில் இடம், பொருள், ஏவல்அறிந்து செலுத்திய பண்டிதர்களுக்கு சனுதனிகள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிருேம். மதராஸ் பாருங்கள்! ராஜ்ய, சீர்திருத்தக் கோட்டை. அதை ஏற்கனவே நமது ஆசார்ய புருஷாள் சனுதனி கோட்டையாக மாற்றி விட்டார்கள். அதர்மத்தின் உயிராகிய அதர்ம எண்ணம் அதார்மிகர்களுடைய ஹ்ருதயத்தினின்றும் சிதறி அடிக்கப்பட்டு வருகின்றன. அதன் நிதர்சன ஒலி, பல நாஸ்திகப் பத்திரிகைகளின் மழுப்புதல், ஓலமிடுதல், மறைத்தல், திரித்தல் முதலான சேஷ்டைகளாலும், தேசீய சீர்திருத்தத் தலைவர்கள் விஷயத்திற்குத் தகுந்தபடி தங்கள் கக்ஷிவாதத்தை பலர் மனத்தில் நேர்வழியில் சொல்ல முடியாமல் பாமரரை ஏமாற்றும் ரீதியில் குறுகிய, சந்தேகத்திற்கு இடமான தர்மம் அதர்மம் இரண்டிற்கும் சாதகமாகத் தேன்றாறும் வழியில் அர்த்தம் கொடுக்கக்கூடிய வழியில் தங்கள் வாக்சாதுர்யத்தை இழந்த பெரும் நஷ்டத்தாலும் சகலரும் அறியலாகும்.

காங்கிரஸின் விபரீதபிரசாரம்.

காங்கிரஸ் தலைவர் என்றும் சீர்திருத்ததேவாரஜஸிம்மம் கூட சனுதனிகளை முட்டுக்கட்டைகளென்றும், ஹிந்து மதமென்பது சனுதனிகளது மூலகிரந்த அனுஷ்டானத்திற்கு விரோதமானதெதுவோ அதெல்லாம் என்றும், எனினும் உண்மையான மதங்கள் காப்பாற்றப்படுமென்றும், ஜீவனோபாயமே உண்மையான மதமென்றும், சாஸ்திரசம்மத மதம் அற்பமானதென்றும் காங்கிரஸ் கட்டளையை எல்லாத்துறைகளிலும் கையாள வேணுமென்றும் அபிப்பிராயப்படுகிருர். இந்தப் பேரபாயமே சனுதனி ப்ரசாரத்திற்கு அஸ்திவாரமாகக் இருக்கக் கடவது. மேலும் திருவாங்கூர் அடக்குமுறையை சுதந்திரப்ரியர்கள் ஆசிகூறி பொன்னூசியால் கண்ணைக் குத்திக்கொள்ளுகின்றனர். இவர்களுள் இரு காந்தியர்களும் உன்டென்பதை சனுதனிகள் எடுத்துக் காட்டாமல் இருப்பதற்கு இல்லை. என்னே! இவர் பிரஜா மத சுதந்தர தாகம்! பிறர் மத உணர்ச்சியை அவர்க்ரந்தங்களை ஜெயிக்காது ஜன சங்கை பலம் சட்ட சபை, மசோதா, ராஜ்யதேச்சாதிப்ரகடனம் அல்லது வேறு எந்த விதமான அடக்கு முறையோ அதனுலெல்லாம் தீவிரமாய் இருந்த இடம் தெரியாமல் சிதறியடிக்க வேண்டுமென்ற அதர்ம, அனுகரீக முறையை கையாளுகின்றனர். இந்த கவர்ன்மெண்டார் வேறு மதத்தினர். பிறர் மதவுணர்ச்சியைப்படி அடக்கக்கூடாதென்று நினைப்போர், எல்லாம் இன்று பார்த்து கேவலமாய் சிரித்துக் கொண்டிருக்கின்றனர். தார்மிகர்கள் ஆயுதம் எடுத்து யுத்தம் செய்யவில்லையே, ஆகையால் மனமும் மதமும் மாறிவிட்டனர் என்று ஸ்ரீமான் காந்தியாத்ரீகரே அன்று விளக்கிவிட்டு மதராஸ் போய் கும்பகோணத்தைப் பார்த்து தனக்கு ஓர் சனுதனி தலைவர் வசப்பமானதாகத் தப்பெண்ணத்தோடு பொக்கவாய் சிரிப்பு சிரித்துவிட்டு பணமுடிப்போடு தரித்திர நாராயணனுகப் போனுர். அந்த சனுதனித் தலைவர் தமது சம்சயத்தை பண்டித பரிஷத்தில் முடிவுபண்ணி ஆர்யதர்மத்தில் எழுதும் நன்னுள் கும்பகோணத்து யசஸை வெளிப்படுத்தும். ஆசாரியாளும் வருகிருர்.

சனுதனி வித்வத் சிகாமணிகளை ஏன் இந்த உண்மையான ஹிந்து ராஜீயத் தலைவர்கள் தங்கள பிரதிநிதிகளான சீர்திருத்த வீரர்களோடு சேர்த்து சம்வாதங்கள் நடைபெறச் செய்து தங்கள் சீர்திருத்த ஹிந்துமத நவீன புஸ்தகமெதுவோ அதையும் காண்பித்து பெருவாரியான ஓட்டுக் கொடுத்த ஹிந்துமத வாயில்லாப் பூச்சிகளுக்கு மத அறிவு மதப் பாதுகாப்பு இவைகளைப் புகட்டக்கூடாது? சனுதனிகளைக் கவனிக்காமல் புறக்கணித்தால் ஹிந்துமதம் ரக்ஷிக்கப்படுமாம்! அது எந்த ஹிந்து மதமோ! அந்த கிரந்தம் ஸ்ரீமான் நேருஜி எங்கிருந்து கொண்டுவந்தாரோ? எப்போது வெளியாகுமோ! ராஜீய நெருக்கடியில் மத விஷயம் அற்பமானது என்று சொல்லி சீர்திருத்த மதத்தை ஸ்தாபித்து அதுவே சுயராஜ்யமென்னலாம் என்று பார்க்கிருர்கள் போலும்!

சுய மதத்தைக் கபடமான முறையிலடக்கும் பிரமுகர்களை அன்னிய மதஸ்தர்கள் ஒருக்காலும் நம்பார், சேரார், பணியார், நேசியார் என்று நிச்சயமாகக் கூறலாம். டில்லி சபையில் பகவன்தாஸ் மசோதா ஒரு சாயபுவால் தாக்கப்பட்டது. ஜாதித்வம்சம்! ஹிந்து மதத்திற்கு விரோதம் என்று அந்த பிரதிநிதித்வம் வாய்ந்த முஸ்லீம் சகோதரர் கோஷித்தார். தர்மப்ரசாரபலம் இப்படியெல்லாம் வரும். ஹிந்து மதத்தை அடக்குதலே தற்போது தேசத்து அபாயமாகும். ராஜீய வாதிகளான அதார்மிகர்களுக்கு தேசத்தில் அதிக சக்தி வந்து அவர்கள் மதத்திற்கு பேரபாயத்தை விளைவிப்பார்கள் என்று சனுதனிகள் ஞானதிருஷ்டியால் நன்கு அறிந்திருக்கின்றனர். மத சம்ரக்ஷணம் கண்டிப்பாய் செய்தே தீருவர். எதையும் பொருட்படுத்தார். தெய்வ நம்பிக்கை, வேத நம்பிக்கை சாஸ்திர நம்பிக்கை, நேரான ப்ரசார நம்பிக்கை இவைகளை அடிப்படையாகக் கொள்வர். எதிரிகளின் ஸ்திரபுத்தியின்மை, முறணனப் போச்சுக்கள், தாராசாரம், மறைத்துக் கூறும் அவர் பத்திரிகைகள், பலவித புதிய அபாயக் கொள்கைகள், இவைகளை விளக்குவர். ஊரூராய் புசல் காற்ருய் ஓடி சந்தைக்கடைத் தேர்க் கூட்டம் போட்டு 'ஜோ' என்று சத்தமிட்டார்கள். இடம் காலம் நபர் அறிந்து தகுந்த ஔஷதம் கொடுப்பார், சத்சங்கங்கள் ஸ்தாபித்து மத அனுஷ்டானத்தை நிலை நாட்டுவர்.

சீர்திருத்த வாதிகளின் இறக்கம்.

பார்த்தீர்களா! சீர்திருத்த ராஜீய சட்ட சபை அபேக்ஷகாது மதவிரோதம் என்னும் புச்சத்தை சனுதனிகள் இழுத்து அதை அறுத்து "நாங்கள் மதவிரோதம் செய்யமாட்டோம். இதைத் தான் காங்கிரஸ் சபை கட்டளையிட்டிடும்" என்று வாயினுலாவது தற்காலிகமாவது பாதகண்டம் அதிரும்படி பண்டிட்ஜி முதல் பரம தாழ்த்தப்பட்ட காங்கிரஸ் உயிருள்ள பொம்மை வரை சிடுசிடுத்த குரலில் கதறவேண்டி வந்தது ஹிந்துப் பத்ரிகையும் (28-2-37) காங்கிரஸ்காரர் இனி இனி இதர பண்டித ரத்னங்களின் கொள்கைகளுக்கும் இடமளிக்கும்படி நடத்தல் வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறது.

இனி பாருங்கள்! சனுதனிக்கோஷ்டிகள் அணிவகுத்து பாதகண்டத்தில் அத்யத்புத வேலைசெய்யப்போகிறது. வேதம் கோஷிக்க, சாஸ்திரம் கர்ஜிக்க, ஆகமம் சீறிப்பாய, கீதை பாட, சாதுக்கள் தர்மம் அனுஷ்டித்து ப்ரசாரம் செய்ய, அதார்மிகர்கள் பிடிபட்டு ஞான ஸ்னானம் பெரும் பெறுமித வெற்றிவரும்! சாஸ்திரீய மனுதர்ம ஸ்வதர்ம சட்டசபையில் நூற்றுக்கு நூறு சனுதனிகள் கோஷிப்பர். அதையே ஞான சீலர்களான வாக்காளர் அனுசரித்துய்வர். ஆரவாரமும், அதர்மமும் சுவதர்ம சுயராஜ்யங் கூட சுதேசிகளால் சுதேசிகளிடமிருந்து பிடுங்கப்பட்ட அலங்கோலம் ஏற்படும்.

பிரசாரவேலைத் திட்டம்.

சனுதனிகளே! நீங்கள் வித்வத்சிகாமணிகள். பலதிறப்பட்ட பாஷா ஞானத்தோடும் சாஸ்திர நிரூபண நோட்டுகளோடும், பல கோஷ்டிகளாய் அதிசீக்கிரத்தில் புறப்படும் சமயம் வந்துவிட்டது. மடாதிபதிகள் ஆசிகூறி பிரதிநிதிகளை சுற்றுப்ப்ரயாணம் அனுப்ப காலம் வந்துவிட்டது. கோஷ்டிகளைத் திரட்டியனுப்புதல் மடங்களின் பொறுப்பல்லவோ? இக்காலத்திற்குதவுவதற்காகவல்லவோ திரிகால ஞானிகளான மகான்கள் மடங்கள் ஏற்படுத்தினுர். பணமும் மனுஷ்ய சகாயமும் வேண்டுமென்று மடங்களல்லவோ முன்னிலையில் நின்று சொல்ல வேணும். மத அபாயத்தை நீக்குதல் ஒன்றே மடங்களின் கடமையாதலால் ஹிந்து மத மத்யகமிட்டி பிரசார கோஷ்டியைத் திரட்டும் வேலைக்கு ஆளும் பணமும் தத்தம் வீதாசாரப்படி போடும்படி மடங்களைக் கேழ்க்கவேண்டும். பிறகுதான் அதிகப்படியான மனிதசகாயமும் பணமும் வரும். பிரசார வழியானது சாத்வீகம், நீதி பிரேமை முதலானதாயிருக்கும் விஷயங்கள். முதலில் பக்தி, தர்மம், ஆத்மசுகம், ஈசுவர கிருபை, வேதம், சாஸ்திரம் என்பனபோன்றவையாயிருந்து வரவர தற்கால அதர்மகண்டனங்களைச் செய்தல் வேண்டும், கதாப்ரவசனமூலம் அதர்மகண்டனம் செய்தல் முதலான வழிகளை அனுசரித்தல் பலனைத்தரும். ஏராளமான ஜனங்களுக்கு அதர்மப்ரசாரம் கிட்டாவண்ணம் மிக சமாதனத்துடன்பாதுகாப்பு அளித்து வரவேண்டும். துண்டுப்ரசுரங்கள் தூவப்படவேண்டும். சம்பளம் முதலான சௌகரியங்கள் கொடுத்து ஜில்லாவிற்கு ஒரு சிறந்த பண்டிதரும், கூட சில பொறுக்கத்தரமான வைதிக லௌகிகர்களையும் சேர்த்து அடக்கமான சில பொறுப்புள்ள கோஷ்டியை முதலில் ஸ்தாபித்தல் வேண்டும். அது ஊரூராய் பெரிய சபைகளும் பிரதிநிதிகளும் ஏற்படுத்தும், பிருதுகளோடு போகும் ஜயபேரிகைக் கொட்டும்! திக்விஜயம் செய்

குழந்தை

குடல் ஈரல் கட்டிகளுக்கு

ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள

மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்

மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.

ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி, பி சேறு.

டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,

20, வடக்கு வெளிவீதி, மதுரை

215177


அநாவசியமாக - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

ஒரேவாரத்தில் நீரழிவு குணமாகிவிட்டது.
தினசரி நாறுதடவை மூத்திரம் போனாலும் சரி ஓயாத தாகம் உண்டாகி வரக்ஷியானாலும் சரி இனி பயப்படவேண்டாம்.

மந்திரா சக்தி குளிகை.

நீரழிவினால் உண்டாகும், பெலஹீனம், இளைப்பு, நீரடைப்பு, அதிக மூத்திரம் ஈ எறும்பு மொய்த்தல் நீர்கடுப்பு, வெள்ளை, சீ வெள்ளை தந்திமேகம், அதிகப்பசி, கிறுகிறுப்பு, மயக்கம், சரீரவெளுப்பு முதலிய சகல வெட்டைரோகமும் நீரழிவும் பூரண குணமாகிவிடும். பந்தயம் போட்டு பரீக்ஷிக்கலாம்.

100 குளிகை ரூ. 10 50 குளிகை ரூ. 5

விலாசம்:— கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

யும்! சாமான்யமான பல அதர்மங்களையும் தப்பான மதக்ராந்த அபிப்பிராயங்களையும் சிதறியடிக்கவே பல காலப்ரவசனங்கள் வேண்டியிருக்கும். ஒவ்வொரு ஊரிலும் வாசகசாலைகள், தார்மிகப் பத்திரிகை அடிக்க வசதிகள், சங்கங்கள், புராண ப்ரவசன ஏற்பாடுகள், புரோஹிதப் பாதுகாப்பு, வைதிக சகாய நிதிகள், தார்மிக வித்யாசகாய நிதிகள், பிரசார சகாய நிதிகள், ஏற்படவேண்டும். இதற்கு பிரமுகர்களிடமும், ராஜாக்களிடமும் சாதுக்களான மதப்ரதிநிதிகள் தான் சென்று யாசித்தல் வேண்டும்.

அதர்மத்தில் முழுகிக்கிடக்கும் பூமாதேவியானவள் கதறுகிறாள். வேலையில்லாத் திண்டாட்டம், பசிப்பிணி, மதபயம், ஜாதித்வேஷ காரணந்தெரியாமை, சகோதரத்வம் சமத்வம் இன்னதென்று தெரியாமை, முதலிய பல முதலைகள் விழுங்கப் பார்க்கிறது. அதர்மம் இன்னும் கடுமையாகி உலகைப் படு ஆழத்தில் அமுக்கும் அபாயத்திலிருக்கிறபடியால் ஞான ரத்னத்தை சங்குடலத்தால் அதிசீக்கிரத்தில் வெளிக்கிளப்பி உலகை ரக்ஷிக்குமாறு சாதுக்களை வேண்டிக்கொள்வோமாக. சனுதினப் பத்திரிகைகளும் பாமர ரஞ்சகமான ருசிகர விஷயங்கள், கதைகள், ராஜ்யம், மதம் வியாபாரம், விளையாட்டு முதலான பலதிறப்பட்ட சகல விஷயங்களையும் சுருக்கி எழுதினதாய் படங்கள், பாட்டுகள், புண்யக்ஷேத்திர விஷயங்கள், தார்மிக உபன்யாசச் சுருக்கங்கள், முதல் எதையும் விடாமல் சுருக்கமாய் உலகத்தையே கண்ணாடியில்காட்டுவதுபோல இருக்கக்கடவது. அத்தகைய தினசரிக்கு அந்த தார்மிகர்களை முதலில் தேவையான அளவு இப்ரசாரத்தோடு சேர்த்தல் வேண்டும். முதலில் எல்லாரையும் கவரும் ரீதியில் பத்திரிகைப்ரசங்கம் இதுகள் செய்து பிரசித்தியடைந்துகொண்டே தர்மஸ்தாபனம்செய்யமுடியும். அதோடு தெய்வீகத் தொண்டர் படைத் திரட்டி உற்சவ காலங்களில் அநேக பெரிய இடங்களிலாவது தர்மவிசாரம். பலவித சாகாயங்கள் தர்மகோஷ்டி என்ற பெயரால் செய்தல் வேண்டும். பல பெரிய பாடசாலைகளிலும் பெண் சங்கங்களிலும் பொது தர்ம பிரவசனம் பண்டிதர்கள் செய்தல் வேண்டும். முதலில் விஷயாலோசனை பண்டித பரிஷத் ஒன்று உத்யோக முறையில் நியமிக்கப்பட வேண்டும். அதன் உத்திரவை கிளைச்சங்கங்கள் கையாளும். இவ்வாறு வரும்போது அதார்மிகக் கோஷ்டிகளை ஜயித்தவராக ஆவோம். பிரசாரம் ஆரம்பமானால் போதும். தொண்டர்கள் ஆங்காங்கு சேருவர். நிதி குவியும், அன்பும் ஆதரவும் எவ்வகையிலும் ஏற்படும். பிரமுகர்கள் முன்னிலையில் நின்றால் சிஷ்யகோஷ்டிகள் எழுந்து கூடுவர். தர்மம் எதுவோ அதைச் செய்வர். பாரதத்தாய் ஆத்மசுதந்திரமடைவள். பசிப்பிணி விலகும். மதப்ரசாரம் போல் பெயர் வைத்துக்கொண்டு பல பொய் பிரசாரங்கள் வலுத்து வருகின்றன. அப்பிரசாரகர்களில் பலர் நல்லோர். பூர்ண பாண்டித்ய வித்வத்கோஷ்டிகளின் சகாயமில்லாமலும் அப்படியிருக்கின்றனர். இனி இந்தவித அதர்மத்தை பாரத தர்மஸ்வரூபமாதா பொறுத்திராள். வித்வத் கோஷ்டிகளை ஏவுகிறாள். இதைவிட ஆபத்தானகாலம் வேறில்லை என்று பண்டித ரத்னங்களும் சாதுக்களும் வழிகாட்டுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்வோமாக.

தெய்வீகத் தொண்டன்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

2—3—37உ செவ்வாய் மாலை 6மணிக்கு சங்கக்காரியாலயத்தில் குறள் கம்பராமாயண வகுப்புகள் நடந்தன. 'எண் பொருளவாக' 'உலகந்தழீஇய' 'எவ்வதுறைவது' 'அறிவுடையார்' என்ற குறட்பாக்களும், 'மத்துமந்தரம்' 'யாமு மவ்வயின்' என்ற இரு ராமாயணப்பாசுரங்களும் நன்கு விளக்கப்பட்டன.

3—3—37உ புதன் மாலை 6மணிக்கு இராயப்பேட்டை அய்யாமுதலிதெரு 6-ம் நம்பர் இல்லத்தின் மேன்மாடியில் காரியதரிசி 'திருப்பாணாழ்வார் வைபவம்' என்ற விஷயத்தை அருமையாக உபந்யசித்தார்.

4—3—37 வியாழன் மாலை சங்கக் காரியாலயத்தில் தமிழ் வகுப்புகள் நடந்தன. 'அஞ்சுவதஞ்சாமை' 'எதிரதாக்காக்கும்' என்ற குறட்பாக்களும், மலையிடுங்கினர் என்ற கம்பராமாயணப்பாசுரமும் தெளிவுற போதிக்கப்பட்டன.

9—3—37உ செவ்வாயன்று சங்கக்காரியாலயத்தில் வகுப்புகள் நடக்க அறவுடையாரெல்லாம் என்ற குறளும், குற்றங்கடிதல் என்ற தலைப்பின் விவரணமும் அதிகார அடையும், அரிவர்க்கவிரிவும், 'செருக்குஞ்சினமும்' என்ற குறட்பாவும், 'திறல்கொளாமையாய்'; 'இறந்து நீங்கின யாவையும்' வெருவு மாலமும்' என்ற பாசுரங்களும் செவ்வனே தெளிவிக்கப்பட்டவுடன் அம்ருதமதன ஸ்வாரஸ்யமும் விளக்கப்பட்டது.

10—3—37உ புதனன்று மாலை இராயப்பேட்டையில்நடந்த திருப்பாணாழ்வார் வைபவ உபந்யாசத்தில், முதலாழ்வார்கள், குலசேகரப்பெருமாள், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆழ்வார் திருமகளார், திருமழிசைப்பிரான், திருமங்கை மன்னன் இவர்கள் ஒவ்வொருவரிலும் பாணநாதன் விலக்ஷணராகின்ற நிலையை நன்கு விஸ்தரித்துக்கூறப்பட்டது.

11—3—37உ வியாழக்கிழமை மாலை 6மணிக்கு ஸ்ரீ உபவே பெரும்பாக்கம் கிருஷ்ணமாச்சார்ஸ்வாமி திருப்பல்லாண்டும், கண்ணிநுண் சிறுத்தாம்பும் சந்தை சொல்வித்தார். இனி அத்யயன தினங்களில் மாலை 6மணி முதல் அரைமணிநேரம் திவ்யப்ரபந்த வகுப்புகள் நடைபெறும். தமிழ் வகுப்புகளும் நடந்தன. 'இவறலுமாண்பிறந்த' 'தினைத்துணையாம்' என்ற குறட்பாக்கள் உணர்த்தப்பட்டதுடன் சென்றதினத்தில் நடந்த ராமாயணப் பாசுரங்கள் ஓதப்பட்டன. அன்று வந்திருந்த சங்கத்தலைவர் திருப்பாற்கடல் கடைதல் என்ற தன் ஸ்வாபதேசத்தை விளக்கியும், கம்பர் வான்மீகியை அடியொற்றிப்போகும் அழகை நிரூபித்தும், குறளைக்கம்பர் கையாளும் திறமையையும் பாக்கப்பேசி அழகாக உபந்யசித்தார். வகுப்பு இரவு 8-50மணிக்கு இனிது முடிவடைந்தது. தினந்தோறும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும் நடைபெறும்

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அக்கயதர்மம்

25 - 3 - 1937

4	ம
22	12

215178

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஞு பங்குனி-மீ 12உ 1937-ஞு மார்ச்-மீ 25உ | வ 12

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானே[illegible]

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வரிமசோதாவுக்கு வைஸ்ராய் விசேஷாதிகாரம்.

கார்டு விலை குறையாது.

இந்திய சட்டசபையில் பிரதி வருஷமும் நடப்பதுபோல் இவ்வருஷமும் வரிமசோதாவைப் பற்றி ஸம்பிரதாய சடங்குப் பேச்சுக்கள் நடந்தன. சர்க்கரை எதிர்வரியையும் கார்டு விலையைக் குறைக்கவேண்டுமென்கிற தீர்மானத்தின்மீது விவாதம் நடந்து அந்த திருத்தங்கள் நிறைவேறின. ஆயினும் வைஸ்ராய் தமது விசேஷ அதிகாரத்தை ப்ரயோகித்து மேற்படி தீர்மானங்களை நிராகரித்து இப்போதுள்ள மாதிரியிலேயே வரிமசோதா சட்டமாக வேண்டுமென்று சிபார்சு கொடுத்துவிட்டார். மூன்று வருஷங்களாக இந்தமாதிரி விசேஷ அதிகாரம் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

உத்யோகம் ஏற்கும் தீர்மானம்.

அ. இ. கா. கமிட்டியில் அங்கீகாரம்.

கவர்னர்கள் விசேஷாதிகாரங்களை உபயோகிக்கும்விஷயமாக திருப்திகரமானவுறுதிமொழியளித்தல் காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்கலாமென்று காங்கிரஸ்காரியகமிடி செய்த தீர்மானம் அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியிலும் நிறைவேறிவிட்டது. வெகு பேர் இதை எதிர்த்துப் பேசினர்கள். பண்டித மாளவியாஜி கூட உத்யோகமேற்பதை எதிர்த்துப் பேசினர்.

670-பேர்கள் ஸங்காத மரணம்.

உபாத்தியாயர்— மாணவர்கள் கதி.

நியூலண்டன் என்றவிடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தின் சமீபத்தில் ஒரு எஞ்ஜினின் பாய்லர் வெடித்த காரணமாக பள்ளிக்கூடக் கட்டிடம் தாக்கப்பட்டு அதிலுள்ள உபாத்தியாயர்கள் மாணவர்களில் 670-பேர்கள் மரணம் அடைந்தார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில் 1400-பேர்கள்வரையில் இருந்தார்களாம் இறந்தவர்களில் பெரும்பாலோர் சிறியவர்கள்.

நிலவரியைக் குறைப்பார்களாம்.

காங்கிரஸ் மந்திரிகளின் திட்டம்.

காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டால் முதல் முதலாக நிலவரியை நூற்றுக்கு 25-வீதம் குறைப்பதற்குச் சட்டம் செய்யப்படுமென்றும், அத்தகையவுத்திரவைக் காங்கிரஸ்கார்ய கமிட்டி பிறப்பிக்குமென்றும் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் சட்டசபை மெம்பர்களின் பிரதிக்ஞை

டெல்லியில் கூடிய காங்கிரஸ் சட்டசபை மெம்பர்களின் மஹாநாட்டில் கீழ் காணப்படும் பிரதிக்ஞையொன்று மெம்பர்களால் செய்துகொடுக்கப்பட்டது. அந்த ப்ரதிக்ஞையை பதம் பதமாக நேருஜி வாசிக்க, அதை மெம்பர்கள் திருப்பி ஓதினர்கள். இந்த வாசகமடங்கிய சீட்டில் அவர்கள் கையெழுத்துப் போட்டார்கள்.

பிரதிக்ஞை வாசகமாவது:—

"அகில இந்திய சட்டசபையினர் மஹாநாட்டுமெம்பராகிய நான் இந்தியாவின் ஸேவைக்கென என்னை அர்ப்பணம் செய்து கொள்ளுகிறேன். சட்டசபைக்குள்ளேயும் வெளியிலும் நான் ஸேவை செய்து ஜனங்கள் வறுமைப்பட்டிருப்பதையும் சுரண்டப்படுவதையும், நிவர்த்தி செய்வேன். காங்கிரஸின் லக்ஷ்யங்களை நடத்திவைக்கவும் இந்திய மஹாஜனங்கள், கஷ்டத்திலிருந்து விடுபடுவதற்காகவும் நான் பாடுபடுவேன்."

ஸுபாஷ் போஸ் விடுதலை.

பந்தோபஸ்து கைதியாக வைக்கப்பட்டிருந்த ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸ் எவ்வித நிபந்தனையுமின்றி சிலதினங்களுக்கு முன் விடுதலை செய்யப்பட்டார். இவருடைய சரீர அசௌகர்யம் இன்னும் நீங்கவில்லை. டாக்டர்களுடைய ஆலோசனையின்மேல் இவர் தற்காலம் பொதுக்காரியங்களில் கலக்கமாட்டார். பலவிடங்களிலிருந்து இவருக்கு ஸந்தோஷச் செய்திகள்வந்து கொண்டிருக்கின்றன.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

பக்தி.

(நாகூர் N. நாராயணசாமி அய்யர்)

எண்பத்திநான்கு லக்ஷம் முகபேதங்களாயுள்ள சராசரவர்க்கங்களில் இம்மா நிலத்தில் மானிடப்பிறவியை பெறுவது முன்ஜமத்தில் செய்த நற்கர்மத்தின் பயனேயாகும். இதற்குகாரணம் நல்லது கெட்டது பாபம் புண்யம் என்கிற பேதங்களை பகுத்தறியும் புத்தியை பெற்றிருப்பதை விட்டு வேறு யாதும் கூற முடியாது. இத்தகைய சிறந்த அறிவுடைய நாம் பந்த நிவர்த்தியும் பரமானந்த ப்ராப்தியுமடைதல்வேண்டும். அங்ஙனமிருக்க ஆத்மலாபத்தையடைய வழிதேடாது விஷயானந்தங்களில் ஈடுபட்டு வாழ்நாளை வீணுககழித்து அனவரதமும் ஜனனமரணமென்னும் ஸம்ஸார ஸாகரத்திலாழ்ந்து துன்புறுவது அறிவீனமன்றோ? ஆதலால் தன்னை அறிந்து அனர்த்த நிவர்த்தியும் ஆனந்த ப்ராப்தியுமடைவதற்கு முக்கிய சாதனங்களாயுள்ள சுருதி, ஸ்மிருதி, இதிஹாச புராணுதிகள் பிரதிபாதிக்கும் வழியிலொழுகுவது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததென்பதை யாவரும் அறிந்ததேயாகும். அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நான்களுள் வீடு அதாவது மோக்ஷம் ப்ரமபுருஷார்த்தமாகும். இதனை யடைவதற்கு பிராணிகளை கரையேற்ற வல்லவரான பரமேஸ்வரனிடம் பக்தியை செலுத்தி அன்னவரின் அருளுக்கு உரித்தானுலல்லது வேறு எவ்வகையாலும் முடியாதென்பது திண்ணம். அப்பரமேஸ்வரனும் பக்தர்களின் அனுக்கிரஹார்த்தமாகவே தியானிக்கத்தக்க ஸகுணஸ்வரூபத்தை ஸ்வீகரித்துக்கொண்டு எந்த பக்தன் தம்மை உபாஸிக்க முன் வருகின்ருனே அவனுக்கு நித்திய நிரதிசயமான பேரின்பத்தை அளிப்பேமென்றுகருணையுடன்பக்தர்களை எதிர்பார்த்த வண்ணமாகவே பிரகாசித்து வருகின்ருர். அப்பேர்பட்ட பரமதயாநிதியான பகவானிடம் அந்தரங்கமான அன்பை செலுத்தி மனம் வாக்கு காயம் என்னும் மூன்று கரணங்களாலும் வழிபடவேண்டும். கடவுளிடம் அன்பு செலுத்தப்படுவதானது எவ்விதம்? என கேழ்வி எழின் அது விஷயத்தில் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் கூறிய அரிய மொழிகளைஈண்டு குறிப்பிடுகின்ரும். சேமித்துவைத்திருக்கும் தன் பணத்திடம் ஒரு லோபிக்கு இருக்கும் ஆசை,பற்றுள்ளவர்கள் உலகப்பொருள்களிடம் கொள்ளும் ஆவல், தனது கணவனிடம் நடுகற்புடைய ஸ்திரிக்கு இருக்கும் அன்பு, இவை ஒருங்கு சேர்ந்தாற்போன்ற தீவிரமான அன்பு செலுத்தவேண்டுமென்பதே. பக்தியானது பாகிய பக்தி யென்னும் அநந்நிய பக்தி என்னும் ஏகாந்த பக்தியென்னும் மூவகைப்படும், அவற்றுள் பாகிய பக்தியாவது.

1. சிரவணம். கடவுளின் அநந்த கல்யாண குணங்களைகேட்டு சந்தோஷித்தல்.

2. கீர்த்தநம். ஸ்வர சாஹித்யங்களோடு கடவுள் குணனுபூதிகளை பாடுதல்.

3. ஸ்மரணம். பகவானுடைய அநந்த திருநாமங்களை ஸதா ஜபித்தல்.

4. பாதஸேவனம். பகவானுடைய திருவடி கமலங்களை சேவித்தல்.

5. அர்ச்சனம். கடவுளுடைய திருவடியில் பத்திர புஷ்பாதிகளால் பூஜித்தல்.

6. வந்தநம். பகவானை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தல்.

7. தாஸ்யம். கடவுளுக்கு தாஸபூதனுயிருத்தல்.

8. சக்யம். கடவுளிடத்தில் அன்பு பாராட்டியிருத்தல்.

9. ஆத்ம நிவேதனம். தேகாதி யாவற்றையும் கடவுளுக்கு சமர்ப்பித்தலாம்.

அநந்ய பக்தியென்ருல் மானவமானங்களை விட்டொழிந்து அஸ்வம், சண்டாளன், பசு, கழுதை, நாய் முதலிய சகலமும் கடவுள் சொரூபமாக வெண்ணியவற்றின் கண் அதிக பிரீதியுடையவருகி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதுடன் பகவந்நாம சங்கீர்த்தனங்களை செய்வித்தல்.

ஏகாந்த பக்தியென்ருல் சகல பூதங்களிடத்துமிருக்கிற பகவானை அபேதமாகவறிந்து பூஜித்தல். இதில் பாகிய பக்தி பரோக்ஷ ஞானத்திற்கும், அநந்யபக்தி அபரோக்ஷ ஞானத்திற்கும் ஏகாந்தபக்தி சத்ரூபமான பரப்பிரம்மத்தையும் சித் ரூபிணியான பரப்பிர்ம சக்தியையும் சந்திர சந்திரிகைபோலவொன்றேயென்கிற நிச்சய ஞானத்தாலுண்டாகிய நித்தியானந்தத்தை அனுபவிப்பதற்கு காரணமாகும். ஆகவேபெறுதற்கரியமானிட ஜன்மாவை எடுத்துள்ள நாம் ஜன்ம சாபல்ய மடையவேண்டுவேண்டுமானுல் பவசாகரம் என்று சொல்லப்படும் இந்த சம்சார சாகரத்தை தாண்டவேண்டுமானுல் பக்தி என்ற ஓடத்தினுலல்லாது வேறு எவ்வகையாலும் தாண்ட இயலாது.

ஆகவே நாம் நமது உயர்வை உணர்ந்து நீதி நூட்களாலும், சான்ருேர்களாலும் செய்யவேண்டியன என விதிக்கப்பட்டவற்றை செய்து, செய்யக்கூடாதெனவிலக்கியவற்றை நினைத்தலுமின்றி விலக்கி என்றும் தெய்வ நிச்சியம் உள்ளவர்களாய் பிறர்க்கு பயன் கருதாத உபகாரிகளாயிருந்து அனைத்து ஜீவ கோடிகளிடத்தும் அன்புபூண்டு இறுமையில் வாழ்ந்து மறுமையில் ஆண்டவன் திருவருளை பெற முயல்வேண்டும். பக்தியின் மகிமை, அவற்றை செய்யவேண்டிய கிரமம் முதலியனவற்றை அடுத்த சஞ்சிகையில் ஆராய்வோம்.

ஸிம்ஸன் விவாஹத்துக்கு ஆக்ஷேபம்

வாபீஸ் பெறப்பட்டது.

மாஜி எட்வர்ட் அரசர், மிஸஸ் ஸிம்ஸனுக்காக ராஜ்யம் துறந்தும், அவளுடைய விவாகரத்து வழக்கு ஒழுங்காக முடிவு ஆகாதிருந்ததால் ஸங்கடம் ஏற்பட்டது.

மிஸ்டர் ஸ்டீபன்ஸ் என்பவர், மிஸஸ் ஸிம்ஸனுக்கு விவாகரத்து அனுமதிக்கக் கூடாதென ஓர் ஆக்ஷேப மனுவைப் போட்டிருந்தார். இந்த ஆக்ஷேபமனுவை நிராகரிக்க வேண்டுமென்று கின்ஸர்கோமகனின் சார்பாக ப்ராக்டர் ஒரு மனுவை தாக்கல் செய்தார். இதன் பயனுல் மிஸ்டர் ஸ்டீபன்ஸ் என்பவர் தமது ஆக்ஷேப மனுவை வாபீஸ் வாங்கிக் கொண்டார். இனி ஸிம்ஸனை மாஜி அரசர் மணக்க எவ்விதத்தடையுமில்லை.

மூன்று ஸ்திரீகளின் தற்கொலை.

விவாஹமாகாததுகாரணம்.

சேத்தூர் ஜமீனை அடுத்த புனல் வேலி கிராமத்தில் தேவர் வகுப்பைச் சேர்ந்த 3-சகோதரிகள் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்களாம். இம்மூவருக்கும் முறையே 20, 16, 14-வயது ஆகிறது. இவ்வளவு வயது ஆகியும் விவாகம் நடக்காததாலும், பெற்றோர்கள் ஏழைத்தனத்தால் விவாகம் செய்துவைக்கமுடியாமல் கஷ்டப்படுவதாலும் இவர்கள் தற்கொலை செய்துகொண்டனராம்.

பாரிஸில் ராஜீயக்கக்ஷிக் கலஹம்.

6-கொலை 200-பேர்களுக்குக் காயம்.

பிரான்ஸின் தலைநகராகியபாரிஸில்பாட்லிஸ் கக்ஷியைச் சேர்ந்தவர்களுக்கும், அவர்களுடைய எதிரிகளுக்கும் பலத்த சச்சரவு ஏற்பட்டு பெரிய கலகமாக முடிந்தது. ஒரு கக்ஷியாரின் பொதுக்கூட்டத்தை மற்ருெரு கக்ஷியார் கலைக்க முயற்சித்தன் காரணமாகவே இந்தக் கலகம் ஏற்பட்டது 6-பேர்கொல்லப்பட்டும், 200-பேர் காயமடைந்தும் போனுர்கள்.

முஸோலினியின் தேக பலம்.

சாராயம், காப்பி, மாமிசம், சாப்பிடுவதில்லையாம்.

இத்தாலிய ஸர்வாதிகாரியான முஸோலனி நல்லதேகபலமும் ஆரோக்யமும்பெற்று சுகமாய் வாழ்வதற்குக்காரணம் என்னவென்பதை அவரே வெளியிட்டிருக்கிருர். தாம் காபி, தேயிலை, மாம்ஸம், சாராயம் முதலியவைகளை உபயோகிப்பது வழக்கமில்லையென்றும், சுருட்டுக் குடிப்பதையும் வெகுகாலமாக நிறுத்தி விட்டதாயும், தினமும் சிறிதுநேரம் தேகப்பயிற்சி செய்வது வழக்கமென்றும் மேற்கண்ட காரணங்களாலேயே தமது தேகம் ஆரோக்யத்துடனிருந்து வருவதாயும் அவர் சொல்லுகிருர்.

வங்காள கவர்னராக பம்பாய் கவர்னரின் மாற்றம்.

பம்பாய் கவர்னராய் இருந்துவரும் லார்டு பிராபோர்ன், ஸர்ஜான் ஆண்டர்ஸனுக்குப் பதிலாக வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிருர். பம்பாய் கவர்னர் பதவிக்கு இந்தியா உதவி மந்திரியாக இருந்துவரும் மிஸ்டர் பட்லர் நியமிக்கப்படலாமென்று வதந்தி உலாவுகிறது.

சிதம்பரம் கோவில் தகாறு.

ஹைகோர்ட்டின் தடை உத்திரவு.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜர்கோவில், தீக்ஷிதர்களுக்குச் சொந்தமென்றும் பொதுக்கோவில் அல்லவென்றும் அவர்களுடைய கக்ஷி. சென்னை தேவஸ்தான போர்டார், அது பொதுக் கோவில்தானென்றும் அதன் நிர்வாகத்தை போர்டார் மேற்பார்வை செய்ய அதிகாரம் உண்டென்றும் வாதித்தனர். ஜில்லாகோர்ட்டில் நடந்த வழக்கில் தீக்ஷிதர்களுக்கு விரோதமாக தீர்ப்பு செய்யப்பட்டது. அதன் மேல் அவர்கள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து, கேஸ் முடியும் வரை போர்டார் எவ்வித நடவடிக்கையும் செய்யக்கூடாதென்று ஓர் தடை உத்திரவு வாங்கியிருக்கிருர்கள்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி

முடுக்குத்தெரு, கும்பகோணம்.

எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சரஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.

R.Ramaswami Iyengar, Proprietor

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(25—2—37 தொடர்ச்சி.)

1. புன்சிரிப்பை வெண்ணிலவுக்கு ஒப்பிடப்படுவது வழக்கமாகையால் அது வெளுப்பான நிறத்தோடிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. அம்பிகையினுடைய முகமாகிய சந்த்ரனிடமிருக்கும் புன்சிரிப்பாகிற வெண்ணிலவானது ஸாமான்யமான சந்த்ரனின் நிலவைவிட எத்தனையோ மடங்கு ச்ரேஷ்டமானதென்பதாக 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்மித ஜ்யோத்ஸ்ணு ஜாலம் தவ வதன சந்த்ரஸ்ய பிபதாம்
சகோராணும் ஆஸீத் அதிரஸதயா சஞ்சுஜடிமா |
அதஸ்தே சீதாம்சோ: அம்ருத லஹரீம் ஆம்ல ருசய:
பிபந்தி ஸ்வச்சந்தம் நிசி நிசி ப்ருசம் காஞ்ஜிகதியா ||

2. இங்கு அம்பிகையைப் பலவிதமாக வர்ணித்திருப்பது போல் ஆசார்யாளும் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிருர்கள்.

'அராளா கேசேஷு ப்ரக்ருதிஸரளா மந்தஹஸிதே
சிரீஷாபா சித்தே த்ருஷதுபல சோபா குசதடே |
ப்ருசம் தன்வீ மத்யே ப்ருதுருரஸிஜாரோஹ விஷயே
ஜகத்த்ராதும் சம்போர் ஜயதி கருணு காசித் அருணு ||'

21 புரத: கதா நு கரவை
புரவைரி விமர்த புளகிதாங்கலாதாம் |
புனதீம் காஞ்சீதேசம்
புஷ்பாயுத வீர்ய ஸரஸ பரிபாடீம்||

புரவைரி விமர்த்த-(புரங்களை யெரித்த) பரமசிவனுடைய காடாலிங்கனத்தினுல், புளகிதாங்கலதாம்—புளகமடைந்த சரீரத்தையுடையவளும், காஞ்சீதேசம் புனதீம்—காஞ்சீபுரியை பாவனமாகச் செய்பவளும், புஷ்பாயுத வீர்ய—மன்மதனுடைய ப்ரபாவத்தின், ஸரஸ பரிபாடீம்—அழகான முறையின் ஸ்வரூபமாயிருப்பவளுமான ஸ்ரீ காமாக்ஷியை, புரத:—என் முன்பாக, கதா கரவை நு—எப்போது தான் இருக்கச்செய்வேனே!

1. அதாவது, அவ்விதமாயிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியை தனக்கு எப்போது பார்க்கக்கிடைக்குமோ என்று சொல்லுகிருர்.

22 தனிமாத்வைத வலக்னம்
தருணுருண ஸம்ப்ரதாய தனுலேகம் |
தடஸீமனி கம்பாயா:
தருணிம ஸர்வஸ்வம் ஆத்யம் அத்ராக்ஷம்||

தனிமாத்வைத வலக்னம்—மிகவும் மெலிந்ததான இடுப்பையுடையதும், தருணுருண ஸம்ப்ரதாய—ஸரியான சிகப்பு நிறத்தை வழக்கமாக உடைய, தனுலேகம்—மெல்லிய சரீரத்தோடு கூடியதும், தருணிம ஸர்வஸ்வம்—யௌவனமே நிறம்பியுள்ளதுமான, ஆத்யம்—ஆதி பரம்பொருளை, கம்பாயா: தடஸீமனி—கம்பாநதியின் கரையில், அத்ராக்ஷம்—பார்த்தேன்.

23 பௌஷ்டிக கர்ம விபாகம்
பௌஷ்பசரம் ஸவிதஸீம்னி கம்பாயா: |
அத்ராக்ஷம் ஆத்தயௌவனம்
அப்யுதயம் கிஞ்சித் அர்த்தசசிமௌளே:||

பௌஷ்பசரம்—(மன்மதனுடையதான) காமத்தை, பௌஷ்டிக கர்ம விபாகம்—புஷ்டியாக ஏற்படச்செய்வதும், ஆத்த யௌவனம்—யௌவனம் நிறைந்ததும், அர்த்தசசிமௌளே:—அர்த சந்த்ரனை சிரஸில் தரித்தவரான ஏகாம்ரநாதருடைய, கிஞ்சித் அப்யுதயம்—ஏதோ ஒரு (வர்ணனையிலடங்காத) மேன்மையாயிருப்பதுமான மூர்த்தியை, கம்பாயா:—கம்பாநதியுடைய, ஸவிதஸீம்னி—கரையின் ப்ரதேசத்தில், அத்ராக்ஷம்—பார்த்தேன்.

24 புண்யா காபி புரந்த்ரீ
புங்கித கந்தர்ப்ப ஸம்பதா வபுஷா |
புலினசரீ கம்பாயா:
புரமதனம் புளக நிசுளிதம் குருதே||

கம்பாயா: புலினசரீ—கம்பாநதியின் மணல் திட்டுகளில் ஸஞ்சரிப்பவளும், புண்யா புரந்த்ரீ—புண்யம் நிறைந்த க்ருஹிணியாயுமிருக்கும், காபி—வர்ணிக்கமுடியாத ஒருவள், புங்கித கந்தர்ப்ப ஸம்பதா—மன்மதனுடைய ஸம்பத் நிறைந்ததான, வபுஷா—தன் சரீரத்தினுல், புரமதனம்—முப்புரங்களை யெரித்தவரான பரமசிவனை, புளக நிசுளிதம்—மயிர்க்கூச்சல் நிறைந்தவராக, குருதே—செய்கிருள்.

1. புலின மென்பது நதிகளிலிருக்கும் மணல் திட்டைக் குறிப்பதுடன் அவற்றின் கரையையும் குறிக்கும்.

2. புரந்த்ரீ என்ருல் வீட்டிலிருக்கும் ஜனங்களைத் தாங்கும் ஸுமங்கலிஸ்த்ரீ அல்லது, உயிருடனிருக்கும் பதி புத்ரர்களையுடைய (ஸுமங்கலி) ஸ்த்ரீ என்று அர்த்தம்.

25 ஸம்ச்ரித காஞ்சீ தேசே
ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத் உத்தம்ஸே |
ஸம்வின்மயே விலீயே
ஸாரஸ்வத புருஷகார ஸாம்ராஜ்யே||

ஸம்ச்ரித காஞ்சீதேசே—காஞ்சீபுரியை அடைந்ததும், ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத் உத்தம்ஸே—சந்த்ரனை சிரோபூஷணமாயுடையதும், ஸாரஸ்வத புருஷகார ஸாம்ராஜ்யே—வாக்கினுடைய ஸாமர்த்தியத்தைப்பற்றிய ஸாம்ராஜ்யத்தோடு கூடியதும், ஸம்வின்மயே—ஞான ஸ்வரூபமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியிடத்தில், விலீயே—நான் லயித்திருக்கிறேன்.

1. தாம்ரஸ புஷ்பமானது பகலில் மலர்ந்து இரவில் மூடுவதினுல் அதற்கு ஸூர்யன் மித்ரனுகவும் சந்த்ரன் சத்ருவாகவுமிருப்பதாகச் சொல்வது கவிகளின் ஸம்ப்ரதாயம். அதையொட்டி இங்கு சந்த்ரனை ஸரஸிஜ தௌர்பாக்யனென்றும், அவன் அம்பிகையினுடைய உத்தம்ஸமாக விளங்குவதால் 'ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத் உத்ரம்ஸே' என்று அம்பிகையை வர்ணிக்கப்பட்டது.

2. புருஷகாரமென்ருல் வீர்யம், ஸாமர்த்யம், பௌருஷம் என்று அர்த்தம். அம்பிகை ஸர்வ வித்யா ரூபிணியாயும் வர்ணமயியாகவும் இருக்கிறபடியால் வாக்கின் ஸாமர்த்யத்தைப்பற்றிய ஸாம்ராஜ்யத்தோடிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. அம்பிகையின் உபாஸகர்கள் புருஷ ரூபமடைந்த ஸரஸ்வதீ தேவிமாதிரி ஆகிவிடுவதாகச் சொல்லப்படும். அம்பிகையின் பாதோதகத்திற்கே இவ்விதமான வாக்விலாஸத்தைக்கொடுக்கும் மஹிமையுண்டென்பதாக

'கதா காலே மாத: கதய கலிதாலக்தகரஸம்
பிபேயம் வித்யார்த்தீ தவ சரண நிர்ணேஜன ஜலம் |
ப்ரக்ருத்யா மூகானுமபி ச கவிதா காரணதயா
கதா தத்தே வாணீ முக கமல தாம்பூல ரஸதாம் ||'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான பலனை யுத்தேசித்துச் செய்யப்படும் உபாஸனு மார்க்கங்களுக்கு ஸாரஸ்வத ப்ரயோகங்களென்று பெயர்.

26 மோதித மதுகர விசிகம்
ஸ்வாதிம ஸமுதாய ஸார கோதண்டம் |
ஆத்ருத காஞ்சீ கேலனம்
ஆதிமம் ஆருண்யபேதம் ஆகலயே||

மோதித மதுகர விசிகம்—வண்டுகளுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும் (புஷ்ப) பாணங்களையுடையதும், ஸ்வாதிம ஸமுதாய—தித்திப்பெல்லாம் சேர்ந்து, ஸார கோதண்டம்—ஸாரமாயிருக்கும் (இக்ஷு) கோதண்டத்தையுடையதும், ஆத்ருத காஞ்சீ கேலனம்—காஞ்சீபுரியில் விளையாடுவதை ஆதரித்ததும், ஆதிமம்—எல்லாவற்றிற்கும் ஆதியாயிருப்பதுமான, ஆருண்யபேதம்—சிவந்ததொரு மூர்த்தியை, ஆகலயே—தியானிக்கிறேன்.

27 உரரீக்ருத காஞ்சி புரீம்
உபநிஷதரவிந்த குஹர மது தாராம் |
உன்னம்ர ஸ்தனகலசீம்
உத்ஸவலஹரீம் உபாஸ்மஹே சம்போ:||

உரரீக்ருத காஞ்சிபுரீம்—காஞ்சீபுரியை விளங்கச்செய்பவளும், உபநிஷதரவிந்த—உபநிஷத்துக்களாகிய தாமரஸ புஷ்பத்தின், குஹர மது தாராம்—நடுவிலிருந்து பெருகும் மகரந்தப் பெருக்குமாதிரியிருப்பவளும், உன்னம்ர ஸ்தனகலசீம்—வளையாத (நிமிர்ந்திருக்கும்) ஸ்தன கலசங்களையுடையவளும், சம்போ:—பரமசிவனுடைய, உத்ஸவ லஹரீம்—பேரானந்தத்தின் அலைபோன்றவளுமான ஸ்ரீ காமாக்ஷியை, உபாஸ்மஹே—உபாஸிக்கிருேம்.

1. புஷ்பங்களிலிருந்து தேன் (பூத்தேன்) பெருகுவதுமாதிரி உபநிஷத்துக்களாகிய தாமரஸ புஷ்பங்களிலிருந்து பெருகும் தேனுக அம்பிகையைச் சொல்லப்பட்டது. ஸகல உபநிஷத்துக்களுக்கும் முடிவான தாத்பர்யமாக அம்பிகை இருப்பதால் இம்மாதிரி சொல்லப்பட்டது.

28 ஏண சிசு தீர்கலோசனம்
ஏன: பரிபந்த்தி ஸந்ததம் நமதாம் |
ஏகாம்ரநாத ஜீவிதம்
ஏவம்பததூரம் ஏகம் அவலம்பே||

ஏணசிசு தீர்க்கலோசனம்— மான்குட்டியினுடையதைப்போன்ற நீண்ட கண்களையுடையதும், ஸந்ததம்—எப்போதும், நமதாம்—நமஸ்கரிக்கும் பக்தர்களுடைய, ஏன: பரிபந்த்தி—பாபத்தை தடுப்பதும் (போக்குவதும்), ஏகாம்ரநாத ஜீவிதம்—ஏகாம்ரநாதருடைய பிராணனுயிருப்பதும், ஏவம் பத தூரம்—இம்மாதிரி என்று சொல்வதற்கு எட்டாததுமான, ஏகம்—ஒரு பரம்பொருளை, அவலம்பே—சரணமடைகிறேன்.

ஸ்ரீ வால்மீகி ராமாயண அர்த்த நிர்ணயம்.

(பாலசுப்பிரமணியன்)

ஸ்ரீமத்வால்மீகி ராமாயணம் வேதார்த்த ஞானத்திற்கு காரணபூதமான 14-வித்யாஸ்தானங்களில் ஒன்று. புராண இதிஹாஸங்கள், நியாய சாஸ்திரம், மீமாம்ஸா சாஸ்திரம் தர்மசாஸ்திரம், சிக்ஷாதி ஆறு அங்கங்கள், நாலு வேதங்கள், ஆகமொத்தம் 14-வித்யாஸ்தானங்கள். வேதத்தினுடைய தத்துவங்களை வ்யுத்பத்தியில்லாத ஜனங்களால் அறிய முடியாதானதால் அந்த வேத தத்துவங்களை உப ப்ரும்மணம் பண்ணும், இதிஹாஸமே ராமாயணமாகும். வேதத்திற்கு பரமதாத்பர்யம் அனாதி அவித்யா பீஜத்தோடுகூடின அனர்த்தகரமான சாம்ஸாரிக துக்கத்தை ஒழிக்கும் ப்ரும்மாத்மைக்ய போதமே. இந்த உத்தம புருஷார்த்தத்திற்கு சாதகமாக கர்மங்களும், உபாஸனைகளும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

மேல்சொன்ன பரமபுருஷார்த்தமானப்ரும்மாத்ம ஞானம் உபேயம் என்றும் அதற்கு கர்ம, உபாஸனை இவைகள் உபாயங்கள் என்றும் ஏற்படுகின்றன. ஜன்மாந்திரங்களில் அனுஷ்டிக்கப்பட்ட தர்மங்களால் சித்தசுத்தி மூலம் சாதன சதுஷ்டயத்துடன் கூடின உத்தமாதிகாரிகளுக்கு பரமபுருஷார்த்தமான ஜீவப்ரம்மஐக்கிய ஞானத்தை விஷயமாய் உடைய வேதாந்த விசாரத்தில் அதிகாரித்வம் ஏற்படுகிறது. சித்தசுத்தி ஏற்படாத மந்தமதிகளுக்கு வைதிக கர்மங்களிலுமுபாஸனைகளிலும்தான் அதிகாரம். கீதாசார்யாரும் அப்படியே சொல்லியிருக்கிறார்.

धर्मेष्वेवाधिकारस्ते मा फलेषु कदाचन ।

ஆதலால் எல்லா ஜனங்களுக்கும் சித்தசுத்தி தாரதம்யத்தால் வர்ணாச்ரம விபாகங்களும் வர்ணாச்ரம தர்மங்களுமேற்பட்டிருக்கின்றன.

கீதையிலும், गुणकर्म विभागशः என்று இதையே சொல்லியிருக்கிறார். அதிகார பேதத்தால் தர்மபேதமேற்படுகிறது. ஆதலால் எல்லா ஜனங்களும் ஒரேவித தர்மத்திற்கு அதிகாரிகளாகமாட்டார்கள்.

ஜீவன் பிரும்மன்தான் என்று அறிவது தான் உத்தம புருஷார்த்தமென்று வேதாந்தங்கள் உத்கோஷிப்பதை மந்தமதிகளான ஜீவர்கள் சாக்ஷாத்கரிக்காததினால் பக்தவத்ஸலனான பகவான் यदायदाहि धर्मस्य என்கிற பிரதிக்ஞைப்படி பூலோகத்தில் அவதரித்து ஜீவன்போல் மாயையில் உழலும் பரம புருஷார்த்தத்திற்கு சாதகமாகக் காட்டி

यद्यदाचरति श्रेष्ठः

என்கிற கீதா நியாயத்தின்படி மற்ற மனுஷ்யர்களும், தான் ஸ்வதர்மானுஷ்டானம் பண்ணுவதைப் போல் அவர்களுடைய தர்மத்தை அவரவர்கள் அனுஷ்டிக்கும்படி செய்து காட்டி வைகுண்டத்தை அடைந்தார். பூமியில் அவதாரம் பண்ணுவதற்கு முன்னும் ராமன் ப்ரம்மம்தான். மத்தியிலும் தேகாதி உபாதியுடன்கூடி வ்யவகரிக்கும்போது ப்ரும்மம் தான். அந்தியில் உலகத்தை விட்டு தேகாதி உபாதிகளை துறந்தபிறகும் பிரும்மந்தான். அதுபோலவே ஒவ்வொரு ஜீவனும் தேஹாதி உபாதிகளை தாங்குவதற்கு முன்னும் தாங்கும்பொழுதும் அந்த உபாதிகளை விட்ட பிறகும் ப்ரும்மந்தான். இதுவே வேதாந்த சித்தாந்தம். ‘ब्रह्मैव सन्ब्रह्माप्येति’ என்று வேதம் சொல்லுகிறது. இதை விளக்கிக் காட்டவே ஸ்ரீ ராமாவதாரம். தேகாதி உபாதிகளுடன் கூடியிருக்கும்போது ஜீவர்கள் கஷ்டப்பட்டு சோக மோகத்தால் ஸ்வரூபஞானத்திற்கு ஸாதனமான ஸ்வதர்மத்தை இழந்து பரதர்ம ஸ்வீகாரம்செய்து அழிந்து போவதை தடுக்க அந்த ஜீவன்களுக்கு இதற்கு முன் அவித்யாபீஜத்துடன் கூடிய சுக துக்கமோகாத்மகமான சம்ஸாரத்தை ஒழிக்க ப்ரும்மைவாஹம என்கிற ஸ்வரூபசாக்ஷாத்கார ஞானமென்ன அந்த சாக்ஷாத்காரத்திற்கு சாதகங்கள் யாக யக்ஞாதி கர்மாக்களென்ன இவைகளைப் புகட்டும் வேதங்களை மூச்சுக்காற்று ரூபமாக உண்டுபண்ணியும் பாரம்பர்யேண தீர்க்க காலமாய் அனுஷ்டானம் பண்ணிவந்த தர்மங்கள் குன்றிக்ஷீண ப்ரக்ஞாவாங்களான ஜீவர்களிருப்பதை கண்டு தர்மஸேதுவான பகவான் வ்யாவஹாரிக ஜீவர்களைப் போல் தான் தேகாதி உபாதிகளைஸ்வீகரித்து மோக்ஷத்திற்கு சாதனமான சாமான்ய விசேஷ தர்மங்களை அனுஷ்டித்து எல்லா ஜீவர்களுக்கும் தர்மத்தைத் அனுஷ்டானத்தினால் புகட்டி எந்த கஷ்டாவஸ்தையிலும் தன்னுடைய ஸ்வதர்மத்திற்கு லோபம் வாராதபடி நடந்து கடைசியில் தர்மத்திற்குத்தான் ஜெயம் என்று காண்பித்தார். அப்படியே ஒவ்வொரு புருஷனும் தன் வர்ணாச்ரமதர்மப்படி எவ்வித கஷ்டங்களிலும் தர்மாசரணம் செய்தவன்தான் பரமபுருஷார்த்தத்தையடையலாம் என்று ஸ்ரீ ராகவன் தெரியப்படுத்தினார். அதனாலேயே ராம கதைக்கு ராமாயணம் என்று ஏற்பட்டது.

रामयस्य अयनं - चरितं - अनुष्ठानं मार्गः

ராமனுடைய அனுஷ்டானம், ராமனுடைய நடவடிக்கைகள், ராமனுடை ஆசாரங்கள். பரப்ரும்மமான ராமன் ஜீவனைப்போல உலக வியவஹாரங்களை தர்மலோபமின்றி நடத்திக் காட்டின தன்மை என்று பொருளாகும். ராமனால் அனுஷ்டிக்கப்பட்ட சத்யவசனம் மாத்ரு பித்ரு, குருசுச்ருஷை ஆர்ஜவம், அஹிம்ஸை, ப்ரம்மசரியம், ஜிதேந்த்ரியத்வம் முதலிய ஸாங்கேய குணங்களென்ன, வர்ணாச்ரம தர்மங்கள் ராஜதர்மங்கள், ஸ்திரீ தர்மங்கள் முதலிய தர்மங்களைவிளக்கிக்காட்டுவதே ராமாயணம். ‘படேத் ராமசரிதம்’ என்று வால்மீகி மகரிஷி சொல்லியிருக்கிறார். அதாவது ‘ராமாயணபடனேந ராமசரிதம் பாவயேத்’— பாடஸ்ய விஷய: ராமாயணம், ராமாயணஸ்ய விஷய: ராமசரிதம் என்று ஏற்படுகிறது.

ஒரு கிரந்தம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு காரணபூதமான விஷயம் ப்ரயோஜனம், அதிகாரம், சம்பந்தம் என்கிற அனுபந்த சதுஷ்டயங்கள் என்னவென்று விசாரிப்போம். வேதத்தின் உபப்ரும்மணம் ராமாயணமானதினால் ராமாயணத்திற்கு வேதத்தின் விஷயமான ஜீவப்ரும்மஐக்யமே விஷயமாக இருக்கலாம்என்று சொல்லுவது பொருந்தாது. ஏனெனில் வேதத்திற்கு விஷயம் தர்மங்களும் உபாஸனைகளும், ப்ரும்மஞானமும் அல்லவோ சொல்ல வேண்டியிருக்க பிரம்மஞானந்தான் விஷயமென்று எப்படி சொல்லமுடியும். ‘விசாரஸ்ய வேதாந்தா: விஷய:’ வேதாந்தங்களுக்கு ப்ரும்மாத்மைகத்வம் விஷயமென்றும் வ்யவஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது, அப்படியிருந்தாலும் வேதஉபப்ரம்மணமான ராமாயணத்திற்கும் ஏன் அதுவே விஷயமாகக்கூடாது என்று கேட்டால் விஷயம் அகதார்த்தமாயிருந்தால் தான் அதாவது இதற்கு வேறு கிரந்தங்களில்சொல்லப்படாமலிருந்தால் தான் அவ்விஷயத்தை புகட்டுவதற்கு ஒரு புது கிரந்தம் ஆரம்பிக்க வேண்டும். ராமாயணம் வேதாந்த விஷயத்தையே சொல்லுகிறது என்று சொன்னால் அந்த வேதாந்த தத்துவங்களை பிரகாசிக்கும் உத்திரமீமம்ஸா சாஸ்திரத்தில் சொல்லப்படாததும் நிர்ணயிக்கப்படாததுமான விஷயங்களை பிரதிபாதிக்கின்றது. ராமாயணம் என்று சொன்னால் தான் கிரந்தத்திற்கு பிரயோஜனமுண்டு. அப்படியும் இல்லை, மேலும் ஒரு கிரந்தத்தின் தாத்பர்யத்தை நிர்ணயம் செய்யும் விஷயத்தில் அக்ரந்தத்திலுள்ள சகல வாக்யார்த்தங்களையும் விசாரணை செய்து பார்க்கவேண்டும். வேதாந்த சாஸ்திரத்திலும் இதே நியாயந்தான். “அவிசிஷ்டம் லோக வேதயோ:” என்ற நியாயப்படி வேதாந்த சூத்ரபாஷ்யகாரரும் ‘வேதாந்த வாக்ய விசாரண அத்யவஸான நிர்வ்ருத்தா ஹி ப்ரும்மாவ கதி:, ந ப்ரமாணாந்தர நிர்வ்ருத்தா:’ அதனால் இதர ப்ரமாணங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை “தத விரோதி தர்கோபகரணு ப்ரஸ்தூயதே” என்று பாஷ்யகாரர் சொல்லியபடி ராமாயணத்திற்கு உபக்ரம உபஸம்ஹாராதி ஷட்விதலிங்கங்களால் ஏற்படும் தாத்பர்யத்திற்கு விரோதமில்லாத பிரமாணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். 24000-சுலோகங்களுக்குள் ஒரு ஸ்லோகத்திற்கு கூட அப்ரமாணம் ஏற்படாதபடி அர்த்த நிச்சயம் செய்யப்படவேண்டும்.

மேலும் ராமாயணத்தில் உபக்ரமத்தில் வால்மீகி பகவான் ‘கோன்வஸ்மின் சாம்ப்ரதம் லோகே குணவான்’ என்று முதலாக ஆரம்பித்து தர்மம் தெரிந்தவன் சத்யசந்தன் வீர்யவான், ஸ்வதர்மத்துடனும் சமஸ்தகல்பாண குணங்களுடன் கூடிய புருஷன் இந்த உலகத்தில் இப்பொழுது யார் என்று கேட்டு அதற்கு தேவரிஷி நாரதர் தசரதகுமாரன் ராமன்தான் கேட்கப்பட்ட சகல தர்மங்களோடு கூடினவனென்றும் சொல்லி தேகாதி உபாதி விசிஷ்ட, பரப்ரம்மமான ராமனையும் அவனுடைய சரிதத்தையும் 100-ஸ்லோகங்களால் சொல்லி ‘ய: படேத் ராமசரிதம், சர்வபாபை: ப்ரமுச்யதே’ என்று அந்த ராமாயணபடன பலத்தையும் சொல்லி முடித்தார். ஆத்யந்திகமாக ராமாயணத்தில் ராமனால் அனுஷ்டிக்கப்பட்ட சகல தர்மங்களும் தான் ப்ரதிபாதிக்கப்படுவதால் ராமனால் அனுஷ்டிக்கப்பட்ட தர்மமாகின்ற ராம சரிதம்தான் விஷயம்.

ராமாயணத்திற்கு அதிகாரி சகல ஜீவர்களும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரும்மாத்மைக்ய விஷயத்தோடிகூடின வேதார்த்தத்திற்கு சாதன சதுஷ்டயத்துடன் கூடியவன் தான் அதிகாரி என்று சொல்லியிருப்பதினால் சாமான்ய ஜீவர்களால் விசிஷ்டாதிகாரிகளுக்கு ஏற்பட்ட விஷயத்தில் ப்ரவ்ருத்தியும் ஏற்படாது. பலமும் இல்லை.

மேலும் ‘ஸர்வபாபை: ப்ரமுச்யதே’என்று சொல்லியிருக்கிற லிங்கத்தால் ராமாயணத்திற்கு ஜீவப்ரும்ம ஐக்யம் விஷயமென்று சந்தேஹிக்கக் கூடாது. ஞானக்னிதான் ஸர்வ கர்மாக்களையும் நாசம் செய்யும் என்பது வாத்ஸவமே. அவ்விடத்திலும் ஞானம் என்பதற்கு சாஸ்திரஞானம் மட்டும் அர்த்தமல்ல. ‘விதுஷ: அமன்வானஸ்ய’ என்றும் அவகதி பர்யந்தம் ஞானம் என்றும் ‘அனுபவவஸ்து விஷயத்வாத்’ என்றும் அனுபத அவஸானத்வாத் என்றும் சொல்லி எவ்வளவு சாஸ்திரங்களை படித்தவனாயிருந்தாலும் சாதனசதுஷ்டயமுள்ளவனுக்கே ஞானக்னியால் சர்வசம்சார துக்க சமனம் ஏற்படுகின்றது என்று அன்வய வ்யதிரேக அனுமானத்தோடு கூடிய வேதம் சொல்லுவதினால் ராமனுடைய அனுஷ்டானங்கள் பாவனைகள் முதலியவைகள் மனதில் ராமாயணபடன ஆவிருத்தியினால் பட்டுபட்டு அதனால் ஏற்படும் ஸம்ஸ்காரத்தினால் சாதன சதுஷ்டயம் கிடைத்து வேதாந்த விசாரம் பண்ணி பாபம் தொலைந்து ப்ரும்மஸாக்ஷாத்காரம் ஏற்படுவதில் சந்தேகமில்லை. ‘ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய:’ என்றவிடத்தில் எப்படி வேதாத்யயனம்ஆவிருத்திக்கு அர்த்த ரூபமான த்ருஷ்டார்த்தமே பலமென்று சொல்வதுபோல் இவ்விடத்திலும் ராமாயண பாராயண ஆவிருத்திக்கு பலன் பாப நிவர்த்தியும் அர்த்தரூபமான

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

Soviet "democracy" Tolerates no Criticism.

A recent issue of the "Pravda" publishes the letter of a doctor about a members' meeting of the medical faculty that was held at Orel:

"Doctor Goutshror called attention to the incredible difficulties that were encountered by members of the faculty in claiming their salaries. Often remuneration was not received except on appeal to the courts, the state attorney or the local administration.

This criticism of the inactivity of the district committee of the faculty displeased the President. He suddenly mounted the platform and declared the meeting adjourned as he considered this criticism "unsound." The leader of the meeting was to receive a reprimand for having organised it otherwise than ordered."

Cries of "Down with Stalin."

Serious Riots in the Red Capital.

MOSCOW.

In the first week of February mass meetings were held in the workmen's quarters. Threatening cries arose everywhere against Stalin. At Nikitskaya Street, in the centre of the city, it came to a clash between the Soviet militia and several hundred students who were shouting: "Doloi Stalin" (Down with Stalin).

Folks Commissary for the Interior, Yeshov, eventually mobilised the special troops of the G. P. U. who scattered the crowd with a couple of rounds. 15 dead lay on the square and about 40 persons were wounded. In this action the new tanks constructed especially for the riots were utilised for the first time. The automatic alarm signals which connect all stations of the Moscow garrison with the Kremlin were put into action also for the first time. On account of the tension the fourth regiment of the "proletarian division" was recalled to Moscow from the provinces.

The riots were due to extreme difficulty of obtaining foodstuffs and to the mass arrests.

Czecho-slovakia to become more closely united to the Soviet Union.

The 'World Service' understands that the Czech Ambassador, Jan Seba, has recently published a book entitled "Soviet Russia and the Little Entente in World Politics." In it he demands that Czechoslovakia and the Soviet Union should be directly connected with one another by means of a corridor, the land for which, he proposes, be taken from Poland and in a lesser degree from Roumania. The book has caused a considerable stir in these two countries where it is pointed out that the author is no insignificant person without influence. The book was published in the official Orbis publishing house in Prague, was written by a serving ambassador, and a foreword by the foreign secretary Krofta emphasises its official character. Added to this is the fact that Seba was presented with the Masaryk Prize for his work, which is one long eulogy of Bolshevism.

It is further understood that if this corridor become a reality, the Soviet Union will have practically incorporated Czechoslovakia in itself without this appearing so externally. The complete Bolshevism of the country would then only be a question of time, as also the official union with Soviet Russia.

Soviet sells Rembrandt Masterpieces.

The art treasures of the Petrograd Hermitage included the greatest collection of Rembrandt pictures, about forty in number. The Soviet government has continually made sales from this particular museum but some very valuable treasures still remained because they did not wish to reduce their value by flooding the market. The latest news among dealers in antiquities is that the Soviet have disposed of the remaining 20 Rembrandts to foreign collectors.

The Communist comment on this sale is: "The whole world will soon belong to us; therefore it is a matter of indifference where the art treasures are, for they will remain in our possession in any case."

(From the Bombay Press Service)

Everybody expects Catastrophe.

"Almost everybody expects a sudden violent change and catastrophe. So we must ever be ready for it and not think in terms of static or slow-moving periods"

Pandit Nehru
at the National
Convention.

கவர்னர்களின் அழைப்பு.

சென்னை கவர்னர் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியாரை ஸந்தித்துப்பேச அவருக்கு அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. புதன்கிழமை இருவரும் ஸந்தித்துப்பேசுவார்களாம். இதேமாதிரி ஐக்யமாகாணத்தில் ஸ்ரீமான் வல்லபந்துவும், பீஹாரில் ஸ்ரீகிருஷ்ண ஸின்ஹாவும் அந்த மாகாண கவர்னர்களால் அழைக்கப்பட்டிருக்கிறார். பம்பாய் கவர்னர் டாக்டர் கேர் என்ற காங்கிரஸ் தலைவரை புதன்கிழமை ஸந்தித்துப் பேசுவாராம்.

ராஜீயக்கைதிகள் கூட்டம்.

ராஜீயக் கைதிகளாயிருந்தவர்களின் மஹாநாடு ஒன்று டெல்லியில் ஸ்ரீமான் சரத்சந்திர போஸின் தலைமையில் நடந்தது இந்தியாவிலுள்ள எல்லா ராஜீயக்கைதிகளையும் உடனே விடுவிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா)

விசேஷாதிகாரம் வேண்டும்:— மாகாண கவர்னர்கள் விசேஷாதிகாரத்தை உபயோகிப்பதில்லை என உறுதி கூறும்படி கேட்பது தேசிய வகையில் நியாயமேயாகும். ஆனால் தேசிய வாதிகள் தர்மத்ரோஹிகளாக மாறிவிட்டாலும் எல்லா கொள்கையுடையோரும் இவர்களிடம் நம்பிக்கை கொள்ளாததாலும் விசேஷாதிகாரம் அவச்யம்வேண்டியதுதான் தேச நன்மைக்கு விரோதமாயது கூடாது.

நஷ்ட ஈடு போதாது:— தஞ்சையில் சாரதா சட்டப்படி சிக்ஷிக்கவேண்டுமென்று ஒருவர் மற்றொருவர்மேல் வழக்குத்தொடர ‘வயதாய் விட்டது’ என்ற காரணத்தால் வழக்கு கொடுத்தவர் மற்றவருக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்படி நீதிபதி கூறினார். அது மாத்திரம் போதாது, இவரது கெட்ட எண்ணத்திற்காக அதிக சிக்ஷை அளித்தல் நலம்.

கட்டுப்பாடு வேண்டியதுதான்:— ஓர் ஸமூஹம் வளர சில கட்டுப்பாடுகள் அவச்யம் தேவை. வாணியம்பாடியில் ஓர் மஹம்மதியர் ஸமூக வழக்கத்தை மீறி சீர்திருத்த விவாகம் செய்ததால் அவரை அச்சமூகம் பஹிஷ்கரித்தது. அதனால் அவர் வீட்டில் நடந்த ஓர் சாவில் மற்றவர் கலக்காததுடன் தங்கள் ஸ்மசானத்தில் புதைக்க இடமளிக்க மறுத்துவிட்டார். இத்தகைய கட்டுப்பாடிருந்தால் நமது ஸமூஹம் அழியாமல் மேல்மேலும் விருத்தியாகும்.

செய்து காட்டுவாரா:— சென்னை மைலாப்பூரில் காலஞ்சென்ற தர்மாத்மா வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் செய்த வைத்தியசாலை, வேதாந்தசாலை இரண்டின் ஸ்தாப[illegible] கொண்டாடப்பட்டது பெரிய தனிகர் கூடி பேசினார்கள். பணமிருந்தும் தர்மம் செய்ய மனமில்லாதவர் பேச்சு பேச்சாகுமா? தனமிருந்தும் தானம் செய்யாதவரையும் தரித்திரனாயிருந்தும் தபஸ் செய்தவரையும் கழுத்தில் பெரிய பாறையை கட்டி ஸமுத்திரத்தில் தள்ளு என மஹாஸ்காந்தம் கூறுகிறது.

நல்லதைக் கற்பாரா:— முஸோலினி பெயர் பத்திரிகையில்வாராததினமில்லை. அவர்கள் குடிப்பதில்லை, மாம்சம் உண்பதில்லை, சுருட்டு பிடிப்பதில்லை, அபர வயதிலும் த்ருடாங்காயிருக்கிறார். புகையை விட்டு மிகக் கஷ்டமளிக்கும் தற்கால நாகரீக மேதாவிகள் இதைக் கவனிப்பாரா!

என்ன பாடுபடுகிறார்:— கனம் ஸி. பி. தான் செய்த தவரை மறைக்க பகீரதப்ரயத்னம் செய்கிறார் பாவம். இவரது அபார ராஜ்ய தந்திர மூளையை இதிலேயே முழுதும் செலவு செய்ய நேர்ந்ததற்கு அவரும் அவர்மன்னரும், குடிகளும், தார்மிகரும் வருந்துகிறார்கள். புதிய போஸ்ட் தலைகளில் ராஜா கோவில் இரண்டையும் சேர்த்து போடப்போகிறாராம். ஐயோ பாவம்!

என்றும் மறக்காமல் செய்கிறார்:— நேற்று பிறந்த முத்யால் பேட்டை வ. ஸ. சங்கமும் அமரகலா விலாஸினி சபையும் சேர்ந்து திருவாங்கூர் ராஜா கோவிலைக்கொடுத்த தினத்தை ப்ரதிமாதமும், ஓர் துக்கதினமாகக் கொண்டாட தீர்மானித்தது போல் ஆஸ்திகர் இதை என்றும் மறவார். மறந்தாலும் மறக்காதபடி இவர் செயல் நினைவூட்டுகிறது.

ராஜோபசாரம்:— நமது தலைவர் பூரி சபைக்குத் தலைமை வஹிக்க கிளம்புகிறார். அவர் சென்னையை விட்டுக் கிளம்பும்போது ரயிலடியில் நூற்றுக்கணக்கான தார்மிகர் மாலையிட்டு ராஜோபசாரம் செய்து ஜயகோஷத்தினிடையே வழியனுப்பினர்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

தாது-ஹு பங்குனி-மீ 12உ

காங்கிரஸ்ஸின் பொறுப்பு.

இந்தியாவில் புதிய சகாப்தம் ஆரம்பித்திருப்பதாகப் பத்திரிகைகள் சொல்லுவது வழக்கம். தற்போது இது ஒரு விஷயத்தில் உண்மையே. ஸர்க்காரின் எதிரிகளாக மதிக்கப்பட்டு பலவித தண்டனைகளுக்கு உட்பட்டுவந்த காங்கிரஸ் வாதிகள் தேச நிர்வாஹத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையும், கவர்னர் முதலிய பெரிய உத்யோகஸ்தர்கள் காங்கிரஸ் வாதிகளை அழைத்து நிர்வாஹத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்கும் நிலைமையும் ஏற்பட்டிருப்பது ஒரு பெரிய மாறுதலாயும், புதியசகாப்தமாயுமிருக்கிறதென்பதில் ஸந்தேகமில்லை. அதிகாரிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் பலவித புத்திமதிகளைத் தூர நின்றுசொல்லிவந்த கக்ஷியார் தாங்களே அந்த நிர்வாஹத்தை ஏற்று குற்றங்குறையின்றி நடத்திக்காட்டுவதென்றால் ஸாமான்யமான கார்யமல்ல. ஆகையால் காங்கிரஸ்தலைவர்கள்புத்திசாலித்தனத்துடனும்பொறுப்புடனும் தங்களுடைய நிலைமையை யோஜிக்கவேண்டியதவச்யமாயிற்று. இந்த உத்தேசத்துடனேயே டெல்லியில் சென்றவாரம்முழுவதும் காங்கிரஸ் தலைவர்கள்கூடி யோஜித்தனர். உத்யோகம் ஏற்கும்விஷயம் எலெக்ஷனுக்கு முன் ஒருவித நிலைமையில் இருந்தபோதிலும் எலெக்ஷனுக்குப்பிறகு அது ஒரு உருவான ரூபத்திற்கு வந்துவிட்டது. தேசத்தின் பலவிடங்களிலும் அதற்குப் பூர்ண ஆதரவு ஏற்பட்டுவிட்டது. இந்த நிலைமையில் காங்கிரஸ் தலைவர்கள் வோட்டர்களுடைய ஆதரவை இழக்காமலும், உத்யோக ஏற்புக்கு எதிரிகளாயுள்ள கக்ஷியாரைத் திருப்திசெய்யவும் சிரமப்பட வேண்டியதாயிற்று இந்த காரணத்தினால்தான் டெல்லியில் நிபந்தனையுடன்கூடிய உத்யோக ஏற்புத்தீர்மானம் செய்யவேண்டிவந்தது.

புதிய அரசியல் சட்டப்படி மாகாணஸ்வயஆக்ஷி ஏற்பட்டு சட்டஸபைக்கு அதிகாரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பினும் சில அவஸர ஸமயங்களில் ஜனப் பிரதிநிதிகள், அல்லது மந்திரிகளுடைய தீர்மானத்தை நிராகரிக்க கவர்னர்களுக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை கவர்னர்கள் எந்த ஸமயத்தில் எப்படி உபயோகிப்பார்களென்பதைப்பற்றி சட்டத்தில் தெளிவாக இல்லாதபோதிலும், கூட்டுக்கமிட்டி விசாரணை காலத்திலும், பார்லிமெண்டிலும், இந்த விசேஷாதிகாரங்களைப்பற்றிச் சர்ச்சை நடக்கையில் கவர்னர்கள் அவைகளை உபயோகிக்க அதிகமாக முன்வரமாட்டார்களென்று உறுதிகூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும் பல உறுதிமொழிகள் அடைந்த கதியைநினைத்துக் காங்கிரஸ் வாதிகள், கவர்னர்களிடமிருந்து உறுதிமொழிகோரியிருக்கிறார்கள். சட்டத்திற்குள்பட்டு மந்திரிகள்செய்யும் எந்தக்கார்யத்திலும் கவர்னர்கள் பிரவேசித்து விசேஷாதிகாரத்தை பிரயோகிப்பதில்லையென்று சொன்னால் காங்கிரஸ்காரர்கள் மந்திரிபதவி ஏற்கலாமென்று டெல்லியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கவர்னர்கள் இவ்வாறு உறுதி கொடுப்பார்களாவென்ற விஷயமாக முரண்பட்ட ஹேஷ்யங்கள் பல பத்திரிகைகளில் வெளிவந்தபோதிலும் அநேகமாகக் காங்கிரஸ் மந்திரி ஸபைகள் ஏற்பட்டுவிடுமென்றே நம்பப்படுகிறது.

காங்கிரஸ்காரர்கள் இவ்வாறு முடிவுசெய்தது புத்திசாலித்தனமென்பதில் ஸம்சயமில்லை. ஓட்டர்கள், வெறும் ராஜீயதத்வம் பேசிக்கொண்டு சட்டஸபையில் உட்கார்ந்து கொண்டிருப்பதற்காகக் காங்கிரஸ் வாதிகளை அனுப்பவில்லை. உடனே ஏதாவது குறிப்பிட்ட பிரயோஜனம் ஏற்படவேண்டுமென்ற ஆஸ்தையாலேயே காங்கிரஸை ஆதரித்திருக்கிறார்கள்.

மந்திரிப்பதவி ஏற்றபின் காங்கிரஸ்காரர்கள் எந்த வழியில் வேலை செய்யவேண்டுமென்பதைக் காங்கிரஸ் கார்யக்கமிட்டி முடிவு செய்யுமென்று சொல்லப்படுகிறது. காங்கிரஸின் அந்தஸ்துக்கு இது ஏற்றதாயினும் அந்தந்த மாகாண ஜனங்களின் நிலைமையும், தேவையும் பலவாறாக இருக்கிறது. சட்டஸபை மெம்பர்களும், மந்திரிகளும் வோட்டர்களிடையில் சென்று நேருக்கு நேராக அவர்களுடைய அவஸரத்தேவைகளை அறிந்து கொண்டு அதற்கேற்றபடி வேலைத்திட்டத்தை அமைக்கவேண்டும். நிலவரியைக் குறைக்க உடனே ஏற்பாடு செய்யப்படுமென்று சொல்லப்படுகிறது. மதுபானத்தை நிறுத்தும் விஷயத்திலும் காங்கிரஸ் முயற்சி செய்தாகவேண்டும். இவ்விஷயமாக மற்றக் கக்ஷியார் ஒழுங்காக நடந்துகொள்ளவில்லை யென்று காங்கிரஸ் வாதிகள் எலெக்ஷன் பிரசாரத்தில் சொல்லியிருக்கிறார்கள், ஆகவே அவர்கள்நிலவரி விஷயத்தையும், மதுபானத்தையும் கவனிக்க முற்படும்போது நிர்வாஹச்செலவுக்குப் பணம் போதாமல் சிரமம் ஏற்படப்போவது நிச்சயம். அந்தசமயத்தில் ஜனங்களுக்குப் புதியவரியை விதிக்கவோ, அல்லது சிக்கனம் செய்யவோ இவர்கள் முன்வருவார்கள். மாகாண வரவு செலவுத்திட்டம் ஸரிக்கட்டவேண்டிய விஷயமாயும், வேறு பல விஷயமாயும் நெருக்கடி ஏற்பட்டு கவர்னர்களுடன் அபிப்பிராயப் பேதம் கொள்ளவேண்டிய ஸந்தர்ப்பங்கள் கணக்கில்லாமல் நேரும். அச்சமயங்களில் தான் காங்கிரஸ் வாதிகளுடைய பொறுப்பும் ஸாமார்த்தியமும் வெளிப்படவேண்டியதாகும்.

தங்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள 'வெளியேற்றம்' ஒத்துழையாமை முதலிய உபாயங்களைக் கைகொண்டு இவர்கள் வெளியேறிவிடாமல் பிடிவாதமாக நின்று ஜனங்களுடைய நன்மையை பாதுகாப்பார்களாவென்பதே முக்ய விஷயம். இவ்விஷயத்தில் அவர்கள் தக்க முன்னேற்பாடுடன் வேலை செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

காங்கிரஸ்காரர்களால் தாக்கப்பட்டுவந்த ஸர்க்காரும், ராஜீயக்கக்ஷியும், காங்கிரஸ் நிர்வாஹத்தின் போக்கை கவனித்து வருவார்கள். நிர்வாஹத்தை நடத்த முடியாமல் பயங்கொள்ளித்தனமாக காங்கிரஸ்காரர்கள் ஓடிவிட்டதாக அவர்கள்சொல்லிக்காட்டக்கூடும். மேலும் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளாக வந்தால் எலெக்ஷன் காலத்தில் எந்த வேலைத்திட்டத்தைக்காட்டி வோட்கேட்டார்களோ அதைத்தவிர வேறு விவாஸ்பதமான விஷயங்களில் புகுவதற்கு நியாயமில்லை. அது ஜனநாயக முறைக்கும் ஏற்றதாகாது. மத ஸமூஹச் சீர்திருத்தம் செய்வதற்காகத் தங்களை அனுப்பும்படி ஓட்டர்களை இவர்கள் கேட்கவில்லையென்பதும் கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும்.

எம். ஸி. ராஜாவின் வெடிகுண்டு!

சென்னை அஸெம்பிளி எலெக்ஷன் முடிந்திருக்கிறதேயல்லது இன்னும் அது உருவாகவில்லை. மந்திரிப்பொறுப்பை யார் ஏற்கப்போகிறாரென்பதும் தெரியவில்லை. எந்த நிலைமையில் அது வேலைசெய்யப் போகிறதென்பதே இன்னும் முடிவுசெய்யப்படவில்லை. இந்த நிலைமையில் எம் ஸி. ராஜா வெடிகுண்டை வீசிவிட்டார். சென்னையில் அவருக்குச்செய்யப்பட்ட ஒரு உபசார விருந்துக் கூட்டத்தில் அவர் பேசுகையில் ஆலயப்பிரவேசம் உள்பட தீண்டாமைவிலக்கை ஸாதிக்கக்கூடிய மசோதா ஒன்றை கூடிய சீக்கிரத்தில் தாம் சென்னை சட்டஸபையில் கொண்டுவரப்போவதாகச் சொன்னார். இத்தகைய உபத்திரவம் நேரப்போவது நிச்சயமென்பதை தார்மிகர்கள் எதிர்பார்த்தே நிற்கிறார்கள் ஸ்ரீமான் ராஜா சிலதினங்களுக்கு முன் டில்லியிலிருந்து திரும்புகையில் வார்தாவில் ஸ்ரீமான் காந்தியைக்கண்டு பேசியதாக ஸமாசாரம் வெளிவந்தது, அதைப் பார்த்தவுடனேயே பலருக்கு ஸந்தேஹம் உதித்தது. காந்திஜியை இவர் எதற்காக ஸந்தித்தார்?

சென்னையில் காங்கிரஸ் மந்திரி ஸபை ஏற்பட்டால் தாழ்ந்த வகுப்பாருக்கும் வீதாசாரம் கிடைக்கவேண்டுமென்றும் [illegible] பெயரும் ஸம்பந்தப்படவேண்டுமென்பதற்காக காந்திஜியின் சிபார்சுப்பெறவும் இவர் உத்தேசித்திருக்கலாம். ஆனால் அது வெறும் கனவுமாத்திரமே, எம். ஸி. ராஜா காங்கிரஸ் பிரதிஜ்ஞையில் கையெழுத்திட்டு அதன் அபேக்ஷகராக நின்றவரன்று. மேலும் அவர் காங்கிரஸுக்கு விரோதமாகவும் எலெக்ஷனில் நடந்தவர். ஆதலால் அவரை மந்திரியாகச் சேர்த்துக்கொள்ளக் காங்கிரஸ்வாதிகள் ஸம்மதிக்கமாட்டார்கள். காந்திஜியும் இந்த விஷயத்தில் இறங்கமாட்டார். ஆகையால் தீண்டாமை விலக்கு மசோதா விஷயமாகவே அவர் காந்திஜியோடு பேசியிருக்கவேண்டும். காந்திஜி, இவருக்கு என்ன ஆலோசனை சொன்னாரென்பது தெரியவில்லையாயினும் அவருடைய மனப்போக்கு எத்தகையதென்பது யாவரும் அறிந்ததே. தீண்டாமை விலக்கு மசோதாவை உடனே கொண்டுவரப் போவதாக இவர் சொல்லியிருப்பதைக் கொண்டு காந்திஜி இவரிடம் என்னசொல்லியிருக்கலாமென்பதை நாம் ஊஹிக்கலாம். இந்த மசோதாவிற்கு காங்கிரஸ்வாதிகளின் ஆதரவு கிடைப்பதற்காக காந்திஜியின் செல்வாக்கை இவர் அபேக்ஷித்திருக்கலாம். காங்கிரஸ் தலைவர்களும் ஏற்கனவே சொல்லி வருவதில் புதிய சட்டஸபையில் தீண்டாமை விலக்குச் சட்டமே முதலில் கொண்டுவரப்படுமென்று தெளிவாக்கியிருக்கிறார்கள். ஆதலால் தர்மத்திற்கு உபத்திரவம் வெகு தூரத்திலில்லையென்பது நிச்சயமாகிறது. காங்கிரஸ்காரர்கள் புதிய அரசியலை உடைக்கப் போவதாயும் அதற்கு அநுமதிகொடுக்க வேண்டுமென்றுமே ஓட்டர்களைக்கேட்டார்கள். ஆலயப்பிரவேசம், தீண்டாமை விலக்குப்போன்ற ஸமூஹத்திருத்தச் சட்டங்களைச் செய்யப்போவதாக வோட்டர்களிடம் தெரிவிக்கவில்லை. ஆதலால்தான் பெரும்பாலான தார்மிகர்கள்கூட இதை நம்பி காங்கிரஸுக்கு ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். சட்டசபை காங்கிரஸ் கக்ஷித்தலைவராக வந்துள்ள ஸ்ரீமான் ஆசார்யர் குடந்தை வக்கீல் சங்கத்தில் பேசுகையில் எவ்வித உறுதிமொழியும் கொடுக்கவில்லையாயினும், தற்போது ஸமூஹத்திருத்த விஷயங்களைப் பற்றி யோஜிக்கப்படமாட்டாதென்றும் அப்படி ஏதாவது செய்வதாயிருந்தால் பொதுஜன அபிப்பிராயம் வாங்கப்படும் என்றும் ஆறுதல் சொன்னார். ஆகையால் காங்கிரஸ்காரர்கள் எலக்ஷன் வார்த்தைக்கு மாறாக இதை ஆதரிப்பதற்கில்லை. ஆரம்பத்திலேயே இம்மாதிரி கலஹங்களைச் செய்தால் தேசத்தில் அமைதி நிலைக்காததுடன் அடுத்த எலக்ஷனில் ஜனங்கள் காங்கிரஸுக்குப் பாடம் கற்பிக்கத் தயங்கமாட்டார்கள். கவர்னரின் விசேஷ அதிகாரங்களை ஆதரித்து நிற்கக்கூடிய ஒரு சாச்வதமான கக்ஷியும் ஏற்பட்டுவிடும்.

இச்சமயம் சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸபையார் செய்ததுபோல் ஒவ்வொரு இடத்திலும் கூட்டம் நடத்தி முன்னாடியே காங்கிரஸுக்கும் வரப்போகும் மந்திரிகளுக்கும் தக்க எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமாகும். தார்மிகர்கள் கட்டுப்பாடாயும் ஜாக்ரதையாயும் இருக்கவேண்டிய காலம் இனிமேல் தான் இருக்கிறது.

குறிப்புகள்.

ராஜப்பிரதிநிதியின் விசேஷாதிகாரம்.

இந்தியா சட்டசபையில், கார்டு விலையைக் குறைக்கவும், சர்க்கரைக்குப் புதிதாகப்போட்ட எதிர் வரியை எடுத்துவிடவும் கொண்டுவரப்பட்ட திருத்த தீர்மானங்கள் மெஜாரிடி வோட்டுகளால் நிறைவேறின. ஆயினும் இதனால் வரவு செலவு திட்டம் பாதிக்கப்படுமாகையாலும், கார்டு விலையைக் குறைப்பதால் 60-லக்ஷம் நஷ்டம் ஏற்படுமென்றும் சர்க்கரை வரியை நீக்குவதால் $1\frac{1}{2}$-கோடி துண்டு விழுமென்றும் பொக்கிஷமெம்பர் சொன்ன வாதங்களை ஏற்றுக்கொண்டு வைஸ்ராய் அவர்கள் தமது விசேஷாதிகாரத்தை உபயோகிக்க முன் வந்தார். அவருடைய சிபார்சுடன் மறுபடியும் வரிமசோதா இந்தியா சட்டசபையின் ஆலோசனைக்கு வந்தும் மீண்டும் அது நிராகரிக்கப்பட்டு விட்டது. இனி ராஜாங்க சபையின் உதவியால் வரிமசோதா அப்படியே நிறைவேறிவிடத் தடையில்லை.

கார்டு விலையைக் குறைப்பதும், சர்க்கரை வரியை நீக்குவதும் ஏழைகள் ஸம்பந்தப்பட்டவையில் முக்யவிஷயங்களென்பதை ஏழை நண்பரான வைஸ்ராய் அறியாதவரன்று. அப்படியிருந்தும் அவர் இதில் மனம் இறங்காதது வருந்தக்கூடியதே. கார்டு விலையை குறைக்கும் விஷயமாக இந்தியா சட்டசபை 2-தடவைக்கு மேலாகத் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது. லார்டு வில்லிங்டன் காலத்தில் இது விசேஷாதிகாரத்தால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் கார்டு விலையைக் குறைக்க வேண்டும் என்ற விவாதம் நடந்தபோது இவ்வருஷம் அதைக் குறைப்பதாக ஸர்க்கார் தரப்பில் உறுதி கொடுக்கப்பட்டது. 60-லக்ஷம் ரூபா வருமானத்திற்கு வேறுவழி செய்து கார்டு விலையைக் குறைக்க ஏற்பாடு செய்ய முடியாதா? மனமிருந்தால் இடமுண்டு. ஜனநாயகத்திற்கும், அதன்படி அமைக்கப்பட்டுள்ள சட்டசபைக்கும் உண்மையான கௌரவம் வைக்கப்பட்டிருந்தால் இவ்வாறு பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஸர்க்கார் நடந்திருக்கமாட்டார்கள்.

தங்களுக்கு வேண்டிய சமயத்தில் சட்டசபையின் பிரதிநிதித்வத்தை உயர்த்திப் பேசுவதும், பிடிக்காத ஸமயத்தில் அதைத் தாழ்த்திப் பேசுவதும் நியாயமான முறையாகாது. தபால் கார்டு விஷயத்தில் மெம்பர்களின் அபிப்பிராயம் பொதுஜன அபிப்பிராயம் தானென்பது ஸர்க்கார் மறுக்க முடியாது.

விசேஷாதிகாரங்களைத் தங்கள் சௌகரிய காலத்திற்கு உபயோகிக்கும் அதிகாரிகள், உண்மையான உபத்திரவம் நேர்ந்தகாலத்தில் நாம் கேட்டுக்கொண்டும் அதை உபயோகிக்க சம்மதப்படாதது ஏன்? மதசம்பந்தமான மசோதாக்கள் வரும்போது இம்மாதிரி விசேஷாதிகாரத்தை உபயோகிப்பார்களா? சாரதாசட்டம் நிறைவேறிய பின் விசேஷாதிகாரத்தைக் கொண்டு அதை நிராகரிக்கவேண்டும் என்று தேசம் முழுவதும் ஜனங்கள் கேட்கவில்லையா? அப்போது சட்டசபை மெம்பர்கள் மெஜாரிடியாக நிறைவேற்றிய தீர்மானத்தில் தாங்கள் பிரவேசிக்க இயலாது என்று சால்ஜாபு சொன்னார்களே. மத ஸமூஹ மசோதாக்கள் வரும்முன்னமே வைஸ்ராய் விசேஷாதிகாரத்தால் ஏன் தடை செய்யக்கூடாது? ஜனங்கள் கேட்டுக்கொண்டும் கூட வைஸ்ராய் அதை கவனிக்கவில்லையே! பெரிய ஸங்கடகாலத்திற்காக ஏற்பட்ட விசேஷாதிகாரங்களை நியாயமான சமயங்களில் பிரயோகிக்காமலும் அந்யாயமானகாலத்தில் பிரயோகித்தும் வருவது மிகவும் வருந்தத் தக்கதே.

விசேஷாதிகாரத்தைப்பற்றி அதிக கவலை ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் இப்படி நடந்தது ராஜதந்திரமாகாது.

முஸ்லீம்களைப்பற்றியே கவலை?

டெல்லியில் கூடிய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்கள், சட்டஸபை மெம்பர் கூட்டம் இவைகளில், முஸ்லீம்களைக் காங்கிரஸில் சேர்க்கும் விஷயம் வெகுகவலையுடன் பேசப்பட்டது. சட்டஸபை எலக்ஷனில் முஸ்லீம் தொகுதிகளில் காங்கிரஸ் அபேக்ஷகர்களாக நிறுத்தப்பட்டவர்கள் தோற்றுப் போய்விட்டார்கள். முஸ்லீம் ஓட்டர்கள் காங்கிரஸின் வேண்டுகோளை அலக்ஷ்யம் செய்துவிட்டார்கள். ஆதலால் ஒரு பெரிய ஸமூஹம் காங்கிரஸில் அபிமானம் காட்டாதது, காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் நேருவுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்துவிட்டது. ஆதலால் முஸ்லீம்களை எப்படியாவது திருப்தி செய்து காங்கிரஸில் சேர்க்கவேண்டுமென்று ஸ்ரீமான் நேரு பேசியிருக்கிறார். மற்றத்தலைவர்களும் இதில் கவலை செலுத்துவதாகத் தெரிகிறது. முஸ்லீம்களைக் காங்கிரஸில் சேர்க்கவேண்டுமானால் ராஜீய ஸமூஹ விஷயங்களில் காங்கிரஸ் அவர்களுடைய இஷ்டப்படியே விட்டுக் கொடுத்துவரவேண்டும். இல்லாவிட்டால் அது ஸாத்யமாகாது. அம்மாதிரியும் காங்கிரஸ்காரர்கள் செய்து பார்த்துவிட்டார்கள். முஸ்லீம்களுக்காக எவ்வளவோ நமது உரிமைகளை விட்டுக்கொடுத்தார்கள். முஸ்லீம்கள் முரட்டுத்தனத்தால் நம் ஸமூஹத்தைப் பல விடங்களில் தாக்கிய காலங்களில் காங்கிரஸ்காரர் மௌனம் சாதித்தனர். ஹிந்து ஸ்திரீகள் முஸ்லீம் குண்டர்களால் தூக்கிக் கொண்டுபோய் மானபங்கம் செய்யப்படும் கோரகார்யம் வங்காளம் முதலியவைகளில் நடந்துவருவதைக் காங்கிரஸ்வாதிகள் கண்டிக்க முன்வந்ததில்லை. பிரதிநிதித்வ விஷயமாகவும் அவர்களிஷ்டப்படி ஆடக் காங்கிரஸ் வாதிகள் இசைந்தனர். வகுப்புத்தீர்ப்பு விஷயத்திலும் காங்கிரஸ் நடுநிலையாக ஆகியது. இவ்வளவு செய்தும் முஸ்லீம்களைப் பின்தொடர்ந்து ஓடத்தயாராக இருந்தும் அவர்கள் இவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கிலாபத்கிளர்ச்சிகாலத்தில் தங்களுடைய கார்யத்தை ஸாதித்துகொள்ளும் தந்திரத்திற்காக அவர்கள் காங்கிரஸோடு ஒத்துழைப்பதாக நடித்தார்கள். ஸ்வயநலம் வரும்போது கண்டிப்பாகவும் கட்டுப்பாடாகவும் இருந்து கார்யஸித்தி பெறுவார்கள். ஸர்வகக்ஷி மஹாநாடு முதலாக இன்றுவரையில் எவ்வளவோ வழியில் ஹிந்துத்தலைவர்கள் இணங்கிக் கொடுத்தும் அவர்கள் இணங்கவில்லை.

அப்படியிருந்தும் நேருஜி எப்படியாவது அவர்களைத் திருப்திசெய்துவைத்து காங்கிரஸில் சேர்த்துவிடத் துடிக்கிறார். பொருளாதாரத் திட்டத்தைக் காட்டி முஸ்லீம் ஓட்டர்களை வசப்படுத்தவேண்டுமென்று நேருஜி ஆலோசனை கூறுகிறார். மத ஆவேசம் கொண்ட அந்த ஜாதியாரிடமிது எவ்வளவு தூரம் வெற்றிபெறுமென்று சொல்லமுடியாது.

ஆனால் நேருஜி முஸ்லீம் திருப்திக்காக மத விஷயத்தில் கூட அவர்களுடைய விருப்பப்படி இணங்க [illegible]ப்படுவார். மசூதிமுன் மேளம் [illegible]சிப்பதைத்தடைசெய்ய உடன்படுவார். இவ்வளவு செய்தாவது முஸ்லீம்களைச் சேர்த்துக்கொள்ள முன்வருவார்.

ஆனால் முஸ்லீம்கள் எலெக்ஷனில் தோற்றதைப்பற்றியும், அவர்கள் காங்கிரஸை விட்டுப் பிரிந்து நிற்பதைப்பற்றியும், கவலைப்படும் நேருஜி, தனது இனத்தாரிலேயே லக்ஷக் கணக்கானவர்கள் காங்கிரஸில் சேராமல் ஒதுங்கி நிற்பதைப்பற்றி ஏன் கவலைப்படவில்லை? அவர்களையும் திருப்தி செய்துவைத்து காங்கிரஸில் சேர்த்தால் இப்போது கிடைத்துள்ள அரைகுறையான வெற்றியைக்காட்டிலும், நூற்றுக்குநூறு பூர்ண வெற்றியடையலாமல்லவா?

தேசியக்கக்ஷியார், ஹிந்துசபையார், ஸனாதனிகள்போன்றவர்களை காங்கிரஸில் சேர்க்க இவர் கவலைப்படாததேன்? ஹிந்து ஸமூஹ உரிமைகளையும், மதஸம்பிரதாயங்களையும் தாக்குவதில்லையென்ற உறுதி கொடுத்தால் காங்கிரஸ் இன்னும் பலப்படுமென்பதை இவர் ஏன் உணரவில்லை.

அந்நியர்களுக்கு இசைந்து அவர்களை திருப்தி செய்யத்தமது உரிமைகளை விட்டுக்கொடுப்பதும், தம் இனத்தாரைக் காட்டிக்கொடுத்துத் துரோஹம் செய்வதும் உண்மையான தேசாபிமானமாகுமா?

கமிட்டி நியமனம்.

சட்டஸபைக் காங்கிரஸ் கார்யங்களையும், மெம்பர்களின் செய்கையையும் அவ்வப்போது கவனித்து உத்திரவுகள் செய்வதற்காகக் காங்கிரஸ் கார்யக்கமிட்டியால் ஸ்ரீமான்களான வல்லபபாய் படேல், ராஜேந்திர பிரஸாத், கோவிந்த வல்லபபந்து, புலாபாய் தேசாய், அபுல்கலாம் அஸாத் ஆகியவர்கள் அடங்கிய கமிட்டியொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

வங்காள மந்திரி ஸபை.

ஹிந்துஸபையின் கோரிக்கை.

வங்காளத்தில் மந்திரிஸபை அமைக்கும் விஷயமாக ஹிந்துக்களுள் சிறிது அதிருப்தியேற்பட்டிருக்கிறது. மஹம்மதிய மந்திரிகளுக்கு ஸம எண்ணிக்கையாக ஹிந்துக்களிலும் மந்திரிகள் நியமிக்கவேண்டுமென்றும் குறைக்கக்கூடாதென்றும், அப்படிக்குறைத்தால் ஹிந்துக்கள் மந்திரி ஸபையுடன் ஒத்துழைக்கமாட்டார்களென்றும் ஹிந்து ஸபை தீர்மானித்திருக்கிறது.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

க்ரக்கிநாடா.

பஜனை மஹாசபை.

சென்னை மாம்பலத்தில் ஸ்ரீ ராமசந்திரஹரி ஹரியின் தலைமையில் ப்ரதிபா நுவாரத்திலும் பக்தரில்லத்தே அஷ்டபதி பஜனையுடன் திவ்யநாம சங்கீர்த்தனமும் நடக்கிறது அதன் முதலாவது அப்தபூர்த்தி காலத்தில் அதாவது மே-மீ முதல் வாரத்தில் ஒரு மஹாநாட்டை நடத்த உத்தேசித்துள்ளாராம். இதன் நோக்கம் சிதறுண்ட பல ஸம்ப்ரதாயங்களையும் ஒன்று சேர்த்து வர்ணாச்ரமாசார ஸம்பத்துடன் பக்திமார்க்கத்தை விருத்தி செய்வதேயாகும் அதற்கு பக்தர்களைவரும் தத்தம்மாலான எல்லா வகையான பேருதவியையும் செய்வதுடன் கீழ்கண்ட எல்லா விஷயங்களைப் பற்றி ஸப்ரமாணமாக வியாஸம் எழுதி அடியிற் கண்ட விலாஸத்திற்கு ஏப்ரல் 20உக்குள் அனுப்ப வேண்டுகிறோம். ஒவ்வோர் விஷயத்திற்கும் 10 பக்கத்திற்கு மேல் போகாமல் தெளிவாக தெலுங்கு, தமிழ், ஸம்ஸ்க்ருதங்களில் எழுதலாம். இவ்விஷயங்களை எழுதியவர் வந்து உபன்யஸிப்பதுடன் இதை அச்சிடவும் உத்தேசம்.

1. பஜனை ஸம்ப்ரதாயம் எப்பொழுது எவரால் துவக்கப்பட்டது ?

2. இதற்கு வேதசாஸ்த்ர புராண ப்ரமாணம் எவை ?

3. வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இதிலுள்ள பேதம் என்ன ? அதற்கு என்ன ஹேது ?

4. இதனால் ஸித்திக்கும் வேதாந்தம் எத்தகையது ?

5. பக்தியுள்ளோர்க்கு கர்மா வேண்டாமென்பதின் கருத்தென்ன ?

6. பஜனைகளைப் பற்றிய ஸம்ப்ரதாய நூல் கருத்தென்ன ? அதன் ஆசிரியர் யாவர் ?

7. அச்சியற்ற பஜனை நூல்கள் ? அதன் ஆசிரியர் யாவர் ? எங்கு கிடைக்கும் ?

8. பஜனையால் முக்திபெற்ற பெரியார் யாவர் ? அவர் சரிதமென்ன ?

9. விதிப்படி பஜனை ஜபம் உஞ்சவிருத்தி இவைகளை ப்ரதிதினம் அனுஷ்டித்து வருபவர் உண்டா ?

10. எப்படி எல்லா பஜனை கோஷ்டிகளுக்கும் ஒற்றுமை உண்டுபண்ணி பக்தியை விருத்தி செய்யலாம் ?

பக்தாங்க்ரி பாம்ஸு
ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா
154, தம்புசெட்டி வீதி
சென்னை.

செங்கற்பட்டு.

ராமகிருஷ்ண தினக் கொண்டாட்டம்.
ஆலயப்பிரவேச பிரஸ்தாபம்.

1. 1937-ஹு பிப்ரவரி-மீ சுமார் இருபது நாட்கள் வந்தவாசி தாலூக்கா விளாநல்லூர் பிரம்மஸ்ரீ ஸ்வாமிநாத.அய்யர் அவர்களால் முதலில் 15நாட்கள் ஸ்ரீமஹாபாரதம், உத்யோகபர்வம் 'ஸ்ரீகிருஷ்ணன் தூது' மிகவும் விமர்சையாய் உபன்யஸிக்கப்பட்டு தர்மபுத்ர பட்டாபிஷேகத்துடன் முடிவுபெற்றது. பிறகு ஒருவாரத்திற்கு 'கிராதார்ஜுனீயம்' உபன்யஸிக்கப்பட்டு அர்ஜுனனுடைய இந்திரலோக பட்டாபிஷேகத்துடன் முடிவு பெற்றது.

2. மார்ச்சு-மீ 13உ சனிக்கிழமை பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம், ராமாயணகேஸரி அப்பாஸாமி சாஸ்திரிகள் அவர்களால் 'ஸ்ரீமத் ராமாயண ஸாரம்' ச்ருதி, ஸ்ம்ருதி வேதாந்த சாஸ்திரங்கள் முதலியவைகளிலிருந்தும் தருந்த மேற்கோள்களுடன் கேட்போர் பரவசமடையும்படி உபன்யஸித்தார்.

3. மார்ச்சு-மீ 10உ முதல் 15உ வரையில், "ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்' சதாப்தி கொண்டாட்டம் நடைபெற்றது; உபன்யாஸங்கள், பஜனைகள், கண்காட்சிகள் முதலியன நடைபெற்றன. ஆஸ்திகர், சீர்திருத்தக்காரர் இன்னும் பலகோஷ்டியைச் சேர்ந்தோரும் மேடைமீது பேசினார்கள். 3வது நாள் கொண்டாட்டத்தில் இவ்வூரில் அடிஷனல் ஜில்லா முன்ஸீபும் ஆஸ்திகருமான மகா-ா-ா-ஸ்ரீ எம். சேஷாத்திரி அய்யர் அவர்கள் ஐ. ஸி. எஸ். அக்கிராஸனம் வகித்தார். அன்று மகா-ா-ா-ஸ்ரீ வக்கீல் என் பி திருவேங்கடாசாரியார் அவர்களும் இவ்வூர் மிஷின் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் ஜி.வி. ஜோப் அவர்களும் உபன்யாஸகர்கள். மகா-ா-ஸ்ரீ என். பி. திருவேங்கடாசாரியார் அவர்கள், 'விவேகானந்தரும் தென்னிந்தியாவும்' என்னும் விஷயத்தை உபந்யாஸம் செய்கையில், பாகவதர்களின் விசேஷத்தைப் பற்றியும் தற்காலத்தவர்களுக்குத் தகுந்தபடி பக்திமார்க்கத்தை உபதேசித்தார். அவருக்குக் கொடுத்த காலம் ஸ்வல்பமாகையால், இன்னும் விசேஷமாகச் சொல்லமுடியவில்லை.

ஸ்ரீமான் ஜோப் அவர்கள் தனது ஆங்கில உபந்யாஸத்தைப்பற்றி நாம் விமர்சிக்கவேண்டியதில்லையாயினும், அவர் பேசிய ஒரு விஷயத்தை மட்டும் இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது. திருவாங்கூர் ஆலயப்பிரவேச ஸ்ரீமுகத்தை இந்திய கிருஸ்துவர் ஸங்கம் ஆதரிப்பதாயும், அது அவசியமேயென்றும், அம்மாதிரி தீண்டாதாரை கோயில்களில் அனுமதிக்காவிட்டால், ஹிந்துமதத்தின் பலம் குறைந்துவிடுமென்றும், ராஜ்யத்திற்குப் பலஹீனமென்றும் பேசினர். ஹிந்துமதத்திற்கு பலம்குறைந்துவிடுமென்று கிருஸ்துவமதத்தைச்சேர்ந்த ஒருவர் விஸனப்படுவது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸருடைய சரித்திரத்தைப்பற்றி பேசவந்த இவர் இவ்வாறு ஸம்பந்தமற்ற விஷயங்களைப் பற்றி பேசினது எவ்வளவுதூரம் நியாயமென்பது நமக்குப் புலப்படவில்லை.

அங்கு வந்த ஸனாதனிகளான என். சுப்பிரமணிய அய்யர், டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், முதலியவர்கள் வந்திருந்தும், அவர்கள் தங்களுடைய அபிப்ராயங்களைப்பற்றி ஒன்றும் தெரிவிக்காமல் குறித்தவிஷயத்தை மட்டும் பேசிவிட்டுப் போனார்கள், இந்த உபன்யாஸகரும் அம்மாதிரி செய்திருந்தால் நன்றாகயிருக்கும்.

ந வி. நி.

மன்னார்குடி.

இவ்வருடம் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி பிரும்மோத்ஸவத்தில் "ஸ்மார்த்த யஜுர்வேத பாராயண கோஷ்டி'வழக்கம்போல் நடந்துவந்தது. ஸம்ஸ்கிருத பண்டிதர் N. விச்வநாதசாஸ்திரிகள் சிரோமணி, காசிநாதசாஸ்திரிகள் இவர்களின் விடாமுயற்சியால் நன்கு நடைபெற்றது. உத்ஸவம் 18 நாளும் விசேஷமாய் ஆஸ்திகர்களும் தனிகர்களும் ஸமாராதனை செய்தார். அத்துடன் எல்லா பாங்குகளிலும் பாராயணங்களுக்கு சிறு பணஉதவி செய்தார்கள். மற்றும் நகரத்திலுள்ள பெரியோர்களிடமிருந்தும் பணம் வசூல்செய்து சுமார் 150 ரூபாய்வரை சிலவானது போகபாக்கி ரூ 50 யும் அடுத்த வருஷத்திற்காக பாங்கியில் போட்டிருக்கிறார்கள். இதில் அதிக ச்ரமம் எடுத்துக்கொண்ட N. விச்வநாதசாஸ்திரியார் பிராமண ஸமாஜத்தின் காரியதரிசியாயும் அவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சாயங்காலம் 4 மணிமுதல் 5 மணிவரை கீழ 2-ம் தெரு விஷநிவர்த்தி ஆலயத்தில் சிவபக்த விலாஸத்தையும் ஒவ்வொரு ஏகாதசியிலும் ஒவ்வொரு அஷ்டபதியின் தாத்பர்யத்தையும் உபந்யஸித்துவருகிறார்கள். அத்துடன் பெருவாழ்ந்தான் பிரும்மஸ்ரீ ராமபத்திராசாரியஸ்வாமிகள் சேஷதர்மத்தை ஞாயிற்றுற்றுக்கிழமை மாலை இரவில் உபந்யஸித்து வருகிறார்கள். ஆஸ்திகர் நிறைந்த இவ்வூரில் இவரது முயற்சி ரொம்ப உபயோகமுள்ளதாயிருப்பதோடு மெச்சத்தக்கதாயிருக்கிறது. அத்துடன் சில வித்தியார்த்திகளுக்கு இலவசமாய் வேதாத்யயனமும், காவ்யபாடமும், பிருமண ஸமாஜகத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்வளவும் நன்கு நடந்துவரக்காரணம் அவருடைய விடாமுயற்சியும் உத்ஸாஹமுமேயாகும். ஆதலால் மேன்மேலும் இவைகளை நன்கு நடக்கச் செய்ய பகவதனுக்கிரஹமும் தீர்க்காயுளும் அவருக்கு உண்டாக வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்.

கனபாடி,
நரஸிம்மாசாரியார்.
ப்ராம்மணஸபை கூட்டு கார்யதர்சி.

சென்னைமாஹாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்,

ஜார்ஜ்டவுன் கிளை ஸ்தாபிதம்.

21—3—37உ ஞாயிற்றுக்கிழமை காலை 9–15 மணிக்கு மேற்கண்ட சங்கத்தின் சார்பில் பவளக்காரத்தெரு இராமாநுஜசெட்டியார் ஸ்கூலில் சநாதனிகளின் கூட்டம் ஒன்று நடந்தது. அவ்வமயம் அகிலஇந்திய பிராஹ்மண மஹாஸபை, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்யசங்கம் இவற்றின் காரியதரிசியான ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐய்ங்கார் அவர்கள் தலைமை வஹித்தார்.

தலைவர் முன்னுரையில் விடாமுயற்சியே வேண்டிய பயனை அளிக்குமென்றும், மனச் சோர்வடைதல் மானவனின் தர்மமல்லவென்றும், ஐக்யத்துடனிருந்து உலைவின்றி உழைத்தால் எல்லாம் இலகுவிலடையலாமென்றும், கிளைச்சபை ஸ்தாபிப்பதும் அது நன்கு ஜீவித்து வாழச்செய்வதே முதற் கடமை என்றும் கூறினார்.

'ஜார்ஜ்டவுன் வர்ணாச்ரம ஸ்வராஜ்யசங்கம்' என்ற பெயருடன் மாஹாணசங்கத்தின் கிளையாக கீழ்க்கண்ட நிர்வாகிகளுடன் ஓர் சபை ஏற்படுத்துவதென்றே ஓர் தீர்மானத்தையும் ஸ்ரீமான் யம். ஸி. ராஜா தீண்டாமை விலக்கு மசோதாபோன்றவற்றைக் கொண்டுவர இருப்பதைக் கண்டித்து மற்றோர் தீர்மானத்தையும் ஸ்ரீவத்ஸ பண்டித ஸோமதேவ சர்மா பிரேரிக்க பி. எஸ் வைத்யநாதய்யர், அப்பாராவ் ஆமோதித்து அநுஸரித்துப்பேச அவை ஏகமனதாய் நிறைவேறின.

ஸ்ரீமான் நாகேசுவாராவ் தலைவர்; ஸ்ரீமான்கள் ஸோமதேவசர்மா, பத்மநாப நாயுடு உப தலைவர்கள். ஸ்ரீமான் டி. ஆர். குமாரசாமி ஐயர் காரியதரிசி. 5 கமிட்டி மெம்பர்கள்.

பூரியில் கூடும் அ. இ. வ. சு. மஹாநாட்டிற்கு ஸ்ரீமான் ஸோமதேவசர்மா அவர்களை டெலிகேட்டாக அனுப்புவதாக உள்ள தீர்மானத்தை டி. ஆர். குமாரசாமி ஐயர் பிரேரிக்க, முத்துகுமாரசாமி செட்டியார் ஆதரிக்க சபையார் ஏகமனதாய் அங்கீகரித்தனர்.

தலைவர் முடிவுரையில் சங்கஸ்தாபனம் மிக எளிதென்றும், அது சரிவர நடக்க முயல்வதே நம் கடமை என்றும், தக்க பிரசாரகர்களை உண்டாக்கவும், அடிக்கடி துண்டு பிரசுரங்கள் வெளியிடவும் முதலில் நன்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினார்.

ஸ்ரீமான் முத்துக்குமாரசாமி செட்டியார் வழங்கிய வந்தனோபசாரத்துடன் சபை 10–30 மணிக்கு இனிது முடிவடைந்தது.

நமது நிருபர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

த்ருஷ்டப்ரயோஜனமும் தான். வேதத்தில் அதிகாரமில்லாத ஜனங்களுக்கு சித்தசுத்தி ஏற்பட்டு புருஷார்த்தங்களை அடைவதற்கு ராமாயணபடனமே முக்யகாரணமாகும். 'ச்ரோதவ்யோ மந்தவ்ய:' என்றவிடத்தில் ச்ரவண விதியை நியமவிதியாக சாஸ்திரக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது அத்வைதாத்ம விசாரம் வேதாந்த வாக்யத்தினாலேயே செய்யவேண்டும். 'புராணாதி ப்ராதான்யம் வா நிரஸ்யதே' அதவது சாதன சதுஷ்டயத்தோடு கூடின அதிகாரியானவன் வேதாந்த வாக்யத்தினால் தான் அத்வைதாத்ம விசாரம் செய்யத்தகுந்தது என்றும் இதிஹாஸங்களால் அத்வைதாத்ம விசாரம்செய்யக்கூடாது என்றும் ப்ரும்மசூத்திரபாஷ்ய வ்யாக்யானத்தில் காணப்படுகிறது.

மேலும் வேறான அதிகாரி, விஷயம், பலம் சம்பந்தம் இந்த நாலும் கூடின வேதாந்தத்தை வேறான அனுபந்த சதுஷ்டயத்தோடு கூடின ராமாயணத்தில் பிரதிபாதிக்க முடியாது.

வால்மீகி ராமாயணம் ஆதிகாவ்ய மானதினால் காவ்ய கிரந்தங்களுக்கு வ்யங்க்யார்த்தங்களில் தான் அர்த்த தாத்பரியம். ஸ்வார்த்தத்தில் தாத்யரியமில்லை என்றும் சொல்லக் கூடாது. காவ்யமென்றால் சாகுந்தலத்தைப் போல் ராமாயணமும் காவ்யமட்டுமில்லை. வேத அர்த்த ஞானத்தை விளக்கி காட்டும் வித்தியாஸ்தானங்களில் ராமாயணம் ஒன்று காவ்யமென்றால் லக்ஷ்யார்த்தத்தில் தாத்பரியம், 'ஸ்வார்த்தே அப்ராமாணயம்- லக்ஷ்யார்த்தத்தில் அபிப்பிராயமுள்ளவர்கள் ராமாயணத்தை காவ்யமாக சொல்லி அர்த்த கல்பனம்பண்ணுவதால் ராமாயணத்திற்கு உபப்ரும்மணம் என்பதிலும் நடந்த ராமவதாரமாகிற பூஜ்யமான சரித்திரத்தை போதிக்கும் கிரந்தம் என்ற விஷயத்திலும் பாதகம் ஏற்படுகிறது, 'ச்ருதஹானி, அச்ருத கல்பனை, ப்ராப்த பாதஸ்ச' என்ற மூன்று தோஷங்களும் ஏற்பட்டு அராபிக்கதைகள் போல் ஏதோலக்ஷ்யார்த்தத்தை போதிக்க வந்த கட்டுக் கதை என்று வால்மீகி ராமாயணத்தை சொல்லவேண்டிவரும். இது ஆஸ்திகர்களுக்கு இஷ்டமில்லை.

காவ்ய என் பதற்கு லக்ஷ்யார்த்தத்தில் தாத்ப்ரியமிருந்தாலும் அந்த லக்ஷ்யார்த்தம் எல்லா வாக்யங்களுக்கும் சம்பவிக்குமா, அல்லது சில விடங்களில் தான் சம்பவிக்கிறது அசாத்தியம். பின் சில வாக்கியங்களுக்கு தான் லக்ஷ்யார்த்தம் சொல்லவேண்டிவரும். அதுவும் முக்யார்த்தம் சம்பவிக்காத இடத்தில் தான் லக்ஷ்யார்த்தம் சொல்லவேண்டும். முக்யார்த்தம் சம்பவத்திற்கும் அம்சபாவத்திற்கும் என்ன பிரமாணங்கள் !

உபக்ரமாதி ஷட்ப்ரமாணங்களே யாகும். அப்படி சந்தேகப்படும் இடத்தில் 'சந்திக்தே வாக்ய சேஷாத்' என்ற நியாயத்தினால் பிரகாணத்திற்கு அனுகுணமாக அர்த்தம் கல்பிக்க வேண்டியது.

உதாரணம் 'அங்கேனாதாயவைதேஹீம்' இடத்தில் விராதன் சீதையை.முதுகில் தூக்கிக்கொண்டு சென்றான் என்று அர்த்தம். இதில் சந்தேகமென்ன? பரமாத்வான ராமன் தன் பார்யாளை விராதனிடமிருந்து காப்பாற்ற சக்தியற்றவனென்றும், அப்படியிருக்க ராமனை பரமாத்மாவென்று எப்படி உபாஸிப்பது என்று இதற்கு பரிஹாரமாக வேறு அர்த்தம் கல்பிக்கவேண்டுமாம். அதற்காக 'அங்கே' சமீபத்தில் என்று அர்த்தம்பண்ணி சமீபத்தில் சீதையை விட்டுவிட்டு பாசக்தி என்ற பாவனையோடு சென்றான் என்று கற்பிக்கிறார்கள்,

வாக்ய சேஷத்தினால் சம்சயிக்கப்பட்ட பதத்திற்கு அர்த்த நிர்த்தாரணம் பண்ணுவது முக்யார்த்தமாகும். பிரகரணத்திற்கு ஒட்டியிருப்பதை விட்டுவிட்டு 'பிண்டம் த்யக்த்வா கரம் லேடி' என்பதைப்போல் 'ச்ருதஹானி அச்ருத கல்பனை' என்ற தோஷம் ஏற்படுகிறது. மேலும் 'பீஷாஸ் மாத்வாத: ப்பவதே' என்றும் கர்தும், அகர்தும் அன்யதா கர்தும் சக்திமானாயும் உள்ள பரமாத்மாவே லோகத்தில் சத்ரு நிக்ரஹம் பண்ணவந்திருப்பவருக்கு இந்த வாக்கியத்தின் லக்ஷியார்த்த கல்பனை அவருடைய பௌருஷத்தை ரக்ஷிப்பதற்கு என்பது விந்தையிலும் விந்தை. இது பொருத்தமல்ல. நாடகத்தில் ஆடுகிறவன் தன் ஸ்வரூபத்தை ஆட்டம்முடியும்வரை காண்பித்து கொடுக்காமலிருப்பதுபோலும், அரிச்சந்திரவேஷம் தரித்தவன் நாடகத்தில் தாத்காலிகமாக பிள்ளை இறந்தது என்று அவன் பிள்ளை யிறந்தவனாக ஆகமாட்டான். அவனும் அழவில்லை. அதுபோலவே ராமனும் மானுஷரூபமாக நடித்துக்காட்டுவதால் மற்ற ஜீவர்களைப்போல் சுகாசுகங்களை அனுபவிப்பதுபோல் காட்டவேண்டியது அவசியம். வ்யாவஹாரிக அவஸ்தையில் அப்படி ராமனாக பிறந்த பரமாத்மா பூலோகத்தில் நடித்துக் காட்டவேண்டியது அவச்யமே. பரமாத்மாவென்று ஸ்வரூபத்தை உண்டாக்கவேண்டும் அபிப்ராய மிருக்கும்பக்ஷத்தில் வைகுண்டத்திலிருந்தே தர்மத்தை ரக்ஷித்து இச்சாமாத்திரம் ராவணாதிகளை த்வம்ஸம்செய்திருக்கலாம். அப்பொழுது இந்த கதைக்கு ப்ரசித்தியிருக்காது- ஆதலால் மேல்சொன்ன லக்ஷ்யார்த்தம் தப்பு என்றும் வாக்கியவிசேஷத்தைப் பார்த்தால் 'அங்காத் நிக்ஷிப்ய வைதேஹீம்' என்று சீதையை முதுகிலுருந்து கீழே இறங்கிவிட்டு விராதன் யுத்தம்செய்தான் என்று முக்யார்த்தம் சொல்வதினால் ஒரு தோஷமும் சம்பவிக்காது.

காவ்யம் என்றால் என்ன? கவினாக்ருதம் காவ்யம்—ஸ்லோகபத்தம், அக்ஷரஸமன்விதம், வ்யஞ்யார்த்தமும் உள்ளது, நவவிதமான காவ்யரஸங்கள், சோகரஸம், வீரஸம் முதலியவைகளை வ்யஞ்யம் பண்ணி காட்டுவதே வ்யஞ்யார்த்தமாகும். வேதாந்த அர்த்தத்தைதான் அந்த லக்ஷியார்த்தம் குறிக்குமென்று நியமமில்லை. 'குணோது அந்யாயகல்பனா' என்ற நியாயத்தினால் குணபூதமான நவரஸங்களை குறிக்குமிடங்களில் தான் லக்ஷ்யார்த்தமான நவரஸங்களை கல்பிக்கவேண்டும். முக்யமான ராம சரித்திரத்தில் லக்ஷ்யார்த்தம் அசம்பாவிதம் மேலும் வால்மீகி ராமாயணத்தில் பிரும்மதேவனுடைய அனுக்ரஹத்தால் வால்மீகி மகரிஷிக்கு சர்வ நடத்தைகளும் நேரில் பார்ப்பதுபோல தோன்றிற்று. அவர் அப்படி பார்த்தபடியே கானம் செய்தார் என்று உபக்ரமமிருப்பதினால்நடந்த சமாசாரங்களை பிரகடனம் பண்ணுவது ராமாயணம் என்றும், வாக்கியார்த்தம் தான் ராமாயணத்தில் தாத்பரியம் என்றும், உண்மையாக பார்த்தது ஒரேவிதமாகத்தான் கல்பனா ரஹிதமாகவும், யதார்த்தமாகவும் இருக்க வேண்டும். 'விகல்பனுஸ்து புருஷபுத்தி அபேக்ஷா:' என்று பாஷ்யகாரர் சொல்லியபடி பார்த்த விஷயமான ராமசரித்தை அப்படியே அநுக்ரஹத்தினால் (அர்ஜுனனுக்கு விச்வரூபதரிசனம் கிடைத்ததுபோல்) நடந்த சமாசாரத்தை ஸ்லோகரூபமாக எழுதப்பட்டதே ராமாயணம். மேலும் அத்யாத்ம ராமாயணம் என்ற கிரந்தம் தனியாக வேதாந்த ரீதியாக அர்த்த பிரதிபாதனம்செய்யும் சமயத்தில் வால்மீகி ராமாயணத்திற்கும் அதே அர்த்தம் சொன்னால் இதற்கு ஆனர்த்தக்யம் ஏற்படுகிறது.

ஆதலால் வால்மீகி ராமாயணத்திற்கு அதிகாரி எல்லா மனுஷ்யர்கள், விஷயம் ராமசரிதம்,பலம் சித்தசுத்தி ,ஞானப்ராப்தி அல்லது கோரினபலம், சம்பந்தம் அதிகாரிக்கு அந்த படனத்தால் கோரின பலப்ராப்தி.

காவ்யங்கள் உலகவிஷய ஞானத்தை புகட்டுவதற்காக ஏற்பட்டன. ராமாயணத்தை காவ்யமுறையில் வ்யஞ்யார்த்த ப்ரதானமாக எடுத்துக்கொண்டால் லௌகிக விஷயங்களை புகட்டவந்த கிரந்தமாகவிளையும். வேத உபப்ரும்மண மென்பது இல்லாமல்போகும். அதுவும் ஆஸ்திகர்களுக்கு இஷ்டமில்லை. மேலும் வ்யங்ஞ்யார்த்தங்களை ஸஹ்ருதயர்களாயும், காவ்ய அலங்கார, ஸாஹித்ய வித்பத்திமான்களாயும் உள்ள அதிகாரிகளே அனுபவிக்க முடியும். மற்றவர்கள் அனுபவிக்கமுடியாது ஆகையால் ரஸஞர்களுக்கே ராமாயணம் ஏற்பட்டது என்றும் சொல்லவேண்டும். அதுவும் இஷ்டமில்லை. வ்யாக்யானக்காரர்கள் பல லக்ஷ்யார்த்தங்கள் எழுதியிருந்தாலும் அவர்களுக்கு தாத்பரியம் முக்கியமான ஒரே அர்த்தத்தில்தான். மற்றவைகள் கௌணார்த்தங்கள் என்பதில் தோஷமில்லை.

இவ்விஷயங்களை ஸஹ்ருதயர்களும், வீதராகாளயுமுள்ள வித்வான்களும் நிரூபித்து அவர்களுடைய அபிப்பிராயத்தை தெரிவிக்குப்படியாக வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கும்பகோணம்.

தமிழ்நாடு வைதிகதர்ம சங்கம்.

ஏற்கனவே ஆர்யதர்மம்பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறபடி ப்ராம்மணஸமூஹ இடையூறுகளும் வேலைத் திட்டமும்' என்ற விஷயத்தைப்பற்றி நன்று யோசித்து ஸமூஹ அபிவிருத்தியைக் குறித்து வேண்டிய கார்யங்களை இடைவிடாமல் நடத்துவதற்காக ஒரு சர்ச்சை கோபாலராவ் ஹாலில் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் சர்ச்சை நடந்து அநேகம் பிரமுகர்கள் தம்தம் அபிப்பிராயத்தை எடுத்து உரைத்திருக்கின்றனர். இன்னும் நன்றாய் யோசனை செய்து ஒரு வேலைத் திட்டம் ஏற்படுத்தி சமீபத்தில் வெளியிடப்படும். சர்ச்சை விவரமும் அடுத்தவாரம் வெளிவரும்.

எஸ். சுவாமிநாத சாஸ்திரிகள்.

மிஸ்டர் சேம்பர்லேன் காலமானார்.

பிரிடிஷ் மந்திரிஸபையில் மிகப்ரபல்ஸ்தாக விளங்கிவந்த மிஸ்டர் ஆஸ்புன் சேம்பர்லேன் மாரடைப்பு காரணமாக மாணமடைந்தார். பிரிடிஷ் ராஜ்யவாதிகளில் இவர் மிக பிரசித்தி பெற்றவர்.

Books by Mr. S. Aiyadurai Iyer

	Rs.	A.	P.
Adwaida Siddhantham	0	8	0
Ramayana in the life of Yoga Sastra	0	8	0
Bharatham and Bagavatham in the life of Yoga Sastra	0	4	0

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd.,
Town High School Road, Kumbakonam.

திருவாங்கூர் ஆலயப்ரவேச கண்டனம்.

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

(ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள்.)

சிஷ்டாசாரப் பிரமாணமும் இதற்கில்லை. இந்த தீண்டாத ஜாதி ஏற்பட்டு ஆயிரக்கணக்கான வருஷமாயினும் சிஷ்டர்களுக்கு ஏற்பட்ட இலக்கணம் பொருந்திய மஹான்களுள் ஒருவராகிலும் இந்த மாதிரி காரியத்தை உசிதமெனக்கருதி நடத்தியிருப்பதாகத் தெரியவில்லை.

ஸமீபகாலத்தில் இரண்டொருஸ் தலங்களில் பலாத்காரமாக பிடிவாதத்தின்பேரில் சிலர் தீண்டாதவர்களுக்கு இடங்கொடுத்ததாகப் பேபரில் வெளியிடப்பட்டிருந்தது. அது எவ்வளவு வரையில் உண்மையென்று தெரியவில்லை. அவ்விதம் நடத்தியது உண்மையாயிருந்தாலும் சிஷ்டர்களுக்குக் கூறியிருக்கும் இலக்கணத்தில் அற்பமேனும் அவர்கள் ஸம்மந்தம்படாதவர்களாகையால் அதை சிஷ்டாசாரமென்று நினைப்பதற்குக்குக் கூட அர்கமில்லை. ஸ்வதர்மானுஷ்டானத்தில் பற்றுதல் உள்ளவராயும் ஸகல ஜனங்களாலும் போற்றக் கூடிய நற்குணம் பொருந்தியவரும் ஈசுவர பக்தராயும் சிஷ்டரென்று சொல்லக்கூடிய நிலைமையில விளங்கிவந்த மஹானை நந்தனுருடைய ஆசாரத்தை எடுத்துக்கொள்ளலாம். அவர் கோவிலுக்குள் செல்லாமல் வீதியை மாத்திரம் வலம் வந்தார் என்று பெரிய புராணத்தில் நன்கு விளக்கிக் காட்டியிருப்பதால் அதைக்கொண்டு இந்தக் காரியம் சரியானது அல்லவென்றே நன்கு அறியப்படுகின்றது. ஆகையால் சிஷ்டாசாரத்திற்கு நேர் விரோதமானது இந்த உத்திரவென்பதும் ஸ்பஷ்டம்.

பொது ஜனங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி இந்த உத்திரவு செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை. பொதுஜனங்கள் அபிப்பிராயப்பட்டாலும் தர்மகாரியங்களில் சாஸ்திரங்களுடைய கருத்தையும் உற்றுநோக்கி அதற்கு விரோதமின்றி செய்யவேண்டுமே அல்லாது முறணுக நடத்தக்கூடாது. அவ்விதம் நடத்தினால் அதின் பயன் அற்பமேனும் கிட்டாது. விபரீத பலந்தான் ஏற்படும். இதைப்பற்றி விரிவாக மேலே கூறுகிறோம், இந்த விஷயத்தில் திருவாங்கூர் வாஸிகளான பொது ஜனங்களுக்கு கொஞ்சங்கூட இஷ்டமேயில்லை என்று நன்றாய்த்தெரிகின்றது. பொதுஜனங்களுக்குத்திருப்தியாயிருந்தால் தீண்டாதவர்கள் ஆலயத்திற்குவரும் போது நம் ராஜ்யத்திலுள்ள ஸகல உத்யோகஸ்தர்களும் வரவேண்டுமென்று மஹாராஜா அவர்கள் உத்திரவு போடவேண்டிய அவச்யமே நேர்ந்திராது. அவ்விதம் கடுமையான உத்திரவு ஏற்பட்டு ஆஸ்திகர்களனைவரும் ஜீவநத்திற்கு வேறுவழியில்லையே என் செய்வோம் என்று மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு ஆலயத்திற்கு போகிறார்களென்று தெரிகின்றது. இந்தக் காரியத்தில் பொது ஜன ஸம்மதியிருந்தால் மஹாராஜா அவர்கள் உத்திரவு போடவேண்டிய அவச்யமே நேர்ந்திராது. ஸந்தோஷமாய் பக்தியுடன் ஆலயத்திற்குப்போகிற ஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு போகவும் மாட்டார்கள். ஆகையால் பொது ஜநங்களுடைய அபிப்பிராயத்தை அனுசரித்து இந்தக்காரியம் நடத்தியிருப்பதாகவும் தெரியவில்லை.

மனிதர்களால் அனுஷ்டிக்கப்படும் கார்யங்களுக்கு பலம் ஏற்படுமானால் இரண்டுவிதமாகத்தான் ஏற்படக்கூடும். சில இவ்வுலகத்தில் பயனை அளிக்கின்றன. சில பரலோகத்தில் பலத்தைக் கொடுக்கின்றன. இவ்விரண்டிற்குள்ளும் பலவிதமான உட்பிரிவுகளிருக்கலாம். அவைகள் நமக்கு அவசியமில்லை. தீண்டாதவர்கள் ஆலயப்ரவேசமானது இவ்வுலகின் பயனைக் கருதியா? பரலோகத்தின் பயனைக் கருதியா? என்று கேட்கிறோம். இவ்வுலகில் அவர்கள் கஷ்டப்படாமலிருக்கவேண்டிச் செய்கிறார்களென்று கூறுவதற்கில்லை தர்சனம் பண்ணும் ஏழைகளுக்கு அவ்வித பலன் ஏற்படவில்லையென்பது யாவருக்கும் அனுபவத்தில் தெரிந்தவிஷயம். அவ்விதம் ஏற்பட்டாலும் "தே புநர்யுரு காலேந;" என்கிற வசனத்தால் வெகுகாலம் சென்றபிறகு ரக்ஷிப்பார்களென்று ஏற்படுகிறது. அதாவது பரலோகத்தில் அவரவர்களின் பக்திக்குற்றவாறு அனுக்ரஹிப்பார்கள் என்று பொருள். அவ்வித பலத்தைக் கருதி ஏன் தீண்டாதவர்கள் ஆலயப்ரவேசம் செய்யக்கூடாதென்று அவ்விதபலத்தை தற்காலத்திலுள்ளவர்களில் நேரில் அனுபவித்தவர்கள் ஒருவருமில்லை. ஆனாலும் சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதால் ஆஸ்திகர்களாய் இருப்பவர்கள் ஒத்துக்கொள்வார்கள், நாமும் அந்த விஷயத்தை ஏற்கிறோம், சாஸ்திரமென்பது பகவானால் ஏற்பட்ட சட்டம். ஆஸ்திகர்கள் இதை ஒருவரும் மறுப்பதற்கில்லை. அரசர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தையனுசரித்து எந்தெந்த அதிகாரிகள் எவ்விதம் காரியங்களை நடத்தவேண்டுமோ அவ்விதம் சட்டம் தவருமல் நடத்தினால் மட்டும் அதை அரசர்கள் ஏற்றுக்கொண்டு அதற்காக ஏற்பட்ட சம்பளத்தைக்கொடுப்பார்கள். நாமும் பெற்றுக்கொள்ளலாம். அஃதின்றி ஆவுக்கு விரோதமாய் தங்களுக்குச் செய்யக்கூடாத இதர கெட்டகாரியங்களைச் செய்தால் சம்பளத்தை இழப்பதோடு தண்டனைகளுக்கும் உள்பட வேண்டிவரும். இதுபோல் பகவானால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தில் எந்த வர்ணாச்ரமிகள் எந்தெந்த காரியத்தை எவ்விதம்செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறதோ அவ்விதமே அவர்களும் செய்தால்மட்டும் சம்பளம் போன்ற பகவானுடைய அனுக்ரஹத்தைப் பரலோகத்தில் அடைந்து ஸுகித்திருக்கலாம். அவ்விதமின்றி சுத்தமான நான்கு வர்ணங்களிலிருக்கும் இந்துக்களுக்காக ஏற்பட்டிருக்கும் ஆலயங்களில் தீண்டாதவர்கள் செல்லக்கூடாதென்று சுருஸ்தி ஸ்மிருதி முதலிய சட்டங்களில் பலவிடங்களில் ஸ்பஷ்டமாய் வரையப்பட்டிருந்தும், அவைகளை மீறி என் இஷ்டம்போல் தான் நான் செய்வேனென்று கெட்ட காரியத்தைச் செய்தால் அதினால் பகவானுடைய உத்திரவை அதாவது சட்டத்தை அலக்ஷியம் பண்ணி அதற்கு விரோதமாக நடப்பவர்கள் பகவானுடைய ஆக்ஞையை மீறியவர்களாகையால் அவர்களிடம் பகவானுக்கு த்வேஷமும் ஏற்படுகிறது என்கிற இக்கருத்தையே,

> ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞே யஸ்தாமுல்லங்க்ய வர்ததே | ஆஜ்ஞாச்சேதீ மம த்வேஷீ [illegible] ||

என்று ஸ்ரீ பகவானேகூறியிருப்பதால் பொதுவான இந்துக்களுக்கு அதாவது நான்கு வர்ணத்தார்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆலயங்களில் பிரவேசிக்கும் தீண்டாதவர்களுக்கு நாகப்ராப்தியை தவிர்த்து வேறுன பலம் இல்லையென்று நிச்சயமாய்த்தெரிகின்றது. இவ்வுலகிலுள்ள ஆஸ்திகர்கள் ஒவ்வொரு நாளும் ஸ்ரீ பகவானை தர்சனம்செய்து முடிவில் அவருடைய அனுக்ரஹத்தைப் பெற்று உத்தம கதியை அடையட்டுமென்று தர்ம சிந்தையுள்ள புண்யவானுன தனவந்தரால் ஏற்படுத்தப்பட்ட ஆலயஸ்தாபனம் என்கிற பெரிய தர்மத்தை தீண்டாதவர்கள் உள்புகுந்து மிகவும் புனிதமாயிருந்த ஆலயத்தை தோஷமுள்ளதாகச் செய்து பெரியோர்களான ஸாதுக்கள் வரமுடியாமல் செய்ததாலும் ஒரு மகானுல் ஏற்படுத்தப்பட்ட சிறந்த தர்மத்தை சரியாய் நடைபெருமல் கெடுத்ததாலும் உண்டான பாபங்களையும் பரலோகத்திற்கு மூட்டையைக் கட்டிக்கொண்டு போவதைத் தவிர யாதொரு பயனையும் காண்கிலோம்.

ஒரு சமயம் சாஸ்திரங்களில் நம்பிக்கை இல்லையென்று சொல்வதும் தவறு. சாஸ்திரங்களிலும், பரலோகத்திலும் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு ஆலயப்ரவேசமே அனுவசியமாகும். ஆலயப்ரவேசமென்பது ஸாகுபடி காரியமா, கம்பெனி வேலையா, ஸர்க்கார் உத்யோகமா, நாஸ்திகர்களுக்கு இந்தக் காரியம் உபயோகமே இல்லை. ஆனால் இதரர்களுக்கு ஹிம்ஸை செய்யவேண்டியே நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்கிறோமென்று சொல்லலாம். இதுதான் உண்மை. அவ்விதமிருந்தால் அதற்குற்ற பலனை பரலோகத்தில் பகவான் அவசியம் அளிப்பர். அதை அனுபவிக்க நாமும் தயாராயிருக்க வேண்டும் என்பதைத்தான் முன்னமே தெரிவிக்கிறோம்.

இம்மையிலோ மறுமையிலோ யாதொரு பயனுமில்லாத ஆலயப்ரவேசமென்கிற இந்த காரியத்தை மாக்ஷிமை தங்கிய திருவாங்கூர் மகாராஜா அவர்கள் அனுமதித்து உலகிலுள்ள சகல ஆஸ்திகர்களுக்கும் விசேஷமான வருத்தத்தை உண்டுபண்ணியிருப்பது அழகல்ல. ஆகையால் தாம் போட்ட உத்திரவை மறுபடியும் எப்படி மாற்றுவதென்கிற அபிப்ராயத்தை தர்மகாரியத்தில் உபயோகப்படுத்தாமல் உடனே இந்த ஆலயப்ரவேச உத்திரவைமாற்றி தீண்டாதவர்களுக்கு ஆலயம் வேண்டுமென்று அவர்கள் விரும்பினால் ராஜாங்கத்திலிருந்து செலவு செய்து அவர்களிஷ்டப்படி சிறந்த ஆலயமாய்க் கட்டிக் கொடுத்து அவர்கள் ஜாதி வழக்கம்போல் அதில் போய் தர்சனம் பண்ணும்படிக்கு வேண்டிய வசதியைச் செய்துகொடுத்து ஸ்ரீ பத்பநாபஸ்வாமி ஆலயத்திற்கும் விதிப்படி மறுபடியும் கும்பாபிஷேகமும் செய்து புனிதமாக்கி பத்மநாபதாஸர் என்று பெயர்பூண்டவர்கள் பத்மநாபருடைய ஆக்ஞாரூபமான சாஸ்திரங்களுக்கு மாறுதலாகக் காரியத்தை நடத்தி பத்மநாப ஸந்நிதியில் ஆஸ்திக மகாஜனங்கள் யாவரும் போய் தர்சனம் செய்வதற்கு யோக்யமில்லாமல் செய்துவிட்டார்கள் என்கிற லோகாபவாதத்திலிருந்தும் விலகிக்கொண்டு முன்னிருந்த ராஜ சிகாமணிகளால் தம் ராஜ்யத்திற்கு ஸம்பாதித்து வைக்கப்பட்டும் எங்கும் பிரசித்தியாய் விளங்குகிறதுமான தர்மராஜ்யம் என்கிற பெயரையும் நன்கு விருத்தியடையும்படி செய்து ஆஸ்திகர்களுடைய மனவருத்தத்தையும் அடியோடகற்றி எங்கும் புகழ்ச்சிபெற்று மெய்மேலும் விசேஷமான சிரேயஸ்ஸுடன் மகாராஜா அவர்கள் விளங்கவேண்டுமென்கிற என்னுடைய இந்தபிப்ராயத்தை எங்கும் விளங்குகிறவரும் ஸர்வக்ஞரும் தர்மத்திற்கு ஹானி வருங்கால் நான் அதை பாதுகாக்கிறேன் என்று ஸ்ரீ பகவத்கீதையில் திருவாய்மலர்ந்தருளியவருமான ஸ்ரீ அனந்தபத்மநாபஸ்வாமியானவர் தமது தாஸனுய் விளங்கும் மகாராஜா அவர்களுடைய மனதிற் பிரவேசித்து நாம் கூறியவாறு சகலகாரியங்களையும் நன்கு நடத்தி லோகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும்படி அனுக்ரஹிக்க வேண்டுமாய் அனேககோடிவிக்ஞாபனம் செய்துகொண்டு இவ்விஷயத்தைப் பூர்த்திசெய்து கொள்ளுகிறேன்.

சுபம்!

உலக நிலைமை.

தெய்வாதீனம் ஜெகத் ஸர்வம்
மந்த்ராதீனம் து தைவதம் |
தந்மந்த்ரம் ப்ராம்ணுதீனம்
ப்ராம்மணோ மம தேவதா ||

இந்துதேச ப்ராம்மணர் சனுதனிகள் முதல் சர்வ வர்ணத்தவருமான மஹாஜனங்களுக்கோர் விக்ஞாபனம்:—

உலகைப்புடைத்த பகவானுனவர் ஒருகாலத்தில் தனக்குத்தானே சிந்தித்துச் சொல்லியதாகயிருக்கும் சுருதிவாக்யப்படி, அணுவுக்கு அணுவாய் மூலப்பிரகிருதியில் கிடந்த ஆத்மகோடிகளுக்கு கரசரணுதி அவயவங்களைக் கொண்டு நம்மை துதி செய்து நமது பதவியை அடையும்படி கிருபைசெய்து பூவுலகிற்கு அனுப்பியும் அவர்கள் ஆகாரம், நித்திரை, பயம் இவைகளுக்கு வசப்பட்டவர்களாகி அப்படிப்பட்ட சுகத்தை அனுபவிக்காமல் காம, க்ரோத, லோப, மோக, மதமாச்சர்யம் என்னும் அரிஷட்வர்க்கத்தில் அகப்பட்டு பயங்கரமாகிய சத்ருக்களை ஜெயிக்க வகையறியாமல் ஜனன மரண ரூபமாகிய வலையை அறுத்துக்கொள்ள சக்தி அற்றவர்களாகி மந்தமதியால் பரமானந்த சுகத்தை விட்டு பாமரர்களாக ஆகிறார்கள் என்று பிரலாபித்து தசாவதாரங்களில் ஒன்ருகிய ஸ்ரீ ராமவதாரத்தில் நான்கு ரூபங்களுடன் அவதரித்து நான்கு வித தர்மத்தையும் வெளிப்படுத்தி சரணுகதி வைபவத்தை சாது ஜனங்களுக்கு அநுஷ்டித்துக் காட்டி மஹாரிஷிகளுக்கு விரோதிகளை வதைத்து விபீஷணப் பிரார்த்தனையைப் போல் உலகோருக்கு அபயப்ரதானமளித்தும், யாதவகுலத்தில் பலராம கிருஷ்ண ரூபங்களாக அவதரித்து துஷ்டாத்மர்க்களை வதை செய்து, பாண்டவர்களுக்குத் தூது சென்று பார்த்தனுக்கு சாரதியாகி இறந்தவர்களை எழுப்பியும், சரணுகதி அடைந்தவர்களை இரக்ஷித்தும், அர்ஜுனன் வேண்டுகோளினுல் பிரம்மவித்தையாகும் கீதை உபநிஷத்தை உலகோருக்கு அளித்தும் கலியுக ஆந்தியத்தில் வர்ணுச்ரம தர்மங்கள் குறைந்து, தர்மம் மறைந்து, உலகம் பாஷண்டமாகி வருகிறபோது கல்கியாயவதரித்துக் காட்டியும் சேதனர்கள் வழிபடமையால் (12) ஆழ்வார்களாயும் தாம் ஹம்ஸமாகவும் அநேக ரிஷி, மஹான்களையும் பூமியில் அவதரிக்கச் செய்து சேதனு சேதனர்களைத் திருத்தி தன்திருவடியை அடையும்படி செய்யுங்கோள் என்று நியமிக்க அதை சிரமேற்கொண்டு ஷை மஹான்களனை வரும் பூவுலகில் அவதரித்து பாமரர்களுக்கு எம்பெருமான் நாமமே இக்கலியுகத்தில் உஜ்ஜீவிப்பதற்கு உபாயமாகியதென்று போதித்தும் மானைக்காட்டி, மானைப் பிடிப்பாரைப் போல் உபாயந்தேடியும் ஆன்மாக்கள் வழிப்படாமல் அனர்த்தப்படுகிறார்களென்றும், அதினும் தற்சமயம் நம் தேசத்தில் நடைபெற்றுவரும் அன்னியர் ஆக்ஷியில் இஸ்லாமியர், கிருஸ்டியர் வகுப்பாளரைப் போல் மற்ற வர்ணத்தவர்களின் தர்மங்களுக்கு பாதுகாப்பு இல்லாததாலும் அரசாங்க சூழ்ச்சியாலும் ஜீவர்கள் மனேபிராந்தியினுல் தெய்வ கைங்கரியங்களும் வர்ணுச்ரம தர்மங்களும்விடுத்த. நமக்கு எந்தவிதத்திலும் திரவியங் கிடைத்தால் போதுமென்று துச்சமான வியவகாரங்காரங்களைச்செய்து உதர போஷணர்த்தமான கல்விகளைகற்றும் திரவியத்தை சம்பாதித்துக் கொண்டு இதுவே நமக்கு சுகம் இதைவிட வேறு சுகமில்லையென்று அந்தகர்களைப்போல் தாங்கு எந்தகதி யுண்டாகுமோயென்று தெரியாமல் ஸ்திரீயென்னும் வலையிலகப்பட்டு அழுந்தி ஈஷணத்திரயங்களென்றும் சமுத்திரத்தில் மூழ்கி பெண்டுபிள்ளைகளின் பேரில் மமகாரம் அதிகரித்து அவர்களுக்காக தனத்தை சம்பாதித்து அதாவது (4) காலமெல்லாம் விருதாவாய் கழித்து வருகிறார்கள்.

வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம், மதுரை.

சிலர் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கத்துடன் (தேச மகாசபை) என்ற பெயரால் ஓர் ஸ்தாபனத்தை ஏற்படுத்திக்கொண்டு அதன்மூலம் அரசாங்கத்தாருடன் போர்நடத்தி வருவதாயும் தேசமெங்கும் வதந்தி கிளம்பியது. இவ்வித வதந்தி கிளம்பிவந்த சில நாளில் அரசாங்கத் துரையிலிருந்து (மகாத்மா) என்ற பட்டத்துடன் ஓர் மகான் ஷை சபையிலீடுபட்டிருப்பதாயும் கூடிய சீக்கிரத்தில் உலகமே சுபிட்சையடைந்து அதிகாரத்தையும் கைப்பற்றி ஸ்ரீ ராமபிரான் இராஜ்ஜியமாக மாறிவிடப்போவதாயும் கிளர்ச்சி உலகம் பூருவும் ஒரே சப்தமாக பரவிவந்தது. அச்சமயம் என் அறிவானது ஷை மகாத்மாவின் திருவிளையாடல்களை கவனிக்க ஆரம்பித்துவிட்டது. அவ்வித மாராய்ந்துவந்ததில் ஒருவித நன்மைக்கும் வழியேற்படாமல் முன் எவ்வித ரூபத்துடன் உலகவெறுப்பு உண்டாயிற்றோ அதைவிட பதின்மடங்கு வெறுப்பும் மோசகரமான செயல்களும் மென்மேலும் பெருகி ஏழைகளுக்கு பேராபத்துகளேற்பட்டு வருவதை யுணர்ந்து தன்னிலையறியாத மூடாத்மாக்களின் நடத்தைகள் போலல்லவோ செயல்கள் நடந்துவருகிறதென்றுணர்ந்து இதினுண்மையை பொதுஜனங்கள் தெரிந்துக் கொள்ளும்பொருட்டு குரங்குகளின் நாடக ரூபமாய் (1934) வருஷத்தில் (5000) நோட்டீஸ் பிரசுரஞ்செய்தேன். அதில் ஜனங்கள் தெளிவுற்றதாக தெரியவில்லை. அதன்மேல் தேசத்தில் தோன்றிவரும் சர்வகக்ஷிக்காரர்களும் உலகத்திற்கே மேலான வர்ணத்தவர்களாயும் பகவானுடைய கைங்கரிய பாத்திரர்களாயும் விளங்கும் பிராம்மணீயத்தையே அடியோடு (அதாவது) ஸ்ரீ இராமபிரான் அவதாரத்தில் ஸ்ரீ பரசுராமரானவர் க்ஷத்திரிய வம்சத்தை அடியோடு ஒழித்துவிடுவதாக எவ்விதம் தோன்றினுரோ அவ்விதமே ஒழித்துவிடும நோக்கமாய் மோசமான கொள்கைகளை கையாண்டு வருவதை யுணர்ந்து பிராம்மணீயம் சீர்குலைந்தால் தேசத்திற்கும் அரசாங்கத்திற்கும் பேராபத்துகள் ஏற்பட்டுவிடுமென்றும் ஷை மூலிகை மருந்தை உலகோர்க்கு உய்வித்து தன்னிலையை அடையச் செய்யவேணுமென்ற கருத்துடனும் தன்னை சூழ்ந்துகொண்டிருக்கும் பணக்கஷ்டமுதல் சகல கஷ்டங்களும் தவிர வேதநாயகம் பிள்ளை உத்தியோகத்தை வெறுத்ததுபோல் (7) வைத்தியத் தொழிலையும் வெறுத்து மேற்சொல்லிய வித்தையை துவக்கச்செய்துவிட்டது. அதிலிருந்து (தேசிய உண்மை விளக்க) மென்ற ஓர் விக்ஞாபனத்தை தாயர் செய்து (9) தேசியத் தலைவர்களுக்கு அனுப்பியும் (11-3-36)ல் அவர்களுமிதின் உண்மையை அறிந்துக்கொண்டதாக தெரியவில்லை. அதன்மேல் 250 பொதுதையொப்பத்துடன் ஓர் விக்ஞாபனத்தை தயார்செய்து அரசாங்கத்தாருக்கு அனுப்பிவைத்தேன் அதனுலும் சரியான பலன் ஏற்படவில்லை. தேச பாஷை பேப்பர்களில் பிரசுரவாயிலாய் பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கமாய் பிரசுரஞ்செய்யும்படி யனுப்பினேன். அவர்களும் பிரசுரஞ் செய்யவில்லை. அதன்பின் நோட்டீஸ் பிரசுரமூலமாய் டவுன்களில் இரண்டு நாள் பொதுக்கூட்டங்கூட்டி ஷை விக்ஞாபனங்களை பிரசுரஞ்செய்து சில தீர்மானங்களை நிறைவேற்றி சுதேசமித்திரன் பேப்பரில் பிரசுரஞ்செய்யும்படி யனுப்பினேன் பேப்பர்மாரர்களோ முழுமோசமான பேர்வழிகளாயும் பொதுஜன விரோதிகளாய் உண்மையை மறைத்து பரப்பும் செயல்களுக்கு இரும்பு உலக்கைப் போன்றவர்களாயிருக்கிறார்களென்பதையுணர்ந்து இந்த உண்மைகளையெவ்விதம் உலகமறியச் செய்யலாமென்று இந்த வர்ணுச்சிரமதர்ம சுயராஜ்ஜிய சங்கத்தாரிடம் தெரிவித்துக்கொண்டதில் சில மேதாவிகள் இந்த நடவடிக்கைகளின் உட்கருத்துகளை உண்மையெனயறிந்து தற்சமயம் தேசத்தில் தோன்றிவரும் பல இருக்கண்களையும் தவிர்க்கும் நிலைமையில் ஸ்ரீ பரசுராமரை மடக்கிய ஸ்ரீ இராமபிரான் இராஜ்ஜியமாக விளங்கும் (அகில இந்திய வர்ணுச்சிரம தர்ம சுயராஜ்ஜிய சங்க)த்தின் மூலம் சகலவித அபகாரமான செயல்களையும் அடக்கி ஸ்ரீ இராமபிரான் இராஜ்ஜியமாக விளங்கச் செய்யலாமென்ற உண்மையை கைக்கொண்டிருக்கிறார்கள்.

ஹிந்து தேசத்தில் அரசாங்கத்துறையில் இஸ்லாமியர் கிருஷ்டியர் வகுப்புகள் நீங்கலாக மற்ற ஏனைவகுப்பார்கள் தேசத்தின் பெயருவிருப்பதையும் அதையேஸ்திரமாக கொண்டுள்ள சர்வ மதஸ்தர்களும் இத்தருணத்திலாவது அவரவர்கள் வகுப்பின் பெயர்களை ஷை அரசாங்கத்துறையில் நிலைநிறுத்திக் கொள்ளவேணுமென்ற உண்மையை கடைபிடித்தொழுகவேணுமாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

N. V. சுந்தரராஜய்யர்
மதுரை.

சேலத்தில் பூகம்பம்.

16௳யன்று இரவு 12-மணிக்கு சேலத்தில் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. கட்டிடங்களும் சாமான்களும் ஆடின. ஜனங்கள் பயந்து அலங்கோலமாக ஓடினர். சேதம் ஒன்றும் நேரவில்லை. கிராமாந்தரங்களிலும் அதிர்ச்சி ஏற்பட்டது. மேட்டூரிலும் சிலவினடிகள் பூகம்பம் தெரிந்தது.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே சவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கன்னுசாமி பத்தர். பெரியதெரு. கும்பகோணம்.

ஆர்யதர்மிகளுக்கு ஜே! ஜே!!
உங்களுக்கு அதிர்ஷ்டம் வருகிறது அப்படியானுல்
பழனி டாக்டர் கே. எஸ். பதி அவர்களின் No. 1
ரசமணியை
வாங்கி அணியுங்கள். உண்மையில் நீங்கள் செல்வத்தை அடைவீர்கள். சரித்திரம் அறுகாது சகல தொழிலும் நினைத்த காரியங்களும் ஜெயமாகும்.
தாதுபுஷ்டியில் யானையைப்போல் நல்ல சுகம் அடையலாம்.
ஆர்டருக்கு முந்துங்கள் ஒரு வாரம் வரையில் ஒரு மணி ரூபாய் 7.
கே. எஸ். பதி வைத்தியசாலை பழனி.

215778

மார்சலியே



சுவாசப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

புதுமாதிரி கால் செயின், கொலுசு திணுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

வெளியூர்ச் செய்திகள்.

சென்னை.

ஸ்ரீ மணவாளமாமுனிகள் வைபவம்.

ஸ்ரீ பாண்டுரங்க பகவத்கதா பிரஸங்கஸபையின் ஆதரவில் சென்னை கோவிந்தப்ப நாயக்கன்தெரு உப்புட்டூர் ஆள்வார் செட்டியார் ராமாநுஜகூடம் ஹாலில் ஆழ்வார், ஆசார்ய மஹாபாரதம் ஸீரீஸில் இருபத்தி நான்காவது காலக்ஷேபம் "ஸ்ரீமணவாளமாமுனிகள் வைபவம்". இதனை ஸ்ரீஉபவே. வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசாரியர் ஸ்வாமி 14—3—37உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4–20 முதல் 8–40 மணிவரை வெகு அழகாக பக்க வாத்யங்களுடன் கதா காலக்ஷேபமாக நடத்தினார்கள். அநேகர் கேட்டு மகிழ்ந்தனர். மாமுனிகள் அவதாரம், திருவாய்மொழிப்பிள்ளையிடம் கிரந்த காலக்ஷேபாதிகள் செய்தல், திருமணம் புத்திரப்பேறு, திருவரங்கம் எழுந்தருளுதல் முப்பத்தாறுயிரப்பெருக்கர் என்ற திருநாமம் பெறுதல், ஆச்ரம ஸ்வீகாரம், ஸ்ரீபாஷ்யம் அதிகரித்தல், எம்பெருமானிடம் ஈடுபாடு, ஸ்ரீ பகவத் விஷயம் சாற்றுமுறை, தனியன் வரலாறு, திவ்யதேச யாத்திரை முதலிய விஷயங்களை அதி அற்புதமாய் விஸ்தரித்தனர். பிரம்மஸ்ரீ திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் முதலிய பக்திமான்கள் வந்துகேட்டு அளவிலா ஆனந்தம் எய்தினர். ஸ்ரீபாகவதாவர்கள் டைரக்டர் மகா-ா-ா-ஸ்ரீ இ. சுப்பிரமணியஞ் செட்டிகாரு தினம் அன்று ஆதலால் அவர்கட்கு 'ஓங்கியுலகளந்த' என்ற திருப்பாவைப்பாசுரத்தை ஓதி மாலையிட்டார்.

ப. ெ. திருமலை ஐயங்கார்.

திருசிரபுரம்.

ஸ்ரீகேதார ஈஸ்வரர் சைவபரிபாலன சங்கம்.

இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா.

எல்லாம் வல்ல இறைவன் திருவடித்துணை கொண்டு நிறைவுவிழா நாளிது தாது ஆண்டு பங்குனித் திங்கள் 14, 15ம் நாள் (27, 28–3–37) சனி, ஞாயிறு கிழமைகளில் திருச்சி சின்னகடைத்தெரு ஆரியன் கலாசாலை லெக்ஷிமி ஹாலில் மாலை 4மணிக்குத் தொடங்கப்பெறும்.

அதுபோது திருவையாறு ஸ்ரீலஸ்ரீ சிதம்பர மெய்ஞான சிவாசார்ய சுவாமிகள் அவர்கள் போவைத்தலைமையில் நிகழ்ச்சிக்குறிப்பிற் கண்டவாறு பழந்தமிழ்த் தொண்டர்களாகிய புலவர் பெரியார்கள் பலர் அரிய செவியமுதளிப்பார்கள்.

அக்காலத்து தாங்கள் நண்பர் குழாத்துடன் வந்திருந்து கேட்டு இன்புற்றுத் தொண்டர் பெருமான் திருவடிச் செல்வத்தையடைந்துய்யுமாறு நிறைபொருளைச் சிந்திக்கின்றோம்.' என்று தலைவர் திரு. எஸ். நாகரத்தினம் பிள்ளையும், அமைச்சர் திரு. டி. எஸ். மருதநாயகம் பிள்ளையும் அறிவிக்கிறார்கள்.

அந்தநல்லூர்.

ஸ்ரீ பாகவத பிர்ம்ம ஸத்ரமகோத்ஸவம்

ஜீயபுரம் ஸ்டேஷனுக்கு அடுத்த அந்தநல்லூர் அக்கிரஹாரத்தில் சென்ற மாசிமீ 1உ (12—2—37) வெள்ளிக்கிழமை முதல் கவிரத்னம் பாகவத பூஷணம் குழுமணி பிரம்மஸ்ரீ ஸேதுராமசாஸ்திரிகள் அவர்களைக்கொண்டு ஸ்ரீபாகவத மாஸப்பிரம்ம ஸத்ரம் ஆரம்பித்து பிரதிதினம் காலை 8மணிமுதல் 10மணி வரையில் விசேஷ பூஜைகளுடன் மூலபாராயணமும் இரவு 8மணி முதல் 10மணி வரையில் விசேஷார்த்தங்களுடன் உபந்யாஸங்களும் நடந்தது. நிகழும் பங்குனிமீ 1உ (14-3-37) ஞாயிற்றுக்கிழமை இரவு பத்துமணிக்கு ஸமாப்தியாயிற்று பிரதிதினமும் ரஸிகர்களான பக்தர்கள் வெகு உத்ஸாகத்துடனும், பக்தி சிரத்தையுடனும், சிரவணம் செய்தார்கள். சாஸ்திரிகளின் உபந்யாஸங்கள் உள்ளது உள்ளபடி ஸ்ரீபாகவதத்தின் உட்பொருளை விள்க்கக்கூடியவைகளாயும் சொற்சுவை, பொருட்சுவை நிரம்பப் பெற்றன. பக்திரஸத்தால் பாமரர்களுடைய மனதுங்கூட உருகும்படி ஸந்தர்ப்பானுஸாரமாய் அநேக நீதிசாஸ்திரங்கள், ஸநாதன தர்மங்கள், வேதாந்த ரஹஸ்யங்கள் ஆகிய இவைகளை எளிதில் விளக்கிக்காட்டக்கூடியவைகளாயும், மிகவும் ரஸமானவைகளாயுமிருந்தன. ஸ்ரீருக்மணி கல்யாண தினத்தில், ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் தேவஸ்தானங்களிலிருந்து, டிரஸ்டிகளின் சார்பாக கோவில் ஸ்தானிகர்களால் ஷை சாஸ்திரிகளுக்கு திருமாலை திருச்சந்தனகாப்பு முதலிய மரியாதைகள், உபந்யாஸ ஆரம்பகாலத்தில், வேதகோஷ வாத்தியகோஷங்களுக்கிடையே வெகு விமர்சையாய் செய்யப்பட்டன. ஸமர்ப்திதினமாகிய (16—3—37) ஞாயிற்றுக்கிழமை இரவில் உபந்யாஸங்கள் முடிந்ததும், சாஸ்திரிகளுக்கு மரியாதை செய்யப்பட்டு அவர்களுடைய ஆசிர்வாத அக்ஷதைப் பிரஸாதத்தையும், ஸ்ரீ பகவானுடைய நிவேதனப் பிரஸாதங்களையும், பெற்று பக்தர்கள் மிகவும் உத்ஸாகத்துடனும், சாஸ்திரிகளுக்கு வந்தனம் செய்து, மங்களாஸாஸனம் செய்யப்பெற்றார்கள். சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது.

ஒரு நிருபர்.

சேங்காலிபுரம்.

ஒரு பெரியாரின் மரணம்.

நாளது தாது-ஹூ பங்குனி-மீ 5உ குருவாரம் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய தீக்ஷிதர்வாள் அநாயாஸமாக மரணமடைந்தார்கள் ஆஹிதாக்னி ஸம்ஸ்காரம் புத்ரர்களால் செய்யப்பட்டது. ஷை தீக்ஷிதர்வாளுடைய பரம்பரையின் மஹிமையும் 32 தலைமுறையாக தேவதைகளை ஆராதித்த ஆஹிதாக்னிவம்சம் என்றும் இவர்கள் பரம அநுஷ்டானபராள் ஸத்யஸந்தாள். சுத்தசித்தாள். தர்மப்ரவத்தகாள் என்றும் தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் தெரியாதவர்கள் இல்லை ஷை பெரியவாளின் பிரிவு நம் நாட்டிற்கே பெரிய நஷ்டம், இப்பொழுது இவர்களுக்கு வயது 71 இந்த வயதிலும்கூட இவாளுக்கு இருந்த தைர்யமும் சாஸ்திரார்த்தத்தில் நிர்ணயமும், அனுஷ்டானமும் ஆச்சர்யப்படத்தக்கது.

ஒரு நிருபர்.

சாரதாசட்டப்படி கேஸ்.

மனு கொடுத்தவரின் திண்டாட்டம்.

நாகப்பட்டணத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் திருவேங்கடத்தய்யங்காரென்றவர், ஸ்ரீமான் வ. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலியவர்கள் மீது சாரதாசட்டப்படி கேஸ் கொடுத்தார். தஞ்சைஜில்லா கலெக்டர் விவாகப் பெண்ணுக்கு 15-வயதுக்குமேல் ஆகிவிட்டதாக டாக்டர் ஸாக்ஷ்யத்தை நம்பி கேஸைத் தள்ளி மனுதார் 50-ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்க உத்திரவு செய்தார்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.